கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் (அ) முதல் (உ) வரை சபையில் ஒரு விவர அறிக்கை[a] சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், நம்முடைய ராச்சியத்தின் தீப்பெட்டி தொழில் அபிவிருத்திக்காக, அதற்கு வேண்டிய கெமிகல்கள் எல்லாவற்றையும் தயார் செய்ய தொழில் கூட்டுறவு ஸ்தாபனம் நிறுவப்பட இருக்கிறதா, அதற்கான ஏற்பாடுகள் எந்த நிலையில் இருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி எக்ஸைஸ் ட்யூடி பற்றியும், மேச் டாக்ஸ் பற்றியும் ஆனது. அதிலிருந்து இந்த உப கேள்வி எழாது என்று கூற விரும்புகிறேன்.

Servicing Corporation

* 506 *Q*.—**Sri V. SANKARAN** : Will the Hon. the Minister for Industries be pleased to state the action taken and the procedure followed for the equitable distribution of the raw materials procured by the Servicing Corporations in the State, to the bona fide industries in dire need?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சபைமுன் விவர அறிக்கை[b] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் சர்வீசிங் கார்ப்பொரேஷன் மூலப் பொருள்கள் எப்படி வினியோகம் செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்

a Printed as Appendix VII on page 726–727.

b 727–721-ம் பக்கங்களில் எட்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

8th November 1966]

கிறது. தொழில்களுக்குத் தேவையான அளவு, போதுமான அளவு கிடைக்கின்றனவா, பிரித்துக் கொடுக்கப்படும் மூலப் பொருள்களை வாங்குகிறவர்கள் சரியான முறையில் உபயோகிக்கிறார்களா என்று கண்காணிக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் ராஜ்யத்திலே, நம் நாட்டிலேயே, தேவையான அளவு மூலப் பொருள்கள் கிடைக்க வில்லை, என்பது எல்லோரும் அறிந்த உண்மைதான். கிடைக்கும் பொருள்களை வைத்துக்கொண்டு வினியோகம் செய்கிறோம். அசிஸ்டண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரிஸ் அடிக்கடி சென்று டெஸ்ட்-செக் செய்கிறார், கொடுத்த மூலப் பொருள்களை உபயோகிக்கிறார்களா என்று. ஆனால், அது எல்லா இடத்திலும் முடியவில்லை. ஏதாவது புகார்கள் வந்தால் விசாரிக்கிறார்கள்.

Technical education

*570 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to answer given to Question No. 165 on 10th August 1965, the reasons for the delay in starting the part-time B.E. Courses at Madras and Coimbatore?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னைப் பல்கலைக் கழகத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

* 508 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the proposals made by the Southern Regional Committee of the All-India Council for Technical Education at its 29th meeting on August 17, 1966 at the Madras University Buildings in regard to improving the standard of technical education in Madras; and

(*b*) the steps and measures taken in respect thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No specific proposal for improving the standard of Technical Education in Madras (or any of the other three Southern States) was made by the Committee. It only offered its recommendations on certain proposals of a routine nature referred to it by the various State Governments in the southern region. A copy of the Agenda and Proceedings of the 29th meeting is kept in the Legislature Library for reference by members.

(*b*) Does not arise.

Exploration of oil

* 509 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places in the State, where arrangements are being made for the exploration by drilling for oil by the Oil and Natural Gas Commission; and

(*b*) the manner and basis adopted for the selection of these places?

[8th November 1966

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Oil and Natural Gas Commission has proposed to undertake drilling operation for exploration of Oil and Natural Gas in Karaikal, Shiyali, Nagapattinam, Thiruthuraipoondi and Pambari areas.

(b) These places are selected after studying carefully the available geological and geophysical data.

திரு. ஆ. கு. சுப்பையா : திருத்துறைப்பூண்டி எண்ணெய் வள ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என்று அமைச்சர் அறிவிப்பாரா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருத்துறைப்பூண்டியில் ஒரு கிணறு தோண்டப்பட்டது, 1,141 மீட்டர் அளவிற்கு சென்றிருக்கிறது, அதிலிருந்து பூமிக்கு அடியில் சர்வே டேடா என்றுதான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எண்ணெய் இருப்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய் ஆராய்ச்சி நடத்துவதற்கு கிணறு தோண்டப்பட்டது. தற்போது வேறு ஒரு இடத்தில், கிராமத்தில் தோண்டப்படுகிறது. எண்ணெய் கிடைக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்களா அல்லது இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு முடிவுக்கும் வரவில்லை, இருக்கும் என்றோ அல்லது இல்லை என்றோ இரண்டு முடிவுக்கும் வரவில்லை. 839 மீட்டர் ஆழம் சென்றிருக்கிறது. சில டேடாக்கள் கிடைத்திருக்கின்றன. அதைக் கொண்டு ஒரு முடிவும் செய்ய முடியவில்லை.

Bus fare (refund)

* 510 Q.—SRI V. SANKARAN : Will the Minister for Industribes be pleased to state—

(a) Whether the Government are evolving any new arrangement for the quick refund of money on the cancellation of Reserved tickets by the Madras State Transport Department; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A proposal for making refunds of fares at the depots in the mofussil, which are under the control of Gazetted officers, is under consideration.

திரு. எம். எஸ். மணி : சார், ரெயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்து, கான்சல் செய்தால், உடனே பத்து நிமிஷத்திலே சிறிது சில்லரையைக் கழித்துக்கொண்டு பாக்கியைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். இங்கே ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டில் ஆறு மாதம் ஆனாலும் ரீபண்ட் செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி கான்சல்,

செய்யும்போது ஒரு எமௌண்டைப் பிடித்துக் கொண்டு, பாக்கியைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறோம். எங்கெல்லாம் கெஜடட் ஆபீசர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உடனடியாக பணத்தைத் திருப்பி கொடுக்கலாம் என்கிற யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

மதுகாச மருந்து

* 524 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுகாச மருந்தை தடை செய்ய வேண்டுமென்று தென் கடலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் 2—11—1965-ல் நடைபெற்ற கூட்டம் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது. 9-30 a.m.

திரு. ஆ. தங்கவேலு : தலைவரவர்களே, மதுவிலக்கை ரத்து செய்த அரசாங்கம் மதுகாசக் கடைகளைத் தாராளமாக வைத்துக் கொள்ள அனுமதித்து இருப்பது, மது குடிப்பதை மறைமுகமாக அனுமதிப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த மதுகாசம் போன்ற பொருள்களைத் தடுக்கவேண்டுமென்று சொன்னால் இந்தியன் டிரக்ஸ் ஆக்ட்டைத் திருத்தவேண்டுமென்று அறிகிறேன். ஆகவே, அது சம்பந்தமாக நம்முடைய சர்க்கார் இந்திய சர்க்காருக்கு எழுதி, டிரக்ஸ் ஆக்டைத் திருத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மத்திய அரசாங்கம் Indian Drugs and Cosmetics Amendment Act கொண்டுவரப் போகிறார்கள். அதற்கு நம்முடைய மாகாணத்தில் விற்கக்கூடிய மருந்துகள், தேவைகள் இவற்றிலே இந்திய மருத்துவ முறைப் பிரகாரம் எவற்றையெல்லாம் அதிலே சேர்க்க வேண்டும், சேர்க்கக் கூடாது என்ற சிபாரிசுகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.

திரு. கோ. சி. மணி : இந்த மதுகாசம் குடித்து ரசீது வைத்து இருந்தும், மதுகாசம் குடித்தவர் என்று சொல்லப்பட்டும், டாக்டர்கள் மதுகாசத்திலே ஆல்கஹால் அதிகமாக இருக்கிறது

* 728–729-ம் பக்கத்தில் 9-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

என்று சர்டிபை செய்ததால் நீதிபதிகள் அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்கிறார்கள். மதுவிலக்கு அமலில் இருக்கின்ற நேரத்திலே பகிரங்கமாக இதற்கு லைசென்ஸ் வழங்கவேண்டிய அவசியமென்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்திலே ஒரு குறிப்பிட்ட பர்சன்டேஜ் ஆல்கஹால் இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மதுகாசம் என்ற பெயரினால் மற்றவற்றைச் சாப்பிடுகிறவர்கள்தான் பிடிக்கப்படுகிறார்கள். அவற்றையெல்லாம் டாக்டர்கள் ஒப்புக் கொள்வதற்குத் தயாராக இல்லை. ஆகவே குறிப்பிட்ட பர்சன்டேஜ்க்கும் அதிகமாக ஆல்கஹால் இருந்தால் அவர்கள் குற்றம் செய்ததாகக் கருதி அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்த மதுகாசத்தினாலே பலவிதக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. இருந்தும்கூட அதிகமாக அதை விற்பதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறதே அதையாவது கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்தினாலே பலவித கோளாறுகள் வருகின்றன என்பதை ஒப்புக்கொள்வதற்கு தயாராக இல்லை. மதுகாசம் உபயோகப்படுத்தலாம் என்று அளவு பண்ணித்தான் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. மதுகாசத்திலே pharmaceuticals pure alchohol போன்றவையும் விற்பனை செய்கின்ற காரணத்தினாலே டிரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் சென்று நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த நடவடிக்கையின் காரணமாகப் பலர் பாதிக்கப்படுகிறார்கள்.

பிச்சைக்கார விடுதி.

* 525 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் அமுலுக்கு வந்த பிச்சை எடுப்பு தடுப்பு (திருத்த) சட்டத்திற்கு வகை செய்யும் வகையில், பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள், தொழில் நிலையங்கள் முதலியவற்றை நிறுவுவதற்கு அரசாங்கம் ஆவன செய்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) புதிதாக பிச்சைக்கார விடுதிகள், தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பிச்சையெடுப்பவர்களைத் தடுக்கின்ற சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குப் போதுமான முன் நடவடிக்கை எடுக்கப்

8th November 1966]

படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிச்சைக்காரர் தடுப்புச் சட்டத்தினால் பயன் விளையாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே பிச்சைக்காரர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பிடித்தால் கொண்டுபோய் வைப்பதற்கு வசதி கிடையாது. ஆகவே இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால் என்ன பிரயோஜனம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சட்டம் கொண்டு வந்ததற்குக் காரணம் இருக்கிறது. பிச்சைக்காரர்களைப் பிடித்தால் அவர்களுக்காக ஏற்படுத்தி நடத்தப்படும் விடுதிகள் அரசாங்கத் துறையிலே நடத்தப்படுபவை அல்ல. தனிப்பட்டவர்களால்தான் நடத்தப்படுகின்றன. அவர்களை அந்த விடுதிகளிலே கொண்டு வைப்பது கஷ்டமாக இருக்கிறது. பிச்சையெடுக்கின்ற நிலைமையே நாட்டிலே இருக்கக்கூடாது என்பதற்குத்தான் இந்தச் சட்டம். அந்தச் சட்டத்தின் படித்தான் பாட்டுப் பாடிப் பிச்சையெடுத்தாலும், ஆட்டம் ஆடிப் பிச்சையெடுத்தாலும் எந்தவிதமாகப் பிச்சையெடுத்தாலும் அவர்களை அவ்வப்போது பிடித்துத் தண்டிக்கலாம் என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு

*526 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1964–65-ம் ஆண்டில் குடும்ப கட்டுப்பாடு (அறுவை) செய்துக் கொண்டவர்கள் மாவட்டவாரியாக எத்தனை பேர்கள்?

(இ) அவர்களில் இந்துக்கள் எத்தனை பேர்கள்?

(உ) முஸ்லீம்கள் எத்தனை பேர்கள்?

(எ) முனிசிபல் நகரங்களில் எத்தனை பேர்கள் விவரமாக?

(ஐ) கிராமப்புறங்களில் எத்தனை பேர்கள்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) A statement is placed on the table of the House.

(*b*) & (*c*) These particulars are not collected at the time of operation.

(*d*) 10,842.

(*e*) 19,800.

திரு. எம். எஸ். மணி: சார், இந்தக் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டவர்களிலே 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று அறியலாமா?

கனம் சபாநாயகர்: அது எல்லாம் ரகசியமாக வைத்திருக்க வேண்டிய விஷயம், வெளியிலே சொல்லலாமா? அறுபது வயதிற்கு மேல் செய்துகொண்டவர்கள் வெளியே சொல்லமாட்டார்கள்.

* Printed as Appendix X on page 729-730.

[8th November 1966

நகரசபை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

* 527 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் சிப்பந்திகளுக்கு பென்ஷன் வழங்கும் திட்டம் சர்க்காரிடமிருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அரசாங்க சிப்பந்திகளுக்கு வழங்கப்படும் பென்ஷன் போன்ற சலுகைகள் நகராட்சி சிப்பந்திகளுக்கும் வழங்க நகராட்சியிலே எந்த வருப்பு உத்தியோகங்களையும் சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசிலனையில் உள்ளது (நகராட்சியிலுள்ள கமிஷனர், என்ஜினியர், சுகாதார அதிகாரி ஆகியோர் ஏற்கெனவே சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக்கப்பட்டுள்ளனர். இன்னும் சில உத்தியோகங்களை சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசிலனையில் உள்ளது). இதற்காக 1920-ம் வருடத்திய நகராட்சி சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் செய்யவும் முடிவு செய்துள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஏற்கனவே சர்க்கார் சிப்பந்திகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நகரசபை சிப்பந்திகளைத் தவிர வேறு என்ன என்ன சிப்பந்திகளைச் சர்க்கார் சிப்பந்திகளாக்க உத்தேசம் இருக்கிறது? இதன் காரணமாக அரசாங்கத்தின் பொருளாதாரப் பொறுப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப் பரிசிலனை செய்திருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மானேஜருக்கு மேற்பட்ட அதிகாரிகளை சர்க்கார் அதிகாரிகளாக ஏற்றுக்கொள்ள உத்தேசித்து திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் பப்ளிக் ஒபினியனுக்காகச் சென்றிருக்கிறது. அது வந்தபிறகு அதைப் பரிசிலனை செய்யும்பொழுது கனம் அங்கத்தினர் கூறுவதையும் கருத்தில் கொள்ளலாம்.

புலவர் கா. கோவிந்தன்: நகராட்சிகள், ஊராட்சிகள் இவற்றில் பணிபுரிகின்ற கீழ்த்தர சிப்பந்திகளிடமிருந்து பிராவிடன்ட் ஃபண்ட் பிடிக்கிறார்கள். ஆனால், கணக்குச் சரியாக வைக்கப்படவில்லை. அவர்கள் இறந்த பிறகு அல்லது அவர்களுடைய மனைவிமார்கள் இறந்த பிறகுதான் பணம் கிடைக்கும்போல் தெரிகிறது. காரணம் என்னவென்றால் ஆடிட் செய்யவேண்டும், ஸ்பெஷல் ஆடிட் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படியில்லாமல் அவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கின்ற முறையைக் கொண்டுவர முன்வருவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்தக் கேள்வி நகராட்சி சிப்பந்திகளுக்குப் பென்ஷன் வழங்குவதைப்பற்றிய கேள்வி. தனிக்கேள்வி போடலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், பட்ஜெட் கூட்டத்திலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே நகராட்சியிலே பணியாற்றுகின்ற கீழ்த்தர பணியாளர்களுக்கு, பியூன் போன்ற

8th November 1966]

ஊழியர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் யோசனையில் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த யோசனை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கேட்டதற்கு ஏற்கனவே பதில் அளித்தேன். அதற்குமேல் விவரம் என்னிடம் இல்லை.

மூக்குப்பீறி பஞ்சாயத்து

* 528 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மூக்குப்பீறி பஞ்சாயத்துத் தலைவர் 1965-66-ம் வருடங்களில், அகாரணமாய் இரண்டு பஞ்சாயத்து மெம்பர்களை பதவியினின்றும் நீக்கியதன் மூலம் பதவியை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்ற புகார் ஜில்லா கலெக்டருக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மூக்குபீறி பஞ்சாயத்து தலைவர் வேண்டுமென்றே சட்ட ஏற்பாடுகளையும், விதிகளையும் நிறைவேற்ற மறுப்பதால், அவரைப் பதவியினின்று நீக்குவதற்கு காரணம் காண்பிக்க சென்னை பஞ்சாயத்து சட்டம் 150-ஆவது பிரிவின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு அறிவிப்பு விடுத்திருக்கிறார்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், புதிய சட்டப் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்துத் தலைவர் தவறுசெய்துவிட்டார் என்று அறிந்த பிற்பாடும்கூட அந்தப் பஞ்சாயத்துக்கு அந்தத் தகவலை அனுப்பி அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்களுடைய பெருவாரியான ஓட்டுக்களைப் பெற்றுத்தான் அவரை நீக்கமுடியும் என்று விதிமுறைகள் இருக்கின்றனவா? அந்த விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம்.

Property tax

* 529 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have proposed to defer the quinquennial revision of property tax in all Municipalities in the State, with effect from April 1966; and

(b) if so, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ); ஆம், வரி செலுத்துவோர் சங்கங்கள், குழுக்கள், பல்வேறு நிறுவன அமைப்புகள், சில நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களிடமிருந்து இது குறித்து ஏராளமான முறையீடுகள் வந்துள்ளன. இவற்றை அரசாங்கம் கவனமாகப் பரிசீலனை செய்தது. 1—4—1966 முதற்கொண்டு பொதுவாக வரி விதிப்பு திருத்தியமைக்கப்பட வேண்டிய நகராட்சிகளைப் பொறுத்த வரையில், அவற்றில் அத் தேதி முதற்கொண்டு அவ்வாறு திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் 1—4—1966 முதற்கொண்டு தொடங்கும் இரண்டு அரை ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்கப்படவேண்டுமென தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிச் சட்டத்தின் IV-வது விவர அட்டவணையின் 8 (1-A) (a) விதியின்கீழ் அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது.

திரு. செ. மாதவன்: அந்தத் தேதிக்கு முன்னாலேயே வரியை உயர்த்தி இருந்தால் ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து திருத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சமீபத்தில் நிறுத்தி வைத்துள்ள quinquennial revision 15 நகராட்சிக்கு பொருந்தும். மற்ற நகராட்சிகளுக்கும் இந்த விதிமுறைகளை நீடிக்க சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

நாகம்பந்தல் லிங்கத்தேரி

*530 கேள்வி.—**திருமதி செகதாம்பாள் வேலாயுதம்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உடையார்பாளையம் தாலுக்காவில் நாகம்பந்தல் கிராமத்திலுள்ள ஏரியிலிருந்து நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தாமல் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்த வேண்டுமென்று அண்மையில் அக்கிராம பொது மக்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மனுவின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பாசனத்துக்குப் பயன்பட்டு வரும் லிங்கத்தேரியின் நீரை குடிதண்ணீராகவும் மற்றும் பல சமுதாயக் காரியங்களுக்கும் பயன்படுத்துமாறு வேண்டி, நாகம்பந்தல் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து 9—2—1966 தேதியிட்ட ஒரு கடிதமும் அக்கிராம மக்களிடமிருந்து ஒரு முறையீடும், திருச்சிராப்பள்ளி கலெக்டருக்கு வந்தன. ஜயங்கொண்டான் தாசில்தாரையும், அரியலூர் வருவாய்க் கோட்ட அதிகாரியையும் கலந்தாலோசித்த பிறகு, தக்க நடவடிக்கையைக் கலெக்டர் மேற்கொண்டார். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவேண்டியுள்ள அவசியத்தைக் கருதி, இந்த ஏரியின் நீரைப் பாசனமல்லாத பிற காரியங்களுக்குப் பயன்படுத்துவது அவசியமில்லை என்று கருதப்பட்டது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: தலைவர் அவர்களே, இது ஆயிரக்கணக்கானவர்களுக்கு குடிதண்ணீருக்கு பயன்படுகிற குளமாக இருக்கிறது. ஆடுமாடு குளிப்பாட்டும் வசதியும் இருக்கிறது.

8th November 1966]

பாசனத்திற்கு தண்ணீர்விட்டுவிட்டால் குடிதண்ணீருக்கு நல்ல கோடை மாதங்களில் கஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்ற அளவில் இதை வைக்க முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: செட்டில்மெண்டு காலத்தில் இந்த ஏரிப் பாசனத்திற்குப் பயன்படுகிற ஒன்றாக ஆயக்கட்டுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறது. ஆகவே, விவசாயத்திற்குப் பயன் படுத்தக்கூடாது என்று தடுக்க முடியாது. தடுக்கவும் அரசாங்கம் விரும்பவில்லை.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம்: அந்த ஏரியைக் குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்பதாக ஏற்படுத்தவேண்டும் என விவசாயிகளே விண்ணப்பித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். விவசாயிகளே ஒத்துக் கொள்ளும்போது அப்படி ஏன் செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்து மெம்பர்கள்—விவசாயிகள் இவர்களுக்குள்ளே அபிப்பிராய பேதம் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் குடிதண்ணீருக்குக் கஷ்டப்படுகிறார்கள். மதிப்பீட்டுக் கமிட்டி செந்துறை சென்ற போது அதைப் பார்க்க முடிந்தது. அந்த ஏரித் தண்ணீர் கூடச் சிவப்பாகத்தான் இருக்கின்றது. இந்தத் தண்ணீரையாவது குடி தண்ணீருக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதாக ஸ்பெஷலாக ஏற்படுத்த வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: குடிதண்ணீருக்கு இதன் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. இப்போதே குடிதண்ணீருக்கும், குளிப்பதற்கும், ஆடுமாடு களுக்கும் இதைப் பயன்படுத்தி வருகிறார்கள். இதைத் தவிர குடிதண்ணீருக்காக கிணறு இருக்கிறது. பாப்பாத்தி குளம் என்பதாக தனியாகக் குளம் இருக்கிறது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: பஞ்சாயத்து யூனியனில் கிணறு வெட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கிணற்றில் தண்ணீர் இல்லை. ஆகவே, குடிதண்ணீருக்கு மிகவும் பயன்படுகிற இந்தக் குளத்தை குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்று செய்ய முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: குடிப்பதற்கு தண்ணீர் எடுப்பதை யாரும் தடுக்கவில்லை. மேலும் பஞ்சாயத்து யூனியன் எடுத்த கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் அதை ஆழப்படுத்தி, பம்பு செட்டு வைக்கக்கூட முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நாகம்பந்தல் கிராமத்தில் உள்ள ஏரித்தண்ணீரை குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மட்டும் பயன்படுத்தவேண்டும் எனச் செய்யவேண்டும் என்பதாக அக்கிராம மக்கள் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத்திற்குப் பயன்படுத்துவதைத் தடுக்கக்கூடாது என்பதாகவும் வேறு யாராவது மகஜர் அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : அந்தமாதிரி தகவல் இல்லை. இப்போதுள்ள ஏரியில் குடிதண்ணீர் எடுத்துக்கொள்வதைப் பற்றித் தடை எதுவும் இல்லை. பஞ்சாயத்து எலெக்ஷன் விரோதம் காரணமாக அதில் இருந்து பாசனத்திற்கு விடக்கூடாது என்கிற ஆட்சேபம் எழுந்திருக்கிறது.

கனம் சபாநாயகர் : ஆயக்கட்டுகளுக்கு இருக்கிற உரிமையை மாற்ற யாருக்காவது ரைட் இருக்கிறதா?

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : அம்மாதிரி உரிமை இல்லை. அப்படிச் செய்கிற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : You will have to acquire the tank and subject to the judicial proceedings only, you can think about changing it into a drinking water tank.

Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED HARASSMENT OF AGRICULTURISTS BY PROCUREMENT OFFICIALS.

* திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே. கிராமங்களிலே ப்ரொக்யூர்மெண்டு செய்யும் அதிகாரிகள் விவசாயிகளுக்கு இழைக்கின்ற அநீதியைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரபணையைக் கொண்டுவர உங்கள் அனுமதியை விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி, கஷ்டப்படுத்தி ப்ரொக்யூர்மெண்டு செய்ய கட்டளை பிறப்பிக்கவில்லை, எளிதான முறையில், சுலபமான முறையில் ப்ரொக்யூர்மெண்டு செய்யப்படுகின்றது என்பதாகக் கூறினார்கள். ஆனால் தஸ்தாவேஜு பூர்வமாக கையில் வைத்திருக்கிறேன். நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அங்கங்கே உள்ள அதிகாரிகள் ஐந்து சென்ட் உள்ளவனுக்கு ஒரு மூட்டை, பத்து சென்ட் வைத்துள்ளவனுக்கு இரண்டு மூட்டை, ஒரு ஏக்கரா வைத்துள்ளவனுக்கு 20 மூட்டை என்பதாக கட்டாயமாக வைத்து (ஒரு சீட்டைக் காட்டி) இது போன்ற பாரங்களை அச்சிட்டு சம்மனைப் போலக் கொடுத்துவிடுகிறார்கள். எத்தனையோ பேர்களுக்கு இதுபோல அனுப்பப்பட்டுள்ள நோட்டீஸ்களை நான்

8th November 1966] *[திரு. சா. கணேசன்]*

இங்கே வைத்திருக்கிறேன். முதல் சீட்டுக்குரிய இவருக்குச் சொந்தமான நிலம் 0.06 ஏக்கரா, இவர் கட்டாயமாக ஒரு மூட்டை கொடுத்தாகவேண்டும். இதுபோல . . .

MR. SPEAKER : The hon. Member, Sri Alagamuthu, has given notice under Rule 57 to discuss a similar matter.

திரு. சா. கணேசன் : இதுபோன்ற விஷயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருதி இதுபற்றி விவாதிப்பதற்காகச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்பதாக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் செய்வது என்பது அரசாங்கத்தின் திட்டம். அது நிர்வாக தோரணையில் நடைபெறும்போது ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை வேறுவகையில் தெரிவிக்க வேண்டுமே தவிர ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல. யாராக இருந்தாலும் விற்பதற்கு அவர்களிடம் நெல் இருந்தால் அதை சர்க்காரிடம் நிர்ணயித்துள்ள விலைக்குக் கொடுக்கவேண்டு மென்பது முக்கியமானது. வேறு ஏதாவது கொள்முதலில் நிர்ப்பந்தம், தவறு இருந்தால் அதைத் தெரியப்படுத்தினால் விசாரித்து சரிசெய்யலாம். ஆனால், இது ஒத்திவைப்புப் பிரரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Consent is withheld.

(2) SUPPLY OF INFERIOR QUALITY RATION RICE IN MADRAS CITY.

* **திரு. சா. கணேசன்** : கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகரில் கொடுக்கப்படுகிற ரேஷன் அரிசி மிக மிக மோசமாக உண்பதற்குத் தகுதியற்றதாக இருப்பதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரபணையைக் கொண்டுவரத் தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

அதையொட்டி, கனம் சபாநாயகர், அவர்களே, நான் தங்கள் அனுமதியைப் பெற்றிருக்கிறேன். சென்னையில் கொடுக்கப்படுகிற அரிசியின் சாம்பிளை ரேஷன் வாங்கியவர்கள் அவர்கள் கையொப்பமிட்டே அனுப்பியிருக்கிறார்கள். அவற்றையும் சபையில் சமர்ப்பிக்கிறேன். அதன்மீது முதல் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாகவேண்டும். ரேஷன் என்று ஏற்படுத்திவிட்டு—இதுபோன்ற அவல நிலை நீடிக்க விடக் கூடாது. அரசாங்கத்தால் ஒழுங்கான முறையில் அரிசி விநியோகம் செய்ய முடியவில்லை என்றால் ரேஷனையே எடுத்துவிட்டு அவரவர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் கொண்டு வந்து சாப்பிடட்டும் என்று விட்டுவிடலாம். அதையும் தடுத்து இப்படிச் செய்வது சரியல்ல என்று உங்கள் மூலமாக நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த ரேஷன் அரிசிப் பொட்டலத்தை அவரிடத்தில் சமர்ப்பிக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி எப்போது மட்டமாக இருந்தது, எங்கே அப்படிப் போட்டார்கள் என்று ஸ்பெசிபிக்காக இல்லை. அரசாங்கம் நெல் கொள்முதல் செய்து அரிசியாகக் கொடுக்கிறது. சில சமயங்களில் ரொம்ப நல்ல அரிசியாக இருக்கலாம். இப்போது திரும்பவும் நல்ல அரிசி கிடைக்கிறது. இப்போது நல்ல அரிசி கிடைத்துக் கொண்டிருக்கிறது. நான்கு நாட்களுக்கு முன்னால் புயல் காற்று ஏற்பட்டதால் வெளியிலிருந்து 500 லாரிகளில் வந்து கொண்டிருந்த அரிசி வந்து சேரமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதனால் வேறு இடங்களில் இருந்து வாங்கி அரிசி கொடுக்கப்பட்டது. எப்படி இருந்தாலும் இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: These are not matters for adjournment motion. Consent is therefore withheld.

III.—CALLING ATTENTION TO.

(1) FOOD SITUATION IN THANJAVUR DISTRICT.

SRI RAMA. ARANGANNAL: Sir, I call the attention of the Hon. Minister for Food to the following matter of urgent public importance, namely, the food situation in the Thanjavur District and the agitation in connection with that.

***THE HON. SRI M. BHAKTAVATSALAM:** Sir, normally water would be let in for irrigation from Mettur Dam on 12th June. Owing to unfavourable South-West Monsoon, the release of water was delayed till 21—7—1966. It meant that agricultural operations were delayed. Consequently no wages were given to agricultural labourers. There was an apprehension that Kuruvai would fail and as such mirasdars conserved the stock available with them. As such a difficult position developed in Thanjavur District, the Government met the situation by releasing rice from their stocks by introducing informal rationing in municipalities, town panchayats and villages. Approximately 23 per cent of the population of the District was covered by family cards. This had a very good effect. With the release of water, the situation has improved considerably. The offtake fell from 1495 tonnes a week to 777 tonnes. An attempt was made by some people to exploit the situation. They organised hunger strikes on 29—6—1966 in front of the Collectorate, Thanjavur, and other offices. The hunger strike was given up on 4—10—1966. A general hartal was observed on 4—10—1966 when some shops and market remained closed in some towns. Transport services and other vehicles of traffic functioned normally throughout the State. With the successful monsoon the situation in the District can be said to be quite normal.

(2) HAVOC CAUSED BY CYCLONE.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலும், பெரும் மழையும் அவற்றின் விளைவான சேதாரங்களும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker. a severe cyclonic storm which originally centred in the Bay of Bengal east of Nagapattinam was expected to cross the coast at Nagapattinam. But the storm changed its course and approached Madras City and actually crossed the coast on the afternoon of the 3rd November at about 3 p.m. at a place 30 miles south of Madras. From the early morning of the 3rd, the weather deteriorated considerably, along the coastal regions of Madras City, Chingleput and in the northern portion of South Arcot District. The wind speed increased rapidly and at times it was blowing at 80 to 100 miles per hour. The rainfall accompanying the storm was not so heavy in the City and in Chingleput district. But it was very heavy in the northern portion of South Arcot District. Tindivanam in 24 hours ended at 8 a.m. on the 4th recorded a rainfall of 212 mm. Considerable damage has been caused on account of the very high wind and very heavy rainfall. A large number of trees have been uprooted. All temporary and thatched constructions like huts and roofed buildings suffered considerable damage. It can be stated that in the Madras City and in the taluks of Saidapet, Chingleput and Madurantakam in Chingleput District and in the taluks of Tindivanam, Villupuram and Ginjee in South Arcot District, practically all huts have been razed to the ground. The figures of number of huts damaged like this are as follows :—

Madras City	7,500
Chingleput District	90,000
South Arcot District	5,000

The Collector of North Arcot has also reported destruction of 500 huts in Wandivash, Tiruvannamalai and Polur taluks.

Electrical installations and property of the Electricity Board including high tension lines have come in for severe damage. An exact estimate of the damage has not yet been arrived at. The Electricity Board is taking every effort to restore connections as expeditiously as possible to the affected areas.

The Telephone Department has also come in for severe damage. Telephone communications broke down completely in the City and in the affected areas. The Department is taking expeditious steps to restore the connections. The position has become practically normal in the city. The connections to the other areas are being given.

[Sri M. Bhaktavatsalam] [8th November 1966

Serious breaches have occurred in the roads running in Madurantakam, Tindivanam and Villupuram taluks, the damage being maximum in Tindivanam taluk.

Breaches or Scours have occurred in 7 roads in South Arcot, 4 in Chingleput and 2 in North Arcot. The principal roads affected are—

(1) Villupuram-Ginjee Road;

(2) Merkanam-Tindivanam-Ginjee Road;

(3) Chunampet Road;

(4) Pondy-Tindivanam Road;

(5) Madras-Trichy Trunk Road at miles 84 and 86; and

(6) Cuddalore-Chittoor Road near 54th mile (North Arcot).

All these breaches are expected to be closed by the end of this week.

The uprooted trees which had blocked the National Highways and roads have all been or are being cleared and the work will be completed very soon. The worst affected areas are the approaches to the bridge across Tondiyar at M. 85/1 of the National Highway. and to the bridge at M. 86/4 across Sankaraparni river. The approaches have been washed away for a length of 100 feet on either side due to breaches of Veedur Reservoir. The black-topping surface has been badly scoured, and its width has been reduced. The uprooted trees in Mailam-Pondicherry road have been cleared, and through traffic to South from Madras can be resumed through this road, but only after the overflowing of the Sankaraparni causeway at Villianur in Pondicherry State subsides. It is expected that this would have become fordable by now. Government have also contacted the Government of Pondicherry who have kindly taken all steps to see that the obstructions on the road in Pondicherry limits are all cleared for through traffic to take this diversion.

The road, Cuddalore to Pondicherry, is cut off due to heavy breaches within the Pondicherry State limit.

All other breaches are also being attended to expeditiously. Government have strengthened the staff for this purpose.

The Superintending Engineer (Highways), Madras is camping at Tindivanam and attending to the closing of breaches on the National Highways.

The roads are free for traffic in the Saidapet and Chingleput divisions. The breaches in Madurantakam area will be attended to as soon as the water subsides.

At the request of the State Government, the Southern Railways have already arranged to run a special shuttle service between Tindivanam-Villupuram to clear the traffic with effect from mid-day on 7th November 1966.

8th November 1966] [Sri M. Bhaktavatsalam]

A number of tanks have breached in Madurantakam, Tindivanam and Villupuram taluks and to a lesser extent in Wandiwash, Polur and Tiruvannamalai taluks of North Arcot district. The number of major and minor tanks breached are as follows :—

Chingleput district	138
South Arcot district	150
North Arcot district	35

The Vidur Reservoir breached about the noon on the 3rd November at three places causing considerable floods in Sankarabarani River and cutting the Grand Southern Trunk Road seriously at miles 85/1 and 86/4. It is now practically empty. The first breach is about 50 feet close to the left end of the spillway. Breach number 2 is 400 feet from the right end of the spillway and is 300 feet long. Breach number 3 is 600 feet further to the right opposite to the staff colony with a length of 800 feet. The staff colony and the workshop shed have been washed out. The villages of Athikuppam, Elay and Ganapathi have been severely affected by the Vidur breach. Loss of cattle has occurred but no loss of human life is reported.

The Chief Engineer (Irrigation) immediately on receipt of information rushed to the spot along with two special Superintending Engineers. The special division for the Tank restoration Scheme has been diverted to attend to these works. The machinery from Manimukthanadhi Reservoir Project was also diverted to attend to these repairs.

Government have ordered that damages caused to Irrigation works should be immediately assessed and immediate restorative action taken incurring essential expenditure and applying to Government for necessary additional appropriation later. For this purpose special strengthening of staff also has been done.

Loss of human life.—Following number of deaths have been reported either as a result of house collapse or as a result of electrocution :—

Madras City	20	(including 18 seamen of ship "Progress").
Chingleput district ...	18	
South Arcot district ...	8	
North Arcot district ...	11	

Considerable damage has been caused to the installations in the Madras Port and it is estimated that the loss would be about Rs. 4 lakhs. Members are already aware of the fact that four ships ran aground as a result of the fury of the cyclone.

Six bogeys of the Rameswaram Passenger Train proceeding from Pakkam to Madurantakam on the afternoon of the 3rd November capsized due to the intensity of the cyclonic wind and fourteen passengers were injured.

[Sri M. Bhaktavatsalam] [8th November 1966

Almost all the fishermen colonies on the coastal belt have been razed to the ground and a number of fishing canoes and fishing nets, catamaran logs and three mechanised boats have been lost. No loss of life among the fishermen has been reported.

Deaths of cattle and considerable damage of poultry have also been reported by the Director of Animal Husbandry in all the affected areas. In regard to the damage to crops and plantations it is reported that over 1,25,000 cocoanu ttrees in Edakk nad area of Madurantakam taluk have been completely damaged. It is feared that in Madurantakam, Tindivanam, Villupuram and Wandiwash taluks paddy crops in an extent of about 30,000 to 50,000 acres may suffer either on account of sand casting or flooding due to tank breaches. More exact details on this aspect are awaited. Betel and sugarcane and casuarina have suffered considerably in the affected areas.

Considerable number of Panchayat Union Schools and Welfare Schools and other public buildings with tile or thatched roofs have suffered damage.

Sir, officials and non-officials have taken immediate necessary steps to rehabilitate the houseless people. Free distribution of cooked food and rice has been done in all the affected areas. In addition, in respect of every hut damaged, an amount of Rs. 30 towards reconstruction and Rs. 10 towards clothing is being given and the Collectors have been requested to see that these amounts are disbursed promptly. The Government have sanctioned a special advance of Rs. 1 lakh to each of the Collectors of Chingleput, South Arcot and Madras and they have the authority to incur further expenditure to the extent necessary. I have referred earlier to the special efforts taken to close the breaches in irrigation tanks and to restore road communications, which have been undertaken by the Public Works Department. Government in the Agriculture Department will take necessary steps for the supply of fresh seeds in respect of areas where crop has been washed away. Government will also give necssary loan facilities for agriculturists adversely affected and for fishermen for replacing their loss of boats and nets. Loans for repairing and rebuilding damaged tiled houses will also be given.

Sir, the magnitude of the problem has assumed much bigger proportion than we first expected. It is now estimated that the cost of rehabilitation including cost of restoration of irrigation tanks and restoration of communications may exceed Rs. 2 crores. This Government are addressing the Government of India about this matter and are requesting them for necessary assistance both by way of grant and loan. It is hoped that the Government of India will help us in this unforeseen calamity which has ravaged three districts of Madras, Chingleput and South Arcot.

Sir, I assure this House that this Government will take all the steps necessary for the rehabilitation of the affected people as expeditiously as possible.

8th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் வெள்ளம், புயல் சேதம் பற்றி வைத்த அறிக்கை மீது பொதுவாக மன்ற அங்கத்தினர்களும், குறிப்பாக பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்கள் விவரங்களைத் தரவும், விளக்கங்கள் வைக்கவும், பரிந்துரைகள் செய்யவும் வாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையில் நாளை இரண்டு மணி நேரம் ஒதுக்கித் தந்தால் அதில் கருத்துக்கள் வழங்க வாய்ப்பு ஏற்படும். அது மட்டுமல்லாமல் முதல் அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையின் படி இன்றே கனம் உறுப்பினர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தால் தாங்கள் அதுபற்றி கருத்துக்கள் சொல்ல வாய்ப்பு ஏற்படும் அதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10–00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த அறிக்கையின் நகல் எல்லா அங்கத்தினர்களுக்கும் அளிக்கப்படும். இன்றைக்கு இருக்கிற அஜெண்டா இன்று முடிந்துவிடும் என்று நினைக்கிறேன். நாளை இரண்டு மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் வேண்டுமானால் விவாதம் வைத்துக் கொள்ளலாம்.

IV.—PRESENTATION OF REPORT

Report of Committee on Estimates on Directorate of Handlooms.

Sri P. RAMACHANDRAN: Mr. Speaker, Sir, I rise to present the Second Report of the Committee on Estimates (1966-67) on the Directorate of Handlooms.

V.—RULING *RE* DIVISION DURING GUILLOTINE

Mr. SPEAKER: Hon. Members are aware that on the 28th March 1966, during the last Budget Session, the hon. Member, Sri K. A. Mathialagan asked for a division on a Demand after the guillotine was applied, and that was refused by the chair. He raised a point of order on this which I promised to examine, and give my opinion later on.

The hon. Member, Sri Mathialagan stated that Rule 155 of the Madras Assembly Rules enables the Speaker to terminate a discussion or debate on a Demand and did not exclude the right of the Member to demand for a division. The hon. Members, Sri M. Kalyanasundaram and Sri M. Karunanithi also supported this view and said that the application of guillotine related only to the termination of the discussion.

When other Legislatures were consulted, I find that there is no specific instance on the point for decision before us. In the House of Commons, guillotine motions are a form of closure applied to the discussion on Bills, and there is no definite guidance for us from there also. Therefore, I have to change my views and to decide that, if a Member wants a division after the guillotine is applied, it has to be allowed. Any cut motion already moved, before guillotine is applied, will also be put. But no cut motions not moved, will be allowed to be moved, nor put to the House

[Mr. Speaker] [8th November 1966

Of course, the Speaker has always the discretion to adopt any of the recognised modes of taking division to expedite matters and to avoid delaying tactics.

The guillotine is mentioned as a division saving form in a book of Parliamentary Procedure of the House of Commons by Lord Campion. I understand that in this way. In a democracy, when we have got several demands which are taken up in the course of several days, the Leaders of Parties who are members in the Business Advisory Committee here take a decision as to which are all the important demands for discussion and voting, and those demands are taken on different days and a division is allowed and voting is done, if wanted. Comparatively, minor demands which are not included on the different dates for discussion and for which discussion and voting may not be necessary, are taken up on the last day, so that they may be put in at the time, guillotine is applied. This decision is taken in the Business Advisory Committee. So, it is prudent and better not to ask for division after guillotine is applied, though it is not specifically prohibited in the rules.

VI.—GOVERNMENT BILLS

(1) The Indian Registration (Madras Amendment) Bill, 1966—*cont.*

Mr. SPEAKER : Now, the discussion on the Indian Registration (Madras Amendment) Bill, 1966, will be continued.

The hon. Member, Sri V. Krishnamoorthy, will now speak.

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் அக்டைத் திருத்தவேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம், முதன் முதலாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேவையற்றது. பொது மக்களுக்குப் பயன் அளிக்காதச் சட்டம் இது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன்மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் இருக்கும் எழுத்தர்கள் குறிப்பாக 500. 600 குடும்பங்களுக்குத் தீமையை உண்டு பண்ணும் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கிற பொது மக்களுக்கும் இது பாதகமாக இருக்கும் என்ற வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை தயவு செய்து நம்முடைய அமைச்சரவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அதற்காகவாகிலும் இதனை வாபஸ் பெறவேண்டுமென்றும் கூறி என்னுடைய வருத்தத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் இந்தச் சட்டத்தைப் பற்றி நம் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். கொடுத்த விளக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். குத்தகையும் அதுபோல் மிகச் சாதாரண மான டாக்குமென்ட்ஸை ரிஜிஸ்டர் செய்வதனை காப்பி மட்டும் கொடுத்தால் போதும். ஒரு ஆண்டு, இரண்டாண்டுகள் அல்லது மூன்றாண்டுகளோ குத்தகைக்கு நிலத்தை ஏற்றுக் கொண்டால், அதை ரெஜிஸ்டர் செய்வதற்கு

என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். கிளாஸ் 15 பொதுவாக நல்லதுதான் என்றாலும் அடிக்கடி அதிகாரியின் தலையீடு இருப்பது ஆபத்தாக முடியும். நம்முடைய நோக்கம் தனியார் நடத்தக் கூடிய பள்ளிக்கூடங்களிலே தாறுமாறுகள் நடக்கக்கூடாது, தரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான். எப்போது வேண்டுமென்றாலும் டைரக்ஷன்ஸ் கொடுக்கலாம் என்று இருப்பதிலே அதிகாரிகளுடைய தலையீட்டை எந்தளவுக்கு வரையறுத்து குறுகிய அளவுக்கு வைக்கிறோமோ, அந்த அளவுக்கு தனியார் துறையில் நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்கள் நல்ல முறையில் நடத்தக் கூடிய நிலை இருக்கும்.

கிளாஸ் 18 (1)-ல், இந்த விதிமுறைகளுக்கெல்லாம் உட்பட்டு நடத்தாதவர்களுக்கு ஜெயில் தண்டனை கொடுக்காமல் என்று இருந்ததை நீக்கி விட்டோம். அது இருந்தால் வாத்தியாரே ஜெயிலுக்குப் போனார் என்று பிள்ளைகள் பேசக் கூடிய நிலை ஏற்பட்டு விடும். கல்வியைப் போதிப்பது புனிதமான தொழில். அதற்கு எவ்வளவு சௌகரியத்தைச் செய்து கொடுக்கிறோமோ, அந்த அளவுக்குப் பிள்ளைகளின் பண்பு மற்றவை வளரும். இந்த நிலைமையிலேயே பிள்ளைகளுடைய நிலைமை எங்கெங்கோ போய்க் கொண்டிருப்பது கவலை தரக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கிளாசிலே 'இம்பரிசன்மெண்ட்'-ஐ எடுத்து விட்டது வரவேற்கத் தக்கது. ஆனால், கிளாஸ் 18 (2)-லே இம்ப்ரிசன்மென்டை எடுக்கவில்லை. கிளாஸ் 18 (2)-ல்.

"If any person wilfully obstructs any person, officer or authority from entering any private educational institution in the exercise of any power conferred on him or it by or under this Act, he shall be punishable with imprisonment for a term which may extend to one month or with fine which may extend to one thousand rupees or with both." என்று போட்டிருக்கிறது.

இதிலே கூட இம்ப்ரிசன்மென்டை எடுத்துவிடுவது நல்லது. இதிலேயும் இம்ப்ரிசன்மென்டுக்குப் பதிலாக 'ஃபைன்' என்று போடுவது நலமாக இருக்கும். ஹெட்மாஸ்டர், 'வகுப்பு நடக்கிறது, கொஞ்சம் இருங்கள்' என்று சொல்லுவதைக்கூட அதிகாரி தவறாக எடுத்துக்கொண்டு 'உள்ளே வராதே' என்று தடுக்கப்பட்டதாகக் கூறித் தண்டனை அளிக்கக்கூடிய நிலைமை வந்துவிடக்கூடாது. ஆகவே, இதிலும் 'இம்ப்ரிசன்மென்ட்' என்று இருப்பதை எடுத்துவிடுவது வரவேற்கத் தக்கதாக இருக்கும். இந்த மாதிரிச் சில திருத்தங்களைச் செய்துவிடுவார்களேயானால், இன்றைக்கு நடக்கிற தனியார் பள்ளிக்கூடங்கள், நல்ல தரமான கல்வியைத் தகுதியுள்ளவர்களைக் கொண்டு போதிக்கக்கூடிய சூழ்நிலையும், ஸ்திரமான கல்வி நிலையங்கள் ஏற்படவும் வாய்ப்பு இருக்கும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்துகிற மசோதா இந்த மன்றத்தின் ஆய்வுக்குக் கனம் முதலமைச்சர் அவர்களால் வைக்கப் பட்டிருக்கிறது. தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்தும்

2nd November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இன்றியமையாத தன்மையை இந்த மன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மசோதா இந்த மன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டபோதே தெரிவிக்கப்பட்டது. இந்த மசோதாவின் நோக்கத்தை எதிர்க்கட்சியினர் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால், இதிலே தெளிவு இல்லாத நிலைமைகளிலே பல இடங்கள் வருகின்ற காரணத்தால் அதைச் சுட்டிக் காட்ட வேண்டிய கடமை இருக்கிறதென்பதைக் கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். தனியார் கல்வி நிலையங்களை நடத்த வேண்டிய இன்றியமையாத் தன்மை ஓரளவு இருந்து கொண்டுதான் இருக்கிறது. பொதுவாக அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட, அரசினரால் நடத்தப்படுகிற கல்வி நிலையங்களில் பெறுகின்ற கல்வியோடு தங்களுடைய கல்வியின் முடிவைப் பெற முடியாத நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் பயிற்சி பெறுவதன் மூலமாகத்தான் கல்லூரித் தேர்வுகளையும், உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வுகளையும் எழுதக் கூடிய நிலைக்கு மாணவர்கள் ஆளாகிறார்கள். அது மட்டுமல்லாமல் அரசாங்கமே பலவகையான தேர்வுகளை நடத்தும்போது அந்தத் தேர்வுகளை எழுத முயலுகிறவர்கள் ஓரளவு பயிற்சி பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய பயிற்சியைத் தனியார் நடத்துகிற கல்வி நிலையங்களில் தான் பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய தனியார் கல்வி நிலையங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்ற தன்மையையும் நாம் பார்க்கின்றோம். அரசாங்கம் நடத்துகிற கல்வி நிலையங்களைக் காட்டிலும் தனியார் நடத்துகிற பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்ற தன்மையையும் ஆங்காங்கு பார்க்கிறோம். இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் என்று கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களில் தேர்ச்சி பெற முடியாதவர்கள் மூன்று மாத கால அளவில் பயிற்சி பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, தனியார் கல்வி நிலையங்களை நாடவேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, இந்தக் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்ற நோக்கம் சிரிய நோக்கமாக அமைகின்ற தன்மையைப் பார்க்கிறோம். தனியார் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டுமானால், அதற்கான வசதிகள் அரசாங்கம் நடத்தும் கல்லூரிகளிலே ஏற்படுத்தப்படுமானால், தனியார் கல்வி நிலையங்கள் நடத்தப்பட வேண்டிய இன்றியமையாத தன்மை ஏற்படாது.

இதை ஒரு தடவை சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்கள்கூட நினைவுபடுத்தியிருக்கிறார்கள். சாதாரணமாக அரசாங்கம் நடத்துகிற கல்லூரிகளில் படிக்கிறவர்கள் தேர்வு பெற முடியவில்லையென்றால் அவர்கள் மேலும் பயிற்சி பெற விரும்புவார்களானால், மறுபடியும் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுத வேண்டிய கட்டம் ஏற்படுமானால் அவர்கள் எங்கிருந்து பயிற்சி பெறுவது? அவர்களாகவே பெறமுடியாது, அவர்கள் பெற்றோர்களிடம் இருந்தும் பெற முடியாது, தக்க ஆசிரியர்களிடம் இருந்துதான் பெற முடியும் என்ற இன்றியமையாமை ஏற்படுகிறபோது அதற்கு வாய்ப்பு ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படுதல் வேண்டும். அப்படிப் 1-30 p.m.

பட்ட சூழ்நிலை அரசாங்கம் நடத்துகிற கல்லூரிகளில் அல்லது பள்ளிகளல் இல்லாததால் அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிற தனியார் பள்ளிகள் அல்லது தனியார் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அந்தத் தனியார் பயிற்சிப் பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் விதிககப்படுகிற கட்டணத்தைப் பார்க்கிறபோது சில பல கல்லூரிகள் அல்லது பள்ளிகளில் தாங்க முடியாத அளவிற்குக்கூட கட்டணம் வளருகிறது. பொதுவாக அரசாங்கத்தால் நடத்தப்படுகிற கல்லூர்கள் அல்லது பள்ளிகளில் இரண்டு ஆண்டுகளுக்குச் செலுத்துகிற கட்டண அளவைவிடக் கூட இரண்டு மூன்று மடங்கு மூன்று மாத காலப் பயிற்சிக்குச் செலுத்த வேண்டிய கட்டததறகு ஆளாகிறார்கள். அப்படி ஆளாகக் காரணம், அங்கு சிறந்த முறையல் படிப்புச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது, மூன்று மாத காலத்தில் பயிற்சி முழுவதையும் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையில் செல்கிறார்கள். அந்த நம்பிக்கையில் செல்லச் செல்ல அதற்குக் கிராக்கி அதிகம் ஏற்படுகிறது. அப்படி வரும்போது மிகச் சிறந்த விரிவுரையாளர்களை, சிறந்த பேராசிரியர்களை நியமிப்பதால் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று காரணம் சொல்லி, அதிகக் கட்டணம் வசூலிக்கும் கட்டம் ஏற்படுகிறது. அந்த முறையில் அவற்றை ஒழுங்குபடுத்தவேண்டும் என்ற நோக்கம் இருக்குமானால் அரசாங்கம் நடத்துகிற கல்லூரிகளில் தேர்வில் வெற்றி பெறாதவர்கள், விரும்பினால் குறைந்த கட்டணத்தில் மூன்று மாத காலத்தில் பயிற்சி பெறலாம் என்ற வாய்ப்பை அரசாங்கக் கல்லூரிகளில் அல்லது பள்ளிகளில் ஏற்படுத்தித் தர அரசாங்கம் முன்வந்தால் தனியார் பள்ளிகளில் அதிகக் கட்டணம் செலுத்தி அவற்றை நாட வேண்டிய நிலைமை ஏற்படாது. ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து ஒழுங்குபடுத்துவதன் நோக்கத்தை ஓரளவு அரசாங்கம் ஈடாக்கமுடியும். அந்தந்தக் கல்லூரிகளில் தேர்ச்சி பெறாதவர்கள் பயிற்சி பெற விரும்பினால் மூன்று மாத காலப் பயிற்சியை அந்தத்தக் கல்லூரிகளே தரும், அதற்காகக் குறிப்பிட்ட சில மாவட்டத் தலைநகரங்களில் அரசாங்கக் கல்லூரிகளில் அதற்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். அதற்கான வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு குறைந்த அளவுக் கட்டணத்தில் பயிற்சி பெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால், விட்டுவிட்டதைப் பெற, அவர்கள் குறைபாட்டை நிறைவு செய்துகொள்ள அந்நிலை இடம் கொடுக்கும். அப்போது தனியார் பள்ளிகள் கல்லூரிகள் நடத்த வேண்டிய ஒரு நிலை ஏற்படாது. ஒழுங்குபடுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட இந்த மசோதா அனைவரும் வரவேற்கத் தக்கதாக இருக்கிறது. இதில் சாதாரணமாக உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகள், நிலையங்கள், பள்ளிகள் இவற்றில் 50 அல்லது அதற்குக் குறைவாக மாணவர்கள் இருந்தால் மற்ற நிலையங்கள் என்றால் 100 அல்லது அதற்குக் குறைவாக மாணவர்கள் இருந்தால் அவற்றை இந்த மசோதா கட்டுப்படுத்தாது என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றொரு இடத்தில், தனியார் கல்வி நிலையங்கள் எவ்வளவு என்ற பட்டியலை அரசாங்கம்

2nd November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

திரு. ஆ. கு. சுப்பையா : அறுவடைக் காலங்களில் விவசாயத் தொழிலாளர்கள் அதிக கூலி கேட்கிருர்கள் என்பதற்காக போலீஸ் படையை வைத்துக்கொண்டு குறைந்த கூலி கொடுக்கிருர்கள். அம்மாதிரி போலீஸ் படையினரை அனுப்பாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : நிலம் உடையவர்கள் சொற்பக் கூலியைக் கொடுத்துவிட்டு ஏழைகளை ஏமாற்றுவதற்குப் போலீஸ் படையை உபயோகப்படுத்துவது என்பதே இல்லை. ஏழைகளுடைய கூலியையும் அவர்கள் அபகரிக்கக்கூடாது. தொழிலாளர்களும் அநியாயமாகக் கூலி கேட்டு குழப்பம், குதர்க்கவாதம் பண்ணக்கூடாது. உணவு நெருக்கடி சமயத்தில் இத்தகைய சந்தர்ப்பங்களில் அமைதி, ஒழுங்கை நிலைநாட்டத்தான் ஏற்பாடு செய்திருக்கிருேம்.

திரு. கோ. சி. மணி : நிலக்காரர்களுக்குப் பாதுகாப்பாக போலீஸ் படையினர் அனுப்பப்படுவதாகச் சொன்னுர்கள்.

கனம் சபாநாயகர் : அமைச்சர் அப்படிச் சொல்லவில்லை. "ப்ரீச் ஆஃப் பீஸ்" இருக்கிறபோது லா அண்டு ஆர்டரை நிலை நிறுத்த போலீஸ் அனுப்பப்படுவதாகச் சொன்னுர்கள்.

திரு. கோ. சி. மணி : இந்தத் தகராறுகள் எழும்பொழுது எல்லாம் போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிருர்கள். அந்த அதிகாரிகள் அங்கே போய் என்ன என்ன காரணங்களால் தகராறுகள் ஏற்பட்டன என்ற விவரங்களை ஆராய்ந்தார்களா ? அது சம்பந்தப்பட்ட தகவல்களை அமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிருர்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் அதுமாதிரித் தகராறுகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் போலீஸ் அதிகாரிகள் அனுப்பப் படுகிருர்கள். அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்றுதான் அவர்கள் போகிருர்கள். ஏழைகளைக் கஷ்டப்படுத்தவேண்டுமென்று அவர்கள் போகவில்லை. அங்கே சண்டை சச்சரவு, கொலை, குத்து ஏற்பட்டு விடக்கூடாது, அமைதி ஏற்படவேண்டும் என்பதற்காகத் தான் போகிருர்கள்.

கனம் சபாநாயகர் : கனம் உறுப்பினர் "எதற்காக குழப்பம் வந்தது என்று காரணங்கள் அறிந்து அதைப் பரிசீலனை செய்தார்களா ?" என்று கேட்கிருர்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : எப்படியும் போலீஸ் அதிகாரிகள் அங்கு போய்த்தான் ஆகவேண்டும், இல்லாவிட்டால் குழப்பம் ஏற்பட்டுவிடும்.

[3rd November 1966

திரு. கோ. சி. மணி : கனம் சபாநாயகர் அவர்களே, அங்கேயுள்ளவர்கள் தெரிவித்த கருத்தைப் போலீஸ் கேட்டு, அதன்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் நான் கேட்டேன். நியாயமான கூலி, அடிப்படைக் கூலி நிர்ணயம்.

கனம் சபாநாயகர் : அந்தக் கேள்வி இதிலே வராது. நியாயமான கூலி எவ்வளவு என்பதெல்லாம் இதில் வராது. அதற்கு வேறு கேள்வி போடுங்கள்.

திரு. கோ. சி. மணி : துணைக் கேள்வி போட்டால். . . .

கனம் சபாநாயகர் : துணைக் கேள்வி போட்டால்கூட இதில் வராது.

திரு. கோ. சி. மணி : விவசாயிகள் அதிகக் கூலி கேட்டு, அவர்களுக்குக் குறைத்து கூலி கொடுத்து, அதற்காக போலீஸ் அனுப்பப்பட்டு . . .

கனம் சபாநாயகர் : கூலி நியாயமா இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டியது ஹோம் டிபார்ட்மெண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : லேபர் டிபார்ட்மெண்ட்.

கனம் சபாநாயகர் : அதைக் கவனிப்பது லேபர் டிபார்ட்மெண்ட். The hon. Member may therefore put a separate question for that. Here the question is whether the Police were used unnecessarily or illegally or not?

திரு. ஆ. கு. சுப்பையா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது உழவர்கள் கலவரம் செய்கிறார்கள், அதற்காக அனுப்பப்பட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எதற்காகக் கலவரம் செய்கிறார்கள் என்று சொல்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : உழவர்கள் யாரும் கலகம் செய்யவில்லை. என்னைக்காட்டிலும் உழவர்களிடத்திலே அன்புள்ளவர்கள் யாரும் இல்லையென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கள்ள நோட்டுகள்

*368 **கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூரில் 1966 மே முதல் வாரத்தில் கள்ள நூறு ரூபாய் நோட்டுகள் ஏதேனும் பிடிபட்டனவா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

3rd November 1966]

திரு. எஸ். முருகையன் : அந்த வழக்கிலே எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? இது சம்பந்தப்பட்டவர்கள் யாராவது தலைமறைவாக இருக்கிறார்களா? அவர்களைக் கைது செய்யக்கூடாது என்று உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தலைமறைவாக இருக்கிறார்கள் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. கைது செய்யக்கூடாது என்று தகவல் கொடுக்கவில்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த கள்ள நோட்டு அடிப்பது என்பது 100 ரூபாயிலிருந்து 2 ரூபாய் வரைக்கும் வந்து நாயணம் வரைக்கும்கூட பெருகிவிட்டது. அதைத் தடுப்பதற்கு என்ன முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாதிரித் திருட்டு நோட்டுகள் அச்சடிப்பது கண்டுபிடிக்கப்பட்டு அங்கங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு லைஃப் சென்டன்ஸ் கொடுக்க வேண்டுமென்றும், பெரிய தண்டனை விதிக்கவேண்டுமென்றும் அரசாங்கத்திலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எவ்வளவு தூரம் இதைக் கட்டுப்படுத்த முடியுமோ அதிலே அதிக அக்கறை எடுத்து அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் யார் யார் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : The case is under investigation. இந்தச் சமயத்தில் பெயர்கள் சொல்வது நல்லதல்ல.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த வழக்கிலே கைப்பற்றப்பட்ட நோட்டுகள் எவ்வளவு அல்லது எவ்வளவு நோட்டுகளை அச்சடித்து விநியோகித்திருக்கிறார்கள் என்ற ஆதாரமாகிலும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? கோயம்புத்தூர் நோட்டுகள் சம்பந்தமாக, எல்லா நோட்டுகளும் செல்லும் என்று கிருஷ்ணன் வழக்கிலே சொன்ன மாதிரி இந்த நோட்டுகளும் செல்லும் என்று அரசாங்கம் அறிவிப்புச் செய்துவிட்டதா?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் ஒரு நீண்ட கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கோயம்புத்தூர் பற்றியெல்லாம் கேட்கிறார்கள். தனியாகக் கேள்வி போடலாம்.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்பொழுது கோர்ட்டில் வழக்கு இருப்பதால் இந்தக் கேஸில் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்களைச் சொல்லமுடியாது என்று சொன்னார்கள். அவர்களுடைய பெயரைச் சொல்வது எந்த விதத்திலும் கோர்ட்டை அவமதித்ததாகாது. ஏற்கனவே அவர்களையெல்லாம் அரஸ்ட் பண்ணியாகிவிட்டது. ஆகவே, இன்னார்

இன்னார் என்று பெயர்களை அறிவிப்பது சட்ட விரோதமல்ல என்பதை கனம் சபாநாயகர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அவர்களுடைய பெயர்களைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : கோர்ட்டில் இருக்கிறது என்று அவர்கள் சொல்லவில்லை; இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்று சொன்னார்கள். Revealing the names may impede investigation. If the persons' names are given, their associates somewhere else may abscond.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் இரண்டு பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மேலும் அந்த வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். வேலூர் நகரத்திலே தெரிந்த உண்மையாக அது இருக்கலாம். இன்னார் இன்னார் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சட்ட மன்றத்திலே சொல்லவில்லை. ஆகவே, அந்த இரண்டு பேர்களும் இந்த அமைச்சரவைக்கு வேண்டியவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : இதில் ஸ்பீக்கர் பதில் சொல்ல முடியாது. யார் யாருக்கு வேண்டியவர்கள் என்று சொல்ல முடியாது. நேம்ஸ் தெரிந்திருக்கலாம். ஆனால் அதை ரிவீல் பண்ணுவது இன்வெஸ்டிகேஷனுக்கு இடைஞ்சலாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள். கட்டாயப்படுத்தித் தெரிவிக்கவேண்டும் என்று சொல்வதற்கு அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே இந்தக் கேள்வியை இதோடு விட்டுவிடுவது நல்லது.

திரு. கரு. சீமைச்சாமி : கள்ள நோட்டு அச்சடிப்பது என்பது சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன. யார் யாரோ செய்துகொண்டிருக்கிறார்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது, கடமையிலிருந்து தவறிவிட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் கடமையில் தவறவில்லை. கொலை செய்யக்கூடாது என்று சொன்னாலும் எவனாவது ஒருவன் போகிற போக்கில் கொலை செய்துவிடுகிறான். திருட்டு நோட்டுகள் சம்பந்தமாக உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது, ஜெயில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. கோ. சி. மணி : அந்த இரண்டு பேர்களும் அச்சடித்ததாகச் சொல்லப்படும் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டது எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன் : மூன்று நூறு ரூபாய் நோட்டுகள்.

3rd November 1966]

திரு. ஆ. துரையரசன் : நோட்டு அச்சடிப்பது கடுமையான குற்றம் என்பதால் நோட்டு அடிப்பவர்கள் கைது செய்யப்பட்டு ருசிப்பிக்கப்பட்டால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கின்ற அளவுக்கு சட்டத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது ஆயுள் தண்டனை கொடுக்கப்படுகிறது. மரண தண்டனை விதிப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை. அதைப்பற்றி பின்னால் பரிசீலனை செய்யலாம்.

கனம் சபாநாயகர் : இதற்குத் தனி "ஆக்ட்" கொண்டுவர வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : கள்ள நோட்டு அச்சடித்தவர்கள் சிறை சென்றுவிட்டு வந்தாலும்கூட அவர்கள் தங்களுடைய சொத்தை வைத்துக்கொண்டு வாழலாம் என்ற காரணத்தாலே தயங்காமலே தைரியமாக இந்தக் கள்ள நோட்டு அச்சடிப்பதிலே இறங்குகிறார்கள். ஆகவே, அவர்களைத் தண்டிப்பதுடன் அவர்களுடைய பழைய சொத்துக்களையும் பறிமுதல் செய்வதற்கு ஒரு சட்டத் திருத்தத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

MR. SPEAKER : It is only a suggestion.

திரு. ப. உ. சண்முகம் : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் கைது செய்யப்பட்டவர்கள் சிறையிலே இருக்கிறார்களா அல்லது ஜாமீனில் வெளியே விடப்பட்டிருக்கிறார்களா? 9-30

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஒரு குற்றத்தின்கீழ் ஒருவரைக் கைது செய்தார்கள் என்றால் அரசியல் சட்டப் பிரகாரம் 24 மணி நேரத்திற்குள்ளாக ஜுடீஷியல் ரிமான்டில் வைத்து விடவேண்டும். கைது செய்து இரண்டு பேர்களையும் மாஜிஸ்ட்ரேட்டிடம் கொண்டு வந்து ஜுடீஷியல் ரிமான்டில் வைத்ததற்குப் பிறகு அந்த இன்ஃபர்மேஷன் பப்ளிக் இன்ஃபர்மேஷன் சட்ட சபையில் அமைச்சர் அவர்கள், அந்த இரண்டு பேர்கள் யார் என்று சொல்வதற்குத் தயங்குகிறார்கள் என்றால் இந்தச் சட்ட சபையில் அவருக்குத் தெரிந்த செய்தியை, பொது மக்களுக்குச் சுலபமாகக் கிடைக்கக்கூடிய செய்தியை, சொல்வதற்குத் தயங்குகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதைத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? அப்படிச் சொல்ல மறுக்கிறார்கள் என்றால் இந்த இன்ஃபர்மேஷனை வித்ஹோல்ட் செய்வதன் மூலம் இந்தச் சபையை கனம் அமைச்சர் அவர்கள் அவமதிக்கிறார்கள் என்ற ப்ரிவிலேஜ் மோஷனை தயவுசெய்து சபாநாயகர் அவர்கள் அனுமதிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : அமைச்சர் அவர்கள் மூன்று கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டுமா?

திரு. எஸ். ஜே. ராமசாமி : கைது செய்யப்பட்டவர்களின் பெயர்களைச் சொல்ல அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். எந்த ஊரில் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை யாவது அறிவிப்பார்களா?

MR. SPEAKER : Will the Hon. Minister kindly say whether the names of those persons are available with him now?

கனம் திரு. பூ. கக்கன் : பெயர்களைச் சொல்வதில் ஆட்சேபணை இல்லை. அதனால் சில பேர்கள் இவர்கள் அகப்பட்டுக்கொண்டதால் தப்பித்துக் கொள்வார்கள். மேலும், இது இன்வெஸ்டிகேஷனில் இருப்பதால் சொல்லாமல் இருக்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

கனம் சபாநாயகர் : பப்ளிக்காக ஒருவரை அரெஸ்ட் செய்து கோர்ட்டுக்கு ரிமாண்டுக்கு வந்தால் எல்லோருக்கும் தெரியும், அந்தத் தகவலை ஏன் சொல்லக் கூடாது என்று கேட்கிறார்கள். அதற்கு ஏதாவது சொல்கிறீர்களா?

கனம் திரு. பூ. கக்கன் : இவர்கள் பெயர்களைச் சொல்லிவிட்டால் இவர்களோடு சேர்ந்திருப்பவர்கள் சிலர் மறைந்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்லவில்லை.

திரு. சா. கணேசன் : பெயர்கள் பத்திரிகையில் வந்தாகிவிட்டது.

கனம் சபாநாயகர் : அப்படிப் பத்திரிகையில் வந்திருந்தால் ஏன் கேட்கிறீர்கள்?

திரு. சா. கணேசன் : பலர் பார்க்காமல் இருக்கலாம். அதை இனிமேலும் சட்ட சபையில் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமா என்று கேட்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பத்திரிகையில் வந்திருக்கிறது என்றால் என்ன வந்திருக்கிறது என்று கேட்டால், வேண்டுமானால் பார்த்துச் சொல்லலாம். என்னென்ன தகவல்கள் கொடுப்பது, என்னென்ன கொடுப்பதில்லை என்ற ஒரு முறை இருக்கிறது. பரிசீலனையில் இருக்கும்போது சில தகவல்களைக் கொடுத்தால் அது பாதிக்கப்படும் என்ற வகையில் பெயர்களைச் சொல்ல மறுக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

கூட்டுறவு பாங்கு கட்டடங்கள்

***374 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை State Co-operative Bank -ல் இருந்து ரூ. 40 லட்சம் செலவிட்டு புதிய கட்டடம் ஒன்று கட்டவேண்டும் என்று கோரி அரசுக்கு விண்ணப்பம் அண்மையில் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

3rd November 1966]

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (அ) Yes.

(இ) The Madras State Co-operative Bank has been advised to defer the proposal of constructing a new building for the duration of the National Emergency.

*375 **கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு பாங்கு அலுவலகத்திற்காகவும், மத்திய கூட்டுறவு பண்டகசாலையின் உபயோகத்திற்காகவும் கட்டடமும் "யாஸ்மின் ரைஸ் மில்லும்" வாங்க அரசாங்கத்தின் அனுமதி கோரப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: புதுக்கோட்டை கூட்டுறவு மத்திய பாங்கு ஒரு கட்டடம் வாங்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் அனுமதி கோரியது. இந்த அனுமதி வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஓர் அரிசி மில் வாங்கிய பிறகு, மாநில அரசின் உதவி வேண்டி மனுச் செய்தது. இச் சங்கம் இந்த மில் வாங்குவதற்கு முன் அனுமதியைப் பெறவில்லையாதலால் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் இம் மனுவை நிராகரித்துவிட்டார்.

திரு. பி. முருகையன்: இந்த இரண்டு கட்டடங்களும் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இந்தக் கட்டடம் கட்ட 25—6—1963-ல் பெர்மிஷன் கொடுத்திருக்கிறார்கள் ரெஜிஸ்டிரார் அவர்கள். இந்தக் கட்டடம் கட்டுவதற்காகத்தான் பெர்மிஷன். அந்த மில் கட்டுவதற்கு பெர்மிஷன் கேட்கவில்லை.

திரு. சா. கணேசன்: இந்த ரைஸ்மில் விலைக்கு வாங்கியது அது கட்டியது அல்ல என்று தெரிகிறது; அப்படித்தானா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: வாங்குவதற்குத்தான் பெர்மிஷன்.

திரு. பி. முருகையன்: நான் கேட்ட கேள்வி, இரண்டு கட்டடங்களும் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன என்பது. அதற்கு பதில் சொல்லவில்லை. தொகை எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ரூ. 1,17,000 என்று அவர்கள் கேட்டார்கள். ரூ. 1,04,000-க்குத்தான் வாங்கியிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: வாங்கப்பட்ட கட்டடத்தின் மதிப்பு ரூ. 1,04,000 என்று சொன்னார்கள். இதற்கு யார் பொறுப்பு? யாரால் இவ்வளவு ரூபாய்க்கு வாங்கவேண்டுமென்ற ஸஜெஷன் கொடுக்கப்பட்டது? அதன் பேரில் பரிசீலனை செய்யப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கம்

*376 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கத்திற்கு கற்கண்டு நிலையம் அமைக்க திருச்செந்தூரில் எவ்வளவு நிலம் வாங்கப்பட்டது?

(இ) அந்த இடத்தை யாராவது ஆக்ரமித்திருக்கிறார்களா?

(உ) ஆமெனில், அந்த நபரை வெளியேற்ற எடுத்த நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கம் திருச்செந்தூர் தாலூகாவிலுள்ள வீரபாண்டியபட்டணத்தில் 1.86 ஏக்கர் நிலத்தை தேசிய பனங்கற்கண்டு ஆராய்ச்சி—பயிற்சி நிலையத்திற்காக கிரயத்திற்கு வாங்கியுள்ளது.

(இ) ஆம்.

(உ) சென்னை மாநில கூட்டுறவு சங்கம் ஆக்கிரமிப்பாளரை வெளி நடத்த அரசாங்க வக்கீலைக் கலந்து சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது. இதற்கிடையில் ஆக்ரமிப்பாளர் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகாண விழைந்துள்ளனர்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : அந்த நிலத்தை ஆக்கிரமித்தது யார்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : எஜுகேஷனல் இன்ஸ்டிட்டியூஷன். அந்தக் கமிட்டி அங்கத்தினர்கள், சேர்மன் எல்லாம் அங்கத்தினருக்குத் தெரியும். திரு. ஆதித்தன் அவர்களுடைய இன்ஸ்டிட்யூஷன் அது.

திரு. கே. டி. கோசல்ராம் : இந்த ஆக்கிரமிப்பு எவ்வளவு காலமாக நடந்திருக்கிறது? வருஷக்கணக்கில் இதை எவிக்ட் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : விளக்கமாகச் சொன்னேன். அவர்களை அப்புறப்படுத்தவேண்டுமென்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எடுத்துக் கொண்டிருந்த சமயத்தில், அவர்கள் நேரிடையாக ஸ்டேட் பனைவெல்ல சங்கத் தலைவர் அவர்களுக்கும் அந்த சங்கத்திற்கும் எழுதிக் கேட்டிருந்தார்கள். பிறகு நேரடியாக இப்போது பேசி வருகிறார்கள்.

திரு. கே. டி. கோசல்ராம் : பேச்சு வார்த்தை முறிந்து விட்டது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இங்குள்ள தகவல்படி முறிந்து விட்டதாக இல்லை.

3rd November 1966]

திரு. கே. டி. கோசல்ராம்: நான் ஊரிலிருந்து வருகிறேன். பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது. உடனடியாக காலி செய்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் அங்கத்தினருக்கு நேரடியாகத் தெரிந்திருக்கலாம். என்னிடம் அத்தகவல் இல்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: இந்த ஆக்கிரமிப்பு நடத்தும் போது கூட்டுறவு சங்கம் அதில் தலையிட்டு ஆக்கிரமிப்பு கூடாது என்று ஏதாவது தகவல் கொடுத்ததுண்டா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: விளக்கமான விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சர்க்கார் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்பவர்களிடம் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடக்கிறது என்பது கொள்கை பூர்வமான விஷயம். இது சரிதானா என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இந்த இடத்திற்குப் பதில் வேறு ஒரு இடம் கொடுக்கிறேன் என்ற முறையில் ஏதோ பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி: இந்த ஆக்கிரமிப்பை காலி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டது ரெவின்யூ டிப்பார்ட்மென்டா அல்லது கூட்டுறவு இலாகாவா? பேச்சுவார்த்தை நடத்தியது எந்த இலாகா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த விவரங்கள் பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: இதுபோன்று தனிப்பட்டவர்கள் ஒரு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து விட்டு அதற்குப் பதிலாக வேறு ஒரு இடத்தைக் கொடுக்கிறேன் என்று சொன்னால் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த தயாராயிருக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இது அரசாங்க இடம் என்ற அளவில் வரவில்லை. மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கத்தை சார்ந்தவர்கள்தான் வாங்கி வைத்திருந்தார்கள். அந்தக் கேள்விக்கு பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: ஏழை விவசாயி ஐந்து அல்லது ஆறு சென்ட் நிலத்தை ஆக்கிரமித்தால் உடனடியாக காலி செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது மிக விலை உயர்ந்த இடம். ஆக்கிரமித்திருப்பவர்கள் பணக்காரர்கள். அரசாங்கம் உடனடியாக காலி செய்ய தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : மாநில பனைவெல்லச் சங்கத்தைச் சார்ந்த இடம். திருப்பிக் கொடுப்பது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; மறுத்தார்கள் என்று சொன்னால் என்ன செய்ய முடியும் என்று பிறகு பார்க்கலாம்.

திரு. கே. டி. கோசல்ராம் : இது கொள்கை சம்பந்தப்பட்ட கேள்வி. இந்த என்க்ரோச்மென்டைக் காலி செய்வதற்கு ரெவின்யூ இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டுமா அல்லது கூட்டுறவு இலாகா நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி. இந்த மாதிரி ஆக்கிரமித்துக் கொண்டால் தனிப்பட்ட முறையில் பேசுவதற்கு இந்த அரசாங்கத்தில் விதிகள் இருக்கின்றனவா? விதிகள் இருந்தால் அது மற்றவர்களுக்கும் அப்ளிகபிள் ஆக இருக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்ல முடியும்.

ரயில்வே செஸ் நிதி

* 377 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திற்கு, 1961-ம் ஆண்டு ரெயில்வே செஸ் நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதை செலவு செய்யும் விதம்பற்றி அரசினர் ஏதேனும் ஆணையிட்டிருக்கின்றனரா?

(உ) அதன்படி செலவழிக்கப்பட்டதா?

(எ) இல்லையெனில், தர்மபுரி மாவட்டத்திற்கேற்ற பங்கினை பிரித்துக் கொடுக்க அரசினர் ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ரூ. 25,57,001.

(இ) ஆம். ரெயில்வே செஸ் நிதியிலிருந்து முதற் பொறுப்பாக தொடக்கப்பள்ளிகள் கட்டுவதற்கும் பின்னர் தாய் சேய் நல விடுதிகள், மருந்தகங்கள் கட்டுவதற்கும் செலவிடவேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) இல்லை.

(எ) இதை சேலம் கலெக்டர் கவனித்து வருகிறார்.

திரு. ம. கமலநாதன் : மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்காக இந்த 25 லட்சம் ரூபாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சேலம் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டம் 1961-ல் தீர்மானம் போட்டு அரசினருடன் தொடர்பு கொண்டது. இது வரை அரசினரிடமிருந்து எந்தவிதமான தகவலும் வரவில்லை. சென்ற பட்ஜெட் கூட்டத்தில் இதைப் பற்றிக் கேட்டபோது, கனம் முதலமைச்சர் அவர்கள், 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்க முடியாது; அந்தத் தொகை எதற்குப்

3rd November 1966]

பயன்படுத்த வேண்டுமோ அந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப் படும் ' என்று சொன்னார்கள். மீண்டும் அபிவிருத்தி மன்றம் அந்தத் தொகையை மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான செலவுகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது. இந்தத் தொகை அதற்கு செலவழிக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்ட அனுமதி வழங்க மறுக்கப்பட்டிருப்பதால், ஏற்கனவே உள்ள கொள்கை அடிப்படையில் ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடத் திற்கும், தாய் சேய் நல விடுதிகள், மருந்தகங்கள் கட்டுவதற்கும் அந்தத் தொகை பயன்படுத்தப்படும். தருமபுரி மாவட்டத்திற் கான பங்கைப் பிரித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் சேலம் கலெக்டரால் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ம. கமலநாதன் : அரசினர் இந்தத் தொகையை மருத்துவக் கல்லூரிக் கட்டடங்களுக்காகப் பயன்படுத்த வேண்டு மென்று உத்தரவு பிறப்பிப்பார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தத் தொகையை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று கலெக்டருக்கு உத்தரவு சென்றிருக் கிறது என்று சொன்னேன். அதற்கு என்ன அர்த்தம் என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குப் புரியவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாவட்ட அபிவிருத்தி மன்றத் தில் இருந்து அந்த 25 லட்சம் ரூபாய் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகு நடந்தக் கூட்டங்களில் அதைப் பற்றிக் கேட்டபோது அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். மருத்துவக் கல்லூரிக் கட்டடங்களுக்கு அந்தத் தொகை பயன் படுத்தப்படுமா இல்லையா என்பதற்குத் திட்டவட்டமான பதில் சொல்லவில்லை. இங்கே ' இல்லை ' என்று பதில் சொல்லுகிறார்கள். ஆனால், கலெக்டர் அவர்கள், மருத்துவக் கல்லூரிக் கட்டடங் களுக்குப் பயன்படுத்துவதற்கான உத்தரவு வழங்குவது பரிசீலனை யில் இருக்கிறது என்று சொல்கிறார். நிலைமை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பொதுவாக, ராஜ்ய அடிப்படை யில் எல்லா மாவட்டங்களிலும் இம்மாதிரி ரெயில்வே செஸ் நிதியை எந்தெந்த இனங்களுக்காகச் செலவழிக்கலாம் என்பது பற்றி மெயின் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது கூறினேன். அந்த அடிப்படையில் எல்லாக் கலெக்டர்களும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சேலம் சம்பந்தப்பட்டவரையில் அபி விருத்தி மன்றத் தீர்மானம் கொள்கையளவில் மறுக்கப்பட்டிருக் கிறது. அதற்கு பதிலும் சென்றிருக்கிறது. அதற்கு மேல் சர்க்கார் கொள்கை அடிப்படையில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கட்டவும், தாய் சேய் நல விடுதிகள், மருந்தகம் கட்டவும் கவனம் செலுத்துவார்கள் என நம்புகிறேன்.

[3rd November 1966

Seedling Nurseries

* 378 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any scheme has been envisaged for raising seedling nurseries by the Panchayat Unions in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *(அ) ஆம்.*

(இ) அண்மையில் கிராம வளர்ச்சி தல நிர்வாகத் துறையில் 26-8-1966 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட 2064 எண் அரசாங்க ஆணையின்படி, பஞ்சாயத்து யூனியன்கள் செடிப் பண்ணைகள் அமைத்தல் நான்காவது திட்டக் காலத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் பெற்ற திட்டங்களில் ஒன்றாகும். பஞ்சாயத்து யூனியன் அலுவலக வளைவுகளில் அல்லது பஞ்சாயத்து யூனியனின் அதிகார வரம்பிற்குட்பட்ட செறிவான நிலப்பகுதிகளில் உள்ள பயிரிடத்தக்க நிலங்களை உற்பத்திக்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். தனிப்பட்டவர்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் அடக்க விலையில் வழங்கப்படுவதற்கும் யூனியன் சாலை ஓரங்கள் நெடுகவும் நடப்படுவதற்கும் காய்கறி நாற்றுகள், பழ நாற்றுக்கள் அல்லது வெட்டுக் கிளைகளிலிருந்து வளர்க்கப்படும் செடிகளும் வாணிப நோக்கில் பலன்தரும் செடிகளும் வளர்க்கப்படலாம். இத்துடன், தரமான விதைகளைப் பெருக்கிக் கொள்வதற்கும் பஞ்சாயத்து யூனியனுக்கு வருவாய் ஈட்டித் தருவதற்கும் காய்கறிச் செடிகள் பயிரிடப்படலாம், பழத் தோட்டங்கள் அமைக்கலாம்.

திரு. வை சங்கரன் : *இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளும் போது பஞ்சாயத்து யூனியனுக்கு எவ்வளவு உதவி வழங்க சர்க்கார் உத்தேசித்துள்ளது?*

கனம் *திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே நிலம் இருக்கின்றவர்களுக்கு திட்ட அடிப்படையில் கவர்ன்மெண்ட் கிராண்ட் 2,500 ரூபாய் என்றால், 2,500 ரூபாய் கான்ட்ரிப்யூஷன் கொடுக்க வேண்டும். நிலத்தைப் பண்படுத்தும் செலவுகளை எல்லாம் யூனியன் நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம்.*

Diploma in Printing

* 379 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minisiter for Information and Publicity be pleased to state—

(*a*) the number of persons who have obtained L.P.T. (Diploma in Printing) since the starting of the Diploma in Printing course;

(*b*) the number among them employed in the existing Government Printing Presses and the number among them who have been offered employment in the proposed Government Printing Press at Salem; and

(*c*) whether the Government propose to give them preference in such employments?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) 650.

(இ) மத்திய அச்சகம், சென்னை—71.

அரசாங்க வட்டார அச்சகம், சேலம்—1.

அரசாங்க வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி—2.

(உ) ஆம். அச்சுத் தொழிலியல் டிப்ளோமா (L.P.T. Diploma) கூடுதல் தொழில் நுட்பத்தகுதியாக நிச்சயிக்கப்பட்டுள்ள பற்பல தொழில் நுட்ப வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அச்சுத் தொழிலியல் டிப்ளோமா பெற்றவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. வை. சங்கரன்: இம்மாதிரி டிப்ளோமோ பெறுதவர்கள் அரசாங்க அச்சகத்தில் எவ்வளவு பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்? இவர்களுடைய விகிதாசாரம் என்ன?

கனம் திரு. கோ. பூவராகன்: விகிதாசாரக் கணக்கு இல்லை. டிப்ளோமா பெற்றவர்கள் 650 பேர். 1963-66 வரை அரசாங்க அச்சகத்தில் மனுப் போட்டவர்களின் எண்ணிக்கை 80. அவர்களிலே 70 பேர்களுக்குமேல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வை சங்கரன்: அச்சுத் தொழிலில் பயிற்சி கொடுத்து டிப்ளோமா கொடுப்பது என்பது பொதுவாக இல்லாத ஒன்று அரசாங்கம் அதை எடுத்து பயிற்சி கொடுத்திருக்கும் நிலையில் 650 பேர்களில் 70 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது. அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்து அரசாங்க அச்சகத்தில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு முதற் சலுகை அளிக்கப்படுகிறது என்று முதல் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போதே கூறியிருக்கிறேன்.

திருவள்ளுவர் சிலை

***380 கேள்வி.—திரு. கோ. சி. மணி:** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் 2—5—1966-ல் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழா அரசாங்க செய்தி இலாகாவினரால் திரைப்படமாக (செய்திக்கதிர்) எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அத்திரைப்படம் திரையிடப்பட்டுள்ளதா?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) இல்லை. மத்திய அரசாங்க செய்திப்படத்துறையினர் திரைப்படம் எடுத்தார்கள்.

(இ) அந்தத் திரைப்படம் 5—8—1966-ல் திரையிடப்பட்டுள்ளது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION.

INTEGRATION OF TAMIL-SPEAKING AREAS OF KERALA WITH MADRAS.

MR. SPEAKER : Sri A. Kunjan Nadar has given notice of an Adjournment motion. He may speak. He should be short and sweet.

SRI A. KUNJAN NADAR : Sir, I have given notice of the following adjournment motion :—

" That the proceedings of the House be adjourned to discuss an urgent matter of public importance, namely, the very serious situation in the State especially in the District of Kanyakumari and Shencottah taluk created by the failure of the Government to take steps for resolving the boundary disputes between Kerala and Tamilnad States and for the merger of the Tamil areas of Devikulam, Peermede, Udumpanchala and Taluks of Neyyattinkara and Cochin Chittoor and other half of Shencottah of Kerala State with Tamilnad and due to the inaction of the Government in the attempt of high ranking leaders of the ruling party to remerge parts of Tamilnad with Kerala, namely Kanyakumari District and Shencottah Taluk. "

Sir, there is a very strong move among the Congress leaders for the remerger of the Kanyakumari district and the Shencottah taluk with the Kerala State. A very strong agitation is started by the Congress leaders of Kerala and there is even all—Party Committee formed by the K.P.C.C. President, Mr. K. C. Abraham. Our information is that the Congress President himself has inspired such an agitation. There is some boundary dispute between Maharashtra and Mysore and an one-man committee has been appointed to resolve that dispute. That committee is asked to resolve the boundary dispute between Kerala and Mysore also. There is a plot hatched by the Congress leaders that Kasaragod in Kerala should be handed over to Mysore and in return, Kanyakumari and Shencottah should be handed over to Kerala. The people in the Kanyakumari district and the Shencottah taluk are very much anxious and worried about this plot. Unless the Government give an assurance that they would safeguard their interests and that steps will be taken in that direction, the situation there will become very serious. A corresponding agitation will take place there also which may lead even to the worsening of the law and order situation.

Sir, the Chair knows, with what sacrifice we joined the Madras State. Then also, the Congress leaders here did not want us to come here. On the other hand, they joined hands with the Congress leaders of Kerala to fight against us. We agitated in a constitutional way. We fought three consecutive elections on this issue and captured for the Congress all the seats. We claimed that the nine taluks of Thovala, Agastheeswaram, Kalkulam, Vilavancode, Neyyattinkara, Devikulam, Peermede, Cochin

Chittoor and Shencottah. Of these taluks, the States Reorganisation Commission recommended that five taluks might be added to Tamilnad. When actually its recommendation was being worked, one half of the Shencottah taluk was given to the Keralites as a gift by the leaders here. I do not want to mention their names. I do not mean the Hon. Chief Minister here. Sir, Devikulam and Peermede are out and out, 100 per cent Tamil areas. There was no access to Devikulam and Peermede from the Travancore–Cochin side and there was access to them only from Madurai. Even then census reports for Devikulam and Peermede were prepared by the Madras Government. That is news to many of us.

MR. SPEAKER : All these things may be discussed only after the motion is admitted. Now, has the hon. Member finished his speech?

SRI A. KUNJAN NADAR : No, Sir.

MR. SPEAKER : The hon. Member is speaking as if the motion has been admitted. Does the hon. Member want that the House should be adjourned to discuss the matter raised in his adjournment motion?

SRI A. KUNJAN NADAR : Sir, it is a very serious matter. Sir, I hope the Hon. Chief Minister will remember that in 1955 I led a deputation when the Report of the States Re-organisation Commission was about to be considered by the Tamilnad Congress Committee here. At that time, we were part of the Travancore-Cochin State. I led the deputation on behalf of the people of Devikulam, Peermede, Cochin Chittoor and Shencottah and met the present Chief Minister, Mr. Kamaraj and Sri C. Subramaniam, who is now a Minister of the Central Government. These are the Tamil areas where the Tamilians are being prosecuted . .

MR. SPEAKER : That is all.

SRI A. KUNJAN NADAR : Sir, I request the Government to give an assurance that they will look after us and these areas will not be remerged with the Kerala State and that it will take early steps to settle the boundary dispute between Kerala and Tamilnad.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் இங்கு ஒத்திவைப்புப் பிரேரணையாகக் கொண்டுவந்திருப்பதில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. ஒன்று மற்றொன்றுக்கு முரண்பாடாக இருக்கிறது. எப்படியிருப்பினும் இது ஒத்திவைப்புப் பிரேரணைக்குரியதல்ல. இதைப்பற்றி இவர்களுக்குக் கவலையிருந்தால் அரசாங்கத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்; அல்லது கேள்வி மூலமாகக் கேட்டுத் தகவல் பெறலாம்.

கனம் உறுப்பினர் அவர்கள் முதலில் குறிப்பிட்டது, கன்னியாகுமரிப் பிராந்தியத்தை மீண்டும் கேரளாவோடு சேர்க்கவேண்டும்

என்று கேரளாக்காரர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்பது ஒன்று; மற்றொன்று, கேரளாவில் இப்போது இருந்து வருகிற தேவிகுளம்-பீர்மேடு நமக்குக் கிடைக்கவேண்டும் என்பது. கனம் உறுப்பினர் அவர்கள் எவ்விதம் தேவிகுளம்-பீர்மேடு தமிழ்நாட்டோடு இணைக்கப்படவேண்டும் என்று கோருகிறார்களோ, அதே மாதிரி கேரளாவோடு கன்னியாகுமரிப் பிராந்தியத்தையும் இணைக்கவேண்டும் என்று ஏதோ நான்கு பேர்கள் கேட்கலாம். கனம் உறுப்பினர் கேட்பது போலத்தான் அங்கும் சில பேர்கள் கேட்கக்கூடும். இப்போது திரு. குஞ்சன் நாடார் அவர்கள் எப்படி தேவிகுளம்-பீர்மேடு தமிழ்நாட்டோடு சேரவேண்டும் என்று கேட்கின்றார்களோ அதே போன்று நான்கு பேர்கள் அங்கும் கேட்கலாம். இதெல்லாம் வெறும் திண்ணைப் பேச்சு; இதற்கு மேல் ஒன்றும் இல்லை. இப்படிக் கேட்டுக்கொண்டேயிருந்தால் இதற்கு முடிவே இராது. மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டும் என்று முடிவு செய்து ஏற்கனவே முடிவு எடுத்தாகிவிட்டது. இப்போது மீண்டும் அதைப் பற்றிப் பேசுவது சரியல்ல. காசர்கோடு விஷயம் வேறு; அதே போன்று மகாராஷ்டிரத்திற்கும் மைசூருக்கும் இருக்கின்ற தகராறு வேறு. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இதெல்லாம் ஏற்கனவே முடிவாகிவிட்டது. இதைப் பற்றி நன்கு பரிசிலனை செய்யப்பட்டு பார்லிமெண்டில் இதற்காக மசோதா கொண்டு வரப்பட்டு, இங்கு சட்டமன்றத்திலும் நன்றாக விவாதிக்கப்பட்டு, அங்கீகாரம் அளித்து, இப்போது சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இதை மேலும் மேலும் வளர்ப்பது சரியல்ல. யாரோ நான்கு பேர்கள் கேரளாவில் கேட்கின்றார்கள் என்பதற்காக நாமும் அதைச் சொல்லுவதில் பயன் இல்லை. கேரளாவில் யாரோ நான்கு பேர்கள் கேட்கின்றார்கள் என்பதற்காக கனம் உறுப்பினர் அவர்கள் கவலைப்படவேண்டியதில்லை. முடிந்துபோன விஷயத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக் கொண்டிருந்தால், நம்முடைய காலம் எல்லாம் வீணாகப்போய் விடும்; மக்களுடைய ஏராளமான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அவகாசம் இல்லாமல் போய்விடும்.

கனம் உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பாடுபட்டு, கன்னியாகுமரிப் பகுதியைத் தமிழ்நாட்டில் இணைப்பதற்கு தியாகம் செய்தார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதை நான் உணராமல் இல்லை. கன்னியாகுமரி வேறு, தமிழ் நாடு வேறு என்று சொல்வது சரியல்ல. 'எங்களுக்கு' என்று
10-00 a.m. பேசுவதே தவறு. 'எங்களுக்கு' என்று தனியாகப் பேசுவதினால் தான் அந்தப் பிராந்தியத்தை அங்கு சேர்க்கவேண்டும் என்று சிலர் சொல்லுகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். யாரோ இரண்டு பேர்கள் கேரளாவில் பேசுகிறார்கள் என்றால், அல்லது இன்னொரு இடத்தில் பேசுகிறார்கள் என்றால் நாம் இதில் விவாதத்தில் இறங்க வேண்டியதில்லை என்று நான் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Mr. SPEAKER : Consent is withheld.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) SECOND AMENDMENT BILL, 1966.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move for leave to introduce the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Second Amendment Bill, 1966

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Second Amendment Bill, 1966."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS ANCIENT AND HISTORICAL MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move for leave to introduce the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

IV.—NON-OFFICIAL BUSINESS.

Bills.

THE HINDU MARRIAGE (MADRAS AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 40 OF 1965).

SRI S. MADHAVAN : Sir, I move—

"That the Hindu Marriage (Madras Amendment) Bill, 1965 [a] (L. A. Bill No. 40 of 1965) be taken into consideration".

கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்துத் திருமணச் சட்டம், மத்திய சட்டம். அந்தச் சட்டத்திற்கு மாநிலத் திருத்தச் சட்டமாக இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த அளவுக்கு, திருமண முறைகளிலே பல மாறுதல்கள் பல கால கட்டங்களில் ஏற்பட்டு வந்திருக்கின்றன. பொதுவாக, எல்லாச் சமுதாயத்திலும் இந்தத் திருமணச் சடங்குகள் பல்வேறு காலத்திலே பல்வேறு

[a] Published in the *Fort St. George Gazette*, dated 10th November 1966.

முறைகளாக மாறி வந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக, நம்முடைய தமிழ் நாட்டிலே மட்டும் பெரியார் ராமசாமி அவர்கள் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கம் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தி, சுயமரியாதைத் திருமண முறை என்ற முறையை இந்த நாட்டிலே பரப்பி இருக்கிறது. பல ஆண்டுகளாக, தொன்று தொட்டு அந்த முறை பல பேர்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. அது புரோகித மறுப்பு முறை என்ற முறையிலும், ஏற்கெனவே திருமணங்கள் பற்றிய இந்துச் சட்டத்தில் இருக்கிற முறைகளை மாற்றி அமைக்கவேண்டும் என்ற புதுக் கருத்தைப் புகுத்த வேண்டுமென்ற முறையிலும் அப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமண முறைகள் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. அது தேவையா ? அந்த முறை சரிதானா ? அந்த முறை ஏற்றுக்கொள்ளப் படுமா ? இந்து மதத்திற்கு அது பொருந்தின முறையா ? என்ற வாதப் பிரதிவாதங்களுக்கெல்லாம் என்னைப் பொறுத்த அளவுக்கு நான் போக விரும்பவில்லை. என்னுடைய திருத்தச் சட்டத்தின் நோக்கமெல்லாம், இந்துத் திருமண முறைகளிலே, இந்திய நாட்டிலே இருக்கிற சட்டத்திலே சில முறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தமிழகத்திலே ஒரு குறிப்பிட்ட சமுகத்தினர் பின்பற்றக் கூடிய ஒரு முறைக்கு சட்ட சம்மதம் இது வரையில் இல்லை. அப்படி இல்லாத சூழ்நிலையை மாற்றி, அந்தப் புது முறைகளை விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் முகத்தான் சட்டத்தைத் திருத்தி அவர்களுடைய முறையை ஆதரிக்கவேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் தான் இந்தச் சட்டத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இதற்கு முன்னால் பல முறை இந்தச் சட்ட மன்றங்களில் கொள்கை அடிப்படையில் விவாதம் நடைபெற்றிருக்கிறது ; அந்த விவாதத்தில் அரசாங்கத் தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும் இந்தத் திருமண முறை வேண்டுமா, வேண்டாமா என்ற கொள்கைப் பிரச்னை விவாதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இதைச் சட்டப் பிரச்னையாக ஏற்றுக்கொண்டு, பல பேர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் முறையாக ஏற்றுக்கொண்டு, பரிசீலிக்கப்படவில்லை என்பது நான் கண்டது. ஆகவே என்னுடைய திருத்தச் சட்டம் அந்த அடிப்படையில் இல்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஏற்கனவே ஹிண்டு லா கோடிஃபைட் லா-ஆக இல்லாமல், காமன் லா-ஆக இருந்தது. 1955-ம் ஆண்டு கோடிஃபிகேஷன் ஆகி ஹிண்டு மாரேஜ் ஆக்ட் வந்து விட்டது. அதிலே 7-வது பிரிவிலே திருமண முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே கூடத் தெளிவாக இந்த முறைகள் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், பொதுவாக 'கஸ்டமரி ரைட்ஸ்' என்று கூறியிருக்கிறார்கள் —பழக்க வழக்கங்கள் அடிப்படையில் பின்பற்றும் முறைகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறைகள் என்னென்ன என்று நீதி மன்றங்கள் நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று கொடுத்திருக்கிறார்கள். பின்னாலே, முறைகளைப் பற்றிக் கூறும்போது, 'சப்தபதி' என்ற முறையைக் கூறி, அது தேவை என்றும், பின் பற்றப்பட்டால் அது தான் திருமணத்தில் இறுதிச் சடங்காக

3rd November 1966] [திரு. செ. மாதவன்]

இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பிரிவைப் பொறுத்த வரையில் தான் என்னுடைய திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் திருத்தச் சட்ட அடிப்படையில் ஒரு பிரிவைச் சேர்த்து விட்டால், ஏற்கனவே சட்டத்தில் இருக்கிற பிரிவுகள் வேண்டாமென்று சொல்லவில்லை, அவைகள் காக்கப்பட வேண்டியவை. எல்லோருக்கும் தேவை என்று கருதப்படும் கொள்கை வேண்டாமென்று சொல்லவில்லை. நான் விரும்புவதை இணைத்துக்கொள்ள வேண்டுமென்று தான் திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்து மதப் பழக்க-வழக்கங்கள் புறக்கணிக்கப் படலாமா என்ற கருத்து எழுப்பப் படலாம். அதையும் பரிசீலிக்க வேண்டியது தான். ஆனால், அப்படி இருக்கிற உரிமைகளை யாரும் பறிக்கவேண்டுமென்று கூறவில்லை. இந்த இந்து மதச் சட்டம் எப்படி ஏற்பட்டு வளர்ந்தது என்பதைப் பார்த்தாலேயே நம்முடைய தமிழர் நாகரிகத்திற்கு ஏற்ற பண்பாடுகள் இதிலே ஏற்றுக் கொள்ளப்படலாம் என்ற உண்மையும் இருக்கிறது. இந்து மதச் சட்டம் பொதுவாக ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் குறிப்பிட்ட சில காலங்களிலிருந்து பின்பற்றப்பட்ட கொள்கைகளாகத் தான் இன்றைக்குக் காமன் லா-வில் இருக்கிறது. கோடிஃபைட் லா-வில் இல்லாவிட்டாலும் காமன் லா-வில் இருக்கிறது. அந்தச் சட்டம் இந்தியா முழுவதும் பரவத் தொடங்கிய பிறகு தான், அந்தந்த சம்பிரதாயங்களை கிரகித்துக்கொண்டு இடம் கொடுக்கும் முறையில் சரித்திரபூர்வமாக வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்பட்ட காலத்திலே கூட தமிழ்நாட்டிலே உள்ள சில பழக்க வழக்கங்கள் கூட சட்ட சம்மதம் பெற்று இன்றைக்குச் சட்டத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் நான் கூற விரும்புவது, இந்தச் சட்டத்தை மாற்றுகிற காரணத்தினாலே, ஏற்கனவே இருக்கிற சம்பிரதாயத்தை மாற்றுகிறோம் என்ற நிலை ஏற்படாது. இது ஏற்கனவே பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்துச் சட்டத்தில் எக்ஸ்பர்ட் என்று சொல்லப்படுகிற திரு. மெயின் அவர்கள் கூறிய வாசகங்களை ஆதாரமாகக் கூற ஆசைப்படுகிறேன். "வடமொழி நூல்களிலும், தொகுப்புக் குறிப்புகளிலும் விளக்கப்பட்டுள்ளவாறு ஸ்மிருதிகள் அளித்த சட்டத் தொகுப்பே இந்து மதச் சட்டமாகும். அதோடு தொன்மை வாய்ந்த வழக்கங்களை இணைத்தும் அல்லது காலத்தால் மாறுதல்கள் செய்தும் இந்து மதச் சட்டம் நீதி மன்றங்களில் ஆட்சிப்படுத்தப்படுகின்றது. பழம் பெரும் இனத்தவர் அல்லது தங்களுக்கேயுரிய தொல்பெரும் நாகரிகம் கொண்ட இந்து மதச் சட்டத்திற்கு முழுமையும் ஆட்படாத சமுதாயத்தினர் கொஞ்சம் கொஞ்சமாக இந்து மதக் கோட்பாடுகளின் பிடிப்புக்குள் வந்திருக்கவேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தென்னிந்தியா சம்பந்தப்பட்ட வரையில் தங்களுக்கே உரித்தான தனி நாகரிகச் சிறப்பைக் கொண்ட திராவிட மக்கள் ஆரியர்களின் நாகரிகம், சட்டங்கள் ஆகியவற்றின் ஆதிக்கத்திற்குள் வரலாயினர்.

[திரு. செ. மாதவன்] [3rd November 1966

அதன் விளைவு ஆரியர்களும் திராவிடர்களும் இந்துக் குடும்பத்தில் ஐக்கியமாயினர். இவ்வாறு பல நூற்றாண்டுக் காலமாக ஏற்பட்டு வந்த நாகரிகக் கலப்பின் விளைவால் திராவிட மக்கள் ஆரியர்களின் சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் ஏற்றுப் பின்பற்றத் தொடங்கினர். ஆனால் இந்த நிலையிலும் திராவிடர்கள் தங்களுக்கேயுரிய தனித் தன்மை வாய்ந்த பழக்க வழக்கங்களை திரிபுற்ற நிலையிலாயினும் விடாது பின்பற்றி வந்தனர் என்பதில் சந்தேகமில்லை. பிற்காலத்தில் தோன்றிய இதிகாசங்களும் புராணங்களும் அவைகளைப் பின்பற்றி திராவிட மொழிகளில் வெளிவந்த நூல்களும் திராவிடர்களிடையே தோற்றுவித்த நம்பிக்கை தென்னிந்தியாவில் ஆரியர் கலாச்சாரமும் இந்து மதச் சட்டமும் பரவி வளரத் துணை புரிந்தது". இதை நான் சொல்லுகிற காரணத்தினால் ஆரிய திராவிட கலாசாரப் போராட்டத்தைப் பற்றி நினைவுபடுத்த விரும்பவில்லை. இது எந்த அளவுக்கு எனக்கு ஆதாரம் அளிக்கிறது என்றால், அப்படிப்பட்ட ஒரு கலாசாரத்தில் மாறுதல் ஏற்படுகிறபொழுது கூட ஒரு பகுதியுள்ளவர்களின் தனி நாகரிகத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே தான் இப்பொழுது நம்முடைய பகுதியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதலை, ஒரு புரட்சிகரமான கொள்கையை, இந்தச் சட்டத்தில் இணைத்துக்கொண்டால் அதில் தவறு இல்லை என்பதைத் தான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல் இந்தச் சட்டத்திலே குறிப்பாக இரண்டு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. 'சுயமரியாதை முறைகளைப் பின்பற்றி ஏற்கனவே நடந்த திருமணங்களைச் செல்லுபடியாக்க வேண்டும்; எதிர்காலத்தில் அப்படிப்பட்ட திருமணங்கள் நடைபெறுவதைச் சட்டபூர்வமாக்கவேண்டும்' என்பது ஒரு கருத்து. அடுத்து. இந்து சமுதாயத்தின் அடிப்படையிலே இந்துமத மக்களிடையே ஏற்படக்கூடிய திருமணங்களைக் கூடப் பதிவு செய்ய வேண்டும் என்ற கருத்தும் இதிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. 7-வது பிரிவிலே முதல் பிரிவும் திருத்தப்பட்டிருக்கிறது, இரண்டாவது பிரிவும் திருத்தப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு 'எக்ஸ்ப்ளனேஷன்' கொடுத்து சுயமரியாதைத் திருமணங்கள், ஒரு முறையற்ற திருமணம் என்று எதிர்ப்பு ஆட்சேபணை கிளம்பினால், அதற்கு ஆதாரமாகத் திருமணம் பதிவு செய்யப்படலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திருமண முறையைப்பற்றி வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னையை ஒரு பக்கம் வைத்துவிட்டு, இதுபற்றி காங்கிரஸ் கட்சியின் தரப்பிலே என்ன வாதம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். 1956-ம் ஆண்டும் இதே கொள்கை இங்கே கொண்டுவரப்பட்டது. அப்பொழுது இங்கே தரப்பட்ட பதில் எல்லாம், கொண்டுவரப்பட்ட சட்டம் முறையாக இல்லை, தெளிவாக இல்லை. சரியாக இல்லை; இது மாதிரி திருமணங்களுக்கு ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்ட் என்ற ஒரு

3rd November 1966] *[திரு. செ. மாதவன்]*

சட்டம் இருக்கிறது ; அந்தச் சட்டத்தை உருவாக்குவதிலே பெரும் பங்கு கொண்ட மத்திய சட்ட அமைச்சருக்கு உதவி செய்த கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கருத்துக்களும் எடுத்து வைக்கப் பட்டன. அந்தக் கருத்துத்தான் காங்கிரஸ் கட்சியின் தரப்பிலே கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தின் அடிப்படையிலே முதலில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக நம்முடைய சட்டமன்றத்தில் பின்பற்றக்கூடிய ஒரு பாரம்பரியம் என்னவென்றால், எதிர்க்கட்சியினர் ஒரு கொள்கையை வற்புறுத்திச் சட்டம் கொண்டு வந்தால், அந்தச் சட்டம் ஒழுங்காக அல்லது சரியாக, முறையாக அமையாவிட்டால், அந்தக் கருத்தை சர்க்கார் ஏற்றுக்கொண்டு சட்ட இலாகாவிற்கு அனுப்பி, அதை முறைப்படுத்தி அந்தக் கொள்கையைச் சட்டமாக்க அரசாங்கம் முன்வரும், முன்வந்திருக்கிறது. அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு, அரசாங்கமே அந்தக் கொள்கையின் அடிப்படையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாம், சட்டத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளாவிட்டாலும். இந்த இரண்டு முறையையும் பின்பற்றலாம். ஆகவே நான் கொண்டு வந்திருக்கிற சட்டம் முறையாக இல்லை, சரியாக இல்லை என்று டெக்னிகல் அப்ஜெக்ஷன் இருந்தால், அரசாங்கம் இதைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளலாம் என்ற கருத்தையும் இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

1959-ம் ஆண்டில் கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு உறுதியை இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

'I may give this assurance to Sri P. Rangaswamy Reddiar that we will have this question examined and bring an official Bill for the purpose of validating past marriages. As far as future marriages are concerned, they are covered by the Special Marriages Act.'

இது தான் அவர்கள் கொடுத்த வாக்குறுதியும் பதிலும். அதற்குப் பின்னாலே *1960*-ம் ஆண்டில் கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் :—

'Section 15 of the Special Marriages Act of 1954, which has followed 1872 Act, is enough to cover these marriages. They can register these marriages under section 15 of the Special Marriages Act, 1954.

Special Marriages Act was brought by the Hon. Minister Sri R. Venkataraman.

'இந்த மசோதா எந்த நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய சட்டம் இப்பொழுதே அமுலில் இருக்கிறது. நோக்கம் நல்லது தான், ஆனால் சட்டம் மோசமாக இருக்கிறது, இது சரியாக இல்லை' என்ற இப்படிப்பட்ட கருத்தைத் தான் அவர்கள் இந்த மன்றத்திற்குத் தந்திருக்கிறார்கள். நான் மத்திய பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தைப் படித்துப் பார்த்தேன். அந்தச் சட்டத்தை மத்திய சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருந்த காரணத்தினால், கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அதிலே பெரும் பங்கு

[திரு. செ. மாதவன்] 3rd November 1966]

கொண்டு பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பதிலை யும் நான் படித்துப் பார்த்தேன். செக்ஷன் 15; ஸ்பெஷல் மாரியே ஜஸ் ஆக்டின் கீழ் இந்தத் திருமணங்களை ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம் என்று கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதனுடைய விளைவுகளை அவர்கள் சொல்லவில்லை, நமது கனம் சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். செக்ஷன் 15-ன் பின்னாலே வரக்கூடிய சில பிரிவுகளின் கீழ் அந்தச் சட்டத்தின் கீழே திருமணத்தை ரிஜிஸ்டர் செய்து கொண்டால், சில விளைவுகள் ஏற்படுகின்றன. விளைவுகளைப்பற்றிப் பாராளுமன்றத்தில் கேட்கப்பட்டபொழுது, அந்த விளைவுகளுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் அங்கே பதில் சொல்லியிருக் கிறார்கள். இந்துக் குடும்பத்தில் ஒரு பிரிவு ஏற்படும்; அதிலே ஒரு விளைவு. அதற்குப் பின்னாலே ஸக்ஸஷன் என்ற முறையிலே இந்துக்களுக்குள்ள சட்டம் பின்பற்றப்படமாட்டாது. அதற்கும் பதிலாக பொதுச் சட்டம், இன்றைக்கு இருக்கக்கூடிய இண்டியன் ஸக்ஸெஷன் ஆக்ட் அவர்களுக்குப் பயன்படும் என்ற கருத்தை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, செக்ஷன் 15-ன் கீழ் பதிவு செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டால், அது பொருத்தமாகாது. காரணம், 'மற்ற முறைகளில் நாங்கள் இந்துக்களாக இருக்க விரும்புகிறோம், ஆனால் இந்தத் திருமண முறையைப் பொறுத்தமட்டில் நாங்கள் புதிய முறையைப் புகுத்த விரும்புகிறோம்' என்று கூறிக்கொள்கிறவர்களுக்கு இந்த செக்ஷன் 15 பொருத்தமாக இருக்காது என்று நான் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். சட்டத்தில் உள்ள 19, 20, 21 பிரிவுகள் இந்த 15-வது பிரிவின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட திருமணங்களின் விளைவுகள் என்ன என்பதை விளக்கி இருக்கின்றன. ஆகவே இந்த முறை தவறு என்பதையும் அரசாங்கம் ஒரு பதிலாகச் சொல்லக்கூடாது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய முறைகளைப்பற்றி அல்லது சுயமரி யாதைத் திருமணங்களில் பின்பற்றக்கூடிய முறைகளைப்பற்றி நம்முடைய சென்னை உயர்நீதி மன்றம் 1954-ம் ஆண்டு பரிசீலித்தது. செட்டி நாட்டில் நடைபெற்ற ஒரு வழக்கு, சுயமரியாதைத் திருமண முறையில் திருமணம் செய்துகொண்ட ஒரு பெண்ணின் வழக்கு; அந்த வழக்கில் இதைப்பற்றிப் பரிசீலித்திருக்கிறார்கள். உயர்நீதி மன்ற நீதிபதிகள், 'சுயமரியாதை முறையில் பின்பற்றக் கூடிய முறைகள் தப்பு; அது கூடாது; அது இந்து சமுதாயத்தி னுடைய கொள்கைக்கு முரண்பட்டது' என்று சொல்லவில்லை. அதற்கு மாறாக அவர்கள் சொல்லி இருக்கும் கருத்துக்கள், நான் கொண்டுவந்திருக்கும் என்னுடைய சட்டத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள்—

"சாஸ்திரங்களும் பண்டையப் பழக்கங்களும் தோற்றுவித்த திருமண முறைகளை எளிய முறையில் மாற்றி அமைக்க முயல்வது

3rd November 1966] [திரு. செ. மாதவன்]

போற்றுதற்குரிய முயற்சியாக இருக்கலாம். ஆனால், இந்த மாறு தல்களைத் தனிப்பட்ட கூட்டத்தினர், பல்வேறு சமூகங்களிலிருந்து இணைந்து செயல்பட்டாலும், சட்டமாக்க முடியுமா ?

இந்துமதத் திருமண முறைகளை விரும்பாதவர்களுக்கு அல்லது தாங்கள் வகுத்திருக்கும் புதுமுறைகள் தொன்மைத் தன்மையால்; சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவை என நிரூபிக்க முடியாதவர்களுக்கு ஒரே வழிதான் உள்ளது. அவர்களுடைய திருமணங்களைத் தற்போது அமலில் உள்ள சட்டங்களின் கீழ் பதிவு செய்துகொண்டு, அதன் பின்விளைவுகளை எற்கத் தயாராக வேண்டும். அல்லது தங்களுடைய திருமண முறைகளை ஒழுங்கு படுத்தத் தேவையான சட்டத்தை உருவாக்கும்படி சட்டமன்றங் கள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்."

ஆகவே, சுயமரியாதை முறையில் திருமணத்தை விரும்புகிறவர் களுக்கு ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 'நீங்கள் சட்டசபையை அணுகுங்கள்; ஆட்சியில் உள்ளவர்களை உங்கள் கொள்கையைச் சட்டபூர்வமாக்கச் சொல்லுங்கள்' என்று கூறியிருக்கிறார்கள்.

இதுமாதிரி எங்காவது நடந்திருக்கிறதா என்று கேட்டால், சர்வாதிகாரிகள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில், வெள்ளைக் காரர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில், நம்முடைய உரிமை கள் மதிக்கப்படாத காலத்தில், 1872-ல் வங்காளத்தில் 'பிரம் மோஸ்' என்ற ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கொண்டவர்கள், சீர்திருத்தக் கொள்கையைக் கொண்டவர்கள், தங்களுக்கென்று ஒரு முறையை வகுத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு புரட்சிகர மான கொள்கையை வகுத்துக்கொண்டார்கள். அவர்கள் கோரிக்கை என்பது நாடு முழுவதும் இல்லை, வங்காளம் முழுவதும் இல்லை; வங்காளத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரால் ஒரு குறிப்பிட்ட பழக்க வழக்கங்களுக்காக நடத்தப்பட்ட போராட் டங்கள், கேட்கப்பட்ட கோரிக்கைகள். அந்தக் கோரிக்கைகளை சர்வாதிகாரியான வெள்ளைக்காரனே ஏற்றுக்கொண்டான். 1872-லே பெங்கால் ப்ரொக்ரெசிவ் பிரம்மோஸ் என்ற அடிப்படையில், ஒரு சட்டத்தை உருவாக்கி, திருமணமுறைகளை ஆதரித்து, ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்ட், 1872-என்று கொண்டு வந்தார்கள். அதையும் இன்றைய ஜனநாயக ஆட்சி பின்பற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருமணங்களைப் பதிவு செய்வது பற்றி காங்கிரஸ் கட்சியே சொல்லியிருக்கிறது. கனம் காமராஜ் உட்பட பல தலைவர்கள் திரு மணமுறைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியிருக் கிறார்கள். 1955-லே டெல்லி பாராளு மன்றத்திலே இந்து மாரியேஜ் ஆக்ட் வந்தபோது இந்த முறை பரிசீலிக்கப்பட்டு மத்திய சர்க் காரே அதில் '8-வது' பிரிவைப்போட்டு அந்தப் பிரிவின்கீழ் மாநில

சர்க்கார்கள் திருத்தம் செய்து கொள்ளலாம் என்று அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையில் திருத்தம் செய்து கொள்ள வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் நம்முடைய மாநில சர்க்கார்—வேறு மாநில சர்க்கார்கள் செய்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை---அந்த 8-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, இந்துத் திருமணங்கள் பதிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு இல்லை. அதற்காகத்தான் நான் இப்பொழுது 8-வது பிரிவின் கீழ் திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன். பொதுவாகக் கொள்கை அடிப்படையில் பார்க்கும் போது, ஜனநாயக ஆட்சிமுறையில் இருக்கும் ஒரு ஆட்சியினர் இதை ஏற்றுக் கொள்வதற்குத் தயக்கம் இருக்கக் கூடாது, ஒரு சமுதாயத்தினர், ஒரு பகுதியினர் இப்படிக் கேட்டால், அதை ஏற்றுக்கொள்ளலாமா என்கின்ற சந்தேகம் ஏற்படும். அந்தச் சந்தேகத்திற்கு இந்தச் சட்ட மன்றத்திலேயே 1954-லே பதில் சொல்லியிருக்கிறார்கள். 1954-லேயே சட்ட அமைச்சர் உறுதி ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள்.

"இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் இந்தச் சட்டத்தின் கீழ்"—நான் கொண்டு வந்திருக்கும் சட்டம்போன்று 1954-ல் வந்த சட்டம்—"திருமணம் செய்வது பற்றிச் சிந்திக்கக் கூட மாட்டார்கள்; அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் தங்களுடைய திருமணங்களை பதிவு செய்ய முயலமாட்டார்கள். இருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் கீழ்தான் தங்களுடைய திருமணங்கள் வரவேண்டும் என விரும்புபவர்கள்"—நாம் விரும்புவது போல— "இந்தச் சட்டத்தின் மூலம்தான் சமுதாய முன்னேற்றம் ஏற்படும் என்று கருதுபவர்கள் இருப்பார்களேயானால்"—நாம் இப்பொழுது இங்கே இருப்பது போல—"அவர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் பயன்பெற விரும்புவார்களேயானால்"—நாம் இன்றைக்கு விரும்புவது போல—"மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாம்"—ஆற்றலுள்ள காங்கிரஸ் கட்சி அரசாங்கம் மக்களுடைய பிரதிநிதிகளாகியவர்கள்—"மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாம் அவர்களுடைய கோட்பாடுகளுக்கு, விருப்பத்திற்கு குறுக்கே நிற்கக் கூடாது" என்று இந்த வகையான உறுதியை 1954-லேயே சட்ட அமைச்சர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நிச்சயம் அதே கருத்தை ஏற்றுக் கொண்டு, இந்த மசோதாவையும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். 'குறிப்பிட்ட ஒரு பகுதியினர்' திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது திராவிடக் கழகமோ, இந்தக் கொள்கையைக் கடைப் பிடிக்கிறார்கள். ஆகவே 'நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று ஜனநாயக பரம்பரையைச் சேர்ந்த இந்த ஆட்சியாளர்கள், சட்ட அமைச்சர் 1954-ல் கொடுத்த வாக்குக்கு எதிராக சொல்லமாட்டார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நம்முடைய முதல் அமைச்சருடைய வாழ்க்கை வரலாற்றிலே கூட ஒன்றைப் படித்தேன். அவர்கள் ஜனநாயகப் பண்பைச் சார்ந்தவர்கள் என்கிற காரணத்தினால், எதிர்க் கட்சிக்காரர்களுக்கு அதிக மதிப்புக் கொடுப்பவர்கள், அவர்களுடைய

3rd November 1966] [திரு. செ. மாதவன்]

கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதில்லை, அவர்களுக்கும் சலுகைகளைக் காட்டுகிறவர்கள் என்று அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றில் ஒரு குறிப்பைப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுல், எதிர்க்கட்சியினுல், கொடுக்கப்பட்ட திருத்தம் என்கிற ஒரே காரணத்திற்காகத் தள்ளிவிட மாட்டார்கள் என்று அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்பிலிருந்து எண்ண இடம் இருக்கிறது; அதில் தவறு இருக்காது என்கிற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. ஆகவே, ஜனநாயகப் பண்பை உணர்ந்து, கனம் முதல் அமைச்சர் அவர்களும், கனம் சட்ட அமைச்சர் அவர்களும், இந்தத் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு சுயமரியாதை, சீர் திருத்தத் திருமணம் செய்கிற தமிழர்களுக்கு எந்த வகையான இடர்பாடும் இல்லாத வகையில் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, முதலிலே இந்த மசோதா சம்பந்தமாக ஒரு சின்ன விஷயத்தைச் சொல்ல வேண்டும். 'சுயமரியாதை', 'சீர்திருத்த' திருமணம் என்று வேறுபடுத்தி சொல்லும்போது, அந்த வார்த்தைகளில் உள் அர்த்தம், மற்ற சடங்கு முறைகளோடு நடக்கும் திருமணங்கள் மரியாதையோடு நடக்காதவை என்கிற வகையில் அர்த்தம் கொடுத்து, இரண்டும் வேறுபட்டவைகளாகக் காட்டுகிறது. அந்த ஒரு காரணத்திற்காகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக ரிஜிஸ்ட்ரேஷன் சம்பந்தப்பட்டவரையில், ஏற்கனவேயே ரிஜிஸ்டர் செய்யலாம் என்றிருக்கிறது. ஆனுல், கனம் அங்கத்தினர் திரு. மாதவன் கொடுத்திருக்கும் மசோதாப்படிப் பார்த்தால், கண்டிப்பாக ரிஜிஸ்டர் வைத்துக் கொள்ள வேண்டும், கல்யாணங்கள் ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்படவேண்டும் என்று கட்டுப்படுத்தும் நிலை ஏற்படுகிறது. அந்த முறையில் புதிதாக ஒரு கட்டுப்பாடு கொண்டு வரப்படுகிறது. ஆனுல் 'ஸப்த பதி' சடங்கு செய்தாலே போதும், கல்யாணம் உறுதியாகி விடுகிறது என்றிருக்கிறது. இன்றைக்குள்ள முறையில் அந்தந்த ராஜ்ய சர்க்கார்கள் ரிஜிஸ்டர் வேண்டுமானுல் வைத்துக்கொள்ளலாம் இல்லாவிட்டால் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று இருக்கிறது. நிச்சயமாக வேண்டும் என்று சொல்லப்படவில்லை. இந்த மசோதா மூலம் எல்லாத் திருமணங்களும் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும் என்று ஒரு நிபந்தனை ஏற்படுகிறது. மற்ற சாதாரணமாக நடைபெறும் திருமணங்கள் இதனுல் பாதிக்கப்படுமோ என்கிற நிலை கூட ஏற்படலாம். ஆகவே, இந்த மாதிரியான நிலை ஏற்படக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

கொடுத்திருக்கும் மசோதாவின்படி, செக்ஷன் 7 (1)-ஐ அமெண்டு செய்ய வேண்டும் என்பது என்னவென்ருல்

"7 (1) A Hindu marriage may be solemnized in accordance with the customary rites and ceremonies of either party thereto which will include the ceremonies performed in Suyamariyathai or Seerthirutha marriages."

அப்படிச் சொல்லும்போது, 'பர்ஃபார்ம்ட்' என்றால், என்ன முறைகள், என்னென்ன சுயமரியாதை, சீர்திருத்த முறைகள் என்று விளக்க வேண்டும். இல்லையென்றால், ஆளுக்கு ஒரு முறையைச் சொன்னால், எதை எடுத்துக்கொள்வது எனகிற சங்கடம் ஏற்படும். அதிலும் சில அதிதீவிர வாதிகள் இருக்கலாம்; அவர்கள் தாங்கள் சொல்லும் முறைதான் அது என்று சொல்லக்கூடும். அதைப் பாகுபடுத்திச் சொல்ல வேண்டும். அந்த வகையில் இந்த மசோதா 'வேக்'-ஆக இருக்கிறது. 'which will include the ceremonies performed' என்றால், அவை என்னென்ன என்று இருக்க வேண்டும். ஆகவே, இப்பொழுது உள்ள நிலையில், இந்த மசோதா ஏற்றுக்கொள்ளத் தகுந்தது இல்லை என்று சொல்லி முடிக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, எங்கள் தரப்பிலிருந்து திரு. மாதவன் கொண்டுவந்திருக்கும் மசோதாவை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திரு. மாதவன், இப்பொழுது நடைபெறுகின்ற சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியவை என்கிற அளவுக்கு சட்டம் அமைப்பதற்கான, காரிய காரண விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது, இந்தச் சடங்கு முறைகள் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியவை என்பதுதான். திருமண முறைகள் எப்படி இருக்கவேண்டும் என்று இப்பொழுதுதான் சட்டத்தின் மூலம் நடைமுறைக்கு வந்திருக்கிறது என்று நினைக்கத் தேவை இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் திருமணம் எப்படி இருந்தது என்பது பற்றி அப்பொழுது இருந்த ஆன்றோர்கள் வகுத்திருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தொல்காப்பியர் திருமணம் எப்படி இருக்கவேண்டும் என்று விதிமுறையை வகுத்திருக்கிறார். தமிழருடைய முறையைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால், நாட்டிலே நடைமுறையிலே, ஆரியத் திருமணமுறை எவ்விதம் இருந்தது என்று சொல்லி, தமிழர் திருமணம் எந்த வகையில் சிறந்தது என்கிற விளக்கத்தையும் கூறுகிறார். அப்படி அவர்
10-30 a.m. கூறுகிற நேரத்தில், ஆரியர்களுடைய திருமண முறை எட்டாக இருந்தது என்றும், அதிலே தமிழர் திருமணமுறை கடைசியாக இருந்த 'காதல் திருமணம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணும் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே."

என்று விதி வகுத்திருக்கிறார்கள்.

ஆரியர் திருமண முறை என்ன என்று சொல்லுகிற நேரத்தில் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம், கந்தருவம் என்று எட்டு திருமண முறைகளைச் சொல்லுகிறார்கள். இதற்கான விளக்கத்தைச் சொல்லுகிற நேரத்தில், ஒத்த கோத்திரம், 48 ஆண்டு பிரம்மசாரிக்கு 12 ஆண்டு பெண்ணைத் தானம் தருவது 'பிரமம்' என்றும், மணமகன் வீட்டார்

3rd November 1966] [புலவர் கா. கோவிந்தன்]

கொடுப்பதுபோல் இரு மடங்கு பரிசம் கொடுத்து மகள் தருவது 'பிரசாபத்தியம்' என்றும், கொம்புக்கும் குளம்புக்கும் பொன் வறை பூட்டிய ஆவும், ஆனேறும் அளித்து மகள் கொடுப்பது 'ஆரிடம்' என்றும், வேள்வி ஆசிரியனுக்கு, அவன் விரும்புவாளை, வேள்வி முன் தக்கிணையாகக் கொடுப்பது 'தெய்வம்' என்றும், கொல்லேறு கோடல், திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் மூலம் மகளைத் தருவது 'ஆசுரம்' என்றும், பெண்ணின் இசைவும், பெற்றோர் இசைவும் பெறாமல், ஒரு பெண்ணை வலிதிற்கொண்டு சென்று மணத்தல் 'இராக்கதம்' என்றும், மூத்தாளையும், களித்தாளையும் மணப்பது 'பைசாசம்' என்றும், ஒத்தார் இருவர் தாமே அறிந்து காதல் கொண்டு மணம் புரிதல் 'கந்தருவம்' என்றும் ஆரியத் திருமண முறைகளை வகுத்துச் சொல்லுகிறார்கள். அதிலே கடைசியாகச் சொல்லும் 'கந்தருவம்' தமிழர் திருமண முறையாகும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, அந்த முறையில் திருமண முறைகள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான விளக்கங்கள் அப்போதே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்த நிலையில், சடங்கு எப்பொழுது எழுந்தது என்பதற்கான விளக்கத்தைத் தொல்காப்பியர் கொடுத்திருக்கிறார். திருமணம் என்ற நிலையில் மிக இன்றியமையாத ஒன்று, திருமணம் செய்து கொள்ளுகிற இருவரிடையே மனம் ஒன்றுபடுவது தான். காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம். அது தான் இந்தத் திருமணத்திற்கு அடிப்படைத் தேவை. அதற்கு மேல் வருகிற சடங்கு, இந்தத் திருமணத்தை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சியே தவிர, திருமணத்தின் இன்றியமையாத நிகழ்ச்சியன்று என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். திருமணத்திற்குச் சடங்குகள் எப்பொழுது வந்தன என்பதற்கான நிகழ்ச்சியைப் பின்னால் சொல்லுகிற நேரத்தில்,

"பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்று அப்பொழுதிருந்த ஆன்றோர்கள் இந்தத் திருமண முறையை வகுத்திருக்கிறார்கள். 'ஐயர்' என்று சொன்னால் 'ஆரியர்' என்ற நிலையில் அல்ல ; 'தலைமை உடையவர்' என்ற பொருளில் சொல்லப்பட்டது. காதல் முறையில் திருமணம் செய்து கொண்டவர்களிடையே வாழ்க்கையில் தவறுகள் நேரும்போது, அவர்களில் ஒருவர் தவறாக நடந்துகொள்ளுகிற நேரத்தில், அவர்கள் இருவரும் கணவனும் மனைவியும் ஆனவர்கள்தான் என்று நிலைநாட்டக்கூடிய நிலையில் சடங்குகள் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அந்தச் சடங்குகூட எப்படிப்பட்ட நிலையில் வந்தது என்பதைப்பற்றித் தொல்காப்பியரும், அவருக்குப் பின்னால் வந்தவர்களும் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். சங்ககாலம் என்று சொல்லப்படுகிற அந்தக் காலத்து இலக்கியங்களில் தலைசிறந்தது அகநானூறு. அதில், திருமணம் எப்படி இருந்தது என்பதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. திருமணத்தன்று விடியற்காலை, இப்பொழுது நடைபெறுவதுபோல், வீடுகளைச் செப்பனிடுகிறார்கள். பந்தல் போடுகிறார்கள். புது மணம் பரப்புகிறார்கள். மாலை தொங்கவிடுகிறார்கள்.

விளக்கு ஏற்றி வைக்கிறார்கள். பிறகு ஊரிலே இருக்கும் முதிய பெண்கள் குடங்களிலே நீரைக் கொண்டுவருகிறார்கள். அவர்கள் கொண்டுவருகிற நீரை, புதல்வர்களைப் பெற்ற மூத்த தாய்மார்கள் அந்த இருவருடைய தலைகளில் ஊற்றி, நெல்லையும் பூவையும் அவர்கள் தலையிலே வைத்து, "கணவனும் மனைவியுமாகக் கை பிரியாமல் வாழ்க்கை வாழ்வீர்" என்று பெரியவர்கள் வாழ்த்துகிற நிலையில் அந்தத் திருமணச் சடங்குகள் நடைபெற்றன என்பதற்கான குறிப்புகள் சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் கிடைக்கின்றன.

அதற்கு அடுத்த காலம் என்று கருதப்படுகிற சிலப்பதிகார காலத்தில், இப்பொழுது தீவலம் செய்யும் முறையோடு பழைய சமூக முறையும் கலந்த நிலை இருந்திருக்கிறது. அதே நிலையில், இப்பொழுது திருமணம் என்று சொன்னவுடனே, தாலி கட்டுவது, மோதிரம் மாற்றுவது, வளையல் போடுவது என்ற முறைகள் காலத்திற்குக் காலம் மாறுகிற நிலையில் வந்திருக்கின்றன. சிலப்பதிகார காலத்தில், ஆரிய முறை கலந்த நிலையில், தீவலம் இருந்திருக்கிறது. ஆனால், 'தாலி' என்று சொல்லும் அணி, மங்கல அணியாகக் கருதப்படுகிற நிலை இல்லை. காரணம், வரலாற்றைத் தொடர்ந்து படிக்கும் நேரத்தில், கண்ணகியின் காட்சியைக் குறிப்பிடும்போது மங்கல அணியையன்றிப் பிறிதணி அணியாள் என்று சொல்லுகிறார். அந்த நேரத்தில் கண்ணகியின் உடலில் இருந்தது மங்கல அணி ஒன்றுதான் என்ற கருத்துச் சொல்லப்படுகிறது. மதுரையில் கணவன் இறந்த பிறகு, மதுரையைவிட்டு வெளியேறும்போது கண்ணகி காளி கோயில் முன்னால் சென்று வணங்கும் நேரத்தில் "கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்து" என்று சொல்லுகிறாள். "கொற்றவை கோயிலின் முன்பு வளையலை நறுக்கிவிட்டுத்தான் சென்றாள்" என்று சொல்லுகிறார். அதுவரையில் உடலில் வளையல் தான் இருந்திருக்கிறது மங்கல அணி என்ற நிலையில், தாலியாக இல்லை என்று தெரிகிறது. தாலி என்கிற அணி தொங்குகிற அணி என்ற முறையில்தான் இருந்திருக்கிறது. மங்கல அணியாக அது இல்லை. புலிப்பல் தாலி கட்டிக்கொள்ளுகிற நிலை எல்லாம் இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், காலத்திற்குக் காலம், நாட்டுக்கு நாடு, தேசத்திற்கு தேசம், மதத்திற்கு மதம் சடங்குகள் மாறி வந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சி நாம் இரண்டாயிரம் ஆண்டுக் காலமாகப் பார்த்து வரும் நிகழ்ச்சியாகும். ஆகவே, சடங்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, திருமண முறையில் இருவர் மனமும் ஒன்றுபடுகிற நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காத நிலை இருக்கக் கூடாது என்ற நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் தவறுகள் நிகழ்ந்து, அந்தத் தவறுகள் காரணமாக அவர்களுக்குப் பின்னால் வரும் வாரிசுகளுக்குச் சொத்துரிமை இல்லாமல் போக முடியாது என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் சடங்குகள் வந்தன. இவர்கள் இருவரும் முறையாகத் திருமணம் செய்துகொண்டவர்கள்தான். அவர்களுக்கு முறையாகப் பிறந்த பெண்டு பிள்ளைகள்தான் என்று நிலைநாட்டுவதற்காகச் சடங்குகள் வந்தனவே தவிர, மற்றபடி சடங்குகளுக்கு முக்கியத்துவம் அல்ல. ஆகவே, சடங்கு முறை

3rd November 1966] *[புலவர் கா. கோவிந்தன்]*

எதுவாக இருந்தாலும், கணவனும் மனைவியுமாகிவிட்டால், அவை அனைத்தும் செல்லும் என்று சட்டம் வகுத்துத்தான் ஆக வேண்டும். ஒரு காலத்தில் ஏற்பட்ட இந்துச் சட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு இப்பொழுது நடைபெறுகிற திருமண முறைகளுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்காது இருக்கும் நிலை பொருந்தாத நிலையாகும். இன்னும் சொல்ல வேண்டுமானால், எங்கள் பகுதியில்—தமிழகத்தில்—ஆரியர்களை வைத்துக்கொண்டு, தீயை வளர்த்து நடத்தும் முறையில் நடக்கும் திருமணம் ஒன்று என்றால், அந்த முறை இல்லாமல் 'தமிழர் முறை' என்ற முறையிலே இருவரும் மாலை மாற்றுகிற நிலையில் நடைபெறும் திருமணங்கள் 99 என்ற அளவிற்கு இப்பொழுது முறை மாறியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட திருமணங்களுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்கவேண்டுவது முறையானது, தேவையானது என்ற கருத்தை இந்தச் சர்க்கார் ஏற்று, அந்த முறையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க வழிவகுக்க வேண்டும் என்று கூறி என்னுடைய கருத்துரையை முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்து சமயத் திருமணம் குறித்த (திருத்த) மசோதாவை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். வரவேற்கிறபோது, எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படியாக அந்தப் பகுதியிலே அமைகிற சொற்கள் அமையவேண்டும். நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும், சுய மரியாதை அல்லது வேறு எந்தப் பெயரைக் கொடுத்தாலும் ஒன்றும் தவறு இல்லை. அதை நான் மறுக்க இல்லை. ஆனால் 'சுய மரியாதை' என்று சொன்னவுடனேயே ஒரு குறிப்பிட்ட கால வரம்பையொட்டி அல்லது பலருக்கு ஏற்படுகிற உணர்ச்சிகளை யொட்டி, அந்த சொல்லைக் கண்டாலேயே சிலருக்கு வெறுப்பு அல்லது விருப்பு ஏற்படுகிற நிலை எல்லாம் ஏற்படலாம். நம்முடைய பண்டைக்காலச் சமய வரலாற்றையும், பழைய ஏடுகளையும் புரட்டிப் பார்ப்போமானால்—முதன் முதலிலே என்று ஓரளவு சொல்லலாம்—மணம் ஏற்படுவதற்கு மற்ற எவருடைய துணையும் அல்லது சான்றும் இன்றிக் கொண்ட நிலையை நாம் பழைய நூல்களிலே காணலாம். காதலிருவர் கருத்தொருமித்து விட்டால் அதன் மூலம் ஆதரவு. தோன்றிவிட்டால் மணம் நிகழும். நம்முடைய தொல்காப்பியம் முதல் தொடங்கி பிற்காலத்திலே வந்த பாரதி ஈறாக, அந்த மரபை ஏற்று அதைப் போற்றி வந்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர முடியும்.

ஆனால், அதன் பிறகும், எப்போதும் நன்மை தீமை பாவி விரவி வருவதை அறிகிறோம், ஒவ்வொரு துறையிலும். அதைப்போல் மணம் செய்து கொண்டவர்கள் ஏதோ திடீர் என்று உணர்ச்சி வயப்பட்டு மணம் பூண்ட பிறகு, திடீரெனக் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து அல்லற்படுவதையும் நம்முடைய பெரியவர்கள் கண்டார்கள். கண்டு, அதற்கென்று சில வரம்புகள் செய்ய வேண்டும் என்று கொண்டார்கள். அதைத்தான் தொல்காப்பியன் பேசுவான் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்று. இப்படிக் காதலியும் காதலனும் ஒருவரை

[திரு. சா. கணேசன்] [3rd November 1966

யொருவர் கல்யாணம் பண்ணிக்கொண்டது பிறருக்குத் தெரியாது. பின்னே வருகிறபோது, நான் இவளைப் பார்க்கவில்லை என்று அவன் சொல்லக்கூடும் அல்லது இவனை நான் பார்க்கவில்லை என்று அவள் சொல்லக் கூடும். இப்படி நிலைகள் ஏற்பட்ட பிறகு தான், "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்று வருகிறது. 'ஐயர்' என்னும்போது ஜாதி என்று யாரும் கொள்ளக்கூடாது. 'ஐயர்' என்ற சொல்லுக்குப் பொருள் உயர்ந்தோர், மேலோர், பண்புள்ளோர், அறிவாளிகள் என்பதாகும். "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்றால், இதற்கென்று சில சடங்கு முறைகளை அமைத்தார்கள் என்பது பொருள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சகுந்தலைத் திருமணத்தையும் சொல்லுங்கள்.

திரு. சா. கணேசன்: நான் இப்போது பேசுவது எல்லாம் தமிழ் நாட்டுத் திருமணம், தமிழ் மக்கள் திருமணம்பற்றியது. எனக்கு மீனைத் தெரியாது. மோதிரத்தையும் தெரியாது. அவற்றுக்குள் சென்று நேரத்தை விரயமாக்க விரும்பவில்லை.

இப்படி ஒரு ஒழுங்கு முறை வேண்டுமென்று அமைத்தார்கள். கரணம் என்கிறபோதுகூட குறிப்பிட்ட பிரகாரங்களின்படி தான் நடந்தாக வேண்டுமென்ற நியதி இல்லை. ஒன்று சொல் கிறேன். எங்கள் மரபு நான் சாதியைச் சொல்வது இல்லை. சொல்லக்கூடாது என்று கொள்கிறவன். வரலாற்று முறைக்காக இப்போது எடுத்துச் சொல்கிறேன், பிராமணர்கள் வந்து எங்கள் திருமணத்தை நடத்தி வைப்பது இல்லை, இது சிலப்பதிகார காலம் முதலாகத் தொடர்ந்து வருகிற மண முறை. இன்றும் பிராமணர்கள் வருவது இல்லை. அக்னி வளர்ப்பது இல்லை. கரணம் என்பது எங்களுக்குக் கையைப் பிடிக்கிற ஒன்றுதான். கைப் பிடித்துப் புகுந்த பிறகு, தாலி கட்டி முடிந்த பிறகுதான் வேள்வி வருப்பது இன்று நடைபெறுகிறது. தாலி கட்டுகிற வரையில் ஒன்றும் கிடையாது. தாலி கட்டுகிற பழக்கம் கூட முந்தி கிடை யாது. கைப் பிடித்தல்—பாணிக் கிரஹணம் என்று சொல்கிறார் களே—அதுதான் முறை. இன்றைக்குங்கூட செட்டிமார் நாட்டில் திருமணம் முடிந்த பிறகு போடுகிற சாப்பாட்டிற்கு "கை பிடி சோறு" என்றேதான் சொல்வார்கள். தாலி கட்டுகிற வழக்கம் பிற்காலத்தில்தான் வந்திருக்கிறது. இன்று தாலி உண்டு. அதன் பெருமையையும் அருமையையும் நாம் மதிக் கிறோம். அதைப்பற்றிச் சந்தேகமே இல்லை. தாலி என்ற சொல்லுக்கே கழுத்தில் தொங்குவது என்பதுதான் பொருள். பின்னர் திருமாங்கல்யம் என்ற பொருளில் சம்பிரதாயமாக இது வழங்கி வந்திருக்கிறது.

இந்த நிலையில் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். எங்களில் கல்யாணம் தினத்திற்கு முதல் நாளைக்கு முதல் நாள்— மற்ற வகுப்பில் கோத்திரம் என்று சொல்வது போல—எங்களுக்குக் கோயில் என்று உண்டு. அந்த அந்தக் கோயில்களுக்குச் சென்று இன்னார் மகன், இன்னார் மகளை இன்ன ஊரில் இன்ன நாளில் கை பிடித்துத் திருமணம் செய்து கொள்கிறான் என்பதாகப் பதிவு

3rd November 1966] [திரு. சா. கணேசன்]

செய்துகொண்டு, பாக்குவெற்றிலை வைத்து வருவது நடைமுறை. அதன் பிறகு ஆண்டவனுக்குச் சார்த்திய மாலைதான் மறுதினம் நடக்க இருக்கிற திருமணத்திற்கு மண மாலையாக வரும். ஆண்டவனுக்குச் சூட்டிய மாலைதான—பழ மாலைதான் மண மாலையாகச் சூட்டிக்கொள்வது மரபு. அவரவர்கள் ஆலயத்தில் ரிஜிஸ்தர் செய்கிற முறையாகவும் இது இருந்து வருகிறது. 400 ஆண்டுகள் சம்பந்தப்பட்ட ரிஜிஸ்தர் ரெக்கார்டுகள் இருக்கின்றன.

ஒன்றை நாம் மறந்துவிடப்படாது. கல்யாணம் பவித்திரமான சடங்கு. இதில் நிர்ப்பந்தங்கள் தோன்றக் கூடாது. ஒழுங்கு வேண்டும். கட்டுப்பாடு வேண்டும். நியதி இருக்க வேண்டும். பொருளாதார அடிப்படையிலோ, மனதத்துவ (சைகாலஜி) அடிப்படையிலோ எந்த அடிப்படையில் எடுத்துக்கொண்டாலும் வழக்கமான கருத்துக்கு மாறுபட்ட ஒன்றைச் செய்துதான் ஆகவேண்டுமென்ற நிர்பந்தம் இருப்பது கூடாது. இப்போது நான் மட்டும் அல்ல, ஏராளமான பெரியவர்கள் பல சந்தர்ப்பங்களில் சொல்லி வந்திருக்கிறார்கள். மகாத்மா காந்தி அவர்கள்கூட சிக்கன மண முறை என்பதாக ஒரு திருமணம் 8 அணுவுக்கு மேல் அதிகம் செலவாகாமல் நடக்க வேண்டும் என்பதாக 'யங் இந்தியா'வில் எழுதியிருக்கிறார் 'ஹரிஜனி'ல் எழுதி இருக்கிறார். அவற்றை எல்லாம் தொகுத்துப் பல புத்தகங்கள்கூட வெளி வந்திருக்கின்றன. தனிப்பட்டவர்கள் திருமணம் செய்துகொண்டு விடுவது என்பது இல்லாமல்—நூறு பேர்களாவதுகூடி இருக்க—அவர்களுக்கு மத்தியில் ஆண் பெண்ணுக்கு மாலையிட, பெண் ஆணுக்கு மாலையிட பலர் காணத் திருமணம் நடைபெற வேண்டும். மாலை சூட்ட மலர் மாலை வேண்டாம், கதர் மாலை போதும். மலர் மாலையாக இருந்தால்கூட வாடிவிடும். கதர் மாலையாக இருந்தால திருமணத்தின் அடையாளமாகக் கதர் மாலையைப் பல காலம் பெட்டியில் வைத்திருக்கலாம். அந்தக் கதர் மாலையை ஆடையாக நெய்து அந்த ஆடையைப் பேணி வைத்திருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி எத்தனையோ முறைகள் இருந்து வந்திருக்கின்றன. திருமணம் என்றால் அதில் ஒழுங்கு இருக்க வேண்டும். நியதி இருக்கவேண்டும். அறம் தவறாமல் இருக்கவேண்டும். இதன் காரணமாகவே ஊர் அறியக் கல்யாணம் செய்து கொள்வது மரபாக இருக்கிறது. ஆண்டாள் பாசுரத்தில் இருந்து, அப்பர் சுவாமிகள் வரை—தங்களை நாயகியாக, ஆண்டவனை நாயகனாக வைத்துப் பாடியிருப்பதைப் பார்த்தால் கைப் பிடித்தல் என்பதுதான் பழங்காலம் தொட்டு இருந்துவந்த முறை என்பதைத் தெரிந்துகொள்ளலாம். "கைப்பற்றக் கனாக் கண்டேன் தோழி" என்பதாக வருவதிலிருந்து கைப் பிடித்தல்தான் முக்கியம். பெண்கள் மன்னிக்க வேண்டும். இயல்பாக அவர்கள் பலம் குறைந்தவர்கள். அவர்களுக்கு எல்லாக் காலத்தும் ஒரு துணை இருக்க வேண்டும் என்று அந்தக் காலத்தில் நினைத்தார்கள். ஆகவே ஒரு பெண்ணை எல்லா வகையிலும் வைத்துக் காப்பாற்ற பலமும், தாமும், வலுவும், திறனும் உள்ள ஓர் ஆண் அவளைக் கைப் பிடித்தல்

[திரு. சா. கணேசன்] [3rd November 1966

என்பது திருமண மரபு. ஆகவே, குறிப்பிட்ட சடங்குகள் இருந்தே தீரவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லாமல், செம்மையாக, நேர்மையாக, பலர் அறிய, ஊர் அறிய மணம் செய்து கொள்வதை அனுமதிப்பது முற்றிலும் நியாயமானதாகும். அத்தகைய திருமணங்கள் செல்லத்தக்கவையாகும்.

இன்றைக்கும் எங்கள் மரபில் ஐயர் வருவது இல்லை. அக்னி வளர்ப்பது இல்லை என்று முன்னரே கூறினேன். தாலி கட்டுவது கூட ஒரு நூறு வருடங்களுக்கு முன்னால் பார்த்தால் ஊரிலுள்ள ஒரு பெரியவர் ஒழுக்கம், சீலம், நியாயம் தவறாத தன்மை உடையவர், அந்தத் தாலியை இந்தப் பெண்ணுக்கு இன்ன பையன் சார்பாக கட்டுகிறேன் என்று சொல்லிவிட்டுக் கட்டி வருவது வழக்கம். இன்றுள்ள நிலையோடு பார்த்தால் நகைப்பாக இருக்கும். அந்தக் காலத்தில் எட்டு, ஒன்பது வயதில் திருமணங்கள் நடந்து வந்திருக்கின்றன. இந்தக்காலம்போல எம்.பி.பி.எஸ். படித்தவர், பி.இ. படித்த பையனைத் திருமணம் செய்து கொண்டதில்லை. இதனால் இப்போது மணமகனே மாங்கல்ய தாரணம் செய்வது என்று வந்துவிட்டது. ஆக குறிப்பிட்ட நெறியைத்தான் பின்பற்ற வேண்டுமென்று சொல்வது நியாயம் அல்ல. இஸ்லாமியர்களுக்கு ஒரு முறை இருக்கிறது. கிருஸ்துவர்களுக்கு ஒரு முறை இருக்கிறது என்பதுபோல இந்துக்களுக்கு ஒரு முறைதான் என்றில்லை. பல்வேறு கொள்கைகள், பல்வேறு பழக்க வழக்கங்கள், பல்வேறு விக்கிரக வழிபாடுகள் இந்து சமயத்தில் இருப்பதுபோலத் திருமண முறையிலும் பல்வேறு பழக்க வழக்கங்கள் இருந்து வருகின்றன. இந்து மதத்தில் எத்தனை பிரிவுகள் உண்டோ அத்தனை முறைகள் இருக்கின்றன. முக்குலத்தார் என்றால் ஒரு முறை, செட்டிமார் என்றால் ஒரு முறை. அப்படி இருக்க இந்து சமயத்தவர்கள் எல்லோரும் ஒரு முறையைத்தான் அனுஷ்டிக்க வேண்டுமென்ற நிர்பந்தம் இருப்பது நியாயம் இல்லை. இந்து மதம் ஒன்பது ஒரு மத மல்ல. பல்வேறு கருத்துக்களையும் ஆகமங்களையும் கொண்ட பல்வேறு சமயங்களின் ஒரு சமஷ்டியே இந்து மதம். ஆனால் எல்லாம் வேதத்தை ஒப்புக்கொண்டுள்ள மதங்கள். எனவே இதை வைதிக சமயங்கள் என்போம். எனவே நாம் வேத நெறியைப் போற்றுகிறோம். வாழ்த்துகிறோம். வணங்குகிறோம். ஆயினும் பல்வேறு நெறிப்படி நடக்கிற திருமணங்கள் அத்தனையும் அனுமதிக்கப்படுகிற வகையில் சட்டம் இருக்கவேண்டும். அவற்றைச் சட்ட விரோதமாக ஆக்குவது தவறு. சட்டப் பூர்வமாக ஆக்குவது தவறு இல்லை என்பது மட்டும் அல்ல, நியாயமாகும், அறமாகும். இதைக் கட்சி வேறுபாடின்றி எல்லா உறுப்பினர்களும் வரவேற்பார்கள். மசோதாவில் உள்ளே சில குறிப்பிட்ட வார்த்தைகள் சிலருக்குப் பிடிக்கலாம். சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அத்தகைய சொற்களுக்குப் பதிலாக பொதுச் சொற்களைப் பெய்து, தமிழ்த் திருமணம், தமிழ்நாட்டுத் திருமணம், தமிழ் மக்கள் திருமணம் என்ற முறையில் அமைக்கலாம். இந்த மசோதாவைக் கொண்டுவந்தவர்கள்கூட வார்த்தைகளை மாற்றக் கூடாது என்று பிடிவாதம் பிடிக்க

3rd November 1966] [திரு. சா. கணேசன்]

மாட்டார்கள். நம்முடைய பொதுவான கருத்தை, பொருளைச் செம்மையாக அமைத்துக்கொள்வதற்கு எல்லா உறுப்பினர்களும் உதவி செய்து இதை ஏகமனமாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : கனம் சட்டமன்றத் தலைவரவர்களே, கொங்கு நாட்டிலிருந்து வந்தவன் என்ற முறையிலே திருமணத்தைப்பற்றி நானும் என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகின்றேன். திருமணம் என்று சொன்னால் அதற்குச் சடங்குகள் இன்றியமையாதவை. சடங்குகள் இல்லையென்றால் அந்தத் திருமணமே தேவையில்லை. மனத்திலே உண்மை இருக்குமானால் திருமணம் என்ற ஒன்று நிகழத் தேவையில்லை என்பதும் உண்டு. சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. கணேசன் அவர்களே தொல்காப்பியத்திலிருந்து ஒரு பாடலைச் சொன்னார்கள்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்பதுதான் தொல்காப்பியத்தின் கருத்து. என்றைக்கு உண்மையிலிருந்து மக்கள் சமுதாயம் பிரிந்ததோ அன்றிலிருந்துதான் இந்தச் சடங்குகள் ஏற்பட்டன, இவை இன்றியமையாத தேவையாயினவென்று கூறப்படுகின்றது. அதில் புலவர் கோவிந்தன் அவர்கள் கூறியதுபோல் 'ஐயர்' என்பது நிச்சயமாக பார்ப்பனர் அல்ல. 'ஐயர்' என்பதற்கு அறவோர் என்பதுதான் பொருள். நல்லவர்கள், உயர்ந்த பண்பாடு படைத்தவர்கள், அறிவுமிக்கவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் சேர்ந்து இந்த திருமணத்திற்கு ஒரு ஒழுங்குமுறை வகுத்தனர். அந்த ஒழுங்கு முறை இல்லையென்றால் பொய்யான இந்த உலகத்திலே பல இன்னல்கள் ஏற்படும், ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்திலே,

"நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர் கீழ்
சாலி ஒருமீன் தகையாளை கோவலன் மாமுது பார்ப்பான்
மணவழி காட்டிட தீவலஞ் செய்து
காண்பார் கண் நோன்பென்னை"

என்று அழகாக இளங்கோவடிகள் வர்ணித்திருக்கின்றார்கள். பார்ப்பனர் என்று சொன்னால் ஆரியர்கள் என்று சொல்வது தவறு. திராவிடர் கலாச்சாரம் என்று வைத்துக்கொண்டாலும்கூட அப்படிப்பட்டவர்களுக்குச் சமூகம் ஒதுக்கப்பட்டுத்தான் இருந்தது. ஆசிரியர் திரு. கந்தையா அவர்கள் "தமிழ் இந்தியா" என்ற நூலை எழுதியுள்ளார்கள். அந்த நூலை நான் கையில் வைத்துக்கொண்டுதான் இருக்கின்றேன். வேண்டுமானால் இதைப் படித்துச் சொல்ல முடியும். ஆனால் அதற்கு அவசியமில்லை என்று நினைக்கின்றேன். அக்காலத்திலே திருமணச் சடங்குகள் எப்படியிருந்தன என்பதைப்பற்றிச் சொல்லுகின்றபொழுது அக்கால மன்றல் புரோகிதர் இன்றி நடந்தன. கணி எனப்பட்ட சோதிடர் கலியாணத்துக்கேற்ற நல்ல நாளை ஆராய்ந்து கூறினர். சங்க நூற்களில் காணப்படும் மன்றல் முறை வருமாறு:

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [3rd November 1966

"உரோகிணி சந்திரனோடு கூடும் பூரண நாளில் கலியாண முகூர்த்தம் வைக்கப்பட்டது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் காலத்திலும் ஜோசியம் பார்த்துத்தான் இருக்கிறார்கள்.

"வீட்டின் முற்றத்தே கால்கள் நட்டு அழகிய பந்தல் இடப் பட்டது" என்று கூறப்பட்டிருக்கிறது. இதையேதான் சிலப்பதி காரத்திலும் "நீல விதானத்து வித்திலப் பூம்பந்தற் கீழ்" என்ற முறையிலே காண்கிறோம்.

"தரையில் ஆற்றின் வெண்மணல் பாப்பப்பட்டது. அழகிய பூமாலைகளையும் இலைகளையும் தூக்கிப் பந்தல் அலங்கரிக்கப்பட்டது. பருப்பு இட்டு ஆக்கிய சோற்றுக் குவியல் பலர் கூடியிருந்து உண்ட பின்னும் மிகுந்து கிடந்தது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (சிரிப்பு). "பெரிய மேளங்களும் மண வாத்தியங்களும் ஒலித்தன. அறுகங்கிழங்கை நூலாற் சுற்றிச் செய்த தெய்வ உருவம் வாழை யிலையின் மீது வைத்துப் பூவால் அலங்கரிக்கப்பட்டது, விளக்குகள் கொளுத்தப்பட்டன" என்று எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படி யெல்லாம் "தமிழ் இந்தியா" என்ற வரலாற்று நூலிலே திருமணச் சடங்குகள்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் தொல்காப்பியர் சொல்வதுபோல் எப்பொழுது உண்மைக்கு ஆபத்து இல்லையோ, எப்பொழுது மக்கள் சமுதாயம் திருந்தி வந்ததோ அப்பொழுது திருமணச் சடங்குகளுக்கு அவசியம் இல்லை என்றுதான் கூறப்படும். பொய், என்று சமுதாயத்தில் புகுந்ததோ, அன்றே திருமணச் சடங்குகள் இன்றியமையாத சடங்குகளாக ஏற்பட்டுவிட்டன.

அடுத்ததாகத் தாலி என்பதைப்பற்றிக்கூடச் சொன்னார்கள், கம்பன் கூறும்பொழுது, "தாலி ஐம்படை தழுவும் மார்பிடை" என்று சொல்லுகின்றான்.

திரு. சா. கணேசன் : அது குழந்தையைப் பற்றி, பச்சிளங் குழந்தையைப்பற்றி . . .

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : ஐம்படை உண்டு. அதில் ஆழ்ந்த கருத்துக்கள், நுண்ணிய கருத்துக்கள் உண்டு. தாலி என்பதைப்பற்றி இவ்வளவு லேசாக அவர்கள் சொல்வார்கள் என்று நிச்சயமாக நான் எதிர்பார்க்கவில்லை. தாலி ஒருவரிடத்தில் தாழ்ந்து இருக்கின்ற அணிகலன் என்று சொல்லிக்கொள்வார்கள். ஆனால், அதைப் பெண்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தாலி என்பது, திருமணச் சிறப்புக்கு, காதல் சிறப்புக்கு உரு வெளித் தோற்றமாக நெஞ்சிலே காணுகின்ற ஒன்று. களவு, கற்பு என்று இரு கூறுகள் இருக்கின்றன. களவியல், கற்பியல் என்று கூறுகின்றோம். திரு. சங்கரன் அவர்கள் சொன்னதைப் போல் சீர்திருத்தத் திருமணமாக இருந்தாலும் சரி, சுயமரியா தைத் திருமணமாக இருந்தாலும் சரி, எந்த திருமணத்திற்கும் ஏறக்குறைய இந்தச் சடங்குகள் அவசியம் என்பது இந்தச் சட்டத் தில் இடம் பெறத்தான் வேண்டும். என்னுடைய பகுதிகளிலே, கொங்குநாட்டைப் பொறுத்தவரையிலே திருமணத்திலே எல்லா விதச் சடங்குகளும் நடத்தப்படுகின்றன.

3rd November 1966] [திரு. எ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

" சாலி ஒருமீன் தகையாளை கோவலன் . . . " என்று சிலப்பதிகாரம் சொல்லுகின்றது. அதைப்போலவே

" தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்ற முறையில் " தற்காத்து " என்று சொல்லக்கூடிய ஒன்றை திருக்குறளிலே முன்னே வைத்துப் பேசுகின்றார். அதைத்தான் " சாலி ஒருமீன் தகையாளை " என்று இளங்கோவடிகள் கூறுகின்றார். செட்டி நாட்டிலே இப்பொழுது அது மறைந்துகொண்டு வருகிறது என்று கூறுகிறார்கள்; ஆனால் தமிழர் சமுதாயமானது அதை விட்டுவிட வேண்டிய அவசியமில்லை. ஆரியர், திராவிடர் என்று பிரித்துப் பேச வேண்டிய அவசியமுமில்லை. இரண்டும் ஒரே நாகரிகமாகக் கலந்துகொண்டு விட்டது.

வேள்வி பற்றிச் சொன்னார்கள். வேள்வி பற்றி நிறையச் சொல்லுகின்ற, ஆகமங்கள், உன்னத வேதங்கள் உண்டு. அவற்றைப் படித்துக் கூறுவது தமிழன் மரபுக்கே உகந்தது அன்று என்று சொல்ல முடியாது. நான் சரித்திரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு பேசுகின்றேன். அந்த முறையில் திருமணச் சடங்குகள் அவசியம். சீர்திருத்தத் திருமணமானாலும், சுயமரியாதைத் திருமணமானாலும் சடங்குகள் வேண்டும் என்பதைச் சொல்லிக் கொண்டு, அதையும் புகுத்தி வேண்டுமானால் இதைக் கொண்டுவரலாம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கின்றேன்.

* திரு. து. ப. அழகமுத்து : கனம் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத்தை வரவேற்று, ஆதரித்து, ஒன்றிரண்டு கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறலாமென்று நினைக்கிறேன். 11-00 a.m.

இந்தச் சட்டம் இப்பொழுது மிகவும் அவசியமான ஒரு கட்டத்தில் இருப்பதற்கான காரணத்தை திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்து திருமணச் சட்டம் உருவாக்கப்பட்டபொழுது அதற்கு என்ன என்ன விளக்கங்கள் கொடுத்தார்கள் என்ற விவரத்தைப் பற்றியும் அவர்கள் கூறினார்கள். பழக்கத்தில் இருந்து வருபவைகளை அங்கீகரிக்க வேண்டுமென்று இந்து திருமணச் சட்டத்தில் கூறப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டார்கள். சுய மரியாதைத் திருமணங்கள் இப்பொழுது சமூகத்தில் பழக்கத்திலே வந்துவிட்டன. அதை ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள், ஜாதிக்காரர்கள் நடத்துவது என்று இல்லாமல் எல்லோரும் நடத்தக்கூடிய நிலைமை இப்பொழுது வந்துவிட்டது. பெரும்பாலானவர்கள் இந்த முறையிலே திருமணம் செய்துகொள்கிறார்கள். அப்படிச் செய்துகொள்கிறார்கள் என்றால் சமுதாயம் அதை அங்கீகரித்துவிட்டது என்றுதான் பொருள். சமுதாயம் அங்கீகரித்துவிட்ட பிறகு அதற்குச் சட்டபூர்வமான பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது சர்க்காருடைய கடமையாகும். அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்பதுதான் கனம் மாதவன் அவர்

கள் கொண்டு வந்ததுள்ள மசோதாவின் நோக்கமாகும். அப்படி இதைச் செய்யாமல் விட்டு விட்டால் இதிலே வேறு ஒரு சிக்கல் கூட ஏற்படலாம்.

இன்றையதினம் இருதார மண தடைச் சட்டம் நாட்டிலே அமலில் இருக்கிறது. அந்தச் சட்டப்படி ஒருவர் ஒரு மனைவி இருக்கும்போது வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டபூர்வமான திருமணம் அல்ல என்று ஹைக் கோர்ட் கூறியிருக்கிறது. அப்படிக் கூறிவிட்ட காரணத்தால், வைதீக முறைப்படி, இந்து திருமணச் சட்டப்படி திருமணம் செய்து கொண்டவர்கள் இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் தோன்றினால் அவர் பகிரங்கமாகச் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டால் அதைத் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, இன்றையதினம் சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் கொடுப்பது நல்லது. பின்னால் வரக்கூடிய சிக்கல்களைத் தடுக்கவும், சமுதாயம் அங்கிகரித்த ஒன்றுக்குச் சட்ட உருவம் கொடுக்கவும் திரு. மாதவன் அவர்கள் கொண்டு வந்துள்ள மசோதாவைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் மாதவன் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்து திருமண திருத்தச் சட்ட மசோதாவை ஆதரிக்கும் வகையில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எந்தத் திருமண முறை சிறந்தது என்பதைப் பற்றி ஆராய்வதோ, எப்படித் திருமணம் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி திருத்தியமைப்பதோ இந்த மசோதாவின் நோக்கமல்ல. நாட்டிலே பல்வேறு முறைகளிலே திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இடத்திற்கு இடம், வகுப்புக்கு வகுப்பு, பரம்பரைக்குப் பரம்பரை திருமண முறைகளில் பல்வேறு மாறுபாடுகள் இருக்கின்றன. இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைகளில் சுய மரியாதைத் திருமணம் அல்லது சீர்திருத்தத் திருமணம் அல்லது தமிழர் திருமணம் அல்லது திருந்திய திருமணம் என்ற பல்வேறு பெயர்களில் சென்ற 40 ஆண்டுகளாகத் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இரண்டு தலைமுறைகளாகவே அத்தகைய திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. ஆயிரக்கணக்கான பேர்கள் இந்தத் திருமணத்தின் மூலமாகத் தங்களுடைய வாழ்க்கையை இனிதுற நடத்துகிறார்கள். பிள்ளைகள், பேரன்-பேத்திகளைப் பெற்று வாழ்க்கை நடத்துகிறார்கள். ஏற்பட்டிருக்கும் சங்கடங்கள் எல்லாம், சிலபல சொத்துரிமைகள், வாரிசு உரிமைகள், பரம்பரை உரிமைகள் ஆகியவற்றைப் பெற முடியாத அளவுக்குச் சட்டம் தடையாகக் குறுக்கே நின்று கொண்டிருக்கிறது என்பதுதான்.

முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் கூறிய முறைகளை எல்லாம் கூட இந்து திருமணச் சட்டம் முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்ட ஒன்றாக இல்லை.

3rd November 1966] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

தாலி கட்டினால்தான் திருமணம் செல்லும் என்று கூட அந்தச் சட்டத்திலே இல்லை. இந்து திருமணச் சட்டத்திலே எது முக்கியமாக வலியுறுத்தப் பட்டிருக்கிறது என்றால், 'தீ வலம் செய்ய வேண்டும், 7 அடி நகர வேண்டும்-ஐந்தாவது அடியில் நின்றுவிட்டால் கூடத் திருமணம் செல்லாது, ஏழாவது அடி எடுத்து முடித்ததற்குப் பின்னால்தான் திருமணம் செல்லும்.' என்று சட்டத்திலே கூறப்பட்டிருக்கிறது. அப்போது இருந்த சூழ்நிலைகள், மரபுகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஏதாவது ஒன்றை வலியுறுத்த வேண்டுமென்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. கனம் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்களும், கனம் சா. கணேசன் அவர்களும் எடுத்துச் சொன்ன மரபுகள், தொன்றுதொட்ட மரபுகள், குல மரபு ஆகியவற்றின் அடிப்படையில் செய்து கொள்ளக்கூடிய அளவில் நடக்கின்ற திருமணங்களுக்கு நீதிமன்றங்களில் நியாயம் கிடைத்து விடும். சுயமரியாதைத் திருமணம் தொன்றுதொட்டு வருகின்றது என்ற அடிப்படையில் நீதிமன்றங்களில் நீதி வழங்கக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. சுயமரியாதைத் திருமணத்தைத் ஸ்பெஷல் மேரேஜஸ் ஆக்டின் கீழ் பதிவு செய்து கொள்வதானாலும், அதன்படித் திருமணம் செய்து கொண்டவர்கள் கணவன்-மனைவி என்ற அளவிலே உறுதி செய்யப்படுகிற நிலை இருக்கிறதே தவிர, வாரிசு உரிமைகளைப் பெறுவதற்கு வழி இல்லாத நிலை இருக்கிறது. சுயமரியாதைத் திருமணம் அல்லது சீர்திருத்தத் திருமணம் என்று சொல்லும்போது அது எந்த முறைகளிலே செய்யப்பட வேண்டுமென்று சொல்வதிலே சங்கடம் ஏற்படுகிறது. மோதிரம் மாற்றிக் கொள்வது அல்லது உறுதிமொழி படித்து அளிப்பது, அல்லது தலைமை வகிப்பவர்கள் கையெழுத்தைப் பெற்றுகொள்வது, அல்லது ஒருவரை ஒருவர் பார்த்து வாக்குறுதிகள் நல்கிக் கொள்வது என்று எப்படிச் செய்வது என்பதிலே சங்கடங்கள் இருக்கக் கூடும். இன்ன முறையிலேதான் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்கில்லை. இந்த முறையிலே எதிர்க் கட்சியினர் மட்டுந்தான் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்றில்லை; எல்லாக் கட்சியினரும் செய்கிறார்கள். இந்த மாதிரித் திருமணங்களுக்குக் கனம் முதலமைச்சர், தொழிலமைச்சர் எல்லாம் வந்து வாழ்த்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள். நானும் அமைச்சரும் கலந்து கொண்ட இத்தகைய திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் வீட்டிலே கூட தேசியத் திருமணம் என்று அழைப்பிதழ் அச்சடித்து இந்த முறையில் திருமணம் செய்து கொள்கிறார்கள். இப்போது உள்ள கோரிக்கை இந்து திருமணச் சட்டத்தின் கீழ் இதைப் பதிவு செய்து கொள்வதற்கு இடம் வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொள்வதற்கு இடம் இருந்தால்தான் வாரிசு உரிமைகள் மற்றும் சொத்துரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடும். இந்த முறையில் திருமணம் செய்து கொண்டவர்கள் இப்போது ஆயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள்.

மற்றொன்றையும் திரு. அழகமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகாத நிலை நீடிக்குமானால், வைதீகத் திருமணம் செய்து கொண்டவர்கள் சுய

மரியாதைத் திருமணம் என்று சொல்லி இரண்டு தாரம், மூன்று தாரம் என்று திருமணம் செய்து கொண்டால் அதிலே சட்டப்படி யாரும் குறுக்கிட முடியாது. அவர்கள் இருதார மணத் தடைச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு இடம் அளிக்கக்கூடிய வகையில் இருக்கிறது. ஆகவே, இந்தத் திருமணங்களை இந்து திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு வழி செய்யும் வகையில்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதிலுள்ள சொற்களைத் திருத்தவோ, சட்ட ஒழுங்குமுறையைத் திருத்தவோ அரசாங்கம் முயலுமானால், அதுபற்றிக் கருத்துத் தெரிவிக்குமானால் அந்த அளவிற்குக் கூடத் திருத்திக்கொள்ளலாம். நோக்கம் நிறைவேற வேண்டும்.

திருமணம் எப்படியிருக்க வேண்டும் என்பது பற்றி திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொன்னார்கள். தனியாக உட்கார்ந்து விவாதிக்கும்போது என்ன என்பதுபற்றி முடிவு செய்து கொள்ளலாம். அதற்கு இப்போது இங்கு அவகாசம் இல்லை. அந்த முடிவும் இப்போது இங்கு ஏற்படப் போவதில்லை. கோரிக்கை ஒன்றுதான். அந்தத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் உடையவர்கள் இன்று ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட திருமணங்களும் நடக்கின்றன. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதற்கான முயற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். அது நியாயமானதே என்று இங்கு அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது.

1959-62-க்கு இடையில் ஒரு மசோதா வந்தது. அப்போதைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி அளித்தார்கள். இதைச் செல்லுபடியாக்குகிற அளவிற்கு ஒரு சட்டம் கொண்டு வர அரசாங்கம் முயலும் என்று சொன்னதன் பேரில் அப்போது கொண்டு வரப்பட்ட தனியார் மசோதா நிறுத்தி வைக்கப்பட்டது. ஆகவே, அமைச்சரவையின் கருத்துக்கு மாறுபட்ட ஒன்றல்ல இது. இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்ள . இடம் வேண்டும். ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்டில் கூட என்ன சொல்லியிருக்கிறது என்றால், ரெஜிஸ்ட்ராருக்கு முன்னால் செல்கிறபோது 'நான் இன்னாரை சட்டபூர்வமான மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன்' என்று மூன்று தடவை சொல்ல வேண்டும், அதேபோல் 'இன்னாரை நான் சட்டபூர்வமான கணவராக ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்று மூன்று தடவை அவர் சொல்ல, இப்படித் திருப்பி இருவரும் சொல்ல அந்தத் திருமணம் முற்றியதாக கையெழுத்துப் போடும் அளவிற்கு ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்ட் நடைபெறுகிறது. இதற்குக் கீழ் பதிவு செய்கிறது என்று வந்தால் சட்டப்படி இன்னாரைக் கணவனாக ஏற்றுக்கொள்கிறேன் என்று அவர் மூன்று தடவையும், இன்னாரை மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன் என்று இவர் மூன்று தடவையும் சொல்லிக் கையெழுத்துப் போட்டு மற்றவைகளெல்லாம் இந்தச் சட்டத்தின்கீழ் பெறுகிற அளவிற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டால், திருமணம் இன்ன முறையில் இருக்க வேண்டும், மாலை மாற்ற வேண்டுமா, மோதிரம் மாற்ற வேண்டுமா, என்பதைப்பற்றி யெல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்ட்படி

3rd November 1966] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

ஒப்பந்தம் செய்து ஒப்புக்கொள்ளப்படுகிறதே அதே முறையை இதில் புகுத்தலாம். அப்படி அதைப் புகுத்த கனம் தொழில் அமைச்சர் அவர்கள் முயன்றால் அவர்கள் சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில் வாசகங்களில் தவறு இருந்தால் மாற்றியமைக்கலாம். சுயமரியாதைத் திருமணம் என்பது ஒரு இயக்கத்தின் பேரால் அந்த இயக்கம் அதை நடத்தியதால் சுயமரியாதைத் திருமணம் என்ற பெயர் வந்ததே தவிர நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதுதான். அந்த வகையில் இந்த மசோதாவின் நோக்கம் அத்தனை பேர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று. அந்த முறையில் வழிவகை செய்து அந்த நோக்கம் நிறைவேற இந்தச் சட்டத்தின் மூலம் அல்லது வேறொரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டசபையின் இறுதிக் கூட்டம் மங்களகரமாக நடைபெறுகிறது. மேள தாளம் ஒன்றுதான் பாக்கி. மிகச் சுவையான விவாதம், ரம்யமான விஷயத்தைப் பற்றி நீண்ட நேரம் நடந்திருக்கிறது. ஆனால், நாம் இன்று கவனிக்க வேண்டிய பிரச்னை சட்டப் பிரச்னை. இந்தச் சட்டப் பிரச்னையால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைத்தான் நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டும்.

இந்து மதச் சட்டப்படி சப்தபதி நடத்தினால் தான் திருமணம் முடிவுபெறும் என்று சொல்லப்படவில்லை. வழக்கப்படி, சம்பிரதாயப்படி, முறைப்படி நடந்த எல்லாத் திருமணங்களும் இந்து மதச் சட்டத்திற்கு ஒப்பானது. அத்துடன் சப்தபதி நடந்தால், ஏழு அடி எடுத்து வைத்தவுடன் அந்தத் திருமணம் முடிந்து விட்டதாகக் கருதப்படும் என்பதுதான். அந்த ஷரத்தை நான் படிக்க விரும்புகிறேன்.

"A Hindu marriage may be solemnized in accordance with the customary rites and ceremonies of either party thereto . . ."

திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னதுபோல் எங்கள் மரபில் செய்கிற திருமணங்கள் எல்லாம் சரியான முறையில் செய்யப் பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது என்று சொன்னார்கள். அந்தச் சந்தேகத்திற்கு இடமேயில்லை. இன்று சம்பிரதாயப்படி என்னென்ன முறையில் திருமணங்கள் நடத்தப்படுகின்றனவோ அவை யெல்லாம் சட்டப்படி இந்து மத விவாகங்களாகும்.

"Where such rites and ceremonies include the *Saptapadi* (that is, the taking of seven steps by the bridegroom and the bride jointly before the sacred fire), the marriage becomes complete and binding when the seventh step is taken."

வேறொரு சடங்கும் தேவையில்லை. சப்தபதி வைத்துச் செய்கிற சடங்கு இருக்குமானால் சப்தபதி நடந்தவுடன் திருமணம் முடிந்து விட்டது. தாலி கட்டாவிட்டாலும் சரி, வேறு சடங்குகள் செய்யாவிட்டாலும் சரி, ஹோமம் வளர்க்காவிட்டாலும் சரி, மந்திரம் சொல்லாவிட்டாலும் சரி, ஏழு அடி எடுத்து வைத்தவுடன் திரு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd November 1966

மணம் முடிவு பெறுகிறது என்பதுதான் சட்டம். இந்தவிதமாகச் செய்யப்படாத திருமணங்களைப்பற்றித்தான் நாம் இப்போது விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது நடைமுறையில், சம்பிரதாய முறையில் இல்லாத ஒரு முறையைப் புதிதாக அனுஷ்டித்து திருமணம் செய்தால் அதன் சட்டபூர்மான நிலைமை என்ன என்பதைப்பற்றி 1954-ம் ஆண்டு ஹைக்கோர்ட்டில் ஒரு விவகாரம் வந்தது. அதில் தீர்ப்பு அளிக்கிறபோது, 'சம்பிரதாய முறைப்படி செய்யாத இந்துத் திருமணங்கள் திருமணங்கள் ஆக மாட்டா, இந்து மதச் சட்டத்தின் கீழ் அவை திருமணங்கள் ஆக மாட்டா' என்று தீர்ப்புக் கொடுத்தார்கள். இந்தத் தீர்ப்பைக் கொடுத்தவுடன் நம்முடைய ராஜ்ய சட்டசபையில் இதற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக ஒரு மசோதாவைக் கொண்டு வந்தோம். 1954-ல் கொண்டு வந்தோம். Hindu Non-conforming Marriages Registration Bill of 1954 என்ற சட்டத்தைக் கொண்டு வந்தோம். இதற்கு இடையில் மத்திய பார்லிமெண்டில் ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்ட் என்ற சட்டத்தை அவர்கள் நிறைவேற்றினார்கள். ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்டின் 15-வது ஷரத்துப்படி

"Any marriage celebrated, whether before or after the commencement of this Act, other than a marriage solomnized under the Special Marriage Act, 1872, or under this Act, may be registered under this Chapter by a Marriage Officer in the territories to which this Act extends if the following conditions are fulfilled . . .'

One of the conditions is—

" (a) a ceremony of marriage has been performed between the parties and they have been living together as husband and wife . . . "

என்றிருக்கிறது. அதனால், 'இந்து மதச் சட்டப்படி செரிமனீஸ் தேவையில்லை; எந்தவிதமான குறிப்பிட்ட சடங்குகளும் தேவையில்லை. திருமணம் என்ற சடங்கு எந்த முறையில் செய்யப்பட்டிருந்தாலும் அந்தத் திருமணத்தைச் சட்டத்தின் கீழ் ரிஜிஸ்டர் செய்யலாம்' என்ற ஒரு ஷரத்து போடப்பட்டது. அது பார்லிமெண்டில் விவாதத்திற்கு வந்த காலத்தில் அங்கிருந்த அங்கத்தினர்கள் எல்லோரும் 'இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு இந்து மத முறைகளிலோ அல்லது வேறு பல்வேறு முறைகள், அங்கீகரிக்கப்பட்ட முறைகள் எவ்வளவோ, அவைகள் மூலமாகச் செய்யப்படாமல் இருந்த திருமணத்தை நீங்கள் ரிஜிஸ்டர் செய்வதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால், சட்டத்திற்குப் பின்பு முடிகின்ற திருமணங்களை ஏன் அப்படி ரிஜிஸ்டர் செய்ய வேண்டும்? அதனால் வருங்காலத்தில் ஏற்படுகிற திருமணங்களை ரெஜிஸ்டர் செய்யக் கூடாது' என்ற பெரிய ஆட்சேபணையை எழுப்பினார்கள். இந்த விவாதம்பற்றி பதில் சொல்லுகிறபோது பார்லிமெண்டில் இந்த பதில் கொடுக்கப்பட்டது.

" The resentment went to such an extent that they refused to perform their marriages under the *Shastra* and *Dharmik* rites . . ." அதாவது இந்தச் சீர்திருத்த திருமணம் பற்றி

3rd November 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

" And they said : This is really an exploitation of the Aryan, the Brahman, of the Dravidian population. For over twenty years they have performed marriages which consist merely of exchange of garlands and a meeting in which the significance of the marriage is explained and the need why they must cut away from the Aryan and *dharmic* forms. This is not a ceremony by any stretch of imagination . . ."

" I have to bring to the notice of the House that the Madras High Court declared these marriages as invalid."

அவர்கள் இந்த விதமான சடங்குகள் இல்லாத, அங்கிகரிக்கப்பட்டு இருக்கின்ற சடங்குகள் இல்லாத, திருமணங்களை சென்னை ஹைக் கோர்ட்டில் நிராகரித்துவிட்டார்கள். அதில், இதற்கு முன்னால் நடந்த திருமணங்களும், இந்த முறை அல்லாத விதத்தில் நடைபெற்ற திருமணங்களும் ரெஜிஸ்டர் செய்வதற்கான வழிவகை இருக்க வேண்டும் என்று வாதாடி ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்டில் 15-வது ஷரத்து சேர்க்கப்பட்டது.

இப்போது இருக்கிற நிலை என்னவென்று சொன்னால் சீர் திருத்தத் திருமணம், சுயமரியாதைத் திருமணம் என்று எந்த பெயரில் சொன்னாலும் தங்களுடைய திருமணத்தை ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட் மூலமாக ரெஜிஸ்தர் செய்து கொண்டால் அந்தத் திருமணம் சட்டபூர்வமானது என்று கொள்ளப்படும். ஆகவே இதனால் நஷ்டம் ஏற்பட்டுவிடும், கஷ்டங்கள் உண்டாகும் என்றும், சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகாமல் போய்விடும் என்றும் கவலைப்படுவதற்கு இடமில்லை. இதைத்தான் சென்ற முறை இதைப்பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்த போது சர்க்கார் தரப்பில் எடுத்துச் சொன்னோம். இந்தச் சட்டம் வந்ததின் காரணமாக, சென்னை சட்டசபையில் கொண்டு வந்த மசோதாவை வாபஸ் பெற்றோம். அப்போது இதே நிலையைத்தான் விளக்கிச் சொன்னோம், 'ஸ்பெஷல் மாரேஜ் ஆக்டில் அங்கிகரிக்கப்பட்ட முறைகளில் ஏதாவது ஒரு முறையில் திருமணம் நடந்திருந்தால், அதை ரெஜிஸ்டர் செய்து கொள்வதற்கும், சட்டபூர்வமாக ஆக்குவதற்கும் உரிய வழிகள் எல்லாம் சட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே புதிய சட்டம் தேவையில்லை' என்று சொன்னோம். இப்போது சொல்லுவது, எந்தத் திருமணத்தையும் சட்டபூர்வமாக செல்லுபடியாக்க வேண்டும் என்றால், அதற்கும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட முறை, அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட முறை இருக்க வேண்டும். சுயமரியாதைத் திருமணம் அல்லது சீர் திருத்தத் திருமணம் என்று சொன்னால் இன்னின்ன விதமான முறை என்பதற்கு இப்போது இடமில்லை. பிரம்மோ மாரேஜ்களில், பிரம்ம சமாஜ் நடத்துகின்ற திருமணங்களில், ஒரு முறை இருக்கிறது. அந்த முறை சட்டப்படி செல்லுபடியாகும், அல்லது வேதிக் மாரேஜ் முறைகள் இருக்கின்றன, அவைகளும் செல்லுபடியாகும். அப்படியில்லையென்றால், ஸ்பெஷல் மாரேஜ் ஆக்டில் ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது; அந்த முறையும் செல்லுபடியாகும். இன்றைக்கு சுயமரியாதைத் திருமணம் என்று சொல்லும்போது, அதற்கென்று ஒரு முறை வகுக்கப்படவில்லை.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd November 1966

பல முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மாலை மாற்றுவது, மோதிரம் மாற்றுவது, பிரசங்கம் செய்வது என்கின்ற பல முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இதை யெல்லாம் பரிசீலித்து, சமூக சீர்திருத்தத் திருமணம் அல்லது சுய மரியாதைத் திருமணம் என்றால் இதுதான் முறை என்று ஒரு முறை வகுத்துக் கொண்டு சொன்னால், அல்லது இதுதான் எங்களுடைய முறை என்று சொன்னால், அதன் அடிப்படையில் ஒரு சட்டம் கொண்டு வந்தால்கூட, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாவது ஏற்படக்கூடும். அதற்கு மாறாக இன்னின்ன முறையில் நடந்தது என்பதையும் தெரிவிக்காமல் எந்த விதமான முறையிலும் இல்லாமல், அங்கீகரிக்கப்பட்ட முறையிலும் இல்லாமல் பொதுவாக சுயமரியாதை திருமணங்கள் எல்லாம் சட்ட பூர்வமாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், திருமணத்தில் உயர்ந்த லட்சியங்கள் இருக்கின்றன என்று நினைக்கின்றவர்கள், திருமணம் என்பது வரம்பிற்குட்பட்டு, ஒருவருக்கொருவர் பிற்கால வாழ்க்கையில் பிரியாது இருக்கக்கூடிய வகையில்—வாழ்க்கையில் ஈடுபடுகின்ற அரியதொரு சடங்கு என்று நினைக்கின்றவர்கள்—இத்தகைய ஒரு வாழ்க்கைக்காக கணவன் மனைவி இருவரும் சத்தியம் செய்து கொள்ளுகிறார்கள் என்று நினைக்கின்ற கொள்கையுடையவர்கள்—நிச்சயமாக நான் முன்னால் குறிப்பிட்டதை ஏற்றுக்கொள்வதற்குத் தயங்குவார்கள். ஏதாவது ஒரு முறை—இது தான் சீர்திருத்தத் திருமண முறை என்று சொன்னால் இப்படிச் செய்து கொண்டால் சீர்திருத்தத் திருமண முறை என்று சொன்னால், அதை சட்டபூர்வமாக ஆக்குவதற்கு நல்ல முறையில் அமையும்.

ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட் செக்ஷன் 15-வது பிரகாரம் இப்படிப்பட்ட திருமணங்களை ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம் என்று சொன்னேன். ஆனால், அதில் சில விளைவுகள் இருக்கின்றன. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சட்டம் படிக்காவிட்டாலும் அதை வெகு விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.. ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டின்கீழ் ரெஜிஸ்டர் செய்து கொள்கின்றவர்கள் அடைகின்ற சொத்துரிமை இந்து ஸக்ஸஷன் ஆக்ட்-க்கு மாறுபட்டதாக இருக்கின்றது. இந்து ஸக்ஸஷன் ஆக்டில் இன்றைக்கு ஆணுக்கு ஒரு பகுதி, பெண்ணுக்கு அரைப் பகுதி, தன்னுடைய மனைவிக்கு இவ்வளவு என்று வகுத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டின் கீழ் ரெஜிஸ்டர் செய்து கொள்கின்றவர்கள் சொத்துரிமை கேட்கிறபோது, மனைவிக்கு மூன்றில் ஒரு பங்கு, எஞ்சியுள்ளதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாகம் என்று இருக்கின்றது. சீர்திருத்தம் வேண்டும் என்று திருமணம் செய்து கொள்கின்றவர்கள் சீர்திருத்தமான வாரிசு உரிமையும் வேண்டும் என்றுதான் விரும்புவார்கள் என்று நினைக்கிறேன். ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டின்கீழ் ரெஜிஸ்டர் செய்து கொள்கின்றவர்கள் முற்போக்கான எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள், அவர்களுக்கு முற்போக்கான முறையில்தான் வாரிசு உரிமை இருக்க வேண்டும் என்கின்ற நியாயமான முறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரியான முறையில் சொத்

3rd November 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

துரிமை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதிலும் பெண்களுக்கு அரை பாகம் இருக்க வேண்டும் என்று கேட்க முடியாது. இவ்விதமாகத்தான் நல்லமுறையில் 15-வது செக்ஷன் ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் முற்போக்கான வாரிசு உரிமைகளையும் அடைய முடியும். ஆகவே தான் இதைப்பற்றி பார்லிமெண்டில் விவாதம் நடந்த காலத்தில் கூட பெரிய சர்ச்சை எழுந்தது. அதையெல்லாம் படித்தால் இதிலுள்ள விவாதங்களை எல்லாம் அறிந்து கொள்ள முடிகிறது. அதில் இந்த விஷயத்தைப்பற்றி கூறுகின்ற பொழுது யார் ஒருவர் சீர்திருத்த முறையில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்கள் ஸ்பெஷல் மேரேஜ் ஆக்டின்கீழ் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றார்கள். சீர்திருத்தம் இருக்க வேண்டும் என்பதை வெளியில் ஏற்றுக் கொண்டுவிட்டால், அதற்குரிய வாரிசு உரிமையும் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். அப்படியில்லை என்று சொன்னால் புராதன சம்பிரதாயப்படி தங்கள் திருமணத்தைச் செய்து கொள்ள வேண்டும். நாங்கள் சீர்திருத்த முறையில் திருமணம் செய்து கொள்வோம், ஆனால் சம்பிரதாய முறையில் வாரிசு உரிமை இருக்க வேண்டும் என்று சொல்வது பொருத்தமாக இராது என்று அப்போது நடந்த விவாதத்தில் பதில் அளித்திருக்கிறார்கள் . . .

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இந்த ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டின் 15-வது பிரிவின்படி, 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால் சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டாலும், அதை இப்போது பதிவு செய்து கொள்வதாக இருந்தால், இதிலுள்ள வாரிசு உரிமை இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும், இதை ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டின்கீழ் இப்போதும் ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம். ரெஜிஸ்டர் செய்து கொள்கின்ற நாளிலிருந்து வாரிசு உரிமை ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டின் படிதான் வரும். அதற்காகத்தான் இந்த விதி போடப்பட்டது. ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற சட்டம் போதுமானது, இதில் எல்லாவிதமான பாதுகாப்புகளும் இருக்கின்றன. திருமணங்கள் என்று சொல்லும்போது, அதற்கென்று ஒரு முறை வந்துவிட்டால் பல திருமணங்கள் செல்லுபடியாகாது இருக்கின்ற நிலை ஏற்படாது. ஆகவேதான் இந்த மசோதா அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

இன்னும்கூட ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த விதமாக சீர்திருத்த திருமணம் செய்து கொண்டு, ரெஜிஸ்டரும் செய்துகொண்டு, சம்பிரதாய முறைப்படி வாரிசு உரிமையும் வேண்டும் என்று விரும்பினால் ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட்தான் திருத்தப்பட வேண்டுமே தவிர நம்முடைய சட்டத்தைத் திருத்த முடியாது. சீர்திருத்தத் திருமணத்தை ஸ்பெஷல் மாரியேஜ்

ஆக்டின் படி ரெஜிஸ்டர் செய்து கொண்டு விட்டால், ஸ்பெஷல் மாரி யேஜ் ஆக்டின் படிதான் வாரிசு உரிமைகள் வரும். அதை மாற்ற வேண்டும் என்று சொன்னல் ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்டைத்தான் மாற்ற வேண்டும். இப்போதுள்ள ஷரத்துப்படி ரெஜிஸ்டர் செய்து கொண்டாலும் சம்பிரதாய முறைப்படி வாரிசு உரிமை வேண்டும் என்று சொன்னல் அதற்குத் தகுந்த முறையில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். இதற்கான திருத்தத்தை பார்லிமெண்டில் கொண்டுவந்தால், அதை இந்த நாட்டிலுள்ளவர்கள் பெரும் பாலோர் ஒத்துக்கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. பெரு வாரியான அளவுக்கு எதிர்ப்புத்தான் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இன்றைக்குள்ள நிலைமையில் இந்த மசோதா அவசியமில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இப்போது இருக்கின்ற சட்டங்களின்படி—பதிவு செய்து கொள்வ தாக இருந்தால் எந்தத் திருமணத்தையும் சட்ட பூர்வமாக மறுக்க முடியாது. எதுவும் 'இல்லீகல்' என்ற நிலைமை ஏற்படாது. ஆனல், முறைப்படி ஏதாவது ஒரு வழியில் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். ஆகவே தான் இந்த மசோதா அவசியமில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கனம் மாதவன் அவர்கள் சொல்லும்போது, இந்து மாரியேஜ் ஆக்ட்டில், 8-வது ஷரத்தில் ரெஜிஸ்டர் செய்து கொள் வதற்கு உரிமை இருக்கிறது. அதை ராஜ்ய சர்க்கார், விதிகளின் மூலம் மாற்றி ராஜ்யத்தில் அமல் நடத்த முடியும் என்று சொன்னர் கள். அது உண்மை தான். அதை எந்த விதத்தில் ரெஜிஸ்டர் செய்து கொள்ள முடியும் என்று பார்க்கும் போது, 7-வது ஷரத்தின் கீழ் இந்து மத சம்பிரதாயப்படி திருமணம் செய்து கொண்டால், அதை 8-வது பிரிவின்கீழ் ரெஜிஸ்டர் செய்து கொள்ள முடியும் என்றிருக்கிறது. ஆகவே இதில் வேறு விதிகள் போட்டு சீர்திருத்த திருமணத்தை ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும் என்று
11-30 கொண்டு வந்தால் கூட, இப்போது இருக்கின்ற சட்ட முறையில்—
a.m. இந்த விதமான சீர்திருத்தத் திருமணத்தையும் ரெஜிஸ்டர் செய்து கொள்ள முடியாது. ஆகவே இந்த மசோதாவுக்கு அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவி னுடைய நோக்கத்தைப்பற்றி நான் முன்னரே விளக்கினேன். சுயமரியாதை இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றியோ, ஆரியக் கலாச்சாரப் போராட்டம் என்பதைப் பற்றியோ கவலைப் படாமல் சட்டப் பிரச்னையை விளக்கினேன். அவர்கள் கொடுத்த பதில், சீர்திருத்தத்தை விரும்புகிறவர்கள் ஸ்க்ஸெஷன் ஆக்டிலும் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னது, எதிர்வாதமாக இருக்கலாமே தவிர, நாட்டில் பலருக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைப்பதாக இருக்காது. ஸ்பெஷல் மாரேஜஸ் ஆக்ட்டில் மூன்று செக்ஷன்கள், 19, 20, 21 ஆகியவைகள், கான்ஸிக் வென்ஸஸ் ஆஃப் மாரேஜஸ் அண்டர் திஸ் ஆக்ட், ஸக்செஷன் மட்டுமல்ல, கான்ஸிக்வென்ஸ், பல விளைவுகள் ஏற்படுகின்றன. டைவோர்ஸ், ரெஸ்டிட்யூஷன் ஆஃப் கான்ஜுகல் ரைட்ஸ்,

3rd November 1966] [செ. மாதவன்]

ஜுடிஷியல் ஸெபரேஷன் போன்ற பல விளைவுகள் இருக்கின்றன. ஸக்ஸெஷன் மட்டும் தான் இருக்கிறது, ஆகவே வேண்டாம் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்காது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஏராளமான செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு சம்பளம் பெற்று வேலை செய்யக் கூடிய ஒரு நிலைமை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் அன் ட்ரெயின்டு ஆசிரியர்களும் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக் கிறது. இம்மாதிரி நிலைமை பல பகுதிகளில் இருக்கிறது. இதை யெல்லாம் அரசாங்கம் கவனித்து அந்தப் பகுதிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு வழிவகை செய்வது பற்றி யோசிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பள்ளிகளில் எத்தனை செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்று விதிக்கப் பட்டிருக்கிறது. அந்த அளவுக்குப் பணியாற்றுகிறவர்களுக்கு அதற்குத் தகுந்த சம்பள விகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

4th November 1966]

மேலும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வைத்துக்கொள்வதற்கு ஒரு லட்சியமும் இருக்கிறது. எந்த அளவுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு மேலே செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஒரு பள்ளியில் பணியாற்றுகிறார்கள் என்றால், அவர்களுக்கு ஏற்கனவே உள்ள சம்பளவிகிதம்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒருசில இடங்களில் பயிற்சி பெறாத ஆசிரியர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அந்த இடங்களுக்கு அத்தகைய ஆசிரியர்கள் போவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இதெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கிற தகவல்படி 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர்கிரேடு ஆசிரியர்களாக பணி செய்யக் கூடிய நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைக்கு இணங்க மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்றால், ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்ஸ், எலிமெண்டரி ஸ்கூல்ஸ் உள்பட எல்லாப் பள்ளிகளிலும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வகுப்புதோறும் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

*** 385. கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் நீண்டகாலமாக பணியாற்றிவரும் நெசவு ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) They were not fully qualified for regular appointment.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி எத்தனை ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் ? எத்தனை ஆண்டுகளாக இருக்கிறார்கள் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். ஆனால், போதிய தகுதி இல்லை என்றால், அவர்களை நிரந்தரம் ஆக்குவது சரியல்ல என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

[4th November 1966

*386 கேள்வி.—திரு. எ. சுவாமிதாஸ் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசாங்க, தனியார் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களாக வேலை பார்க்கிறவர்களுக்கு இதர மாவட்டங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு கொடுக்கும் சம்பளம் கொடுக்கப்படாததற்குக் காரணம் யாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

Government High Schools

There is no difference in the scales of pay of the non-gazetted posts of Headmasters in Government High Schools in the Kanyakumari district and in the other districts of this State.

Aided High Schools

The posts of Headmasters in Aided High Schools (complete or incomplete) in this State (except those in the transferred areas) carry the scale of Rs. 225—15—375 without Headmasters' allowance. The scales of pay of the Headmasters of completed (acceded) High Schools in Kanyakumari district is Rs. 225—10—275—15—350 plus the usual Headmasters' allowance, viz., Rs. 20 or Rs. 30 per mensem according as the strength of the institution is less than 600 or 600 and above.

It may be seen from the above particulars that the Headmasters of non Government High Schools in the transferred areas are eligible for more favourable terms than those in the other districts of Madras State.

SRI A. KUNJAN NADAR: Are the Headmasters in Kanyakumari district governed by the P.S.S. Scheme or the Madras Educational Rules?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I would like to have separate notice.

வளரும் மாதச் சேமிப்பு

*387 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிப்பு மன்றத்தைச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட திரண்டகால ஒன்று சேர்ப்புகள் Cumulative Time Deposits) கணக்கு சரியாக இல்லாதது குறித்து பஞ்சாயத்து வளர்ச்சி நேர் உதவியாளரின் அறிக்கை ஏதேனும் பெறப் பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

முதியோர் உதவித்தொகை

*388 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ல் சென்னை மாநகரில் முதியோர் உதவித் தொகை பெற்றோர் எத்தனை பேர்?

(இ) மாநில முழுவதும் 1965-ல் மேற்படி உதவித்தொகை பெற்றோர் எத்தனை பேர்?

(உ) 1964-ல் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது? 1965-ல் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 1,325 as on 1st December 1965.

(b) 41,197 as on 1st December 1965.

(c) Rs. 1,17,37,200 and Rs. 1,09,13,400.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், 1964-ம் ஆண்டில் கிட்டத்தட்ட ஒன்றேகால் கோடி ரூபாய் முதியோர் பென்ஷனைக் கொடுத்து, அது அடுத்த ஆண்டில் குறைந்து ரூ. 1,09,00,000 ஆக வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி குறைந்துபோனதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு ஆண்டில் முதியோர் பென்ஷன் பெறுகிறவர் மறு ஆண்டில் இல்லாமல் இருக்கலாம், மறைந்திருக்கலாம். புதியவர்களும் சேர்க்கப்படுகிறார்கள்; அப்படிச் சேர்க்கும்போது பரிசீலனை செய்து சேர்க்க வேண்டும். அந்த ஆண்டில் சேர்க்கப்பட்டவர்களைவிட மறைந்தவர்கள் அதிகமாக இருந்திருக்கலாம். யார் யார் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டுமோ அப்படிப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டுக்கொண்டுதான் வருகிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: சார், முதியோர் பென்ஷன் கோரி வரும் மனுக்கள் பேரில் உடனுக்குடன் உத்தரவு போடப்படுவதில்லை. ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகள் கூட ஆகிவிடுகின்றன. முதியோர் இறந்து கூடப் போய்விடுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து வழங்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பரிசீலனையில் தாமதம் ஒன்றும் இல்லை. சில சமயங்களில் தவறுகள் நடந்துவிடுகின்றன, நடந்திருக்கின்றன. அதனால் அதிகாரிகள் தங்கள் மீது குற்றம் சுமத்தப்படக்கூடாது என்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருக்கிறது, தாமதம் இருக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் 1,325 பேர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்கள் என்று அறிவிக்கலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வை. சங்கரன் : காலதாமதத்தைத் தவிர்க்க அப்ளிகேஷன் வந்த மூன்று மாதத்திற்குள் அதை டிஸ்போஸ் செய்யவேண்டும் என்ற ஒரு நியதியை அல்லது விதியை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மூன்று மாத வரம்பு என்று விதித்தாலும், அதற்குள்ளே போதிய தகவல் தெரியவில்லை என்றால், சரியாக பரிசிலனை செய்ய வேண்டிய காலம் ஆகத்தான் செய்யும். பரிசிலனை இல்லாமலே எப்படியும் கொடுக்கவேண்டும் என்று சொல்வது சரியில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், மனுச் செய்கிறவர்கள் வயது சரியா என்று வோட்டர் லிஸ்டைப் பார்த்து சரி பார்க்க வேண்டியிருக்கிறது. அல்லது டாக்டர்களிடம் அனுப்பி பரீட்சை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதன்பிறகு சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதைத் தவிர்க்க, மனுச் செய்யும் போதே மனுவோடு டாக்டர் சர்டிபிகேட் அல்லது சப்-ரிஜிஸ்ட்ரார் சர்ட்டிபிகேட் வாங்கி அனுப்ப வேண்டும் என்று செய்து விட்டால் காலதாமதத்தை தவிர்க்க முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொருவரும் அவ்விதமாக சர்ட்டிபிகேட் வாங்கி அனுப்ப வேண்டும் என்று சொன்னால், அது அவர்களுக்குத் தொல்லையாக இருக்கும். அதோடு எல்லோருக்கும் அதற்கு அவசியம் இருக்காது. ஆகவே, மனுக் கொடுக்கும்போதே சர்ட்டிபிகேட் அனுப்ப வேண்டும் என்று சொல்வது அவர்களுக்கு நல்லதல்ல.

திரு. சா. கணேசன் : இந்திய சர்க்காரிலே சம்பந்தப்பட்டவர்கள் கூறுவதிலிருந்து இந்த முதியோர் பென்ஷன் கொடுப்பதில் அக்கறை இல்லாதது போன்ற செய்தி வெளியாகியிருக்கிறது. அந்த அந்த மாநிலங்களிலேயே செய்துகொள்ள வேண்டும் என்பது போலவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நம் மாநிலம் இதைத் தொடர்ந்து நடத்தவும் இன்னும் தகுதியுள்ளவர்களுக்கு, முதியோர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவும் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்று காலையில் கூட இந்த முதியோர் திட்டத்தில் மத்திய சர்க்காருக்கு உள்ள அக்கறை பற்றிய செய்தி வந்திருந்ததை பார்த்திருக்கலாம். மேலும்,

4th November 1966]

மத்திய சர்க்காருடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாமலேயே இந்த அரசாங்கமே, தாமாகவே, முதியோர் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்தது, நிறைவேற்றி வருகிறது, தொடர்ந்து நிறைவேற்றும்.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது இருக்கும் திட்டப்படி, விதிப் படி, வயது வந்த பிள்ளைகள் இருந்தால், அவர்களுக்குக் கிடையாது என்றிருக்கிறது. சில சமயங்களில் பிள்ளைகளுக்கு பயித்தியம் பிடித்திருக்கலாம், அல்லது அந்தப் பிள்ளைகளால் 'டெஸர்ட்' செய்யப்பட்டிருக்கலாம், ஓடிப்போயிருக்கலாம். அதுபோன்ற கேசுகளை 'எக்ஸெப்ஷனல்' கேசுகளாகப் பாவித்து, விதியைத் தளர்த்தி பரிசீலனை செய்து கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது போன்று இருக்கும் கேஸ் களை கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினால், மேலும் விதியைத் தளர்த்த வேண்டுமா என்பதையெல்லாம் கவனிக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, 1965-ம் ஆண்டு ஒரு கோடி ஐம்பது லட்சம் வரை முதியோர் களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தொகை முழுவதும் மாநில சர்க்காரே ஏற்றுக்கொண்டதா அல்லது அதிலே மத்திய சர்க்காருடைய மானியமும் உண்டா என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டம் மாநில அரசாங்கமே நிறைவேற்றிய திட்டம். இது திட்டத்திற்கு— ஐந்தாண்டுத் திட்டம் ப்ளானுக்கு உட்பட்டது. ஆனால், இந்த அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நிறைவேற்றும் திட்டம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போதுள்ள வயது வரம்பு 60; அங்கஹீனமானவர்களுக்கு அப்படிப்பட்ட வரம்பில்லாமல், தகுதி யுள்ளவர்களுக்கெல்லாம் கொடுக்க யோசனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாவட்ட நீதிபதிகள்

*389 **கேள்வி—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட நீதிபதிகளில் எத்தனை பேர் ஓய்வு பெற்ற பின்பும் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் வேலை பார்த்து வருகின்றார்கள்?

(இ) அவர்களது பதவிக்காலம், ஓய்வு பெற்ற தேதியிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Ten, Sir.

(b) Normally, till they attain the age of 58.

திரு. செ. மாதவன் : சார், ஓய்வுபெற்ற பிறகு வயது வரம்பிற்கு மேலும் ஆண்டுதோறும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 58 வயது வரை ஆண்டுதோறும் இப்படிக் கொடுத்தால், அதுவும் ஜூடிஷியல் சர்வீசில் உள்ள ஒருவருக்குக் கொடுத்தால், அது நீதியில் குறுக்கிடுவது என்று ஆகாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதையெல்லாம் ஹைக்கோர்ட்டு சிபாரிசின் பேரில் அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நீதிபதிகள் போலவே, துணை நீதிபதிகளுக்கும் வயதை உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

Allowance to student-trainees

* 390 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of allowance granted now to the student-trainees in Teachers' Basic Training Institutions; and

(*b*) whether the Government will consider increasing the present allowance to Backward and other community students to Rs. 25 per month?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 18 per mensem each.

(*b*) No.

விசைத்தறிகள்

** 391 கேள்வி.—***திரு. து. ப. அழகமுத்து :** *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) நமது மாநிலத்தில் மத்திய சர்க்காரால் விசைத்தறிகளுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், எத்தனை விசைத்தறிகளுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

(உ) அவைகளில் எத்தனை தறிகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) 6,921 விசைத்தறிகள் இம்மாநிலத்தில் அமைப்பதற்கு நூற்பு நெசவு ஆணையாளர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கியுள்ளார்.

(உ) தமிழ்நாடு மின்சார போர்டு 5,229 விசைத்தறிகளுக்கு மின்சார இணைப்பு அனுமதித்திருக்கிறது.

4th November 1966]

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த மின்சார இணைப்பு வழங்குவதில், மாநில சர்க்காருடைய கொள்கைக்கு விரோதமாக இருந்தால், இணைப்பு மறுக்கப்படுவதாகக் கூறப்படு கிறது. அது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்த விசைத்தறிகளுக்கு மின்சாரம் கொடுப்பது என்று விதி போட்டோம் ஆனால், அந்த விதி செல்லாது என்று ஹைகோர்ட்டு சொல்லிவிட்டார்கள். ஆகவே, அந்த விதியை ரத்து செய்து விட்டோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினரால் 6,921 விசைத் தறிகள் இம் மாநிலத்தில் வைப் பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றும், அவற்றில் 5,229 விசைத்தறிகளுக்கு மின்சார இணைப்பு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது என்றும் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் கள். இது இந்த அளவோடு நிறுத்தப்படுகிற அளவிற்கா? அல்லது மேற்கொண்டும் வழங்கப்படுகிற அளவிற்கு எதிர்பார்க்கப்படு கிறதா ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 12,500 விசைத்தறிகள் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட் டிருக்கின்றன. அவற்றையும் கொடுப்பதாக உத்தேசம் இருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : விசைத்தறிகளுக்குத் தாராளமாக லைசென்ஸ் வழங்கப்படுவதால் கைத்தறி நெசவாளிகள் பாதிக்கப் படுகிறார்கள் என்ற கருத்தை இந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ளு கிறதா ? அப்படி விநியோகம் செய்யும் நேரத்தில் கைத்தறி நெசவில் ஈடுபட்டிருக்கும் குடும்பத்தாருக்கு மின்விசைத்தறிகளுக் கான லைசென்ஸ் வழங்கப்படும் என்ற கருத்தை ஒப்புக்கொள்ளு கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், தமிழ்நாட்டு அரசாங்கம் விசைத்தறியைப் புகுத்த வேண்டாம் என்று கடுமையாக எதிர்த்தது. ஆனால், மற்ற மாநிலங்களில் விசைத் தறிகளை அவர்கள் அனுமதி பெற்றும் பெறாமலும் ஏராளமாக வைத்துக் கொண்டு போகிற காரணத்தால், பிற மாநிலங்களில் உற்பத்தி யாகும் விசைத்தறித் துணிகள் நம்முடைய ராஜ்யத்தில் விற்பனைக்கு வர ஆரம்பித்தது. இதை உணர்ந்த கைத்தறி நெசவாளிகள் தங்களுடைய சம்மேளனங்கள் மூலமாக, விசைத் தறிகள் தமிழ்நாட்டுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று அவர் களே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையொட்டித்தான் இப்பொழுது கொள்கை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 30 லட்சம் பேர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப் பொழுது விசைத்தறிகளுக்கு அனுமதி கொடுத்ததன் காரணமாக,

[4th November 1966

ஏற்கனவே கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்த நெசவாளிகளில் எத்தனை லட்சம் பேர்கள் வேலை இழப்பார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேலை இழக்கமாட்டார்கள் என்று தான் நம்புகிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : நம்முடைய மாநிலத்தில் அனுமதி பெறாத விசைத்தறிகள் அதிகமாக இருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சற்றேறக்குறைய 4,000 இருக்கின்றன.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் 102 கூட்டுறவு சங்கங்களை இணைக்கும் நன்னிலம் கூட்டுறவு சங்க யூனியன் விசைத்தறிகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறது. அதன் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உததேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த 12,500 விசைத் தறிகளில் 50 சத விகிதத்தைக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்குவதாக சர்க்கார் உத்தேசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கைத்தறிகள் இருக்கக்கூடிய இடங்களில் விசைத் தறிகளைப் புகுத்த சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த நிலையில் கைத்தறியாளர்கள் இந்த விசைத்தறிகளைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வைத்தால் அனுமதி கொடுக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் இப்பொழுது சொன்னேன். நம்முடைய ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்ட விசைத் தறிகளில் பாதி பங்கு கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுப்பதாக உத்தேசம் இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : விசைத்தறியால் கைத்தறி பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதையாவது அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் ஒத்துக்கொள்ளுகிறேனு, இல்லையா என்பது ஒருபுறமிருக்க ; விசைத்தறியே வேண்டாமென்று இது வரையிலும் சொல்லிக்கொண்டிருந்த கைத்தறியாளர்களே தங்களுடைய கருத்தை மாற்றிக்கொண்டு விட்டார்கள்.

திரு. எஸ். முருகையன் : லைசென்ஸ் பெறாத விசைத் தறிகளுக்கு மின்சார இணைப்பு எப்படிக் கொடுக்கப்பட்டது ? லைசென்ஸ் பெறாத விசைத் தறிகள் 4,000 இருப்பதாக அமைச்சர் அவர்கள்

4th November 1966]

சொன்னார்கள். லைசென்ஸ் பெறாத தறிகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கக் கூடாது என்று மத்திய சர்க்கார் சட்டம் ஏற்கனவே இருந்தும் கூட, நாலாயிரம் தறிகளுக்கு எப்படி மின்சாரம் இணைப்புக் கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினரை என்னுடைய சார்பில் வக்கீலாக வைத்துக்கொள்ளத் தவறிவிட்டது தான் காரணம் என்று நினைக்கிறேன். இதே கருத்தை ராஜ்ய சர்க்கார் வலியுறுத்தியது. அனுமதி பெறாத விசைத் தறிகளுக்கு மின்சாரம் கொடுக்கத் தேவையில்லை என்று நாங்கள் வாதாடினோம் ஆனால், கோர்ட்டிலே—உயர்நீதி மன்றத்திலே—" லைசென்ஸ் பெறுவதற்கும் மின்சாரம் வழங்குவதற்கும் சம்பந்தம் இல்லை, லைசென்ஸ் பெறாதவர்களுக்கு மின்சாரம் வழங்கக்கூடாது என்று சொல்வதற்குச் சர்க்காருக்கு அதிகாரம் இல்லை" என்று சொல்லி விட்டார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கூட்டுறவு சங்கங்களுக்குப் பாதிப் பங்கு விசைத்தறிகள் கொடுத்தது போக, மீதமுள்ள பாதியை எந்த எந்த அளவிற்கு, யார் யாருக்கு விநியோகிப்பதாக அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது ? முழு அளவிலே உபயோகப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எப்போதும் எனக்கு நம்பிக்கை உண்டு. அதைப்பற்றிக் கனம் உறுப்பினருக்கு எந்தச் சந்தேகமும் தேவை இல்லை. விசைத்தறிகளில் பாதி கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மறு பாதி இருப்பதை சாயப் பட்டரை வைத்திருப்பவர்கள், நூல் விநியோகம் செய்கிறவர்கள் போன்று கைத்தறியையொட்டிய இந்த விதமான தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை மாவட்டத்தில் 103 கைத்தறி சொஸைட்டிகள் இருந்தன. விசைத்தறிக்கு லைசென்ஸ் கொடுப்பதன் காரணமாக அவற்றில் 33 சொஸைட்டிகள் கலைக்கப் பட்டு 70 சொஸைட்டிகளே பாக்கி இருக்கின்றன என்பதாவது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் அதைக் கவனிக்கிறேன்.

Handloom Weavers' Co-operative Societies

* 392 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government are aware of the change that the Reserve Bank of India has effected in its scheme for affording credit facilities for the working capital requirements of Co-operative Handloom Societies and the consequent adverse repurcussion on the said societies as a result thereof?

[4th November 1966

THE HON. SRI R. VENKATARAMAN : The scheme has been introduced with effect from 1st April 1966. It is too early to decide whether the revised scheme has had adverse repercussion on the weavers' co-operative societies. Sir, I wish to add that after this answer was approved, I have received a number of representations that the credit policy of the Reserve Bank has adversely affected the handloom co-operatives.

திரு. வை. சங்கரன் : முன்னால் இருந்த இந்தத் திட்டத்தின் விதிமுறைகள் எவ்வாறு இருந்தன ? இப்பொழுது என்ன மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்கீமே வேண்டும் என்று சொன்னால் அதற்குத் தனியாக மேசை மேல் அறிக்கை வைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். குறிப்பாக ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, on the whole, the assistance and also the credit given to the handloom weavers' co-operative societies, as it stands, are being channelized through the co-operative institutions. Many of the societies that have availed of the loan assistance could not repay the loans on the ground that they could not keep stocks and there is also no cover for the money given by the co-operatives. So, may I know whether the Government will examine the entire position and see that the loan that is given to the handloom weavers' societies are repaid at least in a phased way?

THE HON. SRI R. VENKATARAMAN : There are two or three questions in this supplementary question. So far as the repayment of the loans taken by the weavers' societies to the Central Banks is concerned, the Government are taking adequate steps to see that the weavers' societies do repay them and if they do not repay them, they do not get credit facilities. So far as the credit facilities that are given by the State Bank to the Central Banks are concerned, the Reserve Bank has introduced a number of restrictions and they are being examined by the Government.

திரு. கரு. சீமைச்சாமி : கடன் வசதிகள் லூம் அடிப்படையில் கொடுக்கப்படும்போது, ஸில்க் லூம்களுக்குக் கடன் கொடுப்பதற்கு கைத்தறி போர்டு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே "மேற்கொண்டு ஒரு விவரம் கொடுக்க விரும்புகிறேன்" என்று சொல்லி, "இந்தக் கேள்விக்குப் பதில் 'அப்ரூப்' ஆன பிறகு, பல ரெப்ரஸென்டேஷன்கள் சர்க்காருக்கு வந்திருக்கின்றன, அதில் இப்பொழுது இருக்கிற 'க்ரெடிட் பாலிஸி' கூட்டுறவு சங்கங்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள், அதை நாங்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்" என்று தெரிவித்தேன்.

4th November 1966]

திரு. வை. சங்கரன்: புதிதாக விதித்துள்ள நிபந்தனைகள் என்னென்ன என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: It is a long list. As I have stated just now, if the hon. Member puts a particular question I would even place it on the table of the House. I cannot read a huge list.

**393 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்:* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம், அம்மாபேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில் நடைபெற்றுவரும் ஊழல்பற்றி அந்த சங்க உறுப்பினர்களிடமிருந்து புகார் ஏதேனும் அண்மையில் வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம். 1966 ஏப்ரலில் புகார் ஒன்று வந்தது.

(இ) சேலம் (கைத்தறி) தனித் துணைப் பதிவாளர் விசாரணை ஒன்றை நடத்தினர். பெரும்பாலான குற்றச்சாட்டுகள் பொய்யானவை அல்லது அற்பமானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. வாலாயமான குறைபாடுகளை நீக்குமாறு தனித் துணைப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் அலுவல்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல்: சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அற்பமானவையாகவோ அல்லது உண்மைக்கு மாறானவையாகவோ இருந்திருக்கலாம். ஆனல், வாலாயமான குறைபாடுகள் என்று சொல்லப்படுகிற அந்தக் குற்றச்சாட்டுகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை? அற்பமானவையா அல்லது ஆதாரபூர்வமானவையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நடைமுறையில் சில குறைபாடுகள், தவறுகள் இருக்கலாம். விதிகளையொட்டி நடத்தவில்லை அல்லது காலத்திற்குள்ளாக ரிடர்ன் அனுப்பவில்லை என்பன போன்ற அந்த வாலாயமான குற்றச்சாட்டுகளைப் பொறுத்த வரையில், அவற்றை உடனடியாகத் திருத்தியனுப்ப வேண்டும் என்று சர்க்கார் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறது. அவையெல்லாம் உண்மையாக இருக்கிற காரணத்தினுல் தானே அவற்றை திருத்த வேண்டும் என்று சொல்லமுடியும்?

திரு. வி. எஸ். எஸ். மணி: கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுப்பதற்குப் பதிலாக ஹாண்ட்லூம் ஃபினான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் நெசவாளிகளுக்கு கொடுக்கப்படும் என்று விதி ஏற்பட்டால் கூட்டுறவு சங்கத்தில் ஏற்படக்கூடிய . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினருடைய இந்தக் கேள்வி மூலக் கேள்வியையொட்டி எழக்கூடிய கேள்வி அல்ல.

[4th November 1966

SRI V. S. S. MANI : Sir, this is an allied question.

MR. SPEAKER : But the main question relates to a particular complaint.

திரு. சா. கணேசன் : இந்தச் சங்கத்தின் மீது சில குற்றச் சாட்டுகள் வந்தன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவை சிறியதும், அற்பமானதும் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மிகப் பெரும் பணம் இதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது? அப்படி வந்த நஷ்டமும் சட்டப்படி, விதிமுறைப்படி வந்ததுதானா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நஷ்டம் வந்ததாக சர்க்காரிடத்தில் புகார் எதுவும் வரவில்லை.

திரு. எம். எஸ். மணி : அந்தச் சங்க உறுப்பினர்களிடம் இருந்து ஊழல் குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்ன என்கிற தகவல் என்னிடத்தில் இல்லை. கனம் அங்கத்தினரிடத்தில் இருந்தால் அதை எனக்கு எழுதி அனுப்பலாம். சர்க்கார் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. எஸ். முருகையன் : இந்தக் கூட்டுறவு சங்கத்தில்தான் அமைச்சர் பெயரிலேயே தப்பான கணக்கை எழுதிக் காட்டியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக விசாரணைகள் செய்யப்பட்டனவா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது ஒரு சிறிய தவறுதான் அமைச்சர் பெயரில் விற்கப்பட்டதாக எழுதியிருக்கிறது. அதுவும் கடனைக் கொடுத்ததாகத் தெரிகிறது. இதில் மந்திரிகளால் தப்பு ஏற்படவில்லை. மந்திரிகள் கூட்டுறவுச் சங்கங்களிலேயே வாங்கக் கூடாது என்று இல்லை. ஆக இதில் தவறு இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* 394 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** } கனம் கைத்தொழில்
திரு. வை. சங்கரன் : }

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் 'வண்ணம் மாறும்' துணிகள், கைக்குட்டைகள் ஆகியவைகளை அதிகமாக ஏற்றுமதி செய்ய முயற்சிகள் ஏதேனும் அண்மையில் பரிசீலிக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

4th November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) வண்ணம் மாறும் கைத்தறித் துணிகளுக்கு (Bleeding Madras) அமெரிக்கச் சந்தையில் இருந்த தேவையை மீண்டும் புதுப்பிக்கவும், மேற்கு ஐரோப்பாவில் புதுப்புது மார்க்கெட்டுகளில் இத்தகைய துணிகளின் விற்பனைக்கு வழிவகை காணவும், ஐந்து பேர் அடங்கிய தூதுக்குழு ஒன்றை இந்திய அரசு அனுப்பியது. வண்ணம் மாறும் கைத்தறித் துணிகள் குறித்து புதியதொரு ஏற்றுமதிக் கொள்கையை இந்திய அரசு இக்குழுவின் பரிவுரைகளையொட்டி அறிவித்துள்ளது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய துணிகளுக்கு வெளிநாடுகளில் போட்டி அதிகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, வியாபாரம் பாதிக்கப்படாதிருக்க விலையைக் குறைத்துக்கொடுக்க பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டுத் துணி கைத்தறிகளில் நெய்யப்படுபவை. ஜப்பான், ஹாங்காங்கில் இருந்து வரக்கூடிய வண்ணம் மாறும் துணிகளைப் போல தோற்றக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டு வருபவை மில்லில் நெய்யக்கூடியவை. ஆகவே, கைத்தறித் துணிகளைவிட கணிசமான அளவில் விலை குறைவாக இருக்கும். அந்தத் துணிகளோடு நம் நாட்டுத் துணிகள் மார்க்கெட்டில் போட்டிப்போட்டுச் சமாளிக்க முடியாது. மில் துணி விலையை விட நம் நாட்டுக் கைத்தறித் துணிகள் விலை அதிகமாகத்தான் இருக்கும். இவை கைத்தறிகளில் நெய்யப்படுபவை, விசேஷமாக தயாரிக்கப்பட்டவை, நல்ல ரகம் என்பதை எல்லாம் எடுத்துக் காட்டுவதன் மூலமாகத்தான் மார்க்கெட்டில் ஊன்றிக்கொள்ள வேண்டும். விலைவாசி ஏற்றத் தாழ்வை எடுத்துக் காட்டி—இதுவரையிலும் நாம் ப்ளோர் ப்ரைஸ் என்பதாக குறைந்த பட்ச விலையை நிர்ணயித்து, சீலிங் ப்ரைஸ் என்பதாக உயர்ந்த பட்ச விலையையும் நிர்ணயித்துக்கொண்டிருந்தோம். அதை எடுத்துவிடவேண்டும் என்பதாக சர்க்கார் சிபார்சு செய்து, அதை மத்திய சர்க்காரும் எடுத்துவிட்டது.

திரு. வை. சங்கரன் : ஜப்பான் நாட்டில் இருந்து மட்டும்தான் போட்டி ரகத் துணிகள் வந்திருக்கின்றனவா ? அல்லது வேறு நாடுகளில் இருந்தும் வந்திருக்கின்றனவா ? அந்தத் துணிகள் விலை மிகவும் குறைந்திருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அமெரிக்காவில் இருந்தும் இமிடேஷன் மெட்ராஸ் ப்ளீடிங்—தோற்றம் மெட்ராஸ் ப்ளீடிங் ரகத் துணிபோல இருக்குமே தவிர, வண்ணம் மாறுது—என்பது தயாரிக்கப்படுகிறது.

திரு. எ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : ரூபாய் மதிப்புக் குறைந்திருப்பதினால் அயல்நாடுகளில் நம் நாட்டுத் துணிகளுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். இதுவரையில் ஏற்படவில்லை.

[4th November 1966

திரு. கரு. சீமைச்சாமி : நம்முடைய நாட்டில் இருந்து கைத்தறியில் தயாரிக்கப்படுகிற கைலிகள், ஹாண்டு கர்சீப்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது இல்லையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நீண்ட காலமாக ஆப்பிரிக்க நாட்டு மக்கள் நம் நாட்டு ஹெட் டைஸ், ஹாண்டு கர்சீப் ஆகியவை களை விரும்பி வாங்கி உபயோகித்துக்கொண்டு வந்தார்கள். ஆனல் அந்நாட்டு ஏற்றுமதியும் குறைந்துவிட்டது. அதற்குக் காரணம் அவர்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்கிருர்கள்.

புலவர் கா. கோவிந்தன் : தமிழ்நாட்டில் இருந்து சேலைகளை வாங்கிவரக்கூடாது என்று சிலோன் சர்க்கார் தடை உத்தரவு போட்டிருக்கிருர்களே, அதனல் நம் நாட்டுக் கைத்தறித் துணிகள் பாதிக்கப்படவில்லையா ? அதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுபற்றி அதிகார பூர்வ மான விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : இந்திய நாணயச் செலாவணி மதிப்பைக் குறைப்பதனல் நமது ஏற்றுமதி வர்த்தகம் வளரும் என்று எதிர் பார்த்தோம். ஆனல், ஏற்படவில்லை என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானல் விலையை பிற நாடு களும் நம்முடைய நாட்டுத் துணிகளுக்கு ஏற்ப குறைத்துக் கொண்டுவிட்டார்களா ? மற்ற நாட்டுத் துணிகளைவிட நம் விலை குறைந்து இருந்தும் துணிகள் எடுபடாமல் இருக்கக் காரணம் என்ன ? நம்முடைய நாட்டுத் துணிகளின் தரம் குறைந்து விட்டதா ? நம் நாட்டுத் துணிகளின் ஏற்றுமதி வர்த்தகம் வளராமல் பாதிக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் இருந்தால் அவற்றைத் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொன்ன காரணங்கள் ஒன்றும் இல்லை. வெளிநாடுகளில் பாஷன் மாறிவிடுகிறது. சென்ற ஆண்டு வரையிலும் ப்ளீடிங் மெட்ராஸ் ரகத் துணிகளை அதிகமாக மக்கள் வாங்கி உபயோகித்தார்கள். இப்போது பெய்ஸ் லீஸ் ரகத் துணிகளுக்கு மாறிவிட்டார்கள். எப்போதும் அமெரிக்கன் மார்க்கெட் மாறிக்கொண்டேயிருக்கும். ஃபிக்கிளாக இருக்கும். அதனல்தான் நம் ரகத் துணிகளுக்கு கிராக்கி இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நாணய மதிப்புக் குறைப்பினல் அதிகமாக ஏற்றுமதியாகும் என்பது தவருகும் என்பதாக முன்பே கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் கள். ஆகவே இதை மாற்ற நம் அரசாங்கம் ஏதேனும் யோசனை தெரிவித்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது உரிய காலத்தில் சொல்லப்படும்.

4th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, வெளி நாட்டில் பாஷன் மாறிவிடுகிற காரணத்தினல் நம் நாட்டுத் துணி களுக்கு கிராக்கி இல்லை என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே நம் நாட்டு நெசவாளர்கள் இந்த ரகத் துணிகளையே உற்பத்தி செய்துகொண்டிருக்காது, பாஷன்களுக்கு ஏற்ப உற்பத்தி செய்யவேண்டும் என்பது எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறதா ? அல்லது பழைய முறையிலேயே அதிக அளவில் உற்பத்தி செய்துகொண்டிருக்கிருர்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டுக் கைத்தறி யாளர்களும் அந்த ரகத் துணி உற்பத்தியை நிறுத்திக்கொண்டு விட்டார்கள். நம்மிடத்தில் உள்ள பழைய ஸ்டாக்கைத்தான் எப்படிக் கரைப்பது என்பது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. க. ர. நல்லசிவம் : வண்ணம் மாறும் துணிகள் மட்டும் அல்ல. வேறு ரக கைத்தறித் துணிகளும் இன்றையதினம் தேங்கிக் கிடப்பதன் காரணமாக, கைத்தறியாளர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ய எந்த வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்காக சர்க்கார் 50 லட்சம் ரூபாய் கடன் கொடுத்து தேங்கிக் கிடக்கிற துணியை வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது.

Textile Mills at Coimbatore

* 395 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken and the efforts made for reopening the textile mills that remain closed for some months past at Coimbatore ; and

(*b*) the result of the said endeavour?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The State Government constituted an informal *ad hoc* Technical Committee consisting of the Director of Handlooms, Madras, and representatives of the South India Textile Research Association and Southern India Mill Owners' Association to make a close scrutiny of technical and financial position of the mills wanting nancial assistance.

The Committee has since completed its enquiries and the Government have issued orders, based on its recommendations.

திரு. வை. சங்கரன் : இதனுடைய விளைவாக மூடப்பட்டுள்ள மில்கள் எத்தனை திறக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூன்று மில்களுக்கு உதவி செய்து திறக்கப்படும். ஒன்று கம்போடியா மில். இரண்டாவது ஜனர்த்தன மில். மூன்ருவது கீதாஞ்சலி மில். பாங்குகளில் கடன் வாங்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிருர்கள்.

மாநில வீட்டு வசதி போர்டு

*396 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ம் ஆண்டில் கண்டிராக்டர்களுக்கு சிமெண்ட் வழங்கிய வகையில் மாநில வீட்டுவசதி போர்டுக்கு நஷ்டம் ஏதேனும் வந்ததா?

(இ) ஆமெனில், நஷ்ட தொகை எவ்வளவு? அதற்குக் காரணங்கள் யாவை?

(உ) எந்தெந்த கண்டிராக்டர்களுக்கு எவ்வளவு சிமெண்ட் வழங்கப்பட்டது, அவர்களிடமிருந்து பெற்ற தொகை எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) விவர அறிக்கையொன்று* சபைமுன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த வீட்டு வசதி போர்டுக்கு சிமிண்ட் வாங்கியதில் எந்த விதமான நஷ்டமும் ஏற்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். ஹவுஸிங் போர்டு சம்பந்தமாக கண்ட்ராக்டர்கள் 350 பேர்களுக்கு மேல் இருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. 350 பேர்களுக்கு மேல் கண்ட்ராக்டர்கள் இருந்தும் கூட கால தாமதம் ஏற்படுவதினாலே இதை சர்க்காரே எடுத்துக்கொண்டு எஞ்சினியர்கள் மூலம் சீக்கிரமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்பொழுது கால தாமதம் இன்னும் அதிகம் ஆகும். சர்க்காரே தன்னுடைய இலாகாவை வைத்து தானே செய்தால் இன்னும் காலதாமதம் அதிகமாகத்தான் ஆகும்.

குறைந்த வருமானமுள்ளவர்களுக்குக் காலனி

*397 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் வருஷம் மதுரை நகரசபை குறைந்த வருமானம் (Lower income) உள்ளவர்களுக்கு காலனி கட்டியதா?

(இ) ஆம் எனில், எத்தனை வீடுகள்?

(உ) அதற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

* 4-11-1966-ம் தேதி மேசை மீது வைக்கப்பட்டது. இணைப்பாக அச்சிடப்படவில்லை.

4th November 1966]

'Village Jeep Journal'

* 398 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any project by name "Village Jeep Journal" to convey Farm News to villages has been envisaged to be put through in Thanjavur district; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : இதனால் கண்ட பலனை விவரமாகக் கூற முடியுமா? அவ்வாறு நல்ல பலன் விளைந்திருந்தால் நம மாகாணத்திலே மற்ற கிராமங்களுக்கும் இதை விஸ்தரித்து பேஸ்ட் ப்ரொக்ராமாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது பரிட்சார்த்தமாகத்தான் செய்திருக்கிறார்கள். முடிவு பின்னால்தான் தெரியும். முடிவு தெரிந்து வெற்றிகரமாக இருந்தால் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

Crop Insurance Scheme

* 399 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to introduce Crop Insurance Scheme in the State; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் இன்னும் செயல்படவில்லை. பயிர் இன்ஷூ-ரன்ஸ் முன்னோடித் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்குரிய செயற்குறிப்புகளை வேளாண்மைத்துறை நெறியாளர் ஆலோசித்து வருகிறார். தமிழ் நாட்டில் தேர்ந்தெடுத்த சில பகுதிகளில் புன் செய் நிலங்களில் பயிராகும் சோளம், கம்பு, கேழ்வரகு சம்பந்த மாக முதலில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயலுக்கு கொண்டுவர இயலுமா என்பதை அறிய புள்ளி விவரங்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திரு. வை. சங்கரன் : "காட்டில் இன்ஷூரன்ஸ்" திட்டம் ஆரம் பிப்பதைப்போல் பரிட்சார்த்தமாகவாவது ஒரு பிராந்தியத்தில் இதை ஆரம்பித்து அதனுடைய பலாபலன்களைக் கண்டறிவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பரிட்சார்த்தமாகப் பார்ப்பது என்று சொல்லித்தான் இதை டைரக்டர் அவர்கள் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறார்கள்; இதை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

a 287–288-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

பின்னுல் தான் ஒரு முடிவு எடுப்பார்கள். மத்திய சர்க்கார் கூட இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை கம்பல்சரியாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திலே இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். இதைப்பற்றி மேலிடத்திலே உள்ளவர்கள் கூட இது அவசியம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிருர்கள். இருந்தும், விவசாயிகள் மாட்டு அக்கறை காட்டுகிருேம் என்று சொல்லிக்கொள்கின்ற அரசாங்கம் இந்தத் திட்டத்தை இவ்வளவு காலதாமதமாக, நிறைவேற்ருமல் வைத்துக் கொண்டிருப்பானேன் ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் மத்திய அரசாங்கத்திலே பார்லிமெண்டை சேர்ந்தது 26-ம் தேதி ஜூலை மாதம் 1966-ல் டெப்டி மினிஸ்டர் திரு. மிஸ்ரா அவர்கள் கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கம்பல்சரியாகக் கொண்டுவர வேண்டுமென்று பார்லிமெண்டிலே அறிக்கை சமர்ப்பித்திருக்கிருர்கள். மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்ட பிறகு நாமும் அதைப் பற்றி முடிவுசெய்து கொள்ளலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் சம்பந்தமாகப் பரிசிலனை செய்கிருர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். பரிசீலனை எங்கே செய்கிருர்கள். இங்கே செய்கிருர்களா அல்லது வெளிநாடுகளுக்குப் போய் பரிசீலனை செய்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கம்பு, கேழ்வரகு இவைபற்றிதான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிருர்கள். நாம் இங்கே ஆரம்பித்த பிறகு மத்திய சர்க்காரும் ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே, அவர்கள் முடிவுசெய்த பிறகு நாமும் முடிவு செய்யலாம்.

Agricultural College at Thanjavur

* 400 *Q.*—Sri M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal under consideration for the starting of an Agricultural College in Thanjavur district during the Fourth Five Year Plan period, in view of the progress of the intensive cultivation schemes that are being implemented there?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவரவர்களே, தஞ்சை ஜில்லாவிலே 14 லட்சம் ஏக்கர் நஞ்சை விவசாயம் செய்கின்ற இடங்களில், அநேக திட்டங்கள் மூலம் உற்பத்தியைப் பெருக்கு

வதற்காக அமெரிக்க அரசாங்கத்திலே இருந்துகூட ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆகவே, அங்கே ஒரு கல்லூரி வைத்தால் அது மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதால் அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இந்த மாநிலத்தில் மூன்று விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. இரண்டு அரசாங்கத்தின் சார்பில் இயங்குகின்றன. ஒன்று தனியார் ஸ்தாபனத்தின் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. தஞ்சை நெற்களஞ்சியம் என்பதால் அதைப் பாராட்டுகிறோம். நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அந்த ஜில்லாவிலே ஒரு கல்லூரி ஏற்படுத்துவதைப்பற்றி பரிசீலனை செய்யலாம். வந்தாலும் வரலாம் என்றுதான் சொல்கிறேன், வாக்குறுதி சொல்ல முடியாது. உற்பத்தி அதிகமாகச் செய்கின்ற காரணத்தால் தஞ்சையைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தஞ்சை மாவட்டத்தில் இப்படி ஒரு விவசாயக் கல்லூரி நிறுவுவதற்கான நிலம், இடம் முதலியவற்றை எல்லாம் மன்னார்குடிக்கு அருகில் தருவதாக ஒரு பார்லிமென்ட் உறுப்பினர் அமைச்சர் அவர்களிடம் கூறியதாக நான் அறிகிறேன். திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை அந்தக் கல்லூரிக்குத் தருவதாக சொல்கிறார்கள். ஆகவே, தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடியில் ஒன்றும், திருவாரூரில் ஒன்றும் ஆக இரண்டு இடங்களில் ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பார்லிமெண்ட் அங்கத்தினரும், சட்டசபை அங்கத்தினரும் பேசியிருப்பார்கள் போல் இருக்கிறது. என்னிடம் அந்த விவரம் இல்லை.

கிராம மருந்தகங்கள்

*416 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களின் கீழ் நடைபெற்றுவரும் ரூரல் டிஸ்பென்ஸரி டாக்டர்களின் பணி முறை, ஒன்றிப்பு மன்ற ஆணையாளர்களால் எவ்விதம் மேற்பார்வையிடப்படுகிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The Rural Medical Practitioners are under the administrative control of the Commissioners of Panchayat Unions. They are also subject to the technical control of the concerned District Medical Officer and the Director of Medical Services in so far as the professional side of the work is concerned.

திரு. எஸ். முருகையன்: ஊராட்சி மன்றங்கள் ஏற்று நடத்தக் கூடிய மருந்தகங்கள், அதாவது பேராட்சி (மேஜர் பஞ்சாயத்து) மன்றங்களில் உள்ள மருந்தகங்கள் சரியாக, நல்ல முறையில் நடத்தப்படவில்லை என்பதால் சர்க்காரே உடனடியாக எடுத்து நடத்துவதற்கு முன்வருமா? பஞ்சாயத்து யூனியன்களில் பண வசதி இல்லாத காரணத்தாலே நல்ல முறையிலே நடத்த முடிய வில்லை. ஆகவே, அவற்றையெல்லாம் உடனடியாக அரசாங்கமே எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பஞ்சாயத்து யூனியன் கள் நடத்துகின்றவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக உத்தேசமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: அங்கங்கே ரூரல் டிஸ்பென்சரிகள் இருக்கின்றனவே அவற்றை பிரைமரி ஹெல்த் சென்டர்களாக மாற்றுவதற்கு உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

*417 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழகத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள ரூரல் டிஸ்பென்சரிகள், கிராமங்களில் உள்ள மருத்துவ மனைகள் ஆகியவைகளைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் உத்தேச முண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை. தற்போது அத்தகைய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவரவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படுகின்ற டிஸ்பென்சரிகள் சரியாகச் செயல்படவில்லை. மருந்துகள் போதுமான அளவு கிடைப்பதில்லை. ஆகவே, சர்க்காரே அவற்றை யெல்லாம் எடுத்துக் கொள்வதற்கு என்ன ஆட்சேபம் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகள் அவர்களுடைய பொறுப்பிலேயே உள்ளவை. மருந்து தேவைப்படுகின்ற அளவை மாற்ற வேண்டுமென்றுதான் முன்பு 2,500 ரூபாய் கொடுத்து வந்ததை இப்பொழுது 5,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அவர்கள் மருந்து பூராவும் தீர்ந்து போவதற்கு முன்பாகவே சரிவர இன்டென்ட் போட்டு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினால் மருந்துகள் கிடைக்கும். அப்படி அனுப்பக்கூடிய மருந்துகளுக்கான பணத்தையும் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் இந்த மாதிரிக் குறைகள் எல்லாம் இருக்காது.

4th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களின் ரூரல் டிஸ்பென்சரிகளை இப்பொழுது எற்று நடத்துவதற்கான உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பொதுவாக சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. ஆகவே, அவற்றை இனிமேலாவது எற்று நடத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகின்ற டிஸ்பென்சரிகளில் அதிகப்படியான கஷ்டமிருந்து நடத்தவே முடியாது என்ற நிலையில் உள்ள பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகளை எடுத்துக் கொள்ளலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. ஆனால், பொதுவாக அவையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில்தான் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதாக உத்தேசமில்லை. பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொறுப்பு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கில்லை என்று சொன்னேன்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, the general answer given by the Government regarding the medicines that are to be supplied to the Panchayat Union dispensaries is that the Panchayat Union Commissioners are not remitting the amounts in advance to the M.S.D. In view of that, will the Hon. Minister request the Hon. Minister for Local Administration to issue necessary instructions to the Commissioners and see that the amounts are remitted in advance and indents are sent sufficiently before the close of the year?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : That is what I exactly meant. It is on account of not remitting the amount in time to the M.S.D., the supply of medicines has been delayed. Now, there is a proposal before the Government, whether we can allot this amount straightaway to the M.S.D. to supply directly the medicines that are required by the dispensaries.

Employees' State Insurance Dispensary

* 418 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether it is a fact that there are no adequate number of doctors in the three newly built Employees' State Insurance Dispensaries at Madurai City?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. வை. சங்கரன் : இந்த ஆஸ்பத்திரிகளில் சமீப காலம் வரை 9–30
டாக்டர்களும், ஸ்டாஃபும் இல்லாமல் இருந்த காரணத்தால் a.m.
தொழிலாளர் மருந்து பெறுவதற்குக் கஷ்டம் எற்பட்டது வாஸ்தவமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை என்ற குறை கிடையவே கிடையாது. ஆறு ஆஸ்பத்திரிகளுக்குப் பத்து டாக்டர்கள் போடப்பட்டிருக்

கிறார்கள். மூன்று ரிசர்வ் ஸ்தானங்கள் ஃபில் அப் ஆகாமல் இருக்கின்றனவே தவிர, டிஸ்பென்சரிகள் எல்லாம் 'ஃபுல்லி ஸ்டாஃப்டு'.

மரக்காணம் நகரப் பஞ்சாயத்து

*419 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் அரிஜன காலனிகளுக்கும், மீனவர்கள் வாழுகின்ற பகுதிகளுக்கும் போட்டுக் கொடுக்க வேண்டிய கிளை ரோடுகள் எத்தனை?

(இ) டவுன் பஞ்சாயத்தாக மாற்றப்பட்ட பின், எத்தனை ரோடுகள் விளக்குகள் எந்தெந்த இடங்களுக்குப் போட்டுக் கொடுக்கப்பட்டன?

(உ) இது குறித்து, துரித நடவடிக்கை எடுக்கக் கோரி 25—9—1965-ல் மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் நிறைவேற்றிய தீர்மானம் அரசாங்கத்தின் பார்வைக்கு வந்ததா?

(எ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்:

(அ) 1. மீனவர் காலனி—4 ரோடுகள்.

2. அரிஜன காலனி—3 ரோடுகள்.

(இ) கீழ்க்கண்ட ரோடுகள் போடப்பட்டன—

1. மாரியம்மன் கோவில் டைக்குத் தெரு.

2. கிருஷ்ணசாமி கவுண்டர் தெரு.

3. பாலகிருஷ்ண முதலியார் தெரு.

4. பஜனைகோவில் தெரு.

5. கைப்பாணிக் கிராமம் இருந்து கைப்பாணிக் குப்பம் வரை.

புதிதாக விளக்குகள் போடவில்லை.

(உ) இது குறித்து 25—9—1965-ல் மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் நிறைவேற்றப்பட்டதாகத் தீர்மானம் எதுவும் அரசாங்கத்தின் பார்வைக்கு வரவில்லை.

(எ) கேள்விக்கு இடமில்லை.

4th November 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கைப்பாணிக் குப்பம் வரை ரோடு போட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை நேரில் பார்த்துச் சொல்கிறார்களா அல்லது ரிப்போர்ட்டில் இருந்து பதில் சொல்லுகிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர்களுடைய ஒவ்வொரு கேள்விக்கும் அமைச்சர்கள் நேரில் சென்று பார்த்துப் பதில் சொல்வது என்பது இயலாது.

பாலமான் கால்வாய் மீது மதகு

* 420 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியன்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில், சிதம்பரநாதன் பேட்டை கிராமத்திற்கு நடராஜபுரம் ரோட்டிலிருந்து பாலமான் வாய்க்காலைக் கடந்துபோக ஒரு மதகு கட்டிக் கொடுக்க வேண்டி அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை. ஆனால் மாவட்ட வளர்ச்சி மன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்துள்ளது.

(இ) இந்தப் பணியை எந்தத் திட்டத்தின் கீழும் தற்பொழுது எடுத்துக்கொள்ள இயலாது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION.

RELIEF TO FISHERMEN AND OTHER VICTIMS OF CYCLONE.

* **திரு. இராம. அரங்கண்ணல்** : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விஷயத்தை விவாதிப்பதற்காக சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி நான் கொண்டு வந்திருக்கின்ற பிரேரேணையின் குறிப்பைப் படிக்க விரும்புகிறேன்.

"நேற்றைய கோரப் புயலின் காரணமாகச் சென்னை மாநகரமே அவதிக்குட்பட்டிருக்கிறது என்றாலும், ஆங்காங்கு உள்ள குடிசைவாழ் பகுதிகள் யாவும், புயலாலும் மழையாலும் நாசமாயிருக்கின்றன. கடலோரங்களில் வாழும் மீனவர்களுடைய குடிசைகள் போய் ஒண்ட இடமில்லாமல் உணவுக்கு வழியில்லாமல் அவதிப்படுகின்றனர். அவதிப்படும் ஏழை மக்க

[திரு. இராம. அரங்கண்ணல்] [4th November 1966

ளுக்கு அரசு வேண்டிய—செய்ய இருக்கின்ற நிவாரண உதவிகள் பற்றி விவாதிக்க விரும்புகிறேன்" என்பதுதான் என்னுடைய பிரேரணையாகும். ஓரிரு கருத்துக்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றையதினம் நடைபெற்ற புயலின் விளைவுகளைப்பற்றி அதிகம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக, சென்னையிலே, அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியான மயிலாப்பூரிலே, மீனவ மக்களுடைய குடிசைகள் பெருமளவுக்கு நாசமாகியிருக்கின்றன. அவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்க இருக்கிறோம் என்பது விளங்கவில்லை. இதைத் தவிர மயிலாப்பூர் பகுதியில் 60-க்கு மேற்பட்ட குடிசை வாழ் பகுதிகளில் ஏராளமான குடிசைகள் பிய்ந்து போய் மக்கள் கார்ப்பரேஷன் பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் தனிப்பட்டவர்களிடமிருந்து உணவு வசதி களைப் பெற்று இருந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே அரசாங் கத்தின் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. குடிசைகளைத் திருத்தி யமைக்க வேண்டுமென்று கலெக்டரிடம் கேட்டால் 10 ரூபாயும், கார்ப்பரேஷன் 10 ரூபாயும், ஆக 20 ரூபாய் கிடைப்பதற்குக் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகிவிடுகின்றன. ஆகவே, உடனடி யாக ஹவுசிங் போர்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டு மென்று உத்தரவிட்டு ஆங்காங்கு அந்த ஏழை மக்களுக்கு ஷெல்டர் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பெரும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறது. அரசாங்கத் தினுடைய அனுதாபம் ஏழை வாழ் மக்களுக்கும், குடிசைவாழ் மக்களுக்கும் இருக்கிறது என்று சொன்னாலும் இந்தத் துறையில் அவசரம் அவசரமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதோடு, ஃபிஷர்மென் கம்யூனிடியைப் பொருத்த அளவில் அவர் களுக்காக ஃபாமின் ரிலிஃப் என்று ஒரு லட்சம் ரூபாய் வைத்திருக் கிறார்கள். இன்னும் 15 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த ஃபாமின் ரிலிஃப் நிதியிலிருந்து பிஷரீஸ் டிப்பார்ட்மெண்ட் மூல மாக அந்த மீனவர்களுக்கான உதவிகளைச் செய்ய வேண்டும். இந்த விவரங்களை எல்லாம் பற்றி அறிந்து கொள்வதற்காக இந்தச் சபையின் நடவடிக்கையைச் சிறிது நேரம் ஒத்தி வைக்க வேண்டு மென்பதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, தகவல் தெரிந்து கொள்ள ஒத்திவைப்புப் பிரேரணை பிரேரிப்பது வழக்கமல்ல. ஏதாவது அரசாங்கம் செய்யத் தவறி விட்டால், அல்லது ஏதாவது ஒரு சம்பவம் நடந்திருந்தால் அதைப் பற்றி விவாதிக்க ஒத்தி வைப்புப் பிரேரணை கொண்டு வரலாம். புயல் காற்றைப் பற்றி விவாதிக்கலாம். எப்படி வந்தது, ஏன் வந்தது என்று விவாதிக்கலாம். புயல் காற்று சட்ட மன்றக் கூட்டத்திற்கே தடை விதித்து விட்டது. புயல் காற்றைப் பற்றி விவாதிப்பதில் பயன் இல்லை. அது நம்முடைய சட்ட மன்றத்தினுடைய விதி களுக்கோ, ஆட்சிக்கோ, அதிகாரத்திற்கோ உட்பட்டதல்ல. புயல் திடீரென்று பலமாகத்தான் ஏற்பட்டது. கடற்கரையிலிருந்து மூன்று மைலுக்கு அப்பாலுள்ள கப்பலே ஒன்று உடைபட்டது.

மக்கள் சேதம் அடைந்தார்கள். கோரமான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதனால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும், தக்க உதவிகள் செய்ய வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டு வருகிறோம். கடலோரத்தில் ஜீவிக்கின்ற மக்கள் ஆபத்தைப் பொருட்படுத்தாது, மக்களுக்காகப் பாடுபடுகின்ற மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நேற்று இந்த மன்றம் முடிந்த உடனே நான் கலெக்டர் அவர்களையும், டைரக்டர் ஆப் பிஷரீஸ் அவர்களையும் அழைத்துப் பேசி, அந்தப் பகுதிகளுக்கெல்லாம் சென்று சுற்றிப் பார்த்து எத்தகைய நிவாரணம் அளிக்க வேண்டும், என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பார்த்துச் செய்யச் சொல்லி இருக்கிறேன். நிதி இருக்கிறது, என்ன செலவானாலும் நிதியிலிருந்து செலவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறேன். அவர்களும் உடனடியாகச் சென்று சுற்றிப் பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களும் நேற்று அந்தப் பகுதிகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்து என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கலெக்டரிடம் கூறியிருக்கிறார்கள். இன்று காலையில் உணவுத் துறை அமைச்சர் கேள்வி நேரத்தில் வராததற்குக் காரணம், அவர்கள் இப்போதும் ஆங்காங்கு சுற்றிப் பார்த்து என்ன நிவாரணம் உடனடியாகச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். நானும் என்னுடைய சட்டசபை வேலை முடிந்த பிறகு நேரில் சென்று பார்த்து மேலும் என்ன நிவாரணம் அளிக்கலாம் என்று பார்த்து அளிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். இதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் மீது முதன்மையான கவனம் செலுத்தி உடனடியாக இன்றைக்கு நிவாரணம் அளிப்பதோடு நிரந்தரமான அளவுக்கு நிவாரணம் அளிப்பதில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. இரா. நெடுஞ்செழியன்: புயலைப் பொறுத்து நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும் ஏற்பட்ட விளைவுகளைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நேற்று அடித்த புயல் பெரு மழை காரணமாக எங்கெங்கு எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விவரங்களும், உடனடியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதைப் பற்றியும் இந்த மன்றம் அறிந்துகொள்ள விரும்புவதில் பொறுப்பு இருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் இந்தத் தொடர் கூட்டத்திலேயே அதைப் பற்றிய முழு விவரங்களையும் மன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அதைப் பற்றி மேற்கொண்டு சிந்திக்க வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அத்தகைய ஒரு அறிக்கையை வைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பற்றியும் தகவல் சேகரிக்கப்பட்டு வருகிறது. மழை நின்று விடும் என்று நினைத்தேன். ஆனால் மேலும் தொடர்ந்து மழை பெய்கிறது. எல்லாத் தகவலையும் தெரிந்து கொண்டு 7-ஆம் தேதி அல்லது 8-ஆம் தேதி விவரங்களைத் தெரிவிக்க ஒரு ஸ்டேட்மெண்ட் ரெவின்யூ அமைச்சர் அவர்களோ அல்லது வேறு யாராவது ஒரு அமைச்சரோ கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER: Consent is withheld.

III.—ANNOUNCEMENTS.

(1) POSTPONEMENT OF CALLING ATTENTION NOTICE.

MR. SPEAKER: Notice under Rule 41 is postponed, because the Minister concerned is absent. It will be taken up tomorrow.

IV.—PRESENTATION OF REPORT.

REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE ACCOUNTS OF THE MADRAS STATE HOUSING BOARD FOR 1962–63.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை குறித்த இக்குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன்.

V.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1963–64—PRESENTATION.

MR. SPEAKER: Now the Hon. Chief Minister will present the Demands for Grants for Excess Expenditure.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டின் மிகைச் செலவுக்கான (Excess expenditure) மானியத் தேவைகளின் விவர அறிக்கையை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இவற்றுள், சில மானியங்களின் செலவினங்கள் அந்த ஆண்டுக்கென இறுதியாக அனுமதிக்கப்பட்ட தொகைகளின் அளவுக்குமேல் செலவழிக்கப்பட்டிருப்பதாகக் காணப்பட்டுள்ளன. அச் செலவினங்களை இந்த விவர அறிக்கையில் காணலாம்.

1965-66-ம் ஆண்டின் பொதுக்கணக்குக் குழுவினர் இந்த மிகைச் செலவினங்களைப் பரிசீலனை செய்து, தமிழ் நாடு அரசாங்கத்தின் 1963-64-ம் ஆண்டுக் கணக்குகள் மீதான தங்கள் அறிக்கையின் 22-வது பாராவில், அந்த அறிக்கையின் 7-ம் இணைப்பில் கண்டுள்ள மிகைச் செலவு மானியத் தேவைகளைச் சட்டப் பேரவையின் இசைவிற்காக அதன் முன் வைக்க வேண்டுமெனப் பரிவுரை செய்துள்ளனர். அக் குழுவினரின் கருத்துப்படி 1963-64-ம் ஆண்டின் மிகைச் செலவுகளுக்கான மானியத் தேவைகளை உங்கள் முன் வைக்கிறேன். இந்த விவர அறிக்கையின் இணைப்பில், ஒவ்வொரு செலவினம் குறித்தும் ஏற்பட்ட மிகைச் செலவிற்கான

4th November 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பற்பல மானியங்களின்கீழ் ஏற்பட்ட மொத்த மிகைச் செலவு சுமார் 1 கோடியே 15 லட்சம் ரூபாய் ஆகும். இச் செலவினங்களை முறைப்படுத்தும் பொருட்டு, சட்டப் பேரவை தனது ஒப்புதலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1963-64-ம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுகளுக்கான மானியத் தேவைகளின் விவர அறிக்கையை இம் மன்றம் ஏற்குமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

VI.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1966-67—PRESENTATION.

MR. SPEAKER : The Hon. Chief Minister will now present the Second Supplementary Statement of Expenditure.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே. 1966-67-ம் ஆண்டின் இரண்டாம் துணை மதிப்பீடுகளைச் சபையின் முன் சமர்ப்பிக்கின்றேன். பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மானியக் கோரிக்கைகளின் மொத்தம் ரெவின்யூக் கணக்கில் 36 லட்சம் ரூபாயும், மூலதன கடன் கணக்குகளில் 2 கோடியே 55 லட்சம் ரூபாயும் ஆகும். சட்ட மன்றத்தில் இப்போது சமர்ப்பிக்கப்படும் துணை மானிய கோரிக்கைகள், முக்கியமாக பொதுக் கணக்குக் குழு விதித்திருக்கிறபடி "புதுப்பணித்" திட்டங்களின் கீழ் வருகிற திட்ட வேலைகளுக்குச், சம்பந்தப்படு பவையாகும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இத் துணை மானியக் கோரிக்கையின் கீழ் கேட்கப்படும் நிதி ஒதுக்கத்தில் பெரும்பகுதி, விவசாய உற்பத்திக்கு நெருங்கிய தொடர்புள்ள கூட்டுறவு, நீர்ப்பாசனம், வேளாண்மை போன்ற தலைப்புகளில் அடங்கும் திட்டங்களைப் பற்றியதாகும். நடப்பு ஆண்டில் நமது மாநிலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில், விரைவில் பலனளிக்கும் பல திட்டங்களை அரசாங்கம் தொடங்கியிருக்கிறது. இவற்றில், அதிக விளைச்சல் தரும் பயிர் வகைத் திட்டத்தைக் குறித்துச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் அதிக விளைச்சல் தரும் பயிர் வகைத் திட்டத்தைக் குறித்துச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் அதிக விளைச்சல் தருகிற, அதிக உட வகைளை ஏற்கக்கூடிய பயிர் வகைளை உறுதியான பாசன வசதி பெற்றுள்ள பகுதிகளில் விளைவிப்பது நமது நோக்கமாகும். இந்தத் திட்டத்தின்படி விளைவிக்கப்பட்ட ADT-27 என்கிற முக்கிய நெல் வகை, நடப்புப் பருவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நமக்கு உற்சாகமளிக்கும் வகையில் மிக நல்ல பலன்களைத் தந்திருக்கிற தென்பதை அறிய இம் மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச் சியடைவார்களென்று நம்புகிறேன். நடப்பு ஆண்டில் குறுவைச் சாகுபடிப் பரப்பளவில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் இந்த

[திரு. எம். பக்தவத்சலம்] [4th November 1966

வகை நெல் பயிர் செய்யப்பட்டுள்ளது தற்போது நமக்குக் கிடைத்துள்ள அறிக்கைகளிலிருந்து, இந்த வகை நெல் பயிர் செய்யப்பட்டுள்ள நிலங்களில் சராசரி மாசூல் ஏக்கர் ஒன்றுக்கு ஏறக்குறைய 3,700 ராத்தல் அளவிற்குக் கிடைக்குமென்று தெரிகிறது. இதற்குமுன் சாதாரணமாகக் கிடைத்து வந்த மாசூல் அளவு ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி 2,400 ராத்தலே ஆகும்.

சிறு பாசனத் திட்டங்களுக்குச் செய்துள்ள முதலீட்டையும் நடப்பு ஆண்டில் பெரிதும் உயர்த்தி இருக்கிறோம். கடந்த துணை மதிப்பீடுகளில், கிணறு தோண்டும் திட்டத்திற்காக 2 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டதை இம் மன்றத்தினரின் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் கீழும், நூர் வாரி நிலத்தைப் பண்படுத்தும் திட்டங்களின் கீழும் பல புதிய வேலைத் திட்டங்களுக்கும் நாம் அனுமதி வழங்கியுள்ளோம். இவற்றிற்குச் சட்ட மன்றத்தின் ஒப்புதலை அடையாள மானியங்களின்கீழ் கோரியுள்ளோம். விவர அறிக்கையில் 42-வது கோரிக்கையின் கீழ் கொடுத்துள்ள பற்பல திட்டங்களின் விவரங்களைக் கவனிக்கும்படி கனம் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிலைமை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய குறுகிய காலச் சாகுபடிக் கடன்களைத் திரும்பக் கொடுக்க அல்லல்படும் குடியானவர்களுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்துள்ளது. இதற்கிணங்க, தமிழ்நாடு கூட்டுறவு பாங்கின் வேளாண்மைக் கடன் உறுதி நிதியை வளப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மோசமான பருவ நிலைமைகளால் விளைச்சல் குறைந்து, அதன் காரணமாக கடன்களைத் தீர்க்க கஷ்டப்படும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் பரிகாரம் அளிக்கும் வகையில், அவர்கள் வாங்கியுள்ள குறுகிய காலச் சாகுபடிக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றிக்கொள்வதற்கு இந்த ஏற்பாடுகள் உதவியாய் இருக்கும். தற்போதைய துணை மதிப்பீடுகளில் இதற்கென்று 30 லட்சம் ரூபாய் நிதிவகை செய்யும்படிக் கோரப்பட்டுள்ளது.

இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை அதிகமாக வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. நகர மக்களின் அடிப்படைத் தேவையாயுள்ள இன்றியமையாப் பண்டங்கள் நியாயமான விலைகளில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக பெரிய நகரங்களில் எல்லாம் சிறப்பு அங்காடிகள் Super Markets நிறுவும் ஒரு திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. சென்னை மாநகரில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (T.U.C.S.) நடத்தும் கூட்டுறவுச் சிறப்பு அங்காடியை நிறுவியதன் மூலம் இத் திட்டம் நன்முறையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும் இத்தகைய இன்னொரு பண்டகசாலை செயல்படத் தொடங்கியிருக்கிறது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலதன முதலீடு செய்வதற்கென்று இத் துணை மானியக் கோரிக்கைகளில் 16 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

4th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

நமது மாநிலத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நிறுவுவதிலும் அவற்றை விரிவுபடுத்துவதிலும் அரசாங்கம் நல்ல முறையில் ஊக்கம் அளித்து வருகிறது. மூன்றாவது திட்டகால அளவில் கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளில் பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 2,500 டன்னிலிருந்து 3,500 டன் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. நான்காம் திட்டகாலத்தில், இச் சர்க்கரை ஆலைகள் மேலும் விரிவுபடுத்துவதற்கேற்ற நிலையை எய்தியுள்ளன. வட ஆற்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தனது அன்றாட பிழியும் திறனை crushing capacity 800 டன்னிலிருந்து 1,250 டன் அளவிற்கு உயர்த்த உத்தேசித்துள்ளது. அந்த ஆலையின் பங்கு மூலதனத்திற்கு 7.5 லட்சம் ரூபாய் மகலீடு செய்வதற்காக இந்தத் துணை மானிய மதிப்பீடுகளில் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரிலுள்ள புதிய மருத்துவக் கல்லூரிக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் இத் துணை மானியக் கோரிக்கைகளில் 10 லட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மருத்துவர்களை உருவாக்குவதற்கான வசதிகளைப் பெருக்கும் பணியில், கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ள புதிய மருத்துவக் கல்லூரி ஒரு முக்கிய கட்டத்தைக் குறிக்கிறது. மூன்றாம் திட்டத்தின் தொடக்கத்தில் மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டு தோறும் 600 மாணவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்ள வாய்ப்பு இருந்தது. நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை 1,075 ஆக உயர்த்தியுள்ளோம். இவற்றால், வரும் ஆண்டுகளில் கிராமப் பகுதிகளில் மருத்துவ உதவிக்குரிய வசதிகளை மேன்மேலும் பெருக்க முடியும். மற்றும், தொழிலாளர் அரசாங்க இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தின் பகுதியாக தொழில் துறையில் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகளை மேலும் உயர்த்துவதிலும் நாம் மிக முன்னேறி யிருக்கிறோம். இன்ஷ்யூர் செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ உதவிகளை ஆண்டுதோறும் 59 லட்சம் ரூபாய் உத்தேசச் செலவில், விரிவுபடுத்துவதற்காக தற்போதைய துணை மானியக் கோரிக்கைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இச் செலவில் மாநில அரசாங்கத்தின் பங்கு ஏறக்குறைய எழில் ஒன்றாகும். எஞ்சியச் செலவைத் தொழிலாளர் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஏற்கும்.

இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற திட்டங்களைப் பொறுத்தவரையில், சிறப்பான விளக்கம் எதுவும் தேவையில்லையெனக் கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

VII.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS PRIVATE EDUATIONAL INSTITUTIONS (REGULATION) BILL, 1966 (L.A. BILL NO. 14 OF 1966).

MR. DEPUTY SPEAKER: Now we will take up clause-by-clause consideration of the Bill.

Clause 2.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That clause 2 do stand part of the Bill."

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :—

' In sub-clause (*c*) of clause 2 in line 2 insert the following words after the words " or other authority " and before the words " authorised by the Government "—

" not below the rank of the District Educational Officer ".'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second the amendment.

MR. DEPUTY SPEAKER : Now the clause and the amendment are before the House for discussion.

*** திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது பிரிவிற்கு "authority authorised by the Government" என்ற டெபனிஷன் இருக்கிறது இந்த டெபனிஷனுக்கு ஒரு விளக்கம் கோருவதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைத் தந்திருக்கிறேன். பொதுவாக 'அத்தாரிட்டி' என்று போட்டுவிட்டால் சாதாரணமாகப் பள்ளிக்கூடங்கள் என்றால் டெப்டி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸிலிருந்து டி.ஈ.ஓ. டிவிஷனல் இன்ஸ்பெக்டர் இவர்கள் எல்லாம் பார்க்கிறார்கள். தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய கல்லூரிகள் இருக்கின்றன. எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பிற்கும் இருக்கிறது. ஆகவே, இந்த அதிகாரி யார் என்பதைத் தெளிவாகச் சட்டத்தில் கூறிவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன். பல சட்டங்களில் இந்த அதிகாரிகளைப்பற்றி போடும்போது உதாரணமாக, 'not below the rank of Deputy Tahsildar or R.D.O. என்று போடுகிறோம். அதேபோல் இதிலும் விளக்கமாக 'not below the rank of the District Educatioual Officers' என்று போட்டு, டி.ஈ.ஓ.க்குக் குறைவான அந்தஸ்து உள்ளவர்கள் இந்த மேற்பார்வை பார்ப்பதற்காக இருக்கக் கூடாது என்பதுதான் என் கருத்து. ஆகவே, இதை சேர்த்துக்கொள்ளும்படி கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : இந்தத் திருத்தத்தில் 'காம்பிடென்ட் அத்தாரிட்டி' என்பதில் 'not below the rank of the District Educational Oficer ' என்று போடப்பட்டிருக்கிறது. 'ஆதரைஸ்ட் காம்பிடென்ட் அத்தாரிட்டி' யார் என்பது ரூல்ஸ் செய்யும் போது தீர்மானிக்கப்படலாம். ஆனால், இந்தத் திருத்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் பொருளை நானும் வரவேற்கிறேன். 'காம்பிடென்ட் அத்தாரிட்டி முக்கியமான ஆளாக இருக்க வேண்டும். இப்போது டி.ஈ.ஓ. என்று போட்டிருப்பது கூடப் போதாது. அதற்கு மேற்பட்ட வகையில், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் என்கிற அளவிலுள்ள அதிகாரியாகவாவது இருந்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால் இந்த அதிகாரிக்கு பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த நிலையிலும் இந்த அதிகாரங்கள் எல்லாம் துஷ்பிரயோகம் செய்யாத அளவில்

4th November 1966] [திரு. வை. சங்கரன்]

பார்த்துக் கொள்ளக்கூடிய பொறுப்புடையவர் பெரிய அதிகாரியாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் இதற்குத் தனியாக அமென்ட்மென்ட் தேவையா என்பது சந்தேகம். ரூல்ஸ் போடும் போது அதில் தீர்மானித்துவிடலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக 'காம்பிடென்ட் அத்தாரிட்டி என்று போடும்போது' உயர்ந்த நிலையிலுள்ள அதிகாரியாக டி.ஈ.ஓ. அளவுக்கு மேற்பட்டு டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் என்கிற அளவிலாவது போட வேண்டும். கண்டிப்பாக இதை ரூல்ஸ் செய்யும் போது மனதில் கொள்ள வேண்டும். ஆகவே, இதற்குத் திருத்தம் அவசியமில்லை என்று நம்புகிறேன். பல பொறுப்புக்கள் இவரிடம் கொடுக்கப்பட்கிறது. அதோடு கல்வித்துறையில் நல்ல பரிச்சயமுள்ளவராக இருக்க வேண்டும். இல்லையென்றால் இந்தச் சட்டத்திலுள்ள விஷயங்களைப்பற்றி நல்லமுறையில் பரிசீலிக்க முடியாது. நல்ல அனுபவமுள்ளவராகவும், உயர்ந்த நிலையிலுள்ள அதிகாரியாகவும் இருந்தால் இதை நல்ல முறையில் நிர்வாகம் செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் பற்றி பொறுக்குக் கமிட்டிக் கூட்டத்திலும் நன்றாக விவாதிக்கப்பட்டது. காம்பிடென்ட் அத்தாரிட்டி என்று சாதாரணமாகப் போடுவதுண்டு. காம்பிடென்ட் அத்தாரிட்டி என்று சொல்லும் போது தகுதியானவர்களைத்தான் அரசாங்கம் நியமிக்கும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். இந்தச் சட்டத்தை அரசாங்கமே நிறைவேற்ற வேண்டும் என்றிருக்கும் போது, நிச்சயமாக தகுதியானவர்களைத்தான் காம்பிடென்ட் அத்தாரிட்டியாக நியமிக்கும். யார் என்று சட்டத்தில் போட வேண்டாம் என்று செலெக்ட் கமிட்டியிலும் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. ஆகவே, இந்தத் திருத்தத்திற்கு அவசியமில்லை என்று சொல்லி இதை நான் எதிர்க்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That clause 3 do stand part of the Bill."

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment—

'Substitute the following for sub-clause (*a*) in clause 3 :—

"(*a*) no private educational institution in existence on that date shall, after the expiry of six months from the said date or in case if such expiry occurs during the course of an academic year, after the expiry of that academic year, be run; and".'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second the amendment.

MR. DEPUTY SPEAKER : Now, the clause and the amendment are before the House for discussion.

[4th November 1966

*** திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துவதற்காகச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, ஏற்கனவே நடைபெற்றுவரக்கூடிய கல்வி ஸ்தாபனங்கள், புதிதாகத் துவக்கப்படும் ஸ்தாபனங்கள் இந்த இரண்டிற்கும் பொருந்தக்கூடிய அளவில் இந்தப் பிரிவு அமைக்கப் பட்டிருக்கிறது. குறிப்பிட்ட கால கெடுவுக்குள் அனுமதி பெறவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஸ்தாபனங்களைப்பற்றிக் கவலையில்லை. ஏற்கனவே இருப்பதற்குக் காலவரையறை கொடுக்கப்பட்டிருக்கிறது . . .

'no private educational institution in existence on that date shall after the expiry of six months from the said date' . . .

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் சட்டம் வந்து இடையில் 'அக்கடமிக் இயர்' வந்தால் ஆறு மாதத் திற்குள் அனுமதி வாங்கா விட்டால் அந்த நிறுவனத்தின் நிலைமை என்ன என்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தில், அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருமானால், என்று தான் கொடுத்திருக்கிறேன். நிச்சயமாக இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வரும், இரும் அபாலிஷன் சட்டத் தில் கூட இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது—ஆகவே தான் நான்

'if such expiry occurs during the course of an academic year, after the expiry of that academic year, be run,'

என்ற ஒரு விளக்கத்தைத் திருத்தமாக கொடுத்திருக்கிறேன். இது பொருத்தமான விளக்கம் என்று நினைக்கிறேன். இதைப்பற்றி பின்னால் உள்ள பிரிவிலும் எதுவும் காணப்படவில்லை. ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள் கிறேன்.

திரு. வை. சங்கரன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்திற்குத் தேவையில்லை என்று நினைக்கிறேன். இதைப்பற்றி யெல்லாம் தெரியாத எஜுகேஷனல் இன்ஸ்டிட் யூஷன்ஸ் எதுவும் இந்த மாநிலத்தில் இருக்க முடியாது. அதற் காக இப்போது ஆறு மாதம் என்று காலவரையறை கொடுக்கப் பட்டிருக்கிறது. இதற்கும் மேலாக அனுகூலமாக காலவரையறை பெறவேண்டியதில்லை. இந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டால், இம்மாதிரி கல்வி ஸ்தாபனங்கள் நடத்துகின்றவர்கள் எல்லாம் நல்ல விவரம் தெரிந்தவர்கள், நன்றாகப் படித்தவர்கள், பெர்மிஷன் வாங்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்று மல்ல. ஆகவே, இதற்கென்று தனியாக ஒரு திருத்தம் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது அங்கீகாரத்திற்காக மனுப் போடுகிற விஷயம். முதலாவது வந்த மசோதாவில் மூன்று மாதம் என்று போடப்பட்டிருந்தது. அது போதாது என்று

4th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

செலெக்ட் கமிட்டியில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. பின்னுல்தான் ஆறு மாதம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. இதற்கும் அக்கடமிக் இயர்-க்கும் சம்பந்தம் இல்லை. ஆறு மாதங்களுக்குள் மானுப் போடவேண்டும் என்று இருக்கிறது. அக்கடமிக்-இயர் வந்தால் அதற்காக மேலும் காலம் கொடுக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஆகவே, இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clause 3 was put and carried.

Clause 4.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 4 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move the following amendments—

'In clause 4 (2) (*b*) substitute "one hundred rupees" for "five hundred rupees".'

'Substitute the following for clause 4 (2) (*c*) (iv) to (vi) :—

"(iv) the particulars of the teaching staff with their educational qualifications proposed to be appointed in the case of private educational institutions to be established and the particulars of teaching staff with their educational qualifications in the existing private educational institutions as the case may be:

(v) the equipment and other facilities for instruction;

(vi) the particulars of groups or divisions or classes with the strength of the students in the case of existing private educational institution or the proposed groups or divisions or classes with the strength of the students in the case of private educational institutions to be established as the case may be".

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second the amendments.

*திரு. செ. மாதவன் : கனம் ஆணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தில் நான்காவது பிரிவுக்குக் கொடுத்திருக்கும் திருத்தம் சாதாரண திருத்தம். பொதுவாக இப்படிப் பட்ட கல்லூரிகள், கல்வி ஸ்தாபனங்களை கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமே தவிர வருமானத்திற்காக இதை ஏற்படுத்தக்கூடாது என்று முன்பே வற்புறுத்தப்பட்டது. இதை கனம் முதலமைச்சர் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இப்போது 500 ரூபாய் என்று கட்டணம் போடப் பட்டிருக்கிறது. இதிலிருந்து வருமானத்தை எதிர்பார்ப்பது என்று சொல்வது சரியல்ல. இதை ஓரளவுக்கு குறைத்துக் கொடுத்திருக்கிறோம். இன்னும் இந்தத் தொகையை குறைத்துக் கொடுத்தால் நமக்கு ஒன்றும் குறைந்துவிடாது. நான் கொடுத் திருக்கும் திருத்தத்தின்படி 100 ரூபாய் என்ற அளவுக்கு ஒப்புக் கொள்ள மனம் இல்லாவிட்டாலும், இப்போது இருப்பதிலிருந்து

[திரு. செ. மாதவன்] [4th November 1966

இன்னும் சற்றுக் குறைத்துக் கொடுக்கக்கூடிய வகையில் அரசாங்கமே திருத்தம் கொண்டு வந்தால் கூட நல்லதுதான். இப்போது போட்டிருக்கும் 500 ரூபாய் ஜாஸ்தியாக இருக்கிறது. இதைப்பற்றி முன்பும் இதே மன்றத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. மன்றத்தின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, இன்னும் கொஞ்சம் குறைக்க முதலமைச்சர் அவர்கள் முன் வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த திருத்தம், இந்த நான்காவது பிரிவில் என்னுடைய ஆட்சேபணை எல்லாம் ஒரு நிறுவனம் மனுப் போடும்போது இன்னின்ன தகவல்களைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ' the names of the members of the teaching staff என்றிருக்கிறது. அப்படிக் கொடுக்காவிட்டால் என்ன ஏற்படும் என்பதற்குச் சட்டத்தில் விளக்கம் இல்லை. பின்னால் இருக்கக் கூடிய பிரிவுகளில் நான்காவது பிரிவிலுள்ள முறைகளை கவனித்துத்தான் அதிகாரிகள் செயல்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் இதில் ஒரு உட் பொருள் தொக்கியிருக்கிறது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட 'பார்டிகுலர்ஸ்' இல்லை என்று அனுமதி கொடுக்க மறுக்கலாம், அல்லது அனுமதியை 'கான்ஸல்', செய்யலாம் ஆகவே, இன்னின்னதான் ஏற்படும் என்பதற்கு திட்டவட்டமாக இந்தப் பிரிவில் எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் 'பார்டிகுலர்ஸ்' கொடுக்க வேண்டும் என்று, சொல்லப் பட்டிருக்கிறது, அப்படிக் கொடுக்கப்படவில்லை என்றால் என்ன என் பதற்கு விளக்கம் இல்லாத நிலைமை இருக்கிறது. குறிப்பாக 4, 5, 6 பிரிவுகள் இருக்கின்றன. 5-வது பிரிவுக்கு கனம் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள், அதாவது 'பார்டிகுலர்ஸ்' என்று தான் போட்டிருக்கிறோம் என்றும் லைப்ரரி, லாபரட்டரி இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது அல்ல என்றும் விளக்கம் தந்தார்கள். இந்த விளக்கம் பொருத்தமாக இருக்குமா என்பது தான் பிரச்னை. காரணம் இப்படிப்பட்ட பிரிவுகளை வைத்துக் கொண்டு அதிகாரிகள் செயல்படப் போகிறார்கள். அதில் அவர் களுக்கு 'டிஸ்க்ரீஷன்' செய்வதற்கு வழியிருக்கிறது. பொது வாக 'the equipment, laboratory, library and other facilities for instruction ' என்று 5-வது பிரிவில் விளக்கம் கொடுக்கப்பட் டிருக்கிறது. இன்னொன்று 4-வது பிரிவில் ' the names of the members of the teaching staff என்றிருக்கிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய நிறுவனங்களைப் பொறுத்தவரையில், ஆசிரியர் களைப்பற்றி விவரங்கள் கொடுத்து விடலாம். அதே நிலையில், நிறுவனத்தை துவக்குவதற்கு அனுமதி வருமா வராதா என்று சந்தேகம் இருந்து கொண்டிருக்கின்ற காலத்தில், நிறுவனத்தின் ஆசிரியர்கள் யார் யார் என்று பெயர் கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்கும்போது, இதில் ஒரு முரண்பாடான நிலை இருப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே ' Particulars of the teaching staff ' . . . எப்படிப்பட்ட ஆசிரியர்கள் இருப் பார்கள் என்கின்ற விவரங்களை கேட்பது சரியாக இருக்கும் என்ற

4th November 1966] [திரு. செ. மாதவன்]

முறையில் நான் ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறேன். அது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படியில்லாமல் 'names' என்று போட்டால் ஏற்கனவே இருக்கக்கூடிய நிறுவனங்களுக்குப் பொருத்தமாக இருக்கும். புதிதாக துவக்கப்படும் நிறுவனங்களுக்கு பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். அதே போல, 6-வது பிரிவிலே கூட, அதே கருத்தின் அடிப்படையில் தான் 'பர்ட்டிகுலர்ஸ் ஆஃப் குரூப்ஸ் ஆர் டிவிஷன்ஸ் ஆர் க்ளாஸஸ்' என்று கொடுக்கப்படுகிறது. இது கூட இருக்கிற நிறுவனங்களால் தான் கொடுக்க முடியும். புதிதாகத் தோற்றுவிக்கப்படும் நிறுவனங்களால் எப்படிக் கொடுக்க முடியும் என்று தெரியவில்லை. 'ஸ்ட்ரெங்த் ஆஃப் ஸ்டூடன்ட்ஸ்' கூடக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அவர்களால் எப்படிக் கொடுக்க முடியும் என்று புரியவில்லை. இருக்கின்ற நிறுவனங்கள் கொடுக்கலாம். புதிய நிறுவனங்களால் எவ்வளவு எதிர்பார்க்கிறோம் என்று கூடக் கொடுக்க முடியாது. பின்னாலே தான் டிவிஷன்ஸ், க்ளாஸஸ், செக்‌ஷன்ஸ் எல்லாம் ஏற்படுத்த முடியும். இந்தப் பிரிவிலே இரண்டாக இருக்கின்ற நிறுவனங்களுக்கு ஒரு முறை புதிதாகத் தோற்றுவிக்கப்படும் நிறுவனங்களுக்கு ஒரு முறை என்று ஏற்படுத்தினால் என்னுடைய திருத்தத்திற்குக் கூட அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, திருத்தங்களைப் பிரேரேபித்த உறுப்பினரே கூறியபடி, முன்பு 1,000 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருந்தது, செலெக்ட் கமிட்டியில் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை அதிகபட்சம்தான்; 'நாட் எக்ஸீடிங்' என்று இருக்கிறது. நாங்கள் சொல்லுவதற்காகவாவது குறைக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். 'நாட் எக்ஸீடிங்' என்று தான் இருக்கிறது. எவ்வளவு 'ஃபீஸ்' என்பது நிறுவனங்களைப் பொறுத்ததாக இருக்கும். கனம் அங்கத்தினர் தெரிவித்தவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் விதிகள் செய்வார்கள். கொடுக்கப்படும் 'ஃபீஸ்' 100 ரூபாயாக இருக்கலாம், 50 ரூபாயாக இருக்கலாம். இன்னும் குறைவாகக் கூட இருக்கலாம். குறிப்பாக 250 ரூபாய் 'அப்ளிகேஷன் ஃபீ' என்று போடலாமா என்ற கருத்துக்கூடத் தெரிவிக்கப்பட்டது. அப்படிப் போட்டால் சிறிய சிறிய நிறுவனங்களுக்குத் தொல்லையாக இருக்கும் என்று அப்படிப் போடப்படவில்லை. ஆகையால் இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதே மாதிரி அங்கீகாரத்திற்கு மனுப் போடும்போது விவரம் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறது. இருக்கின்ற விபரங்களைத்தான் கொடுப்பார்கள். விவரம் இருக்கிறது என்றால், இருக்கிறது என்று சொல்லுவார்கள். எவ்வளவு மாணவர்கள், மற்ற வசதிகள் என்ன இருக்கின்றன என்று தெரிவிக்க வேண்டும் என்றால், எந்த அளவுக்குத் தெரிவிக்க முடியுமோ தெரிவிக்க வேண்டும். ஜாயின்ட் செலெக்ட் கமிட்டி நன்றாக ஆராய்ந்து

இந்தப் பிரிவைத் திருத்தியிருக்கிறது. மேலும் இதைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

The amendments were, by leave, withdrawn.

Clause 4 was put and carried.

Clause 5.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 5 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move—

Substitute the following for the words "the words Tutorial Centre" or "Tutorial Institute" in clause 5 (1) (*a*) :—

'the words "Tutorial College".'

SRI T. P. ALAGAMUTHU : I second the amendment.

* திரு. செ. மாதவன் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவு நிறுவனங்களுக்குப் பெயர் வைக்கும் பிரிவு. கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், பெயரில் கட்டுப்பாடு செய்யக் கூடாது என்று சொல்லுவார்கள். பெயரை அவர்கள் இஷ்டப்படி வைத்து விட்டால் அரசாங்க அனுமதி பெற்று இயங்கக் கூடிய நிறுவனங்கள், அகடமிக் இயரில் இயங்கக் கூடிய இன்ஸ்ட்டிட்யூஷன்ஸ் என்று பொது மக்களுக்கு இதில் குழப்பம் ஏற்படும் என்று இந்தப் பிரிவு போடப்பட்டிருக்கிறது. இப்போது 'ட்யூட்டோரியல் சென்டர்' அல்லது 'ட்யுட்டோரியல் இன்ஸ்ட்டிட்யூட்' என்று சேர்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 'ட்யூட்டோரியல் காலேஜ்' என்று போடலாம் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். பிற நாடுகளில் கூட அப்படி இருப்பதாக நான் நினைக்கிறேன். 'ட்யூட்டோரியல்' என்ற வார்த்தை வந்துவிட்டால் அதிலேயே வேறுபாடு இருக்கிறது. ட்யூட்டோரியல் இன்ஸ்டிட்யூட்' அல்லது 'சென்ட்டர்' என்று போட்டால்தான் தெரியும் என்று இல்லை. 'ட்யூட்டோரியல் காலேஜ்' என்பது பரம்பரையாக, பல ஆண்டுகளாக இருக்கிறது. புதிதாக 'காலேஜ்' என்ற வார்த்தையை எடுத்தால் அதனால் ஒரு குழப்பம் ஏற்படும் என்றுகூட நான் நினைக்கிறேன். பெயரில் அதிக வற்புறுத்தல் வேண்டாம், 'ட்யூட்டோரியல் காலேஜ்' என்று இருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

'In sub-clause (1) (*b*), substitute the words "Private Training Centre" for the words "Training Centre".'

SRI S. MADHAVAN : I second the amendment.

4th November 1966]

***திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, இந்த 'ட்ரெய்னிங் சென்ட்டர்' என்ற வார்த்தைகளை மட்டும் போடுவதாக இருந்தால் அதிலே சில சந்தேகங்கள் ஏற்படலாம். ஏனென்றால் சர்க்கார் நடத்தக் கூடிய ட்ரெய்னிங் சென்ட்டர்கள் இருக்கின்றன. ஆகையால் 'ப்ரைவேட்' என்ற வார்த்தையைச் சேர்த்துவிட்டால், தனியார்கள் நடத்தக் கூடியது என்று தெளிவாகத் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும். இந்த 'ப்ரைவேட்' என்ற வார்த்தையை 'ட்ரெய்னிங் சென்ட்டர்' என்பதற்கு மட்டும் சேர்த்துக்கொண்டால் நலமாக இருக்கும். 'ட்ரெய்னிங் சென்ட்டர்' என்று குறிப்பிடும் போது தனியார் ஸ்தாபனம் என்று புரிந்துகொள்ள முடியாமல் குழப்பம் ஏற்பட்டு விடும். ட்ரெய்னிங் சென்ட்டர் என்ற வார்த்தைகளுக்கு அப்படிப் பொருள் கொள்ள முடியாது; அப்படிப் பொருள் கொள்ள நினைக்க மாட்டார்கள். ஏனென்றால், சர்க்கார் ட்ரெய்னிங் சென்ட்டர்கள் இருக்கின்றன. சர்க்கார் நடத்துவதா அல்லது தனியார் நடத்துவதா என்று புரிந்துகொள்ள 'ப்ரைவேட்' என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்று என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகையால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, பொதுவாக, தனிப்பட்ட டிப்ளமா அல்லது டிகிரி கொடுக்கும்படியான கல்லூரிகள் காலேஜ் அல்லது ஹைஸ்கூல் என்று போட்டுக் கொண்டால் மாருட்டம் ஏற்படலாம். சர்க்கார் ரெகக்னைஸ் செய்த கல்லூரி என்று சந்தேகம் ஏற்படலாம். 'ட்யூட்டோரியல்' என்ற வார்த்தை இருப்பதால் 'காலேஜ்' அல்லது 'ஸ்கூல்' என்று போடுவதால் பாதகம் அல்லது மாருட்டம் ஏற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை. இப்போது படிக்கும் மாணவர்களோ, பெற்றோர்களோ சர்க்கார் ரெகக்னைஸ் செய்த கல்லூரி என்று யாரும் தவருக எண்ணம் கொண்டுவிட மாட்டார்கள். ட்யூட்டோரியல் இன்ஸ்டிட்யூட் அல்லது ட்யூட்டோரியல் சென்ட்டர் என்று 'காலேஜ்' என்பதற்குப் பதிலாக இருக்க வேண்டும் என்பது இல்லை. ட்யூட்டோரியல் காலேஜ் என்றும் போடலாம்; அதனுல் மாராட்டமோ, தவறுதலோ ஏற்பட்டு விடாது. சில பேர்கள் 'குட்வில்' மாதிரி பல ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். அந்த முறையில் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படும் என்று சொல்லுகிறார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, பெயரிடும் விஷயம்கூடப் பொறுக்குக் கமிட்டியில் நன்ருக விவாதிக்கப்பட்டது. காலேஜ் என்பது இருக்கக் கூடாது, தவறுதலான கருத்தை அது வெளிப்படுத்தலாம், மாணவர்கள் நிலைமையை உணராமல் ஏமாற்றப்படலாம் என்ற கருத்து பலமாகத் தெரிவிக்கப்பட்டது. எனது சொந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம் என்ருல், காலேஜ் என்று இருந்தால் கூட அதனுல் ஆட்சேபம் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனுல்

நான்கு பேர்கள் சொல்லும்போது அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நானும் ஒப்புக்கொண்டேன். பொறுக்குக் கமிட்டியும் ஏற்றுக் கொண்டது. அந்த வார்த்தை வேண்டா மென்று செலெக்ட் கமிட்டி குறிப்பிட்டிருப்பதை மாற்றுவது முறையல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தது 'ப்ரைவேட்' என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும் என்ற திருத்தம். இவை எல்லாம் ப்ரைவேட் இன்ஸ்டிட்யூஷன்ஸ்தான். ப்ரைவேட் இன்ஸ்டிட்யூஷன்ஸை ரெகுலேட்செய்வது என்று போட்டுவிட்டோம். ஆகையால் ப்ரைவேட் என்று போட வேண்டிய அவசியம் இல்லை. ட்யூட் டோரியல் ஸென்டர், ட்யூட்டோரியல் இன்ஸ்டிட்யூட் என்று இருக்கிறது. இப்போது ப்ரைவேட் இன்ஸ்டிட்யூஷன்களைப் பொறுத்த வரையில் ரெகுலேஷன் போட்டுவிட்டால் அவைகள் நல்ல இன்ஸ்டிட்யூஷன்களாக போய் விடுகின்றன. அதற்கு மேலும் ப்ரைவேட் என்ற போர்டு போட வேண்டிய அவசியம் இல்லை. ஆகையால்தான் இந்தத் திருத்தத்தையும் ஏற்புறுத்த வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

The amendments were, by leave, withdrawn.

Clause 5 was put and carried.

Clause 6.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 6 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move—

'Substitute the following proviso for the existing second proviso in clause 6 :—

"Provided further that in case of refusal of the permission the competent authority shall state the reasons for such refusal in its order and shall also order refund of the fee accompanying the application to the applicant.".'

SRI T. P. ALAGAMUTHU : I second the amendment.

* **திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, 6-வது பிரிவு அனுமதி கொடுப்பது சம்பந்தமாக உள்ள பிரிவு. இந்தப் பிரிவை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நன்றாக ஆராய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இது போன்று ஒரு தொழில் செய்வது, ஒரு புதிய கல்லூரியை ஆரம் பித்து நடத்துவது அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொடுக்கப் பட்ட உரிமையாகும். இந்த உரிமையை ரெகுலேட் செய்வதற்கு ஒரு அதிகாரத்தைப் பெறுகிறோம். அந்த உரிமையை ரெகுலேட் செய்யும்பொழுது அவர்களுக்கு உள்ள அடிப்படை உரிமைக்கு பாதகம் வராமல் இந்தப் பிரிவுகள் அமைய வேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்தாகும். அனுமதி கேட்டால் அனுமதி

4th November 1966] [திரு. செ. மாதவன்]

கொடுக்கிறார்கள் அல்லது இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி அனுமதி இல்லை என்று சொல்லும்பொழுது, பாதி அப்ளிகேஷன் தொகையைத் திருப்பிச் செலுத்த உத்தரவிட வேண்டும் என்று போடப்பட்டிருக்கிறது. பாதித் தொகையில் நமது சர்க்காருக்கு அதிக லாபம வந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. புதிதாக மனுக் கொடுக்கிறார்கள் ஒரு தொழில் செய்ய. சமுதாயத்திற்கு நன்மை செய்வதற்காக ஒரு தொழில் செய்ய முற்படுபவர்களுக்கு அனுமதி மறுத்தால் பாதித் தொகையைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் என்று சொல்லுவது பொருத்தமாகாது. நடைமுறையில் நாசுரல் ஜஸ்டிஸைப் பார்க்கும்பொழுது இப்படி ரெப்யூஸல் செய்யப்படும்பொழுது என்ன நடக்கிறது? இப்பொழுது உள்ள செகண்டு ப்ரொவைஸோவில்

'Provided further that in case of refusal of the permission the applicant shall be entitled to refund,' என்று தான் போடப்பட்டிருக்கிறது. The authority shall order refund, என்று கூட இல்லை. The applicant shall be entitled to refund, என்றுதான் இருக்கிறது. அதிலே கூட கொஞ்சம் இடம் இருக்கிறது. மனுதார்தான் மனு போட வேண்டும். பாதித் தொகையைத் திருப்பிப் பெறுவதற்கு என்று போடப்பட்டிருக்கிறது. சர்க்கார் மனுவை நிராகரிக்கும் பொழுது பாதித் தொகையை ரீபண்டு செய்ய வேண்டும் என்று அதில் இல்லை. அதிலே கொஞ்சம் மனுதார் பாதிக்கப்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மனுதார்கள் காரணங்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய, அவர்களுக்குக் காரணங்களைத் தெரிவிக்கக்கூடிய உரிமையாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் இந்தச் சட்டத்திலிருந்து தெரிய வருகிறது. இதனால் அவர்களுக்குப் பெருத்த பாதகம் ஏற்படும். அரசியல் கூட அதில் நுழையலாம். அதிகாரிகளிடத்தில் அரசியல் இல்லாவிட்டாலும், வேறு இடத்திலிருந்து அரசியல் நுழையலாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். நமது உள்துறை அமைச்சர் சொந்த ஊர், மதுரையில் மேலூர், அங்கே ஒரு தனிப்பட்டவர் நடத்தும் பள்ளிக்கூடம் இருக்கிறது. உள்துறை அமைச்சர் அவர்கள் படித்த காலத்தில்கூட அந்தப் பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. அது ஒரு சிறந்த பள்ளிக்கூடம் என்று அரசாங்க அதிகாரிகளால் சர்ட்டிபைை செய்யப்பட்ட பள்ளிக்கூடம். நல்ல ரெகார்டு எல்லாம் அதற்கு இருக்கிறது. காங்கிரஸ் கட்சித் தலைவர்களே அங்கே விஸிட் செய்திருக்கிறார்கள். அவர்கள் பாராட்டுதல் தந்திருக்கிறார்கள். இவ்வளவு சொல்வதனால் அதில் ஊழல் இருக்கிறதா, இல்லையா என்ற விஷயத்திற்கு நான் போகவில்லை. ஊழல் இருக்கிறதா, இல்லையா என்பதை அரசாங்கம் பரிசீலிக்கவே இல்லை என்பதுதான் குற்றச்சாட்டு. எத்தனையோ மனுக்கள் உள்துறை அமைச்சர் அவர்கள் கையிலேயே கொடுக்கப்பட்டன. அந்த வழியாக உள்துறை அமைச்சர் அவர்கள் பல தடவை போய் வருகிறார்கள். வேண்டியவர், வேண்டாதவர் என்று இல்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடைய பிள்ளைகள் கூட

[திரு. செ. மாதவன்] [4th November 1966

அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில் தவறு நடந்திருக்கிறதா, நடக்கவில்லையா என்றுகூட பரிசீலிக்கவே இல்லை. விசாரிக்காமலேயே அந்தப் பள்ளியின் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுவிட்டது. ஏன் ரத்து செய்யப்பட்டது? ரத்து செய்வதற்குக் காரணம் இருந்தால் நான் அதை ஒத்துக்கொள்வேன். ஆனால் ரத்து செய்வதுபற்றி பரிசீலனை செய்வதற்குக் கூட அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டியது? யாரோ ஒரு அதிகாரி லைசென்ஸை உடனே ரத்து செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டார். அந்த உத்தரவுக்கு மேலாக அரசாங்கம் விசாரிக்க வேண்டும் என்று எழுதப்பட்டது. அப்படி எழுதியதற்குக் கூட பதில் இல்லை, இதுவரைக்கும். அமைச்சர்களுக்கெல்லாம் தெரிந்த இடம் இது, அமைச்சருடைய சொந்த ஊர். இங்கேயே இப்படி நடக்கிறது என்றால், காரணம் தெரிந்துகொள்வதற்குக் கூட உரிமை அளிக்காத ஒரு சட்டத்தை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது? அதனால் நல்ல உள்ளத்தோடு, நல்ல எண்ணத்தோடு தொழில்புரிய முன்வருபவர்களுக்குத் தீமை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலூர் பள்ளி நல்ல முறையில் நடக்கவில்லை என்று உள்துறை அமைச்சர் அவர்கள் நினைக்கக்கூடாது.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய உரிமை பறிக்கப்படக் கூடாது என்ற காரணத்தினால்தான், இரண்டாவது ப்ரொவிஸோவிற்கு ஒரு சிறு விளக்கம் கொடுத்திருக்கிறேன். அதனால் யாருக்கும் பாதகம் வராது. நிச்சயம் அரசாங்கம் உத்தரவு போடும்போது, காரணத்துடன் உத்தரவு அனுப்பவேண்டும். காரணத்தைத் தெரிந்துகொள்வதற்கு மனுதாருக்கு உரிமை இருக்கிறது. ஏதாவது தவறு ஏற்பட்டால், குறுக்கீடு, தலையீடு நடுவில் ஏற்பட்டால், 'ஆஸ் எ மாட்டர் ஆஃப் ரைட்' மனுதார் காரணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு முறையில் தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தினால் அரசாங்கத்திற்கோ அல்லது காங்கிரஸ் கட்சிக்கோ எந்தவிதமான பாதகமும் வந்துவிடாது. ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர் ஸார், ஆன் எ மாட்டர் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் நான் படித்த காலத்திலேயே இருந்த பள்ளி என்று சொன்னார். நான் ஜில்லா போர்டு மெம்பராக இருந்தபோதே அந்தப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. நான் விசாரிக்கவில்லை என்று சொன்னார். நான் நிர்வாகஸ்தர்களையும் கப்ளேன்ட் செய்தவர்களையும் கூட்டி வைத்துப் பேசினேன். ரொம்ப நாட்களாக நடக்கும் பள்ளி, இரண்டுபேரும் சமரசமாகப் போய்விடுங்கள் என்று சொன்னேன். அவர்கள் கேட்கவில்லை. கடைசியில் அதிகாரிகள் பார்த்து பரிசீலனை செய்து உத்தரவு போட்டார்கள். ஆகவே, மந்திரி பரிசீலிக்கவில்லை, மந்திரி சொந்த ஊர் என்றெல்லாம் அங்கத்தினர் அவர்கள் மன்றத்தில் சொல்வது சரியல்ல என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4th November 1966]

திரு. வை. சங்கரன் : இந்தக் கிளாஸில் ஏற்கனவே ஒரு ப்ரொவிஷன் இருக்கிறது.

'Provided that the permission shall not be refused under this section unless the applicant has been given an opportunity of making his representations.'

பாதிக்கப்பட்டவர்கள் ரெப்ரஸென்டேஷன் செய்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்று போடப்பட்டிருக்கிறது. முதலில் என்ன காரணம் என்று 'ஷோ காஸ் நோட்டீஸ்' மாதிரி அவர்களை அதிகாரிகள் எழுதிக் கேட்க வேண்டும். அதற்கு அவர்கள் எக்ஸ்ப்ளனேஷன் கொடுப்பார்கள். மேலும் பின்னாலே அப்பீலுக்கு ப்ரொவிஷன் இருக்கிறது. அப்பீல் செய்யும்பொழுது காரணம் காட்டாமல் பெர்மிஷன் ரெப்யூஸ் செய்யப்பட்டுவிட்டது என்று மனுதார் சொல்லலாம். அதில் அவர்களுக்கு ஓரளவு அனுகூலம் கிடைக்கும். இதிலே இரண்டு விதமான சந்தர்ப்பம் இருக்கிறது. முதலில் 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுக்கும்பொழுது எக்ஸ்ப்ளனேஷன் கொடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. பிறகு அப்பீலில் ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. இருந்தாலும், எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், கடைசியில் பெர்மிஷன் ரெப்யூஸ் செய்யும்பொழுது காரணம் அளிப்பது நலமாக இருக்கும். 'பைனலாக' ரெப்யூஸ் பண்ண ஆர்டர் போடும்பொழுது காரணம் கொடுப்பது நல்லது என்று தான் நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் அவர்களுக்கு ஓரளவுக்குக் கஷ்டம் கூட ஏற்படலாம். கடைசியில் ஆர்டர் போடும்பொழுது 'ரீஸன்ஸ் ஃபார் தி ரெப்யூஸல்' கொடுப்பது கொஞ்சம் நன்மையாக இருக்கும்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைச் சபா நாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டம், 'நாசுரல் ஜஸ்டிஸ்' எல்லாவற்றையும் இதிலே கொண்டு வந்தார்கள். நான் அரசியல் அமைப்புச் சட்டத்தை கையாள்வதற்கு அவ்வளவு தூரம் பக்குவம் அடையவில்லை. ஆனால், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமாகச் செய்யக் கூடாது என்று உறுதி கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரியாவிட்டாலும், தெரிந்தவர்களிடத்தில் ஆலோசனை கேட்டுத் தான் ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு நான் இணங்குகிறேன்.

இதிலே முக்கியமானது அனுமதி மறுப்பதாக இருந்தால், மறுப்பதற்கு முன்பு காம்பிடென்டு அதாரிடி மனுதாருக்கு காரணம் என்ன என்று சொல்லி, அவர்கள் அதற்கு என்ன சொல்கிறார்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுடைய எக்ஸ்ப்ளனேஷனைக் கேட்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படிக் கேட்ட பிறகு தான் உத்தரவு போடுவார்கள். உத்தரவு போடும்பொழுது காரணம் சொல்லித் தான் போடுவார்கள். காரணம் சொல்லித் தான் ஆக வேண்டும் என்று போட்டுவிட்டால், எது காரணம், இது தான் காரணமா என்றெல்லாம் அதற்குள்ளே புகுந்து

[திரு. எம். பக்தவத்சலம்] [4th November 1966

சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள், வழக்கறிஞர்கள் எடுத்துக் கொண்டு வழக்குத் தொடர்வார்கள். மேலும் மேலும் தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கும், ஒரு முடிவு இருக்காது. மறுப்பதற்கு முன்னால் 'ஹியரிங்' கொடுக்கிறார்கள். 'ஹியரிங்' கொடுத்துத் தான, பிறகு உத்தரவு போடுவார்கள். என்ன காரணத்திற்காக அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று சாதாரணமாக உத்தரவில் போடுவார்கள். இதற்காக சட்டத்தில் ஒரு திருத்தம் செய்ய வேண்டும் என்பது முறை அல்ல. அது சிக்கலைத் தான் கொண்டு வந்து சேர்க்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை. இதை வற்புறுத்த வேண்டாம் என்று கனம் அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பணம் திருப்பிக் கொடுப்பது என்றால், கேட்டால் தான் திருப்பிக் கொடுப்பார்கள் வேண்டியவர்கள், அக்கறை உள்ளவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. பணத்தில்அக்கறை உள்ளவர்கள் கேட்கிறார்கள். பணம் அரசாங்கத்திடம் இருக்க வேண்டும், திருப்பி எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று நினைக்கிறவர்கள் திருப்பிக் கேட்காமல் இருந்து விடுவார்கள். அரசாங்கத்திற்குக் கொடுத்ததை மறுபடியும் திருப்பிக் கேட்காமல் கொடுப்பதில்லை. தர்ம ஸ்தாபனங்களில் கூட இப்படித் தான். இதுதான் பொதுவான காமன் லா. அரசாங்கம் பாதித் தொகையை கொடுத்துத் தான் ஆகவேண்டும் என்பது அல்ல பாதித் தொகை திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டால் கொடுக்கப்படும் என்று போட்டிருக்கிறது. வரியாகக் கேட்கவில்லை. பரிசீலனை செய்து முடிந்த பிறகு தான் இல்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது, பரிசீலனை செய்து தான் கடைசியில் இல்லை என்று முடிவு சொல்லப்படுகிறது. பரிசீலனை செய்வதற்கு பணம் செலவாகிறது. அதற்காகத் தான் அனுமதி மறுக்கப்பட்டால் பாதித் தொகை திருப்பிக் கொடுக்கப்படவேண்டும் என்று போட்டிருக்கிறது. ஆனால் பாதித் தொகையை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டால் தான் திருப்பிக் கொடுக்கப்படும். சில பேர்கள் பாதித் கொடுத்துத் தான் ஆகவேண்டும் என்பது அல்ல பாதித் தொகை தொகை வேண்டாம் என்று இருந்து விடலாம். வேண்டாம் என்று இருந்துவிட்டால் பாதித் தொகை திருப்பிக் கொடுக்க வேண்டும். என்பது அல்ல. திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று மனுச் செய்தால், பாதித் தொகை திருப்பிக் கொடுக்கப்படும் என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று தான் கருதுகிறேன்.

The amendment was put and lost.

Clause 6 was put and carried.

Clause 7.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 7 do stand part of the Bill.'

4th November 1966]

SRI S. MADHAVAN : Sir, I move—

Add the following proviso after sub-clause (1) :—

"Provided before such cancellation the competent authority shall see that adequate arrangements have been made for the continuance of the instruction of the students of such institution for the period of study for which the students have been admitted and for the refund of the fees paid by the students."

SRI T. P. ALAGAMUTHU : I second the amendment.

MR. DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

* திரு. செ. மாதவன் : சார், இந்த 7-வது பிரிவிற்கும் 13-வது பிரிவிற்கும் இப்பொழுது இருக்கிற வேற்றுமை நீக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். மற்ற திருத்தங்களை நமது முதல் அமைச்சர் கொள்கை அளவில் எதிர்த்தாலும், நிச்சயமாக இந்தத் திருத்தத்தை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன். காரணம், நன்மை செய்ய வேண்டுமென்றுதான் இதைக் கொடுத்திருக்கிறேன். இதிலே 7-வது பிரிவு 'Power to cancel permission 13-வது பிரிவு, 'Closure of Private Educational Institution' ஒரு தனிப்பட்ட பள்ளியை மூடுவதாக இருந்தால் என்னென்ன செய்ய வேண்டும் என்று 13-வது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல தனிப்பட்ட பள்ளி நடத்துபவர் தவறுகள் செய்தால், அதிகாரி அனுமதியை ரத்து செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, 7-வது பிரிவிலே. ஆகவே, இரண்டும் ஒன்றுதான். ஒன்று சர்க்காரே ரத்து செய்கிறது, மற்றொன்று அவர்களாக மூடுவது. அப்படி அதிகாரி அனுமதியை ரத்து செய்யும் போது, படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுடைய கல்வி முடியும் வரை அவர்களுடைய படிப்புக்கும் உத்தரவாதம் கொடுக்கப் பட வேண்டும். ரத்து செய்யும் நோட்டீசிலேயே அது குறிக்கப் படவேண்டும். ஏழாவது பிரிவிலே, The competent authority **may at any time** என்றிருக்கிறது. இந்த வார்த்தைதான் பரிசீலிக்கப் படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்தக் காலத்திலும் ரத்து செய்யலாம். பள்ளிக் கால, அகாடமிக் இயர் மத்தியிலே ரத்து செய்யப்பட்டால், படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு என்ன உத்தரவாதம் அவர்கள் படிப்பை முடிக்க ? ஆகவே, 13-வது பிரிவைப் போல, இந்தப் பிரிவிலேயும் பாதுகாப்பு இருக்க வேண்டும். கான்சல் செய்து உத்தரவு போடும்போது, ஏற்கனவே படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு அவர்கள் தொடர்ந்து படிக்கவும், அவர்கள் கட்டியிருக்கும் சம்பளம் என்ன ஆகும் என்பதற்கும் விளக்கம் வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இது மிகப் பொருத்தமான திருத்தம். இதை ஆட்சேபிக்க ஒன்றும் இல்லை என்று சொல்லி இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வை. சங்கரன் : சர்க்கார் அதைக் கான்சல் செய்யும் போது மற்ற அரேஞ்ஜ்மெண்டுகள் Continuance of the Instruction of the Students of such institution செய்வார்கள் என்றாலும் பொதுவாக ஒரு குறையும் வராமல் இருப்பதற்காக ரீபண்ட் செய்ய வேண்டும் என்பது மாணவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். 13-வது பிரிவிலே ரீபண்ட் செய்ய வேண்டும் என்பதுபோல, அதே மாதிரி இங்கேயும் ப்ரொவிஷனுக்கு இடம் இல்லாவிட்டாலும், அரசாங்கம் அதையும் பரிசீலிக்க வேண்டும். திடீரென்று கான்சல் செய்துவிட்டால், நட்டநடுவில் விட்ட மாதிரிப் போய்விடும். ஆகவே, அதற்கான ஏற்பாடுகளைச் சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தங்களைப் பரிசீலனை செய்து பார்த்தால் தெரியும் இவற்றிற்கு அவசியம் இல்லை என்று. கொள்கை அளவில் வேற்றுமை ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் இம்மாதிரி நன்றாக ஆராய்ந்து திருத்தங்களைக் கொண்டு வந்ததற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்றுதான் நினைக்கிறேன். திருத்தத்தினால் வேறு சிக்கல் வரக்கூடுமா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால், திருத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையைக் காண்கின்றேன். 7-வது பிரிவிலே அங்கீகாரம் ரத்துசெய்யப்பட்டால் தொடர்ந்து படிப்பு நடக்க வேண்டும் என்றால், அங்கே என்ன நிலைமை இருக்குமோ? தொடர்ந்து பள்ளியை நடத்தக்கூடிய நிலைமை இருக்குமா என்று பார்க்க வேண்டும். நடத்த முடியாத நிலைமை அடைந்திருந்தால் என்ன செய்வது என்றும் பார்க்க வேண்டும். அப்படி ஏதாவது செய்யப் போய் அது விபரீத நிலைமை உண்டாக்கிவிட்டால் என்ன செய்வது? ஆகவே, தொடர்ந்து நடத்த வேண்டும் என்று சட்டத்திலே போட்டால், அதனால் சிக்கல் ஏற்படும். அந்தக் காரணத்தினால், இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clause 7 was put and carried.

Clause 8.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 8 do stand part of the Bill.'

திரு. செ. மாதவன் : சார், ஏற்கனவே அப்ளிகேஷன் தொகையைக் குறைக்க வேண்டும் என்று நான் கொடுத்த திருத்தம் நிராகரிக்கப்பட்டு விட்டதால், இப்பிரிவிற்கு நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை நான் பிரேரேபிக்க வில்லை.

Clause 8 was put and carried.

Clauses 9 to 14 were put and carried.

4th November 1966]

Clause 15.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 15 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move—

'In clause 15, for the words "as it may think fit", substitute the words "as warranted by the provisions of this Act or the rules made under this Act.".'

SRI T. P. ALAGAMUTHU : I second the amendment.

***திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த 15-வது பிரிவுதான் இன்றைக்கு தனிப்பட்ட நிறுவனங்களை நடத்துபவர்களுக்குப் பீதியையும் பயத்தையும் கொடுத்திருக்கிறது. இது 'Directions of the competent Authority' இதன்படி எந்த நோக்கிலும் அந்த அதிகாரி இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு அவர்கள் என்னென்ன செய்யவேண்டும் என்றும், அவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும், உத்தரவுகள் கொடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொருத்த வரையில், இதற்கு ஆட்சேபம் இல்லை. இந்த அதிகாரம் அரசாங்கத்திற்குத் தேவைதான். ஆனால், இதிலே கொடுத்திருப்பது, as it may think fit. என்று. அதன் படி நிறைய 'டிஸ்க்ரிஷன்' கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அப்பொழுது அந்த அதிகாரங்களுக்கு வரம்பு இல்லாத நிலைமை ஏற்படும். நல்ல நோக்கத்தோடு நடக்கும் கல்விஸ்தாபனங்கள் நடத்துவதில் தயக்கம் ஏற்படக்கூடும். ஆகவே as it may thirle fit. என்பதற்குப் பதிலாக as warranted by the provisions of this Act 10 the rules made under this Act என்றிருக்க வேண்டும் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதுதான் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கும் என்றும் நினைக்கிறேன். சட்டத்திலே, விதிகளிலே போடப்படும் கொள்கைகளை நடைமுறையிலே கொண்டு வர அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'as it may think fit' என்று இருந்தாலும், சட்டப்படி, விதிகளின்படித்தான் செய்வார்கள் என்றிருந்தாலும், அதைத் தெளிவாக அந்த முறையில்தான் டைரக்ஷன்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டால், தவறுகள் இருக்காது. கொஞ்சம் பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்களுக்கு 'ட்ராப்டிங்' நன்றாகத் தெரியும், எல்லாச் சட்டங்களிலும், இந்த விதமான வகையில்தான் அதிகாரம் கொடுக்கப்படும், 'as it may think fit' or 'as it deems fit' என்றுதான் போடுவது வழக்கம். இதற்கு வேறு விதமாக என்றைக்கும் யாரும் பொருள் கொடுத்ததில்லை; கோர்ட்டிலே கூட தீர்ப்புக் கொடுத்ததில்லை. 'as it thinks fit' or 'as it mak think fit' என்று போட்டாலும்,

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [4th November 1966

சட்ட வரம்பிற்கு உட்பட்டு என்றுதான் அர்த்தம். அவர்கள் என்னென்ன செய்வார்கள் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை. காரணம், நடைமுறையிலே, அனுபவத்திலே எப்படி எப்படி ட்யூடோரியல் பள்ளிகள் விஷயத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்று தேவைப்படுகிறது என்பதையெல்லாம் பார்த்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clause 15 was put and carried.

Clauses 16 to 23 were put and carried.

Clause 24.

10-30 a.m. MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 24 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment.—

'Substitute the following for clause 24 :—

"24. *Jurisdiction of Civil Court.*—Any manager aggrieved by an order under section 17 may file a suit in the District Court having territorial jurisdiction to set aside such order within three months from the date of the receipt of such order.".'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second the amendment.

* **திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற சட்டங்களைக் கொண்டுவருகிறபோது, பொதுவாக நம்முடைய அரசாங்கம் சிவில் நீதி மன்றங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைத் தடுப்பதையே ஒரு வழக்கமாக வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்தக் குறிப்பிட்ட மசோதாவிலேயும் அப்படிப்பட்ட நிலைமையைக் கொண்டுவர வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அரசாங்கம் ஏதாவது உதவி கொடுத்தோ அல்லது அரசாங்கத்தினிடமிருந்து பயன் எதையாவது பெற்றோ யாருமே இந்த நிறுவனங்களை நடத்தவில்லை. அவர்களே சொந்த முறையில் பணம் போட்டு, நல்ல நோக்கத்துடனோ அல்லது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனோ, இன்னும் பல நோக்கத்துடனோ இத்தகைய நிறுவனங்களை ஆரம்பிக்கிறார்கள். இப்படி ஆரம்பிக்கபடுகிற நிறுவனங்களுக்கு அனுமதி கொடுப்பது, அனுமதி மறுப்பது அல்லது இடையிலே அனுமதியை ரத்து செய்வது பற்றியெல்லாம் மசோதாவிலே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய அதிகாரங்களை நம்முடைய சர்க்கார் எடுத்திருக்கும்போது, 'காம்பிடென்ட் அதாரிடி' என்று போட்டு, அதிலும் 17-வது பிரிவில் 'அப்பெலட் அதாரிடி ஆஸ் மே பி ப்ரிக்ஸ்ரைப்டு' என்று போட்டு, அதோடு விட்டுவிட்டால், அதற்கு அடுத்தபடியாக,

கொடுக்கப்பட்ட உரிமையை நிலைநிறுத்துவதற்கு அவர்கள் எங்கே செல்லுவது என்பது பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது, "ரிட் ஜுரிஸ்டிக்ஷன் இருக்கிறது" என்று சொன்னார்கள். சட்டம் எனக்குத் தெரியாது, அரசியலமைப்புச் சட்டம் அதிகம் படிக்கவில்லை என்று ஒப்புக்குச் சொன்னாலும், 'ரிட் ஜுரிஸ்டிக்ஷன்' என்றால் என்ன என்று அவர்களுக்கு நிச்சயமாகப் புரியும். என்ன என்ன, 'லிமிடேஷன் ஃபார் ரிட் ஜுரிஸ்டிக்ஷன்' இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். ஆர்ட்டிகிள் 226-இன் கீழோ, ஆர்ட்டிகிள் 32-இன் கீழோ உயர்நீதி மன்றத்திற்கோ சுப்ரீம் கோர்ட்டிற்கோ 'ரிட் ஜுரிஸ்டிக்ஷன்' இருக்கிறது என்று எடுத்து நிரூபித்தாலும், ஒரு ரிட்டை அனுமதிப்பதற்கு முன்பு அவர்கள் எவ்வளவோ பார்க்கிறார்கள். எந்தக் காரணத்திற்காக மட்டும் நாங்கள் ரிட் அனுமதிக்கலாம் என்று அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்காக ஒன்று சொல்வேன். 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் தேர்தல் நடந்ததற்குப் பிறகு ஏராளமான ரிட்டுகள் போடப்பட்டன, நம்முடைய உயர்நீதி மன்றத்திலே. அத்தனை ரிட்களையும் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி ஒரே நாளில், ஒரே மணி நேரத்தில், தள்ளிவிட்டார். ரிட்டைப் பரிசீலிக்கமாட்டேன் என்று அவர் சொன்னதற்குக் காரணம், இந்தச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமையாகச் சில கொடுக்கப்பட்டிருக்கின்றன, அவற்றை இது பாதிக்கிறது, அடிப்படை உரிமைகளுக்கு ரிட் போட முடியாது, அதற்கு ரிட் ஜுரிஸ்டிக்ஷன் கிடையாது. அதற்குமேல் ஏதாவது தவறுகள் நேரிட்டால், அடிப்படை உரிமை பறிக்கப்பட்டிருந்தால்தான் ரிட் போடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

நாங்கள் இந்த மன்றத்தில் பல முறை கேட்டோம். ஒரு சட்டம் அல்ல; பல சட்டங்கள் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன. அத்தனை சட்டங்களினாலும் பாதிக்கப்படுகிறவர்கள் கிராமப் புறங்களில் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் சென்னைக்கு வந்து, சென்னை உயர்நீதி மன்றத்தில்தான் ரிட் போடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காக மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவை ஏற்படுத்தலாம் என்று சொன்னோம். 'அது தேவை இல்லை' என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மறுத்துவிட்டார்கள். ரிட் ஜுரிஸ்டிக்ஷன் மட்டும் கொடுத்தால் போதுமா, அவர்கள் எல்லோரும் சென்னைக்கு வர முடியுமா என்பதைத்தான் பரிசீலிக்க வேண்டும். சிவில் கோர்ட் என்றாலே ஏன் இப்படி நம்முடைய சர்க்கார் வெறுக்கிறது என்று புரியவில்லை. நம்முடைய அமைச்சர்களும் சிவில் கோர்ட்டுக்குப் போயிருப்பார்கள். தவறு நடக்கிறதென்றால் உரிமையை நிலைநாட்டிக்கொள்ளுவதற்கு மக்கள் சிவில் கோர்ட்டுக்குப் போவதால் பெரிய தவறு ஏற்பட்டுவிடாது. நாங்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தில் "டிஸ்ட்ரிக்ட் கோர்ட்" டுக்குப் போகலாம் என்று கொடுத்திருக்கிறோம். முதல் அப்பீல், இரண்டாவது அப்பீல் பற்றியெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் நேற்று குறிப்பிட்டார்கள். அந்த சந்தேகத்திற்கு இடம் அளிக்காத முறையில் எங்களுடைய திருத்தம் அமைந்திருக்கிறது. "மாவட்ட நீதிபதி" என்று தான்

நாங்கள் சொல்லுகிறோம். சி.பி.சி. யின் கீழ் 'ரிவிஷன்' போடலாம். அதற்கு மேல் அப்பீல் போடலாம். அதோடு முடிந்துவிடும். கனம் முதல் அமைச்சர் அவர்கள் எதிர்பார்ப்பதுபோல் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. முன்சீப் கோர்ட், சப்-கோர்ட், டிஸ்ட்ரிக்ட் கோர்ட், ஹைகோர்ட் இவற்றுக்கெல்லாம் போய்த் தடங்கல ஏற்படாது. ஆகவே, மாவட்ட நீதி மன்றங்களுக்கு இந்த உரிமையைக் கொடுப்பதில் தவறு இல்லை, இந்த உரிமையை அவர்களுக்குக் கொடுப்பதனால் மக்களுக்கு நன்மை தான் ஏற்படும். எந்தவிதமான சந்தேகமும் ஏற்படாதபடி வைத்துவிட்டால், மக்கள் நீதியைப் பெறுவதற்கு சௌகரியமாக இருக்கும், சட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்படும். நீதிக்குப் போராடலாம் என்ற நல்ல நம்பிக்கையாவது ஏற்படும். அந்த நம்பிக்கையிலாவது முதல் அமைச்சர் அவர்கள் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் துணைச் சபா நாயகர் அவர்களே, காம்பிடென்ட் அதாரிடி முடிவு செய்தால் அரசாங்கத்திற்கு அப்பீல் இருக்கிறது, மேற்கொண்டு வழக்குமன்றத்திற்கு இந்த வழக்கைக் கொண்டு போக வேண்டும், அதைத் தடுக்கக் கூடாது என்பதுதான் கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்களுடைய திருத்தத்தின் நோக்கமாகும். நீதி மன்றத்திற்கு கொண்டு போவது என்றால், ஜில்லா ஜட்ஜ் மாத்திரம் இருந்தால் போதும் அதற்கு மேலே வேண்டாம் என்று சொல்லுவது முறையாக இருக்காது. ஏனென்றால், சிறிய டூடோரியல் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கலாம், அது ஜில்லா கோர்ட்டைத் தேடி வருவது கூடக் கஷ்டம் தான். சாதாரணமாக வழக்கு போட்டால் முன்சிப் கோர்ட்டிலிருந்து தொடங்க வேண்டியிருக்கும். முன்சிப் கோர்ட்டிலே தொடங்கினால் மேற்கொண்டு சுப்ரீம் கோர்ட் வரையில் போவதைத் தடை செய்வதும் நியாயமாக இருக்காது. ஆனால், இம்மாதிரியெல்லாம் ஒவ்வொன்றாக வழக்குத் தொடர்ந்து கொண்டு போவதென்றால் முடிவே இருக்காது. சிவில் கோர்ட்டை கண்டு யாருக்கும் அச்சம் இல்லை ; எனக்கு அச்சம் இல்லை ; கவலை இல்லை. சிவில் கோர்ட் நீதி செலுத்தும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், வழக்கு அதிகரிக்கக் கூடாது. டூடோரியல் நிறுவனங்களைப் பொறுத்த வரையில், இம்மாதிரி வழக்குகளைத் தொடர்ந்து கொண்டே போனால் ஒரு 'அன்ஸர்ட்டென்' நிலைமை ஏற்படும், மாணவர்கள் இதிலே பாதிக்கப்படுவார்கள். மாணவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் முக்கியமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வழக்குகள் தொடர்ந்து நீண்ட காலம் நடப்பதாக இருந்தால், மாணவர்களுக்கு அதனால் பாதகம் ஏற்படும். 'இன்ஜங்ஷன்' கேட்கலாம். 'இன்ஜங்ஷன்' கொடுத்துத் தொடர்ந்து நடத்தலாம். மாணவர்களுடைய நிலை அப்பொழுது கவனிக்கப் பட முடியாமல் போய்விடும். ஆகையால்தான், இதெல்லாம் வேண்டாம் ன்று போட்டிருக்கிறோம். சிவில் கோர்ட்டிலே நம்பிக்கை இல்லாமல் இல்லை. வழக்கை அதிகப்படுத்தக் கூடாது என்பது ஒன்று. மாணவர்களுடைய நலன் பாதுகாக்கப்படுவதில் எந்த விதமான தடையும் இருக்கக் கூடாது என்பது மற்றொன்று.

4th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ரிட் ஜூரிஸ்டிக்ஷனைப்பற்றிக் கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சட்டம் எல்லாம் நன்றாகப் படிக்கவில்லையென்றாலும், ரிட் எப்படி நடக்கிறது என்பது எனக்குத் தெரிந்திருக்கிறது. ரிட் கணக்கு வழக்கில்லாமல் வருகிறது. ஏராளமான ரிட் மனுக்கள் ஹை கோர்ட்டுக்கு நாள்தோறும் வருகின்றன. நீதிபதிகள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்; ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கிறார்கள். எது எதற்கெல்லாமோ ரிட் வருகிறது. கணவன் மனைவி தகராறு ஏற்பட்டு, சேர்ந்து வாழ வேண்டுமென்றால் அதற்குக்கூட ரிட் வந்து விடுகிறது. ரிட் போட்டு ஸ்டே வாங்கிவிட்டால், எப்படி ஸ்டேயை நிறைவேற்றுவது என்பது கூடப் புரியாமல் போகிறது. அப்படி வாங்கப்பட்ட ஸ்டேயை எப்படி நிறைவேற்றுவது என்று தெரியாத அளவிற்கு ஸ்டே கொடுக்கப்படுகிறது. ஆகையால் ரிட் ஒன்றும் குறைவில்லை. யார் வேண்டுமானாலும் ரிட் போடலாம், அந்த ரிட் எப்போதும் இருக்கிறது. அதற்குத் தடை இல்லை. அனாவசியமாக வழக்கு வேண்டாம் என்ற காரணத்தினால்தான் இதைப் போட்டிருக்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கு இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஒரு சந்தேகம். முதல் அமைச்சர் அவர்கள், "அரசாங்கத்திற்கு அப்பீல் செய்வதற்கு வகை இருக்கிறது" என்று சொன்னார்கள். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. 17-வது பிரிவில் 'அதாரிடி' என்று போட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு எப்படி அப்பீல் செய்ய முடியும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 'அதாரிடி' என்றால் யார் என்று விதிகளிலே விளக்கப்படும்.

The amendment was put and lost.

Clause 24 was put and carried.

Clause 25.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That clause 25 do stand part of the Bill'.

I think, in view of the decision of the House in respect of the amendment of Sri S. Madhavan to clause 24, the amendment given notice of by the same Member for this clause, is not necessary.

Clauses 25 to 30 were put and carried.

Clause 1.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That clause 1 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN: Sir, I move the following amendment:—

'Substitute the following for sub-clause (3) in clause 1:—

"(3) (a) The provisions of this Act shall apply to every private educational institution as defined in this Act.

(*b*) Notwithstanding anything contained in clause (*a*), nothing contained in this Act shall apply to any educational institution—

(i) maintained, recognised or approved by or under authority from the Central or State Government or maintained or approved by, or affiliated to, any University established by law; or

(ii) imparting medical education.''.'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second the amendment.

*** திரு. செ. மாதவன் :** கனம் துணை சபாநாயகர் அவர்களே, இதுவரையில் கொடுத்த திருத்தங்களெல்லாம் அரசாங்கத்தினுடைய அதிகாரத்தைக் கொஞ்சம் குறைப்பதாக இருந்ததால் கனம் முதல் அமைச்சர் அவர்கள், அவற்றை எதிர்த்தார்கள். ஆனால், இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், எந்த நோக்கத்தோடு அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததோ, அந்த நோக்கத்தைச் சரி வர நிறைவேற்றுவதற்கு உதவியாக இந்தத் திருத்தம் அமையும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இந்த நிறுவனங்களிலே எந்த நிறுவனங்களை இந்தச் சட்டத்தின் கீழ்க் கொண்டுவரலாம், எந்த நிறுவனங்களைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை என்பது பிரச்சினை. அதற்கு ஒரு விளக்கம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது பொதுவான செக்ஷனிலே, 'ஷார்ட் டைடில்' எக்ஸ்டென்ட், அண்டு கமென்ஸ்மென்ட்' என்று முன்பு இருந்தது. இப்பொழுது "அப்ளிகேஷன்" என்று சேக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் தனியார் ஸ்தாபனங்கள் எல்லாவற்றுக்கும் பொருந்தும் என்று போட்டுவிட்டு, டெக்னிகல் எஜுகேஷன் போதிக்கக்கூடிய ஸ்தாபனங்களாக இருந்தால் 50 பேர்களுக்கு மேல் உள்ள ஸ்தாபனங்களுக்கு மட்டும்தான் என்பதாகவும், மற்ற ஸ்தாபனங்களுக்கு 100 பேர்களுக்கு மேல் மாணவர்கள் இருந்தால் தான் என்பதாகவும், வருட வருமானம் 6,000-க்கு அதிகமாக இருந்தால்தான் என்பதாகவும் பல விதிவிலக்கு ப்ரொவிஷன்களை இந்தச் சட்டத்தில் போட்டிருப்பதைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம். இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதன் காரணமே இதுபோன்ற நிறுவனங்களை ஒழுங்கு படுத்த வேண்டும்—அவை சின்ன நிறுவனமா, பெரிய நிறுவனமா, அவற்றின் வருட வருமானம் என்ன என்பதைப்பற்றி எல்லாம் நமக்கு நோக்கம் இல்லை—மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையில், சமுதாயத்தில் கல்வியைப் போதிக்கின்ற ஸ்தாபனங்கள் செம்மையாகச் செயல் பட, அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும் என்கிற கருத்தை மத்திய சர்க்கார் கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். இதுபோன்ற சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்றார்கள். அவரது கருத்தை கனம் முதல் அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி இருக்க இந்தச் சட்டத்தில் இதுபோன்ற விதிவிலக்கு ஷரத்துக்களைச் சேர்ப்பதானது நம்முடைய அடிப்படை நோக்கத்தையே பாதிக்கும். சர்க்கார் மறைமுகமாக சிலபேர்களுக்கு விதி விலக்குக் கொடுக்கப் பார்க்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை நான் சொல்லவில்லை. அந்த வகையில் தான் சட்டத்தில் சந்து

4th November 1966] [திரு. செ. மாதவன்]

பொந்துகளை இவை ஏற்படுத்தும். நான் படிக்கிற காலத்திலேயே பார்த்திருக்கிறேன். ஒரு ட்யூடோரியல் காலேஜ் என்ருல் பல இடங்களில் அதற்குப் பிராஞ்சு வைத்திருப்பார்கள். ஒரே ஆசிரியர் இன்று இங்கே வகுப்பு எடுப்பார். நாளை ப்ளேனில் சென்று திருச்சியில் வகுப்பு எடுப்பார். அடுத்த நாள் மதுரையில் எடுப்பார். அந்த பிராஞ்சுகள் எல்லாம் இன்றைக்கு ஒரே பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ருலும், நாளையே இந்தச் சட்டத்தில் உள்ள சந்துபொந்துகளைக் கொண்டு தப்பிக்கொள்ள ப்ராஞ்சுகளின் பெயர்களை எல்லாம் மாற்றிவிடுவார்கள். இந்தச் சட்டத்தில் உள்ள விதிவிலக்குகள் எல்லாம் அவற்றுக்குத் தான் எளிதாகப் பயன்படக்கூடியனவாக இருக்கின்றன. ஆகவே தான், எல்லா ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும் வகையில் இந்தச் சட்டம் அமையவேண்டும் என்பதாகத் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

இதற்குக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் நேற்று பதில் சொல்கிறபோது ஒரு ஆசிரியர் தம் வீட்டில் உட்கார்ந்து பத்து பேர்களுக்கு ட்யூஷன் சொல்லிக்கொடுத்தாலும், அவரும் கூட இதனுல் பாதிக்கப்பட்டுவிடுவார்களே என்பதாகப் பச்சாதாபம் காட்டிச் சொன்னுர்கள். அப்படி நிச்சயமாக வராது என்பது என்னுடைய வாதம். இன்ஸ்டிட்யூஷன் என்று சொல்கிறபோது ஒரு ஆசிரியர் தம் வீட்டில் வைத்துச் சொல்லிக்கொடுப்பது என்பது அடங்காது. இன்ஸ்ட்டிட்யூஷன் என்கிறபோதே அது ஆர்கனைஸ்டு ஒன்ருகத் தான் வரும். ஆகவே, இப்படி இந்த வாதத்தைச் சொல்லி விதிவிலக்குக் கொடுப்பது என்பது நம்முடைய நோக்கத்தையே தகர்க்கக் கூடிய தாகத்தான் ஆகும். இதை மறு பரிசிலனை செய்ய வேண்டும். கொள்கையை நாம் ஏற்றுக்கொண்டு சட்டத்தில் இது போன்ற விதி விலக்குகளை வைத்துக் கொண்டு வந்தால் சட்டம் நமக்குப் பிரயோசனம் அற்றதாகப் போய்விடும். இன்ஸ்டிட்யூஷன் என்பதற்கு என்ன பொருள் என்பதை நானும் டிக்ஷனரியில் பார்த்தேன். தனிப்பட்டவர்கள் தம் வீட்டில் வைத்து சொல்லிக் கொடுப்பது நிச்சயமாக வராது. அதுபற்றி குழப்பம் எனக்கு இல்லை. குழப்பம் இருப்பதாக நினைத்தாலும் ஆட்சேபம் இல்லை. சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் நோக்கம் முழுக்க முழுக்க வெற்றி பெறவேண்டுமானுல், இதுபோன்ற விதிவிலக்குகளை எடுத்துவிடலாம். என்னுடைய திருத்தத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் துணை சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து பேசிய கனம் அங்கத்தினர் அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இந்த மாதிரி நல்ல நோக்கத்தோடு செய்யப்படுகிற சட்டத்தில் குறைகள் இருக்கக்கூடாது என்பது அவருடைய கருத்து. ஆனுல் அவர் குறிப்பிட்டது போல அவர் சொல்வதை ஏற்றுக்கொள்வதனுல் அரசாங்கத்திற்கு இன்னும் அதிக அதிகாரம் வருகிறதே, ஏற்றுக்கொள்வது தானே என்ருல்—அதிக அதிகாரத்தை

[திரு. எம். பக்தவத்சலம்] [4th November 1966

எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது ஒன்றும் நம்முடைய கருத்தல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதுதான் நம் லட்சியம். அதிகாரத்தை அனுபவிக்க வேண்டும் என்பது நோக்கம் இல்லை. "நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். நாங்கள் அதிக அதிகாரம் தருகிறோம்" என்றால் அது அவசியமா, விதிவிலக்கையே எடுத்துவிடுவது நல்லதா என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முதல் மசோதாவிலேயே—ஒரிஜினல் பில்—விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அப்போது யாரும் விலக்கே கூடாது என்று பேசவில்லை. ஜாயின்ட் செலெக்ட் கமிட்டியில் வந்தபோதும் சில ஸ்தாபனங்கள் 50 என்று இருப்பதை 100 என்று ஆக்க வேண்டும் என்றார்கள். அதுவும் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த வகையில்தான் இந்த மசோதா திருத்தப்பட்டு இருக்கிறது.

ஆனால், இதற்கு அவசியமா என்று கேட்கலாம். கூடியவரையில் சிறிய ஸ்தாபனங்கள்—இந்தச் சட்டத்தினால் பல தொல்லைகள் ஏற்படக்கூடும் என்று வைத்துக்கொண்டால்—அந்தத் தொல்லைகளினால் பாதிக்கப்படாது இருக்கவேண்டும். மாணவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பது தான் நம் நோக்கமே தவிர, சிறிய ஸ்தாபனங்கள், பெரிய ஸ்தாபனங்கள்—எல்லாவற்றையுமே சில நிர்பந்தங்களுக்கு உள்ளாக்கவேண்டும் என்பது நம் நோக்கம் அல்ல. நான் அன்றைக்கே சொன்னேன். முக்கியமாக சில பேர்கள் மாணவர்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு தமிழ் சொல்லிக் கொடுக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பாதிக்கப்படக்கூடாது. இதைத்தான் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும் ஜாயின்ட் செலெக்ட் கமிட்டியில் குறிப்பிட்டார்கள். அவர்கள் எடுத்துக் காட்டிய பிறகுதான் 50 என்பதற்குப் பதிலாக 100 பேர்கள் வரையில் இருந்தால் விலக்குக் கொடுக்கலாம் என்பது முடிவு செய்யப்பட்டது. இது போன்ற விலக்கு இல்லையானால் தனிப்பட்ட ஒருவர் தம் வீட்டில் பத்துப் பதினைந்து பேர்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு ட்யூஷன் சொல்லிக்கொடுத்தால், அது கூடாது என்று சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் டிக்ஷனரியைப் பார்த்திருக்கிறார். இன்ஸ்டிட்யூஷன் என்றால் யார் வைத்தாலும் அதற்குள் வந்துவிடும். திண்ணைப் பள்ளிக்கூடமாக வைக்கலாம். வேறு இடத்தில் வைக்கலாம். இதுபோன்ற சிறிய ஸ்தாபனங்கள் பாதிக்கப்படக்கூடாது என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டதன் பேரில்தான் இதுபோன்ற விதிவிலக்குக் கொடுக்கப்பட்டது. சர்க்காருக்கோ, யாருக்கோ விலக்கு அளிக்க வேண்டும் என்று எண்ணி இதைக் கொண்டுவரவில்லை. ஜாயின்ட் செலெக்ட் கமிட்டியின் ஏக மனதான முடிவு இது. ஒரு பக்கத்தில் சொல்வார்கள், "நாங்கள் இந்தச் சட்டத்திற்கு உள்ளாகிறபோது மற்றவர்களும் தான் உள்ளாகட்டுமே" என்பதாக. 'என் கழுத்துப் போலத்தான் உன் கழுத்தும்' என்று சொல்வது உண்டு. அதுபோல இந்தச் சட்டத்தினால் இன்று பாதிக்கப்படுகிறவர்கள் வேண்டுமானால், எல்லோரும்தான் பாதிக்கப்படட்டுமே, எதற்காக விதிவிலக்கு என்று சொல்வார்கள். சர்க்கார் தனிப்பட்ட முறையில் யாருக்கும்

4th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

அனுகூலம் செய்யவேண்டுமென்ற முறையில் இதைச் செய்யவில்லை. விதிவிலக்கு இருந்தது. அது இருப்பது அவசியம், 50 என்று இருப்பதை 100 என்று ஆக்கலாம் என்பதாக செலக்ட் கமிட்டியில் வற்புறுத்தப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருப்பதன் காரணமாகத்தான் இது இங்கே அமைந்திருக்கிறது. ஆகையால் கனம் அங்கத்தினர் தம்முடைய திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was put and lost.

Clause 1 was put and carried.

The Enacting Formula and the Long Title were put and carried.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Private Educational Institutions (Regulation) Bill, 1966 (L.A. Bill No. 14 of 1966), as amended, by the Joint Select Committee, be passed.'

கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா—சில ஸ்தாபனங்கள் தனிப்பட்ட முறையில் செயல்படுகிறது, அவற்றை நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இம்மசோதா கொண்டு வரப்படவில்லை. அவை ஒழுங்காக நடக்க வேண்டும்; மாணவர்களுக்கு அவற்றினால் நல்ல பலன் கிடைக்க வேண்டும்; மாணவர்களை பாதிக்க இடம் கொடுக்கக் கூடாது என்ற நோக்கத்தில்தான் கொண்டு வரப்பட்டது. மசோதா வந்தவுடன் சிலர் ஆட்சேபணை தெரிவித்தார்கள். அவர்களுடைய ஆட்சேபணைகளை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து ஜாயின்ட் செலெக்ட் கமிட்டியில் சில நல்ல திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த மசோதா இப்போது சட்டமாக வர இருக்கிறது. இந்த லட்சியம் நல்ல முறையிலே நிறைவேற்றப்படக்கூடிய வகையிலே சர்க்காருக்கும், சர்க்கார் அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்புக் கிடைக்குமென்று நம்புகிறேன். இந்த மசோதாவைப்பற்றிச் சொல்லும்பொழுது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அன்று அதை நான் குறிப்பிடவில்லை. பரீட்சையில் தேறாதவர்களுக்கு இப்படி வைத்து நடத்துவதைவிட கல்லூரிகளிலே அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களே அதுமாதிரி நடத்தலாம் என்று தெரிவித்தார்கள். அரசாங்கம் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அன்றைக்கு அதே கருத்தை சென்னைப் பல்கலைக் கழக வைஸ்சான்ஸலர் அவர்களும் குறிப்பிட்டார்கள் வேறு மன்றத்திலே. அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதில் போட்டா போட்டி ஒன்று இல்லை. இந்தச் சட்டப்படி பிரைவேட் ட்யூட்டோரியல் காலேஜ்கள் வைத்துக்கொள்ளலாம். இருந்தாலும் சில அரசாங்கக் கல்லூரிகளிலே மாலைநேரக் கல்லூரி வகுப்புகள் நடைபெறுகின்றதைப் போல தேறாதவர்களுக்கு ஒரு டியூஷன் கொடுக்கலாம் என்பது. அப்படியிருக்குமானால் அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவர்களே சொல்லிக் கொடுப்பதால், அவர்களுக்குத்

தெரியும் மாணவர்களுக்கு எதிலே பயிற்சி அவசியம் என்பது. ஆகவே சர்க்கார் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு சில கல்லூரிகளிலே தேருத மாணவ மாணவிகளுக்கு விசேஷமாக ட்யூஷன் வசதி கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்கின்றது. அதைப் பற்றியும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு முன்னுலே ஒன்றிரண்டு வார்த்தைகளை சொல்லலாம் என்று நினைக்கிறேன். முன்னுலே சொல்வதற்கு மறந்து விட்டேன். பொதுவாக விற்பனைவரிச் சட்டத்திலே ஒரு புரொவிஷன் இருக்கிறது. அதாவது டர்ன்ஓவர் 10,000 ரூபாய்க்கு மேலே இருப்பவர்கள்தான் அதற்குள் வருவார்கள் என்ருலும், 7,500 உள்ளவர்கள் எல்லாம் கூட ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே அதே மாதிரி, இந்தச் சட்டத்திலும் 100 மாணவர்கள், 6 ஆயிரம் ரூபாய் வருமானம் என்று எல்லாம் வரம்பு இருந்தாலும்கூட. அதற்குக் குறைந்த அளவிலே உள்ள இன்ஸ்டிட்யூஷன் எல்லாம் ரிஜிஸ்டர் மாதிரி ஏதாவது செய்துகொண்டால்தான் நல்லது. ஏனென்ருல் அப்படி இருந்தால்தான் அரசாங்கம் அவர்களின் மேல் கண்காணிப்பு வைத்துக்கொள்ளலாம். திரு. மாதவன் அவர்கள் கூறிய மாதிரி தவறுகள் ஏதாவது ஏற்பட்டால்கூட அவற்றைச் சரிப்படுத்துவதற்கு முடியும். இந்தச் சட்டத்திலே உள்ள பல நிபந்தனைகள், விதிகள், கண்டிஷன்கள் இவைகளுக்கு எல்லாம் விதிவிலக்கு இருந்தாலும்கூட எல்லா இன்ஸ்டிட்யூஷன்களும் பதிவு செய்துகொள்ளவேண்டும். அப்படிப் பதிவு செய்து கொண்டுவிட்டால் தப்புகள், தவறுகள் வராமல் கண்காணிக்கலாம். பல டியுட்டோரியல் காலேஜ்களில் ஷார்ட் பீரியட் டிரெயினிங் தான் கொடுக்கிருர்கள். அங்கே இருக்கின்ற ஸ்டாஃப்-க்கு எல்லாம் நிறையச் சம்பவளம் கொடுக்கவேண்டியிருக்கிறது. வருடத்தில் மூன்று மாதங்களிலே இருந்து, ஆறு அல்லது ஏழு மாதங்கள் வரைதான் அவர்கள் நடத்தமுடியும். அதற்குள்ளேதான் அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து தேர்ச்சி பெறச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களுக்கெல்லாம் அதிகமான சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைத்தவிர, அவர்கள் மாணவர்களைச் சேர்ப்பதற்கு அட்வர்டைஸ்மென்ட், விளம்பரங்கள் எல்லாம் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் அதிகமான ஃபீஸ் வாங்காமல் இருக்க அதை முறைப்படுத்த வேண்டியது அவசியந்தான். ஆனுல் அதே நோக்கில் சாதாரண கல்லூரிகளில் வசூலிப்பதுபோல் அந்த மாதிரியான ஃபீஸ் மட்டும் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று முறைப்படுத்துவது கூடாது. ஏனென்ருல் அவர்கள் அந்த மாணவர்களுக்கு ஷார்ட் பீரியடில் இன்டென்சிவ் ட்ரெயினிங் கொடுக்கிருர்கள். அவர்களுக்கு எல்லாம் ஹை ஸாலரி கொடுக்கவேண்டியிருக்கிறது. நானே பார்த்திருக்கிறேன். ஒரு சில இடங்களில் அவர்களை ஒரு சீஸனுக்குத்தான் எங்கேஜ் செய்யவேண்டியிருக்கிறது. பிறகு அவர்களை

4th November 1966] *[திரு. வை. சங்கரன்]*

எடுத்துவிடுவார்கள். அவர்களை ஆண்டு முழுமைக்கும் பர்மனன்ட் ஆக வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம். இவ்வாறு எல்லாம் செய்வதற்கு ஏற்ற முறையில் ஃபீஸ் பிரஸ்கிரைப் பண்ணும்போது அவர்களுக்கு லாட்டிட்யூட் கொடுக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு, நான் ஏற்கனவே கூறியதுபோல் லைப்ரரி பிரைவேட் ட்யூட்டோரியல் இன்ஸ்டிட்யூஷனுக்குத் தேவையில்லை. ஏனென்றால் அங்கே அவர்கள் இரண்டு மூன்று மாதங்கள் வரை தான் படிக்கப் போகிறார்கள், அவர்களுடைய பாடங்களைப் படிப்பதற்குத்தான் நேரம் இருக்கிறது. ஜெனரல் நாலட்ஜ் இம்ப்ரூவ் பண்ணுவதற் வேறு ஏதாவது வைத்துக்கொள்ளலாம், ஆகவே அந்த வகையிலே இந்தச் சட்டத்தை நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Private Educational Institutions (Regulation) Bill, 1966 (L.A. Bill No. 14 of 1966), as amended by the Joint Select Committee, be passed.'

The motion was put and carried and the Bill, as amended by the Joint Select Committee, was passed.

(2) THE MADRAS ENTERTAINMENT TAX (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 29 OF 1965).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg to present the Report * of the Select Committee on the Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 29 of 1965) and move—

'That the Bill, as amended by the Select Committee, be taken into consideration.'

As the hon. Members are aware, this Bill was introduced in the Assembly on the 3rd November 1965 and the Bill was referred to the Select Committee, by a resolution of the Assembly, dated the 6th November 1965.

The Committee considered the Bill in detail and has submitted its report, together with a copy of the Bill as revised by it.

I shall briefly explain the important changes, which the Select Committee has made in the Bill.

The theatre owners and film producers represented (both in writing and by way of oral evidence) to the Select Committee that the enforcement of the provisions of the Bill in regard to "complmentary tickets", would result in certain difficulties to the trade in general. The Committee has therefore decided to delete the provisions relating to complimentary tickets.

It was also represented to the Committee that the provisions of the original Bill relating to increase of the maximum fine from Rs. 500 to Rs. 1,000 was not called for, and that to hold the proprietor or the person employed by the proprietor responsible for

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 5th August 1966.

[Sri R. Venkataraman] [4th November 1966

the presence of a person, without a ticket, in the place of entertainment, would also cause hardship to the owners of the cinema houses. So the Committee has decided not to make any change in the present rate of fine but to specifically provide for the punishment of persons found without a ticket or pass in any place of entertainment with fine which may extend to one hundred rupees. Provision has also been made permitting the owner to prove that the person had entered the theatre without his knowledge or connivance and the spectator to prove that he had entered the theatre only with the knowledge or connivance of the proprietor and thus exonerate himself. The Committee has also decided to provide penalty for abetment of the commission of any offence under the Act, with the punishment provided for the offence.

In Writ Petition No. 575 of 1963, the Madras High Court has recently held that under the principal Act, as it stands, entertainments tax cannot be levied on any payment which has escaped assessment. The Committee has taken note of this decision and has decided to validate all cases of past assessments or re-assessments or collection of any tax on any payment for admission to any entertainment, etc., which has escaped assessment or which has been assessed at a lower rate, than the rate at which it is assessable.

It is also considered necessary that provision should be made for assessment by the best of judgment method in respect of escaped payment, etc. As the department has all along been assessing escaped payment and also adopting best of judgment method it is considered necessary to validate assessment and collection already made. The provision for levy of tax on escaped payments has also been given retrospective effect from 1st April 1960 so that assessment for the period subsequent to that date could be reopened wherever necessary.

I now request the House to accept the motion.

MR. DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 29 of 1965) as amended by the Select Committee be taken into consideration.'

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னாலே கொண்டு வந்துள்ள கேளிக்கை வரி மசோதாவின் மீது நான் சில வார்த்தைகள் பேசுவதற்கு முன்வந்திருக்கிறேன். இந்தக் கேளிக்கை வரி மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் இங்கு தம்முடைய உரையிலே விளக்கினார்கள். இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தச் சபையிலே அறிமுகம் செய்யப் பட்டு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்ட நேரத்திலேயே
11-00 a.m. இங்கே வரவேற்றிருக்கிறது. அந்த வகையில் இந்தக் கேளிக்கை வரி திருத்த மசோதாவை இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

4th November 1966] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

சினிமாக் கொட்டகைகளிலே வரி ஏமாற்றப்படுகிறது. மோசடி செய்கிறார்கள், சர்க்கார் கஜானாவுக்குச் செலுத்த வேண்டிய பணம் மிக அதிகமாக விரயமாகிக் கொண்டிருக்கிறது; அதைத் தடுப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்ற பலத்த கருத்து இருந்து வந்திருக்கிறது. இந்தப் பெரும் கருத்தைத் தொழிலமைச்சராக இருக்கின்ற அவர்கள் தனிப்பட்ட முறையில் இந்தக் காரியங்களில் ஈடுபாடு இருந்த காரணத்தால், ஒரு பெரிய மசோதாவையே கூடக் கொண்டு வந்தார்கள். பொது விற்பனை வரி ஏமாற்றப்படுவதைத் தடுப்பதற்காக ஒரு பெரிய மசோதாவைக் கொண்டு வந்தார்கள். அந்த மசோதா நெருக்கடியை ஒட்டியும், வியாபாரிகள் பிரதிநிதிகள் வாக்குறுதி அளித்ததையொட்டியும் வாபஸ் பெறப்பட்டது என்பதை இந்த மன்றம் நன்றாக அறியும்.

கேளிக்கை வரியைப் பொறுத்து பயங்கரமான ஏமாற்றங்கள் நடைபெறுகின்றன. தவறான டிக்கட்டுகள் விற்கப்படுகின்றன. இன்று சென்னை நகரிலே இந்த வரியின் மூலமாக ஒன்றரைக் கோடி ரூபாய் வருகிறது ; ஆனால் ஒழுங்காக வந்திருக்குமானால் 2½ கோடி ரூபாய் கிடைத்திருக்க வேண்டும். இந்த மாதிரி மோசடியைத் தடுத்து நிறுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மசோதாவை ஆதரிக்கிறேன் ; கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் சார்பில் நெடுநாட்களாகச் சொல்லி வந்த கருத்துக்களை நிறைவேற்றும் வகையில் இந்த மசோதா அமைந்திருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிப் பின்னால் எடுத்துச் சொல்கிறேன். இந்த வரி ஏமாற்றத்திலுள்ள அபாய நிலையை, கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நான் தெளிவாக எடுத்து விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பல தகவல்கள் இதைப் பற்றி வந்திருக்கின்றன. பரமக்குடி என்ற ஊரில் உள்ள சினிமாக் கொட்டகையில், பரிசோதனைக்காரர்கள் பார்க்கின்ற வேளையில் 500 பேர்கள் டிக்கட் இல்லாமல் இருந்தார்கள். பவானிக்கு அருகில் ஒரு கிராம சினிமாக் கொட்டகையில் இருந்தவர்களில் பாதிப் பேர் டிக்கட் இல்லாமல் இருந்தார்கள். சினிமாக் கொட்டகை நிர்வாகி பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடிப் போய்விட்டான் என்ற தகவல் வந்தது. கள்ளப் பணம், கள்ளப் பணம் என்று சொல்லுகிறார்கள். மூவாயிரம் கோடி ரூபாய் இந்தியாவில் கள்ளப்பணம் இருப்பதாகவும், அதனால்தான் திட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கள்ளப்பணத்தை ஒழிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மிக மிக மோசமாக இருக்கின்றன. இந்த மசோதாவுக்கு வேறு ஒரு தலைப்பு கொடுப்பதாக இருந்தால், இதற்கு கள்ளப்பண ஒழிப்பு மசோதா என்று கூட மாற்றுப் பெயரிடலாம். இந்தக் கள்ளப்பணம் எப்படி வருகிறது என்பதைப் பற்றி ஒரு பெரிய சினிமா அதிபர்--அரசியல் நிலைமைகளுக்காக அவருடைய பெயரை —பெயரைச் சொல்லவில்லை—என்னிடம் கூறினார். ஒரு கிராமத்திலுள்ள சினிமாக் கொட்டகையிலே மூன்று ஆட்டங்களிலே 500

[திரு. கே. ஏ. மதியழகன்] [4th November 1966

ரூபாய் வசூலாவதாக வைத்துக் கொண்டால், அதிலே 200 ரூபாய் நல்ல பணம், 300 ரூபாய் கள்ளப்பணம். இப்படி தினந்தோறும் 300 ரூபாய் விதம் சேர்த்து மொத்தமாக அவன் சென்னையிலுள்ள சினிமா பிரபல படத் தயாரிப்பாளருக்குக் கொடுக்கிருன். இப்படி பல சினிமாக் கொட்டகைக்காரர்கள் செய்கிருர்கள். இப்படி உருவாகி வருகிற கள்ளப்பணத்தைத் தடுக்க இந்த மசோதா வழி செய்யவேண்டுமென்ற பெரிய ஆவலைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் சரிவர நிறைவேற்றுவதற்கு பொது விற்பனை வரிச் சட்டத்தை மட்டும் நன்ருக அமல் நடத்தினுல் போதும் என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். அந்தச் சட்டத்தை நிறைவேற்ற எத்தனையோ இடையூறுகள் இருந்தன என்பதைக் கனம் மந்திரியவர்கள் மன்றத்தில் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், மனத்திற்குள் ஒப்புக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த சினிமாக் கொட்டகைக்காரர்கள் ஒரு பெரிய பொருளாதார சாம்ராஜ்யத்தையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். பல மகத்தான தந்திரங்களின் காரணமாக, கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்க கஜானுவுக்கு வரமுடியாமல் ஏமாற்றப்படுகிறது. மேட்டுப்பாளையத்திலே இரண்டு சினிமாக் கோட்டகைகள் இருக்கின்றன. கே.எம்.எஸ். சினிமாத் தியேட்டர், யூனைட்டட் சினிமாத் தியேட்டர் என்ற இரண்டு சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. அந்த சினிமாக் கொட்டகையின் முதலாளி திரு . . .

கனம் உதவி சபாநாயகர் : இந்த மன்றத்தில் இல்லாதவர்களுடைய பெயரை இங்கே குறிப்பிடக்கூடாது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சட்டசபை சம்பிரதாயங்களையொட்டி, இதில் அங்கத்தினர்களாக இல்லாதவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டுக் குற்றச் சாட்டுகள் சொல்லக் கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன் : எப்படி வரி மோசடி நடந்திருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லும்போது அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஊர் முனிசிபல் தலைவர், காங்கிரஸ் கமிட்டித் தலைவர் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சரியல்ல. இந்தச் சபையின் விதிமுறைகளின்படி அங்கத்தினராக இல்லாதவர்களைப் பற்றிய குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. அவர்களுக்குப் பதில் சொல்ல இங்கே வாய்ப்பு இல்லை. (**திரு. கே. ஏ. மதியழகன்.** கவர்ன்மெண்டைப் பற்றிச் சொல்லலாம் அல்லவா ?) கவர்ன்மெண்டைப் பற்றிச் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : எப்படி இந்த விஷயத்தைப் பற்றி எடுத்துச் சொல்வது ?

4th November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எப்படிச் சொல்ல வேண்டுமென்று வழி கேட்டால் சொல்லித் தருகிறேன். 'மேட்டுப் பாளையத்தில் உள்ள ஒரு சினிமா அதிபர் என்று சொன்னால் யாருக்கும் ஆட்சேபணை கிடையாது.

திரு. கே. ஏ. மதியழகன்: மேட்டுப் பாளையத்தில் உள்ள ஒரு சினிமா அதிபர், யுனைடெட் தியேட்டர், கே.எம்.எஸ். தியேட்டர் என்ற இரு சினிமாத் தியேட்டர்களை நடத்தி வருகிறார். முனிசிபல் தலைவராகவும் இருக்கிறார்.

MR. DEPUTY SPEAKER: Is there any case pending?

SRI K. A. MATHIALAGAN: No case is pending. இந்த இரண்டு சினிமாக் கொட்டகைகளும் கடந்த வருஷம், 7—11—1965 அன்று விற்பனை வரி அதிகாரி தேவசகாயம் என்பவரால் சோதனை போடப்பட்டன. (குறுக்கீடு) 'டு எஸ்டாப்ளிஷ் மை பாயின்ட்' நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. விற்பனை வரி அதிகாரியால் சோதனை போடப்பட்டன. அந்த சினிமாக் கொட்டகைகளில் நம்முடைய சர்க்காருடைய சீல்களைப் போல் கோபுரம் போடப்பட்ட கள்ள சீல்கள் போடப்பட்ட டிக்கட்டுகள் மூன்று லட்சம் ரூபாய் அளவு டிக்கட்டுகள் கைப்பற்றப்பட்டன. ஏறக்குறைய மூன்று லட்சம் ரூபாய் அளவுக்கு அவருக்கு அபராதம் போடப்பட்டது. அன்று, சர்க்கார் சீலைப் போல தினந்தோறும் முத்திரை போட்டுக் கொண்டு வந்தது கைப்பற்றப்பட்டது. கள்ள சீல் போடுவது பயங்கரமான குற்றம். பகல் ஒரு மணியில் இருந்து இரவு பன்னிரண்டு மணி வரை தினந்தோறும் கோபுரம் போட்ட கள்ள சீலைப் போட்டு டிக்கட்டை விற்றுக் கொண்டு வந்தார்கள். ஒரு வருஷ காலமாக அவர்கள் மீது கிரிமினல் வழக்கு எடுக்கப்படாததற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அந்தக் கோபுரம் போட்ட டிக்கட்டுகள் எல்லாம் சர்க்கார் சீலா அல்லவா என்பதைப் பரிசோதனைக்காக அனுப்பினோம் என்று சொன்னார்கள். இன்னும் அந்தப் பரிசோதனை வரவில்லை. இது ஒரு சிறு குற்றமல்ல. சர்க்காரை ஏமாற்றுகிற முறையிலே மேட்டுப்பாளையத்திலே தினந்தோறும் நடந்து வந்த காரியம். எவ்வளவு ரூபாய் இதில் போயிருக்கும்? கள்ள நோட்டு அடிக்கிறவனுக்காவது நோட்டை மாற்றவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் இது தினந்தோறும் நடக்கிறது.

திருவள்ளூரில் இரண்டு சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. லட்சுமி டாக்கீஸ் என்ற கொட்டகை வடநாட்டு மார்வாரி ஒருவருக்குச் சொந்தமானது. இன்னொரு கொட்டகை அங்குள்ள முனிசிபல் சேர்மனுக்கு, அவர் காங்கிரஸ்காரர், சொந்தமானது. அங்கு டிக்கட்டுகளை ரோல் செய்கிறார்கள். நான் ஒரு டிக்கட்டை கேட்டில் கொடுக்கும்போது பாதியைக் கிழித்து என்னிடம் கொடுத்து விட்டு மறுபாதியை பையில் போட்டுக்கொள்கிறார்கள். அடுத்த ஆள் ஒருவர் வந்து டிக்கட் கொடுத்தால், அதை முழுமை

[திரு. கே. ஏ. மதியழகன்] [4th November 1966

யாக வைத்துக் கொண்டு என் டிக்கட்டின் பாதியை அவர்களிடம் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட மோசடி அங்கு நடக்கிறது. திருவள்ளூரில் இப்படிப்பட்ட மோசடி அந்த முனிசிபல் சேர்மன் னின் தியேட்டரில் நடைபெற்று 28—5—1964-ல் ஆயிரம் ரூபாய் அபராதம் போடப்பட்டது. இன்றுகூட அங்கு அப்படி நடக் கிறது. வட நாட்டு மார்வாரி தியேட்டரிலும் நடக்கிறது. திருவள்ளூரில் நடப்பது என்பது தனிப்பட்ட ஒரு சம்பவம் அல்ல. மேட்டுப்பாளையத்தில் நடப்பதும் சிறிய விவகாரம் அல்ல. அவர் கள் ரோல் செய்கிறார்கள். நீங்கள் குதிரை போன பின் லாயத் தைப் பூட்டுகிறீர்கள். நிலவரியை அதிகப்படுத்துகிறீர்கள் மின் சாரக் கட்டண வரியை உயர்த்துகிறீர்கள். ஆனால் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களைப்போல் செய்பவர்களை, கொள்ளை அடிப்பவர் களை சமுதாயத்தில் உள்ள புல்லுருவிகளை என்ன செய்கிறீர்கள். சினிமா டிக்கட்டுகளுக்கு முத்திரை போடுகிறார்கள். மைசூரில் ஒரு ஸ்டாம்பு ஒட்டுகிறார்கள். அங்குள்ள சினிமாக் கொட்டகை களுக்கு போகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டால் இது தெரியும். அங்கு டிக்கட்டில் ஸ்டாம்ப் ஒட்டுகிறார்கள். ஒட்டிய அதை கிழிக்கிறார் கள். அப்படிப்பட்ட ஸ்டாம்ப் முறையை இத்தனை ஆண்டுகளில் கொண்டு வந்திருக்கக் கூடாதா? அட்ஹஸீவ் ஸ்டாம்ப்ஸ் இருக் கின்றன. இதுமாதிரி ஏதாவது செய்யக்கூடாதா? கள்ள நோட்டு அடிப்பது பிரபலமாக இருக்கும்போது வெறும் முத்திரை போடுவ தில் என்ன கஷ்டம்? அட்ஹஸீவ் ஸ்டாம்ப்ஸ் போல் ஏன் போடக் கூடாது? அதற்கு வழிவகை இருக்கிறதா? இவ்வளவு காலமாக இவர்கள் இதுபற்றி யோசித்தார்களா? ஏன் மெக்கானிஸ் செய்யக் கூடாது? டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்ட்டுக்காக ஆண்டு தோறும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு டிக்கட் அடிக்கிறார்கள். அடிக்கடி பீ.ஏ.சி-க்கு வருகிறது. கள்ள முத்திரை அடிக்கிற வனுக்கு இன்று காங்கிரஸ் டிக்கட் கொடுப்பதற்கு அவர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். அவனாசி தாலுகாவில் அது இருக்கிறது. இது யார் பலவீனம்? திருவள்ளூரில் நடந்திருக்கிறது.

காம்ப்ளிமென்டரி டிக்கட்ஸ்பற்றிச் சொன்னார்கள். காம்ப்ளி மென்டரி டிக்கட்ஸ் வேண்டாம் என்று இருந்தது குறித்து இப் போது டெலீட் என்று எழுதியிருக்கிறார்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் ஒரு சமாதானம், ஒரு மரியாதையான வார்த்தை இந்த மன்றத்திற்குச் சொல்ல வேண்டாமா? யாரோ ஒரு சினிமா அதிபர் சொன்னார் என்பதற்காக ஏன் அந்த கிளாஸ் வேண்டாமென்று கருதினீர்கள்? காம்ப்ளிமென்டரி டிக்கட்ஸ் வேண்டியதுதான், அந்த கோரிக்கைகூட நியாயம்தான். ஆனால் சினிமா அதிபர்கள் சொன்னார்கள் என்பதற்காகச் செய்தால் அவர் களுக்கும் உங்களுக்கும் உள்ள வரவு செலவு என்பதைத் தவிர வேறு என்ன பொருள்? முதலிலேயே உங்களுக்குத் தெரியாதா? திரு. ஏ. எல். சீனிவாசன் என்ற சினிமா வர்த்தகச் சங்கத் தலைவர் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். என்ன கொடுத்திருக்கிறார்கள்? "இதை ஏன் கொண்டு வருகிறீர்கள்? கனம் தொழில் அமைச்சர் அவர்களே, பெருந்தன்மையாக எங்களுக்கு நன்மை செய்கிறவர் களே, பொது விற்பனை வரி மசோதாவை வாபஸ் பெற்றதுபோல்

4th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

இதையும் வாபஸ் பெறுங்கள்" என்று கூறியிருக்கிறார்கள். திரு. சீனிவாசன் அறிக்கை இதில் இருக்கிறது. அதற்கு சமாதானம் சொன்னீர்களா? காம்ப்ளிமென்டரி டிக்கட்டினால் ஊழல்கள் ஏற்படும் என்றுதானே முதலில் அப்படிப் போடப்பட்டது. பின் ஏன் மாற்றினீர்கள்?

அடுத்தபடியாக, அபராதம் 1,000 ரூபாய் என்றிருந்ததை ரூ. 500 போதும் என்று போட்டிருக்கிறீர்கள். ஸிவியராக இருக்கிறது என்ற காரணம் சொல்கிறார்கள். இப்படிச் செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும். வேறு நாடுகளில் கள்ள மார்க்கட், கள்ளச் சந்தை, வழிப்பறி போன்றவற்றிற்கு விதிப்பதுபோல் மரண தண்டனை விதிக்கவேண்டும். 500 ரூபாய் என்று அபராதம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆக, எந்த நோக்கத்திற்காக இதைக் கொண்டுவந்தோமோ, அது பரிபூர்ணமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதற்காகத்தான் கேட்கிறேன். காம்ப்ளிமென்டரி டிக்கட்ஸ் கொடுக்கட்டும். ஆனால், என்ன காரணத்திற்காக அதை மாற்றினார்கள் என்பதுபற்றிச் சொல்லவேண்டாமா? பொது விற்பனை வரி மசோதாவை வாபஸ் பெற்றதுபோல் இதைப் பெற வேண்டும் என்று கேட்கிறார்கள்.

நம் நாட்டில் எவ்வளவோ ஏழை மக்கள், கோடிக்கணக்கான மக்கள் அவதிப்படுகிறார்கள், நசுக்கிப் பிழிந்து கிடக்கிறார்கள் ஆனால் ஊரை ஏமாற்றுகிறவர்களுக்குச் சலுகை. இந்த மசோதா அந்த ரூபத்தில் இப்போது இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன். கனம் தொழில் அமைச்சர் அவர்களின் நோக்கம் நல்லநோக்கம். அவர்களுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது. இருதய சுத்தி இருக்கிறது என்பது எனக்குத் தெரியும், நான் அவர்களோடு பழகியிருப்பதில் இருந்து. நன்றாகச் செய்யவேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். ஆனால், பொதுப்போக்கில் பொதுத் தன்மையில், பொதுச் சக்தியில் அவர்கள் எவ்வளவுதான் மேதையானாலும், நல்ல தன்மை, புனிதமான கொள்கைகளைக் கொண்டவர்களாக இருந்தாலும், சாதாரண குடிமகனுக்கு நன்மை புரிய வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் அவர் இன்றைக்கு இருக்கிற சர்க்கார் அமைப்பிலே, அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் இருக்கிற மந்திரி சபையிலே, அவர்கள் இருக்கிற கட்சிக் கூடாரத்திலே அது முடியாது. அது சினிமாக் கொட்டகைக்காரர்களுடையவும், விற்பனை வரியை ஏமாற்றுகிறவர்களுடையவும் கூடாரமாக இருக்கிறது. அவர்களுக்குச் செய்ய விருப்பம் இல்லை என்று பொருள் அல்ல. அவர்களால் செய்ய முடியாது, செய்ய முடியவில்லை. இன்னும் அவர்களை அறைகூவிக் கேட்கிறேன். கொண்டுவந்த பொது விற்பனை வரி மசோதாவை நிறைவேற்றியிருந்தால் நில வரி என்ன, சென்ற தடவை எட்டுக் கோடி ரூபாய் அளவிற்கு வரி போட்டார்களே அதையும் கூட ரத்து செய்ய முடியும். ஆனால் அப்போது என்ன சொன்னார்கள்? இப்போது எமர்ஜன்சி இருக்கிறது. மேலும் இவர்கள் நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். அவர்களின் நல்ல பிள்ளைத்தனத்திற்காக இதைக் கொண்டுவரவில்லை என்று

வ

சொன்னார்கள். நான் சிரம் தாழ்த்திக் கேட்கிறேன், என் கட்சிக்கு அப்பாற்பட்டுக் கேட்கிறேன், இங்குள்ள 3½ கோடி மக்களின் மீது அவர்களுக்கு அக்கறையிருக்கிறதா, ஏன் அந்தப் பொது விற்பனை வரி மசோதாவைக் கொண்டுவரவில்லை ? என்று இப்போது எமர்ஜன்சி தீர்ந்துவிட்டது, இவர்களும் நல்ல பிள்ளைகளாக ஆகவில்லை, பின் ஏன் கொண்டு வரவில்லை? அதைக் கொண்டு வராததன் மூலம் உங்களை சிறைக் கைதியாக ஆக்கியிருக்கிறார்கள். எட்டுக் கோடி ரூபாய் வரியை ஏமாற்றுவதற்கு, இந்த கஜானாவைக் கெடுக்க நீங்கள் உடந்தையாக இருக்கிறீர்கள் என்பது மட்டுமல்லாமல் இந்த முதலாளித்துவக் கோட்டைக்கு நீங்கள் செங்கல் எடுத்து வைக்கிறீர்கள். பொது விற்பனை வரி மசோதாவைக் கொண்டு வராததன் மூலம் இந்த நாட்டை வஞ்சித்து, முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் பெரும் குற்றச்சாட்டை செய்கிறீர்கள். இந்த மசோதாவை நான் வரவேற்கிற நோக்கில் இந்தக் கண் துடைப்பு மசோதாக்களினால் பலன் ஏற்படப்போவதில்லை. மக்கள் வாக்குகளை வாங்க மீண்டும் போகப் போகிறோம். ஒரு மாற்றுக்கட்சி ஆட்சியில் அமைகிற நிலையில்தான் இந்தக் காரியங்கள், வழிப்பறிக் கொள்ளைகள் சரிவதற்கும், ஏழை மக்கள் வாழ்வதற்கும், கஜானாவில் பணம் வந்து சேருவதும் என்ற காரியங்கள் நடக்கும் என்று கூறி இதுவரையிலாவது அவர்கள் கொண்டுவந்தார்களே என்று கூறி, திராவிட முன்னேற்றக் கழகம் இதை வரவேற்கிறது என்று கூறி அமைகிறேன்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தைப் பொறுக்கு கமிட்டியினர் கொடுத்திருக்கின்ற திருத்தத்தின்படி நிறைவேற்றுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுகின்ற வாய்ப்பில் என்னுடைய கட்சியின் செயலாளர் அவர்கள் சொன்ன கருத்துக்களையே நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை முதலில் சட்ட சபையில் தாக்கல் செய்த சமயத்தில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் மிக வீரமாகப் பேசினார்கள். சினிமா கொட்டகைகள் நடத்துகின்றவர்கள் காம்ப்ளிமெண்டரி பாஸ் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை, ஆனால் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய வரிகளை செலுத்திவிட்டு வேண்டுமென்றால் அவர்கள் காம்ப்ளிமெண்டரி டிக்கட் கொடுக்கலாம். அதற்காகத்தான் இந்தச் சட்டத்தை கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது சபை முன் தாக்கல் செய்திருக்கின்ற மசோதா அசல் மசோதாவிலிருந்து உரித்து எடுத்ததைப் போலத்தான்—முக்கிய பொருளாக இருக்கின்ற காம்ப்ளிமெண்டரி டிக்கட் மொத்தம் இந்தச் சட்டத்தில் காணப்படவில்லை. செலெக்ட் கமிட்டியினர் கொடுத்திருக்கின்ற ரிப்போர்ட்டைப் பரிசீலித்து பார்த்ததில் அரசாங்கம், அதிலும் காங்கிரஸ் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் அரசாங்கம் எவ்வளவு தூரம் முதலாளிகளுக்கு—காங்கிரசில் இருக்கின்ற முதலாளிகளுக்கு—வளைந்து கொடுத்திருக்கிறார்கள் என்கின்ற நிலைமையைத்தான் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. அரசாங்கம் ஒரு சட்டத்தைத் தாக்கல் செய்கிறார்கள் என்றால் அதை

4th November 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

செலெக்ட் கமிட்டிக்கு பரிசிலனைக்காக அனுப்புகிறீர்கள் என்றால், அந்தச் சட்டத்தை எப்படி மாற்றி அமைக்கின்றீர்கள் என்று பார்த்தால், அரசாங்கம் கொடுக்கின்ற மூலத்தத்துவத்திற்கு முரண் இல்லாமல் சில பல குறைபாடுகளை மாற்றிச் சட்டத்தைத் எத்தனை தாக்கல் செய்தால் அதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் எதற்காக இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்தார்களோ அந்தக் காரியம் பறி போய்விட்டது. அதற்குப் பிறகு இந்த சட்டத்தில் உப்பு சப்பு இல்லாத சட்டமாக இந்த சபை முன் வைத்து நிறைவேற்றவேண்டும் என்று நமது அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எங்களுடைய கட்சியின் செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் சொன்னது போல் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் எதையும் சொல்லுகின்ற சமயத்தில் வீரமாக முதலிலே சொல்லுகின்றார்கள். அதனுடைய விளைவு தமிழகத்திலே இருக்கின்றவர்கள், அதிலும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்றவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள், அதற்குப் பின்னால் இந்த வீரம் எல்லாம் எங்கோ போய்விடுகிறது. கடைசியில் ஒன்றும் இல்லாத அளவுக்கு இப்படிப்பட்ட சட்டத்தைத் தாக்கல் செய்யக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. திரு. ஏ. எல். சீனிவாசன் அவர்கள், காங்கிரஸ் கட்சிக்கு துணையாக இருக்கின்றவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. திரு. ஜி. உமாபதி என்ற ஒரு பெரிய பணக்காரர், இந்தச் சட்டத்தில், காம்ப்ளிமெண்டரி கொடுக்கின்ற முறையைக் கண்டித்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் துணையாக நிற்கிறவர்கள். அவர்கள் எல்லாம் எதிர்க்கின்றார்கள். அவர்கள் வரவேற்கவில்லை என்று தெரிந்தவுடன் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களே முன் வந்து, யார், காம்ப்ளிமெண்டரி டிக்கட் கொடுத்தால் அதற்கான வரிப்பணத்தை—டாக்ஸை—கொடுத்துவிட்டு சினிமா அதிபர்களைக் கொட்டகைக்காரர்கள் அனுமதிக்கலாம் என்று சொன்னார்களோ, அவர்களே இப்போது அதை விட்டுவிடலாம் என்று சொல்லுகிறார்கள். இதிலே இருக்கின்ற நிலைமை என்னவென்றால் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள், தங்களுடைய கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்று தெரிந்தவுடனே வாபஸ் வாங்கிவிடுகிறார்கள் சட்டத்திலுள்ள முக்கியமான ஷரத்துக்களை. இது தேவை தானா என்பதை இந்த மன்றம் ஆராய வேண்டியிருக்கிறது. எங்களுடைய கட்சி செயலாளர் அவர்கள் டிக்கட்டுகள் அச்சடித்து வினியோகிப்பதில், பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று குறிப்பிட்டு ஒன்றிரண்டு ஊழல்களைச் சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது, தமிழகத்தில் இருக்கின்ற சினிமாக்கொட்டகைகளில் டூப்ளிகேட் டிக்கட் அச்சடித்து வினியோகிக்காத தியேட்டர்களே இல்லை என்று சொல்லுவேன். என்ன நடக்கிறது, சினிமா கொட்டகைகளுக்குச் செல்லும், டி.சி.டி.ஓ.-வாக இருந்தாலும் ஏ.சி.டி ஓ-வாக இருந்

தாலும் சரி, சி. டி.ஓ.-வாக இருந்தாலும் சரி இவர்கள் எல்லாம் என்றைக்காவது டிக்கட் வாங்கிக்கொண்டு சினிமா பார்க்கிறார்களா? அங்கே வருகின்ற விற்பனை வரி அதிகாரிகள் முதல் வகுப்பில் இருந்து கொள்கிறார்கள், அவர்களோடு மட்டுமல்ல, அவர்களுடைய குடும்பங்களுக்கு டிக்கட்டுகள் வாங்கித்தான் சினிமா பார்க்கின்றார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா? கிடையவே கிடையாது, இப்படிப்பட்ட அதிகாரிகள் தியேட்டர்களுக்கு வருகிறார்கள் என்றால் முதலாளிகள் கதவுகளைத் திறந்துவிடுகின்றார்கள் அப்படியிருக்கும்போது, டிக்கட்டுகளில் டாக்ஸ் எவேஷன் நடக்கிறதா இல்லையா என்று இவர்கள் எப்படி செக் செய்ய முடியும்? முதலாளிகள் டிக்கட்டுகள் அச்சடித்துக்கொடுக்கிறார்கள் என்றால், இன்னின்ன அச்சாபீசில்தான் அடிக்க வேண்டும், இவ்வளவு பேர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது விதிமுறை இருக்கிறதா? முதலாளிகள் அச்சடித்துக் கொடுக்கின்ற டிக்கட்டுகளில் அதிகாரிகள் சீல் போட்டுக்கொடுக்கிறார்கள். ரப்பர் ஸ்டாம்ப் சீல் போடுகிறார்கள். ஆயிரம் டிக்கட்டுகளில் சீல் அடித்தவுடன் பின்னால் உள்ள டிக்கட்டுகளில் ஒரு வளையமான முத்திரை தான் தெரியும். அது டி. சி. டி. ஓ ஆபீஸ் சீலா அல்லது ஏ. சி. டி. ஓ. ஆபீஸ் சீலா அல்லது சி.டி.ஓ ஆபீஸ் சீலா என்று தெரியாது. முதலாளிகளே சீல் செய்து வைத்துக்கொள்ளலாம். ஒன்றரை ரூபாய் கொடுத்தால் ரப்பர் ஸ்டாம்பு கிடைத்துவிடும். ஒரு சினிமா காட்சிக்கு மட்டும் ஏறக்குறைய வரி 300, அல்லது 400 என்று கணக்கு வரும். அப்படி வரும்போது, 1,000 ரூபாய் வரியாகக் கட்டவேண்டியிருக்கும். இதையெல்லாம் கொடுக்காமல் தப்பித்துவிடலாம். எவ்வளவு சௌகரியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். வரியை என்னவோ இங்கு போடுகிறோம். அதைக் கீழேயுள்ளவர்கள் வசூலித்துவிடுகிறார்கள். ஆனால் அதை அரசாங்கத்திற்குச் சரியாகச் செலுத்துவது கிடையாது. போலி டிக்கட்டுகள், கள்ள டிக்கட்டுகள் இவை எல்லாம் வருகின்றன. இதன் மூலமாக வரி செலுத்துவது ஏமாற்றப்படுகிறது, இதைப்பற்றிப் பல தடவை இந்த மன்றத்தில் சொன்னோம். இந்த மந்திரிசபை அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? எங்கள் கட்சிச் செயலாளர் அவர்கள் சொன்னதுபோல், இதற்கென்று தனியாக ஏதாவது ஸ்டாம்ப் ஏற்படுத்துவது தானே, அல்லது அட்ஹசிவ் ஸ்டாம்ப் என்று தனியாகப் போடுவது தானே, எத்தனையோ லேபிள்களை அரசாங்கம் போடுவது போல், இதற்கும் தனியாக லேபிள் போடுவது தானே. வேண்டுமென்றால் அதை புதுக்கோட்டை அச்சகத்திலே அச்சடித்துக் கொள்ளட்டும், அல்லது திரு. பூவராகன் அவர்கள் ஊரிலே இருக்கு அச்சகத்தில் அச்சடித்தாலும் சரி, அப்படிப்பட்ட உத்தரவைப் போட்டதா? அப்படிப் போட்டிருந்தால் இதைத் தடுக்க முடியாதா? இதில் கோடிக்கணக்கான பணம் விரயமாகிக் கொண்டிருக்கிறது. பணம் விரயமாகிக்கொண்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு தெரியாதது அல்ல. அரசாங்கத்திற்குத் தெரிந்தும் பல கோடிக்கணக்காகப் பணம் வீணாக்கப்படுகிறது. சினிமாக் கொட்டகைக்காரர்கள் இதைத் தாங்களாகவே கொடுக்கவில்லை, அவர்

களுடைய வீட்டிலுள்ள சொத்தை நாம் கேட்கவில்லை. இன்றைய தினம் வியாபாரிகள் வரி கொடுக்கிறார்கள் என்றால், மக்கள் கொடுக்கின்ற விற்பனை வரியைத்தான் கொடுக்கிறார்கள், அதையும் அரசாங்கத்திற்குச் செலுத்தாமல் ஏமாற்றுகின்றார்கள். இதைத் தடுப்பதற்கு முன்னால் சட்டம் கொண்டு வந்தார்கள், பின்னால் அதை விட்டு விட்டார்கள். சினிமாத் துறையில் வரியை ஏய்க்கின்றார்கள் என்றால், அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள், அல்லது என்ன முயற்சியை மேற்கொள்ளலாம் என்பதையாவது ஆராய்ந்து பார்த்ததா? இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் முதலாவது கொண்டுவந்த சட்டத்திற்கும் இப்போது தாக்கல் செய்திருக்கும் சட்டத்திற்கும் பொருத்தம் இல்லை, காம்ப்ளிமென்டரி டிக்கட்டுகளில் இருக்கின்ற குறைபாடுகளைத் தடுப்பதற்காக வரி வசூல் செய்ய வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட சட்டம் இப்போது உயிரற்ற சக்கையாக—முக்கியமான ஷரத்துக்களை எல்லாம் ட்ராப் செய்துவிட்டு—இப்போது தொழில் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றுவதின் மூலமாக எந்தவிதமான பயனும் ஏற்பட்டு விடாது. இந்தச் சட்டத்தின் மூலமாக இருக்கின்ற குறைபாடுகளை நீக்குவதற்கு முயல வேண்டும். கள்ள டிக்கட்டுகளை விற்பனை செய்வதையும், போலி டிக்கட்டுகள் தயாரிப்பதையும், கள்ள சீல் போட்டு வரிப் பணத்தை அரசாங்கத்திற்குச் செலுத்தாமல் ஏமாற்றுவதையும் தடுக்கின்ற முறையில் சட்டத்தைத் திருத்தம் செய்யவேண்டும் என்று கோரி, இந்தச் சட்டத்தை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவிச் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய 11-30 a.m.
தமாஷா வரி திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிலர் பேசுகின்றபோது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சினிமாத் துறையில் இருக்கிற அதிபர்கள் சிலர் சட்டமே வேண்டாமென்று ஆட்சேபணை செய்தார்கள் என்ற தகவலை அவர்களே கொடுத்தார்கள். எவ்வளவு பலமாக ஆட்சேபணை செய்தாலும்கூட அவசியம் என்று கருதிச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பது அரசாங்கத்தின் நேரான போக்குக்கு அதை அத்தாட்சியாகச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய ஆட்சேபணையில், தமாஷா வரித்திருத்தச் சட்டம் ஆரம்பத்தில் கொண்டுவந்தபோது காம்ப்ளிமென்டரி டிக்கெட்டுகளுக்கு அதிபர்களே அதற்கு உரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று இருப்பதைப் பற்றி மிகப்பெரிய ஆட்சேபணையாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இயல்பாக காம்ப்ளிமென்டரி டிக்கெட்டுகளுக்கு, அவற்றிற்கு உரிய தொகையை யாரேனும் சினிமா தியேட்டர் சொந்தக்காரர்கள் அல்லது கேளிக்கை நடத்துகிறவர்கள் தங்கள் பொறுப்பிலிருந்து கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுமானால் அது சரியான அளவுக்கு நடக்குமா என்பது முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்று; அது நியாயம்தானா என்பது இன்னொன்று. இதையெல்லாம் கவனித்துத்தான் இது அவசியம் இல்லை என்ற முடிவுக்குக் கமிட்டி வந்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய கருத்து, காம்ப்ளிமென்டரி டிக்கட்டுகளைப் பொறுத்தமட்டில், குறிப்பிட்ட அளவு, இத்தனை எண்ணிக்கைக்கு மேல் கூடாது என்று விதிகள் செய்கிற போது சீராகச் செய்து முடித்துவிடுவது நல்லது; செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்தச் சட்டத்தில், இது வரையிலும் தெரிந்த அளவுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தீர்வை, அது தவறு என்று தெரிய வருமானால், கடந்த 5, 6 வருஷங்களில் தப்பிக்கப்பட்டிருந்தும் கூட, இப்போது தெரிந்து விதிக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. இதுவும் நியாயம் தான். குறைவாகக் கணக்குக் கொடுக்கப்பட்டு, அதன் பேரில் மதிப்பிடப்பட்டிருக்குமானால் இப்போது கண்டுபிடிக்கப்பட்டால் தவறுக்காக அபராதத்தோடு, அதுவும் அதிகம் இல்லை, ஒன்றரை மடங்கு என்பது சரியான தொகை, இப்போது வசூலிக்க இடம் இருக்கிறது.

இன்னொன்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் சுட்டிக்காட்டியபடி, தவறான முறையில் சீல்கள் தயாரிக்கும் தியேட்டர் நடத்துகிறவர்கள் இருக்கிறார்கள் என்றால், எந்த அளவுக்கு அத்தகைய தவறுகள் நடக்காமல் இருக்க சீலில் மாற்றம் செய்வது, எந்த அளவுக்கு அதைத் தடுக்க முடியும் என்று ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

தியேட்டர்கள் நடத்திவதில் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் குறிப்பிட்டது போல, தியேட்டர்கள் நடத்துகிறவர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் நினைக்கவில்லை. குறிப்பாக, நல்ல தொழில் அதிபர்கள், வசதி உள்ளவர்கள் எல்லாக் கட்சிகளுக்கும் சொந்தமானவர்கள் சாதாரணமாக, கட்சிகள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர்கள் அல்லது எல்லாக் கட்சிகளுக்கும் சொந்தமானவர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். வேகமாக ஒன்றைச் சொல்லுவதால் அதற்கு நியாயம் வந்து விடும் என்று நினைப்பது தவறு. அடுத்து அடுத்து நூற்றுக்கணக்கான பெயர்களை, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக இருந்து தியேட்டர்கள், கேளிக்கைகள் நடத்தக் கூடியவர்கள், தவறு செய்யக் கூடியவர்கள், பெயர்களில் ஆயிரம் பெயர்கள் கொடுக்க முடியும். திருடனைப் பலர் துரத்திக்கொண்டு வரும்போது, திருடியதை மறைக்க திருடனே 'அதோ திருடன்' என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள். ஓங்கிச் சொல்லுவதன் மூலமாகச் சொல்லுவது உண்மையாக ஆகி விட முடியாது. தவறு செய்கிறவர்களுக்கு யாரிடத்திலும் பந்தோபஸ்து இருக்க நியாயமே கிடையாது. அதுவும் குறிப்பாக நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் கேளிக்கைகள் நடத்துகிறவர்களால், தியேட்டர்களை நடத்துகிறவர்களால் வரும் ஆதாயங்களைமட்டும் நம்பிக் கட்சி நடக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அத்தகைய நிலைமையில் அவர்களைக் கண்டு பயப்படவேண்டியதில்லை.

4th November 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

ஒரு ஷோவுக்குக் கொடுக்கும் டிக்கெட்டை மற்றொரு ஷோவுக்கு புத்திசாலித்தனமாக உபயோகப்படுத்தும் நிலைமை உண்டு. அதை எந்த அளவுக்குத் தடுக்க முடியும் என்று தெரியவில்லை. இதைப் பற்றியெல்லாம் விதிகள் செய்யும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அதே போல, ஒரு க்ளாஸுக்கு டிக்கெட் எடுத்து உயர்ந்த இடத்தில் உட்கார இடம் இருக்கிறது. அதைத் தடுக்க இந்தச் சட்டத்தில் வழி செய்யப்படவில்லை என்று கருதுகிறேன். அதையும்கூட விதிகள் செய்யும்போது கவனிக்கலாம்

சீல்கள் செய்வது, கள்ளத்தனமாக டிக்கட் அடிப்பது என்று எந்தத் தியேட்டரிலாகிலும் காணப்பட்டால், நிச்சயமாகச் சில தினங்களாவது அந்தத் தியேட்டரை சஸ்பென்ட் செய்ய வேண்டியது அவசியம். எனக்குத் தெரியும், சில சந்தர்ப்பங்களில் அத்தகைய தியேட்டர்களில் சில அத்தகைய குற்றங்களுக்கு இலக்காகி இருந்தால், கேஸ் வரும் பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்து அல்லது கம்பவுண்ட் செய்யும் அளவுக்கு, அபராத வரியாக அபராதத்தோடு கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த கம்பவுண்ட் முறை நியாயமான முறை என்று நான் நினைக்கவில்லை. வேண்டுமென்றே படுபாதகச் செயல்களைச் செய்தால் சில தினங்களுக்காகிலும் சஸ்பென்ட் செய்வதன் மூலம் அதை ஜனங்கள் புரிந்துகொள்ள முடியும். மேற்கொண்டு தியேட்டர்காரர்களும், பார்க்க வருகின்றவர்களும் ஜாக்கிரதையாக இருக்க முடியும் என்று கருதுகிறேன்.

இத்தகைய நல்ல அம்சங்களைப்பற்றிக்கூட விதிகள் செய்யும் போதாவது பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு நல்ல சட்டம் கொண்டுவந்தற்காகப் பாராட்டி முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம். மதிப்புக்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் நோக்கம், கள்ளத்தனமாக வரி ஏய்ப்பு நடத்தப்பட்டிருந்தால், அத்தகைய வரி ஏய்ப்பு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டால் மறு முறையும் வரி விதிக்கிற சட்டப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும், நமது உயர்நீதி மன்றம் அப்படி மீண்டும் வரி விதிப்புச் செய்யலாமா என்று ஆராய்ந்து ஒரு சில தீர்ப்புகளிலே அத்தகைய வரி விதிப்புச் செய்கிற அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை, அதிகாரிகளுக்கு இல்லை என்று கூறித் தீர்ப்பு வழங்கியதன் விளைவாக, அந்த நிலைமையைப் போக்குவதற்காக இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்ததாக விளக்க நோக்கங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாநில அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டு அவ்வப்போது பல திருத்தங்கள் செய்யப்பட்டு வருகிற சென்னை பொது விற்பனை வரிச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த விற்பனைவரி ஏய்க்கப்பட்டால், மீண்டும் அது கண்டுபிடிக்கப்பட்டால், ஏய்ப்புக்கு ஏற்ற அளவுக்கு வரி விதிக்கலாம் என்ற அளவுக்குப் பொது விற்பனை வரிச் சட்டத்திலே இருக்கிறது.

ஆனால், இந்தக் கோரிக்கை வரிச் சட்டத்திலே அத்தகைய ஷரத்து இல்லாத காரணத்தினால் அத்தகைய ஷரத்தைச் சட்ட இலாகா அல்லது அரசாங்கம் கவனக் குறைவாக இந்தச் சட்டத்திலே போடாத காரணத்தினால் ஏறக்குறைய பல லட்சம் ரூபாய் அளவுக்கு வரி ஏய்ப்புக் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் மீண்டும் வசூலிக்கப்படுகிற நிலைமை இல்லாமல் போய்விட்டது. அதற்குப் பின்னால்தான் அரசாங்கம் சிந்தித்து, ஏற்கனவே தாங்கள் செய்த தவறைத் திருத்திக்கொள்ளுகிற முறையிலே இந்தத் திருத்தத்தை இந்த மசோதாவின் மூலம் கொண்டுவந்திருக்கிறது என்றால், அது மிகை ஆகாது. ஆனால், அந்தத் திருத்தம் தேவைதான் என்றாலும் கூட, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், அத்தகைய திருத்தங்கள் செய்யப்பட்டு, வரி ஏய்ப்புச் செய்யப் பட்ட தொகையை வசூலிக்கின்ற தன்மை, இந்தத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டு அதற்குப் பின்னால் வசூலிக்கப்படும் என்ற நிலைமை இருக்கிறதா என்று கேட்டால், இல்லை. ஷரத்திலே 1960-ம் ஆண்டில் இருந்து அத்தகைய ஏய்ப்புகள் நடத்தப்பட்டிருந்தாலும், அத்தகைய ஏய்ப்புகள் இந்தத் திருத்த மசோதாவுக்கு முன்னாலே நடந்திருந்தாலும்கூட, இந்தத் திருத்தச் சட்டம் 1960-ம் ஆண்டிலிருந்து அமலுக்கு வந்ததாகக் கருதப்படும் என்று இருக்கிறது. உண்மையிலேயே ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் அந்த ஷரத்திலே கொடுக்கப்படுகிறது. வரி விதிப்புச் சட்டங்களில், ப்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்டாக, பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து, அமலுக்கு வந்ததாகத்தான் ஷரத்துப் போடப்படும். ஆனால், இதிலே ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற தன்மையைப் பார்க்கும்போது, சட்டப் பிரச்னையைப் பொறுத்தவரையில் சொல்லுகிறேன், ஏய்த்தவர்களிடமிருந்து நிச்சயமாக வாங்கலாம். அதில் தவறு ஒன்றும் இல்லை; இது சட்ட ரீதியாகச் சரியாக இருக்குமா, ப்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் தானே கொடுக்கவேண்டும், ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதே, மீண்டும் உயர்நீதி மன்றங்களுக்கு எடுத்துச் சென்றால் அந்த ஷரத்து நிலைத்து நிற்குமா, நிற்காதா என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. இதிலே நிச்சயமாக ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்க முடியாது என்றே நான் கருதுகிறேன். சட்டம் இயற்றப்பட்ட தேதியிலிருந்து,. சட்டம் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து அமலுக்கு வருகிற முறையிலே இந்த ஷரத்தை மாற்றி அமைக்கலாம் என்ற ஒரு ஆலோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இந்த மன்றத்தின் முன்னால் எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல், இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில், சாதாரணமாக கிரிமினல் வழக்கில் அபராதம் என்ற முறையிலே தியேட்டர் உரிமையாளர் குற்றவாளி என்றால் ரூ. 500 அபராதம் என்றும், டிக்கட் இல்லாமல், பாஸ் இல்லாமல் ஷோவுக்குச் செல்லுபவர்களுக்கு ரூ. 100 அபராதம் என்ற அளவுக்குத்தான் இந்தச் சட்டத்தின் கீழுள்ள பீனல் கிளாஸ் அமைந்திருக்கிறது. கிரிமினல் வழக்கைப் பொறுத்தவரையிலே குற்றம் சாட்டுகிறவர்கள்தான் பிராசிகியூடர் தான் குற்றம் சாட்டப்படுபவர்களின் மீது

4th November 1966] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

குற்றத்தை நிரூபிக்கிற தன்மை பொதுவாக இருந்து வருகிறது. ஒருவர் டிக்கட் இல்லாமல் அல்லது பாஸ் இல்லாமல் தியேட்டருக்குள் நுழைந்தால் அவரை அதற்காக பிராசிக்யூட் செய்தால், குற்றத்தை நிரூபிக்கின்ற 'பர்டன் ஆப் புரூப்' என்று சொல்லுகிறார்களே, அதாவது குற்றத்தை நிரூபிக்கின்ற பளு, பொறுப்பு, சுமை குற்றவாளி மீது விழுந்துவிடுகிறது. அதே மாதிரித்தான் யாராவது ஒருவர் தியேட்டருக்குள் டிக்கட் இல்லாமல் அல்லது பாஸ் இல்லாமல் இருந்தால், தாங்கள் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்கின்ற தன்மை, பளு தியேட்டர் உரிமையாளர்கள் மீது விழுந்துவிடுகிறது. குற்றம் சாட்டப்படுபவர்கள் மீது குற்றத்தை நிரூபிக்கின்ற பளு, பொறுப்பு விழுந்துவிடுகிறது. இந்த நிலை நல்லது தானா, இது சட்டபூர்வமான தன்மையா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிச் சொல்கின்ற நேரத்தில் சென்னை மது விலக்குச் சட்டத்தில் நாங்கள் இத்தகைய ஒரு கிளாசை போட்டிருக்கிறோம், சட்ட ரீதியாக அது செல்லுபடியாகாத நிலைமை ஏற்படவில்லை, சுப்ரீம் கோர்ட்டு அம்மாதிரித் தீர்ப்புகள் வழங்கியிருக்கிறது என்கின்ற வாதத்தை அரசாங்கத் தரப்பில் எடுத்துச் சொல்வார்கள். இதிலேகூட இன்னொரு ஷரத்து இருக்கிறது. ஒருவர் டிக்கட் இல்லாமல் பாஸ் இல்லாமல் தியேட்டருக்குள் நுழைந்தால், அவர் நிரபராதி என்று எப்படி நிரூபிக்கவேண்டும் என்பதற்கு வழிவகை சொல்லப்பட்டிருக்கிறது. 'நான் தியேட்டர் உரிமையாளர் அனுமதி பெற்றிருக்கிறேன், அல்லது அவர் அறிந்து அவருக்கு உதவியாக, துணையாகத்தான் நான் உள்ளே சென்றேன்' என்று அவர் நிரூபித்தால், அவர் நிரபராதி என்று விடுதலை செய்யப்படுவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே சந்தர்ப்பத்தில் தியேட்டர் முதலாளியாக இருப்பவர் நிரூபிக்கவேண்டிய பளு, பொறுப்பு என்னவென்றால் 'நான் அறியாமல் என்னுடைய உதவி இல்லாமல், எனக்குத் தெரியாமல் அவன் நுழைந்துவிட்டான்' என்று நிரூபித்துவிட்டால், தியேட்டர் முதலாளி குற்றமற்றவர், குற்றவாளி அல்ல என்கிற நிலையும் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. ஆகவே இந்த ஷரத்துக்களைக் குறித்துப் புனராலோசனை செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், குற்றத்தை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு, பளு குற்றம் சாட்டுகின்ற அரசாங்கத்தின் மீது இருக்க வேண்டும். எங்கள் கட்சியின் செயலாளர் சொன்னதுபோல, அபராதம் ரூ. 500, 1,000 என்று இல்லாமல், ரூ. 1,000, 2,000 என்ற அளவுக்கும் இருக்க வேண்டும். அதே சந்தர்ப்பத்தில் இரண்டு, மூன்று ஆண்டுகள் 'கம்பல்சரி இம்பரிசன்மெண்ட்' என்கிற அளவுக்கும் சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இத்தகைய குற்றங்கள் தடுக்கப்படும். ஓரளவுக்குக் குற்றம் செய்யவேண்டும் என்று யாராவது குற்றம் புரிந்தால்கூட, பல பேர் பயந்து இத்தகைய கடுமையான தண்டனை இருக்கிறது என்று எண்ணி, அவர்கள் மேலும் தொடர்ந்து குற்றம் செய்யாமல் இருக்க அவர்களைத் தூண்டும் நிலைமை ஏற்படும்.

அத்தகைய நிலைமையிலே இத்தகைய ஷரத்துக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அரசாங்கம் இப்படி, ஒரு திருத்த மசோதா கொண்டு வந்தமைக்கு சர்க்காரைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை எல்லோரும் ஆதரித்துத்தான் பேசினார்கள். சிலர் கடுமையாக ஆதரித்தார்கள். அதுவும் என்னுடைய நண்பர் திரு. மதியழகன் அவர்கள் இங்கே இல்லை, எப்பொழுதும் போல அவருடைய வழக்கமான பாணியிலே கடுமையாக ஆதரித்தார். அவர் இதை எதிர்க்கவில்லை. பார்ப்பதற்கு அவர் பேசியது இதை எதிர்க்கின்ற மாதிரி ஒரு தொனி இருந்ததே தவிர, இதை ஆதரித்துத்தான் பேசினார். ஆகவே, இந்த விவாதத்திற்குப்பதில் சொல்லவேண்டியது வெகு குறைவான விஷயங்கள் தான்.

முதலில் சட்டப் பிரச்னையைப்பற்றி நான் சில விளக்கங்கள் கூற விரும்புகிறேன். கனம் உறுப்பினர் திரு. கரிவேங்கடம் அவர்கள் இந்தச் சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கலாமா என்பதைப்பற்றிச் சந்தேகம் தெரிவித்தார். ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. எந்தவிதமான வரி விதிப்புகளும் பின்னாலே சரியல்ல என்று சொல்லப்பட்டால், அவை போட்ட தேதியிலிருந்து செல்லுபடியாகும் என்று விதிகள் செய்து இதற்கு முன்னால் பல சந்தர்ப்பங்களில் நிறைவேற்றியிருக்கிறோம். அவையெல்லாம் கோர்ட்டுகளினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால், எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

இரண்டாவதாக, இந்த மசோதாவிலே வரி ஏய்ப்புச் செய்து, ஏமாற்றி வரி கொடுக்காமல் போனவர்களுக்குச் சரியான வகை செய்யப்படவில்லை, அதை வேண்டும் என்றுதான் சர்க்கார் செய்திருக்கிறார்களோ, அல்லது அவர்களுக்குச் சட்டம் போடுகின்ற திறமைக் குறைவோ என்று சொன்னார்கள். இதெல்லாம் 1939-ம் வருஷத்தில் போட்ட சட்டம். அப்பொழுதெல்லாம் வரி ஏய்ப்புக் குறைவு என்று ஜனங்களிடையே அபிப்பிராயம் இருந்ததுபோல் இருக்கிறது. 1959-ம் வருஷத்தில் போட்ட சட்டத்தில் இந்த ஷரத்து இல்லாவிட்டாலும் நாங்கள் அதிகாரம் இருக்கிறது என்ற முறையில்தான் வசூல் செய்து வந்திருக்கிறோம். ஏமாற்றிய தமாஷாவரியை அல்லது கேளிக்கை வரியை நாம் அசெஸ் செய்ய முடியும் என்ற முறையில் அசெஸ் செய்தோம். அப்படி அஸெஸ் செய்த பொழுதுதான் இப்பொழுது அந்த விஷயம் கோர்ட்டுக்குச் சென்று அந்த விதமான ஷரத்து இந்தச் சட்டத்தில் இல்லை, அதனால் அந்த அஸெஸ்மெண்டு தவறு என்று கோர்ட்டார் சொன்னார்கள். ஆகவே, அதை நாம் திருத்தி, இதற்கு முன்னால் அஸெஸ் செய்தது, பணம் வசூல் செய்தது செல்லுபடியாகும், இனி அந்தவிதமான அஸெஸ்மெண்டு செய்ய முடியும் என்று சொல்லி

யிருக்கிறோம். ஆகவே அந்தத் துறையிலே வரி வசூல் செய்யும் விஷயத்தில் எந்தவிதமான குறைபாடும் நமக்கு ஏற்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. ஏதோ லட்சக்கணக்கான ரூபாய் வரி ஏமாற்றப்பட்டுவிட்டது, கோட்டை விட்டுவிட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். அது சரியல்ல. சட்டத்தில் அதிகாரம் இருக்கிறதோ, இல்லையோ வசூல் செய்துகொண்டுதான் இருந்தோம். அது தவறு, சட்டத்தில் ஷரத்து இல்லை என்று சொன்னபொழுது, அதற்கு இப்பொழுது திருத்தம் செய்து மசோதா கொண்டு வந்திருக்கிறோம்.

அடுத்து, கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு சட்டப் பிரச்னை சொன்னார்கள். கட்டணம் இல்லாமல் சினிமாவுக்குச் செல்லுகிறவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றபொழுது, 'பர்டன் ஆஃப் புரூஃப்' அவர்கள் நிரபராதி என்று சொல்லக்கூடிய வாதம் அவர்கள்தான் எழுப்பவேண்டும் என்று சொல்லியிருக்கிறது, இது சட்டத்திற்குப் புறம்பானது என்று சொன்னார்கள். அதுவும் சரியல்ல. இப்பொழுது 'ரிஸீவர் ஆப் ஸ்டோலன் பிராப்பர்டியை' எடுத்துக் கொண்டால், இண்டியன் பினல் கோடின் கீழ், யாரிடமாவது திருட்டுச் சொத்து இருந்துவிட்டால், அது எப்படி அவர்களிடம் வந்தது, நியாயமான முறையில் தன்னிடம் வந்தது என்று நிரூபிக்கிற பொறுப்பு 'ரிஸீவர் ஆப் ஸ்டோலன் பிராப்பர்ட்டி'யிடம் தான் இருக்கிறது. அதேபோல ஒருவரும் கட்டணம் இல்லாமல், அல்லது பாஸ் இல்லாமல் தியேட்டருக்குள் போகக்கூடாது என்ற ஒரு விதி இருந்துவிட்டால், யாராவது ஒருவர் டிக்கட் இல்லாமல் அல்லது பாஸ் இல்லாமல் தியேட்டருக்குள் இருந்தால், எப்படி அவர் உள்ளே வந்தார் என்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பு அவருடையதுதான். கட்டணம் அல்லது பாஸ் இல்லாமல் ஒருவரையும் தியேட்டருக்குள் அனுமதிக்கக்கூடாது என்பது ஷரத்து. அந்த நிலைமையில் அவர் எப்படி உள்ளே வந்தார் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் சினிமா தியேட்டர் முதலாளியினுடையதுதான். இதற்கு முன்னால் ஒரிஜினலாகக்கொண்டுவரப்பட்ட மசோதாவில் யார் ஒருவர் தியேட்டரில் கட்டணம் இல்லாமல் அல்லது பாஸ் இல்லாமல் இருந்தாலும் அவருக்கு அபராதம் விதிக்கப்படும் என்று போட்டிருந்தோம். இப்பொழுது அதை நாம் எப்படி மாற்றி அமைத்திருக்கிறோம் என்றால், யாராவது ஒருவர் கட்டணம் இல்லாமல் அல்லது பாஸ் இல்லாமல் தியேட்டருக்குள் வந்திருந்தால், அவர் 'என்னிடம் கையில் காசு வாங்கிக்கொண்டு புரொப்ரைட்டர் உள்ளே விட்டுவிட்டார்' என்று நிரூபித்தால், தியேட்டருக்குள் வந்தவருக்குத் தண்டனை கிடையாது இல்லாவிட்டால், அப்படித் தியேட்டருக்குள் வந்தவருக்குத் தண்டனை கிடைக்கும். அவர் திருட்டுத்தனமாகத் தனக்குத் தெரியாமல் தியேட்டருக்குள் நுழைந்துவிட்டார் என்று தியேட்டர் ஓனர் நிரூபித்துவிட்டால், தியேட்டர் ஓனருக்குத் தண்டனை கிடையாது. தியேட்டர் ஓனரை ஏமாற்றிவிட்டு உள்ளே நுழைந்தவருக்குத் தண்டனை கொடுக்கப்படும். இவை மிகவும் நல்ல, நியாயமான சட்டப்பூர்வமான ஷரத்துக்கள்; தவறு கிடையாது.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [4th November 1966

அடுத்து, நண்பர் திரு. மதியழகன் பேசும்போது, ஏதோ சில இடங்களில் ஏமாற்றிவிட்டார்கள் என்று சொன்னார்கள். சட்டங்கள் ஏமாற்றப்படுகின்றன. அது ஒன்றும் புதுமை இல்லை. எல்லா இடங்களிலும், எல்லோரும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 'காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லி, இரண்டு பேர்கள் ஏமாற்றினார்கள்' என்று சொல்ல, உடனே கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் 'நான் பட்டியல் கொடுக்கட்டுமா, எதிர்க்கட்சிக் காரர்கள் ஆயிரம் பேர்கள் ஏமாற்றியிருக்கிறார்கள்' என்று ஒரு பட்டியலையே கொடுக்கிறேன் என்று சொல்ல, இதெல்லாம் சட்ட மன்றத்திலே அவ்வளவு பொருத்தமான வாதம் அல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் நாளைக்குத் தேர்தலுக்காக வெளியிலே மேடைப் பிரசங்கத்திற்கு இதை ஒத்திகையாக கனம் அங்கத்தினர் மதியழகன் செய்துகொண்டார்களோ என்று நினைக்கிறேன். சட்டங்கள் ஏமாற்றப்படுகின்றன. இன்றைக்கு இந்தியன் பீனல் கோட் 1837-ம் வருஷத்திலே போட்டும், கொலை, திருட்டு இவையெல்லாம் நின்று விட்டனவா ? இல்லை. அதற்காக உடனே சர்க்காரைப் பார்த்து, நீங்கள் 1837-லேயே இந்தியன் பீனல் கோடை போட்டும், இன்னும் கொலை, திருட்டு குறைய வில்லையே என்றால் அது எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தம்தான் இன்றைக்குச் சொன்ன வாதமும்.

இன்னும் ஒரு பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு ஏதாவது ஒரு இடத்தில் ஒரு தவறு நடந்துவிட்டது என்று எப்பொழுது குறிப்புகள் கிடைக் கின்றனவோ, அப்பொழுது அதை நேரிடையாக மந்திரிகளுக்கு உடனே எழுதியனுப்பி, நடவடிக்கை என்ன எடுத்தீர்கள் என்று கேட்கவேண்டும். அவர்கள் அப்படி எதுவும் எழுதியனுப்பியதாக எனக்கு நினைவில்லை. எழுதி அனுப்பவில்லை என்றே நினைக்கிறேன். (குறுக்கிடு) எனக்கு அந்த விவரமெல்லாம் தெரியாது. மூன்று லட்சம் சிப்பந்திகள் இருக்கிறார்கள். ராஜ்யம் பூராவிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் மந்திரிகள் அல்லது காரியதரிசிகள் பார்ப்பதென்பது முடியாத காரியம். இந்த நாட்டிலே, ஏன், இந்த நாட்டில் மட்டுமல்ல, ஜனநாயகம் நடக்கும் எந்த நாட்டிலும், பொறுப்பில் எதிர்க் கட்சிக்கும் பங்கு உண்டு. எதிர்க் கட்சிகளுக்கு இந்த விதமான தவறுகள் நடந்ததாகத் தெரிந்தால், அவர்கள் கேள்விகள் போட்டும், மற்ற வகையிலும், பதில்கள் பெறவேண்டும்; இந்த விதமான விவரங்கள் கிடைத்திருக்கிறது என்று மந்திரிகளுக்கு எழுதியனுப்பி அவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டிய கடமை யும் அவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட கடமையை எதிர்க் கட்சி செய்யாமல் ஆளும் கட்சியைமட்டும் கடமை தவறிவிட்டது என்று குறைகூறுவது ஜனநாயகத்திற்குப் புறம்பானது, பொருத்த மானது அல்ல. அவர்கள் அப்படி ஒன்றும் சொல்லவும் இல்லை, சொன்னதாகவும் தெரியாது. ஆகவே, ஏதோ திடீரென்று மேட்டூரில், டிம்பக்டூவில், யாரோ ஒருவர் ஏதோ செய்துவிட்டார்

4th November 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

கள் என்றால், நான் எப்படிப் பதில் சொல்ல முடியும்? அதை ஒரு குறிப்பாக உடனே எனக்கு எழுதியிருந்தால், நிச்சயமாக அவர்களுக்குப் பதில் கிடைத்திருக்கும், விவரமாகப் பதில் கிடைத்திருக்கும்.

காம்ப்ளிமெண்டரி டிக்கட்பற்றிச் சொன்னார்கள். கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மீண்டும் சொன்னார்கள், காம்ப்ளிமெண்டரி டிக்கட்டை ஏன் விட்டு விட்டீர்கள் நீங்கள், சினிமாக்காரர்களுக்குக் காங்கிரஸ்காரர்கள் வளைந்து கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இந்த மசோதா காங்கிரஸ்காரர்கள் மட்டும் கொண்டு வரவில்லை. பொறுக்குக் கமிட்டி ஒத்துக்கொண்டு கொண்டுவந்திருக்கும் மசோதா இது. இது வேண்டாம் என்று சொல்லியிருந்தால், அவர்களுடைய கட்சி உறுப்பினர் அந்த ஆய்வுக் குழுவிலே, நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லியிருக்கவேண்டும். ஆனால், இது unanimous ஏகமனதாக நிறைவேற்றி கொண்டுவந்திருக்கும் மசோதா என்பதை மறந்துவிடக்கூடாது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் பொறுக்குக் குழு ஏகமனதாக முடிவு எடுத்தார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அந்தக் குழுவிலே, கனம் தொழில் அமைச்சர், இந்த காம்ப்ளிமெண்டரி சம்பந்தமான ஷரத்தினை விட்டுவிடலாம் என்று யோசனை சொல்லி பதன் பேரில், அது கைவிடப்பட்டது என்றுதான் இருக்கிறது. அமைச்சராக மசோதாவைத் தாக்கல் செய்தபோது, வீராவேசமாக காம்பளிமெண்டரி டிக்கட்டுகளுக்கு வரி கொடுக்க வேண்டும் என்று கொண்டுவந்துவிட்டு, அதே அமைச்சர் செலெக்ட் கமிட்டியில், சினிமாக்காரர் திரு. ஏ. எல். ஸ்ரீனிவாசனும், அவரும் காங்கிரஸ்காரர், இன்னொரு சினிமாக்காரரும், காங்கிரஸ்காரரும் ஆகிய திரு. ஜி. உமாபதியும், மற்றும் ஒரு காங்கிரஸ்காரரான திரு. பரிசுத்த நாடாரும் ஆட்சேபனை கிளப்பிய பிறகு, மந்திரியவர்கள், இதைக் கைவிட்டுவிடலாம் என்று சொல்லியிருப்பது நியாயமா என்றுதான் கேட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆய்வுக் குழுவிலே எல்லா அங்கத்தினர்களும் அவரவர் கருத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆய்வுக் குழுவிலே சர்க்கார் கட்சி, எதிர்க்கட்சி என்று கிடையாது என்கின்ற ஜனநாயகப் பண்பை நாம் மறந்துவிடக் கூடாது. பலர் வந்து எவிடன்ஸ் கொடுக்கும் போது அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். அப்படி அவரவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னால், எவிடன்ஸ் எடுக்கத் தேவையில்லை என்று அப்பொழுதே சொல்லியிருக்கவேண்டும். சாட்சியம் வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம். அதைவிட்டு இப்பொழுது இப்படிப் பட்ட அபிப்பிராயத்தைச் சொன்னால் என்ன செய்யமுடியும்? ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லும் உரிமை எல்லா அங்கத்

தினர்களுக்கும் இருக்கிறது. அப்படிச் சொன்னால், 'டிஸெண்டிங் மினிட்' எழுதவேண்டும், 'நான் இதை ஒத்துக்கொள்ளவில்லை' என்று எழுதவேண்டும். இன்றைக்குக் கொண்டுவந்திருப்பது, ஆய்வுக் குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டு இருப்பதைத்தான். காங்கிரஸ் வளைந்து கொடுத்தது என்றால், அதற்கு உடந்தையாக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகம், அந்தப் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன். நம்முடைய சட்டசபைப் பண்புகள்படி 'யுனானிமஸ் ரெகமண்டேஷன்' எதுவாக இருந்தாலும், அதைக் குறைகூறுவது வழக்கம் கிடையாது. குறைகூறவேண்டும் என்றால், 'டிஸெண்டிங் மினிட்' எழுதியிருக்கவேண்டும். அதை விடவேண்டாம் என்று சொன்னால் எனக்கு மிக்க நல்லதாக இருக்கும், அதிகமாக பணம் வசூலிக்க ஏதுவாக இருக்கும். பணம் வசூல் செய்ய நான் தயார். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டு தவறு, சட்டசபை முறைகளுக்கு மாறானது, முறையற்றது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றபடி, இந்த மசோதாவிற்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும், சேல்ஸ் டாக்ஸை ஏன் வித்ட்ரா செய்தீர்கள் என்று மீண்டும் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் கேட்டார்கள். அவர்களுக்கும் இதே வாதம் பொருந்தும். அவர்களும் அந்த ஆய்வுக் குழுவிலே இருந்தார்கள். எல்லாரும் ஒத்துக்கொண்டார்கள். ஒருவர் மட்டுந்தான் கூடாது என்று சொன்னார்கள். மற்றவர்கள் அத்தனை பேர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, விட்டுவிட்டார்கள் என்று சொல்லுவது . . .

திரு. கே. ஏ. மதியழகன் : On a point of personal explanation. The Hon. Minister is making a serious allegation. (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களுடைய பார்ட்டி பொறுப்பு என்று சொல்லுகிறேன்.) பொது விற்பனை வரி மசோதா வந்தபோது, பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அதே சமயத்தில் எமர்ஜன்ஸி பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. எமர்ஜன்ஸி என்று வியாபாரிகள் நிர்ப்பந்தப்படுத்தினார்கள். பொறுக்குக் கமிட்டியில் அமைச்சர், 'மதியழகன் என்ன சொல்லுகிறார்கள்' என்று கேட்டார்கள். அப்படிப் பதிவாகியிருக்கிறது. எமர்ஜன்ஸி தளர்ந்தவுடன் கண்டிப்பாகக் கொண்டுவரலாம் என்று சொன்னார்கள். அதை வாபஸ் வாங்குவதற்குச் சொன்ன காரணங்கள் இரண்டு. ஒன்று, எமர்ஜன்ஸி; இரண்டு, நல்ல எண்ணம். நான் சொன்னேன், 'அவர்களுடைய நல்லெண்ணத்தில் நம்பிக்கையில்லை ஆனால் அமைச்சர் சொல்லுவதால், ஆதரவு கொடுக்கிறேன்' என்றேன். மீண்டும் அந்த மசோதாவைக் கொண்டுவரலாம். கொண்டுவரவேண்டும் என்றுதான் சென்ற கூட்டத்தில் சொன்னேன். ஆகவே, சட்ட சந்து பொந்துகளில் நுழைந்து குற்றம் சொல்லுவது சரியில்லை. இன்றைக்குக் கூட அந்த மசோதாவைக் கொண்டுவரலாம்.

12-00 noon, *கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களுக்கு ஞாபக சக்தி மிகவும் நன்றாக இருக்கிறது. அவர்கள் ஏதாவது

சொல்லி விட்டுவிடுவாரோ என்று பயந்தேன். அப்படி ஒன்றும் சொல்லி விடவில்லை. அவர் ஒப்புக்கொண்டார் அந்த இடத்திலே நெருக்கடி இருக்கிறது. அதனால் நாம் எல்லோரும் வாபஸ் பெற வேண்டும் என்று சொன்னார்கள். நெருக்கடி தீர்ந்துவிட்டதா, இல்லையா என்பதைப்பற்றி எனக்கும் அவருக்கும் கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், ஏதோ ஒரு காரணத்திற்காக வாபஸ் வாங்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அது சரியாகாது. அப்படி இருக்குமானால் அந்த மாதிரி வாபஸ் வாங்கினதற்கு அவரும் உடந்தை என்றுதான் நான் சொல்ல விரும்பினேன்.

இந்த மசோதா நல்ல வருவாயைக் கொண்டுவருகிறது, இதிலே போட்டிருக்கிற தண்டனை குறைவு என்று மற்றொரு குற்றச்சாட்டு சொன்னார்கள். அது சரியல்ல. இரண்டாவது ஷரத்தை எடுத்துப் பார்த்தால், அஸெஸ்மெண்டிலிருந்து தப்பினவர்களுக்கெல்லாம், அஸெஸ்மென்டை ஏமாற்றினவர்களுக்கெல்லாம் ஒன்றரை மடங்கு 'ரீ-அஸெஸ்மெண்ட்' போடலாம் என்று இருக்கிறது. அதுதான் 'ஸப்ஸ்டான்ஷியல் பனிஷ்மெண்ட்'. ஆயிரம் ரூபாய் ஏமாற்றினால், அந்த ஆயிரம் ரூபாய்க்கு மேலும் ரூ. 1,500 கொடுக்கவேண்டும். இலட்சம் ரூபாய் ஏமாற்றினார்கள் என்றால், இலட்சம் ரூபாய்க்கு மேல் ஒன்றரை இலட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும். இதைவிட ஒன்றும் அதிகக் கடுமையாகப் போட முடியாது.

இதைத் தவிர, கிரிமினல் அஃபேன்ஸுக்கு பனிஷ்மென்ட் ரூ. 500 அபராதம் என்று போட்டிருக்கிறார்கள். சட்டத்தில் ரூ. 500 என்று போட்டாலும், ரூ. 5,000 என்று போட்டாலும், எவ்வளவு அபராதம் விதிக்கவேண்டும் என்று கோர்ட்டாருக்குத் தெரியும்.

"Not exceeding Rs. 500"
"Not exceeding Rs. 1,000"

என்று தான் போட முடியும். குறைவான குற்றம் என்று அவர்கள் கருதுவார்களானால், அதற்குத் தகுந்த மாதிரித்தான் அபராதம் விதிப்பார்கள். சட்டத்தில் 'ஐயாயிரம்' என்று போட்டாலும் அவர்கள் ஐயாயிரம் ரூபாய் அபராதம் போடமாட்டார்கள். அதனால், அஃபென்சுக்குப் போட்டிருக்கிற தண்டனை வேறு. அஸெஸ்மெண்டிலே ஏமாற்றுகிறவர்களிடமிருந்து நாம் ஒன்றரை மடங்கு அதிகமாக வசூலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Entertainments Tax (Amendment) Bill. 1965 (L.A. Bill No. 29 of 1965), as amended by the Select Committee, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 7 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 29 of 1965), as amended by the Select Committee, be passed."

The motion was put and carried and the Bill, as amended by the Select Committee, was passed.

(3) THE MADRAS PANCHAYATS (AMENDMENT) BILL, 1966.

* THE HON. SRI S. M. A. MAJID: Sir, I beg to introduce the Madras Panchayats (Amendment) Bill, 1966, and move—

"That the Bill* be taken into consideration."

Under section 53 (*b*) of the Madras Panchayats Act, 1958, the Panchayat Union Councils have constituted Agricultural Production Committees consisting of six members, viz., the Block Development Officer, the Extension Officer (Agriculture), the Extension Officer (Animal Husbandry) and three practical agriculturists. This Committee falls in the category of "other Committees". It has been suggested that the Agricultural Production Committee should be given statutory status similar to the Appointment Committee, Education Committee and General Purposes Committee and that the composition of the Committee and the method of choosing members should be specified in the Act itself, as it has been done in the case of the Appointment Committee. In the present context of according highest priority to agricultural production, it is considered necessary to give the Agricultural Production Committee formed by the Panchayat Union Councils the status of a statutory committee. This involves certain amendments to section 53 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958). The Bill seeks to give effect to the above object. I request the House to accept the motion.

MR. DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Panchayats (Amendment) Bill, 1966, be taken into consideration."

SRIMATHI T. N. ANANDANAYAKI: Sir, the objects of this Bill are really commendable. It is said that the Agricultural Production Committee shall be composed of the chairman of the panchayat union council who shall be the chairman of the Committee, the commissioner and three persons co-opted by the panchayat union council. It is also stated that a person shall not be co-opted if he is a member of the panchayat union council. The Government should consider why a member of the union council should be prohibited from co-option. A member of the union council may possess adequate knowledge in and experience of

* Published in the *St. St. George Gazette* Extraordinary, dated 24th October 1966.

agriculture and his advice may be valuable to the Committee. Hence I submit that there should be no prohibition to co-option of members of the union council if they possess adequate knowledge of and experience in agriculture.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மாள் குறிப்பிட்ட அளவிலே, பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் கவுன்சில் கூட்டங்களில் வழக்கமாக ஆஜராகியிருந்து கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். அல்லது, பஞ்சாயத்து யூனியன் தலைவர், அவர்களுடைய பிரதிநிதி என்ற அடிப்படையிலே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். இதன் முக்கியமான அடிப்படை என்னவென்றால், பஞ்சாயத்து யூனியனிலே அங்கம் வகிக்க முடியாத எத்தனையோ சிறந்த அறிவாளிகள், அனுபவசாலிகள் வெளியில் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்து, விவசாய அபிவிருத்தியில் மறுமலர்ச்சி கொண்டுவரவேண்டும் என்பது தான். அதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்ந்து, அதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகையால், இதில் எந்தவிதமான மாறுதலுக்கும் அவசியமில்லை என்று கூறி, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Panchayats (Amendment) Bill, 1966, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI S. M. A. MAJID : Sir, I move—

"That the Madras Panchayats (Amendment) Bill, 1966, be passed."

The motion was put and carried and the Bill was passed.

III.—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1966.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1966.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(4) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1966.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1966, and move—

" That the Bill † be taken into consideration.

Sub-section (1) of section 16 of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959) contains provisions for assessment of turnover, which has escaped assessment, and for re-assessment of turnover which has been assessed at a rate lower than the rate at which it is assessable. That section does not explicitly provide for making assessment of escaped turnover to the best of judgment. The assessing authorities of the Commercial Taxes Department, however, have all along been making assessments of escaped turnover to the best of judgment under section 16 of the Act. This view was supported by the decision of the Madras High Court in *Sreenivasappa vs. State of Madras*. Recently in *Subramaniam Chettiar* v. *Joint Commercial Tax Officer*, a Full Bench of the Madras High Court has reversed the previous decision and has held that sub-section (1) of section 16 of the Act does not include a power to assess escaped turnover to the best of judgment. Consequent on this decision all the assessments made to the best of judgment under section 16 of the said Act have become illegal and the Government will have to refund a large amount of revenue. For 1964–65 and 1965–66 this amounts to about Rs. 328 lakhs. Further, the Commercial Taxes Department will not also have the power to assess to the best of judgment in respect of escaped turnover, which will cause loss of revenue to the Government in future also. It is therefore proposed to amend section 16 of the said Act providing for the best of judgment assessment with retrospective effect from the date of commencement of the said Act, namely, the 1st April 1959. It is also proposed to validate the levy and collection of tax under the best of judgment assessments made under section 16 of the said Act.

Sir, I commend the motion for the acceptance of the House

MR. DEPUTY SPEAKER : Motion moved—

" That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1966, be taken into consideration."

SRIMATHI T. N. ANANDANAYAKI : Mr. Deputy Speaker, Sir, it is proposed to give retrospective effect to this amendment from the date of the commencement of the parent Act. Suppose there are businessmen who have to be assessed to tax on escaped turnover from the date of the effect of this amendment, i.e., from 1st April 1959. It will be a heavy burden on them if they are asked to pay the tax for all the six years in one instalment. The Government should see that they are permitted

†Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th October 1966.

4th November 1966] [Srimathi T. N. Anandanayaki]

to pay the tax in easy instalments. I hope the Government will take necessary steps to safeguard the interests of such assessees.

THE HON. SRI R. VENKATARAMAN : This is an administrative request and this will be duly considered in proper cases.

* **திரு. செ. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவின் நோக்கத்தை நாங்கள் வரவேற்கிறோம். எஸ்கேப்ட் டர்ன்ஓவர் பிடிபட்டால் அவை அசெஸ் செய்யப்படத்தான் வேண்டும். அவற்றுக்கு வரி போட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். அதற்கு ஒரு பீரியட் கொடுத்திருக்கிறார்கள் ஐந்து ஆண்டுகள் என்று. ஐந்து ஆண்டுகளுக்குள் பிடிபடுகிற எஸ்கேப்ட் டர்ன்ஓவர்களுக்கு டாக்ஸ் போடுவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் சமீபத்தில் வந்த உயர்நீதி மன்றத் தீர்ப்பில் 'பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு' என்று இருப்பதைப் பற்றித்தான் குறிப்பிட்டுள்ளார்கள். எஸ்கேபட் டர்ன்ஓவர்களுக்கு வரி போட வேண்டுமா, வேண்டாமா என்பது பிரச்சினை அல்ல. போடத்தான் வேண்டும். ஆனால் இந்த வரி எப்படி போடப்படுகிறது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று சொல்கிறேன். பெரிய வியாபாரியா, சின்ன வியாபாரியா, யாருக்கு எப்படி அனுகூலம் செய்யலாம், யாரை அமுக்க வேண்டும் என்பதாக அதிகாரிகள் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு என்ற அடிப்படையில் செயல்படுகிற போது பல இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் 12-ஆவது பிரிவில் இன்கம்ப்ளீட் அசெஸ்மெண்டாக இருந்தால், பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டில் போடவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் 16-வது பிரிவில் எஸ்க்கேப்ட் டர்ன்ஓவர் என்ற பிரிவில்—கண்டுபிடிக்கப் பட்டவற்றுக்கு டாக்ஸ் போடுவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் கண்டு பிடிக்கப்பட்டதைக் கொண்டு அசெசிங் அதாரிடி கொஞ்சம் கெஸ் செய்து—இப்போது இத்தனை டின்கள் இருந்தால் அல்லது சாக்குகள் இருந்தால், இந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனை விற்பனை செய்து இருப்பார் என்பதாக கெஸ் வொர்க் செய்து பல லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு டர்ன்ஓவர் கொண்டுவந்து விடுகிறார் கள். இதன் பேரில் அப்பீல் செய்து கொள்ள வேண்டுமென்றால், அசிஸ்டென்ட் கமிஷனருக்கு அப்பீல் செய்து கொள்ளவேண்டும். சர்க்கார், போர்டு ஆகிய இரண்டின் கண்டிரோலில் அவர் செயல் படுகிறார். அசெசிங் அதாரிடி அசெஸ் செய்திருப்பதை அவர் ஏதாவது மாற்றிவிட்டால், அவரது உத்தரவு அசெசிங் அதாரிடிக்கு அனுப்பப்பட்டு விளக்கம் கோரப்படுகிறது. அசெசிங் அதாரிடி நான் 'பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு' என்ற அடிப்படையில் போட்டதை தள்ளுவதா என்பதாக சாம் போட்டதற்கான காரணங்களை விளக்கி அனுப்புகிறார். உடனே போர்டு இவருடைய விளக்கத்தை வைத்து அசிஸ்டென்ட் கமிஷனர்களையே எக்ஸ்ப்ளனேஷன் கேட்கிறார்கள். இந்த முறையில் போடப்பட்ட அசெஸ்மெண்டை எப்படி அசிஸ்டென்ட் கமிஷனர்கள் மாற்றத் துணிவார்கள் என்று சிந்திக்க வேண்டும். ஜுடிஷியல் அதாரிடியாக இயங்கக்கூடிய ஒருவரை இந்த நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கு கிறார்கள். இப்போது அந்தப் போஸ்டையே எடுத்துவிடலாம் என்ற

யோசனைகூட இருப்பதாகத் தெரிகிறது. உடனேயே ட்ரிப்யூனலுக்குப் போகலாம் என்று சொல்லக்கூடும். எத்தனைபேர் ட்ரிப்யூனலுக்குப் போக முடியும்? அதுவும் பணத்தைக் கட்டிவிட்டுத் தான் போகவேண்டும். ஆக, நடைமுறையில் ஏற்படக் கூடிய இடையூறுகளைப் பார்க்கிறபோது--எல்லா இடத்திலும் நடப்பதாகச் சொல்லவில்லை—பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் என்ற அடிப்படையில் செய்யப்படுகிற கேஸ் வொர்க்கினால் ஏற்படுகிற இடையூறுகளை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். இதுபற்றி மெட்ராஸ் ஹைக்கோர்ட் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. ஆந்திரா ஹைக்கோர்ட் அதை மாற்றியது. இப்போது புல் பெஞ்சு தீர்ப்பு வந்திருக்கிறது. இவர்களும்கூட எஸ்கேப்டு டர்ன்ஓவர் மீது டாக்ஸ் போடக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் என்று இருப்பதைத்தான் விளக்கமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு என்பது ஏதாவது ஒரு பேசிஸை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"It is, however, conceivable that in the pature of things, the best of judgment may involve a certain amount of guess."

இன்னும் புல் பெஞ்சில் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பேசிக் இல்லாமல் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு என்றே இருக்கக் கூடாது என்பதாக. 1939-ம் ஆண்டு சட்டத்தில் இது கிடையாது. 17-வது விதியில் அமைந்திருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். 1959-ஆம் ஆண்டு சட்டத்தில் கொண்டுவரப்படவில்லை. ஆகவே இப்படிச் செய்வது சட்ட மன்றத்திற்கு விருப்பம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு என்ற அடிப்படையில் போடக்கூடிய வரிக்கு அப்பீல் செய்துகொண்டால் அதுபற்றி அசிஸ்டெண்ட் கமிஷனர் விசாரித்து முடிவு கூற முழு அதிகாரம் பெறவேண்டும், டாக்ஸ் பேசிக் இல்லாமல் போடக்கூடாது. ஆகவே, அட்மினிஸ்ட்ரேடிவ் இன்ஸ்ட்ரெக்ஷன் கொடுக்கிறபோதாவது, இதுபற்றி அரசாங்கம் தக்க கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், கனம் உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் மிகச் சுருக்கமாக "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு" என்ற அடிப்படையில் வரி விதிப்பதானது எத்தகைய பாதகங்களை ஏற்படுத்தும் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். அட்மினிஸ்ட்ரேடிவ் மெஷர் மூலம் சரியாகப் பார்த்துக் கொள்ள முடியும் என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எஸ்கேப்டு டர்ன் ஓவர் மீது டாக்ஸ் போடுவதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் அதைக்கொண்டு அதிகாரிகள் கடந்த நான்கைந்து வருடங்களில் எவ்வளவு வியாபாரம் செய்திருக்கக் கூடும் என்பதாக கணக்கிட்டு—பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்படி டாக்ஸ் போடுவதை நிர்வாக அதிகாரங்களைக் கொண்டு எப்படி சரிசெய்ய முடியும் என்று தெரியவில்லை. ஒரு அதிகாரி பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் என்ற அடிப்படையில்

4th November 1966] [திரு. கே. டி. கோசல்ராம்]

பேசிக் இல்லாமல் போட்டுவிட்டால், இன்றையதினம் கடையை அழித்துவிட்டு ஓடக்கூடிய நிலையில்தான் பலர் இருக்கிறார்கள். ஆகவே பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் என்பதை ஸ்பஷ்டமாக—இந்த அடிப்படையில்தான் வரி போடவேண்டும் என்பதாகத் தெளிவு படுத்தவேண்டும். அட்மினிஸ்ரேடிவ் மெஷரில் சரி செய்து கொள்ளலாம் என்றால், இந்த இந்த வகையில் சரிசெய்யப்படும் என்கிற அஷ்யூரன்சையாவது கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிலே கண்டிருக்கிற ஷரத்து ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு ஷரத்து ஆகும். 1959-ஆம் ஆண்டு விற்பனை வரி மசோதா ஆய்வுக் குழுவிற்குச் சென்றபொழுதும், நமது சட்டசபையில் விவாதத்திற்கு வந்தபொழுதும் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் மூலமாக அசெஸ் செய்யலாமா, கூடாதா என்பதைப் பற்றியெல்லாம் விவாதங்கள் நடந்தன. ஆய்வுக் குழுவில்கூட சட்ட நிபுணர்கள் எல்லாம் இருந்தார்கள், அவர்கள் இதைப்பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்து பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் மூலம் அசெஸ்மெண்ட் இருக்கவேண்டும் என்று கூறியதால் அந்த முடிவுக்குத்தான் எல்லோரும் வந்தோம். காரணம் என்னவென்றால், ஒருவர் சர்க்காருக்குக் கட்டவேண்டிய வரியை மக்களிடமிருந்து வசூல்செய்துவிட்டு, வசூல் செய்த பணத்தைச் சர்க்காருக்குக் கட்டாமல் போய்விட்டால், பின்பு அவ்வாறு அவர் ஒளித்ததைக் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு எந்த அளவுக்குக் கண்டு பிடிக்கப்பட்டதோ, அதற்குத்தான் வரிப் போடவேண்டும், அதை வைத்துக்கொண்டு என்ன ஒளித்திருக்கக்கூடும் என்று பார்த்து அதற்கு வரி போடக்கூடாது என்று சொல்வதானது, சர்க்காருக்குச் சேரவேண்டிய பணத்தைச் சரியான முறையில் வசூலிப்பதாகாது. உண்மையாக அவர்கள் வரியை ஏமாற்றினார்களா, இல்லையா, பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் மூலம் போட்டது நியாயமா, இல்லையா என்பதை எல்லாம் சர்க்கார் பரிசீலிப்பது கிடையாது. அதைப்பற்றி ஏதாவது விவகாரங்கள் இருக்குமானால், கருத்து வேறுபாடுகள் இருக்குமானால் அதற்காகக் கோர்ட்டுகள் அமைத்திருக்கிறோம், அசிஸ்டெண்ட் கமிஷனர் அப்பலெட் அதாரிட்டி, ஹைகோர்ட், இவற்றிற்குக் கொண்டு போகலாம். ஆகையினால் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் இருக்கவேண்டுமா, வேண்டாமா என்ற நிலைமையை இன்றைக்குப் பரிசீலனை செய்யவேண்டிய அவசியமில்லை. கனம் உறுப்பினர் மாதவன் அவர்கள் அதை ஒத்துக் கொண்டார்கள். பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் மூலம் அசெஸ்மெண்ட் வேண்டாமென்று சொல்லவில்லை இன்று நாம் பரிசீலிப்பது பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் மூலம் வரியை எந்த அளவுக்குக் கண்டுபிடித்தோமோ அந்த அளவுக்குத்தான் வரிப் போடவேண்டுமென்பதில்லை, கண்டுபிடிக்கப்படும்பொழுது எத்தனை அளவு ஏமாற்றியிருக்கக்கூடும் என்று பார்த்து, அந்த அளவுக்கு வரிப்போடவேண்டும் என்ற அளவுக்குத்தான் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. திருமதி அனந்தநாயகி அவர்கள் கூறும்பொழுதுகூட பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டை எதிர்க்கவில்லை, எஸ்கேப்ட் அசெஸ்

மெண்ட் கூடாது என்று சொல்லவில்லை, நடைமுறையில் கஷ்டங்கள் ஏற்படும், ஐந்தாறு ஆண்டுகளுக்குச் சேர்த்துக் கட்டவேண்டுமானால் அவர்கள் என்ன செய்வது என்று கேட்டார்கள். அதற்காகத்தான் நான் சொன்னேன், அந்த மாதிரி நிலைமைகள் ஏற்படும்பொழுது, இன்ஸ்டால்மெண்ட் ஆகக் கொடுக்கும்படி அனுமதி கொடுக்கலாம், கலெக்ஷனை டெஃபர் செய்ய உத்திரவிடலாம் என்று. திரு. கோசல்ராம் அவர்கள் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் எப்படி இருக்கவேண்டுமென்றெல்லாம் விதிகள் போட வேண்டுமென்று சொன்னார்கள். அது ஜுடிஷியல் அதாரிட்டி அதற்கு நாம் விதிகள் போட முடியாது. குவாஸி ஜுடிஷியல் அதாரிட்டியாக இருப்பதால் சர்க்கார் விதிகள் எப்படிப் போட முடியும்? முன்பு ரிவிஷன் போன்ற விதிகள் சர்க்காருக்கு உண்டு என்று போட்டிருந்தோம். பிறகு ஆய்வுக் குழுவில் சர்க்காருக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கக்கூடாது என்ற அளவிலே அவர்கள் இதெல்லாம் சர்க்கார் வைத்துக்கொள்ளாமல், கோர்ட் மூலமாகவே தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று வைத்துவிடலாம் என்று சொன்னதால், அந்த அதிகாரங்களையும் கோர்ட்டுகளுக்கே கொடுத்துவிட்டோம், ஆகவே பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டுக்கு சர்க்கார் எந்தவிதமான விதிகளும் போட முடியாது. தவறாக இருந்தால், வக்கீல் உறுப்பினர்களுக்குத் தெரியும், கோர்ட்டிலே தள்ளுபடி செய்து விடுவார்கள் என்று. இன்கம்-டாக்ஸ், செல்ஸ்-டாக்ஸ் வரிகளிலே பொதுவாக என்ன என்ன வரிகள் வாங்கவேண்டுமென்றுதான் போடுவது. தனிப்பட்ட நபர் வரிக்கு உட்பட்டவரா, இல்லையா என்பதையெல்லாம் கோர்ட்தான் தீர்மானம் செய்ய வேண்டும். அந்த அதிகாரத்தைக் கோர்ட்டுக்குத்தான் கொடுத்திருக்கிறோம். இதிலே அஸிஸ்டெண்ட் கமிஷனர் வேண்டாம். ஃபிப்த் வீல் ஆப் தி கோச் எதற்கு என்ற நிலைமையை உண்டாக்கலாமா என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். இந்த ஆலோசனையை நான் விற்பனை வரி ஆலோசனைக் குழுவில் வெளியிட்டேன். அவர்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டேன். இந்த விஷயத்திலே பரிசீலனை செய்து யாராவது யோசனைகள் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அஸிஸ்டெண்ட் கமிஷனர் தேவையில்லை நேராகக் கோர்ட்டுக்கே போய்விடலாம். இப்பொழுது மூன்று கோர்ட்டுகள் வைத்திருக்கிறோம். இன்னும் 3, 4 கோர்ட்டுக்கள் வைத்துவிட்டால் இரண்டு ஜில்லாக்கக்கு ஒரு கோர்ட்டு விதம் ஆகிவிடும். சென்னை, தஞ்சாவூர் போன்றவற்றிற்கு ஒன்று இருக்கும். மதுரை, திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களுக்கு ஒன்று இருக்கும். இதைப்பற்றிய கருத்துக்களை அடுத்த சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரிக் கமிட்டியிலே கேட்பதாக இருக்கிறோம். அந்த ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். இது சம்பந்தமாகத் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4th November 1966]

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1966, be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 3 do stand part of the Bill.'

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move the following amendment :—

In clause 3—

(i) for the first paragraph, substitute the following :—

"Notwithstanding anything contained in any judgment, decree or order of any court or other authority, no assessment, re-assessment, levy or collection of any tax or penalty made or purporting to have been made under the provisions of section 16 of the principal Act before the date of the publication of this Act in the *Fort St. George Gazette* shall be deemed to be invalid or ever to have been invalid on the ground only that such assessment re-assessment, levy or collection was not in accordance with law and such tax or penalty assessed, re-assessed, levied or collected or purporting to have been assessed, re-assessed, levied or collected shall, for all purposes, be deemed to be and always to have been validly assessed, re-assessed, levied or collected, and accordingly . . .";

(ii) in clause (*a*), for the words "in connection with the levy or collection of such tax", substitute the words "in connection with the assessment, re-assessment, levy or collection of such tax or penalty";

(iii) in clauses (*b*) and (*c*), for the words "tax so paid", substitute the words "tax or penalty so paid."

Sir, this is only a re-draft of the existing clause, making it clear that in respect of re-assessments also, the best of judgment can be done.

The Government amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

[4th November 1966

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

'That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1966, as amended, be passed.'

The motion was put and carried and the Bill, as amended, was passed.

MR. DEPUTY SPEAKER : I think the desire of the House is that we should adjourn now. (after a pause) So, the House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

12–30 P The House then adjourned.

VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 238. *Notification issued with G.O. Ms. No.* 1987, *Rural Development and Local Administration, dated the* 12*th August* 1966, *regarding the intention to constitute the local area now within the jurisdiction of the Nellikuppam Town Panchayat in South Arcot district as Nellikuppam Municipality. [Laid on the Table of the House under section* 301 *(d) of the Madras Municipalities Act,* 1920 *(Madras Act V of* 1920).]

* 239. *Notification issued with G.O. Ms. No.* 1986, *Rural Development and Local Administration, dated the* 12*th August* 1966, *regarding the intention to constitute the local area now within the jurisdiction of the Kadayanallur Town Panchayat in Tirunelveli district as Kadayanallur Municipality. [Laid on the Table of the House under section* 304 *(d) of the Madras District Municipalities Act,* 1920 *(Madras Act V of* 1920).]

* 240. *Notification issued with G.O. Ms. No.* 3017, *Home, dated the* 7*th September* 1966, *making certain amendments to the Madras Denatured Spirits, Methyl Alcohol and Varnish (French Polish) Rules,* 1959, *published with Home Department Notification S.R.O. No. A*-1580 *of* 1959, *dated the* 4*th March* 1959, *at pages* 116–161 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the* 18*th March* 1959, *as subsequently amended. [Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 *(Madras Act X of* 1937).]

B. Reports, notifications and other papers

† 49. *Annexure to the Indian Registration (Madras Amendment) Bill,* 1966.

† 50. *The Madras Requisitioning and Acquisition of Immovable Property (Amendment) Bill,* 1966, *with annexure.*

51. *Report of the Committee on Public Accounts on the Audit Report on the Accounts of the Madras State Housing Board, for the year* 1962–63.

* Laid on the Table of the House on 3rd November 1966.

† Despatched to Members on 2nd November 1966.

APPENDIX.

[*Vide* Answer to Starred Question No. 398 on page 219]

1.—(*a*) Yes.

(*b*) The details of the "Village Jeep Journal" are as follows:—

The "Village Jeep Journal" was a project of the Intensive Agricultural District Programme in Thanjavur district under the general supervision of the Joint Director of Agriculture (Package Programme) and the Project Officer, Thanjavur. It was purely meant to convey farm news on improved cultivation practices to farmers. The purpose of this project was to test the appeal and effect of agricultural information conveyed to the cultivators primarily by Audio-visual method.

2. This was taken up as a pilot exploratory project in Saliamangalam, a village nine miles east of Thanjavur. This programme was organised in consultation with Dr. Lyle R. Webster, Consultant on Agricultural Information and Communication. Mr. Marshall Bouton, a volunteer of American Friends Service Committee master-minded the programme and was actively associated with the project.

3. The following villages around Saliamangalam in the jurisdiction of the Agricultural Extension Officer, Saliamangalam, were selected:—

(1) Saliamangalam.

(2) Thirubuvanam.

(3) Poondi.

(4) Jambugapuram.

(5) Eduvagudi.

(6) Kalanjeri.

The "Village Jeep Journal" Project commenced operation from 1st March 1966 and was continued up to 26th April 1966, for a period of eight weeks.

பதில்.—(அ) ஆம்.

(இ) "கிராம ஜீப் செய்தித்தாள்" திட்டத்தின் விவரங்கள் பின் வருமாறு:—

"கிராம ஜீப் செய்தித்தாள்" திட்டம், தஞ்சாவூர் மாவட்ட மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின்கீழ் மேற்கொண்டுள்ள ஒரு வேலைத் திட்டமாகும். இது தஞ்சாவூர் வேளாண்மை இணை நெறியாளர் (முனைப்புத் திட்டம்), திட்ட அதிகாரி ஆகியவர்களின் பொது மேற்பார்வைக்குட்பட்டதாகும். சீர்திருத்திய விளைச்சல் முறைகளைக் குறித்த பண்ணைச் செய்திகளைக் குடியானவர்களுக்குத் தெரிவிப்பதே இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். முக்கியமாகக் காட்சி–கேள்வி முறை மூலம் வேளாண்மைத் தகவல்கள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றை அவர்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர், அவை அவர்களிடம் என்ன விளைவு ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிந்துக்கொள்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

2. இத் திட்டம், தஞ்சாவூருக்குக் கிழக்கே ஒன்பது மைல் தொலைவில் உள்ள சாலியமங்கலம் கிராமத்தில் ஒரு முன்னோடி ஆய்வுத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மைத் தகவல் செய்தித் தொடர்பு ஆலோசகரான டாக்டர் லைல் ஆர். வெப்ஸ்டர் அவர்களைக் கலந்தே இத்திட்டம்

[4th November 1966

உருவாக்கப்பட்டது. அமெரிக்க நண்பர் ஊழியக்குழுவின் உறுப்பினரான ஸ்ரீ மார்ஷல் பவுட்டன் அவர்கள் இத்திட்டத்தை உருவாக்குவதில் பெரும் பணிபுரிந்து இத் திட்டத்தில் பெரிதும் பங்கு கொண்டார்.

3. சாலியமங்கலம் வேளாண்மை விரிவாக்க அதிகாரியின் அதிகார வரம்பிலுள்ள சாலியமங்கலத்தைச் சுற்றியுள்ள கீழ்க்கண்ட கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன :—

(1) சாலியமங்கலம்.

(2) திருபுவனம்.

(3) பூண்டி.

(4) ஜம்புகபுரம்.

(5) எடுவாக்குடி.

(6) களஞ்சேரி.

இத் திட்டம் 1966-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் தேதியன்று செயல்படத் தொடங்கி 1966-ம் வருடம் எப்ரல் மாதம் 26-ம் தேதிவரை, அதாவது எட்டு வாரங்களுக்குச் செயல்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

I 7 MAR 1967
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 5th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

School building

* 421 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any accident of building collapse took place recently in an Elementary School in Kallommen Koil Street, Mackey's Garden, Madras, resulting in the collapse of the roof; and

(*b*) if so, the details thereof and the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A statement[a] is laid on the table of the House.

திரு. வை. சங்கரன் : *இந்த அறிக்கையின்படி பார்த்தால் பெற்றோர்களின் வற்புறுத்துதலுக்கு இணங்க இப்போதுள்ள கூரைக் கொட்டகைக்கு மாற்றப்பட்டது. மழை பெய்ததினால் இடிந்து விழுந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பெற்றோர்கள் வற்புறுத்தியது என்ன? காரணத்தினால் வற்புறுத்தினார்கள் என்று சொல்லமுடியுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *அது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது. கேஸ் பதிவு செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குமேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.*

மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள்

*** 422 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களில் எத்தனை பில்டிங் மேட்சிங் கிராண்ட் கேட்டிருக்கின்றன ?

(இ) அவைகளில் எவ்வளவு பள்ளிகளுக்கு மேற்படி கிராண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது.?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *(அ) 70.*

(இ) 56.

a Printed as Appendix I on page 402–403.

[5th November 1966

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பாக்கியுள்ள பள்ளிகளுக்கு எப்போது அந்த கிராண்ட் அளிக்கப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன்கள் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாக இருந்தால், பஞ்சாயத்து யூனியனின் நிதி நிலைமை அனுமதிக்குமா என்று பார்க்கவேண்டும். அதைப் பார்த்து மேலும் இரண்டாயிரத்தி ஐந்நூறு ரூபாய் பஞ்சாயத்து மூலமாகவோ அல்லது பொது மக்கள் மூலமாகவோ பெற முடியுமா என்று பார்க்கவேண்டும். அதையெல்லாம் பார்த்துத் தான் அதற்கு மேல் 12,500 ரூபாய் அதற்கு ஈடாக அரசாங்கம் கொடுத்து வருகிறது.

* 423 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether orders have been issued for the taking over by the Government of the High Schools that were classified as Board High Schools ; and

(*b*) whether the staff working in those schools have been absorbed as Government employees?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) No. The matter is under examination.

Basic trained teachers

* 424 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any proposal to conduct Public Examinations during the months of September for failed Basic Trained Teachers also just as it is conducted for non-basic teachers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரீட்சையில் தேறாதவர்கள் தற்போது அந்த பயிற்சி பள்ளியில் சேர்ந்து படிக்க வசதி இருக்கிறதா ? இல்லையென்றால் வசதி செய்து கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்போது, பரீட்சையில் தேறாத ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஸ்தானத்திலே வேலை செய்வதற்கு ஏதேனும் தடை இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றியும் தனிக்கேள்வி வேண்டும்.

5th November 1966]

Colleges

* 425 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the new Training Colleges for men and women, respectively that the Government have proposed to open this year in the State with their proposed locations and strength?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No Training College is proposed to be opened by Government during 1966-67.

திரு. வை. சங்கரன் : மகளிர் பயிற்சிக் கல்லூரி அவசியம் என்பதைக் கருதி, அதை அதிகமாகத் திறப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகும் இதெல்லாம் கவனிக்கப்படும்.

திரு. சா. கணேசன் : இப்போது கல்வி அளவு பெருக்கப்பட்டு மாணுக்கர்கள் தொகை மிகுதிப்பட்டுக்கொண்டு வருகின்றதாலும், இன்னும் அதிகமாக மாணுக்கர்கள் தொகை பெருகக்கூடும் என்ற நிலவரம் இருப்பதாலும் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்மார்கள் கிடைப்பதற்குத் தக்க முறையிலே ஆலோசித்து புதிய பயிற்சிக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கோ அல்லது இருக்கின்ற கல்லூரிகளை விரிவு படுத்துவதற்கோ அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா? அப்படியானல், அதனுடைய விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிப்பட்ட மகளிர் பயிற்சிக் கல்லூரி இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலே வேறு ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்படயிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : உயர் நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாவதால் ஆசிரியர்கள் பற்றுக்குறையிருக்கிறது. சில இடங்களில் பி.ஏ., பி.எஸ்ஸி., யில் ஒரு பகுதி தேருதவர்கள் கூட ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அந்தக் குறைப்பாட்டை நீக்குவதற்கு மேலும் ஆசிரியர்கள் பயிற்சி பள்ளிகளைத் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல ஆசிரியர் பயிற்சி பள்ளி அமைக்க தனி ஸ்தாபனம் முன்வந்துள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : நம்முடைய மாநிலத்தில் ஹைஸ்கூல் கட்டத்திலும், கல்லூரி கட்டத்திலும் கோ-எஜுகேஷனுக்கு ஆதரவு கொடுக்கப்படவில்லை. ஆகையால் தனியாக மகளிர் கல்லூரிகளைப் போதுமான அளவிற்கு அதிகமாக்க முயற்சி எடுத்துக்கொள்ள முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டிலே தனிப்பட்ட ஸ்தாபனம் ஒன்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று **சொன்னேன்.**

[5th November 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அந்தப் பயிற்சிக் கல்லூரிகள் அமைப்பது எந்தெந்த இடத்திலே என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும். இப்பொழுது எந்த விதமான முடிவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

* 426 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to implement the U.G.C. scale of pay for the College and University teachers in the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Government of India have announced revised scales of pay for the University and College teachers for the Fourth Five-Year Plan period. The question of implementing the scales of pay is under examination.

திரு. வை. சங்கரன் : இப்போதுள்ள விகிதாசாரத்திற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ள விகிதாசாரத்திற்கும் உள்ள தாரதம்மியம், வேறுபாடு என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

* 427 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that there is no Women's College in Madras City with provision for studying 'Commerce' in the pre-university course for the successful girl students with Secretarial Course in the S.S.L.C. Class?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes.

திரு. வை. சங்கரன் : இன்றைக்குப் பெண்கள், ஹைஸ்கூலில் செகரடேரியல் கோர்ஸ் எடுத்துப் படித்தவர்கள் கல்லூரியில் வாணிபப் பிரிவில் சேர வேண்டுமென்றால் அதற்கு இடம் இல்லாத நிலையில் கஷ்டப்படுவதால் பெண்கள் கல்லூரியில் அந்தப் பிரிவைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிப்பட்ட கல்லூரிகளும் இருக்கின்றன ; அரசாங்கத்தின் கல்லூரிகளும் இருக்கின்றன. இது வரை இந்த மாதிரி மாணவிகள் கோருகிறார்கள் என்ற தகவல் வரவில்லை. தகவல் வந்தால் கவனிக்கலாம். தனிப்பட்ட கல்லூரிகளும் அனுமதி கோரலாம்.

திரு. சா. கணேசன் : தனிப்பட்ட கல்லூரிகள் இந்தப் பிரிவைத் துவக்க அனுமதி கோரலாம் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் நடத்துகிற பள்ளிகளில் இந்தப் பிரிவை வைத்து விட்டால் விண்ணப்பிக்கிறவர்களுக்குச் சுலபமாக

5th November 1966]

இருக்கும். பிறர் செய்யாததை அரசாங்கம் செய்வது வேண்டத் தக்கது. ஆகவே, சர்க்கார் பெண்கள் கல்லூரிகளில் இந்த வாணிகத் துறை (காமர்ஸ்) பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேவை இருந்தால்தான் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். தேவை இருக்கிறது என்று தெரியவில்லை. போதிய மாணவிகள் முன் வருகிறார்கள் என்று தெரிந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வை. சங்கரன் : இப்போது பல பெண்கள் பள்ளிகளில் செகரடேரியல் கோர்ஸ் இருக்கிறது. அந்த கோர்ஸ் எடுத்துப் படித்த பெண்கள் கல்லூரிகளில் காமர்ஸ் பிரிவு தவிர மற்றவற்றை எடுப்பது சிரமமாக இருக்கும். அவர்கள் நேரடியாக விண்ணப்பம் கொடுக்காவிட்டாலும், பள்ளிகளில் செகரடேரியல் கோர்ஸ் இருக்கும் காரணத்தால் கல்லூரிகளில் அவசியம் அந்தப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தப் பாடத்திட்டத்தை வைப்பதாக இருந்தாலும் போதிய மாணவர்களோ அல்லது மாணவிகளோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெரிந்தாலன்றி அதற்குத் தக்க ஏற்பாடு செய்வது சரியல்ல என்று அரசாங்கம் கருதுகிறது.

கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை

*428 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கல்லூரிகளில் P.U.C., B.Sc., B.Com., etc., அட்மிஷனில் ஹரிஜன மாணவர்கள் குறிப்பிட்ட சதவிகிதம் சேர்க்கப்பட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை சதவிகிதம் ?

(உ) அவ்வுத்தரவு அமுல் நடத்துவதற்கு என்ன கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) 16 per cent.

(*c*) The managements of the aided Colleges and the Principals of Government Colleges have been instructed by the Director of Higher Education to furnish particulars of the number of Scheduled Castes and Scheduled Tribes candidates who applied for admission and the number of candidates selected thereon.

[5th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த விகிதாசாரப்படி ஹரிஜன மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளாத கல்லூரிகளின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹரிஜன மாணவர்களை இந்த விகிதாசாரப்படி சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்ற புகார் எந்தக் கல்லூரியைப் பற்றியும் வரவில்லை. அவ்வாறு மறுக்கிறார்கள் என்று தெரிந்தால் அதற்குப் பிறகு என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது என்பதைப்பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இதுவரையிலும் குறிக்கப்பட்ட விகிதாசாரம் பூர்த்தியடைந்திருக்கிறதா? அந்த விவரங்களைக் கோர அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் அந்தத் தகவல்களைக் கோரி கவனித்துக்கொண்டுதான் வருகிறது என்று முன்பே கூறினேன்.

திரு. வை. சங்கரன் : சாதாரணமாக கல்லூரிகளில் ஹரிஜன மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அவர்கள் யாரிடம், எந்த அரசாங்க அதிகாரியிடம் விண்ணப்பித்து நிவாரணம் பெற இடம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் என்னதான் விதிகள் விதித்தாலும், போதிய பக்குவம் அடையாத இத்தகைய தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இதையெல்லாம் தெரிந்து கொண்டு அவர்களாகவே தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வது சிரமமாக இருக்கும். கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டு எங்காவது அம்மாதிரி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கிறார்கள் என்று தெரிந்து உடனடியாக அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். பொதுவாக, அந்த மாணவர்களுக்கு ஸ்தானங்கள் கேட்டு மறுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

திரு. வை. சங்கரன் : இந்த மாதிரி சூழ்நிலைகள் நகரத்தில் ஏற்படுகின்றன. அதற்காக அரசாங்கம் வரை அணுகி உத்தரவு பெறுவது என்றால் காலதாமதமாகும். அந்தந்த வட்டாரங்களிலே மாவட்ட அதிகாரி யாரிடமாவது விண்ணப்பித்து நிவாரணம் பெற வழி வகுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிகாரிகளைப் பொருத்த மட்டில் கவனம் செலுத்தி வருகிறார்கள். கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் தொடர்ந்து இதிலே கவனம் செலுத்தி, அந்த நிலைமை ஏற்பட்டால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

5th November 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஹரிஜன மாணவர்கள் எங்காவது சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற புகார் எழுதி அனுப்பினுல் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினுர்கள். ஒவ்வொரு கல்லூரியிலும் 300 மார்க்குக்கு மேல் வாங்கியவர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று போர்டே வைத்திருக்கிறுர்கள். அரசாங்கக் கல்லூரிகளிலும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதனுல் ஹரிஜன மாணவர்கள் விண்ணப்பிக்காமலே இருந்து விடக் கூடிய நிலைமை இருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்களுடைய பதிலை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க இவ்வளவு மார்க் எடுத்திருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருந்தால் அது தவறு என்று சொல்ல முடியுமா என்பதை ஆராய வேண்டும். இருக்கிற மாணவர்களிலே மார்க்கைப் பார்த்து சேர்த்துக் கொள்வது என்ற நிலையிலே தலையிட முடியாது என்பது இதுவரை அரசாங்கம் கொண்டிருக்கிற கருத்து. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அந்த அளவு மார்க் இல்லை என்ற காரணத்தால் சேர்த்துக் கொள்ள மறுக்கப்பட்டதாகத் தகவல் வந்தால் மேலும் கவனம் செலுத்தலாம்.

புலவர் கா. கோவிந்தன்: ஹரிஜன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை எவ்வளவோ அந்த அளவுக்கு விண்ணப்பங்கள் வருகின்றனவா ? அல்லது அதற்குக் குறைவாக விண்ணப்பங்கள் வரக்கூடிய நிலைமைதான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனிக் கேள்வி வேண்டும். எவ்வளவு ஸ்தானங்கள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு மாணவர்கள் வந்து கொண்டுதான் இருக்கிறுர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சதவிகிதம் அளவுக்கு சேராத இடங்களில் அதை ஜெனரல் பூலில் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அதிலே 25 சதவிகிதத்தை பாக்வேர்டு கிளாஸ் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பிற்பட்ட சமூகத்தாருக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒதுக்கப்பட்ட அளவுக்கு அவர்களும் சேர்ந்து கொண்டுதான் இருக்கிறுர்கள்.

* 429 **கேள்வி.—திரு. செ. மாதவன்**: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அரசு நடத்தும் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு மாணவர்களை சேர்க்கும் குழுக்கள் (Committees) நியமிக்கப்பட்டனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Selection Committees for Government Training Schools and for nine Government Arts Colleges in this State have been constituted during 1966–67

[5th November 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : மாணவர்களைச் சேர்ப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற குழுக்களுக்கு அங்கத்தினர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? அரசியல் காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா அல்லது திறமையான மாணவர்களைப் பொறுக்க வேண்டுமென்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசியலில் சம்பந்தப்படாதவர்கள் கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு யார் தகுதி என்று அரசாங்கம் கருதுகிறதோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. செ. மாதவன் : இந்தக் குழுக்களில் உத்தியோகப் பற்றற்றவர்களை நியமிக்கும்போது அந்தந்தப் பகுதியில் இருப்பவர்களை நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நியமிக்கும்போது எதிர்க்கட்சியினர் இருக்கும் பகுதிகளில் வேறு பகுதியிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய நிலை இருப்பது ஏன் என்று கூறுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் பகுதி, இந்தப் பகுதி என்று இல்லை. கூடியவரையில் அந்தந்த மாவட்டங்களில் உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : இவ்வாறு உத்தியோகப் பற்றற்றவர்கள் என்று நியமிக்கப்படுகிறவர்கள் அத்தனைபேரும் காங்கிரஸ்காரர்களாக இருக்கிறார்கள். உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் உத்தியோகப் பற்றற்றவர்களை அமர்த்துவார்கள் என்றுதான் எதிர்க்கட்சியினர் கருதினார்கள். ஆகவே, அந்த மாதிரி ஓய்வு பெற்ற அதிகாரிகளை இந்தக் குழுக்களில் இடம் பெற வழி செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்வது சரியல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம் : காங்கிரஸ்காரர்களா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. காங்கிரஸ்காரர்கள் தயவை நம்பி இருப்பவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தயாராக இருந்தால் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். உத்தியோகப் பற்றற்றவர்களுக்குப் பதிலாக உத்தியோகத்திலுள்ள அதிகாரிகளைக் கொண்டே மாணவர்களைச் சேர்ப்பதாக இருந்தால் திறமையாக நடக்கும் என்ற நிலையில் அதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு உத்தியோகஸ்தர்கள் தான் இதைக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, உத்தியோகப் பற்றற்றவர்கள் இருப்பது நலம் என்று வற்புறுத்தப் பட்டது. அதற்குப் பிறகுதான் உத்தியோகப் பற்றற்றவர்கள் இதிலே சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

5th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் அந்தந்த நகரங்களில் அந்தந்த நகரங்களைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் சிலபல இடங்களில் எம்.எல்.ஏ.-க்கள் சேர்க்கப்படவில்லை. காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் இருக்கின்ற இடங்களில் போட்டிருக்கிறார்கள். மாற்றுக் கட்சியினர் இருக்கக்கூடிய இடங்களில் போடப்படவில்லை. இந்த அடிப்படையில் அமைந்திருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எல்லாம் எம்.எல்.ஏ.-க்கள் அல்ல. காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் என்று சொல்வதும் சரியல்ல. மற்றவர்களும் இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எம்.எல்.ஏ.-க்கள் அல்லாதவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

Central College of Karnataka Music

*430 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the students who had taken Nagaswaram and Thavil courses at the Central College of Karnataka Music during the years 1961 to 1964 have performed poorly in their written tests ; and

(*b*) if so, whether the schemes for examinations will be modified suitably?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Yes.

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே இது சம்பந்தமாக பரீட்சைகளுக்கு இருந்த ஸ்கீம் என்ன? இப்போது எந்த முறையில் மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கனவே கொஞ்சம் அதிகம் படித்திருக்கவேண்டும் என்று இருந்தது. அதிகமாகப் படித்திருக்கிறவர்களில் இதில் வரக்கூடியவர்கள் குறைவாக இருந்தது. ஆகவே இந்த விதி தளர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த கர்நாடக இசைத் துறையில் நாதஸ்வரம், தவில் போன்றவை நாம் போற்றி வளர்க்கவேண்டிய கலைகள். அவற்றில் படிக்கிற மாணவர்களுக்கு திறமைக்குறைவு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசு ஆராய்ந்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேருகிற மாணவர்களுக்கு கொஞ்சம் "பாக்கிரௌண்ட்" இருக்க வேண்டும். சென்னையில் அதிகம் இல்லை. பழனியில் நடக்கிறது. நன்றாக நடக்கிறது. ஆகவே, திருவையாற்றில் அரசாங்கம் நடத்துகிற கல்லூரியில்கூட இந்தப் பாடங்கள் இப்போது போதிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : 1961 முதல் 1964 வரையில் எவ்வளவு மாணவர்கள் ரிட்டன் டெஸ்ட் எழுதினார்கள்? அவர்களில் எவ்வளவு பேர்கள் பாஸ் செய்தார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. ஆ. தங்கவேலு : கர்நாடக இசைக் கல்லூரியில் எந்தெந்த இனத்தைச் சார்ந்த மாணவர்கள் எடுக்கப்படுகிறார்கள் ? மருத்துவ குல மாணவர்களுக்கு தனிச்சலுகை அளிக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் இனம் பார்ப்பதில்லை. இந்தத் தொழில் நடத்துவதற்கு தயாராகயிருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சேர்க்கப்படலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த கர்நாடக சங்கீதத்தில் நாதஸ்வரம், தவில் இவைதான் போடப்பட்டிருக்கிறது. 'னொய், னொய்' என்று சப்தம் கேட்கிற ஒத்தும், 'சை, சை' என்று சப்தம் ஏற்படுத்தும் வேறொன்று பற்றியும் இதில், குறிப்பிடக் காணோம். அதற்குத் தனியாக வேறு ஏதாவது பயிற்சி இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கெல்லாம் அதிக பயிற்சி வேண்டியதில்லை. சுலபமாக வீட்டில் கற்றுக்கொள்ளலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தக் கலைத்துறையில் மிகவும் பெயர்போன மாவட்டம் தஞ்சை மாவட்டமாகும். அங்கு திருவையாறில் அமைக்கப்பட இருக்கிற கல்லூரியில் இந்தத் தொழில்களை கற்றுக் கொடுப்பதற்குப் பதில் தஞ்சையில் உள்ள குடந்தை அல்லது திருவாரூர் போன்ற இடங்களில் தனியாகவே இதற்கு ஒரு பள்ளிக்கூடம் நடத்தலாமே ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாக நடத்துவது பழனியில் நடத்தப்படுகிறது. சமீபத்தில் ஒரு சங்கீதக் கல்லூரி திருவையாறில் அமைக்கப்பட்டு அதில் இது ஒரு பாகமாக இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : இந்தக் கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு எல்லாம் ஸ்காலர்ஷிப் வழங்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழங்கப்படுகிறது.

சேலம் உருக்காலைத் திட்டம்

* 431 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :**
திரு. மீ. கலியாணசுந்தரம் :
திரு. கோ. சி. மணி :
திரு. கரு. சீமைச்சாமி :

கனம்

கைத்தொழில் அமைச்சர் நவம்பர் 3-ம் தேதி 1965-ல் கேள்வி எண் 245-க்கு அளித்த பதிலையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலத்தில் உருக்காலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜப்பானிய ஆலோசனை நிறுவனத்தின் சர்வே குழு நெய்வேலி-சேலம் உருக்கு ஆலைத் திட்டம் பொருளாதாரக் கவர்ச்சியுள்ளதாகவும், தொழில் நுட்பத்

5th November 1966]

துறையில் பயன்தரத்தக்கதாகவும் உள்ளது என்று தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையை 1966 மார்ச் மாதம் இந்திய அரசு பெற்றுள்ளது. நெய்வேலி-சேலம் உருக்கு ஆலை நிறுவுவது குறித்து இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தப் பதில் கனம் தொழில் அமைச்சர் பல தினங்களுக்கு முன் தயாரித்ததோ என்னவோ. இப்போது இருக்கக் கூடிய நிலை என்ன? பார்லிமெண்டில் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய அறிக்கையைப் பார்க்கும்போது ஆந்திரா தன் ராஜ்யத்திற்கு வேண்டுமென்று கேட்டதன் பலனாக யாருக்குமே இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் எல்லாத் திட்டமுமே கைவிடப்படும், நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படாதோ என்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இல்லை என்று சொன்னதாக எடுத்துக் கொள்வது தவறு. ஒன்றை வேண்டும்போது இல்லை என்று சொல்வது நல்லதல்ல. இல்லை என்று சொன்னாலும் ஒப்புக் கொள்ளக்கூடாது. இல்லை என்று சொல்லவில்லை நான் பத்திரிகையைப் பார்த்த மட்டில். பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு ஒரு முடிவு கட்டுவது, அதையொட்டி பார்க்கிறது என்றால் அது நமக்கு நல்லதாக இருக்காது. நான் சொல்கிறேன், இல்லை என்று சொல்வது இல்லை. வருகிறது, ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. பணத்தைப் பார்த்து செய்கிறோம் என்று சொல்கிறார்கள். பலர் கேட்கிறார்கள். வருவாயைப் பார்த்து செய்கிறேன் என்று சொல்வதில் தவறு இல்லை. அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இல்லை என்பது இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: முதல் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பாராட்டுகிறேன். வாழ்க்கையில் எப்போதும் நம்பிக்கை அவசியம். பதினைந்து ஆண்டுகளாக இதே நம்பிக்கையில் இருந்து கொண்டு இந்த சபையில் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் மந்திரி சபையின் ஒரு உப கமிட்டி சிபார்சு செய்ததாக வெளியிட்ட தகவல் மறுக்கப்படவில்லை. சேலம், ஹாஸ்பட்டில் தேன் இரும்பு உருக்காலை நிறுவலாம் என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் பொதுவாக நிலைமை அனுமதிக்குமானால் என்று கூறப்பட்டிருக்கிறது. அது இதுவரை மறுக்கப்படவில்லை. ஆகவே, இச்சபையில் என்ன விவரங்கள் என்று கேட்க உரிமை உண்டு. அதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் நேராகத் தெரிந்து கொண்டது இது ஏற்றுக்கொள்ளப்படும் என்பது. அதைப் பரிசீலனை செய்வதற்கு காபினட் சப் கமிட்டி போட்டதாகவும் அவர்கள் இந்த மூன்று இடங்களில் சிறிதாக உருக்காலை அமைப்பது என்று சிபாரிசு செய்திருப்பதாகவும் செய்தி வந்தது. பிறகு பெரிய உருக்காலை வைசாக்கில் ஏற்படுத்துவது பற்றி வந்தது. அதையும் பரிசீலனை செய்தார்கள். எப்போது நிதி நிலைமை அனுமதிக்கிறதோ அப்போது எடுத்துக் கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான். இதுவரை எதிர்பார்த்ததில், நம்பிக்கை கொண்டதில் ஒன்றும் பாதகம் இல்லை.

[5th November 1966

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நாம் கேட்ட அளவிற்கு அல்லது நாம் விரும்புகிற அளவிற்கு, அல்லது வற்புறுத்தப்பட்ட அளவிற்கு அமையாது என்ற நிலைமையில் மூன்று இடங்களில் சிறிய அளவில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைக்கப்படும், அதற்காக ஆலோசனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்ற முறையில் செய்தித் தாள்களில் வருகிற செய்திகள் கூறுகின்றன. அதிலும்கூட நிதி வசதி ஏற்படும்போது ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. நான்காவது திட்டத்தில் அவை எடுத்துக் கொள்ளப்படுகிற சூழ்நிலை இருக்கிறதா? உடனடியாக அமைகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதா ? அந்த உறுதி ஏதாவது கிடைத்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான்காவது திட்டத்தில் சேலம் உருக்காலையைப் பொறுத்தமட்டில் சிறிய திட்டம்தான் நாம் கோரியது. சிறிய திட்டமாக ஆரம்பித்து பின்னால் பெரியதாக்கலாம் என்பது. அது நான்காவது திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதுதான் என் நம்பிக்கை.

திரு. சா. கணேசன் : பத்திரிகைகளில் வருகிற செய்தியை அடிப்படையாக நம்பக் கூடாது என்பதை ஓரளவுக்கு ஒப்புக் கொள்கிறேன். ஆனால் வந்து கொண்டிருக்கிற செய்தி முதலில் சர்க்கார் மூலமாகவும் பின்னர் வேறு வழிகளிலும் வந்த செய்தி உருக்காலைகள் மூன்று மாநிலங்களிலும் சிறிய அளவில் வைக்கப் படும், பொருளாதார ரீதியை அடிப்படையாகக் கொண்டு என்று வந்தது. அதற்குப் பிறகு, ஆந்திர தேசத்தில் நடைபெற்ற சில வன்முறைச் செயல்களால் வைசாக்கில் ஸ்டீல் ப்ளான்டும் 'பிக் ஐயர்ன்' என்று சொல்லும் மட்டாகமான இரும்புத் தொழிற்சாலைகள் மற்ற இரண்டு இடங்களிலும் வைக்கப்படும் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. அதன் பிறகு இப்போது வேறு மாதிரியான செய்திகள் வருகின்றன. ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றன. ஆனால் ஒன்று அரசு செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன் அல்லது கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு வன்முறைச் செயல்களுக்குப் பணியக் கூடிய நிலைமை இருக்குமானாலும் அதற்காக, நாம் வன்முறைச் செயல்களைக் கையாள வேண்டும் என்று வற்புறுத்த இல்லை, அதை நான் விரும்பவில்லை, வேண்டவில்லை. அதே நேரத்தில் நம் உரிமையை, நம் தேவையை வற்புறுத்த நியாயமான, சட்டபூர்வமான, கடுமையான நடவடிக்கைகள் முழுவதையும் எடுத்துக்கொள்ள அரசாங்கம் துணை புரிய எந்த அளவு செயல்பட வேண்டுமோ அந்த அளவு மக்கள் தங்களது உணர்ச்சியை, விருப்பத்தை காட்டுவதற்குரிய வழிகளை எல்லாம் அனுமதிக்க வேண்டும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் புதிதாக மக்கள் விருப்பத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அல்லது மக்களுடைய வற்புறுத்தலைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இங்கு அரசாங்கம் இந்த உருக்காலை இந்த அரசாங்கம் கோருகிறபடி வரத்தான் வேண்டும் என்பதை உணர்ந்து இருக்கிறது. கொஞ்சம் நாளாயிற்று என்று சொன்னால்,

5th November 1966]

பல பரிசீலனைகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. நம் மாநிலத்தில் நாம் எடுத்துக்கொண்ட திட்டங்கள்கூட எவ்வளவு வருமாய் இருக்கும், எப்போது எடுத்துக்கொள்வது இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதா அல்லது அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதா என்றெல்லாம் பிரச்னைகள் வருகின்றன. அதுமாதிரி, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் முடிவாக, இறுதியாக உருவாக்கப்படவில்லை நான்காவது திட்டம். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, 15, 16, 17 தேதிகளில் அங்கு திட்டக்குழுவுடன் திட்டம் எவ்வாறு உருவாக்கப்படும் என்பதை விவாதிக்க இருக்கிறது. நானும் 17-ம் தேதி இந்த விவாதத்தில் கலந்து கொள்வேன். சேலம் உருக்காலையைப் பொறுத்தமட்டில் தொடர்ந்து இந்த அரசாங்கம் கவனம் செலுத்தும். இந்தத் திட்டம் ஒப்புக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறதென்று சொன்னேன். அதோடு கூட தொடர்ந்து இந்த அரசாங்கம் என்னென்ன வகையில் கவனம் செலுத்தவேண்டுமோ, வற்புறுத்த வேண்டுமோ, நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக் கொள்ளும் என்று சொல்கிறேன்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் செய்யவில்லை என்றாலும் மாநில சர்க்கார் இதை எடுத்துச் செய்யும் என்று நமது தொழில் அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு முறை பதில் சொன்னார்கள். அப்படியானால் இதுவரை இதைப்பற்றி தொழில் அமைச்சர் ஒன்றும் சொல்லாததற்கு என்ன காரணம்? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் ரெகுலேஷன் ஆக்டின்படி சென்னை சர்க்கார் எம்.ஐ.டி.ஸி. மூலமாக தனியாக நடத்துவதற்கு அப்ளிகேஷன் ஃபைல் செய்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், ஜப்பானிய நிபுணர்களுடைய அறிக்கை நமக்கு சாதகமாக இருக்கிறது என்றும், பொருளாதாரத் துறையில் கவர்ச்சிகாமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று தொழில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, அந்த ரிப்போர்ட்டின்மீது மத்திய சர்க்கார் இதை உடனடியாக ஆரம்பிப்பதற்காக உத்தரவிட வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தெரிவித்திருக்கிறதா? அப்படியென்றால் என்ன பதில் தந்திருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதை அங்கீகரிக்க வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறது. அதை மத்திய சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். முக்கியமாக நிதி உதவி செய்வதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்களே தவிர தொழில் நுட்பத்தைப் பற்றியோ, பொருளாதாரத் துறையில் கட்டுபடியாகுமா ஆகாதா என்பதைப் பற்றியோ பரிசீலனை செய்யவில்லை.

[5th November 1966

திரு. செ. மாதவன் : உருக்காலை ஏற்படுத்துவதற்கு, ஒன்று மத்திய சர்க்கார் அனுமதி வழங்க வேண்டும், இன்னொன்று பண உதவி செய்ய வேண்டும். பண உதவியைப் பொறுத்தவரையில் நாங்களே செய்து கொள்கின்றோம் என்று சொல்லுவதால், அனுமதி வழங்குவதைப்பற்றி ஏதாவது உத்தரவாதம் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அனுமதியில்லை என்று யாரும் சொல்லவில்லை, பண உதவி செய்வதைப்பற்றித்தான் ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

திரு. சா. கணேசன் : சர்க்கார் பொருளாதார நிலை காரணமாகவும், அதிகமாக முதலீடு தேவைப்படும் என்ற காரணத்தினாலும் உடனடியாக துவங்குவதற்கு சாத்தியமில்லை என்று கருதுகின்றார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால், ஒருவரோ அல்லது பலரோ சேர்ந்து தனியார் துறையில் இதைத் தொடங்குவதற்கும் அதன் மூலமாக நம் மாநிலத்தின் தொழில் வளம் பெருகுவதற்கும் வேண்டிய வசதியை மாநில சர்க்கார் கொடுக்க முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாநில சர்க்கார் தாங்களே இதைச் செய்வதற்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறது. தனியார் துறையில் விடுவதற்கு உத்தேசம் கிடையாது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, தஸ்தூர் கம்பெனி அறிக்கை வரட்டும் என்று சொன்னார்கள், அதுவும் வந்தது, ஜப்பானிய கம்பெனியின் அறிக்கை வரட்டும் என்று சொன்னார்கள் அதுவும் வந்தது, இப்படி காலம் கடந்து கொண்டே போகிறது, இன்னும் வேறு ஒரு நாட்டுக்கு அனுப்பி அதனுடைய அறிக்கையும் வரட்டும், வரட்டும் என்கின்ற நிலை ஏற்படுமா ? இந்த விதமான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு உடனடியாக ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஸ்தூர் கம்பெனி அறிக்கை வந்தது. அதன் பிறகு அதைப்பற்றி ஜப்பானிய கம்பெனி பரிசீலனை செய்து உதவி செய்வதாகச் சொன்னார்கள். மத்திய சர்க்காருடைய நிதி வசதி வேண்டும். அதற்காக பல நாடுகளிலிருந்து உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது வருவது வரையிலும் காத்திருக்கவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நிதி வசதி செய்வது ஒன்று தான் இப்போது ஆலோசனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஜப்பானிய நாடு நமக்கு நிதி உதவி செய்வதாக சொன்னார்கள். அப்படி ஏதேனும் வாக்களித்திருப்பது உண்மையா? அப்படியானால், காலதாமதத்திற்கு என்ன காரணம் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்விதம் வாக்கு அளிக்கவில்லை. அவர்கள் சொன்னது 'ஃபாரின் எக்ஸேஞ்ச் காம்போனெண்ட்' கொடுத்து உதவுவதாக சொன்னார்கள், அதற்கான நம்பிக்கையும் இருக்கிறது, அவ்விதம் 'ஃபாரின் எக்சேஞ்ச்

5th November 1966]

காம்போனெண்ட்' கொடுத்தாலும் கூட, இதற்கு வேண்டியது டிவால்யுவேஷனுக்கு முன்பாக 80 கோடி என்று இருந்தது. இப்போது சுமார் 20 கோடியும் சேர்ந்து 100 கோடியாக உயர்ந்திருக்கிறது. இதற்கான நிதி வசதியிருக்கிறதா என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்த உருக்காலையை அமைப்பதற்கு வேண்டிய உதவி கிடைப்பதற்கு மத்திய சர்க்கார் மற்ற நாடுகளுடைய உதவியை எதிர்பார்க்கிறது என்று சொன்னார்கள், நமது தொழில் அமைச்சர் அவர்கள் மற்ற நாடுகளுடைய உதவியைக் கோரினார்கள் என்று சொல்லப்பட்டது, அது உண்மைதானா? அவ்விதம் உதவி கோரியதைப்பற்றி கூட தொழில் அமைச்சரை தாக்கி ஒரு பத்திரிகை எழுதியிருந்தது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் வெளிநாடுகளுக்குச் சென்று நம்முடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டது உண்மைதான். அதைப்பற்றி பரிசீலனை செய்து உதவி செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக வெளிநாடுகளில் எந்தவிதமான—நிச்சயமான வார்த்தை எதுவும், அதாவது பிராமிஸ், கொடுப்பதில்லை. உதவி செய்யலாம் என்கின்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சிறிய அளவில் இதை அமைக்கலாம் என்று சொன்னார்கள். அப்படியானால் இந்தச் சிறிய அளவின் உத்தேச மதிப்பு என்ன என்பதை தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தற்காலத்தில் 40 லட்சம் டன் உற்பத்தியாகக்கூடிய பிளான்ட்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. அதில் 5 லட்சம் டன் செய்வது, $2\frac{1}{2}$ லட்சம் கலப்பு உருக்கு செய்வதை சிறிய ஆலை என்று சொல்வதுண்டு.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நமது சேலம் உருக்காலைத் திட்டத்திற்கும் ஐந்தாவது திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை. சேலம் உருக்காலையைப் பொறுத்தவரையில், ஐந்து லட்சம் டன் உயர்தர உருக்கு உற்பத்தி செய்வது என்பது தனியான திட்டம். ஆகவே, இந்தத் திட்டம் ஐந்தாவது திட்டத்தில் சேர்க்காமல் தனியாக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைத்தான் நாமும் பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். மத்திய சர்க்காரிடத்திலும் இதைப் பற்றி சொல்லியிருக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை அமைப்பதற்கு வெளிநாட்டிலிருந்து உதவி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக சொன்னார்கள். ஜப்பானிய நாட்டைப் பொறுத்தவரையில் உதவி தருவதாக ஏற்கனவே கூறியிருப்ப

தாகவும் சொல்லப்படுகிறது, நமது தொழில் அமைச்சர் அவர்களும் ஜப்பானிய நாட்டுக்குச் சென்று நிலைமையை கண்டறிந்து வந்ததாகவும் தெரிகின்றது. ஜப்பானிய நாட்டில் இருக்கிற நிலைமையையும் அவர்கள் கொடுத்திருக்கிற அறிவிப்பின்படி உடனடியாக உதவி கிடைக்கும் என்ற வாய்ப்பின் அறிகுறிகள் இருக்கின்றனவா? இன்னும் வெளிநாடுகளுடைய உதவியை எதிர்பார்க்கின்றார்கள் என்றால் எந்த நாட்டை எதிர்பார்க்கின்றார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது இருக்கின்ற நிலையில் ஜப்பானிய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஐந்து லட்சம் டன் உற்பத்தி செய்கின்ற திட்டம் எக்னமிக் யூனிட்டாக இராது என்று சொல்லுகிறார்களே, அதைப்பற்றி அமைச்சர் அவர்களின் கருத்து என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கடிகாரங்கள் எல்லாம் ஒன்றாக இருப்பதில்லை. அதே போல் கருத்துக்களும் ஒன்றாக இருப்பதில்லை. நம்மைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் பொருளாதாரத் துறையில் கட்டுப்படியாகும் என்பதுதான், ஜப்பானிய நிபுணர்களும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ப. உ. சண்முகம்: இந்தத் திட்டம் நான்காவது திட்ட காலத்தில் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்கின்ற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எங்களைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அளிக்கிறோம்.

திரு. செ. மாதவன்: வெளிநாட்டு செலாவணி கிடைக்காது என்று இருப்பதால் பொருளாதார வசதியைப்பற்றி மத்திய சர்க்கார் ஆராய்ந்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும்போது, வெளிநாட்டிலிருந்து உதவி கிடைக்கும் உத்தரவாதம் இருந்தால், அதை மத்திய சர்க்கார் மறுப்பதற்கோ அல்லது ஆட்சேபிப்பதற்கோ மத்திய சர்க்காருக்கு என்ன உரிமை இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சேலம் உருக்காலையைப் பொறுத்தளவில் சற்றேறக்குறைய 80 கோடி ரூபாய் வேண்டும். இப்போதுள்ள மதிப்பீட்டின்படி 100 கோடி ரூபாய் அளவுக்கு ஆகும். இதில் 30 கோடி அல்லது 40 கோடிதான் அந்நிய நாட்டிலிருந்து உதவி கிடைக்கும், மீதி 70 அல்லது 60 கோடி ரூபாய்க்கு உள்நாட்டிலுள்ள செலாவணியைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, வெளிநாட்டு உதவியை மட்டும் வைத்துக் கொண்டு இதைப்பற்றி முடிவு செய்து விட முடியாது.

புலவர் கா. கோவிந்தன்: கல்பாக்கம் அணு மின்சார நிலையம் ஏற்படுத்துவதற்கும் உதவி செய்வதைப்பற்றி 1967-க்கு பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று தேர்தலில் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு உதவி கொடுக்கலாம் என்று தள்ளி

வைத்திருப்பதாக தெரிகிறது. அதைப் போலவே இதையும் 1967 தேர்தலுக்குப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்ற நினைப்பில் —அரசியல் காரணமாக—தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் சொன்ன தகவல், ஜப்பானிய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாக சொன்னேன். யாரும் இதற்கு உதவி அளிக்க மாட்டார்கள் என்கின்ற நிலைமைக்கு இடமில்லை.

Sago Units

* 432 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have proposed to evolve any method for adoption by producers of Sago Units in Salem district to remove the foul smell emanating from the effluent discharges from the settlement tanks in the said units?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government are considering a proposal to set up a research unit for conducting pilot plant studies to evolve suitable methods for treating the effluent discharges.

திரு. வை. சங்கரன்: இது எப்போது முடிந்து, இதற்குள்ள முடிவு எடுக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : This is proposed to be taken as a Part II Scheme in 1967–68 budget.

திரு. வை. சங்கரன்: இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று உற்பத்தியாளர்களுக்கு எடுத்துக் கூறப்படுமா அல்லது அவர்கள் வற்புறுத்தப்படுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முதலில் பைலட் பிராஜக்டாக செய்யப்படுகிறது. அதற்குப்பிறகுதான் இதெல்லாம் முடிவு செய்யப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், அக்கம்பக்கத்தில் இருக்கின்ற குடிதண்ணீர் கிணறுகள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுகின்றன. இப்போது பைலட் ஸ்கீமாக வைத்திருந்தாலும், இதை துரிதமாக சேலம் மாவட்டத்தில் அமல் செய்து நீரை சுத்தம் செய்வதற்கு ஏதாவது திட்டம் உண்டா? அப்படியென்றால் அதன் விவரம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த முறையில் சுத்தம் செய்வதைப்பற்றி ஆலோசனைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதில் ஒரு முறை ஆக்சிடேஷன் பான்ட், என்று இருக்கிறது, இன்னொன்று 'பைலாஜிக்கல் ஃபில்டரேஷன் மெதட்' என்றிருக்கிறது. இதில் இப்போது பைலட் ஸ்கீம் ஒன்றை ஏற்படுத்திப் பார்த்து, அதில் உபயோககரமாக இருக்கிறதா என்பதைப் பார்த்துவிட்டு பின்னால் இருப்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இப்போது ஆலோசனையில் இருக்கிற பைலட் திட்டத்தினுடைய விவரங்கள் என்ன? இதற்கு என்ன செலவு ஆகும்? எந்த இடத்தில் முதலில் பரீட்சார்த்தமாக வைக்கப்படும்? என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சேலத்தில் இப்போது இருக்கிற சவ்வரிசித் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் வைப்பதாக உத்தேசம். அதற்கு நான்-ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் 30,000 ரூபாய், ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் 40,000 ரூபாய் ஆகும்.

Plants for milk products

* 433 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up plants for the manufacture of milk products including Baby-food in the State in private or public sector; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) A scheme for the establishment of a factory for the manufacture of infant and invalid foods at Ootacamund has been under consideration of the Government and it is still in the initial stages.

A private party also has come forward with a proposal to establish a dairy-*cum*-factory for the manufacture of baby food, skim milk powder, cheese and butter at Gudalur taluk and his scheme is under examination.

திரு. வை. சங்கரன்: ஸார், சர்க்கார் துறையில் ஆரம்பிக்கப் படுவதாக இருந்தால் அதன் அளவு எவ்வளவாக இருக்கும்? உற்பத்தி எந்த அளவில் இருக்கும்? தனியார் துறையில் ஆரம்பிக் கப்படுவதாக இருந்தால் எந்த அளவாக இருக்கும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதெல்லாம் ‘இனிஷியல் ஸ்டேஜஸ்’ என்று சொன்னேன்; முடிவு செய்யப்படவில்லை. காரணம் என்ன என்றால், 10,000 லிட்டர் பால் கிடைத்தால்தான் இந்தத் தொழிற்சாலை வைக்க முடியும்.

திரு. வை. சங்கரன்: இது ஆரம்பிக்கப்படுவதாக இருந்தால் எப்போது முடிவு எடுத்து ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முடிவு எடுப்பது ஒன்றும் இல்லை. 10,000 லிட்டர் பால் கிடைக்கும் வசதி ஏற்பட்டவுடன் இதை ஏற்படுத்தலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, 10,000 லிட்டர் பால் கிடைக்கும் இடத்தில் வைக்கப்படக் கூடும் என்று தெரிவித்தார்கள். இப்போது இருக்கும் நிலையில் எந்தப் பகுதி அதற்குச் சாதகமாக இருக்கும் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரு நபர் கூடலூரில் வைக்க முடியும் என்று எழுதியிருக்கிறார். அது சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது.

5th November 1966]

திரு. வை. சங்கரன் : ஸார், நம் மாநிலத்தில் இந்தப் பால் பண்ணைத் தொழிற்சாலையை வைப்பதில், பால் கிடைப்பதில் லீன் பீரியட், சர்ப்ளஸ் பீரியட் என்று இருக்கின்றன; சர்ப்ளஸ் பீரியட்டில் கிடைக்கக் கூடிய பாலை வைத்துத் தொழிற்சாலை நடத்தும் முறையில் அது போன்ற திட்டமாவது தயாரிக்கப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிபுணர்களுக்குத் தெரியும். லீன் பீரியட்டில் சர்ப்ளஸ் பீரியட் பாலை வைத்துக் கொண்டு உபயோகிக்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். பத்தாயிரம் லிட்டர் சர்ப்ளஸ் பீரியட்டிலேயே கிடைக்கும் இடம் தமிழ் நாட்டில் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சபாநாயகர் அவர்களே, விண்ணப் பித்திருக்கும் தனியார், பண்ணை நடத்தித் தானே பாலை உற்பத்தி செய்துகொள்ளத் தயாராக இருக்கிறார். அவருக்கு உடனடியாக லைசென்ஸ் கொடுத்து, பின் தங்கியிருக்கும் கூடலூரை முன்னுக்குக் கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்தான் முன் வர வேண்டும். நாங்கள் உதவி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

Inventions promotion

* 434 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any proposal to provide fillip to those who evolve import substitutes and improved techniques in industry, by presenting them with suitable awards?

The Hon. Sri R. VENKATARAMAN : The State Government do not have any such proposal. But the Inventions Promotion Board organised by the Government of India, afford financial assistance in the form of grants or monetary awards to deserving cases.

திரு. வை. சங்கரன் : ஸார், மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றி நாமும் இதுபோன்ற ஊக்கமளிக்கும் நடவடிக்கையை எடுத்துக் கொள்ள முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ட்யூப்ளிகேஷன் ஆஃப் எஃபர்ட் ஆகும்.

Manufacture of asbestos

* 435 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the number and details of existing plants and the plants proposed to be set up in the State, for the manufacture of asbestos-sheets and other asbestos based products like asbestos textile yarns, packing cloth, mill board and jointing sheets?

The Hon. Sri R. VENKATARAMAN : Messrs. Asbestos Cement, Ltd. at Podanur is under production, with an annual capacity of 36,455 tonnes of asbestos sheets and pipes.

[5th November 1966

Messrs. Southern Asbestos Cement, Ltd., has obtained a licence to set up a unit near Arkonam to produce the same materials to a capacity of 35,000 tonnes. Another firm, viz.,

Messrs. Lloyds Insulations (Madras) has been granted a letter of intent to set up a unit in Madras to produce annually 800 tonnes of asbestos moulded thermal insulation articles and 600 tonnes of asbestos yarn, packings, cloth and tapes.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ராஜ்யத்தினுடைய தேவை எவ்வளவு ? தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் இருக்கிறதா ? அல்லது உற்பத்தி செய்யப்படும் ஆஸ்பெஸ்டாஸ் எல்லாவற்றையும் செண்ட்ரல் பூல் ஆக வைத்து எல்லா ராஜ்யங்களுக்கும் வினியோகிக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொதுவாக எல்லா ராஜ்யங்களுக்கும் வினியோகிக்கப்படுகிறது. அந்தந்த ராஜ்யத்திற்கென்று தனியாகக் கிடையாது.

Vanaspathy Industry

* 436 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have any proposal to start a Vanaspathy Industry on co-operative basis in the State; and

(b) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

திரு. வை. சங்கரன் : சார், இம்மாதிரி சர்க்காரிலே ஒரு உத்தேசம் இருந்து பின்னாலே அது கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுவும் இல்லை.

திரு. மு. சண்முகம் : சார், விழுப்புரத்தில் சுமார் 45 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் வனஸ்பதி தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறது. 7-8 ஆண்டுகளாக துவக்கப்படத் தகுதியுள்ளதாக இருந்தும் துவக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தும், நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையாவது செய்யவேண்டும் என்று சொல்லியும் இது வரையில் நடைபெறவில்லை. இந்தத் தொழிற்சாலை நடைபெறுமானால் அந்த வட்டாரத்தில் உள்ள மணிலா வியாபாரிகளுக்கு பாதகம் ஏற்படும் என்ற புகாரை அவர்கள் அரசாங்கத்திற்குச் செய்து கொண்டிருக்கிறார்களா ? இந்தத் தொழிற்சாலையை கூட்டுறவு அடிப்படையில் அரசாங்கம் ஏன் எடுத்து நடத்துவதற்கு முன்வரக்கூடாது ? இனியாகிலும் அந்த ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விழுப்புரத்தில் உள்ள தொழிற்சாலையை அதனுடைய முதலாளிகள், உரிமையாளர்கள், போதிய பண வசதி இல்லாத காரணத்தினால் நடத்த முடியவில்லை

அதற்குப் பிறகு சில வசதிகளை நாம் செய்து கொடுத்ததன் பயனாக மீண்டும் துவக்கினார்கள். எனக்கு இருக்கிற தகவல் அது சில மாதம் ஓடிவிட்டு மீண்டும் நின்று விட்டது என்பதாகும். அதற்குக் காரணம் மணிலாவின் விலை தாறுமாறாக ஏறிக்கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்கள் அதை வாங்கி ஸ்டாக் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும், அதனால் ஓட்டமுடியவில்லை என்றும் தெரிகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, வனஸ்பதித் தொழிற்சாலை நடத்துவதற்கான மூலப் பொருளாக இருக்கிற வேர்கடலை நமது மாநிலத்தில் நிறைய இருக்கிறது. வேறு மாநிலங்களில் உள்ள வனஸ்பதி தொழிற்சாலைக்கு வேண்டிய வேர்கடலை கூட இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. பிற நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்யப்படுகிறது. மூலப் பொருள் இங்கேயே கிடைக்கிற நிலையில், பொருளாதார வசதி, நிர்வாகத் திறமை யின்மை காரணமாகத் தொழிற்சாலை நின்று விட்டதாகத் தெரிவித்தார்கள். கூட்டுறவுத் துறையில் அல்லது அரசாங்கத் துறையில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்படுமானால் இதைச் செம்மையாக நடத்த வழிவகை ஏற்படாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்னுடைய கருத்து வனஸ்பதி தொழிற்சாலையை சர்க்கார் நடத்தக் கூடாது என்பது ஏனென்றால் மணிலாவின் விலை இன்டர்நேஷனல் மார்க்கெட் ப்ரைஸைப் பொறுத்து இருக்கிறது. விலை அதிகமாகவும், குறைவாகவும் போகக் கூடிய பொருளாக இருக்கிறது. அப்போதைக்கப் போது கண்காணித்து மணிலாவை வாங்கி தொழிற்சாலையை அந்தத் துறைகளில் நடத்த முடியாது என்பது என்னுடைய அபிப் பிராயம். கூட்டுறவுத் துறையிலோ அல்லது சர்க்கார் துறையிலோ நடத்துவது நஷ்டத்தில் தான் கொண்டுவிடும்.

Banana Package Scheme

* 437 *Q*.—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Special District Agricultural Officers have been appointed under the Banana Package Schemes;

(*b*) if so, their functions; and

(*c*) whether there is any proposal to distribute the agricultural loans under the Package Scheme through Special District Agricultural Officers instead of through Co-operative Societies?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இந்த தீவிர திட்டத்தின் கீழ், மாவட்ட வேளாண்மைச் சிறப்பு அதிகாரி ஒவ்வொருவரும், ஒவ்வோர் ஆண்டும், 4,000 ஏக்கர் வாழை பயிரிடுவதற்கு வகை செய்யவேண்டும். அதற்காக அவர் கீழ்க்கண்ட தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்வார் :—

(1) நல்ல, நோய் பீடித்திராத தரமான வாழைக்கன்றுகளை வழங்குதல்.

[5th November 1966

(2) செடிப் பாதுகாப்புக்குரிய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம், வாழைக்கன்றுகளுக்கு நோய் பரவாமல் பாதுகாத்தல்.

(3) பரிந்துரைக்கப்பட்ட அளவில் உரங்களைப் பயன் படுத்தல்.

(4) மேம்பாடடைந்த, வேளாண்மை, பொருளாதார முறைகளை மேற்கொள்ளல்.

(5) செடிப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(உ) இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், அதி தீவிர வாழை சாகுபடித் திட்டத்தின் கீழ் திண்டுக்கல்லில் தனி விவசாய அதிகாரி நியமிக்கப் பட்டுள்ளார். அவர்களால் லோன் ப்ரொபோஸல்கள் 200-க்கு மேல் க்ரெடிட் சொஸைட்டிகளுக்கு அனுப்பப்பட்டன. அவைகள் காரணம் இல்லாமல் நிராகரிக்கப்பட்டன. எனவே விவசாயிகளுக் குத் தொல்லையாக இருக்கிறது. க்ரெடிட் சொஸைட்டி மூலமாக வழங்குவதைத் தவிர்த்து டிபார்ட்மெண்ட் மூலமாகக் கொடுத்து விடச் செய்தால் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்லுவதுடன், ஏன் அவ்விதம் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய இலாகா மூலமாக ப்ளான் தயார்செய்து கூட்டுறவு மூலமாகத் தான் கொடுக்கிறார்கள். விவசாய இலாகா மூலமாக இல்லை.

திரு. கோ. சி. மணி : ஆடுதுறை வாழை ஆராய்ச்சிப் பண்ணை சார்பாக, கடன் வழங்கும் முறையில் இருக்கும் கோளாறுகளைப் பற்றிப் பரிசீலனை செய்து நல்ல ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிற தா ? அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

உப்பளங்கள் (பழைய காயல்)

* 438 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா பழைய காயல் ஹரிஜனங்களின் உப்புப் பாத்திகளுக்கு வண்டி, லாரி செல்ல பாதை கோரி கடந்த 10 ஆண்டுகளாக முறையிட்டு வந்தார்களா ?

(இ) அதன்மீது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

(உ) ஹரிஜனங்கள் கோரும் பாதையைத் தவிர்த்து வேறு சுற்று வழியாக பாதை அமைக்க ஆர்ஜித நடவடிக்கை எடுத்து வருவது உண்மையா ?

(எ) ஹரிஜனங்கள் கோரும் வழியாக பாதை அமைத்துக் கொடுப்பதில் என்ன கஷ்டமிருக்கிறது ?

5th November 1966]

(ஐ) ஹரிஜனங்கள் கோரும் வழியாக தற்போது லாரி வண்டி செல்லும் பாதை இருந்து வருவதும் அப்பாதை வழியாக லாரிகள் சென்ருல் அதன் உரிமையாளர் லாரி ஒன்றுக்கு ரூ. 3.00 வரை கட்டணம் பெற்று வருவது சர்க்கார் அறிவார்களா ?

(ஒ) புதிதாக ஆர்ஜிதம் செய்யும் நிலத்தின் அளவென்ன ?

(ஔ) எத்தனை பட்டாதாரர்கள் ?

(அ) முதலில் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுத்த நிலத்தில் எத்தனை பட்டாதாரர்கள் ? நிலத்தின் அளவென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) முதல் (அ) வரை : சபை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சபை முன்பு வைக்கப்பட்ட விவர அறிக்கையிலிருந்து இந்த ஆர்ஜித நடவடிக்கை 1958-ம் வருஷத்திலே ஒரு குறிப்பிட்ட நிலத்தைப் பொறுத்து எடுக்கப் பட்டது என்ற விவரம் தெரிகிறது. அதிலே 45 பேர்களில் இரண்டு பேர்கள் மாத்திரம் ஆட்சேபணை செய்ததாகவும், அதன் காரண மாக வேறு 44 பேர்களுடைய நிலத்தை முன்பு 3 ஏக்கர் 3 செண் டுக்கு பதிலாக இப்பொழுது 7 ஏக்கர் 14 செண்டு நிலத்தை எடுத்து கொள்ள நில ஆர்ஜித வேலை நடக்கவேண்டும் என்று கருதி, ஒரு வருஷ காலமாக நில ஆர்ஜித வேலை பூர்த்தி பெருத நிலைமைக்கு என்ன காரணம் ? நான் அறிந்த மட்டில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்துக்கு சொந்தக்காரர்களாக இருக்கக்கூடிய இரண்டு பேர்கள் தடுத்தார்கள் என்பதற்காக வசதி குறைந்த ஏழை மக்களாகிய 44 பேர்களுடைய நிலத்தை, குறிப்பாக பர்மா, சிலோன் நாடுகளிலிருந்து வந்தவர்கள் நிலத்தை இப்பொழுது ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிற விவரம் அரசாங்கத்திற்கு தெரியுமா ? இரண்டு பேர்கள் ஆட்சேபணையை பொருட்படுத்தாமல் முன்பு ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்ட பழைய நிலத்தையே ஆர்ஜிதம் செய்து எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே, முதலில் இங்கே ஒரு ரோடு அமைப்பதற்கு பிரயத்தனம் செய்யப்பட்டது. அப்பொழுது வில்லங்கங்கள் வந்து, விஷயம் கோர்ட்டுக்குப் போயிற்று. பிற்பாடு அதைப் பரிசீலனை செய்து கலெக்டர் அவர்கள் நேரில் சென்று எந்த நிலத்தை ரோடுக்கு எடுத்துக்கொண்டால் நல்லது என்று பார்த்து செய்கிருர்கள். கடைசியாக கலெக்டர் இந்த நிலத்தை எடுத்துக் கொண்டால் நல்லது என்று தெரிவித்திருக்கிருர். அங்கு இருக்கும் அரிஜன மகாஜனங்களும் இந்த இடத்தை விரும்புகிருர்கள். ஜனங்களும் இதை விரும்புகிருர்கள். இது தான் சௌகரியம் என்று அவர்கள் சொன்னதன் காரணமாக கலெக்டர் அவர்கள் இப்படி ஏற்பாடு செய்திருக்கிருர்.

a 403–405-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தித் துறை

* 439 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா :—

உணவு உற்பத்தித் துறையில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் மேஸ்திரி, தலைமைக்கூலி ஆகியவர்கள் நிரந்தரமாக்கப் பட்டுள்ளனரா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. ஆ. தங்கவேலு: உணவு உற்பத்தித் துறையில் பணி புரிகின்ற மேஸ்திரி, தலைமை கூலி 5 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்திருந்தும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அதனால் அவர் களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் எதுவும் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைப் பரிசிலனை செய்து உடனடியாக அந்தச் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக் கும்படியான வழிவகைகள் செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : உணவு உற்பத்தித் துறையில் வேலை செய்யும் மேஸ்திரி, இதரக் கூலிகள் அவ்வப்பொழுது தற்காலிகமாக வேலை எங்கெங்கு நடைபெறுகிறதோ அங்கு வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அதனால் அவர்கள் பெர்மனென்டு இல்லை. ஆகவே, இவர்களை பெர்மனென்டு ஆக்குவதற்கு முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Cultivation of potato in plains

* 440 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal for the cultivation of potato in the plains on an experimental basis; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் பகுதியில் பயிரிட்டுச் சோதனை செய்யப்பட்டது. முதல் சோதனையின் விளைவு ஊக்கமளிப்பதாய் உள்ளது. மற்ற இடங்களிலும் இத்தகைய சோதனை நடத்திப் பார்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : எத்தனை ஏக்கர் இதுபோன்று பயிரிடப் பட்டது? அதற்கு எங்கிருந்து கிழங்குகள் வரவழைக்கப் பட்டன ?

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனை ஏக்கர் என்ற தகவல் என்னிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5th November 1966]

பாலாறு பேசின் விதி

* 441 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

வடார்க்காடு மாவட்டத்தில் பம்பு செட்டுகள் அமைப்பதற்கான பாலாறு பேசின் விதியை ரத்து செய்துவிட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: A statement[a] explaining the position is placed on the Table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்த பாலாறு பேஸின் விதிகளை இன்னும் கூட, உணவு கட்டுப்பாடு இருக்கக்கூடிய நேரத்தில்கூட சில இடங்களில் நீக்கிவிட்டு சில இடங்களில் வைத்திருக்கிறார்கள். அதையும் நீக்க சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: சில இடங்களில் அகற்றப்பட்டு சில இடங்களில் வைத்திருக்கக்கூடிய நிலையில் இல்லை. பொதுவாக இருக்கக்கூடிய நிலைகளையெல்லாம் பரிசிலனை செய்து அந்த ரூல்லை இப்பொழுது தளர்த்தியிருக்கிறோம். இது தொடர்ந்து பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

உணவு தானியக் கிடங்கு

* 442 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்

கனம் திரு. வெ. ராமையா: சில இடங்களில் அகற்றப்பட்டு

(அ) திருச்சி மாவட்டத்தில், K. சாத்தனூரில் சர்க்காரின் உணவு தானிய சேமிப்பு கிடங்கு (Godown) கட்டப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

(உ) அதற்கு பைனல் பில் எவ்வளவு கொடுக்கப்பட்டது?

(எ) கன்டிராக்டரால் ஒப்பந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டனவா?

THE HON. SRI V. RAMAIAH: (a) Ten godowns for storage of foodgrains were constructed at K. Sathanur, Tiruchirappalli district, by the State Government on behalf of the Central Warehousing Corporation.

(b) Rs. 44,76,500.

(c) The total value of the contract was Rs. 41,80,147. Deducting Rs. 6,60,344·25 towards cement supplied and a further sum of Rs. 1,04,444 being $2\frac{1}{2}$ per cent of the total value of the contract towards security, the balance of Rs. 34,15,358.75 was paid to him.

(d) Yes.

[a] Printed as Appendix III on pages 405–411.

[5th November 1966

திரு. து. ப. அழகமுத்து : எஸ்டிமேட் தொகைக்கும், பைனல் பில் தொகைக்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. அப்படி வருவதற்குக் காரணம் என்ன? கன்டிராக்டர் ஒப்பந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை. லேடிங் எல்லாம் இல்லாமலே சர்க்கார் எடுத்துக்கொண்டுவிட்டார்கள் என்று கூறுகிறார்களே? அது உண்மையா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அப்படி இல்லை.

சோதனைச் சாவடிகள்

* 443 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள உணவு தானிய பரிசோதனை சாவடிகளில் எவ்வளவு உணவு தானியங்கள் கைப்பற்றப்பட்டன, மாவட்டவாரியாக?

(இ) எவ்வளவு உணவு தானியங்களுக்கு மதிப்புத் தொகை வழங்கப்பட்டது?

(உ) எவ்வளவு உணவு தானியங்கள் பறிமுதல் செய்யப்பட்டன, அதற்கான மதிப்புத் தொகை எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (c) A statement [a] is placed on the table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஒவ்வொரு தாலூகாவிற்கும் செக் போஸ்டு இருக்கிறது. அண்மையில் செங்கற்பட்டில் மத்திய அமைச்சர் தாலூகா செக் போஸ்டு நீக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னிடம் தகவல் இல்லை.

திரு. கோ. சி. மணி : பறிமுதல் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள் சரிவர பராமரிக்கப்படாததன் காரணமாக சேதம் அதிகமாக விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அப்படியிருந்தால் அதனுடைய மதிப்பு என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருள்கள் 6,449 குவிண்டால் என்றும், மதிப்புத் தொகை வழங்கப்பட்ட உணவு தானியங்கள் 6,064 குவிண்டால் என்றும், பறிமுதல் செய்யப் பட்டது 375 குவிண்டால் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் கைப்பற்றப்பட்டது 1,119 குவிண்டால் என்றும், பறிமுதல் செய்யப்பட்டது 1,075 குவிண்டால் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக இந்த

[a] Printed as Appendix IV on page 412.

5th November 1966]

மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்டது அதிகமாகவும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மதிப்புத் தொகை வழங்கப்பட்டது அதிகமாகவும் பறிமுதல் செய்யப்பட்டது குறைவாகவும் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : இரண்டு மாவட்டத்தை மட்டும் வைத்து பார்க்கக்கூடாது. பூரா ஸ்டேட்டையும் பார்க்கவேண்டும். அங்கங்கு இருக்கிற நிலைமைக்குத் தகுந்தவாறு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : செக் போஸ்டு தாலுகா வாரியாக ஏற்படுத்தவேண்டும் என்று இருந்தும் கூட, சிறு நகரங்களில் நான்கு வழிகளிலும் செக் போஸ்டுகள் போடப்பட்டு, அதனால் பல தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : சில சந்தர்ப்பங்களில் கொள்முதல் நடைபெறுகிறபொழுது கலெக்டர்கள் அங்கங்கே என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுக்கிறார்கள்.

தானியக் கொள்முதல்

* 444 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில முழுவதும் 1965 அக்டோபர் முதல் இன்றுவரை நெல், அரிசி, கேழ்வரகு ஆகிய உணவு தானியங்கள் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது மாவட்டவாரியாக ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எவ்வளவு, பூர்த்தியடைந்த மாவட்டங்கள் எவை, பூர்த்தியடையாத மாவட்டங்கள் எவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

* 445. *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. Minister for Food be pleased to state whether levy has been enforced in Thanjavur district for cellection of paddy?

THE HON. SRI V. RAMAIAH : No levy system is in force in Thanjavur district as in other districts of the State. The surpluses of landholders are procured, i.e., whatever surplus is availabe after meeting their domestic consumption requirements, seeds and wages.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஓரளவுக்கு உபரி மாவட்டம் என்ற கருத்தில் அங்கே அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. நவரை அறுவடைக்குப் பிறகு இப்பொழுது கொள்முதல் வேலை மிகவும்

[a] Printed as Appendix V on pages 413–414.

[5th November 1966

அதிகமாக செய்யப்படுகிறது. இவ்வளவு தானியம் கொள்முதல் செய்யப்படவேண்டும் என்ற ஆணை மேலதிகாரிகளிடமிருந்து அங்குள்ள அதிகாரிகளுக்கு வருவதால், அவர்கள் விவசாயிகளை வற்புறுத்தி கொள்முதல் செய்கிறார்கள் * * அப்படிச் செய்யாமல் நெல் கொள்முதலை அங்கே நிறுத்தி வைக்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இது தொடர்ந்து பரிசிலனை செய்யப்படுகின்ற விஷயம். எந்த ஜில்லாவிலும் அந்த ஜில்லாவினுடைய நிலைக்குப் பாதகமாக எந்த அதிகாரியும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதில்லை. அதுவும் விசேஷமாக வட ஆற்காடு ஜில்லாவில் எது உபரியாக கிடைக்கிறதோ அதைத் தான் வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

• • • • •

திரு. கரு. சிமைச்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற பொழுது கட்டாயமாக விவசாயிகளை வற்புறுத்தி நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். இந்த மன்றத்தில் பதில் சொல்வதற்கும் வெளியில் நடப்பதற்கும் சம்பந்தம் கிடையாது. சாதாரணமாக விவசாயிகள் நெல்லை அவித்து ரைஸ் மில்லுக்குக் கொண்டுபோகும்போதுகூட அந்த நெல்லை பிடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பத்திரிகைகளிலும் அம்மாதிரி செய்தி வந்திருக்கிறது. இனிமேலாவது இந்த நிகழ்ச்சி நடைபெறாமல் இருப்பதற்கு அரசாங்கம் நிரந்தரமாக உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நிரந்தரமாக உத்தரவு போட்டு அமல் நடந்துகொண்டிருக்கிறது. அதில் எந்தவிதமான குழப்பமும் கிடையாது. எதை வாங்கவேண்டும் என்று ஸ்தலத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் கவனித்து செய்துகொண்டிருக்கிறார்கள்.

9-30 a.m. திரு. அ. துரையரசன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக 40 க்விண்டால் வைத்திருப்பவர்கள் டிக்ளரேஷன் கொடுக்க வேண்டியதில்லை என்று விதியிருக்கிறது. ஆனால், அதற்கும் குறைத்து வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டங்களில் கட்டாயப்படுத்தி வசூலித்திருக்கிறார்கள் என்கின்ற புகார் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டதே, அதன் பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : உற்பத்திக்குத் தகுந்த அளவில் தான் வாங்குகிறார்கள்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மிகுதியாக உள்ள தானியத்தைத்தான் கொள்முதல் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக கலெக்டர் ஒரு ஏக்கருக்கு இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் 5,

**Expunged as ordered by the Chair.

பேர்கள் இருக்கலாம், அல்லது 10, 15 பேர்கள் இருக்கலாம். ஆனல், தனி விவசாயிக்கு அவனுடைய தேவை இவ்வளவு என்பதை யார் நிர்ணயிக்கிறார்கள்? அப்படி நிர்ணயிக்க வேண்டும் என்கின்ற விதி ஏதாவது இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : ஒரு ஜில்லாவிலே எவ்வளவு வசூல் ஆகும் என்பது விளைச்சல் முதலியவற்றைப் பொருத்து நிர்ணயிக்கப்பட்டு, ஒரு இலக்கு வைத்து அதன்பேரில் நடவடிக்கை எடுக்கிறார்கள். அந்த இலக்கை அடைய கலெக்டர்கள் சுலபமாக என்னென்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று பார்த்து அந்த முறையில் வாங்குகிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வடஆர்க்காடு மாவட்டத்தில் விவசாயிகளைத் தொந்தரவு செய்து வாங்குகிறார்கள் என்பதைத் தான் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள் * * * அந்தத் தொந்தரவை நிவர்த்திக்க என்ன செய்தார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : எல்லாவற்றிலும்தான் அக்கறை காட்டுகிறார்கள். வடஆர்க்காட்டில் எவ்வளவு உற்பத்தியாகும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு, மாவட்ட அதிகாரி தகுந்த முறையில் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தலைவர் அவர்களே, மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் என்று சொன்னார்கள். அதை எப்படி, யார் நிர்ணயிக்கிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொன்னேன். ஒரு விவசாயிக்குத் தேவையான தானியம் போக, தன் கூலிக்குத் தேவையானது போக விதை, கூலி இவற்றிற்குத் தேவையானது போக மீதம் இருப்பதை வாங்குகிறார்கள்.

திரு. கரு. சிமைச்சாமி : இப்பொழுது கலெக்டர்கள் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இவ்வளவு டார்கெட்டு என்று வைத்திருக்கிறார்கள். 10,000 டன் இராமநாதபுரத்திற்கு, 20,000 டன் மதுரைக்கு என்று சொல்லும் போது, கலெக்டர்கள் ஒரு ஏக்கருக்கு 5 மூட்டை, 10 மூட்டை என்று மதுரையிலும், இராமநாதபுரத்தில் 6 மூட்டை என்றும் வசூலிக்க வேண்டும் என்று சர்குலரே விட்டு,—அமைச்சரிடம் கூட போனதடவை இந்த மாதிரி என்று எடுத்துக்காட்டினேம்—வசூல் செய்வதனல், தேவைக்குப் போக மீதம் இவ்வளவு விவசாயிகளாக மனமுவந்து கொடுக்க வேண்டும் என்று ஒரு உத்தரவைப் போடுவார்களா என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : மனம் உவந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னல் ஒன்றுமே நடக்காது என்பதுதான் எனக்குத் தெரிந்தவரையில் இருக்கும் நிலைமை. ஆங்காங்கே உற்பத்தி எவ்வளவு, பூமியின் தரம் எவ்வளவு,—இப்பொழுது

*** Expunged as ordered by the Chair.

[5th November 1966

ஏரிப்பாசனத்தால் அதிக விளைச்சல் இருக்கிறது—விவசாயி னுடைய தேவைக்குப் போக பாக்கி எவ்வளவு என்று ஒவ்வொரு மாவட்டத்தில் நிலவரத்திற்குத் தக்கபடி வசூல் செய்கிறார்கள். அதில் குழப்பம் ஒன்றும் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், ப்ரொக்யூர்மெண்டு என்று செய்யும் முறையில் சாதாரணமாக நெல்லை மட்டும் ப்ரொக்யூர் செய்கிறார்களா அல்லது வேக வைத்து, அவித்து மில்லுக்குக் கொண்டு போகும் நெல்லையும் பிடுங்கி ப்ரொக்யூர் செய்யவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். நேற்றைய மெயில் பத்திரிகையின் ' லெட்டர்ஸ் டு தி எடிடர் ' என்ற பகுதியில், வெரிங்வேடு கிராமத்தில் 10 ஏக்கர் நிலம் உள்ள ஒருவர் 430 மூட்டை நெல் கொடுத்து பிறகும், நாலு மூட்டை நெல்லை அவித்து மில்லுக்குக் கொண்டு போகும் போது ப்ரொக்யூர் செய்திருக்கிறார்கள் என்கிற புகார் செய்திருக்கிறார்கள். அப்படி ஏதாகிலும் உத்தரவு இருக்கிறதா ? குறிப்பிட்ட சம்ப வத்தை பற்றி விசாரணை நடத்துவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதைப் பற்றி எழுதியனுப்பினால் அரசாங்கம் கவனிக்கும். மற்றது சம்மந்தப் பட்டவரை, எந்த முறையில் செய்யவேண்டும் என்று கலெக்டர்களுக்கு போதுமான ' இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ' அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : சார், சர்க்கார் கொள்முதல் திட்டத் தின் கீழ், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 15,000 க்விண்டால் என்று சர்க்காரிலே குறிப்பிட்டிருந்தார்கள். இலக்குக்கும் மேலாகவே வசூல் செய்துவிட்டதால், இனியாவது கொள்முதல் செய்வதை நிறுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எதற்காக நிறுத்தவேண்டும் ? அங்கே ' கண்டின்யுவஸாக ' வாங்கிக் கொண்டுதான் இருப்பார்கள்.

* 446 **கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ்** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், சென்ற ஆண்டு (1965-66) அரசாங்கம் கொள்முதல் செய்த நெல்லின் அளவு எவ்வளவு ?

(இ) இவ்வாண்டு 1966-1967-ல் கொள்முதல் செய்ய உத்தேசித் திருக்கும் நெல்லின் அளவு எவ்வளவு ?

(உ) எந்த நிரக்கில் அங்கு லெவிமுறை அமுலாக்கப்பட்டிருக் கிறது ?

(எ) ஒரு எக்கரா நஞ்சை நிலச் சொந்தக்காரர்களிடம் லெவி நெல் அளக்க அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா ? ஆமெனில் அதை அரசாங்கம் ரத்து செய்ய முற்படுமா ?

(ஐ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நெல்லின் தரமும் விலையும் எவ்வளவு ?

5th November 1966]

(ஓ) இதர மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கன்னியாகுமரி மாவட்ட நெல்லின் விலை குறைவாக இருக்கக் காரணம் யாது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) A quantity of 8,510 tonnes of use was procured in Kanyakumari during the calendar year 1965.

(*b*) The target for procurement in Kanyakumari for the calandar year 1966 is 15,000 tonnes of rice out of which 6,185 tonnes have been procured up to June 1966.

(*c*) The rates of levy adopted in Kanyakumari district are as follows :—

(One bag—57 Kgs.)

Between 1 to 3 acres—6 bags per acre.

Between 3 to 5 acres—7 bags per acre.

Between 5 to 9 acres—9 bags per acre.

Between 9 to 15 acres—11 bags per acre.

Above 15 acres—12 bags per acre.

(*d*) No levy is now imposed on land owners owning less than one acre in Kanyakumari district. The Collector did not exempt landholders owning less than one acre from the levy in the first instance, but has since exempted them.

(*e*) & (*f*) No separate prices have been fixed for each variety of paddy in Kanyakumari district. Paddy varieties have been classified into three broad categories coarse, medium and fine for all districts in the State and prices have been revised on 1st January 1966 at Rs. 40 per quintal for coarse, Rs. 42 for medium and Rs. 45 for fine. Paddy grown in Kanyakumari district will fall within one or other of these categories.

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், தாலூகாவிற்கு தாலூகா விலை வேறுபாடு இருக்கிறது. அகஸ்தீசுரம் தாலூகாவில் விளையும் நெல் விலையைவிட கல்குளம் தாலூகாவில் விளையும் நெல்லுக்கு விலை குறைவாக இருக்கிறது. இரண்டு தாலூகாக்களிலும் ஒரே இன நெல்தான் சாகுபடி செய்கிறார்கள். இந்த விலை வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? ஒரே விலையைக் கொடுக்க உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நெல்லின் தரத்தைப் பொருத்து விலையை கலெக்டர் நிர்ணயம் செய்கிறார். நெல்லின் தரம் ஒன்றாக இருந்தால், அதை சர்க்காருடைய அல்லது கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. இரா. பொன்னப்ப நாடார் : சார், ஒரு ஏக்கருக்குக் கீழே உள்ள நிலச்சுவாந்தார்களிடம் நெல் வசூலிக்கக் கட்டாயம் இல்லை என்று சொன்னார்கள். குறிப்பிட்ட கேசுகளில் அப்படி வசூல் செய்திருந்தால் அதைத் திருப்பிக் கொடுக்க சர்க்கார் உத்தரவு போடுவவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : அது போலெல்லாம் சிரமம் இருந்தது என்று கனம் அங்கத்தினர் போன்றவர்கள் சொன்னதன் பேரில் பொதுவாக ஒரு ஏக்கருக்குக் கீழே உள்ளவர்களிடம் வாங்க வேண்டாம் என்று சொன்னோம். அதைத் திருப்பிக் கொடுக்கிறது என்கிற பிரச்சினை ஒன்றும் இல்லை.

உணவு தானிய பங்கீடு

* 447 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆடுதுறை நகர பஞ்சாயத்து பொது மக்களுக்கு மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் நிர்ணய விலையில் அரசாங்கம் அரிசி விநியோகம் செய்திருக்கிறதா ?

(இ) ஆமெனில் எந்த அமைப்பின் மூலமாக விநியோகம் செய்யப்பட்டது ?

(உ) மேற்கண்ட மாதங்களில் முறையே கொடுக்கப்பட்ட அரிசியின் அளவென்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) 1966, ஜூலை மாதத்தின் பிற்பாதிவரையில் சில்லறை வணிகர் ஸ்ரீ டி. ஏ. பாலகிருஷ்ண ராஜா மூலமாகப் பங்கீடு செய்யப் பட்டது. அதன்பிறகு, ஆடுதுறையிலுள்ள பன்னோக்கக் கூட்டுறவு சங்கம் மூலம் பங்கீடு செய்யப்பட்டது.

(உ)	மே	25	மூட்டைகள்
	ஜூன்	205	,,
	ஜூலை	354	,,
	ஆகஸ்டு	215	,,
	மொத்தம் ..	799	,,

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, முதலில் ஒரு தனியார் லைசென்சுதார் மூலம் அரிசி வினியோகம் செய்யப் பட்டது என்றும், பிறகு கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்கப் பட்டது என்றும், அதன் பிறகு தனியார் கொடுத்துக்கொண்டு இருக்கிறார் என்றும் சொன்னார்கள். அரிசி வினியோகிக்கும் முறை ஒரு வருஷத்திலே மூன்று முறை மாற்றப்படுவதற்கு மூல காரணங்கள் என்ன என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : மூல காரணங்கள் என்று ஒன்றும் பெரிசாக இல்லை. அந்த ஊருக்குத் தேவைப்பட்டது, வியாபாரி ஒருவர் அரிசியைக் கொடுக்க முன்வந்தார். பிறகு மாவட்ட நிலை

5th November 1966]

தெரிந்த பிறகு கூட்டுறவு சங்கம் மூலமாக வினியோகிக்க வேண்டும் என்கிற யோசனை பஞ்சாயத்து யூனியனிடமிருந்து வந்தது. அதனுல் கூட்டுறவு சங்கம் மூலம் வினியோகம் நடக்கிறது.

குடும்பக் கார்டு முறை

*448 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மேஜர் பஞ்சாயத்துக்களில் குடும்ப கார்டு முறையை அமுலாக்க உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்ருல், அதன் விபரமென்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) Family cards system has been introduced in 20 Town Panchayats out of 30 Town Panchayats in Thanjavur district.

திரு. கரு. சீமைச்சாமி: தஞ்சை மாவட்டத்திலே கூட மேஜர் பஞ்சாயத்துக்களில் குடும்பக் கார்டு முறை அமலுக்கு வந்து விட்டது. அந்த அளவிற்கு அரிசி பஞ்சம் வந்துவிட்டது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது கூட இந்த நிலை ஏற்படவில்லை. இம்மாதிரி அரிசிப் பஞ்சநிலை தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், அரசாங்கம் அங்கே கொள்முதல் செய்வது தான். அங்கிருக்கும் நெல்லை வெளி இடங்களுக்குக் கொண்டு போவதனுல்தான் தஞ்சை மாவட்டத்தில் அரிசிப் பஞ்ச நிலை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அங்கே கொள்முதல் செய்வதை அரசாங்கம் கைவிடுமா?

கனம் சபாநாயகர்: இராமநுதபுர மாவட்டத்திற்கு அனுப்பி விட்டார்களோ என்னவோ! (சிரிப்பு.)

கனம் திரு. வெ. ராமைய்யா: இதற்குள்ளே பெரிய ஆராய்ச்சிக்குப் போனுல், இராமநுதபுரம் மாவட்டத்திற்குக் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்று நினைக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலும் கஷ்டம் ஏற்பட்டது. அப்பொழுது அரசாங்கத்தின் கையில் நெல் வைத்திருந்த காரணத்தால் அங்கே உடனடியாக விநியோகம் செய்து அந்தக் கஷ்டத்தைப் போக்க முடிந்தது.

திரு. கோ. சி. மணி: மேஜர் பஞ்சாயத்துக்களில் அரிசி வழங்கப்படுகிறது. மைனர் பஞ்சாயத்துக்களில் அரிசி கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், ஒரு விசேஷ கஷ்டம் ஏற்பட்டது நமக்கெல்லாம் ஞாபகம் இருக்கும். அதனுல் உடனடியாக மேஜர் பஞ்சாயத்துக்களிலும் முனிசிபாலிடிகளிலும் கொடுக்க வேண்டியிருந்தது. மற்றும் பல இடங்களில், கலெக்டருடைய ஆலோசனைப்படி, எங்கெங்கே

கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டதோ, அங்கெல்லாம் தடை இல்லாமல் கொடுக்கப்பட்டுத்தான் வந்தது. இப்பொழுது நான் தெரிந்துகொண்ட வரையில், சர்க்காரிலே வாங்க வேண்டிய டிமாண்டு குறைந்திருக்கிறது. 'ஓபன் மார்க்கெட்' டிலேயே நிறையக் கிடைக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : குடும்பக் கார்டு கொடுக்கப்பட்ட இடத்தில் உணவுத் தானியம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லை. நீலகிரி ஜில்லாவைப் போன்ற நெல் விளையாத பகுதிகளில் இந்தக் குடும்பக் கார்டுக்குப் பதிலாக சட்டபூர்வ ரேஷன் முறை கொண்டு வருவதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது அம்மாதிரி யோசனை ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

நியாய விலைக்கடைகள்

* 449 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் உள்ளன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : 417.

திரு. கரு. சீமைச்சாமி : தஞ்சை ஜில்லாவில் இப்படி அரிசிப் பஞ்சம் வருகிறபோது இராமநாதபுரம் மாவட்டத்தில் கொடுக்க முடிவதில்லை. அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

கனம் சபாநாயகர் : இப்பொழுது கொடுத்துக்கொண்டிருப்பது போதாது, அதை அதிகப்படுத்தவேண்டும் என்று கனம் அங்கத்தினர் கேட்க விரும்புகின்றாரா ?

திரு. கரு. சீமைச்சாமி : மைனர் பஞ்சாயத்துக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எங்கெங்கு தேவையோ அதற்குத் தகுந்த முறையில் அங்கேயிருக்கும் கலெக்டர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். சென்ற வருடம் பருவ மழை பொய்த்தது. இந்த வருஷம் மற்ற ஜில்லாக்களிலும் நல்ல பருவ மழை பெய்து ஏராளமான மகசூல் கிடைக்கக்கூடும்.

அரிசி ஆலைகளுக்கு உரிமம்

* 450 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962 ஜனவரி முதல் 1965 ஜூலை முடிய நெல் மிஷின் போட லைசென்ஸ் கோரி தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து அரசினருக்கு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) எத்தனை லைசென்ஸ் கொடுக்கப்பட்டது ?

(உ) கொடுக்காமல் இருக்கும் விண்ணப்பங்கள் எத்தனை ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 249.

(இ) 69.

(உ) 48.

திரு. ஆ. தங்கவேலு : சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது, 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் முடிய கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களை உடனடியாகப் பரிசீலனை செய்து நெல் மிஷின் போட லைசென்ஸ் கொடுக்க உத்தரவிட்டிருப் பதாகச் சொன்னார்கள். ஆனால், மூன்று, நான்கு ஆண்டுகளாக விண்ணப்பம் போட்டும், அநேக விண்ணப்பங்கள் பேரில் லைசென்ஸ் கொடுக்கப்படாமல், கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளுக்கும் உடனடியாக லைசென்ஸ் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு வெ. ராமையா : கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட தேதி வரைக்கும் அரசினருக்கு வந்த விண்ணப்பங்களைப்பற்றிய விவரம் தெரிவித்தேன். அந்தத் தேதிக்குப் பிறகு, இன்னும் இருக்கக்கூடிய விதிகளைத் தளர்த்தி, எந்த எந்த கிராமங்களில் நெல் மிஷின் இல்லையோ அதற்கெல்லாம் ப்ரையாரிடி கொடுக்கப் படுகிறது. சட்ட அடிப்படையில் என்ன விதிமுறை இருக் கிறதோ அதைப்பார்த்துப் பரிசீலனை செய்து மேலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Free medical aid for teachers

* 451 Q.—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to provide free medical aid for teachers employed in Private Schools also ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏனைய பொதுமக்களைப் போலவே, தனியார் பள்ளி ஆசிரியர்களும் இலவச உணவுடன் இலவச மருத்துவ உதவியும் பெற உரிமையுள்ளவர்களாவர் ; ஆனால் அவர்களுடைய மாத வருமானம் 100 ரூபாய்க்குக் குறைவாக இருக்கவேண்டும். அவர்களுக்கு மேற்கொண்டும் மருத்துவச் சலுகைகளை அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சர்க்காரப் பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு இத்தகைய வசதி இருக்கிறதாக நான் அறிகிறேன். அப்படியானால், சர்க்காரப் பள்ளி ஆசிரியர்கள் பெறும் மானியத்தைப் போலவே தனியார்ப் பள்ளி ஆசிரியர் களுக்கும் முழு மானியம், சம்பளம் முதலியவை கொடுக்கக் கூடிய இந்த நேரத்தில், சர்க்கார் பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார்ப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இடையே வித்தியாசம் பாராட்டுவதற்கு

[5th November 1966

என்ன காரணம்? இரு வகை ஆசிரியர்களுக்கும் இடையே வித்தியாசம் காட்டாமல், சர்க்காரப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் எல்லாப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தனியார்த் துறைப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்க முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கைவிட்டுவிட்டது.

நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி

* 452 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திண்டிவனத்திலுள்ள தனி நபர் ஒருவர், நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி ஒன்று நிருவுவதற்கு, மதுராந்தகம் தாலூகா ஆக்தூர் கிராமத்தில் R.S No. 405-ல் உள்ள 25 ஏக்கர் நிலங்கோரி 3—10—1965-ல் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டருக்கு மனு செய்துள்ளாரா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The area requested for assignment is not available.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: நாட்டு மருந்துப் பரிசோதனைக் கல்லூரி ஒன்று கட்டுவதற்காக மனை கோரப்பட்டு, அதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டபிறகு, அந்த மனையை வேறு அரசாங்க அலுவலகத்திற்காக ஏற்பாடு செய்வதாகச் சொல்லிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு எதிரிலேயே பல ஏக்கர் நிலங்கள் காலியாக இருக்கின்றனவாம். அதை யாவது கொடுத்து, அங்கே இதை ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் இதைப்பற்றித் தகவல் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். அந்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் கட்டுவதற்கு மனுப் போட்டவருக்கு இப்பொழுது வேறு இடம் கொடுக்கலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

Compensatory allowance to Medical Officers

* 453 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have any proposal, to sanction payment of any compensatory allowance to medical officers with L.I.M. or G.C.I.M. qualifications, employed in dispensaries of Indian or Indigenous Medicines under local bodies; and

(b) if so, the details thereof?

5th November 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) தல அதிகார மன்றங்களின் கீழ் (பஞ்சாயத்து யூனியன்களின் கீழும் நகராட்சிகளின் கீழும்) உள்ள இந்திய மருத்துவ அல்லது நாட்டு மருத்துவ மருந்தகங்களில் பணியாற்றும் L.I.M., G.C.I.M. தகுதி பெற்ற மருத்துவ அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 (ஐம்பது மட்டும்) இழப்பீட்டுப்படி வழங்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. ஷி இழப்பீட்டுப்படி வழங்குவதற்குரிய செலவைச் சம்பந்தப்பட்ட தல அதிகார மன்றங்களே ஏற்க வேண்டும்; அதற்காக அரசாங்கத்திடம் இருந்து மானியம் எதையும் கேட்கக்கூடாது என்கிற நிபந்தனைக்குட்பட்டே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன்: பொதுவாக, எல்.ஐ.எம்., ஜி.ஸி.ஐ.எம். படித்தவர்களை அரசாங்கம் ஒரே மாதிரி பாவிக்கிறது. அப்படியிருக்கும்போது, ஜி.ஸி.ஐ.எம். படித்தவர்களுக்கு இன்டென்சிவ் கோர்ஸ் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்போது, எல்.ஐ.எம். படித்தவர்களுக்கு அதுபோன்ற சலுகை வழங்கப்படாததற்குக் காரணம் என்ன? அவர்களுக்கும் அந்தச் சலுகை வழங்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எல்.ஐ.எம். படித்தவர்களுக்குக் கன்டென்ஸ்டு கோர்ஸ் வேண்டுமென்று கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்த பிறகுதான் ஒரு முடிவுக்கு வர முடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள்

* 454 **கேள்வி.—திரு. எஸ் ஜே. ராமசாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுகா (வடார்க்காடு மாவட்டம்) தணிகை போளூர் கிராமத்தில் உள்ள கூட்டுறவு பண்டகசாலையில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டிருப்பது சம்பந்தமாக யாரேனும் கைது செய்யப்பட்டார்களா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: 'கூட்டுறவு பண்டகசாலை' என்று நான் தவறாக கேள்வி கொடுத்துவிட்டேன். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். அப்படிச் சொல்லக் கூடாது. அமைச்சர் அவர்களுக்குத் தகவல் வந்திருக்கும். 'க்ரெடிட் சொஸைட்டி' பற்றித்தான் நான்

[5th November 1966

கேள்வி போட விரும்பியது. கூட்டுறவு க்ரெடிட் சொசைட்டியில் எவ்வளவு பணம் மோசடி செய்யப்பட்டது? தலைவர் எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா? அவரிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தக் கூட்டுறவு க்ரெடிட் சொசைட்டி பற்றித் தகவல் வேண்டுமானால், தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

* 455 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகா சிரணமல்லி கிராமத்தில் இருக்கும் (G. 1837) பலநோக்கு நாணயச் சங்கத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பணம் மோசடி சம்பந்தமாக அதன் தலைவர் தலைமறைவாகி விட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(உ) மோசடி செய்யப்பட்ட ரூபாய் எவ்வளவு? எத்தனை உறுப்பினர்கள் மோசடி செய்யப்பட்டார்கள்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) இச் சங்கத்தின் தலைவர் சென்ற இடம் தெரியவில்லை. கையாடல் மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்காகவும், சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காகவும் அவ்வழக்கு போலீசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கையாடலில் சம்பந்தப்பட்டவர்களின் சொத்துக்களை நிபந்தனை ஜப்தி செய்வதற்கும், கையாடல் செய்த தொகையைத் திருப்பிப் பெறுவதற்காக வழக்கு (surcharge proceedings) தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) கையாடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 40,700 (நாற்பதாயிரத்து எழுநூறு ரூபாய் மட்டும்). இதனால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 55 (ஐம்பத்தைந்து).,

திரு. எஸ். ஜே. ராமசாமி: இச் சங்கத்தில் சம்பந்தப்பட்ட ஒரு நபர் அகப்படவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது அவர் வந்துவிட்டிருக்கிறார். அவரிடமிருந்து பணம் வசூல் செய்யப்பட்டதா? இந்தக் கேள்விக்குப் பதில் தயாரிக்கப்பட்டதற்குப் பிறகு மேற்கொண்டு தகவல் வந்திருந்தால், அதை அமைச்சர் அவர்கள் சொல்ல முற்படுவாரா?

கனம் சபாநாயகர்: 'லேடெஸ்ட் இன்ஃபர்மேஷன்' கனம் அங்கத்தினருக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட நபர் ஊரில் இருப்பதாகக் கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். அதைப் பற்றி கனம் அமைச்சர் ஏதாவது சொல்லவேண்டுமானால், சொல்லலாம்.

5th November 1966]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: அந்த நபர் ஊரிலேயே இருப்பாரானல், போலீசார் பிடித்திருப் பார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த நாற்பதாயிரத்து எழுநூறு ரூபாயை எடுத்துக்கொண்டு அதன் தலைவர் ஓடிவிட்டார் என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தொகையை அவர் ஒரே தேதியில் எடுத்துக்கொண்டு ஓடினரா? பல மாதங் களில், பல தேதிகளில் இந்தக் கையாடல் நடந்திருக்கிறதா? கனம் அங்கத்தினர் இராமசாமி குறிப்பிட்டதுபோல அவர் இப்போது ஊரில் இருந்தும் அதிகாரிகள் அவர் மீது நடவடிக்கை எடுக்காது இருப்பதற்குக் காரணம் அதிகாரிகளும் இந்தக் கையாடலுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: எந்த எந்தத் தேதிகளில் கையாடல் நடந்திருக்கிறது என்கிற விவரத்தைக் கொடுக்கிறேன். 7—1—1965 இல் ரூ. 3,200; 10—2—1965 இல் ரூ. 6,400; 17—2—1965 இல் ரூ. 4,000; 23—2—1965 இல் ரூ. 2,600; 14—3—1965 இல் ரூ. 12,000; 28—3—1965 இல் ரூ. 8,500; 9—4—1965 இல் ரூ. 4,000. ஆக மொத்தம் ரூ. 40,700.

திரு. ப. உ. சண்முகம்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இத்தனை மாதங்கள் வரையில் கூட்டுறவு சூப்ரவைசர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அவ்வப்போது பரிசிலனை செய்ய வேண்டிய அவர்களும் கூட இதைக் கண்டு பிடிக்காமல் விட்டு வைத்ததில் இருந்து ஒருவேளை அவர்களும் இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்தார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: அந்த பாங்கு சூப்ரவைசர்களும் பரிசிலனை செய்தார்கள். அவர்களுக்கு மேலே கூட்டுறவு ஜாயின்ட் ரிஜிஸ்திரார், ரிஜிஸ்திரார் ஆகியவர்கள் கண்காணிப்புச் செய்கிறார்கள்.

கனம் சபாநாயகர்: இப்போது இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: இப்போது இன்வெஸ்டிகேஷன் நடந்துகொண்டிருக்கிறது.

*** 456 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெரும்பாக்கம் கிராமத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவு சங்கம் சுமார் இரண்டு ஆண்டுகளாக இயங்காமலிருப்பதற்கு காரணம் என்ன?

[5th November 1966

(இ) மேற்படி சங்கம் மீண்டும் இயங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) பெரும்பாக்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஐந்து நெறியாளர்களில் மூவர் 23—12—1964 அன்று ஒரே சமயத்தில் பதவி விலகல் கடிதம் கொடுத்தனர். அதன்பின் அவர்கள் எந்தக் கூட்டத்திற்கும் வரவில்லை. கூட்டம் நடத்தப்படுவதற்கு எஞ்சிய இரண்டு நெறியாளர்கள் நிர்வாகச் சிற்றெண் (Quorum) தேவையைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் மூன்று நெறியாளர்களின் பதவி விலகலை ஏற்கவும் முடியவில்லை. இடைக்கால காலியிடங்களை நிரப்பவும் முடியவில்லை. இவ்வாறு சங்கத்தின் குழு செயலற்றுப்போய் சங்கம் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

(இ) சங்கத்தின் குழு கலைக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்க முது நிலை ஆய்வாளர் ஒருவர் இச்சங்கத்தின் அலுவல்களைச் சீர்ப்படுத்துவதற்கென தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அச்சங்கத்தைக் கலைப்பதற்குப் பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக சங்கத்தின் முன்னுள் தலைவர் ரிட் மனு ஒன்றை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். சங்கத்தைக் கலைப்பதற்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணை செயல் படுத்தப்படுவதை உயர் நீதி மன்றம் நிறுத்திவைத்துள்ளது. இந்த விஷயம் இப்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முறைப்படி 1964-ல் தேர்தல் நடந்தது. தேர்தல் செல்லாது என்று வழக்குப் போட்டார்கள். தேர்தல் அதிகாரி மறு தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். இப்படி 1964-ல் உத்தரவு போடப்பட்டு இருந்தும், 1966 வரைக்கும் தேர்தல் நடக்காததற்குக் காரணம் என்ன ?

கனம் சபாநாயகர் : அது தான் 'கோரம்' இல்லை என்று சொன்னர்களே.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தச் சங்கத்தின் ஐந்து நெறியாளர்களில் 3 பேர்கள் பதவி விலகல் கடிதம் கொடுத்துவிட்ட காரணத்தினுல் தேர்தலை நடத்த கோரம் இல்லாது போய் இருக்கிறது. ஹைக்கோர்ட்டிலும் ரிட் மனு இருக்கிறது. ரிட் மனு தள்ளுபடி ஆகவில்லை.

* 457 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகாவில் உள்ள தாலுகா கூட்டுறவு சொசைட்டியின் 1963-64, 1964-65-ம் வருடங்களுக்கான கணக்குகளைத் தணிக்கை செய்த ஆடிட்டர் அவர்களிடமிருந்து ஸ்பெஷல் ரிப்போர்ட்டு ஏதேனும் பெறப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) அரக்கோணம் தாலூகா கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1963-64-ம் ஆண்டில் செயல்பட்டது குறித்து வேலூரிலுள்ள மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரியிடமிருந்து பெறப் பட்ட தனி அறிக்கையின் மூலம் அச்சங்கத்தின் முன்னாள் செய லாளர் ஒருவர் பணம் கையாடல் செய்தார் என்றும் சங்கக் கணக்குகளில் பல குற்றங்குறைகள் இருந்தனவென்றும், மகசூல் கடன்களை வழங்குவதில் ஒழுங்கீனங்கள் இருந்தனவென்றும் தெரிந்தது. உடனடியாக அச் சங்கத்தின் கணக்குகள் பரிசிலனை செய்யப்பட்டு குற்றங்குறைகள் சரிப்படுத்தப்பட்டன. சங்கத்தின் முன்னாள் செயலாளர் கையாடிய ஐயாயிரத்து நூற்று எண்பத் திரண்டு ரூபாய் தொண்ணூற்றிரண்டு காசுகள் அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டு, அவர் வேலூர், கூட்டுறவு மத்திய பாங்கியின் பணியிலிருந்து நீக்கப்பட்டார். உரிய காலத்தில் கட்டப்படாத கடன்களை வசூலிக்கச் சங்கம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. 1964-65-ம் ஆண்டிற்குப் பெறப்பட்ட தனி அறிக்கையைப் பொறுத்தவரையில், அதில் கண்டுள்ள ஒழுங்கீனங்கள் குறித்து ஆய்வு நடத்துமாறு ராணிப்பேட்டை கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் கேட்கப்பட்டுள்ளார்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்தக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியின் முன்னாள் தலைவர் பணத்தைக் கையாடல் செய்த தாக ஒப்புக் கொண்டார். அவருக்கு கையாடல் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சர்வீசில் இருந்து ரிமூவ் செய்திருக்கிறோம். இதர நடவடிக்கை களும் எடுக்கப்பட்டு வருகின்றன.

கனம் சபாநாயகர்: அவர் மீது பிராசிக்யூஷன் போடவில்லையா என்று கேட்கிறார்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: முதலில் டிபார்ட்மெண்டிலேயே விசாரணை நடத்துகிறார்கள். அவர்களுக் குப் போதுமான துப்பு துலங்கவில்லை என்றால் போலீசிடம் ஒப்படைக்கிறார்கள். ஆனால் இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரையில் போலீசில் கொடுக்கவில்லை. டிபார்ட்மெண்டே நடத்தும் விசாரணை முடியும் தருவாயில் இருக்கிறது.

* 458 கேள்வி.—**திரு. பி. முருகையன்:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலூகா, செட்டிக்குறிச்சி, எரியூர் ஆகிய ஊர்களில் உள்ள கூட்டுறவு நாணய சங்கங்களில் கையாடல் செய்யப்பட்டதாக அண்மையில் விசாரணை கள் ஏதேனும் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) செட்டிக்குறிச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகளைக் கூட்டுறவுத் துறை விசாரணை செய்ததில் கையாடல் நடந்திருப்பது தெரியவந்தது. இது குறித்துப் போலீஸ் புலன் விசாரணை நடந்து வருகின்றது.

எரியூர் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் கையாடல் செய்தவர்கள் மீது வழக்குத்தொடுத்து, கையாடப்பட்ட தொகையை அவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்க உதவிப் பதிவாளர் அறிக்கையை போலீசில் கொடுத்தும், நடவடிக்கை எடுக்கக் கேட்டும், அதில் இதுவரை நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதுபோன்ற நடவடிக்கை எடுப்பதற்குத் தாமதம் ஏன் ஏற்படுகிறது, இதைத் தவிர்ப்பது எப்படி என்பதைப் பற்றித்தான் அதிகாரிகளை வைத்துக்கொண்டு, ஐ.ஜி. யையும் அழைத்துப் பேச இருக்கிறேன். இரண்டு நாளில் இதுபற்றிப் பேச்சு நடைபெறும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மேற்படி சொசைட்டியின் தலைவர் ஏற்கனவே ஒரு மோசடி வழக்கில் ஓர் ஆண்டுக் காலம் தண்டனை பெற்றவர். அவர் மீது இப்போது வழக்குத் தொடர போலீஸ் வசம் 6 மாதங்களுக்கு முன்பே கேஸ் கொடுக்கப்பட்டும் இதுவரை போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் யாருடைய இன்ஃப்ளுவன்ஸ் காரணமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதில் யாருடைய இன்ஃப்ளுவன்சும் இல்லை. இதுபோன்ற தாமதத்தைத் தவிர்க்கத்தான் அதிகாரிகளைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு பேச இருக்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : குற்றச்சாட்டைக் கண்டு பிடித்த அதிகாரி அங்கிருந்து உடனேயே மாற்றப்பட்டிருக்கிறார் அல்லவா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மூலக் கேள்வியில் இரண்டு ஊர்கள் இருக்கின்றன. எந்த ஊரைப் பற்றி கனம் அங்கத்தினர் கேட்கிறார்?

திரு. எஸ். முருகையன் : நான் எரியூரைப் பற்றிக் கேட்கிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

5th November 1966]

சிறையில் கைதி சாவு

* 459 கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.

(அ) 1965-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் திருச்சி மத்திய சிறையில் கைதி யாரேனும் அடிபட்டு இறந்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஆம்.

(இ) 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதியன்று காலையில் அறைக்கதவு திறந்துவிடப்பட்டபின் வெளி வந்த ஆண்டிசாம்பன் என்ற கைதி ஆதிமூலம் என்பவரிடம் முறைதவறி நடந்துக்கொண்ட சில கைதிகளைக் கண்டித்தார். காலைக் கஞ்சி வழங்கப்படும்போது ஆண்டியினால் கண்டிக்கப்பட்ட கைதிகள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் வகையில் அவரைத் தங்கள் கைகளால் நையப்புடைத்தனர். அடிபட்டதன் காரணமாய் அக்கைதி கீழே விழுந்தார். சிறைச்சாலை மருத்துவ மனைக்கு ஆண்டி எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் உயிர் இழந்தார்.

திரு. செ. மாதவன்: கைதிகளைக் காலையில் திறந்துவிட்ட போது ஒழுங்காகச் சொல்லவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். கையினால் அடித்ததனாலே அவருடைய உயிர் போய் இருக்கக் கூடுமா? இதுபற்றி மருத்துவ அதிகாரிகள் பரிசீலனை செய்தார்களா? என்ன புலன் கண்டு பிடிக்கப்பட்டது?

கனம் திரு. கோ. பூவராகன்: கஞ்சிக்கு வெளியில் விடப்பட்டார்கள். எல்லோரும் அமர்ந்து சாப்பிட்டார்கள். ஒருவரோடு ஒருவர் பேசுகையில் சட்டினி கேட்டார்கள். தகராறு முற்றி 6 பேர்களாகச் சேர்ந்து அடித்த காரணத்தினால் அவரது லங்ஸ் கிழிந்து இறந்திருப்பதாக டாக்டர்கள் பரிசோதனையின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

மீனவர் துயர்

* 460 கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ்: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு தொழிலின்மையால் ஏற்பட்ட பஞ்சத்திற்கு நிவாரணமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

(இ) மீனவர்கள் மத்தியில் அடிக்கடி பஞ்சம் ஏற்படுவதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவன்கோடு தாலூகாக்களைச் சேர்ந்த ஒரு சில கிராமங்களில் 1965 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பலத்த காற்றுடன் விட்டு விட்டு மழை பெய்துகொண்டிருந்ததால் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்ல இயலவில்லை. இந்த மாதங்களுக்கு முந்திய மீன்பிடி பருவத்தின் போதும் மிகச் சொற்ப அளவில்தான் மீன்

பிடிக்கப்பட்டது. எனவே, அக்கிராமங்களில் பற்றுக்குறை நிலைமை 27-12-1965 முதல் 9-1-1966 வரையில் இரண்டு வார கால அளவுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் வாரம் ஒன்றுக்கு இரண்டு படி அரிசியும் ஐம்பது காசு மதிப்புக்கு மரவள்ளிக் கிழங்கும் இலவசமாக வழங்கப்பட்டன.

(இ) மீனவர்கள் அதிக அளவில் மீன்பிடிப்பது வசதியாக இருக்கும் விசைப்படகுகளும் மீன்பிடி வலைகளுக்கான நைலான் நாலும் தொகுதியாகவுள்ள மீனவர்களுக்கு உதவித்தொகை நலனைக் கொள்முதல் (subsidised hire purchase) அடிப் படையில் வழங்கப்படுகின்றன. வலைகளைப் பின்னுவதற்காக மீனவர்களுக்குக் குறைந்த விலையில் பருத்தி நூலும் வழங்கப் படுகின்றது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு குறுகிய கால, நடுத்தரக்காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன. இவைதவிர புயல் சேதம், வெள்ளம், மீன் கிடைக்காமலிருத்தல் போன்ற இடர்கள் ஏற்படும் காலங்களில் மீனவர்களின் துயரத்தை உடனே தணிப்பதற்காக "மீனவர் துயர் தணிப்பு நிதி" என்கிற ஒரு நிதியை அரசாங்கம் அமைத்துள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த ஆண்டு ஏப்ரல் 30-ஆம்
10-00 a.m. தேதி அடித்த புயலினல் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எல்லாம் அரசாங்கத்திலிருந்து ஓரளவுக்கு நன்மைகள் அளித்தார்கள், உபகாரம் செய்தார்கள், கடன் அளித்தார்கள். கடந்த இரண்டு மூன்று நாட்களாக அடித்த புயலினல் குறிப்பாக எனது பகுதியிலே உள்ளவர்கள் எல்லாம் குடும்பத்தோடு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆகவே, அங்கேயெல்லாம் நிவாரணம் அளிக்க உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன்: எப்பொழுதும் போல் உடனடி யாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் களுக்கு நிவாரணமும் அளிக்கப்படுகிறது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) Damage caused by breach in Vidur Reservoir.

* திரு. ஆ. தங்கவேலு: கனம் சட்ட மன்றத் தலைவரவர்களே, 3-11-1966-ல் ஏற்பட்ட கோடூரப் புயல், கடுமையான மழையின் காரணமாக திண்டிவனம் வட்டத்திலுள்ள வீடூர் நீர்த்தேக்கம் உடைந்து பெருத்த சேதம் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பயங்கர நிலையைப்பற்றி விவாதிக்க மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்பதற் காக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக் கிறேன்.

5th November 1966] [திரு. ஆ. தங்கவேலு]

தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் ஏற்பட்ட கொடூரமான புயலின் காரணமாக திண்டிவனம் வட்டத்திலே பெருத்த சேதம் ஏற்பட்டிருப்பதோடு, விடூர் நீர்த்தேக்கம் உடைந்து மிகுந்த சேதம் ஏற்பட்டு அங்குள்ள விவசாயிகள், பொது மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவும், நிவாரணம் உடனடியாக அளிக்கவும் இந்த விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புயலினால் ஏற்பட்ட சேதங்கள், சென்னை நகரத்தில் மட்டுமல்ல, வேறு மாவட்டங்களிலும் இருக்கின்றன; தென் ஆற்காடு மாவட்டத்திலும் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதிகாரிகள் இதிலே வேண்டிய கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். எத்தகைய நிவாரணம் அளிப்பதென்று நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிய விரிவான அறிக்கை—எந்த, எந்த இடங்களிலே எத்தகைய நிவாரணங்கள் அளிக்கப்படுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் —7, 8 தேதியில் சமர்ப்பிக்கப்படும் என்று நேற்றே சொன்னேன். ஆகவே இப்பொழுது அதைப்பற்றி விவாதித்துப் பயன் இல்லை. மேலும் இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: A statement will be made within two days. So, consent is withheld.

(2) ESTABLISHMENT OF A STEEL PLANT AT SALEM

SRI M. KALYANASUNDARAM: Sir, I have given notice of two adjournment motions.

MR. SPEAKER: I do not think the hon. Member will press the adjournment motion regarding the Neyveli–Salem Steel Plant. A number of questions have been put on the subject during question hour to-day and the Ministers have answered them.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கேள்விகளிலிருந்து தகவல்கள் தான் கிடைத்தது. அந்தத் தகவல்களின் மேல் விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் வேண்டும் . . .

MR. SPEAKER: Already the adjournment motion on the same matter given notice of by Sri S. Madhavan came up before the House two days ago.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இன்றைக்கு நிலைமை வேறு. . .

MR. SPEAKER: That is why I allowed fifteen minutes for the question.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திரு. மாதவன் அவர்கள் கொடுத்த நிலைமையிலிருந்து இப்பொழுது புதிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. உருக்காலை போன்ற தொழில்வளத் திட்டங்களிலே அரசியலைப் பயன்படுத்தக்கூடாது என்பதுதான் நியாயம்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th November 1966

ஆனால் இப்பொழுது உருக்காலைத் திட்டத்திலே அரசியல் புகுத்தப்பட்டிருக்கின்றது. இப்பொழுது நான்காவது திட்டத்திலே உருக்காலை வருமா, நிதி நிலைமை அதற்கு இருக்குமா என்ற சந்தேகத்தில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாகாணத்தில் கிளர்ச்சி செய்ததால் அங்கே கொடுத்துவிடுவதால் சேலத்தில் வரும் என்ற நம்பிக்கையும் போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டு, வேறு மாகாணத்திலே நடைபெறுகின்ற கிளர்ச்சிகளைப் பார்த்து தமிழ்நாட்டிலும் தவறான பிரதிபலிப்புக்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்ற வகையிலேதான் நான் இதை அவசரமாக விவாதிக்க வேண்டுமென்று கூறுகிறேன். திரு. மாதவன் அவர்கள் கொடுத்தது வேறு. இப்பொழுது சேலம் உருக்காலை சம்பந்தமாக மத்திய சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய பதில் சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைப்பதற்குச் சாத்தியமில்லை என்கிற முறையிலே பதில் இருக்கக்கூடிய காரணத்தினாலும் தொழில் அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், சேலம் உருக்காலை சம்பந்தமாக நிபுணர்கள் வந்து ஆலோசித்துப் பார்த்து நிலைமை சாதகமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதாலும் இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக நான் இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** கனம் சபாநாயகர் அவர்களே, கேள்வி நேரத்திலே நிலைமையை நானும் தொழில் அமைச்சர் அவர்களும் விளக்கியிருக்கிறோம். இதிலே மறுக்கப்பட்டிருப்பதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நிதி நிலைமையையொட்டி எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றுதான் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில் இது மறுக்கப்படவில்லை என்றுதான் சொல்வேன். குடிநீர் திட்டம் என்ன என்று நிதி நிலைமையைப் பார்த்துச் செய்யலாம் என்றுதான் சொல்வேன். அதற்காக நான் மறுக்கிறேன் என்று சொல்வதற்கில்லை. குடிநீர் திட்டத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்வதற்கில்லை. பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஒருமுறை பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருந்தது. நான் நேராகவே பிரதம மந்திரி அவர்களை அதைப்பற்றிக் கேட்டேன். அப்படி வந்தது தவறு, இதுமாதிரித்தான் இருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே, பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு அதற்கு ஒரு அர்த்தம் வைத்துக்கொண்டு அதையொட்டி ஒத்திவைப்புப் பிரேரணை என்றால் அது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியது அல்ல என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: This is not a matter for an adjournment motion. So, I withhold my consent.

5th November 1966]

(3) SCARCITY OF RICE.

SRI M. KALYANASUNDARAM : Sir, I have given notice of the following adjournment motion—

"That the business of the House be adjourned to discuss the following urgent matter of public importance, viz., the scarcity, poor quality and high prices of rice in the State, particularly in rural areas subjecting the working people to serious hardship."

சென்னை மாதிரி ஸ்டாச்சுடரி ரேஷனிங் இருக்கக்கூடிய இடங்களிலே அரிசி மட்டமாக இருக்கிறது. பிளாக் மார்க்கெட்டில் மூன்று ரூபாய் கொடுத்தால் நல்ல அரிசி கிடைக்கிறது. திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களிலே 3½ ரூபாய், 4 ரூபாய் என்று விலை உயர்ந்துகொண்டே போகிறது என்று தகவல் வந்திருக்கிறது. அரசாங்கம் கொடுக்கக்கூடிய அரிசி மட்டமான அரிசி. ஏன் மட்டமான அரிசியைக் கொடுக்கவேண்டும்? அதற்குக் காரணம் என்ன? நல்ல அரிசி கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? உணவுப் பிரச்னை சிக்கலாகிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜனங்களிடத்திலே கிளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. வடக்கே சில மாநிலங்களிலே ஏற்படுகின்ற மாதிரி இங்கேயும் ஏற்பட்டுவிடக்கூடாது. அது அந்த அளவுக்கு முற்றுவதற்கு முன்னால் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மக்கள் நல்லவர்கள்; அவர்கள் பொறுமையுடன் இருக்கிறார்கள். நிலைமை முற்றுவதற்கு முன்னாலேயே இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுவது பொதுவான குறைபாடுதான். அரிசி நன்றாக இல்லை, விலை அதிகமாக இருக்கிறது என்றால் அதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லை; விவரங்கள் சொல்லலாம். ஆனால் சென்னைக்கு இந்த மாநிலத்திலிருந்துதான் அரிசி வருகிறது. பச்சரிசி விரும்புகிறவர்கள்தான் பச்சரிசி கிடைக்காத காரணத்தாலே அரிசி நன்றாக இல்லை என்று சொல்கிறார்கள். கூடிய வரையில் நல்ல அரிசி அளிக்கத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது. விலையைக் கட்டுப்படுத்துவதற்குத்தான் நாமே கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. கேள்வி நேரத்திலே கொள்முதல் அதிகமாகச் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். விற்கக் கூடிய நோக்கிலே தான் அதை அரசாங்கம் கொள்முதல் செய்துகொண்டிருக்கிறது.

குறுவை கொள்முதலிலே குவிண்டாலுக்கு 3 ரூபாய் கொடுக்கும் போது கூட, விற்கக் கூடிய விலையை ஏற்றவில்லை. அதனால் அரசாங்கத்திற்கு 50 லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவாகும். இந்த முறையில் இப்பொழுது நிலைமை சீர்ப்பட்டுக் கொண்டு வருகிறது.

[திரு. எம். பக்தவதசலம்] [5th November 1966

ஒரு மாத காலத்திற்கு முன்பாக மேட்டூரில் தண்ணீர் குறைவாக இருந்த நிலேக்கு இப்போது சீர்ப்பட்டுக் கொண்டு வருகிறது எப்படியும் இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. So, consent is withheld.

III.—ANNOUNCEMENTS.

(1) POSTPONEMENT OF CALLING ATTENTION NOTICE.

MR. SPEAKER : Regarding the Call Attention Notice given by the hon. Member, Sri Rama. Arangannal, the Hon. Minister for Food. . . .

SRI M. KALYANASUNDARAM : Sir, I have given notice of a privilege matter.

MR. SPEAKER : That will be taken up on Monday the 7th instant.

Now the Hon. Minister for Food requests that this matter may be taken up on the 7th or 8th instant. It is therefore postponed.

IV.—CALLING ATTENTION TO RECOGNITION OF ONLY CERTAIN LANGUAGES AS MEDIA FOR U.P.S.C. EXAMINATIONS.

* திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, குஜராத்தி, மராத்தி, இந்தி, வங்காளம் ஆகிய மொழிகள் மட்டுமே அரசாங்கத் தேர்வுகள் எழுதுவதற்கேற்பத் தகுதி பெற்று வளர்ச்சியடைந்துள்ளன என்றும், தமிழ் போன்ற பிற மொழிகள் அதற்கென அந்த அளவு வளர்ச்சியடையவில்லை என்றும், மத்திய அரசு அலுவலர் தேர்வுக் கழகம் எடுத்துள்ள முடிவு, அக்கழகம் நடத்தும் தேர்வுகளைத் தங்கள் தாய்மொழியில் எழுதமுடியாத நிலைக்குத் தமிழ் மாணவர்களுக்குத் தீங்கிழைத்துள்ளதும், பல்கலைக் கழக நிலையிலும், மற்ற உயர் கல்வி மட்டங்களிலும் போதுமான அளவுக்கு முன்னரே தமிழைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியதனுலேயே இந்த நிலை எழுந்துள்ளதென்பதும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலைப் பத்திரிகையில் கூட, கனம் அங்கத்தினர்கள் படித்திருக்கலாம். மத்திய பார்லிமெண்டில் ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்போது, இந்த விஷயம் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரிசீலனையில் இருக்கிறது, எப்படிச் செய்வது என்ற சிபாரிசு இன்னும் வரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இதிலே, முடிவாகிவிட்டது என்று பத்திரிகையிலே வந்ததை வைத்துக்கொண்டு எடுத்துக்கொள்ள வேண்டாம். கீழ்க்கண்ட விவரங்களை நான் இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

5th November 1966] [Sri M. Bhaktavatsalam]

The Committee of Parliament on Official Language constituted by the President of India under Article 344 (4) of the Constitution recommended that English might continue to be the medium of examinations conducted by the Union Public Service Commission for recruitment to All India Services and Higher Central Services and that Hindi might be admitted as alternative medium after some time, both Hindi and English being available thereafter, as media at the option of the candidate for as long as necessary. The Government of Madras while offering remarks on the subject, opined that it was necessary that every regional language should be admitted as one of the alternative media for the combined All India Examinations, as soon as that language had been brought into use as medium of instruction in Colleges upto Graduate standard, that the resulting problem of 'moderation' should be accepted as a necessary feature of arrangement for recruitment to these important services and that the problem should be solved as satisfactorily as possible, by the Union Public Service Commission. During the Chief Ministers' Conference held at Delhi on the 23rd and 24th February 1965, the Chief Ministers emphasised the importance of ensuring equality of opportunity as enjoined by the Constitution as between people belonging to different parts of the country. It was urged at the conference that consideration should be given to the introduction of the regional languages as media for the Union Public Service Commission Examinations. The question is under the consideration of the Government of India in consultation with the Union Public Service Commission. No official communication has so far been received from the Government of India regarding the recommendations of the Union Public Service Commission.

The Government are taking suitable measures gradually from 1960–61 for replacement of English with Tamil as the medium of instruction in Colleges in this State. The Bureau of Tamil Publications set up by the Government has been bringing out books in Tamil suitable for the Degree and P.U. Courses. Till 1965–66 Tamil medium was tried as an experimental measure in the degree courses in a few subjects in the Government Arts College, Coimbatore and Kumbakonam. Tamil medium in P.U.C. was not tried as the question of re-organisation of Higher Secondary Course was not finalised. Further the P.U.C. provided for the study of both Science and Humanities under Part III and provision of necessary text books for the study of Science subjects in Tamil medium was not found possible. During 1966–67, the Director of Higher Education reported that the P.U.C. had been reorganised so as to have separate science and humanities subjects and that it would be possible to introduce Tamil medium for humanities in the P.U.C. and the adoption of the Tamil medium would not affect the interests of students in the matter of higher education

[Sri M. Bhaktavatsalam] [5th November 1966

or employment. After examining the recommendations, the Government have issued the following orders for introduction of Tamil medium in P.U.C. in one section in Humanities in all the Government Arts Colleges in this State with effect from 1966–67 :—

(*a*) In those Government Colleges which have two or more Humanities Sections in the Pre-University Course, Tamil medium should be introduced in at least one section. In other sections English will continue to be medium of instruction unless the demand for admission to the English medium sections is so limited that it is found unnecessary to continue all those sections.

(*b*) In those Government Colleges where there is only one Humanities section in the P.U.C., Tamil medium shall be introduced in that section from 1966–67. An additional Humanities section may be started in those Colleges for English medium provided that an adequate number of students are available for joining the English medium section, subject to the concurrence of the University. Otherwise, there shall be only one section in Humanities in the P.U.C. which shall be conducted in Tamil medium.

It will thus be noticed that all possible steps have been taken by this State Government for progressively introducing Tamil as the medium of instruction at the University level and that there is no failure as alleged. In the nature of things, the question has several implications and needs to be handled with care and patience. This Government would take appropriate action as and when the Government of India consult us regarding the holding of Union Public Service Commission Examinations in the regional languages.

III. ANNOUNCEMENT—*cont.*

(2) THE MADRAS ANCIENT AND HISTORICAL MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966.

V. POINTS OF ORDER.

(1) NOTICE FOR CONSIDERATION OF A BILL.

* திரு. து. ப. அழகமுத்து : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். நம்முடைய சபையின் 88-வது விதியின்படி ஒரு மசோதா இந்தச் சபையில் அறிமுகப் படுத்தப்பட வேண்டுமென்றால் ஐந்து நாட்களுக்கு முன்னால் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி அறிமுகப்படுத்தியதை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் 95-வது விதியின்படி ஐந்து நாட்கள் அவகாசம் வேண்டும். உங்களுடைய அனுமதியின் பேரில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றாலும், 3-ம் தேதிதான்

5th November 1966] [திரு. து. ப. அழகமுத்து]

தொல்பொருள் பாதுகாப்பு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. நேற்றுத்தான் பில் காப்பிகள் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதிலே 40 கிளாஸ்கள் இருக்கின்றன. அதை இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது உறுப்பினர்களுக்குச் சவுகரியமாக இருக்காது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன என்று சபாநாயகர் அவர்களே வருத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மசோதாவை இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் 3-ம் தேதி அல்லது 9-ம் தேதி எடுத்துக் கொண்டால் உறுப்பினர்களுக்குச் சௌகரியமாக இருக்கும்.

MR. SPEAKER: This is not a point of order. But if the hon. Member feels that there is any inconvenience, I have no objection to postpone the consideration of this Bill to some other day. Now, what does the Hon. Chief Minister say in respect of this matter?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த மத்திய சட்டம் ஒன்று இருக்கிறது—பழைமையான சின்னங்கள், மான்யுமென்ட்ஸ் ஆகியவற்றை பாதுகாக்கும் சட்டம். அந்தச் சட்டம் அப்படியே இங்கே கொண்டு வரப்படுகிறது. மாநிலத்திலே தனியான சட்டம் இல்லாத காரணத்தால், பழைய மான்யுமென்ட்ஸைப் பாதுகாப்பது பலன் தரக்கூடியது என்ற வகையில் இந்த மசோதா வந்திருக்கிறது. இதிலே அபிப்பிராய பேதங்கள் உள்ள விஷயங்கள் இல்லை.

விதிப்படி இவ்வளவு நாட்கள் அவகாசம் வேண்டுமென்று இருந்தாலும், தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. தாங்கள் இதைக் கவனித்துத்தான் இந்த மசோதாவை இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு அனுமதித்திருக்கிறீர்கள். இந்த மசோதாவை தள்ளிப்போடுவது நல்லதல்ல என்றுதான் நான் சொல்கிறேன். சில மான்யுமென்ட்ஸ் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. இப்போதுள்ள மத்திய அரசாங்கச் சட்டம் போதாது. நீண்ட காலமாக அந்தச் சட்டம் அமலில் இருக்கிறது. பல நல்ல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதை யொட்டித்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. ஆகவே, இதை இப்போது எடுத்துக் கொள்வதை ஆட்சேபிக்க வேண்டாமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த மசோதா, சட்ட திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி போதுமான அளவு அவகாசத்தில் வைக்கப்படவில்லை என்பதை உணரத்தான் வேண்டியிருக்கிறது. இதற்கு முன்னாலும் கூட பல மசோதாக்கள் வரும் போது, அவை காலத் தாழ்வோடு வருகிறபோது சட்டதிட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடியுள்ள காலத்திற்கு முன்னால் தரவேண்டுமென்று தாங்கள் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போதும் போதுமான அவகாசம் இல்லை என்று உணருவதில் தவறு இல்லை. இருந்தாலும் கூட வேறு வழியில்லை என்ற நிலைமையிலே 7, 8 தேதிகளில் நாம் வேறு பல பிரச்னைகளை ஆராய

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th November 1966

வேண்டியிருப்பதால், போதுமான அளவு அவகாசம் இல்லாமல் காலத்தாழ்வோடு இது கொண்டுவரப்பட்டிருப்பது வருந்தத் தக்கதுதான் என்றாலும் வேறு வழி இல்லை என்ற அடிப்படையில் இன்றே இதை எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்து இதை எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக் கொண்டதால் எனக்கு ஒரு சங்கடம் ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தின் நோக்கத்தையோ, அவசியத்தையோ யாரும் ஆட்சேபிக்கவில்லை. நானும் வரவேற்கிறேன். ஆனால் அங்கத்தினர்களுக்குப் போதுமான அவகாசம் கொடுத்தால் படித்துப் பல யோசனைகள்வரும்போது சட்டம் இன்னும் சிறப்பாக இருக்க முடியும் என்பது என் கருத்து. ஆகவே, இன்று பொது விவாதத்தை வைத்துக் கொண்டு பிறகு செலெக்ட் கமிட்டி ஒன்று அமைத்து நாளை ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதால் ஒரு நான்கு மணி நேரம் உட்கார்ந்து பரிசீலனை செய்துவிட்டு செவ்வாய் கிழமை அல்லது புதன் கிழமை அன்று பிரிவு பிரிவாக பரிசீலனை செய்து முடிவு எடுக்கலாம் என்ற என் யோசனையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The rule requires two days' notice. The Bill was given yesterday morning and we are taking it to-day. If the Members insist that the rule should be followed, we can take it up on Monday.

VI. GOVERNMENT BILL.

THE MADRAS ANCIENT AND HISTORICAL MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS BILL, 1966 (L.A. BILL NO. 18 OF 1966).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966[a] (L.A. Bill No. 18 of 1966) be taken into consideration."

Under entry 12 of List II of the Seventh Schedule to the Constitution, Ancient and Historical Monuments other than those declared by or under law made by Parliament to be of national importance are the concern of the State Government. Under entry 40 in List III of the Seventh Schedule of the Constitution, Archaeological Sites and Remains other than those declared by or under law by Parliament to be of National importance are in the concurrent field. The Government of India are precluded from exercising any control over Ancient and Historical Monuments other than those of national importance. In the absence of any legislation by the State Government to regulate the matter, monuments belonging to this category would suffer. With a view to get

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd November 1966.

5th November 1966] [Sri M. Bhaktavatsalam]

over this lacuna, the Government of India have been urging this Government for some time to undertake legislation for the protection of monuments other than those declared to be of national importance.

When the list of ancient monuments selected for conservation in the then Madras Presidency was revised and published in 1917, it consisted of over 370 monuments. Subsequently when the Government of India took over the maintenance of the protected monuments in this State, nearly 200 monuments were excluded from the list, even though they were till then protected and maintained at the Government expense. The revised list of protected ancient monuments published by the Government of India in 1928 contained only 341 monuments of the then Madras Presidency. There has been no major alterations in the list except those that were necessary consequent on the partition of the State. The monuments thus left out of the Central List have been left without proper care for some years now. There are also a number of monuments in this State which were not covered by the past surveys and which may require inclusion in the list of protected monuments.

The monuments in the Madras State consist mostly of temples, churches, mosques and other buildings and remains of historical, archaeological or artistic interest including places which are monuments or memorials commemorative of local history, like the place of birth of poet Kambar, the place where Katta Bomman attained martyrdom. Madras State has a very large number of ancient temples and institutions which are in reasonable state of preservation and has in its area the largest number of inscriptions of historical value, compared to any other State. These inscriptions which throw considerable light on past history, culture, social and economic conditions of the people deserve protection. A nucleus of an Archaeological Department to survey and list out all such monuments and assess their needs of conservation and maintenance and to supervise the work implemented so far has been set up in this State. A Special Officer has been placed in charge of the Department. He has taken all necessary preliminary steps to take over and preserve these monuments.

The proposed legislation has been drafted mainly on the lines of the Ancient Monuments Preservation Act, 1904 (Central Act VII of 1904). The concurrence of the Government of India has been obtained to the introduction of the Bill in the State Legislature.

I shall now briefly indicate the salient features of the Bill.

The Government may declare any ancient monument or archaeological site or remains to be protected monument or a protected area if in their opinion such monument or site or remains require protection under the Act. Provision has been made for the acquisition of rights in a protected monument which is not owned

by Government. Provision has also been made for the preservation of protected monuments by the owners of such monuments. In the event of such an owner failing or refusing to enter into an agreement, the Government may make an order providing for such preservation and such order shall be binding on the owner. Provision has also been made for acquisition of a protected monument if, in the opinion of the Government, it is in danger of being destroyed, injured or allowed to fall into decay. Such monument or protected area will be acquired under the provision of the Land Acquisition Act, 1894, as if the maintenance of the protected monument or protected area is a public purpose. Care has been taken to ensure that a protected monument, which is a place of worship or shrine shall not be used for any purpose inconsistent with its character. The public shall however have a right of access to any protected monument.

The Bill also provides for regulation of excavations and for the compulsory acquisition of antiquities of historical or archaeological importance discovered during such excavation. Provision has been for the control of movement of antiquities from place to place.

This is a non-controversial Bill and is a necessary one. I request the House that the Bill be taken into consideration.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

"That the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966 (L.A. Bill No. 18 of 1966) be referred to a Select Committee of the House consisting of Members".

Sir, the list of Members will be given later.

V. POINTS OF ORDER—*cont.*

(2) ABSENCE OF NATIONAL FLAG IN FORT ST. GEORGE FLAG MAST.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். தொல்பொருள் ஆராய்ச்சிக்கான சின்னங்களைப் பாதுகாப்பது பற்றிய மசோதா வந்திருக்கிறது. ஆனால் நம் கோட்டை கொடி மரத்தில் நம் சுதந்திரச் சின்னமாகிய கொடி இன்று காலையிலிருந்து பறக்கவில்லை. இதையே பாதுகாக்காமல் இருக்கிறோம். என்ன துக்ககரமான சம்பவம் ஏற்பட்டது? அதன் கீழ்தான் நம் சட்டமன்றமும், ஆட்சிமன்றமும் செயல்படுகின்றன. அரைக் கம்பத்தில் பறந்தால் ஒரு அர்த்தம். கொடியே இல்லாவிட்டால்—இது பெரிய அபசகுனமாக இருப்பதால், இதைப் பாதுகாக்க இந்த அரசாங்கம் தவறியது ஏன்? மழையோ அல்லது மற்ற காரணங்களோ சொல்வதில் பொருத்தம் இல்லை. உடனடியாக நம் தேசிய சின்னத்தை ஏற்றுவது குறித்து, என்ன சமாதானம் **சொல்லப் போகிறீர்கள்?**

5th November 1966]

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் இதில் அக்கறை எடுத்துக்கொண்டதற்காக—இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம்—இருந்தாலும் கொடி விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அகஸ்மாத்தாக விபத்து ஏற்பட்டிருக்கிறது, புயல் காரணமாக இது ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் மேலும் கொடி மரத்தில் கொடி தவறுதலாக பறக்கவிடக்கூடாது, அவ்விதமான தவறு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ராணுவ அதிகாரிகள்தான் இதைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். இதில் இந்த அரசாங்கத்திற்கு பொறுப் பில்லை என்றாலும் இதில் போதிய கவனம் அரசாங்கத்தால் செலுத் தப்பட்டு வருகிறது. மேலும் இதில் தவறு எதுவும் இல்லாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சம்பந்தப் பட்டவர்கள் இதற்கு வேண்டியதைச் செய்வார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 10-30 a.m.

MR. SPEAKER : How can it be a point of order?

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டசபை நடைபெறும்போது கொடி மரத்தில் கொடியில்லாது இருப்பது தவறு. . .

கனம் சபாநாயகர் : செக்ரட்டேரியேட்டில் தினசரி கொடி யிருக்கும், அதற்கும் சட்டசபை நடவடிக்கைக்கும் என்ன சம்பந்தம்?

SRI K. A. MATHIALAGAN : Legislature is part of our Secretariat.

கனம் சபாநாயகர் : அசெம்பிளி கட்டடத்தில் கொடியிருக் கிறதா இல்லையா? . . .

திரு. மு. கருணாநிதி : அசெம்பிளி கட்டடத்திலும் கொடி பறக்கவில்லை.

MR. SPEAKER : Even then, it is not a point of order.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால், சபையின் விதிமுறைகளுக்கு மீறி ஏதாவது நடந்திருந்தால் அதை எடுத்துக்காட்டுவது. இங்கு எந்தவித தவறும் ஏற்பட்டுவிடவில்லை. ஆகவே இது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. கொடியில்லை, ஆகவே கொடி பறக்கவேண்டும் என்று வேண்டுமென்றால் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : எக்ஸிக்யூடீவ் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறது, சட்டசபை என்பது மிகவும் முக்கியம் . . .

கனம் சபாநாயகர் : அதையெல்லாம் யாரும் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டராகும் என்பது தான் . . .

[கனம் சபாநாயகர்] [5th November 1966

It will never come under a point of order. The hon. Member can raise the matter if he wants in the following manner :—

"I would like to bring the following important matter to the notice of the House. . ."

SRI K. A. MATHIALAGAN : Sir, I will remodel it in that way.

MR. SPEAKER : There is no point of order.

VI. GOVERNMENT BILLS—*cont.*

THE MADRAS ANCIENT AND HISTORICAL MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS BILL, 1966 (L.A. BILL NO. 18 OF 1966)—*cont.*

MR. SPEAKER : Now the motion and the amendment are before the House for discussion. Hon. Member, Sri Saw. Ganesan will speak.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் கனம் முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற பழம் பொருள் வரலாற்றுச்சின்னங்களின் மீது மாநில சர்க்கார் பொறுப் பேற்றுக் கொண்டு பாதுகாப்பதற்கு வேண்டிய அதிகாரங்களை கொடுக்கிற இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற் கிறேன். பல ஆண்டுகளாக இதை நாம் எதிர்பார்த்துக்கொண் டிருந்தோம். குறிப்பாக இரண்டு மூன்று ஆண்டுகளாக இத்துறை யைப்பற்றி, இதன் தேவையைப்பற்றி அதிகமாக நான் வற்புறுத்திக் கொண்டு வந்தேன். இவ்வளவு காலம் தாழ்ந்தாவது இந்த மசோதா இன்று வந்ததே என்று நான் மிகவும் மன மகிழ்வும், நிறைவும் கொள்கின்றேன். அந்த மகிழ்ச்சியுடன் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இன்றி எல்லோரும் இதில் கலந்து கொள் வார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை என்பதையும் கூறிக்கொள் கிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்த மசோதா சம்பந்தப்பட்டவரையில் யாருக்கும் எந்தவிதமான வெறுப்பும் அல்லது விருப்பின்மையும் கூட இருக்க மாட்டாது என்பதில் எனக்கு துளியும் ஐயமில்லை. இப்போதாவது இந்த மசோதா வந்ததே என்ற மகிழ்ச்சியின் காரணமாக கனம் முதல மைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். பின்னர் நான் மதிப்பிற் குரிய சகோதர கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இன்னும் காலம் தாழ்த்தப்படுகின்ற வகையில் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலனை செய்து பின்னல் சபைக்கு வரவேண்டும் என்று அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தம் அல்லது விருப்பம் அதை வற்புறுத்தாமல் விட்டுவிட வேண்டும் என்று. அதன் பிறகு இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு முன்னே, இந்த மசோதா ஏன் இவ்வளவு இன்றியமை யாததாக பலராலும் கருதப்படுகிறது? இப்போது அரசாங்கம் அவ்வாறு கருதி ஏன் கொண்டு வந்திருக்கிறது? அதற்கான சில

5th November 1966] *[திரு. சா. கணேசன்]*

காரணங்களைக் கூறிச் சில சான்றுகளை நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இந்தியா மிகப் பழம்பெரும் நாடு. வரலாற்றுத் துறையில் இந்தியாவில் உள்ளன போன்று சிறந்த சாதனங்கள் பிற எந்த நாட்டுக்கும் இல்லை என்று வரலாற்றுத்துறை ஆய்வாளர்கள், அறிஞர்கள், நிபுணர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அதிலும் தமிழகம் இருக்கிறதே வரலாற்றுநெறிக்கு, மறுக்கப்பட முடியாத சான்றுகளான பல்வேறு சின்னங்கள் தமிழ்நாட்டுக்கு இருப்பதைப்போல உலகில் எந்த நாட்டுக்கும் இல்லை. கல்வெட்டுக்களில் பார்க்கும்போது, கி.மு. 4, 5-ம் நூற்றாண்டுகளிலிருந்து இன்று வரை தொடர்பாக வருகிற சம்பவங்கள் தமிழ்நாட்டில்—ஆம், தமிழ்நாடு ஒன்றில்தான், காண முடியும். இதைப்போலவே, இதை வற்புறுத்துகின்ற வகையில், நம்முடைய இலக்கியங்களும் வளம் நிறைந்து காணப்படுகிறது. பிற மொழிகளிலுள்ள இலக்கியங்களை விட என்று சொல்லுவதைக் காட்டிலும் பிற எந்த மொழிக்கும் பின்தங்காத நிலையில் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வளம் நிறைந்திருக்கின்றன. இலக்கியங்கள் என்று சொன்ன உடனேயே அவற்றை வெறும் கற்பனை எனக் கூறலாகாது. அந்த இலக்கியங்கள் வரலாற்று நெறியில் ஒரு சான்று என்பதையும், அவற்றில் தமிழக வரலாற்றுத் துணுக்குகள், செய்திகள் முழுக்க முழுக்க வருவதை நாம் பார்க்கிறோம். சங்க இலக்கியங்கள் என்றால் யார் மீதோ யாரோ பாடியதாக இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் யார் எங்கே என்னென்ன செய்தார்கள் என்கின்ற செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுவனவற்றிற்கு பாக்களின் மூலமுள்ள மற்றொரு சாட்சியமாக அமைவதையும் நாம் பார்க்கின்றோம்.

அது மட்டுமல்ல. ஆங்காங்கு காணப்படுகிற கல்வெட்டுக்களுடன் இதுவரைக்கும் கிடைத்த செப்புப்பட்டயங்கள், படிமங்கள், சிலைகள், அதில் எழுதப்பட்டிருக்கின்ற எழுத்துக்கள், அதில் காணப்படுகிற வரலாற்று துணுக்குகள் தமிழ்நாட்டு வரலாற்று நெறிக்கு அற்புதமான அடிப்படையான சான்றாக, எவரும் மறுக்கவொண்ணாத ஸ்திரத்தன்மை வாய்ந்ததுமாக அமைந்திருக்கின்றன. ஆனால் சாதாரணமாக மனிதர்கள் அண்ட முடியாத இடங்களில் எல்லாம் இவை காணப்படுகின்றன. மலைகளில், பெரிய குன்றுகளில், பாறைகளில், 15 அடி 20 அடி உயரத்திற்கு மேல் குறிக்கப்பட்டிருக்கின்ற எழுத்துக்களையும் விக்கிரகங்களையும் நாம் காண்கிறோம். மனிதன் அதை எளிதாக அழித்து விடமுடியாத விதத்தில் அத்தனை பாதுகாப்பான இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றில் பல சின்னங்களை நாம் பாதுகாக்கவேண்டும். வரலாற்றுக் குறிப்புகள், எழுத்துக்கள், இவைகள் எல்லாம் வரலாற்றுச் செய்திகளை நமக்குப் புலப்படுத்தும் ஒப்பற்ற நூலாக கருதப்படுகிற அளவில் அமைந்திருக்கின்றன. அவையெல்லாம் அவ்வளவு வளம் பொருந்தியவை, எண்ணிக்கையிலும் மிகுதியாக காணப்படுகின்றன. இவற்றை பாதுகாப்பதற்கு அமைக்கப்படும் துறை பல்வேறு பிரிவுகளாக

அமையவேண்டும் என்று நான் சொல்லுவேன். இந்தியா முழுவதிலும் எத்தனையோ கல்வெட்டுகள் இருக்கின்றன, அவற்றை யெல்லாம், மற்ற மாநிலங்களிலுள்ளவற்றையெல்லாம் சேர்த்துக் கணக்கிட்டோமானல் அவைகளையெல்லாம் விட தமிழ்நாட்டில் கல்வெட்டுக்கள் அதிகமாயிருப்பதை நாம் காண்போம். ஆகவே, இந்தியா முழுவதற்கும் என்று அமைந்த ஒரு துறை எல்லாவற்றையும் கணிப்பதற்கு காப்பதற்கு இயலாது. ஆகவே தான் எல்லாவற்றையும் பாதுகாப்பது பூரணமாக நிறைவேற்றப் படவில்லை என்று எண்ணுகிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே தங்கள் அனுமதியை பெற்றிருக்கிறேன், நான் இங்கே சில புகைப்படங்கள் காட்டுவதற்கு அவற்றை இப்பொழுது சபைக்குக் காட்டுவதற்கு விரும்புகிறேன். திருநாதர்குன்று என்பது ஒரு மலை. செஞ்சிக்குச் சமீபத்தில் இருக்கிறது. அங்கே "பால் லைக் ஸ்டோன்" ஒன்றுண்டு. அதில் அருகப்பெருமானுடைய திருவுருவம் இருக்கிறது. அர்த்த சித்திரமாக அமைக்கப்பட்ட பெரிய உருவம். இது, சமயத் துவேஷம் காரணமாக சமீபத்தில் உடைக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு மூன்றுண்டுகட்கு முன் நன்றாக இருந்தது. இந்த இடத்துக்குப் போவது மிக சிரமம். வழுக்கி விழுந்துவிடுமோ என்ற பயத்தோடுதான் செல்லவேண்டும். ஏறிச்சென்று பார்த்தால், அங்கே அருகப்பெருமானுடைய முகம் முதலில் உடைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதோ இந்தப்படத்தில் அதைத்தான் காண்கிறோம். (புகைப்படத்தை சபைக்கு காண்பித்தார்கள். . .) மேலும் பாறை நடுவில் ஆப்பு வைத்து அடித்து, அது இரண்டாகப் பிளக்கப் பட்டிருப்பதையும் படத்தில் காணலாம். இதையும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் பார்க்கவேண்டுமென்று அவர்களிடம் கொடுக் கிறேன். இப்படிப் பிளக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? தனியாக பாதுகாப்பதற்கு ஒரு இலாகா இருந்தாலும் அந்தப் பகுதிகள் பாதுகாக்கப்படலாம். இப்போது அவைகள் பாதுகாக்கப்படவில்லை. அந்தப் பகுதிக்கு மனிதன் செல்லுவதே சிரமமாக இருக்கிறது. இந்தமாதிரி மூர்த்தியை எங்குமே காண முடியாது. அது சைவ சமய உருவமாக இல்லாமல் இருக்கலாம், வைணவ சமய உருவமாக இல்லாமல் இருக்கலாம்; ஆனல் அது தமிழ்க் கலை என்பதை மறந்து விடப்படாது. அது தமிழனின் கலை என்பதை மறந்து விடப்படாது. இதுமாதிரி பெரிய மலையின் மீது இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுடைய மூர்த்தங்கள் ரொம்பவும் அற்புதமாகப் பொளியப்பட்டிருக்கின்றன. அவைகள் சரியாக இருக்கின்றன. உடைக்கப்படாமையினல் அதைக் காட்டவில்லை. இவைகளெல்லாம் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றன. இதற் கென்று தனி இலாகா இருந்தால் அவைகள் செம்மையாக கவனித் துப் பாதுகாக்கப்பட முடியும்.

இன்னென்று; இது செங்கற்பட்டிலிருந்து மாமல்லபுரத்திற்குப் போகும் வழியில் உள்ள வாயலூர் என்ற இடத்தில் உள்ள கோவில். (சபைக்கு இரண்டு படங்களைக்காட்டி) அவ்வளவும்

5th November 1966] [திரு. சா. கணேசன்]

கல்லுக்குவியல்மாதிரி இருக்கிறது. எதற்காக இந்தக் கோவிலைப் பெரிதாகச் சொல்லுகிறேன் என்றால், இந்தியாவிலேயே இது மாதிரி வரலாறு கூறுவது எங்குமே இல்லை. அந்த முன் வாயிலில் ஒரு கல்தூண் இருக்கிறது. பல்லவர் வம்சமே அதிலே இருக்கிறது. பிரும்மாவிலிருந்து நந்திவர்மன் வரையில், அவன் மகன் இவன், இவன் மகன் அவன் என்று குடி வழி கூறப்பட்டிருக்கிறது அந்தத் தூணிலே. அந்தத் தூணின் அருமையை உணர்ந்த ஒருவர், அதற்கு 5,000 ரூபாய் தருகிறேன், அந்தத் தூணைத் தர வேண்டும் என்று கேட்டாராம். அவர் யாராக இருக்கலாம் என்பது பலருக்குத் தெரியும், அதைப்பற்றி நான் சொல்லவில்லை. அவர்கள், அந்த ஊர் மக்கள், கொடுக்க மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். நாங்கள் போயிருந்தபோது 'இப்போது நாங்கள் வியாபாரம் செய்ய வரவில்லை; தூண் அப்படியே தூணை இருக்க அதை மியூஸியத்திற்குக் கொடுத்துவிட வேண்டும். சென்னை அரசாங்கத்திடமிருந்து 2,000 ரூபாய், 3,000 ரூபாய் வாங்கி மண்டபத்தைக் கட்டித் தருகிறோம்' என்று சொன்னோம். 'அப்படியானால் எடுத்துக்கொண்டு போங்கள்' என்று மனப் பூர்வமாகச் சொல்லுகிறார்கள், இது போய்விட்டால் அந்த சாஸனமே கிடையாது. அவ்வளவு அற்புதமானது, அத்தூண் விலை மதிப்பற்றது.

அதே மாதிரி திருநாதர் குன்றில் இன்னொரு பகுதியில் ஒரு பாறை; மொட்டைப் பாறை. அங்கு ஒரு கல்வெட்டு. "ஐம்பத் தேழநசந நோற்ற சந்திர நந்தி ஆசிரிகர் நிசீதிகை" என்று மேட்டுப் பாறையில் எழுதி இருக்கிறார்கள். அது கண்ணுக்கே தெரியவில்லை. ஏன் என்றால் மாடு மேய்ப்பவர்கள் மிதித்து மிதித்துத் தேய்ந்துக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறது. அதன் பொருள் என்ன என்றால் ஒரு முனிவன் தனக்கு வாழ்வு போதும் என்று எண்ணிய பிறகு ஐம்பத்தேழு தினங்கள் பரிபூர்ண உண்ணாவிரதம் இருந்து அவன் வாழ்வை முடித்துக்கொண்டிருக்கிறான். அப்படி ஒரு முனிவன் உண்ணா நோன்பு நோற்று உயிர் துறந்த அந்த இடத்தில் நிசீதிகை என்று எழுதப்பட்டு விடும். அதற்குப் பிறகு 30 நாள் உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்ட நிசீதிகை அதற்குக் கீழ் இடத்தில் இருக்கிறது. 1500-1700 ஆண்டுகளுக்கு முற்பட்டது இது. இதை அங்கே எழுதப்பட்டுள்ள எழுத்தை வைத்துச் சொல்லுகிறோம். இதுவரையில் இவைகள் தேய்க்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அவைகளையெல்லாம் வேலி போட்டு, முள்ளுக் கம்பி போட்டு அடைத்து வைத்திருந்தால் வரலாற்றுச் சின்னம் என்ற அளவில், தமிழனின் நாகரிகம், தமிழனின் வரலாற்று நிலை எத்தனை ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்பதை பிரத்தியட்சமாகக் காட்டக் கூடிய சான்றுகளாக எப்பொழுதும் இருக்கும். இவை எல்லாம் இல்லை என்றால் அகநானூற்றில் பார், புறநானூற்றில் பார், கம்பன் பேசுகிறான்,

[திரு. சா. கணேசன்] [5th November 1966

வள்ளுவன் பேசுகிறன் என்று மட்டும் சொல்லும் அளவுக்குத் தான் இருக்கும். அதை மற்றவர்கள் கவிஞனின் கற்பனை அல்லது கனவு என்று எளிதாகச் சொல்லி ஒதுக்கிவிடவும் கூடும். அதையும் கவனிக்கவேண்டும்.

தாம்பிரத்திற்குப் பக்கத்து ஊர்களில் ஒன்று மணிமங்கலம் என்பது. அங்கே வயல் புறத்தில் ஒரு சிலை, மூதேவியின் சிலை. பழைய காலத்தில் ஆகம ரீதியாக சிவன் கோவிலில் மூதேவியின் சிலை இல்லாவிட்டால் அது பூர்ணத்துவம் வாய்ந்த கோவில் ஆகாது என்று கருதப்படும். அந்தச் சிலை அருமையான சிலை. அது வயல் புறத்தில் கிடக்கிறது. அதற்குப் பக்கத்தில் சப்த மாதிரிகா—ஏழு கன்னிகைகளில் மூன்று கன்னிகைகளின் சிலைகள் மாத்திரம் கிடக்கின்றன. (சபைக்கு இரண்டு படங்களைக் காட்டி) இவைகள் எல்லாம் வயலில் கிடக்கின்றன. இவைகள் எந்த இடத்தில் கிடக்கின்றனவோ அந்த இடம் இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் உள்ள இடம். பல்லவன் மகேந்திரனும் புலிகேசியும் போர் செய்த இடம் அது என்று பலர் அறிவார்கள். இப்படிப்பட்ட அருமையான இடங்கள், சிறப்புகள், சான்றுகள், வரலாற்றுச் சின்னங்கள் ஆகியவைகளை அழிய விட்டு விடுவோமானுல் வேறு என்ன இருந்தாலும் அது வாழ்வு என்று நான் சொல்லமாட்டேன். சாப்பிட்டு வளமாக இருப்பது வாழ்வு அல்ல, எல்லாப் பெருமைகளோடும் இருப்பதுதான் வாழ்வு. இல்லை என்றுல் அது கேவலம் பிழைப்புத்தான்.

அதே போன்று இன்னும் ஒரு இடம் பனைமலை. (ஒரு படத்தைக் காட்டி) இது, செஞ்சியிலிருந்து விழுப்புரம் வரும் பாதையில் இருக்கிறது. அங்கே பரமேஸ்வரவர்மன் கட்டிய கோவில் இருக்கிறது. அருமையான கற்கோயில்; பெருங் கோயில். அதிலே சித்திரங்கள், பெயிண்டிங்ஸ் இருக்கின்றன. அங்கே மனிதன் போக முடியாது. அந்த மலையைச் சுற்றிலும் வயல்கள்; அங்கே போகவேண்டுமென்றுல் வரப்பில் தான் போகவேண்டும். முள்ளாக இருக்கிறது. நான் சமீபத்தில்தான் போனேன். முழங்கால் அளவு சகதியில் இறங்கிப்போக வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அங்கே அற்புதமான கல்வெட்டுகள் இருக்கின்றன. அங்குள்ள துர்க்கையின் அழகு இருக்கிறதே, மகோன்னதமான அழகு. அங்கே அற்புதமான கல்வெட்டு ஒன்று ஆர்ட் பேப்பரில் அச்சிட்ட மாதிரி, அதற்குத் தனியாக சந்தனம் வைத்து, குங்குமம் வைத்து ஒருவர் பேணி வருகிறர். அதற்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டு இருப்பதால் பொக்கை, பொரிசல் இல்லாமல், உவடு இல்லாமல் இருக்கிறது. (கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதிலே என்ன விசேஷம்.) கோவில்களைக் கட்டியது பற்றி, தர்மங்கள் கொடுத்தது பற்றி இருக்கின்றன. இந்தமாதிரி ஏராளமான கல்வெட்டுக்கள், ஏராளமான சிற்பங்கள், ஒன்று, நூறு, ஆயிரம் அல்லது தமிழகத்தில் என்னுடைய கணக்கு ஒரு லட்சத்திற்குக் குறைவில்லை. இது வரையில் எடுக்கப்பட்டது 20,000 இருக்கலாம். பிரசுரிக்கப்பட்டது 5,000, 7,000 தான். அதாவது வெளிப்படுத்தப்பட்டவை.

மற்றவைகள், கண்ணுக்குத் தெரியாமல் கிடப்பவை என்னவானாலும் 80,000-க்கு மேற்பட்டவைகள், கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. கல்வெட்டுக்கள் மட்டுமல்ல, பல்வேறு சான்றுகள், தூண்கள் எல்லாம் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பாதுகாத்துப் பேணியாக வேண்டும்.

நான் இதற்கு முன்பே அறச்சாலையூர் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பக்கத்தில் விஜயமங்கலம் என்று ஒரு ஊர். அங்கே உள்ள கோவிலில் பூஜை இல்லை, ஒன்றும் இல்லை ; எல்லாம் போய்விட்டது. காவல்காரர் என்று ஒருவர் இருக்கிறார். சீனிவாச அய்யர் என்ற சமண அய்யர் இருந்து கொண்டிருக்கிறார். அவைகளையெல்லாம் எங்காவது கொண்டு வைத்துப் பாதுகாக்க வேண்டாமா? அதற்கு வழிவகை செய்ய இந்த மசோதா வழி வகுக்கிறது என்பதனாலே தான் இதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

இன்னும் சொன்னால் ரொம்ப வேடிக்கை. பக்கத்தில் திருவல்லிக்கேணியில் கம்பவர்மன் என்று கருதப்படுகிறது—அவனுடைய கல்வெட்டு. இங்கே எனக்கு முன்னாலே இருக்கிற டேபிள் அளவு நீளம் இருக்கும். சுமார் நாலில் ஒரு பங்கு அதனுடைய அகலம் இருக்கும். சுத்தமான பட்டிகைக்கல் அதிலே நல்ல கல்வெட்டு இருக்கிறது. அதை எடுத்து பார்த்தசாரதி கோவிலின் வாயிலுக்கு இடது புறத்தில் போடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அதிலே தயிர் சாதம், புளியஞ்சாதம் பிசையப்படுகின்றன. அந்தக் கல்வெட்டை எத்தனை லட்சம் மதிக்க வேண்டும். இப்படி இங்கே, பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலில். பெருமாள் கோயில்பற்றி சொல்லிவிட்டுச் சிவன் கோயிலைச் சொல்லாமல் விடலாமா? பரமேஸ்வரவர்மன் கல்வெட்டு ஒன்று திருவதிகை என்று சொல்லப்படுகிற பண்ருட்டியில் இருக்கிறது. திருவதிகை, வீரட்டானம் என்றெல்லாம் அக்கோயிலைச் சொல்லுவார்கள், அங்கே ராஜ கோபுரத்தை விட்டுக் கீழே இறங்கினால் அந்தக் கல்வெட்டில் தான் காலை வைக்க வேண்டியிருக்கிறது. அது மார்பிள் ஸ்டோன் மாதிரி இருக்கிறது. வருகிறவர்கள் போகிறவர்கள் மிதித்து மிதித்துத் தேய்த்துக்கொண்டு போகிறார்கள். பரமேஸ்வரவர்மனை மிதிக்கிற மாதிரி இருக்கிறது என்ற கருத்தில் மட்டும் பேசவில்லை. அதில் காணப்படுகிற விஷயங்கள், செருப்புக் கால்கள், மண் கால்கள் பட்டு தேய்ந்து தேய்ந்து வருகிறது. எறும்பு ஊரக் கல்லும் குழியும் என்று சொல்லுவார்கள் ; எறும்பு வரிசையாகப் போனாலே பள்ளம் விழுந்து விடும் என்று சொல்லுவார்கள் ; அது உண்மை. இத்தனை ஆயிரம் மக்கள் மிதித்து மிதித்து தேய்த்துக்கொண்டு தேய்த்துக்கொண்டு போனால் என்ன ஆகும். அவைகளையெல்லாம் எங்காவது கொண்டு வைத்துப் பேணிப் பாதுகாப்பது வருங்கால ஆராய்ச்சியாளர்களுக்காக, ஆராய்ச்சியாளர்களுக்காக இல்லாவிட்டாலும் பிற்கால மக்களுக்காக, தங்கள் பாட்டன் பூட்டன் காலத்தில் வரலாற்று நிலை என்ன என்று எண்ண வழிவகை செய்து வைக்க வேண்டாமா? இம்மாதிரியான எத்தனையோ வேண்டத்தகாத முறையிலே,

பயனற்ற நிலையிலே, தீமை பயக்கத் தக்க நிலையிலே, கொழிக்க வேண்டிய பலன் கொழிக்காமல் எதிர்மாருக தீமை பயக்கும் நிலையிலே, இருக்கிற பல்வேறு துறைகளிலே கவனம் செலுத்த அரசாங்கம் இப்பொழுதாவது முன்வந்திருப்பதை நான் மனமாற முதலில் பாராட்டுகிறேன். இது அகில இந்திய ரீதியிலே இருப்பதினாலே செம்மையாக காரியம் சாதித்து விடமுடியாது. மாநிலத்திற்கு மாநிலம் இருக்கவேண்டும். அடுத்தாற்போல இதனுடைய தேவையைக் கருதி இதர துறையிலே உள்ளதைப் போல இத்துறை அலுவலகங்களும் டிவிஷன் வாரியாக கோயம்புத்தூர் பகுதிக்கு ஒன்று, மதுரைப் பகுதிக்கு ஒன்று, தஞ்சைப் பகுதிக்கு ஒன்று என்றெல்லாம் ஆக்கவேண்டும். இப்படியெல்லாம் ஆக்கி எல்லாவற்றிற்கும் மேலதிகாரத்துவம் உள்ள அலுவலகம் ஒன்றை ஒரு பொது இடத்திலே வைத்து காரியம் செய்யவேண்டும். அதற்கெல்லாம் இந்த மசோதா வழி வகுக்கிறது, வழி வகுக்கும்.

இனி இந்த மசோதாவின் உள்ளே வருகிறேன். நான்காவது செக்ஷன்படி அக்வையர் செய்வதற்கு உரிமை இருக்கிறது. அதிலே ஆட்சேபணை கிடையாது. அனாதையாக கிடக்கிற இடங்களையெல்லாம் அல்லது அதற்கென்று ஒரு கார்டியன் இல்லாமல் கிடக்கின்ற இடங்களை எல்லாம் அல்லது படிமங்களையெல்லாம் அல்லது எழுத்துக்கள், பொருள்கள், மலைகள் இவற்றையெல்லாம் கைக்கொள்ளவேண்டும். ஆனால் அப்பொழுது ஜாக்கிரதையாகவும் காரியத்தைச் செய்யவேண்டும். வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற இடங்களை 'ப்ரொடெக்டட் மான்யுமெண்ட்ஸ்' என்று டெக்லேர் பண்ணலாமே அன்றி, அவற்றை அக்வையர் பண்ணுவது என்பது கூடாது. அம்மாதிரி யாரும் பண்ணுவார்கள் என்று நான் சொல்லவில்லை, பண்ணப்போகிருர்கள் என்றும் கூறவில்லை. ஆனல் இந்தக் கருத்தை மனத்திலே கொள்ள வேண்டும் என்று இப்பொழுது சொல்கிறேன். மைலாப்பூரில் வள்ளுவர் கோவில் இருக்கிறது. அது சமாதி என்று சொல்பவர்களும் இருக்கிருர்கள், கோவில் என்று சொல்பவர்களும் இருக்கிருர்கள். அது ஒழுங்காக நடக்கிறது. உடைத்தல், நொறுக்குதல் போன்ற காரியங்கள் அங்கு நடைபெறவில்லை. இயல்பாக நடைபெறுகின்ற வழிபாடுகள், பிரசங்கங்கள் இவற்றிற்கெல்லாம் இடையூறு இல்லாமல் விட்டுவிடவேண்டும். கம்பன் சமாதி, கம்பன் மேடு, கம்பன் கோவில் இவைகளெல்லாமும் இப்படித்தான். அது மாதிரி தியாகப்பிரும்ம சமாதியும் இதற்குள் வந்துவிடும். நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சின்னங்களை எல்லாம் இதற்குள் கணிக்கிறோம். தியாகபிரும்மம் கோவில் நன்ருக நடக்கிறது. அங்கே வழிபாடுகளுக்கு வழிவகை செய்திருப்பதை நாம் எடுத்துக்கொள்ளவேண்டாம். அவைகளை குறைக்கின்ற அல்லது குலைக்கின்ற நிலைமை ஏற்படாமல் இயங்க வேண்டும்.

அடுத்து 14-வது செக்ஷன் நன்கொடையைப் பற்றியது. வாலண்டரி கண்டிரிபியூஷன் கருவதற்கு முன்வந்தால் பெற்றுக் கொள்ளலாம் என்றெல்லாம் இருக்கிறது. பலர் இனி நன்கொடை

5th November 1966] [திரு. சா. கணேசன்]

தர முன்வருவார்கள், முதலில் அதற்கு வழி வகை நானும் செய்ய ஆரம்பிக்கிறேன். இது அரசாங்கம் செய்வது. அரசாங்கத்தோடு போட்டி போட்டுக்கொண்டு யாரும் செய்ய முடியாது. அல்லது அதற்கு உதவியாகச் செய்கிறோம் என்று கூடச் சொல்வதற்கில்லை. தனிப்பட்டவர்கள் நன்கொடை கொடுக்க முன்வந்தால், அரசாங்கமும் கூட இவ்வளவு உயர்ந்த காரியமா, தனிப்பட்டவர்களும் நன்கொடை அளிக்க முன்வந்திருக்கிறார்களே, இதனுடைய பெருமை இவ்வளவா என்று மதித்து இன்னும் அதிக அக்கறை செலுத்த அது வாய்ப்பாக இருக்கும் என்ற ரீதியிலே தான் தனி மனிதர்களும், பிற ஸ்தாபனங்களும் இதற்கு நன்கொடை வழங்க முன்வரவேண்டும், முன்வரும். அதே நேரத்திலே எனக்கு சரியாகத் தெரியாது வருமான வரியிலிருந்து இதற்கு விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும். எனக்குத் தெரிந்தவரையில் இல்லை என்று தான் நான் நினைக்கிறேன். ஆகவே வரிவிலக்கு அளிப்பதற்கு இதைவிடச் சிறந்த காரியம் ஒன்றும் இல்லை. இப்பொழுது கோவில் பூஜைக்குக் கொடுப்பதற்கு வேண்டுமென்றால் வருமான வரியிலிருந்து அதற்கு விலக்குக் கொடுப்பதில்லை. ஆனால் கோவில் புனருத்தாரணத்திற்கு கொடுக்கப்படுகிற பணத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது இன்கம் டாக்ஸ் ஆக்டின் கீழ். அது போலவே இதுமாதிரி பாதுகாப்புச் சின்னங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை உணர்ந்துள்ள அரசாங்கம் இதற்கும் உதவ வழி வகை செய்ய வேண்டும். தனி மனிதன் இந்தப் பணிக்கு பணம் தருவான் என்றால், அவனுக்கு வருமான வரியிலிருந்து விலக்குக் கொடுப்பதற்கு வழிவகை ஏற்படுத்த நமது மாநில அரசாங்கம் ஆலோசனை கூறி அதைப் பெற்றுத் தரவேண்டும்.

அதுபோக இன்னும் பல இடங்களில் வெறும் பாறைகள் மலை மாதிரி இருக்கின்றன. அவற்றை எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஒரு பெரிய க்ஷேத்திரம் இருக்கிறது. அது திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமான் பிறந்த திருவாதவூர். மேலூருக்குப் பக்கத்தில் மதுரை ஜில்லாவில் உள்ளது. அங்கே ஒரு சிறு குன்று. அங்கே ஒரு பழங்காலத்து கல்வெட்டு "உபாசகன் பரசு உறை கொடுப்பித்தான்" என்பது. அது பழங்கால எழுத்து. அந்த மலையில் கல்லுடைக்கிறார்கள். உடைப்பு எழுத்தைக் கிட்டி விட்டது. அந்தப் பாறை உடைக்கப்பட்டது போக இன்னும் கொஞ்சம் நஞ்சம் இருக்கிறது. ஒரு வருஷம், இரண்டு வருஷம் கழித்துச் சென்றால் எழுத்தை யாரும் காணமுடியாது. கல் உடைப்பவர்கள் அதை நொறுக்கி விடுவார்கள். அதைக் குவாரியாக ஏற்படுத்திவிட்டார்கள். கல் உடைப்பவர்களுக்கு என்ன தெரியும்? இது என்ன? இதை உடைப்பதால் இதில் என்ன லாபம், என்ன நஷ்டம்? இதையெல்லாம் அவர்கள் கருதுகிறார்களா? அதை குவாரியாக மாற்றி கல் உடைக்க ஆரம்பித்துவிட்டார்கள். 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை' என்று சொல்வார்கள். அதேமாதிரி ரோடு ஜல்லி உடைப்பவர்

களுக்கு என்ன தெரியும்? அதை உடைத்துவிட்டால் பின்னே வருப வர்கள் பார்க்க முடியுமா? குன்றை உடைத்துவிட்டால் கல்வெட்டு இருந்தது எப்படிப் புரியும்? சரித்திர ஆசிரியர்கள் கூட இப்படி ஒரு கல்வெட்டு இருந்தது, அதை உடைத்து விட்டார்கள் என்று சொன்னால் அதை நம்பி ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இப்படிப் பட்ட பல இடங்கள் குவாரியாக மாற்றப்பட்டு, கல் உடைக்கப் படுகின்றன. சில இடங்களில் எழுத்து இல்லை. எழுத்து இல்லா விட்டாலும் சில சான்றுகள் இருக்கின்றன. 'டால்மெண்டு' என்று சொல்வார்கள். இரண்டு கால் நட்டு, மேலே கை பாவுகிற மாதிரி. சில இடங்களில் அவற்றை இன்றும் காணலாம். செங்கற்பட்டு செல்லும் ட்ரங்க் ரோட்டில் கூட இவைகளெல்லாம் இருக்கின்றன. எழுத்து இல்லை, ஆனால் சான்றுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கண்காணித்து, அந்தமாதிரி இடங்களை யெல்லாம் முதல் முதலில் பாதுகாவல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதற்கு மேலே 20-வது செக்ஷன், 21-வது செக்ஷன் அகழ்வு ஆராய்ச்சி நடைபெறுவதற்கு வழிவகை செய்கின்றன. ரொம்ப நியாயம். அகழ்வு ஆராய்ச்சி செய்வதற்கு இப்பொழுது மிக இன்றியமையாத அவசியமான தேவை ஏற்பட்டிருக்கிறது. காவேரிப்பூம்பட்டினம், கரூர், உறையூர், தொண்டி, காஞ்சி, கொற்கை, கங்கைகொண்டசோழபுரம், இப்படி பெரிய மன்னர்கள், மாபெரும் மன்னர்கள் வாழ்ந்த பெரிய இடங்கள் அல்லது மறைந்த பெரிய இடங்கள், சாம்ராஜ்யங்கள் சிறந்து பொலிந்த இடங்கள் அங்கெல்லாம் அகழ்வு ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதற்கு இம்மசோதாவில் வழி இருக்கிறது. அதனால் விளையக்கூடிய பயனும் பெரிது. ஆகவே, அதைப் பாராட்டி, வரவேற்று இடங்களைச் சொன்னதோடு நிறுத்துகிறேன்.

இன்னொன்றுக்கு வழி கிடையாது. கடவுள் சோதிக்க வேண்டிய பல இடங்கள் நமக்கு இருக்கின்றன. மத்திய அரசாங் கத்திற்கு வேறு மாநிலங்களில் அது இருக்காது. நமக்கு மாமல்ல புரம் இருக்கிறது. பிரபந்த வரலாற்று ரீதியாக தல சயனம், ஜல சயனம் என்று இரண்டு இருக்கிறது. சமுத்திர ஜலத்தை ஒட்டிய ஸ்தலத்தில் உள்ள சயனம் ஜலசயனம் என்றும், ஊருக்குள் உள்ள சயனம் தலசயனம் என்றும் வழங்கப்பட்ட தாகத் தெரிகிறது. ஜல சயனம் இப்பொழுது தண்ணீருக்குள் இருப்பதாக ஒரு அறிஞரிடமிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. நம்முடைய இலாகாவுக்கு ஒரு சப்மரின் வந்தது. ஆனால் சைனக் கார பாவி இந்தியாவின் மீது தண்டெடுத்து வந்ததும் சப்மரின் போய் விட்டது. இரண்டு நாட்கள் சுற்றியிருக்கும். அவ்வளவு தான். எனக்கு ரொம்ப ஆசை. எனக்காக காத்துக்கொண்டிருந் தார்கள். நான் வருவதற்கு பாக்கியம் இல்லாமல் போய்விட்டது. காரைக்குடிக்குப் போயிருந்தேன். வரமுடியவில்லை. சப்மரின் போய்விட்டது என்று திரு. ராமச்சந்திரன் அவர்கள் நான் வந்த

5th November 1966] [திரு. சா. கணேசன்]

பொழுது சொன்னார்கள். உள்ளே பச்சைப் பெருமாள் படுத்திருக்கிற மாதிரி இருந்ததாம். ஜலத்திற்குள்ளே ஒளியூட்டிப் பார்த்தால் அது தெரியும். கடலிற்குள்ளே நீர்மூழ்கியில் இருந்து கொண்டு கண்ணாடி மூலம் அதைப் பார்க்கவேண்டும். காவிரிப்பூம் பட்டினத்தில் கரையில் கண்ணகி என்கிற ஒரு சிலை இருக்கிறதே, அதற்கு 2 மைல், 3 மைல் நேரே கடல் நோக்கிச் சென்றால் நீருக்குள்ளே ஒரு அருமையான கோவில் இருக்கிறது. மீன் பிடிப்பவர்கள் 4, 6 மாதங்களுக்கு ஒரு முறை, ஒரு வருஷத் திற்கு ஒரு முறை ஏதாவது வலையில் சிக்கியதை எடுத்து வருகிறார்கள். அருமையான விக்கிரகங்களும் வருகின்றன. பல்லவனீச்சுரத்தில் இரண்டு விக்கிரகங்கள், திருவலம்புரத்தில் இரண்டு விக்கிரகங்கள், சாய்க்காட்டில் ஒன்று. இவைகளெல்லாம் காவேரிப்பூம்பட்டிணத்திலுள்ள இடங்கள் தான். திருஇடைக் கழியில் அருமையான ஒரு வில் ஏந்திய வேலன். சமீபத்தில் ஒரு கல்லுப் பிள்ளையார் வலையில் சிக்கியது. வலம்புரி துதிக்கை உள்ள பழமையான அருமையான கல்லுப் பிள்ளையார். மீனவர்கள் வணங்கும் அவர்களின் பிடாரி கோவில் ஒன்று பக்கத்தில் இருக் கிறது, இப்பொழுது அதை அங்கே எடுத்து வைத்துள்ளார்கள். அங்கே கடலுக்குள் அருமையான கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலின் நிலை, அமைப்பு இவற்றையெல்லாம் காணுவதற்கு சப்மரின் இல்லாமல் முடியாது. அந்த இடங்களில் மீன் நிறைய இருக்கிறது. அர்த்த மண்டபங்கள், கர்ப்பகிரஹங்கள், பிரகாரங்கள் இவைகளைச் சுற்றிப் பல சுற்றாலயங்கள் இருக்கக் கூடும். அந்த கட்டுக்கோயில்களுள் மீன்கள் குடும்பம் குடும்பமாக வசிக்கின்றன. அந்த இடங்களில் வலை போட்டால் ஏராளமான மீன்கள் கிடைக்கின்றன. அந்த இடத்திலே வலை போடுவதற்கு 11.00 a.m.
வருஷத்திற்கு ரூ. 6,000 குத்தகை. இந்த ஆறாயிரம் ரூபாயையும் கொடுத்துவிட்டு குத்தகை எடுத்திருக்கிறார்கள். அந்தக் கோயிலில் இருந்த இலிங்கத்தைக் கொண்டுபோய் கடலுக்கு வெகு தூரத்தில் உள்ள ஒரு ஊரில் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். அந்த இடப் பெயர் என்னுடைய நினைவிற்கு வரவில்லை. அந்தக் கோயிலுக்குக் குத்தகைப்பணம் செலுத்திவிட்டுத்தான் இன்று அங்கே மீன் பிடிக்கிறார்கள். அது நியாயம் தான், தவறு என்று சொல்ல இல்லை. ஆனால் அந்த இடத்தில் ஆய்வு செய்யவேண்டும். அதற்கும் இம்மசோதாவில் வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

அது போக, இந்தச் சட்டத்தின் முக்கியமான பலன் இன்றைக்கு பெரும்பாலாக நடைபெறும் திருட்டைக் குறைக்க முடியும். நல்ல காலமாக இன்றைக்கு எண்டோமெண்ட் இலாகா இப்பொழுது எல்லாக் கோயில்களிலும் உள்ள எல்லா மூர்த்திகளைப் படம் பிடித்து வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். படம் பிடிப்பது மட்டும் போதாது. கோவில் வாசலில் அந்தப் படங்களின் நகல்கள் வைக்கப் படவேண்டும். போகிற, வருகிற வர்களெல்லாம் பார்த்துப் பார்த்து இன்னின்ன மூர்த்திகள்

[திரு. சா. கணேசன்] [5th November 1966

கோவிலில் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இப்படிப்பட்ட திருட்டுக்கள் நடக்காது. சமீபத்தில் தஞ்சைப் பெரிய கோவிலில், ராஜராஜன் கட்டிய கோவிலிலிருந்து கிட்டத்தட்ட 4 அல்லது 5 அடி உயரம் இருக்கும் என்கிறார்கள், அவ்வளவு பெரிய சுப்பிரமணிய மூர்த்தி புறப்பட்டுப் போய்விட்டது. சமீபத்தில் நடந்தது என்பதற்காகச் சொல்லு கிறேன். அந்த வகையில் நூற்றுக்கணக்கான மூர்த்திகள் பிரயாணம் ஆகிவிடுகின்றன. நம்முடைய அந்த மூர்த்திகள் பழைமையானவை, சிற்ப அருமையுடையவை. ஆகவே, பிற நாட்டவர்கள் கொள்ளை விலை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்தமாதிரி மூர்த்தியை நானே இங்கே செய்ய முடியும், நல்ல ஸ்தபதிகளைக் கொண்டு. இன்னும் புதுப்புது அழகையும் கொண்டதாகச் செய்யமுடியும். ஆனால் பழைமையானதாக இருந் தால்தான் அதற்கு 20,000, 50,000, 100,000 என்று கொடுக்க முன் வருகிறார்கள். அப்படி வாங்குகிறார்கள் என்று தெரிந்தவுடனே, உண்மையாக பக்தியில்லாதவர்களும், பக்தி உள்ளவர்கள் போல நடித்து கோயிலுக்குச் சென்று திருடுகிறார்கள். பலர் பல வகை யிலும் இதைச் செய்கிறார்கள். ட்ரஸ்டிகளாக உள்ள சிலர்கூட இப்படிச் செய்கிறார்கள். இப்படிப் பலராலே பல தவறுகள் நடை பெறுகின்றன. இவற்றைத் தடைசெய்ய வேண்டும். அந்த வகை யில் இந்தச் சட்டமூலம் ஒரு வழி ஏற்படும் என்று கருதுகிறேன்.

அதற்கும் மேலாக, மற்றொரு தீமை. அது, கோயில்களில், கற் சுவர்களின் மீது சுண்ணாம்பு அடிப்பது. அது கற்கோயில்களுக்கு உகந்ததல்ல. முற்காலத்தில் மண்சுவர்கள், செங்கற்சுவர்களின் மீது சுண்ணாம்பு அடித்தார்கள். அதுவும் 'ஆன்டிசெப்டிக்' என்று கருதி அடித்தார்கள். கற்சுவர்களில் சுண்ணாம்பு அடிக்கும் இது சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கிற ஒரு தீமை. இதற்கு முந்தி 1,000, 2,000 ஆண்டுகளாக அழியாமல் இருந்த கல்வெட்டுக்கள் பொரி யாமல், உதிராமல் இருந்த கல்வெட்டுக்கள், இந்த சுண்ணாம்பு அடித்த பிறகு, அந்த காரணத்தினால், உவடு எடுத்து உதிருகின்றன. முதலிலே இதைத் தடுக்கவேண்டும். மாமல்லபுரம் போன்ற இடங் களிலே அருமையான கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அச்சுவர்கள் பல்லாண்டுகாலம் ஆன காரணத்தினால் இணைப்புக்களில் பிளவு பட்டுள்ளன. கடல் நீரினாலும், மழை நீரினாலும் ஏற்பட்ட கேடு காரணமாகவும் இந்தக் கற்களின் இடையே வெளி காணப்படுகிறது. வெளியில்லாமல் செய்ய வேண்டும். அதற்கு நம்முடைய இலாகா வைச் சேர்ந்தவர்கள் என்ன செய்கிறார்கள்? செமண்டைக் கலந்து, சாதாரணக் கொத்தனை விட்டு இந்தப் பக்கம் கால் இஞ்ச் அந்தப் பக்கம் கால் இஞ்ச் வரை ஒரு இஞ்சுக்குக்கூட எழுத்துக்கள் மறைந்துபோகும் அளவிற்குச் செய்துவிடுகிறார்கள். ஆனால் ட்ரான்ஸ்பேரண்டாக, அதற்கென்று இருக்கும் கெமிகல் பொருள் களைக் கலவை செய்து கொண்டு இந்த வேலையைச் செய்ய வேண்டும். 'சிபா கம்பெனி' போன்றவர்கள் அந்தப் பொருள்களை வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரியான பொருள்களைக் கொண்டு

5th November 1966] *[திரு. சா. கணேசன்]*

இதைச் செய்யவேண்டும். வெளியை அடைப்பது மட்டுமின்றி, ஒளி ஊடுருவிகளைக் கொண்டு உள்ளே என்ன என்ன எழுத்துக்கள் இருக்கின்றன என்பதையும் காணவேண்டும். அதற்கான வழி வகைகளையும் நாம் செய்யவேண்டும்.

கோபுரங்கள் இருக்கின்றன. இப்பொழுது கும்பாபிஷேகம் செய்வது என்பது ஒரு 'மேனியா' வாக ஆகிவிட்டது. அது நல்ல காரியம்தான். அதை நான் மறுக்கவில்லை. அப்பெயரால் நடை பெற்றுள்ள மோசடி போன்ற வேறு விஷயங்களுக்குப் போகாமல் சொல்லுகிறேன். முக்கியமாக சிற்பங்களைப் புதுப்பிக்கும் போது, ஒரு சிற்பத்திற்கு மூக்கு உடைந்து இருந்தது என்றால், அந்த மூக்கை மட்டும் சரிசெய்வது என்பதில்லாமல், அந்த சிற்பத்தையே உடைத்து எடுத்து எறிந்துவிட்டு, புதிதாகவே ஒன்றைச் செய்து விடுகிறார்கள். அது சரியாகாது. மூக்கு உடைந்திருந்தால் மூக்கை மட்டும், கண் போயிருந்தால் கண்ணை மட்டும் வைத்து, காது இல்லை என்றால், காதைமட்டும் ஒட்டி, சிற்பத்தைப் புதுப்பிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், அந்த சிற்பத்தையே அடியோடு பெயர்த்து எறிந்துவிடுவது சரியாகாது. ஏனென்றால், பழைய சிற்பம் என்ன வடிவத்தில் இருந்தது, என்ன அவசரத்தில் இருந்தது, என்ன ஆசனத்தில் இருந்தது என்பதெல்லாம் மறைந்துவிடும். முகத்தில் பழைய காலத்தில் இருந்த பாவம் என்ன என்று கணித்து அதை அப்படியே இப்பொழுது வடிக்க முடியாமல் போகலாம். இவற்றின் லட்சியம், லட்சணம் தெரியாதவர்கள் இவற்றைப் பாழடித்துவிடுகிறார்கள். இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு செயல் படவேண்டும். (குறுக்கீடு) ஏட்டுச் சுவடிகளை இதற்குள்ளே கொண்டு வரக்கூடாது. அவை ஓரியண்டல் மானுஸ்க்ரிப்ட் லைப்ரரியில் வைக்கப்பட்டு பிரதிகள் எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் ஆங்காங்கே கிடைக்கும் நல்ல பழைய ஏடுகள், பட்டயங்கள், உடைந்து கிடக்கும் துண்டு, துணுக்குகள் இவைகள் எல்லாம் காப்பாற்றப்படவேண்டும்.

அதோடுகூட நல்ல புகைப்படத் துறை அவசியம். இந்தத் துறையிலே இரண்டு பேர்களுக்கு மேலே இருக்கவேண்டும். எங்கே என்னுடைய படங்கள் நல்ல வகையில் வராதோ என்று பயந்தேன். ஆனால் கடவுள் அருளால் நல்ல வகையில் வந்திருக்கிறது. காமிரா நல்ல காமிரா, சென்சிபிள் லென்ஸ். இல்லாவிட்டால் இந்த அறச்சாலையூர் படங்கள் வந்திருக்கா. என்னுடன் வந்த பிரண்டாபெக் என்ற வெள்ளைக்கார அம்மையார் கூட 'வராது, பிலிம் வேஸ்ட்தான்' என்று கூறினார்கள். இருந்தாலும் நல்ல காமிராவாக இருந்ததால் படங்கள் நல்ல வகையில் அமைந்து இருக்கின்றன. ஆகவே, நல்ல காமிராவாக இருக்கவேண்டும். வெளி நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டும். கோடிக்கணக்கில் ஆகிவிடாது. சில ஆயிரங்கள் தான் வேண்டியிருக்கும். அதோடு இன்னொரு புதிய லென்சும் வந்திருக்கிறது. எக்ஸ்-ரே லென்சு என்று. அப்படிப்பட்ட லென்சு இருந்தால், திருமயம் கல்வெட்டை

[திரு. சா. கணேசன்] [5th November 1966

உள்நோக்கிப் பார்க்க முடியும். திருமயம் மகேந்திரவர்மன் கல்வெட்டுக்கும் மேலே, பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. அதை இந்த எக்ஸ்-ரே லென்சு மூலம் படம் எடுத்துப் பார்த்தால் உள்ளே இருப்பது தெரியும் என்று கருதுகிறேன்.

அது போக, நம்முடைய மாநில ஆர்கியாலஜி இலாகா என்று ஒன்றை அமைத்திருக்கிறோம், அதிலே கொஞ்சம் போதிய அளவுக்கு உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்த வேண்டும். இப்பொழுது இரண்டு பேர்கள் தான் இருக்கிறார்கள். இதிலே என்ன கஷ்டம் என்றால், மற்றத் துறைகள் போல அல்ல, இந்த துறை. ப்யூன் இருந்தால், ப்யூனை இதைச் செய் அதைச் செய் என்று சொல்லிவிட முடியாது. கலவைகளைக் கலப்பதோ, காகிதத்தை ஈரமாக்கி ஒட்டுவதோ, அதன்மேல் ஒத்துமெத்தையால் குத்துவதோ சாதாரண பணியாளர்களால் செம்மையாகச் செய்ய முடியாது. இவற்றையெல்லாம் அந்த உத்தியோகஸ்தரே தான் செய்தாகவேண்டும். அப்பொழுதுதான் அது நன்றாக செம்மையாக தெளிவாக, விளங்கும். சாமான்களைத் தூக்கிக்கொண்டு வருவதற்கோ தண்ணீர் கொண்டு வருவதற்கோ, கோந்து வாங்கிக் கொண்டு வருவதற்கோ தான் பியூன்கள் உதவியாக இருக்க முடியுமே தவிர எல்லா வேலைகளுக்குமே அந்த ஆள் முழுவதும் பயன்பட முடியாது. ஆகவே. 'எஃபிக்ராஃபிஸ்ட்' என்று சொல்லக்கூடியவர்கள், பயிற்சிபெற்ற கல் எழுத்துப்படி எடுப்பவர்கள், கல் எழுத்து படிப்பவர்கள் என்று இம்மாதிரி பணி செய்வதற்குக் குறைந்தபட்சம் நமது இலாக்காவிற்கு நான்கு பேர்களாவது வேண்டும். இப்பொழுது இருக்கும் இருவரில் ஒருவர் தகுதியுடையவர் மற்றவருக்கு வேண்டிய தகுதிகள் முழுவதும் இல்லை. ஆகையால், இவற்றையெல்லாம் பார்க்கவேண்டும். வெறுமனே சட்டத்தை மட்டும் செய்துவிட்டால் போதாது. சட்டம் செய்வதைக் குறை சொல்வதாகக் கருதக்கூடாது. சட்டம் செய்துவிடுவதனால் மட்டும் வேலை நடந்துவிடாது. விதி செய்துவிட்டு அந்த விதியைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய உபகரணங்கள், தகுந்த அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியவற்றையெல்லாம் செம்மையாகக் கொடுத்தால்தான் பத்து வருஷங்களுக்குள்ளாகவாவது தமிழ்நாட்டைப் பற்றிய எல்லாக் கல்வெட்டுகளும், எல்லா வரலாற்றுச் சின்னங்களும், எல்லா வரலாற்று துணுக்குகளும் நிறைவுபெறக் கூடும். இதிலும் அபிப்பிராய பேதம் வரலாம். இது 'க' அல்ல 'ச' என்றோ, இது 'கந்தம்' அல்ல 'கனகம்' என்றோ சண்டை வரலாம். அதைப்பற்றிப் பிறகு ஆய்ந்து பார்த்துக்கொள்ளலாம். 'ஒரிஜனல் மெடீரியல்ஸ்' என்ற வகையில் கிடைக்கக்கூடிய அடிப்படைச் சான்றுகள் முழுவதும் முதலில் திரட்டப்பட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் இன்றுள்ளனவற்றையும், நாம் இழந்துவிடக்கூடும். சுண்ணாம்பு அடிப்பதனாலும், கடல் அரிப்பினாலும் கோயில்களில் உள்ள எழுத்துக்கள் கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்துகொண்டு வருகின்றன. இப்படியே விட்டுக் கொண்டு போனால், மணலோடு, மண்ணோடு சேர்ந்த சில

5th November 1966] [திரு. சா. கணேசன்]

கற்களைக் காணலாமேயன்றி அந்தக் கற்களிலே காணப்படுகிற குறிப்பிடப்படுகிற, உணர்த்தப்படுகிற செய்திகளை அல்லது உருவங்களை அல்லது வேறு வகை வரலாற்றுத்துணுக்குகளை நாம் பெற முடியாது. ஆகையால், மிக விரைவில் இந்தப் பணியைத் தொடங்குவதற்கு எல்லாவிதமான வசதியையும் வாய்ப்பையும் அரசாங்கம் செய்ய வேண்டும். இதிலே எந்தக் கட்சி, எந்தக் கொள்கை என்று பார்க்க வேண்டியதில்லை.

நான் இப்பொழுது சமணம் பற்றிப் பேசுகிறேன். ஆனால், நான் ஒரு சைவன். எனக்கும் சமணத்திற்கும் சமயக் கருத்திலே உடன்பாடு கிடையாது. ஆனாலும் நம்முடைய வரலாறு, நம்முடைய நெறி, நம்முடைய பண்பாடு, தமிழ்நாட்டின் அமைதி இவற்றைக் கணிக்க முயலுகின்றபோது, சமணத்தின் பணியையும், அதன் பயனையும் மதிக்காமல் இருக்கமுடியாது. எனவே, எதையும் நாம் துச்சமாக, வேண்டாதனவாக ஒதுக்க முடியாது; ஒதுக்கக் கூடாது. அனைத்தையும் ஆராய்ந்து பேணினால்தான் நம்முடைய உண்மை வரலாறு உண்மைப் பண்பாடு எப்படி எப்படியெல்லாம் இருந்திருக்கிறது, எப்படியெல்லாம் நாம் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறோம் அல்லது குறைந்து போயிருக்கிறோம் என்பனவெல்லாம் நமக்குப் புலப்படும். ஆகவே, இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக, மனம் மகிழ்ந்து, நன்றியறிவோடு வரவேற்கிறேன். வரவேற்பதோடு, இந்த மசோதா சட்டமாகி, அதன் மூலமாகச் செய்ய வேண்டிய பணிகள் விரைவிலே தீவிரமாக நடப்பதற்குரிய எல்லா வாய்ப்புக்களையும் வசதிகளையும் அரசு செய்யவேண்டும். அதோடுகூட ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி இந்தத் துறைக்கு நன்கொடை தருபவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்குக் கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டும். இதில் ஒன்றும் கஷ்டமே கிடையாது. மத்திய சர்க்காருக்குத் தெரிவித்தால் நிதி இலாகாவிலிருந்து உடனே ஒப்பம் வந்துவிடும். வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கும் வசதியையும் உடனே பெற்று, அதையும் பிரகடனப்படுத்திவிடுவோமானால், உண்மையிலேயே அக்கறை உள்ளவர்கள், கோவிலுக்காகவோ அல்லது வாலாற்றுக்காகவோ அல்லது சிற்பத்திற்காகவோ அல்லது கலைக்காகவோ, எந்த நோக்கத்திற்காகவோ நமக்கு நன்கொடை தருவார்கள். அதையும் செய்யவேண்டும் என்று கூறி, இந்த மசோதாவை எல்லோரும் மனப்பூர்வமாக ஆதரித்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* **புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் வரலாறு எழுதப்பட வேண்டும். அந்த வரலாறு எழுதுவதற்குத் துணை புரியத்தக்க தமிழ் இலக்கியங்கள், தொல் பொருள் நிலையங்கள் எல்லாம் காப்பாற்றப்படவேண்டும் என்ற கருத்து இந்த மன்றத்திலே எழுகின்ற நேரத்திலெல்லாம், "அந்த வேலை உணவுப் பஞ்சத்தைப் போக்கிவிடுமா? சந்திர மண்டலத்தில் குடியேறுவதற்குத் துணை செய்யுமா?" என்று கேள்விகளை எழுப்புகின்ற ஆளுங் கட்சியிலிருந்து இப்படிப்பட்ட ஒரு சட்டம் வருவதை நான் உண்மையிலேயே பாராட்டுகின்றேன். தமிழகத்து

மக்கள் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுங் கட்சியில் இருக்கிறவர்கள் அத்தனை பேரும் தமிழ்ப் பற்று அற்றவர்கள் என்று நான் கூறிவிட மாட்டேன். அங்கேயும் நல்ல தமிழ்ப் பற்று உள்ள ஒரு சிலர் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த மசோதா சான்று அளிக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சேக்கிழார் பரம்பரையிலே வந்தவர்கள் என்று மன்றத்திலே இருக்கிற பலரும் பல முறை எடுத்துப் பாராட்டியிருக்கிறார்கள். அந்த மரபிலே வந்த காரணத்தினாலே அவர்கள் இப்படிப்பட்ட நல்லதொரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த மன்றத்தில், முன்பு ஒரு முறை நான் தனி நபர் தீர்மானம் ஒன்று கொண்டுவந்தேன். தமிழகத்திலே இருக்கிற பழைய இலக்கியங்கள், தொல்பொருள் நிலையங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், பிற நாடுகளிலே கிடைக்கக்கூடிய சான்றுகள் ஆகியவற்றை ஆராய்வதற்கு அந்தந்தத் துறையிலே வல்லுநர்களைக் கொண்ட குழுவை அமைத்து, தமிழகத்தினுடைய வரலாறு எழுதப்பட வேண்டும் என்று நான் ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தேன். அந்தத் தீர்மானத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருத்தளவிலே ஒப்புக்கொண்டார் என்ற நிகழ்ச்சியையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா எவ்வளவு மிக இன்றியமையாதது என்பதைப்பற்றி எனக்கு முன்னே பேசிய திருவாளர் கணேசன் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

தமிழகத்தினுடைய வரலாறு எழுதப்பட வேண்டுமென்றால், தமிழகத்திலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நகரங்களெல்லாம் இப்பொழுது கடல்கோளாலும், ஆற்று வெள்ளத்தாலும் மறைந்துபோயிருக்கின்றன என்பதற்குப் பல சான்றுகளைக் காட்ட முடியும். பத்துப்பாட்டில் பட்டினப்பாலை என்னும் பாட்டில், மறைந்த புகார் நகரம் பற்றிய விளக்கங்கள் மிகத் தெளிவாக அளிக்கப்பட்டிருக்கின்றன. புகார் நகரம் எப்படி அமைந்திருந்தது என்பதைப்பற்றிய விளக்கத்தைக் கூறுகிற நேரத்தில், அது காவற்காட்டைக் கொண்டிருந்தது என்றும், காவற்காட்டை அடுத்தால் அகழி இருக்கும் என்றும், அகழியை அடுத்தால் மதிற் சுவர் இருக்கும் என்றும், அதை அடுத்தால் புற நகர் இருக்கும் என்றும், அதையும் அடுத்து அகநகர் என்றும் அகநகருக்கும் புறநகருக்கும் இடையே அங்காடி இருக்கும் என்றும் நகர ஒப்புமுறையை மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். மருவூர்ப்பாக்கம், கருவூர்ப்பாக்கம் என்று இரண்டாக அமைந்திருக்கிறது. அந்த இரண்டு பாக்கத்திலே மருவூர்ப்பாக்கம் கடற்கரையை ஒட்டிய பகுதியாக இருந்திருக்கிறது. அந்த மருவூர்ப்பாக்கம் என்னும் கடற்கரைப் பகுதியில், இப்பொழுது உலகத்திலே மிகச் சிறந்த துறைமுகம் என்று சொன்னால் அந்தத் துறைமுகத்தில் என்ன என்ன அமைப்புகள் இருக்கின்றன

என்று சொல்லுகிறோமோ அவ்வளவு அமைப்புகளும் அங்கே பொருத்தப்பட்டிருந்தன என்ற நிகழ்ச்சியை அங்கே நாம காண்கிறோம். சிறு சிறு கப்பல்கள் வரிசையாக நிற்பதற்கும் அந்தச் சிறு கப்பல்களைக் கட்டுவதற்குக் கட்டுத்தறிகள் வரிசை யாக இருந்த நிகழ்ச்சியை பட்டினப்பாலை நமக்குத் தெரிவிக்கிறது.

அது மட்டுமல்லாமல், புகார் நகரத்தின் துறைமுகத்தைப்பற்றிச் சிறப்பாக ஒன்றைச் சொல்லுகிறார்கள். பெரிய கப்பல்கள் துறை முகத்திற்கு வருகின்ற நேரத்தில் துறைமுகம் அந்தக் கப்பல் நுழைவதற்கு இடம் தராது என்ற காரணத்திற்காக. அந்தக் கப்பலை நடுக்கடலில் நிறுத்திவிட்டு அந்தக் கப்பலில் ஏற்றிவந்தி ருக்கும் பண்டங்களையெல்லாம் சிறு சிறு கப்பல்கள் மூலமாகக் கரைக்கும் கொண்டுவந்துவிட்ட பிறகுதான், அந்தக் கப்பல் துறைமுகத்தினுள்ளே நுழையவேண்டும் என்ற நிலைக்கு மாறாக, அந்தப் புகார் துறைமுகம், பெரிய கப்பல்கள் தங்களுடைய விரித்த பாய்களைக் களையாமல் ஏற்றிய பாரங்களை இறக்கிவிட்டுப் போகக்கூடிய அளவுக்கு இருந்ததாகக் கூறப்படுகிறது. "மீப்பாய் களையாது மிசைப்பரம் தோண்டாது புகார் புகுந்த பெருங்கலம்". என்ற தன்மையிலே அந்த நிகழ்ச்சி கூறப்பட்டிருக்கிறது. அப்படி பட்ட புகார் நகரம் இப்பொழுது கடலுக்குள்ளே அமிழ்ந்து போயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க வேண்டிய பெரும் பணி நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதைப் போலவே, நம்முடைய தமிழகத்தைச் சுற்றிப் பல துறைமுகங்கள் இருக் கின்றன. அந்தத் துறைமுகங்களைக் காப்பாற்றக் கடமைப் பட்டிருக்கிறது நம்முடைய அரசு என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது மறைந்த மாநகரங் களினுடைய நிகழ்ச்சியாகும்.

அடுத்து, மகாபலிபுரம் போன்ற இடங்களில் கற்கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கற்கோயில்களைப் பற்றிப் பல கதைகள் கட்டிவிட்டிருக்கிறார்கள், என்றாலும் அந்தக் கற்கோயில்கள் அழியாமல், அவற்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

அடுத்து கல்வெட்டு. அதைப்பற்றி எனக்கு முன்னே பேசிய பெரியவர் மிக நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்போது சவுத் இண்டியன் இன்ஸ்க்ருப்ஷன் என்ற பெயரிலே ஒருசில வால்யூம்கள் தான் வெளியிடப்பட்டு இருக்கின்றன. அந்தக் கல்வெட்டுக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன, அவற்றின் கருத்துக்கள் என்ன என்பதை நன்றாக ஆராய்ந்து நமக்கு எடுத்துச் சொல்லக் கூடிய பேராசிரியர்கள் தமிழகத்தில் இருந் தார்கள். இப்போது அப்படி எடுத்துச் சொல்லக்கூடிய ஆசிரியர் களின் எண்ணிக்கை அருகி வருகிறது என்பதை மிக வருத்தத் தோடு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சதாசிவ பண்டாரத்தார் என்கிற பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்து அத்தகைய சிறப்பான பணியை ஆற்றி வந்தார்கள். அவர் மறைவுக்குப் பிறகு அவரைப் போன்ற

ஒருவரைத் தமிழகம் பெற முடியாத நிலை தான் இருக்கிறது. ஆகவே கல்வெட்டுக்களைக் காப்பாற்றுகின்ற நிலையோடு, கல்வெட்டுக்களை படித்து, நன்கு ஆராய்ந்து, எடுத்துச் சொல்லக் கூடிய சான்றோர்களை உண்டாக்குகின்ற பணியையும் இந்த இலாக்கா எடுத்துக் கொண்டாகவேண்டும் என்கிற என் கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மதுரைக் கோயிலில் ஒரு கற்கம்பம் இருக்கிறது அந்தக் கல் கம்பத்தில் 7 கம்பிகளைப் போன்ற அளவு தோண்டி எடுத்திருக்கிறார்கள். அந்தக் கல் கம்பத்தை ஒரு சிறிய லோகத்தைக் கொண்டு தட்டினாலும் அது ஏழு இசையை எழுப்புகிற நிலை இருக்கிறது. அத்தகைய சின்னங்களைக் காப்பாற்ற நம் சர்க்கார் முன் வரவேண்டும்.

கல்வெட்டுக்களை எடுத்துக்கொண்டால் கல்வெட்டுக்களில் முதலில் மெய்க்கீர்த்திகள் என்று அந்த அந்தக் காலத்தில் இருந்து வந்த அரசர்களைப் பற்றிக் கூறியிருக்கும். அடுத்து இருக்கிற பகுதியில் அந்த அரசன் எந்த எந்த அரசனோடு, எந்த எந்த இடத்தில் போரிட்டு, எத்தகைய வெற்றிகளைப் பெற்றுள்ளான் என்கிற விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தச் சோழன் இந்தப் பாண்டியனை வென்றான், இந்தப் பாண்டியன் இந்தச் சேரனை வென்றான் என்கிற விவரங்கள் நமக்குத் தேவையா என்று நினைக்கலாம். ஆனால் இந்தக் கல்வெட்டுக்களின் மூலமாக அந்தக் காலத்தில் வாழ்ந்த நமது முன்னோர்களின் மன வளம் எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்பதை அவை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டக்கூடியனவாகவும் அமைந்திருக்கின்றன. வடாற்காடு மாவட்டத்தில் செய்யாறு வட்டாரத்தில் உக்கல் என்ற கிராமத்தில் ஒரு பெருமாள் கோயில் இருக்கிறது. அந்தப் பெருமாள் கோயிலில் இருக்கின்ற கல்வெட்டு ராஜராஜன் கிணறு என்ற பெயரிலே வித்வான் பரிட்சைக்கு பாடமாகவும் கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் இருக்கிறது. அந்தக் கல்வெட்டிலே நம்முடைய மக்களின் அறம் செய்யும் பண்பு எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். தண்ணீர்ப் பந்தல் வைத்து, என்ன என்ன நியமங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதுமட்டும் அல்லாமல் நிலங்களை எப்படி எப்படிப் பிரித்தார்கள். எந்த எந்த வகையில் வரி விதித்தார்கள் என்பனவற்றை எல்லாம் கல்வெட்டுக்களின் மூலம் தெரிந்துகொள்கிறோம். உத்தரமேரு கல்வெட்டில் நம் நாட்டில் பஞ்சாயத்து முறை எவ்வாறு அமைந்திருந்தது, பஞ்சாயத்து முறை தேர்தல் எப்படி அமைந்திருந்தது என்பனவெல்லாம் நன்கு விளக்கப்பட்டு இருக்கின்றன. ஏற்கனவே இதைப்பற்றி நான் இங்கே கூறியிருப்பதால் அந்த விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்ல முற்படவில்லை. நம்முடைய நாட்டில் உள்ள கல்வெட்டுக்கள் எல்லாம் காக்கப்படவேண்டும். நல்ல முறையில் பராமரிக்கப்படவேண்டும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இன்றையதினம் கோயில் திருப்பணி என்ற

5th November 1966] [புலவர் கா. கோவிந்தன்]

பெயராலே அந்தக் கற்கள் எல்லாம் எப்படி எப்படியோ மாற்றி அமைக்கப்பட்டுவிடுகின்றன. அந்த நிலை ஏற்படாதவாறு காக்க வேண்டும்.

கோயில் திருப்பணி என்கிறபோது அதுபற்றி ஒரு விஷயத்தில் எனக்கும் முதலமைச்சர் அவர்களுக்குமே ஒரு கருத்துவேறுபாடு உண்டு. கோயில் திருப்பணிக்கு சர்க்கார் பணம் கொடுக்கிறார்கள். அழகழகான வண்ணங்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. புதுப் புது பொம்மைகள் எல்லாம் வைக்கப்படுகின்றன. இவை அழகாகத் தான் இருக்கின்றன. மறுக்கவில்லை. ஆனால் இப்படி ஆயிரம் ஆண்டு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்களை எல்லாம் புதுப்பிக்கிறபோது அந்தக் கோயில்களின் பழைய மெருகு மாறிவிடுகிறது. அதை நான் சொல்கிறபோது முதல் அமைச்சர் அவர்கள் புதுப் புது வண்ணங்கள் கொடுப்பது அழகாகத்தான் இருக்கும் என நிபுணர்கள் சொல்கிறார்கள் என்றார். நிபுணர்கள் சொல்லலாம். அதை நான் சந்தேகிக்க வில்லை. வண்ணங்கள் அழகாகத்தான் இருக்கின்றன. அதை நான் சந்தேகிக்கவில்லை. ஆனால் அந்தக் கோயில் மிகப் பழங்காலத்தில் கட்டப்பட்டன என்று மக்கள் உணர்ந்துகொள்கிற---பழைய உணர்வைத்தான் கெடுத்துவிடுகிறது. இப்படிப் பழைய உணர் வைக் கெடுத்துவிடக்கூடிய அளவில் புதுப் புது வண்ணங்களை ஏற்றக் கூடாது என்கிற கருத்தை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் சொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இதேபோல அந்தக் காலத்து நாணயங்கள் அகப்படு கிறபோது---அவை யாருடைய காலத்தில் எப்படி வழங்கப்பட்டன என்பதை உணர்ந்து கொள்ள காப்பாற்றப்படவேண்டும்.

அடுத்து, எனக்கு முன்னே பேசிய பெரியவர் குறிப்பிடுகிற போது—திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் நினைவுபடுத்தினார் என்று நினைக்கிறேன்—சுவடிகள் காப்பாற்றப்படவேண்டும் என்றார். நிச்சயமாக அதைப்பற்றிச் சந்தேகம் இல்லை. சுவடிகளும்கூட பழம்பெரும் சின்னமாகவே மதித்துக் காப்பாற்றப்படவேண்டும்.

தமிழகத்தில் படிக்கின்ற முறையில் ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டது. இன்றையதினம் தமிழ் நூல்களை விருப்பத்தோடு படிக்கின்றவர்களின் தொகை அருகிவிட்டது. ஒருசிலர் படிக் கிறார்கள் என்றாலும் அவர்களும் கல்லூரி ஆசிரியராக வரலாம், பள்ளி ஆசிரியராக வரலாம் என்கிற எண்ணத்தில் தான் படிக் கிறார்கள். இவர்களும்கூட படிக்கிறபோது பரிட்சைக்கு அகநானூற்றில் 50 பாடல்கள், புறநானூற்றில் 50 பாடல்கள் என்றால் அந்தப் பாடல்களிலும் பரிட்சைக்கு கேள்வியாக வரக் கூடிய வரிகளை மட்டும் படிக்கிறார்களே, தவிர அகநானூறு என்றால் அந்த நானூறு பாடல்களையும் படிக்க வேண்டும். புறநானூறு என்றால் அந்த நானூறு பாடல்களையும் படிக்கவேண்டும் என்கிற எண்ணமே அற்றுப்போய்க்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலை வளர்ந்து வருவதன் காரணத்தினால் சில அருமையான நூல்கள் அச்சிடப்பட்டால்கூட விற்பனையாவதில்லை. ஆகவே

[புலவர் கா. கோவிந்தன்] [5th November 1966

அருமையான நூல்களைப் பதிப்பிக்க யாரும் முன்வரவில்லை. இலக்கண விளக்கம் என்ற நூல் மிக அருமையானது. தொல்காப்பியத்திற்கு இணையான நூல், ஆனால் அந்த நூல் இன்றையதினம் அச்சில் இல்லை. இருக்கிற புத்தகத்தைப் பிரித்தால் அதன் ஏடுகள் அப்பளம் நொறுங்குவது போல நொறுங்குகின்ற நிலையில் தான் இருக்கும். இப்படிப்பட்ட பழம்பெரும் நூல்களை எல்லாம் பதிப்பிக்க தமிழக சர்க்கார் ஆவன செய்யவேண்டும். அவற்றை அச்சிட்டுக் காப்பாற்ற வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து என் தொகுதியில் இப்படிப்பட்ட சின்னங்கள் பல இருக்கின்றன. மாமண்டூர் என்கிற பெரிய ஊர் ஒன்று இருக்கிறது. அங்கே இருக்கிற ஏரி காவேரிப்பாக்கம் ஏரிக்கு அடுத்ததாக இருக்கும். அந்த ஏரிக்கரைகள் எல்லாம் மலைகள் தான். அந்த மலைகளில் பல குகைகள் இருக்கின்றன அந்தக் குகைக்குள் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. காஞ்சிபுரத்தில் இருந்து போகிறபோது அந்தக் குகைகள் தெரியும். அந்தக் குகைகள் காக்கப் படவேண்டும். அந்தக் குகைகளுக்குள் இருக்கும் கல்வெட்டுகள் ஆராயப்படவேண்டும். அடுத்து அத்தி, ஆளப்பிறந்தான் என்ற இரண்டு ஊர்கள் இருக்கின்றன. அத்தி என்ற பெயரே—அப்பெயரில் வாழ்ந்த சேரநாட்டு மன்னனை நினைவுகொள்ளச் செய்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தின் பெருநகரை அடுத்து அது இருக்கிறது. அங்கே போய்ச் சேருவதற்குச் சரியான பாதை இல்லாத அந்த ஊரில் மிக அழகான சோழர் காலத்துக் கோயில் இருக்கிறது. அதைக் காப்பாற்றவேண்டும். அத்திக்கு அடுத்த சேத்துப்பட்டில் பாதுகாக்கப்பட்ட நிலம் என்பதாக போர்டு தொங்குகிறது. அப்படி பாதுகாக்கப்படுகிற அந்த இடத்தில் என்ன பொருள் இருக்கிறது என்றே தெரியவில்லை. மண் எடுக்கக் கூடாது. ஆழத் தோண்டக் கூடாது என்பதான குறிப்பு இருக்கிறது. அங்கே புதைந்த பெரு நகரம் ஒன்று இருக்க வேண்டும், அல்லது உயர்ந்த பொருள் இருக்கவேண்டும். அந்த இடத்தைத் தோண்டி அங்குள்ள அரிய பொருள் என்ன என்பதை அந்த இலாக்காவினர் கண்டு பிடிக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நல்ல காரியங்களை எல்லாம் செய்ய வருகிற இந்த மசோதாவை வரவேற்று, இந்த மசோதாவைக் கொண்டு வந்துள்ள முதல் அமைச்சர் அவர்களைச் சொந்த முறையில் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்**: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய பழம் பெரும் சின்னங்களின் பாதுகாப்பு மசோதாவை நான் வரவேற்கிறேன். எகிப்து நாடு எத்தகைய அளவில் தனது பழம்பெரும் சின்னங்களைப் பாதுகாத்து, தனது பழம் பெரும் வரலாறுகளைப் பெருமையோடு பேணிக்காத்து வருகிறது என்று பார்க்கவேண்டும். அதோடு இன்று அந்த நாட்டில் உள்ள பிரமிடுகள் பற்றி—அவை பழங்காலச் சின்னங்கள் என்று தெரிவிக்கிற

போது அது மிகப் பெருமைப்படுவதைப் பார்க்கிறோம். அது போல ஒவ்வொரு நாடும் தங்கள் தங்கள் நாட்டில் உள்ள புராதனச் சின்னங்களை, பொருள்களை பாதுகாத்து, மரியாதை யோடும், பெருமையோடும் நடந்துகொள்ள சந்தர்ப்பம் உண்டு. அந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் பரவிய நாகரிகம் தமிழனுக்கு மாத்திரம் சொந்தமல்லாமல் இருந்திருக்கிறது. தமிழ்நாட்டின் நாகரிகத்தைப்பற்றி நல்லவிதமாக ஆராய்கின்ற பொழுது இந்த நாட்டினுடைய ஒருமைப்பாடே நம்முடைய நினைவுக்கு வரும். எத்தகைய அளவுக்குக் கலைச்செல்வங்கள், புராதனச் சின்னங்கள், சிற்பங்கள் எல்லோருடைய ஒருங்கிணைந்த ஞானத்தையும், கைத்திறனையும் கொண்டு ஒரு பொக்கிஷமாக விரிவுகொண்டதாக உள்ள பொக்கிஷமாக இருக்கிறது என்ற உண்மையை அவையெல்லாம் புலப்படுத்திக்கொண்டே இருக்கும். திருப்பதிக்குச் சென்றுவிட்டுத் திரும்புகின்ற வழியிலே திருக் காளத்தியிலே உள்ள கோயிலிலே அங்கேயுள்ள கர்ப்பக் கிரகத்தை யொட்டி எழுதப்பட்டுள்ள சில வாசகங்களைச் சில நிமிஷங்கள் வாசிக்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எல்லா வாசகங் களையும் வாசிக்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காவிட்டா லும்கூட ஒருசிலவற்றை வாசிக்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. தமிழ்நாட்டிலே உள்ள ஸ்தலத்திலே இந்தி மொழி யிலே வரலாறுகள் ஆயிரமாண்டுகள் சரித்திரத்தைத் தெரிவிக்கின்ற முறையிலே எழுதப்பட்டிருக்கின்றன. அந்த இடத்திலே இருக்கக் கூடிய வரலாறுகள் அத்தனையும் படித்துப் பார்த்தால், அவற்றை ஆராய்ந்தால், ஒவ்வொரு பகுதியிலும், மதத்தின் பெயரால், எழுத்தின் பெயரால், மொழியின் பெயரால், இடத்தின் பெயரால், இருக்கக்கூடிய மாச்சரியங்கள், இவற்றைப்பற்றிய வித்தியாசங்கள் எல்லாம் மாறுவதற்கு ஏதுவாக இருக்கும். சமீபத்திலே மதுரை யிலே கலைச் சின்னங்கள், சிற்பங்கள் எல்லாம் சேர்த்துவைத்துப் பொருட்காட்சி வைத்திருக்கிறார்கள். வருடம் ஒன்றுக்கு ஏறக் குறைய 50 ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவுக்கு இருக்கக்கூடிய அந்தப் பொருட்காட்சியினால் இந்த நாட்டினுடைய வரலாற்றுச் சிறப்பைத் தெரிந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்து இருக்கிறது. பழங்காலச் சின்னங்கள், சிற்பங்கள் இவற்றையெல்லாம் பாதுகாப்பாக வைப்பதன் மூலமாகத்தான் அவற்றை ஒருங்கு சேர்த்து நிரந்தரமாக இருக்கக்கூடிய அளவிலே பொருட்காட்சியாக அமைப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும். இது சம்பந்தப்பட்டவரையில் சில நண்பர்களைப்பற்றி எனக்குத் தெரி யும் சாத்தான் குளத்திலே தேசபக்தர் ஸ்ரீமான் ராகவன் என்பவர் இருக்கின்றார். அவர் 30, 40 ஆண்டுக் காலத்தை ஆராய்ச்சியிலே செலவழித்து, அதன்மூலமாக கடல்வாழ் பொருள்கள், இன்னும் சில அரிய பழங்காலப் பொருட்களையும் ஆராய்ச்சி செய்து சேர்த்துத் தொகுத்து பொக்கிஷமாக வைத்திருக்கின்றார். அதைப் போலவே கன்யாகுமரி ரெவரண்ட் பாதர் ஹிலாரி என்பவரைப் பற்றியும் தெரியும். அவரும் கடல்வாழ் பொருள்களையும், பழங் காலச் சிற்பங்கள், சின்னங்கள், காசுகள், அச்சுப் பிரதிகள், ஏடுகள் இவற்றையெல்லாம் தொகுத்து வைத்து அவற்றைப்

11.30 a.m.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [5th November 1966

பராமரிப்பதற்குச் சக்தியில்லாதவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மசோதாவின் மூலமாக அப்படிப்பட்ட பொக்கிஷங்களையெல்லாம் சேர்த்து வைத்திருக்கின்ற, தொகுத்துப் பாதுகாத்து வைத்திருக்கின்ற, அவற்றினுடைய பழைமையும், புனிதமும் கெடாமல் காத்து வைத்திருக்கின்றவர்களுக்கு, அவற்றைப் பராமரிக்கச் சக்தியில்லாமல் இருக்கின்றவர்களுக்கு சர்க்கார் சன்மானம் கொடுத்து அந்தச் சுமையை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் வரும். மதுரையிலே புராதனமான கலைச்செல்வங்கள் கொண்ட கோயில்கள் இருக்கின்றன. அவையெல்லாம் சைவ சமயத்தையோ அல்லது வைணவ சமயத்தையோ மட்டும் சேர்ந்தவையல்ல. கனம் முதலமைச்சர் அவர்களின் மூலமாக இந்த அரசாங்கம் கடந்த சில ஆண்டுகளாகவே தேவாலயங்களின் சீர்திருத்தப் பணியை மேற்கொண்டு அவற்றின் சிறப்புக்களைப் போற்றி வந்திருக்கின்ற நிகழ்ச்சியும் வரலாற்றிலே இடம் பெறக்கூடிய நிகழ்ச்சிதான். இந்த நிகழ்ச்சியும் அதோடு சேர்ந்த நிகழ்ச்சிதான். இதற்கெல்லாம் முன்பே அந்தப் பணி தொடங்கப்பட்டுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். அதன் தொடர்ச்சியாக வருவதுதான் இந்த மசோதா. பழங்கால இந்து மதக் கோயில் மட்டுமல்ல, காயல் பட்டணத்தில் மகல்ரா தொழுகை இடம் என்ற ஒரு புனித இடம் இருக்கிறது. அதனுடைய கட்டட அமைப்பே தனியானது. அது சரித்திரப் பிரசித்தி பெற்றதாக இருக்கிறது. எந்தவிதமான விட்டமோ சட்டமோ இல்லாமல் அதைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கைத்திறனை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவ்வளவு சிறப்புள்ள இடம் அது. அதேமாதிரி, ஜீஸஸின் புனிதமான சீடர் சேசியரவர்கள் இந்நாட்டில் சுற்றி வந்து இறந்துபோன பின் அன்னாருடைய எலும்பு ஒரு பக்கம், பற்கள் ஒரு பக்கம் இவையெல்லாம் தமிழ்நாட்டில் புனிதமாக பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஆங்காங்கே உள்ள இடங்களில் கேட்டுப் பெற்றுப் புனிதமாகப்போற்றிப் பாதுகாக்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும். கன்னியாகுமரியில் தக்கலை செயின்ட் தாமஸ் அவர்களுடைய புனிதமான இடம், அங்கே அவருடைய சிலை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட புனிதமான சிலைகளையும், சின்னங்களையும், சிற்பங்களையும் சேர்த்துத் தொகுத்து வைப்பதற்கு, சர்வ மதங்களுக்கும் சேர்த்து இருக்கின்ற அற்புதமான பொக்கிஷங்களையும் சேர்த்து வைப்பதற்கு இந்த மசோதா வழி செய்யும் என்று நினைக்கிறேன். சோலார்ஜங் மியூஸியம் ஹைதராபாத்திற்கு அல்லது ஆந்திர ராஜ்யத்திற்கு வருகின்றவர்களை கவரக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது. அங்கு செல்லக்கூடியவர்கள், அதைப் பார்க்காமல் வந்தால் பாக்கியமில்லை. அதைப்பார்த்தவர்கள் எல்லாம் பாக்கியமுள்ளவர்கள் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு பொருள்கள் அதில் அடங்கியிருக்கின்றன. பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே இருக்கக்கூடிய பெயிண்டிங் இருக்கிறது. ஏதாவது ஒரு சிறு கிராமத்திலோ அல்லது புல்லாந்தரிசிலோ அல்லது புதரிலோ கூட இருக்கும். அங்கே அவுரி தென்படும். அதிலே பழங்காலத்தில் தீட்டிவைத்து இருக்கிற அற்புதமான

5th November 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

பெயிண்டிங் இருக்கும். அவையெல்லாம் கலர்செய்யப்பட்டவை என்று நினைக்கமுடியாத அளவுக்கு காட்சியளிக்கும். இந்த பெயிண்டிங் அந்தந்தப் பகுதியிலேயே கிடைக்கின்ற பெயிண்டிங் பொருள்களைச் சேகரித்து கலவை செய்தவைகளாயிருப்பது ஆராயத்தக்கது. சில இடங்களிலே அதற்கான பொருள்கள் இருக்கும். உதாரணமாக பொன் அவரை என்று சொல்லக்கூடிய அவுரி என்பது இதற்காக உபயோகப்படுத்தக்கூடியது. அது ஒரு ப்ளாண்ட். அவற்றையெல்லாம் சீராக அந்த அந்தப் பொருள் களிலே சேர்ப்பதின்மூலம் எப்பொழுதும் நீங்காத, மறையாத பெயிண்டிங் ஏற்படுகின்றது. ஆகவே, இந்த மசோதாவின் மூலமாக அப்படிப்பட்ட பெயிண்டிங் என்றும் மாறாத, மறையாத, மங்காத அளவுக்கு நிரந்தரமாக இருக்கின்ற அளவுக்கு வண்ணம் தீட்டக்கூடிய பொருள்களைப் படைக்க சந்தர்ப்பம் ஏற்படலாம். இதைத்தவிர நம் தமிழ்நாட்டை நோக்கிவருகின்ற டூரிஸ்டு களுக்கு இவையெல்லாம் சேர்த்து வைத்து இருப்பது ஒரு சிறந்த அட்ராக்ஷனைக்கூட இருக்கும். அவர்கள் எல்லாம் இவற்றைப் பார்ப்பதற்காக வருவார்கள்.

திருநெல்வேலியிலே நெல்லையப்பர் கோவிலிலே சப்த ஸ்வரங்கள் பேசுகின்ற கற்கள் இருக்கின்றன. இதைப்போலவே கிருஷ்ண புரத்திலே ஒரு வேடன்கையில் இருக்கிறது. அந்த வளைந்த வில் முழுவதும் துவாரம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது வளைந்த பகுதி, எப்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றே கண்டு பிடிக்க முடியவில்லை. இந்தப் பொருள்களையெல்லாம் மத்திய அரசாங்கம் சேர்த்து வைத்தாலும்கூட, ராஜ்ய அரசாங்கமும் இதில் கவனம்செலுத்தி பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், பொறுப்பை வலியுறுத்துகின்ற நிலையில்தான் இந்த மசோதா இருக்கிறது. திருநெல்வேலி யிலிருந்து திருச்செந்தூர் போகின்ற வழியில் ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் பரம்பு, அதாவது தாழிப்பானை கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. அது முதியவர்களுக்காக உபயோகப்படுத்தக் கூடியது. கூனிக் குறுகிப் போன பருவத்திலே முதியவர்களை நல் அடக்கம் செய்வதற்காகத்தான் அந்தப் பானை இருந்திருக்கிறது. அந்தப் பானை சென்னை மியூஸியத்திலே கூட இருக்கிறது. இவை யெல்லாம் நல்ல முறையில் ஜியாலாஜிக்கல் டிபார்ட்மெண்டால் பாதுகாக்கப்படுகின்றது என்று சொல்லமுடியாது. இதைத்தவிர ரஸ்தா போடக்கூடியவர்கள், ரஸ்தாவை விஸ்தரிக்கின்ற விஷயத் தில்தான் கவலையுள்ளவர்களாக இருக்கின்றார்களே ஒழிய, அவர்கள் அதை விஸ்தரிக்கும் பொழுது அங்கே கிடைக்கின்ற சின்னங்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற கவலை இல்லை, அந்த அவசியமும் அவர் களுக்கு இல்லை. ஆகவே இதையெல்லாம் நல்ல முறையிலே கவனித்து சேகரிக்கவேண்டும். சின்னஞ்சிறிய தாழிப்பானைகள் உடைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் எடுத்துப் பாதுகாக்க வேண்டும்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [5th November 1966

திருச்செந்தூர் தாலுகாவிலே குதிரைமொழித்தேரி இருக்கிறது. குதிரைமொழித்தேரியிலே புராதனமான ஒரு நகரமே முழுகியிருக்குமோ என்ற அளவுக்கு ஒரு மண் மேடு இருக்கிறது. அதை ரிசர்வ் பாரஸ்ட் என்று சொல்லி காட்டு இலாகாவின் மூலமாகப் பாராமரிக்கப்பட்டு வருகிறது. அதை ஆராய்ந்து பார்த்தால் சிறந்த புராதனச் சின்னங்கள், பொருள்கள் கிடைக்குமென்று நினைக்கிறேன். நான் ஒரு ரெக்கார்டில் பார்தேன் தமிழ்நாட்டிலுள்ள சில பழம் பொருள்கள் மலையாள ராஜ்யத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும், அதை எப்போது திரும்பிக் கேட்கிறீர்களோ அப்போது திருப்பிக் கொடுக்கப்பட்டவிடும் வகையில் தாஸ்தாவேஜிகள் இருக்கின்றன. இப்படி வெளி ராஜ்யங்களுக்குச் சென்று விட்ட பழங்காலச் சின்னங்களைக் கூட திரும்பப் பெறுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் வழி ஏற்படும் என்று நினைக்கிறேன். இந்தக் காரியங்களை எல்லாம் நிறைவேற்றும் வகையில் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதா சிறந்த ஒன்று ; இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி :** கனம் சபாநாயகர் அவர்களே, தொன்மையானதும் வரலாற்றுச் சிறப்புள்ளதுமான சின்னங்கள், தொல்பொருள் ஆராய்ச்சிக்கான இடங்கள், சின்னங்கள் குறித்த மசோதாவின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றிச் செயல்படுத்தும்போது கலைக் கண்ணோடு, பௌதிக அடிப்படையில், பகுத்தறிவுக்கு ஒவ்வாத காரியங்களை ஒதுக்கி செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் ஆத்தூர் என்ற ஊரில் நஞ்சைகள் சூழ்ந்திருக்கின்ற ஒரு இடத்தில் ஒரு மேடு இருக்கிறது. அந்தமேடு புத்த மேடு என்ற பெயரால் பல்லாண்டு காலமாக வழங்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் வயலுக்காக அந்த மேட்டை வெட்டும்போது கற்சிலை ஒன்று கிடைத்தது. அந்தச் சிலையின் அடையாளம் புத்தருடைய உருவத்தை ஒத்திருந்தது. அதனால்தான் அது புத்த மேடு என்று சொல்லப்பட்டு வந்ததோ என்ற எண்ணத்தைத் தருகிறது. அந்த புத்தர் சிலையைப்பற்றி ஆராய்ச்சி பண்ண வேண்டியதும் அவசியம். அந்தப் பகுதியில் புத்த மதப் பிரசாரம் செய்யப்பட்டதா, எப்போது செய்யப்பட்டது, எந்த வகையில் செய்யப்பட்டது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டியது அவசியம். தமிழகத்தில் புத்த மதம் புகுத்தப்பட்ட காலத்தில் அந்தச் சிலை ஏற்பட்டதா என்பதையெல்லாம் ஆராய்ச்சிக்காரர்கள் கண்டு பிடிக்கவேண்டும்.

திண்டுக்கல் பக்கத்தில் தாடிக்கொம்பு என்ற சிற்றூர் இருக்கிறது. அங்கு ஒரு பழமையான கோயில் இருக்கிறது. அதற்குள் நுழைந்தால் அற்புதமான சிற்பங்களைக் காணலாம். ஒவ்வொரு தமிழனும் பார்க்க வேண்டிய கோயில் அது. கலைக் கண்ணோடு பார்க்க வேண்டும், வேறு எதையாவது வைத்துக் கொண்டு

பார்க்கக் கூடாது. ஒவ்வொரு சிலையும் அற்புதமாக இருக்கிறது. ஒரு சிலையைக் குச்சியில் தட்டினால் அருமையான நாதம் உண்டாகிறது. மியூசிகல் சவுண்ட் ஏற்படுகிறது. எந்த நாதத்தை விரும்பி தட்டுகிறார்களோ அந்த நாதம் உண்டாகிறது. எந்த ராகத்தை விரும்புகிறோமோ அந்த ராகம் கேட்கிறது. இந்த மாதிரிப் பிரமாதமான அமைப்பு கலைத் திறன் படைத்த சிற்பியால் செய்யப்பட்டிருக்கிறது. இது எந்தக் கல்லில் செய்யப்பட்டது, அந்த ஒரு கல்லுக்கு மட்டும் அந்த நாதம் உண்டாகக் காரணம் என்ன என்றெல்லாம் ஆராய்ச்சி பண்ண வேண்டும்.

கனம் சபாநாயகர்: ஒருவரும் மசோதாவின் விதிகளைப்பற்றிப் பேசவில்லை. அவரவர்களுடைய ஊர்களிலுள்ள சிலைகளைப் பற்றியே பேசிக் கொண்டு போகிறார்கள். மசோதாவில், பிரிவுகள் இப்படி இருந்தால் நல்லது என்ற வகையில் யாரும் பேசவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: மதுரை திருமலைநாயக்கர் மகாலில் 'சீலிங்' கில் வண்ணம் தீட்டப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 400 ஆண்டு காலமாக அப்படியே இருக்கிறது. ஆனால் மதுரைக் கோயில் திருப்பணியின்போது தீட்டப்பட்ட வண்ணங்கள் எல்லாம் அதற்குள் கலைந்து விட்டன. ஆகவே, அந்தக் காலத்தில் தீட்டப்பட்ட வண்ணங்கள் எல்லாம் எப்படித் தயாரிக்கப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் ஆராய வேண்டும். கெமிகல் ப்ராசஸ் என்ன என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குரியது. பௌதிக முறையில் ஆராய்ச்சி செய்யவேண்டும். இந்த விதமாக ஆராய்ச்சிகள் செய்து எல்லாம் இதைப் பார்க்க வேண்டியது அவசியம் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. NANJUNDA ROW: Mr. Speaker, Sir, I do not wish to take much time of the House on this Bill. While welcoming this non-controversial but extraordinarily important Bill, I wish to say one or two things. We may all remember that the late Pandit Jawaharlal Nehru once told that he was rather a child of the Himalayas. As the late Pandit Jawaharlal Nehru felt that he was the son of the Himalayas, we also feel, when we see the historical or religious monuments that we are the children or the sons of these monuments. So, it is very important that we preserve these monuments in the way that our national pride demands. When we go to Delhi or Agra, we see how well the Red Fort and the Taj Mahal are preserved. In the same way when I go to Fort St. George I do not get that inspiration. There is no guide to take me and explain what is here and what is there. Even the Church where Robert Clive had got married is not shown to the visitors. When humble people come, they are not shown everything in Fort St. George. Somehow, I feel that even the Secretariat building should not have been located here. If the Parliament building in Delhi had been located in the Red Fort, Delhi, it would have become a mere mundane place of administrative office. It is all right that we have the Secretariat Offices and the State

Legislature here at the Fort St. George but when people of our State come here, everything should be shown to them. I do not accuse the Archaeological Department but I suggest that proper guides must be there. When illiterate and humble people come, the history of Fort St. George and the rise of the British Empire should be explained to them. The same arrangements should be made with regard to the Fort at Vellore, the Tirumalainaicken Palace in Madurai, the Fort at Dindigul, Mahabalipuram, etc. I also request the Archaeological Department to make proper arrangements to depict the story of these monuments to our people.

Sir, I want to refer to one or two points and close my speech. Monuments of our country speak of our history, culture and religion. What is Madras if the Church at St. Thomas Mount is not here or the Fort St. George campus is not here? So these monuments must be properly preserved.

In the Statement of Objects and Reasons appended to the Bill, three lists have been mentioned. One is the Union List, another is the State List and yet another is the Concurrent List. What is of national importance to India is very important to this State. Even the monuments included in the Union List and the Concurrent List are important to the State. So far as the State is concerned, this differentiation need not be there. Even the monuments included in those lists must be preserved by our State. I think the Government of India are not preserving the monuments in the way in which they should be preserved. I am saying this after visiting the Taj Mahal and the Red Fort. They are places of national pride. The State Government must come to an understanding with the Archaeological Department of the Government of India to see to the proper preservation of the monuments in this State.

Mr. Saw. Ganesan made a very valuable speech and he converted this House into a temple of learning. I feel he should be a visiting professor of all the Universities in regard to archaeological matters. He is an erudite scholar and I hope he will devote all his energies to the cause of culture and allied matters. Of course, I do not speak anything about his politics.

While commending this non-controversial Bill, I want to thank the Hon. Chief Minister who believes in our culture and its development. I hope that during his regime even after the ensuing general elections, the monuments of our country will be well preserved and made available to posterity.

திரு. கி. இரா. சம்பந்தம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து ஒருசில கருத்துக்களை சபை முன் வைக்க விரும்புகிறேன். பத்தொன்பது ஆண்டுகள் கழித்தாவது நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய இந்த மாதிரி மான்யுமெண்டல் ரிக்கார்ட்ஸ் பழைய ஞாபக சின்னங்கள் இவற்றை நல்ல முறையில்

5th November 1966] [திரு. கி. இரா. சம்பந்தம்]

பயன்படுத்த வேண்டும் என்றதொரு முடிவிற்கு வந்திருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக தஞ்சை ஜில்லாவில் கடாரம்கொண்டான் என்ற ஊரில் சோழ அரசர்களால் கட்டப் பட்ட கோவில் ஒன்று இருக்கிறது. அதைக் கட்டிக் கொண்டு வரும் போது பாதியிலேயே நிறுத்திவிட்டார்கள். இத்தனை ஆண்டு களாகியும் அது பாதியாகவே இருந்து கொண்டிருக்கிறது. செம்பனூர்கோவில் பக்கத்தில் உள்ள அது இன்று கிடாரம் கொண்டான் என்ற பெயரில் இருக்கிறது. கங்கைகொண்ட சோழ புரத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டு 'it is under the active consideration of the Government' என்று பார்க் கப்பட்டு வருகிறதே தவிர அங்குள்ள ஞாபகச் சின்னங்கள் கெட்டுப்போகாமல் அவற்றை நல்லமுறையில் பயன்படுத்து வதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த மசோதா வந்த பிறகு நாமே அதை ஏற்று நல்ல முறையில் நடத்தும்படியான நிலையை வைத்துக் கொண்டால்தான் வசதியாக இருக்குமே தவிர இல்லா விட்டால் மத்திய சர்க்காரால் அமைக்கப்படுகிற அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுப்பதுதான் சரியாக இருக்கிறதே தவிர வேலை ஒன்றும் நடப்பதில்லை.

வேலூரில் யுத்தத்தில் இறந்த சிப்பாய்களுக்கு ஒரு ஞாபக சின்னம் இருந்து வந்தது. அதுபற்றி சர்வ கட்சி கூட்டம் நடத்தி அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரிவித்திருந்தார்கள். அது கிருஸ்துவ மதத்தினருக்கு சர்ச் கட்ட கொடுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் அதைக் கட்டுவதாக இருந்தால் கட்டி யிருக்கலாம். ஆனால், அங்கு ஞாபகார்த்த சின்னம் இருப்பதால் வார் மெமோரியல் என்ற பெயருடன் இன்னும் வைக்கப்பட்டிருக் கிறது. அதுபற்றி கேட்டால், அது மத்திய சர்க்கார் கையி லுள்ளது. அவர்கள் அதைக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல் வதை விட்டு மாநில சர்க்காரே அந்த மாதிரி ஞாபகச் சின்னங்களை எல்லாம் ஏற்று நடத்தும் முறையில் மத்திய சர்க்காருடன் ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும். அங்கு கோட்டைக்குள் இருக்கிற கோவில் இன்று பரிதாபகரமான நிலையில் இருக்கிறது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

தண்ணீர் இல்லாத ஆறு, மூர்த்தி இல்லாத கோவில், அரசன் இல்லாத கோட்டை என்று சொல்கிற பழமொழி போல் அது இருக்கிறது. அதை நல்லமுறையில் செப்பனிட்டு, செப்பனிட்டு என்று சொல்லும்போது அங்குள்ள சிற்பங்கள் அல்லது கலைச் செல்வங்கள் அழியாத முறையில் பாதுகாக்கப் படவேண்டும். அழியும் தருவாயில் இருப்பதைப் புதிப்பிக்க வேண்டும். அந்த முறையில் செய்தால் சிறந்து விளங்கும்.

திருக்கடையூர் பக்கத்தில் மாதவி இருந்த இடம் இன்னும் அப்படியே இருக்கிறது. பக்கத்தில் ஒரு குளம் மாதவி குளம் என்றிருக்கிறது. இவை கதையில் வந்தவை என்று சொல்ல முடியாது. நடந்த விஷயங்களை வைத்துக் கொண்டு

[திரு. கி. இரா. சம்பந்தம்] [5th November 1966

எழுதப்பட்டவை இவை. அவை சரித்திரமாகவும் கலைச் செல்வமாகவும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் புதுப்பித்து நல்ல ஞாபகச் சின்னங்களாக வைக்கவேண்டும். காவிரிப் பூம்பட்டினத்தில் கண்ணகியின் சிலை பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கிறது. அதை கண்ணகியின் சிலை என்று சொல்லவே வெட்கமாக இருக்கும் நிலையில் இருக்கிறது. ஆகவே, நல்ல கலைஞர்களை வைத்து அதைப் புதுப்பித்து பாதுகாக்கவேண்டும். தஞ்சையில் அந்தக் காலத்தில், கூட கோபுரம், மாட மாளிகைகள் என்று ராஜாக்களால் கட்டப்பட்டன. இன்று, கூட கோபுரங்களும் இல்லை. மாட மாளிகைகளும் இல்லை. இன்று அவை சர்க்கார் வசம் இருக்கின்றன. முன்கூட்டியயே அவை இடியாது பாதுகாக்கப்பட்டிருந்தால் இப்போது அவை நல்ல விதத்தில் இருந்திருக்கும்.

சரஸ்வதி மஹால் கூட இவர்கள் புதுப்பிக்கப்போய் ஒரு இடத்திலிருந்து சப்தம் போட்டால் அதேமாதிரி எல்லாவிடங்களிலும் கேட்கும் ஒரு முறையில் அது அமைக்கப்பட்டு இருந்தது. ஆனால், இப்போது 'எக்கோ' உண்டாக்கும் நிலைமைக்கு வந்து விட்டது. நுணுக்கமான வேலைகளை எல்லாம் அன்று செய்திருக்கிறார்கள். அங்கு கணக்கில் அடங்காத அளவிற்கு புத்தகங்கள், ரிக்கார்ட்ஸ், ஏடுகள் இவையெல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ரிசர்ச் செய்து நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதாக இருக்குமா என்ற முறையில் பார்க்கவேண்டும். வெளிநாடுகளிலிருந்து அவற்றை எடுத்துப் போய் ஆராய்ந்து பார்க்கிறார்கள். ஆனால், நாம் அவை ஒன்றுக்கும் உபயோகமற்றவை என்ற முறையில் பாதுகாத்துக் கொண்டுதான் வருகிறோம். அந்த முறையில் இருக்கக்கூடாது. குறிப்பாகச் சொல்லப்போனால் 'காஸ்ட்ல்' பற்றி சிக்காகோ யூனிவர்சிட்டியில் ரிசர்ச் செய்கிறார்கள். அவர்களுக்கு அதனால் பிரயோஜனமில்லை. இருந்தபோதிலும் ஆராய்ச்சி நடக்கிறது. அதேபோல் இங்குள்ள கலைப்பொருள்களை மக்கள் பயன்படுத்தி நல்லமுறையில் பாதுகாக்கவும் வேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் ஏதோ வெளிநாட்டு உதவியுடன் செய்வதாக பேப்பர் வாயிலாக செய்தி படித்தேன். என்ன முறையில் அது இருக்கிறது என்று தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் தெளிவு படுத்தவேண்டும். அந்த கோபுரத்தின் நிழல் கீழே விழுவதில்லை என்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ள சிற்பங்களில் முதலில் முஸ்லிம் ஆண்டு வந்ததைக் குறிக்கும் சிலையும், பின்னர் வெள்ளைக்காரன் ஆண்டு வந்ததைக் குறிக்கும் சிலையும், பின்னர் இந்தியர்கள் ஆளக்கூடிய சிலையும் கோபுரத்தின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. பிரமாதமான ஒரு கருத்தை அடங்கியதாகவும், பின்னால் வரக்கூடியதை முன்கூட்டியே யோசித்து அந்தக் கலைஞர்கள் அந்த சிற்பங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தக் கோவில் இன்று எக்சிபிஷன் மாதிரி பார்க்கப் போவதற்காக இருக்கிறதே தவிர மற்றபடி அது புதுப்பிக்கப்படவில்லை. கோபுரம்கூட இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. ஆகவே அதுபற்றிய சரித்

திரத்தையும் நல்லமுறையில் புத்தகமாக வெளியிடவேண்டும். கோபுரத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கும் கல் ஒரே கல்லால் செய்யப்பட்டதாம். அதற்கு சாரம் கட்டி எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தமாதிரி கஷ்டப்பட்டு கொண்டு போய் ஏற்றியிருக்கிறார்கள். அவையெல்லாம் இடிந்துபோய் விட்டால் அவற்றைப் புதுப்பிக்கவோ அல்லது கட்டவோ முடியாத ஒரு நிலைமை இருந்து வருகிறது. இவ்வளவு ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட குத்தப்பினரை பார்த்து விட்டு என்ன சொல்கிறார்கள் என்றால், யாரோ ஒருவர் ஞாபகார்த்தமாக இதை செய்து வைத்திருக்கிறார்களே என்கிறார்கள். ஆகவே பழமையாக உள்ளவைகளை அந்த முறையில் வைத்திருந்தால் வருங்கால இளைஞர்கள் நம் மூதாதையர்கள் எந்தெந்த முறையில் என்னென்ன செய்திருக்கிறார்கள், என்னென்ன சாதித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே ஞாபகச் சின்னங்களை எல்லாம் நல்லமுறையில் பாதுகாத்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆர்க்காட்டில் செஞ்சிக் கோட்டை இருக்கிறது. அந்த செஞ்சிக்கோட்டையைப் போய் பார்ப்பதற்கு இப்போது ஒன்றுமே இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. காரணம் நல்ல முறையில் கண்காணிக்கப்படாமல் இருக்கிறது. இது நல்லமுறையில் கண்காணிக்கப்பட்டால் இன்றைக்கு மகாபலிபுரம் இருப்பதைப்போல மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும். வெளி நாட்டினர் வந்து பார்ப்பதற்கும் நல்லமுறையில் இருக்கும். கருங் கல்லில் பல விதமான நல்ல வேலைப்பாடுகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கவனித்து, தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். 12-00 noon

திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களைப் போன்றவர்கள் கூட, ஆலயங்கள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும், புதுப்பிக்கப்படவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த மசோதா புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அத்தகைய முறையில் இந்த மசோதா மகத்தான தொன்றாக விளங்குகிறது என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில் தொல் பொருட்கள் பாதுகாப்பு, செப்பேடுகள், கல்வெட்டுகள், பழம்பெரும் கோவில்கள், சிறந்த வரலாற்றுச் சின்னங்கள் இவைகளை எல்லாம் பாதுகாக்கவேண்டும் என்ற வகையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. குறிப்பாக, நம்முடைய நாட்டில் அதுவும் தென்னகத்தில் பல பெரிய திருக்கோவில்களை கட்டி பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அதிலும் குறிப்பாக இப்படிப்பட்ட சின்னங்கள் பொதுச் சொத்தாக வேண்டும். தனி மனிதனுடைய சொத்தாக இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் கலை உணர்ச்சியுடன் மகத்தான எண்ணத்தில் திருக்கோவில்களை நம்முடைய

பழம்பெரும் மன்னர்கள் படைத்திருக்கிறார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட கோவில்களின் புகழையும் பெருமையையும் உணர்ந் தக்கூடிய முறையில் கனம் முதலமைச்சர் அவர்கள் அறநிலைய பாதுகாப்புக்கு புத்துணர்ச்சி ஏற்படுத்தக் கூடிய வகையில் இப்படிப்பட்ட ஒரு மசோதாவை கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற நேரத்தில் நம்முடைய முன்னோர்களின் வரலாற்றை அறிந்துகொள்ளக்கூடிய வசதி நம்முடைய வருங்கால சந்ததிகளுக்கு ஏற்படும், அதற்காக உண்மையிலேயே வருங்கால சந்ததிகள் நமது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். இன்றைய தினம் வரலாறு இல்லாத நாடுகளே இல்லை, ஒன்றரை நூற்றாண்டு வரலாறு உள்ள நாடுகள் கூட தங்கள் பழம்பெரும் பொருள்களை பாதுகாத்து வைத்துக் கொள்வதற்கு பெரும் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் அந்நிய நாடுகளுக்கு சென்றிருந்தபோது கண்டேன். 100, 150 ஆண்டுகள் மட்டும் வரலாறு கொண்ட அமெரிக்க நாட்டில், தங்களுடைய தலைவர்கள் இருந்த வீடு, அவர்கள் உபயோகித்த பொருட்கள் இவைகளை எல்லாம் சேர்த்து பொருட்காட்சியாக வைத்து, அங்கே செல்லுகின்ற வெளி நாட்டினருக்கு, மறைக்காமலும் மறக்காமலும் பெருமையோடு எடுத்துக்காட்டுகிறார்கள். அப்படியிருக்கும்போது, பல நூற்றாண்டுகள் வரலாறு கொண்ட நம்முடைய நாட்டில் இப்படிப்பட்ட வரலாற்றுப் பொருட்களை எல்லாம் பாதுகாப்பதற்கு வேண்டிய புத்துணர்ச்சி வந்தது மிகவும் பாராட்டத்தக்கது என்று நினைக்கிறேன். பழைய வரலாறுகளின் மூலமாகத்தான் வருங்கால வளர்ச்சியை தேடிக்கொள்ள முடியும். பழமையிலிருந்துதான் புதுமையைக் காணவேண்டும். புதுமையில் மட்டும் நாம் இருந்துவிட முடியாது. அந்த முறையில் தான் சரித்திர பாடங்களுக்கு நாம் முக்கியத் துவம் கொடுக்கிறோம். பாரத நாடு என்றால், அதனுடைய நாகரீகம் என்ன, அதனுடைய கலைகள் என்ன, அதனுடைய மக்கள் எப்படி வாழ்ந்தார்கள், அவர்களுடைய பழக்கவழக்கம் எப்படியிருந்தது என்பதை எல்லோரும் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் அவற்றைப் பாதுகாத்து, அதை வருங்கால சந்ததிகள் பார்த்து பெருமை கொள்ளக்கூடிய வகையில் வைத்திருக்கவேண்டியது அவசியம். அதன் மூலம் தான் வருங்கால சந்ததிகள் தங்கள் பெருமையை உணர்ந்து தங்கள் வாழ்க்கையை நடத்த முடியும். இதை பல சரித்திர நிபுணர்கள் எடுத்துச்சொல்லியும் கூட, நாம் இதுவரை அதற்காக அக்கறை செலுத்தாமல் இருந்தது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும் என்று நினைக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் சா. கணேசன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், அதிலிருந்து நம்முடைய பழமையைப்பற்றி நன்றாக தெரிந்து கொள்ள முடிந்தது. இன்னும் சற்று நேரம் பேசினால் இன்னும் நம்முடைய பழம்பெருமைகளைப் பற்றி நிறைய தெரிந்து கொண்டிருக்கலாம். நேரம் இல்லாத காரணத்தால் அவர்கள் தங்கள் பேச்சை குறைத்து விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. பல பெரிய ஸ்தலங்கள் புகழ்வாய்ந்த

5th November 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

இடங்கள் இன்றையதினம் பாழடைந்து இருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பாடல் பெற்ற இடங்களாக இருக்கக்கூடிய பல இடங்கள், சிறந்த பெருமை வாய்ந்த இடங்கள் இன்றையதினம் க்ஷீணித்துக்கொண்டு போயிருப்பதை நாம் பார்க்கின்றோம். எப்படி சில மனிதர்களுக்கு மட்டும் அதிர்ஷ்ட நாட்கள் வருகின்றனவோ, அதைப்போல் சில இடங்களிலுள்ள கோவில்களுக்கு மட்டும் தான் அதிர்ஷ்டம் வருகிறது. அவைகள் மட்டும் நல்ல முறையில் காப்பாற்றப்படுகின்றன.

குறிப்பாக, காஞ்சீபுரத்தின் பக்கத்திலுள்ள தாமல் பக்கத்திலுள்ள ஒரு கோவிலில் பெரிய கோபுரம் ஒன்று இடிவிழுந்து இரண்டாய் பிளந்துகொண்டு நிற்கின்றது. இதற்கு இதுவரையிலும் எந்த புனருத்தாரண கமிட்டியும் ஏற்படாதது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதாவது தாமல் ஏரியின் பக்கத்தில் இந்த கோபுரம் இரண்டாக வாய் பிளந்து கொண்டு நிற்பதை பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது. அதைப் போலத்தான் திருச்சி ஜில்லாவில் திருவள்ளறை என்ற இடத்தில் இருக்கிறது. இந்த இடத்திலுள்ள கோவிலைப் பார்த்தால் முன்புறத்திலுள்ள கோபுரத்தில், அரை குறையாக, எதுவும் இல்லாமல் நின்று கொண்டிருக்கிறது. அதைப்பார்த்து நாம் வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இப்படிப்பட்ட கோவில்கள் எல்லாம் உடனடியாக எடுத்துக்கொண்டு வேலை பார்ப்பது என்றால் எத்தனையோ ஐந்தாண்டுத் திட்டங்கள் போடவேண்டும், இப்போதுள்ள திட்டங்களுக்கே பணம் போதாமல் இருக்கிறபோது, புதிதாக நாம் எதையும் செய்ய முடியாது. ஆகவே, இருக்கின்ற கோவில்களை கட்டிக்காப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். நான் முன்னால் சொன்னதைப்போன்று அதிர்ஷ்டமான சில கோவில்களிலிருந்து பணத்தை வாங்கி இப்படிப்பட்ட கோவில்களை கட்டிக் காப்பதற்கு அக்கறை காட்ட வேண்டும். இதற்கு அறநிலைய பாதுகாப்பு இலாகாவினர் தீவிரமாக முன் வரவேண்டும் என்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இத்தகைய கோவில்களை எல்லாம் கட்டிக்காப்பதற்கும், அதற்காக பல லட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்யவும், அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பது மிகவும் பொருத்தமானது, இன்னும் அறநிலைய பாதுகாப்பு இலாகாவினருக்கு வேண்டிய உதவி செய்வது இன்னும் நல்ல தெம்பு கொடுப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

கோவில்களை பதுப்பிப்பதில் திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னது மாதிரி, 'antiquity is lost' பழைமை எல்லாம் போகின்ற வகையில் புதிதாக பொம்மைகளை வைத்துவிடுகின்ற காரணத்தால் பழைமையான சின்னங்களை எல்லாம் இழந்துவிடுவோமோ என்கிற எண்ணம் ஏற்படுகிறது. பழைமையான சின்னங்கள் இடிந்து விழுந்துவிட்டாலும், அதைப் புதுப்பிக்கின்ற நேரத்தில் பழைமையை போக்காத வகையில்,

[திருமதி டி. என். அனந்தநாயகி] [5th November 1966

பழைமைக்கும் புதுமைக்கும் மத்திய வழியில் நின்று பழைமையை பாதுகாப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நம்புகிறேன். அவர்கள் சொன்னதுமாதிரி கோவில்கள் புதுப்பிக்கப்படும்போது, அதிலுள்ள அழகான பிம்பங்களின் வடிவை போட்டோ எடுத்து வைத்துக்கொண்டு அதே போன்று பிம்பங்களை புதிதாக உருவாக்கி கோபுரங்களை உருவாக்கவேண்டும். அதற்கான முறையில் சட்ட திட்டங்களை தீட்டுவது சாலச்சிறந்ததாக இருக்கும். இப்படிப் பட்ட தொல் பொருட்களை காப்பாற்றவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. எவ்வளவோ அற்புதமான இடங்களை நாம் பார்க்கிறோம். மகாபலிபுரத்திற்கு செல்லுகின்ற வழியில் யாளி களினால் செய்யப்பட்ட திறந்த வெளி அரங்கம் ஒன்றிருக்கிறது. அதிலிருந்து பாடும்போது, கடைசியில் இருக்கின்றவன் காதில் கூட அந்த அரங்கத்திலுள்ள நாதம் நன்றாக விழுகிறது.

மகாபலிபுரத்திற்கு போகும்போது பலரும் அங்கே இறங்கி விட்டுத்தான் போகிறோம். இந்த இடத்தில் சென்று பல பேர்கள் பார்த்திருக்கமாட்டார்கள், இந்த திறந்த வெளி அரங்கத்தை விளம்பர இலாகா அமைச்சர் அவர்கள் கவனித்து இதில் ஒரு கலை நிகழ்ச்சியை சித்திரை பௌர்ணமியின் போது ஏற்படுத்தலாம். அந்த அளவுக்கு அழகாக அமைத்திருக்கிறார்கள் இந்த திறந்த வெளி அரங்கை. அப்படி ஏதாவது கலைநிகழ்ச்சியை நடத்து வதற்கு ஏற்பாடு செய்தால் அதைப்போய் பார்க்கலாம் என்று மக்கள் வருவார்கள், அதற்கான முறையில் தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு இலாகாவினருக்கு எல்லாம் புத்துணர்ச்சி ஏற்படுகிற வகையில் அமைக்கவேண்டும். இதன் மூலம் நம்முடைய கலை என்ன, எப்படி நமது முன்னோர்கள் வாழ்ந்தார் கள் என்பதைப் பார்த்து நம்முடைய வருங்கால சந்ததியினர் தங்களுடைய வாழ்க்கையை வகுத்துக்கொள்வதற்கு இது மிக மிக அவசியமாகும்.

அது மட்டுமின்றி நம் நாட்டிலுள்ள பல சிலைகள், நல்ல அழகான சிற்பங்கள் அந்நிய நாடுகளில் காணப்படுகின்றன. நான் அமெரிக்கா போயிருந்தபோது சொன்னார்கள், "இந்த நாடு மிகவும் சுபீட்சமாக இருக்கிறது. நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டு வருகிறது. அதற்கு காரணம் என்னவென்றால் பாரத நாட்டிலுள்ள கடவுள் எல்லாம் இங்கே வந்துவிட்டார்கள்" என்று நகைச்சுவையுடன் சொன்னார்கள். அங்கே இருக்கின்ற ஆண்டவன் சிலைகள் எல்லாம் மிகப் பழமையான சிலைகள், அப்படிப்பட்ட அழகான வடிவில் வடிக்கப்பட்ட சிலைகள் எல்லாம் அன்னிய நாட்டுக்கு புறப்பட்டுவிட்டன. நம் நாட்டிலுள்ளவர்கள் அதனுடைய பெருமைகளை உணராமல் காசு கிடைக்கிறது என்ற எண்ணத்தில் கிடைத்த காசை வாங்கிக்கொண்டு விற்றுவிடு கிறார்கள். அதை விற்று ஜீவனம் செய்யக்கூடிய நிலைமை இருக் கிறது. அமெரிக்காவில் சிக்காக்கோ நகரத்திற்கு சென்றிருந்த போது, நம் நாட்டிலுள்ள கோவிலைப்போன்று ஒரு கோவிலை

5th November 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

செய்து வைத்திருந்தார்கள். அந்தக் கோவிலில் பத்மனுப சுவாமியை போன்று வைத்திருப்பதையும் பார்த்தேன். "உங்கள் நாட்டிலுள்ள கோவிலைப்போன்று இங்கும் எடுத்துக்காட்டாக வைத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். இவ்விதம் நம்முடைய பழம்பெரும் சிலைகளை காசுக்காக விற்பவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும். இப்போது கூட "Three months imprisonment or with fine" என்றிருக்கிறது. இன்னும் கூட கடுமை யான தண்டனை கொடுக்கவேண்டும். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், அந்நிய நாட்டினர், சிறு கிராமங்களுக்கு செல்லுகிறார்கள், அங்கே போய் அந்த கிராமத்திலுள்ளவர்களைப் பார்த்து அழகாக இருக்கின்ற சிலைகளை அல்லது விக்கிரகங்களை விலைக்குக் கொடுத்து விடுங்கள். நாங்கள் பத்து ரூபாய் தருகிறோம், ஐந்து ரூபாய் தருகிறோம் என்று சொல்லி அதை வாங்கிவிடுகிறார்கள். கிராமங் களிலுள்ளவர்கள் அதனுடைய பெருமை தெரியாமல் 10 ரூபாயை வாங்கிக்கொண்டு விலைக்கு கொடுத்துவிடுகிறார்கள். "ப்ரொட் டெக்டட் மான்யுமென்ட்ஸ்" என்று வைத்துக்கொண்டாலும், தனிப்பட்டவர்களிடம் இருப்பதை யாரும் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே, அவர்களிடம் இருப்பதை அரசாங்கத்திற்கு விற்றுக்கொள்ளவேண்டும் என்ற முறையில், ஏதாவது வழிவகை செய்யவேண்டும். அப்படி ஏதாவது வழி செய்தால், அரசாங்கத் திற்கு தந்துவிடுவார்கள். இப்படிப்பட்ட பழம் பொருட்கள் இருந்தால் அதை அரசாங்கத்திற்கு விலைக்கு கொடுத்துவிட வேண்டும் என்று போட்டால், நம்முடைய அரசாங்கத்திற்கே கொடுத்துவிட்டு போகலாம் என்று எண்ணுவார்கள். நாம் அவற்றை கலைப் பொருள்களாக வைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். கிராமப்புறங்களில் தனி நபர்களிடத்தில் இருக்கின்ற கலைப் பொருள்களை வாங்க இந்த மசோதாவில் இடம் கிடையாது. அதற்கு வேண்டிய வசதி செய்து தருவது மிக மிக அவசியம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சுவடிகள். சுவடிகளைப் பொறுத்த வரையில் பல நல்ல கருத்துக்களையெல்லாம் கொடுக்கக்கூடிய சுவடிகள் இருக்கின்றன. அதே போன்று ஜோஸ்யத்திலும் சுவடிகள் இருக்கின்றன. மிக அழகாக அப்பா பெயர் என்ன, அம்மா பெயர் என்ன, உன் பெயர் என்ன, எந்தக் குலத்தில் பிறந்திருக் கிறாய், பிறந்த தேதி என்ன, நேரம் என்ன என்று அழகாக எடுத்துக் கூறும் சுவடிகள் இருக்கின்றன. அத்தகைய சுவடிகளில் ஒரு சுவடியை நானே சோதித்துப் பார்த்தேன். உண்மையிலேயே வியக்கும் அளவில் உண்மைகள் வரும்போது பிரமிக்கத்தக்க நிலையில் இருக்கிறது. அவைகளெல்லாம் சிதறி, ஒரு சில குடும்பங் களில் சிக்கி வயிற்றுப் பிழைப்புக்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் நிலையில் இருக்கின்றன. ஜோஸ்யத்தில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, வரும் காலத்தைப்பற்றி, இந்தத் தேதியில் இன்ன நேரத்தில் இப்படிப்பட்டவன் பிறப்பான் என்று எழுதி வைத்திருப்பதைப் பார்க்கும்போது அதற்குத் தனிமதிப்பு கொடுக்கவேண்டும். ஆங்காங்கு அத்தகைய சுவடிகள், நாடிச்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [5th November 1966

சுவடிகள் என்று சிதறி இருக்கின்றன. அவற்றிலும் ஆராய்ச்சி நடத்தி எந்த முறையில் அமைக்கப்படுகின்றன என்று தீவிரமாக ஆராய்ச்சி செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். அவைகளை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்து வதற்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஏதாவது கொடுத்து அவர்களிடமிருந்து வாங்கி, அவர்களுடைய சேவையை வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ள முன்வருவோமானால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்தபடியாக, கோவில் தேர்கள். கோவில் தேர்களை பொம்மை பொம்மையாகச் சிதைத்து விற்கப்படுவதைப் பார்க்கிறோம். ஒரு சில ஆண்டுகளுக்கு முன் கோவிலாவது, தேராவது, திருவிழாவாவது, அத்தனைக்கும் பணம் தான் நஷ்டம் என்று வருந்தத்தக்க பிரசாரம் சிலர் நடத்திக்கொண்டு இருந்தார்கள். யார் வேண்டாமென்று சொன்னார்களோ அவர்களே அரசியல் தலைவர்களாகி தேரில் ஊர்வலம் வருவதைப் பார்க்கிறோம். தேர் வேண்டாம், திருவிழா வேண்டாம் என்று சொன்னது போக, தேரும் திருவிழாவும் நமக்கே தேவை என்று சொல்லும் நிலை ஏற்பட்டு விட்டது. இன்றைக்கு தேருக்கு புது உரு கொடுத்தால் நலம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இன்றைக்கு கன்டெம்ட் தேர் என்று சொல்லி பொம்மைகளைத் துண்டித்து எடுத்து வீடு விடாக விற்கிறார்கள். பல கடைகள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கடைகளில் போய்ப் பார்த்தால் எப்படி எப்படி தேரிலிருந்து சிதைக்கப்பட்ட பொம்மைகள் நிறைய விற்கப்படுகின்றன என்பது தெரியும். அத்தகைய கடைகளில் பார்த்து எவை எவை முக்கியமான கலைப்பொருள்கள், அரசாங்கத்தால் பாதுகாக்கப்படவேண்டிய பொருள்கள் என்று பார்த்து அவைகளையெல்லாம்கூட எடுத்துக் கொள்ளுவது அவசியம் மாத்திரமல்ல, அவசரம் என்றும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தேர்கள் சிதைக்கப்படுவதைப் பார்க்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. இனிமேல் தேர்கள் கட்டவேண்டுமென்ற ஆசையை உண்டாக்க வேண்டும். லிஸ்டெட் டெம்பிள்ஸ், 20,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோவில்கள் தங்களுக்கென்று தேர் வைத்துக்கொள்ள முன்வரவேண்டும். தேர் கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால்தானே அந்தத் தொழில் வளர்ச்சி அடைய முடியும். அந்த முறையில் வளர்ச்சிக்கு இடம் கொடுக்கவேண்டும். அன்று மாத்திரம் தேர் செய்தோம் என்று இல்லாமல் இன்றும் தேர் செய்ய முடியும், அதைக் காட்டிலும் அழகாக அமைக்க வாய்ப்பு இருக்கிறது என்ற நிலை வரவேண்டும். வருமானம் உள்ள கோவில்கள் கட்டாயமாக தேர் கட்டி வைத்துக்கொள்ளவேண்டும், தேர் தேவை என்று சொல்லும் அளவுக்கு பெரிய கோவில்களுக்கு உத்திரவு போட்டால் நலமாக இருக்கும். தேர் கட்டும் தொழில் நசித்துக்கொண்டு போகிறது. அரசாங்கம் இம்மாதிரித் தொழில்களை ஊக்குவிக்கும் முறையில் ஆங்காங்கு பள்ளிக்கூடங்களைத் திறந்திருக்கிறார்கள். மகாபலிபுரத்தில் எப்படி சிற்பங்கள் செய்யும் தொழிலில் பயிற்சி

5th November 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

அளிப்பதற்காக பள்ளிக்கூடம் திறந்திருக்கிறார்களோ அந்த மாதிரி தேர் கட்டும் தொழிலில் பயிற்சி அளிக்க பள்ளிக்கூடம் திறந்தும் கோவில்கள் தேர்கட்டி வைத்துக்கொள்ள முன்வரவேண்டும் என்று சொல்லியும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இத்தனைக்கும் மேலாக, சேர்க்கப்பட்ட பொருள்களை பெருமை வாய்ந்த கோவில்களில், மதுரை, தஞ்சை போன்ற கோவில்களில், ஃபாரின் டூரிஸ்ட்ஸ், அன்னிய நாட்டு மக்கள் ஆசையோடு பார்க்கும் முறையில் கலைக்கு என்றே கலைக்கூடத்தை ஏற்படுத்தி, உள் நுழைவுச் சீட்டு வைத்து, 25 காசுகள், 50 காசுகள் என்று வைத்து, அதன் மூலம் வருமானம் பெற முயற்சிக்கலாம். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், அமெரிக்காவில் வாஷிங்டன் வாழ்ந்த வீடு என்று அங்கே அவர் உபயோகித்த பொருள்கள் எல்லாவற்றையும் வைத்து அவைகளைப் போய்ப் பார்க்க அங்கே இருக்கிற டாலர்படி ½ டாலர் ¾ டாலர் வாங்கி விடுகிறார்கள். அதைக் கொண்டு அந்தக் கட்டடத்தை மெயின்டெயின் செய்கிறார்கள். இப்படிப்பட்ட பொருள்களை பெரிய பெரிய கோவில்களில் வைத்து, நுழைவுச் சீட்டு வைத்தால், அதன் மூலம் கோவிலுக்கு வருமானத்தைத் தேடித் தரலாம். அதன் மூலம் கலைக்கூடமும் முன்னேற வழி ஏற்படும். இப்படிப்பட்ட வளர்ச்சிக்கேற்ற ஸ்தாபனமாக அமையவேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சி, புதைபொருள் ஆராய்ச்சி, வரலாற்றுப் பொருள் ஆராய்ச்சி ஆகியவைகள் வரும் காலங்களில் வளர்ச்சி அடையும் முறையில் செய்யவேண்டும்.

அது மாத்திரமல்லாமல் கிராமப்புறங்களில், ரோடு ஓரத்தில் நம்பியப்பன் சிலைகள் இருக்கும். பார்த்தால் உள்ளத்தைக் கவரும் முறையில் அமைக்கப்பட்டிருக்கும். நம்பியப்பன் சிலைகள், காட்டேரி சிலைகள் இவைகளுக்குப் பாதுகாப்பு கிடையாது. நடு ராத்திரியில் யாராவது உடைத்து எடுத்துக்கொண்டு போனால் கூட கேட்க முடியாது. அவர்களை ஆண்டவன்தான் கேட்கவேண்டும்; மனிதன் கேட்க முடியாது. அந்த மாதிரி சிலைகளை எடுத்துக் கொண்டு போகிறார்கள். ரோடு ஓரத்தில் வைக்கப்பட்டு, கிரேக்க நாட்டுச் சிலைகளில் உடல் வலிமைக்கு மதிப்புக் கொடுத்தார்களே அந்த மாதிரி உடல் வலிமைக்கு மதிப்புக் கொடுக்கும் முறையில் இருக்கின்றன. இந்த மாதிரி சிலைகளையும் ப்ரொடெக்டெட் மானுமென்ட்ஸாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதே மாதிரி ஐயனார் கோவில்களில் பார்த்தால் அழகு அழகான குதிரைகள் இருக்கும். அந்தக் குதிரைகளுக்கு ஆபத்து வந்து விட்டது. அவைகளைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு போகிறார்கள். கிராமப்புறத்தில் கோவில் என்று இல்லாமல் மேடை கட்டி வைக்கப்பட்ட சிலைகளைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை இருப்பதால் அவைகளையும் பாதுகாக்கவேண்டும். தொல் பொருள் பாதுகாப்புக்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் அந்தத் துறையில் நல்ல வளர்ச்சி அடைய வாய்ப்பாக இருக்கும் என்று கூறி இந்த வாய்ப்புக் கிடைத்ததற்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். 8-30 a.m.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே . . . (கனம் முதல் அமைச்சர் குறுக்கிடு) இந்த தொல்பொருள் வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய விவாதத்தில் சில நிமிஷங்கள்தான் பேச விரும்புகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் நான்தான் கடைசியா என்று கேட்கிறார்கள். தலைவர் அவர்கள் மிகச் சிறப்பான கருத்துக்களை வழங்குவார்கள். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற காரணத்திற்காகச் சில விநாடிகள் பேச இந்த மன்றத்தின் முன்னால் வந்திருக்கிறேன். இதற்கு மிக முக்கியக் காரணங்கள் மூன்று காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம், கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வருகிற மசோதவை ஆதரித்து வரவேற்கும் சந்தர்ப்பம் இந்த ஐந்து வருஷங்களில் எங்காவது தேடிப்பார்த்தால்தான் கிடைக்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வரும் நேரத்தில் பெருமையுடன் வரவேற்பதை சம்பிரதாயமாகக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை இவ்வளவு இடைஞ்சல்களுக்கு இடையில் கொடுத்தார்கள் என்பதால் அதை வரவேற்கவேண்டும் என்பது முதல் காரணம்.

இரண்டாவது, தொல் பொருள், வரலாற்றுப் பொருள் என்றெல்லாம் இருந்தாலும், நமது முதல் அமைச்சர் அவர்கள் தலை சிறந்த அரசியல்வாதி. எவ்வளவு பக்திமானாக இருந்தாலும், எவ்வளவு பழம் பொருள்களில் ஈடுபாடு உள்ளவர்களாக இருந்தாலும், இந்த மசோதாகூட அரசியல் நோக்கத்தை, அவர்களும் நானும் இரண்டு பேர்களும் ஒத்துக்கொண்ட நோக்கத்தை நிறைவேற்று கிறது என்ற முறையில் வரவேற்கிறேன். இந்தக் குறிக்கோளுடன் இது வரையில் சட்டம் இல்லை. தொல்பொருள், நினைவுச் சின்னங்கள் பற்றி மத்திய சர்க்காரால் செய்யப்பட்ட சட்டங்கள் இரண்டுதான் இருக்கின்றன. அது கூட 60 வருஷங்களுக்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டம். எங்கேயோ டெல்லியில் இருந்து கொண்டு 2,000 மைல் அகலம் 1,500 மைல் நீளப் பரப்பிலுள்ள அத்தனை தொல் பொருள்களையும், அத்தனை சின்னங்களையும் காப்பாற்றிவிடுவார்கள் என்று சொல்ல முடியாத அளவுக்கு இருக்கின்ற நிலையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். திரு. உமாநாத் சம்பந்தமான பிரச்னை எழும்பியபோதுகூட முதல் அமைச்சர் அவர்கள் மிக அருமையாகச் சொன்னார்கள். இன்றைக்கு ஐந்து வருஷங்களில் செய்த காரியங்களில் இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. வருங்காலத்தில் ஒரு நல்ல சம்பவம் என்று போற்றக் கூடிய ஒரு நிகழ்ச்சி. இந்த சட்டமன்றம் சாவரின் உரிமை கொண்டது. இதில் தலையிடுவதற்கு டெல்லி அரசுக்கு உரிமை கிடையாது. தொல்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள் இவை களைப் பாதுகாக்க நமக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த விஷயம் யூனியன் லிஸ்டிலும் இருக்கிறது, ஸ்டேட் லிஸ்டிலும் இருக்கிறது. இவ்வளவு பெரிய அதிகாரம் இருக்கிறது. அதைப்பயன்படுத்துகிற வாய்ப்பு இந்த மசோதா மூலம் நமக்குக் கிடைக்கிறது. மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் வரவேண்டும், அதனுடைய அதிகாரங்களை அமல் நடத்தவேண்டும் என்ற நோக்கத்திற்கு இணங்க

5th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

அந்தப் பெருமை மாநில சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் இருக்கிற ஒரு நிலைமையில், மாநில சர்க்கார்களின் சாம்பியனுக நமது முதல் அமைச்சர் அவர்கள் வாதாடுகிறுர்கள் என்ற அரசியல் கருத்துக்கும் இணங்க முதல் அமைச்சர் அவர்கள் இந்த மசோதா வைக் கொண்டுவர முற்பட்டிருக்கிறுர்கள். தமிழ் நாட்டிலுள்ள தொல் பொருள்கள், கல் வெட்டுகள், சின்னங்கள் இவைகளை பாது காக்க இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருந்தாலும், தமிழ் நாட்டு மக்களுக்கு வருங்காலத்தில் அரசியல் ரீதியான ஒரு பெரிய போராட்டக் கொடியாக இந்த மசோதா விளங்குகிறது என்பது இரண்டாவது காரணம்.

மூன்றுவது காரணம், எனக்கு தமிழ் நாட்டு வரலாற்றைப் பொறுத்த வரையில் ஒரு பெரிய கர்வம் உண்டு. பழம் சின்னங்கள், பழம் பெருமைகளைப்பற்றியெல்லாம் திரு. சா. கணேசன் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அம்மையார் திருமதி அனந்த நாயகி அவர்கள் தேரை எங்கேயோ ஓட்டிக்கொண்டு போனுர்கள் என்றுலும், நம்முடைய தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட எத்தனையோ உயர்ந்த, அரிய சின்னங்கள் முற்காலத்தில் மக்கள் பெரிய கம்பீரமான வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறது. இவைகளையெல்லாம் பாதுகாக்க வேண்டிய பெரும் கடமை மற்ற மாநிலங்களைவிட தமிழ் நாட் டிற்கு நிச்சயம் இருக்கிறது. இந்த வரலாற்றுச் சின்னங்களிலே தமிழ் மொழியின் பெரிய வரலாறு பொதிந்து கிடக்கிறது. பாபி லோனியா தேக்கு இங்கு ஆனை மலையில் கிடைக்கிறது. ரோமாபுரி நாணயங்கள் நமது நாட்டில் கிடைக்கின்றன. வடக்கு மாநிலங் களில் உள்ளவர்கள் கடலில் இறங்குவதே ரௌரவாதி நாகம் என்று கருத்துக் கொண்டிருக்கிறுர்கள். ஆனல் நமது நாட்டு பழம் பெரு மக்கள் கடல் தாண்டி கிரேக்க நாடுகள், ரோம் நாடுகள் அங்கெல்லாம் சென்றிருக்கிறுர்கள். எத்தனையோ பெரிய சாம்ராஜ்யங்கள் இங்கே நிறுவப்பட்டிருக்கின்றன. பல்லவ சாம்ராஜ்யம், மாமல்லபுரத்தில் பெரிய நரசிம்ம பல்லவன், இன்னும் மற்றவர்கள் ஆண்ட சாம்ராஜ்யம், காஞ்சிபுரத்தை தலை நகராக்கொண்ட பல்லவ சாம்ராஜ்ய பெருமை, செஞ்சிக் கோட்டையின் வரலாற்றில் வருகிற தேசிங்கு ராஜனின் வீரதீரம் இவைகளெல்லாம் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாகரிகம் நமக்கு மிகப் பெருமையைத் தருகிறது. இவைகளையெல்லாம் பாது காக்கும் பொறுப்பு இந்திய சர்க்கார்கையில் மட்டும் இல்லாமல், அந்தப் பொறுப்பையும், அதிகாரத்தையும் நம்முடைய சர்க்கார் எடுத்துக்கொள்ளும் வகையில் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பாதுகாப்பதற்கு வேண்டிய வழிவகைகளையெல்லாம் முழு அளவிலே இந்த மசோதா செய்யா விட்டாலும், நமது முதல் அமைச்சர் அவர்கள் இதில் துவக்க விழா செய்திருக்கிறுர்கள், அங்குரார்ப்பணம் செய்திருக்கிறுர்கள்.

இந்த மசோதாவைப்பற்றிய இரண்டு விவரங்களை மட்டும் சொல்லி நான் எனது உரையை முடிக்கிறேன். மதுரைக் கோவிலைப்பற்றி பல பேர்கள் சொன்னுர்கள், முன்பு கூட அதை

[திரு. கே. ஏ. மதியழகன்] [5th November 1966

யெல்லாம் பற்றி விவாதித்திருக்கிறோம். மிகப் பழமையான கோவில் மதுரை கோவில் கோபுரத்திற்கு வர்ணம் அடித்திருக்கிறார்கள், வெளிநாட்டுப் பெயிண்டு தான் அடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த கோபுரத்தை இப்பொழுது பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது. பழம் பெரும் சின்னங்கள், புராதன சிற்பங்கள், சிலைகள் இவற்றிலே எவ்வளவோ மோசடியான காரியங்கள் இந்தப் பரிபாலனத்தின் கீழே நடைபெற்றிருக்கின்றன? அதற்கான சமாதானங்கள் தரப்படவில்லை. இருந்தாலும், இது ஒரு அபாய எச்சரிக்கையாகவாவது இருக்க வேண்டும். இனிமேலாவது மற்ற கோவில்களில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு, இப்படிப்பட்ட காரியங்கள் செய்யப்படாத அளவுக்கு வழிவகைகள் செய்யவேண்டும். சோமநாதர் சிலை போன்ற எத்தனையோ சிலைகள் உடைத்தெறியப்பட்டிருக்கின்றன, பட்டப்பகலில். மீனாட்சி அம்மன் மீது என்ன கோபமோ? சொக்கநாதர் மீது என்ன கோபமோ? மதுரை கோபுரத்திலுள்ள அத்தனை சிலைகளும் உடைத்து எறியப்பட்டு, பழங்கால சிலைகள் உடைத்து எரியப்பட்டு, புதிய சிலைகள் கோபுரத்தில் ரீமாடல் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன, வர்ணங்கள் தீட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான காரியங்களெல்லாம் இன்றைக்கு குலைக்கப்படவேண்டும். இவைகளெல்லாம் மேலும் ஏற்படாதவாறு தடுக்கும்படி நிலைமைகள் வரவேண்டும்.

அதேமாதிரி தான் சகோதரி திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், வெளி நாடுகளுக்கு நம்முடைய தெய்வங்கள் பிரயாணம் செய்யத் துவங்கிவிட்டன என்று சொன்னார்கள். நாம் வெளிநாடுகளுக்குச் சென்றால் பிறகு நம் நாட்டிற்குத் திரும்பி வந்துவிடுவோம். ஆனால் இந்தத் தெய்வங்கள் வெளிநாடுகளுக்குச் சென்றால், அங்கேயே குடியேறி அந்த நாட்டு குடிமக்களாகி விடுகின்றன. இம்மாதிரி தொல்பொருள்கள், சிலைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற அளவுக்கு நிலைமை போய்க்கொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இம்மாதிரி குற்றங்களுக்கு தண்டனை கொடுக்கிறோம், அபராதம் போடுகிறோம். சிலைகள் என்று இருந்தாலும், இம்மாதிரி காரியங்கள் மிகப் பாவமான காரியம், கடும் குற்றம் என்று கருதக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்படவேண்டும்.

நாம் பழைமையிலேயே என்றும் இருந்துகொண்டிருக்க முடியாது. நிகழ் காலத்திலும், எதிர்காலத்திலும் சஞ்சரிக்க வேண்டும். நாம் பழம் பல்லவியையே பாடிக் கொண்டிருக்க முடியாது. பண்டை காலத்திலேயே நாம் இருந்துகொண்டிருக்க முடியாது. எதிர்காலத்தில் நம் கண் இருக்கவேண்டும். கல்லறைக்குச் சென்றால், கொஞ்ச நேரம் வீர வணக்கம் செலுத்தலாம். பிறகு வீட்டிற்குத் தான் போகவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் கபாலீசுவரர் கோவிலுக்குச் சென்றால், பூசை முடிந்தவுடன் வீட்டிற்குத்தான் போகவேண்டும். எதிர்

5th November 1966] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

காலம் இன்றைக்கு தொட்டிலில் இருக்கிறது. வருங்காலத்தில் பிறக்கப்போகின்ற குழந்தைகள் கையில் இருக்கிறது. பழங்கால காட்சிகள் தமிழகத்தில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு உதவும். அவர்கள் இப்படியெல்லாம் இருந்தார்கள். அவர்களைப்போல் நாமும் தலைசிறந்த மக்களாக இருப்போம் என்ற ஒரு பெருமையை, ஒரு உணர்வை, ஒரு நல்ல லட்சியத்தை, கனவை இந்த மசோதா நமக்கு அளிக்கவேண்டும் என்று நமது முதல் அமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன். அவர்கள் எடுத்துக் கொண்ட போர்க்கொடி ஓங்கி மாநில அரசின் அதிகாரம் அதிக மாக்கப்பட வேண்டும், இன்னும் அதிகமான அதிகாரம் மாநில அரசுக்கு கொடுக்கப்பட வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை மனமாரப் பாராட்டி, இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

***திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்** : கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்திற்கு முன்பு வைக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள் பாதுகாப்பு மசோதாவை நான் மிகுந்த மனநிறைவோடு வரவேற்கிறேன். தொல்பொருள் பாதுகாப்பு மசோதா என்றால், இது தமிழர் நாகரிகத்தினுடைய, தமிழர் பண்பாட்டினுடைய, தமிழருடைய பழம் வரலாற்றி னுடைய பாதுகாப்பு மசோதா என்று கூடச் சொல்லாம். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் சொன்னார்கள் ஒரு குறிப்பிலே, சாதாரணமாக எழுத்து, உரை, ஓவியம் என்ற மூன்று நிலைகளிலே இந்தத் தொல்பொருள்கள் காணப்படுவதை நாம் அறிகிறோம் என்று ஓவிய வடிவாகக் காணப்படுகிற தமிழர் பண்பாட்டை தமிழர் நாகரிகத்தைத் திருக்கோவில்களில் ஆன்றோர் சமைத்துவைத்தார்கள். உரை என்று சொல்லப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. அந்த உரை என்று சொல்லப்படுகிற ஒரு நிலையானது பழம் சுவடிகள் மூலம் நமக்குத் தெரிய வந்திருக் கிறது. காலம் சென்ற திரு. உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் நம்முடைய சங்ககால இலக்கியங்கள் பலவற்றை மொழிபெயர்த் துத் தந்திருக்கிறார்கள். உண்மையாகத் தமிழக அன்னை வாழ்த்த வேண்டிய ஒரு நபர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள். அவர்கள் இல்லை என்றால், இப்பொழுது நாம் படிக்கின்ற, நாம் இன்புறுகின்ற பழைய தமிழ் வாலாற்றைக் காண முடியாது. அகம், புறம் என்று பல தமிழ் இலக்கியங்களும், சிலப்பதிகாரம் 12-30 p.m.
போன்ற பல தொகை நூல்களும்கூட நமக்குக் கிடையாது போய் இருந்திருக்கும். ஆகவே, டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர் கள் தான் குக்கிராமங்களிலெல்லாம், ஒவ்வொரு வீடாக நுழைந்து இந்தச் சுவடிகளை எல்லாம் கண்டு எடுத்து, அரிய நூல்களை, இந்தப் பொக்கிஷங்களைத் தமிழ் உலகத்திற்குத் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் ஒரு அரிய உரை ஆற்றிய திரு. கணேசன் அவர் களுக்கு ஞாபகப்படுத்தினேன். அதையும் பற்றி அவர்கள் சொல்லவேண்டும்என்று அவர்களும் சொன்னார்கள். சாதாரண மாக மக்கள் வாழ்வு என்பது விலங்கினத்தின் வாழ்வோடு உண்டு பெருகின்ற வாழ்வோடு நிற்பதல்ல. மக்கள் இனத்திற்குப் பகுத்

தறிவு இருப்பதால் அதனைப் பயன்படுத்தும் ஆற்றல் இருக்கிறது. அதே நோக்கத்தில்தான் ஔவையார் யாரோ மூன்று பேர்கள், அவர்களை வழிமறித்து, எங்கள் பேரிலும் பாட்டுப்பாடு என்றதற்கு,

"மூவர் கோவையும் மூவிளங் கோவையும்,
பாடிய என்றனின் பனுவலால் நும்மையும் பாடுகம் என்றனிர்,
நும்மையும் எங்ஙனம் பாடுவன் யானே,
களிறுபடுவெங்களம் கண்ணிர்காணிர், வெளிறுபடு நல்லியாழ்
விரும்பிக்கேளீர், புலவர் வாய்ச்சொற்புலம்பலுக்கிரங்கீர்,
அவிச்சுவை அல்லது தமிழ்ச்சுவைகொள்ளீர்,
ஓவாக்கானத்து உயர்மரம் படித்த
அவ்வாக்கனியெனத் தோன்றிய நீரே"

என்று கூறியதாகப் பாடல் இருக்கின்றது. தன்னுடைய உண்டி பெருகுவதற்கு வாழ்கின்றவர்கள் அல்ல மக்கள். அதற்கும் மேலாக இருக்கின்ற அகத்துறையில் நல்ல பகுத்தறிவை வைத்துப் பண்போடு ஒழுகலைக் கூறுகின்ற பாங்கைக் காண்கிறோம். சாதாரணமாகச் சில சமயங்களில் நல்ல தமிழ் இலக்கியத்தைப் படிக்கின்றபோது, இப்போது நாம் காண்கின்றது தமிழ் உலகம் தானா என்று ஐயம் தோன்றுகிறது. அதன் வழி வந்தவர்கள் தானா நாம் என்கிற ஆச்சரியமான உணர்ச்சி பல சமயங்களில் எனக்கு வருகின்றது. காரணம், அவ்வளவு அழகான, அவ்வளவு உன்னதமான, பண்பாட்டு நிலையைத் தமிழ் மக்கள் கைக்கொண்டு இருந்தார்கள் என்பதனைக் காண முடிகின்றது. சாதாரணமாக அனுமனைப் பற்றிச் சொல்வதுண்டு, தன் வலி தான் அறியாதவன் என்று. அதே போல, நம்முடைய நிலையை நம்முடைய பண்பாட்டை, நம்முடைய வரலாற்றை, நம்முடைய மனப்பான்மையை அறியாத ஒரு நிலைமை நமக்கு இருக்குமானால், அது ஒரு அவல நிலையாக அமையும் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த நிலையில், இந்தத் தொல் பொருள் காக்கும் சட்டம் அவசியமானதாக இருக்கின்றது. எழுத்து ஆற்றல் மட்டும் இருப்பது உண்டு. இயந்திரங்கள் இருக் கின்றன. எழுத்து வடிவமாகவும், உரை வடிவமாகவும், இரண் டிலும் இல்லாத நிலைமையும் இருக்கின்றன. சாதாரணமாக வேதங்கள் என்று சொல்லக் கூடியவை எழுதாக் கிளவி என்று பெயர். மரபு மரபாக, மனனம் செய்தே வந்தது என்ற வகையில் இருப்பவை. கால்நடைகளுக்கு ஒரு நோய் உண்டு, கொக்கு பாடம் என்று, கால்நடை நோய் ஒன்றுக்கு மருந்து உண்டு. பாம்பு விஷம் போக்கக் கூடிய ஒரு ஓசை, சத்தம் அது. கனம் மன்றாடியார் அவர்களுக்கும் தெரியும் என்று கேள்விப்பட்டிருக் கிறேன். அதாவது பாடம் என்று சொல்லுவார்கள். பாம்பு விஷம் பட்ட கால்நடைகளுக்கு சொக்கு போன்ற வியாதியைத் தீர்க்க வேறு மருந்துகள் கிடையாது. அவற்றையெல்லாம் உரை வழியாக, நினைக்கும் அமைப்பாக, அமைந்திருக்கிறது. அதையும் கூட இந்தச் சட்டத்திலே சேர்க்கவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லையென்றால் அவையெல்லாம் அறுகிப் போய்விடும். எங்கள் பக்கத்தில்

5th November 1966] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

பாம்புப்பாடம் என்று உண்டு. அது தெரிந்தவர்கள் நினைத்தாலே போதும், வீட்டிலிருந்து உச்சரித்தாலேயே போதும்; அதே போலத்தான் தேள் பாடம் இருக்கிறது. அதுவும் அப்படித்தான். உச்சரிப்பதாலேயே விஷம் போய்விடும். கால்நடைகளுக்கு வருகின்ற சொக்கு போன்ற வியாதிகளுக்கும். உச்சரிப்பாலேயே, அந்த த்வனியினாலேயே நிவாரணம் கிடைக்கும். அந்த த்வனிக்கு அந்த ஆற்றல் இருக்கிறது. ஆகவே, அவற்றையும் இதிலே சேர்த்துக் கண்டிப்பாகப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்றும், அவற்றை இதில் சேர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று மிக முக்கியமான விஷயம். சுவடிகளைக் காப்பாற்ற வேண்டும். திரு. கணேசன் போன்றவர்கள், ஆர்வத்தோடு பணியாற்றுகிறவர்களை, அந்த இலாகாவிலேயே நியமனம் செய்து, அவர்கள் குடிசைகளில் நுழைந்து, அங்கெல்லாம் இருக்கும் நல்ல நல்ல சுவடிகளை—அப்படி ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறது—எடுத்துக் காப்பாற்ற வழிவகை செய்யவேண்டும். தமிழகத்திலே குக்கிராமங்களிலே ஒவ்வொரு ஊரிலும் நல்ல ஏட்டுச்சுவடிகள் இருக்கின்றன. இலக்கியம் மட்டுமல்ல, மற்ற முக்கியமான விஷயங்களும் இருக்கின்றன. அரசாங்கம் திரு. கணேசன் அவர்களையும் இலாகாவிலேயே அமைத்து, அவர்கள் ஊர்கள்தோறும், வீடுகள் தோறும், அழிந்துவிடும் நிலையில் இருக்கும். சுவடிகளைத் தொகுத்து, நல்ல வகையில் அவற்றின் உட்கருத்துக்களை வெளியிடும் நிலையில் பணியாற்றச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கணேசன் அவர்கள் சொன்னதின்பேரில் எங்கள் ஊர் பக்கத்தில், பெருந்துறைப் பக்கத்தில் உள்ள, அரசலூர் சென்றிருந்தேன். ஈரோட்டிலிருந்து தமிழ்ப் புலவரையும் உடன் அழைத்துச் சென்றிருந்தேன். அங்கே போர்டிலே, 'அறச்சாலையூர்' என்று எழுதியிருக்கிறார்கள். மிகத் தெளிவாக அறச்சாலை ஊர் என்று எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதப்பட்டிருப்பதை நானே பார்த்தேன். (குறுக்கீடு.)

புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த மசோதாவை சேக்கிழார் பரம்பரையைச் சேர்ந்தவர் கொண்டுவருவதை, வரவேற்கிறேன் என்று சொன்னார்கள். தமிழ் உலகத்திற்கு, தமிழ் கூறும் நல் உலகிற்கு, பண்பாட்டிற்கு, வரலாற்றிற்கு இது மிக்க ஆக்க பூர்வமான மசோதா. ஆகவே, இதனை அனைவரும் நிச்சயமாக வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. திரு. மதியழகன் அவர்கள் மிக்க ஆனந்தமாக வரவேற்றிருக்கிறார்கள், வசிஷ்டர் வாயாலே பிரமசாரி என்றது போல . . . (திரு. சா. கணேசன் : 'பிரும்ம ரிஷி' என்று சொல்லுங்கள்) அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். அந்த விதத்தில் இது ஒரு அருமையான மசோதா, பல வகையிலும் சிறந்தது. நிறைய சொல்லத் தெரியாது. பலவகைகளில் சிறந்தது. சிற்பங்கள்தான் என்பதல்ல,

இயந்திர வடிவம்தான், சுவடிகள்தான் என்பதல்ல. ஓசை வழியாகவும், எழுத்து வடிவமாகவும், ஓவிய வடிவமாகவும், அதுவும் இல்லாத நிலையிலும் இருக்கலாம். ஆகவே, இப்படிப் பட்ட தொல்பொருள்கள் குக்கிராமங்களில் நிறைந்து கிடக்கின்றன. இலாகாவிலே சம்பளம் பெறும் நிபுணர்களை ஏற்படுத்தி, திரு. கணேசன் போன்ற நல்ல ஆர்வம் உள்ளவர்களைப் போட்டு, ஊக்குவித்து, இந்தப்பணியை செவ்வனே செய்ய வேண்டும். வரலாறு கூறும் வழிகள் பல இருக்கின்றன. தமிழர் வரலாறு என்று, இந்திய வரலாறு என்று பலர் எழுதியிருக்கிறார்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கின்றன. தொகுப்பாக ஒன்றும் இல்லை. பலர் ஆராய்ச்சியிலே குழப்பங்கள் இருக்கின்றன. பல்வேறு நிலையங்களில் திட்டமாக வரையறை செய்ய முடியவில்லை. நிச்சயமாக தமிழர் வரலாறு அந்த வகையில் இருக்கக் கூடாது. அவை தொகுத்து செய்யப் படவேண்டும். அப்படிச் செய்யும்போது அதற்குள்ளே இருக்கும் இலக்கணங்கள், உத்திகள் இவை காட்டப்படவேண்டும். நான் சில புத்தகங்கள் வைத்திருக்கின்றேன், படிக்கிறேன். சிவ வணக்கம், பெருமாள் வணக்கம் என்பதுபற்றியெல்லாம் இருக்கிறது. கி.பி. அல்ல, கி.மு. மூன்றாவது நூற்றாண்டு சம்பந்தப்பட்ட போட்டோக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். திரு. கணேசன் குறிப்பிட்டதுபோல போட்டோக்களைக் கொண்டு விவரித்திருக்கிறார்கள். மொகன்ஜதாரோ நாகரிகம், திராவிட நாகரிகம், தமிழர் நாகரிகம் எந்த அளவுக்கு இருந்தது என்று இதையெல்லாம் அருமையான முறையில் கொடுத்திருக்கின்றார்கள். அவை கூட ஒருவர் கூறுவதற்கு, இன்னொருவர் கூறுவது கருத்து வேறுபாடு உடையனவாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து அரசாங்க வாயிலாகவே அவற்றை வெளியிட்டு வழங்குவது மிக நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். அவற்றை எல்லாம் இந்த மசோதாவில் சேர்க்கவேண்டும். இதை முதல் அமைச்சர் அவர்கள் முன்னோடியாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் உற்பத்தியே நன்றாக அமையவேண்டும் என்பதுதான் என் கவலையாக இருக்கிறது. அவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்தி, வருங்காலத் தமிழக இனத்திற்கு, தமிழ் நாட்டுக்கு வரையறையாகக் கொடுக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். இந்த நற்பணியை, தமிழ் வரலாற்றை நல்ல முறையில் உருவாக்கக்கூடிய சிறப்பான, சீரிய பணியை முதல் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின் மூலம் தொடங்குவதற்கு வந்திருப்பதாகத் தமிழ் இனத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்க் கடவுள் முருகன் துணையாக அவருக்கு வாழ்த்துக் கூறி, வணக்கம் செலுத்தி அமைகிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் நான் பாராட்டுகிறேன். இந்த மூன்றாவது சட்டசபையின் பதவிக் காலம் முடியும் தருவாயில் இருக்கிறது. பதவிக் காலம் முடிவதற்கு நான்கு மாதங்களே இருக்கின்றன. நமது முதல்

அமைச்சர் அவர்கள் இன்னும் நான்கு தினத்திற்குள்ளேயே இந்தப் பதவிக் காலத்தை முடிப்பதற்கு உத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சபையின் முடியும் காலத்திலாவது—வெளியே தேர்தல் சூடு ஏறிக்கொண்டிருக்கிற நேரத்தில்—இங்கே எல்லா எதிர்க்கட்சியினரும், ஆளும்கட்சியினரும் ஏகோபித்து ஆதரிக்கின்ற வகையில் இந்த மசோதாவை இப்போது கொண்டு வந்திருக்கிற முதல் அமைச்சர் அவர்களின் அரசியல் திறமையைப் பாராட்டுகிறேன்.

அதேசமயத்தில் இந்த மசோதாவின் நோக்கத்தைப் பற்றி யாருமே குறைத்து மதிப்பிட முடியாது. பழமையில் இருந்துதான் புதுமை ஏற்படவேண்டும். பழைமையை அறவே ஒழித்து புதுமை கிடையாது. கழிந்துபோனவற்றையும் பழமை என்பதற்காக கட்டிக்கொண்டிருப்பது சரியல்ல. எல்லா நாடுகளிலுமே அவர்களது பழம் பெரும் வரலாறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அந்த முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்து சட்டம் இயற்றினால்மட்டும் போதாது. பழமையின் பெருமைகளை நம் மக்கள் உணர்ந்துகொள்ளவும் வழிவகை ஏற்படுத்த வேண்டும். அதுவும் சட்டத்தில் இடம் பெற வேண்டும். பழைமையைப்பற்றிய சின்னங்களைச் சேகரிப்பது ஒன்று. சேகரித்து இருக்கக்கூடிய கண்காட்சி சாலைகளிலேயே கொண்டு போய் போடலாம். தனியாகவே கண்காட்சிசாலை ஏற்படுத்தி ஓரிரு சிப்பந்திகளைப் போட்டு மக்களுக்கு அவற்றின் முக்கியத்துவத்தை, சிறப்பை எடுத்து விளக்கும்படி செய்யலாம். பழைமையான சின்னங்களைச் சேகரித்து அபிப்பிராய பேதத்திற்கு இடமில்லாத வரலாற்றை உருவாக்குவது மிகவும் முக்கியமானதாகும். நம் மக்கள் அந்தச் சின்னங்களின் பெருமை, சிறப்புகளை உணர்ந்துகொள்ளச் செய்வதுதான் முக்கியமானது. அப்போதுதான் நாட்டின் ஒற்றுமை, தேசத்தின் ஒற்றுமை, நல்ல பண்புகள் காப்பாற்றப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே இந்த மசோதா அந்த அளவுக்கு ஓர் ஆரம்ப முயற்சியாக இருக்கிறது என்பதற்காகப் பாராட்டுகின்றேன். இதற்கு முன்பே மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றியிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலும் சட்டம் இயற்றப்பட்டு இருந்தது. சில சின்னங்களைமட்டும் பாதுகாப்புச் செய்கிற வகையில் அவர்கள் வைத்திருந்தார்கள். மத்திய அரசாங்கம் தேசீயச் சின்னங்கள் என்று அறிவித்து, பாதுகாத்து வைத்திருக்கிறார்களே தவிர, அவை வரலாற்றுக்கு உதவி எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. சமீபத்தில் மகாபலிபுரத்திற்கு கெய்டு நியமித்திருப்பதைத் தவிர அந்தச் சின்னங்களின் பெருமையைப் பரப்ப எவ்வித நடவடிக்கையும் அவர்கள் எடுத்து வருவதாகத் தெரியவில்லை. தேசீயச் சின்னங்கள் என்றும், ராஜ்யச் சின்னங்கள் என்றும் ஏற்படுத்தி வீணான மோதலை உண்டாக்க வேண்டியதில்லை. அவற்றைத் தேசீயச் சின்னங்களாக அறிவிக்க வேண்டிய பொறுப்பை வேண்டுமானால் மத்திய சர்க்காரே வைத்துக் கொள்ளட்டும். ஆனால் எல்லாவற்றையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பை அந்த அந்த ராஜ்ய சர்க்கார்களிடமே விட்டுவிட

லாம். ராஜ்ய சர்க்காரிடத்தில் அவநம்பிக்கை கொள்ள இடமில்லை. விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுத்துவிடுவார்கள் என்ற அச்சம் இருந்தால், அவற்றைத் தேசீயச் சின்னங்களாக அறிவிக்கிற பொறுப்பை அவர்கள் வைத்துக்கொள்ளட்டும். இந்தச் சட்டத்தின் சில பகுதிகளைப் பார்க்கிறபோதும், மத்திய அரசாங்க சட்டத்தின் சில பகுதிகளைப் பார்க்கிறபோதும் எனக்கு இத்தகைய ஐயம் ஏற்படுகிறது.

இந்தச் சட்டத்தின் பிரிவுகளைப் பார்க்கிறபோது அரசாங்கம் அந்தச் சின்னங்கள் உள்ள இடத்தை அது தனிப்பட்டவர்களிடம் இருந்தாலும், எடுத்துக்கொள்ள அதிகாரம் இருக்கிறது. தனிப் பட்டவர்களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என்கிற கொள்கை உடைய திரு. சா. கணேசன் போன்றவர்கள் தேசத்தின் நன்மையை உத்தேசித்து விட்டுக்கொடுத்து, இந்த மசோதாவை வரவேற்று இருப்பது பாராட்டத்தக்கது. அவர் சட்டத்தின் ஷரத்துக்களை அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதில் நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது தனிப்பட்ட ஒரு சொத்து, அது நிலம் போன்ற அசையாப் பொருள்களாக இருந் தாலும் சரி, நாணயங்கள் போன்ற அசையும் பொருள்களாக இருந்தாலும் சரி, யாருக்குச் சொந்தமானது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் மசோதாவின்படி யாருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அந்த உரிமையை எப்படித் தீர்மானிப்பது, யார் தீர்மானிப்பது என்பதுபற்றிச் சட்டத்தில் ஒன்றும் இல்லை. மலைகளைப்பற்றியோ, குகைகளைப்பற்றியோ யாரும் தனிப்பட்ட முறையில் உரிமை கொண்டாடப்போவதில்லை. ஆனால், நாணயங்கள் போன்றவற்றைப் பழமையான பொருள்கள் என டிபைன் செய்யப்படுவதால் யாருடைய உரிமையானது என்று தீர்மானிக்க வகை செய்யவேண்டும். நாம் நஷ்ட ஈடு கொடுத் தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உரிமை யாருடையது என்று தீர்மானிக்க வகை செய்யவேண்டும். இதுவரை யாரும் லட்சியம் செய்யவில்லை. ஆகவே அதுபற்றித் தகாராறுகள் இல்லை. அரசாங்கம் இதுபோன்ற பொருள்களைப் பாதுகாக்கப்போகிறது, இவற்றுக்கு மதிப்புக்கொடுத்து வாங்கிக்கொள்ளக்கூடும் என்கிற நிலை வருகிற போது உரிமைபற்றித் தகராறுகள் எழவும் சந்தர்ப்பம் இருக் கிறது. இந்தச் சட்டம் அதுபற்றித் தெளிவாக்கவில்லை என்பது என் அபிப்பிராயம்.

அதோடு கல்வி இலாக்காவின் ஒரு பகுதியாக இது இருக்குமோ என்று நான் கருதுகிறேன். அரசாங்க மட்டத்தில் எப்படி இணைக் கப்பட்டாலும் கீழ் மட்டத்தில் விரிவான தனித் துறையாக இது இருக்கவேண்டும். அந்தப் பழம் பெரும் சின்னங்களின் வரலாற்றை மக்கள் உணர்ந்துகொள்ளத் தக்கவகையில், அவை தனிக் காட்சிப்பொருள்களாக வைக்கப்படலாம். அவற்றை மக்கள் உணர்ந்துகொள்ள, பார்த்து பலவற்றைப் புரிந்துகொள்ள இந்தச் சட்டத்தின் மூலமே வகை செய்யப்படவேண்டும். கல்வி என்பது பள்ளிக்கூடத்திலே பெறுவது மட்டும் அல்ல. பழமையைப் பற்றி நம்மிலேயே பலருக்குத் தெரிந்திருக்காது. மேல்நாட்டு

வரலாற்றை நன்கு உணர்ந்துள்ளவர்கள்கூட நம் நாட்டு வரலாற்றை உணர்ந்து கொள்ளாதிருக்கும் நிலையைத்தான் பார்க்கிறோம். நம் நாட்டு வரலாறு நன்கு தெரியும் என்கிறவர்களுக்குக் கூட முழுமையும் எவ்வளவு தெரியும் என்பது சந்தேகம்தான். வெள்ளைக்காரன் காலத்தில் நம்நாட்டுப் பழம் பெரும் பெருமைகளைச் சிறப்பிக்க வேண்டும் என்கிற அக்கறை அவர்களுக்கு இல்லை. சுதந்திரம் அடைந்த பிறகுகூட தென்னக வரலாற்றினைச் சரியான முறையில் எல்லோரும் தெரிந்துகொள்ள வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தப்படவில்லை. பரந்த தேசத்தில் ஒற்றுமையாக இருக்கக் கூடிய நிலையில் இப்படிப்பட்ட முரண்பாடுகள் இருப்பது இயல்பு. வெளிநாடுகளிலே இருக்கக்கூடியவர்கள் இந்தியா என்று சொன்னால் உருது, இந்தி, வங்காளம் இவற்றைப்பற்றித்தான் விசாரிக்கின்றார்களேயன்றி, தமிழைப்பற்றி, தமிழ்நாட்டின் பழைய சரித்திரத்தைப்பற்றி தெரிந்துகொள்ள அவர்களுக்கு வாய்ப்புக் குறைவாகத்தான் இருக்கிறது. இதை நான் என்னுடைய அனுபவத்திலேயே பார்க்கமுடிகிறது. அதே சமயத்தில், தமிழ்நாட்டு வரலாறு ஆகட்டும், கலாச்சாரம் ஆகட்டும், மிகத் தொன்மையானவை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அவற்றினுடைய விவரங்களைத் தெரிவிப்பதில்தான் கஷ்டம் இருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவானது ஆரம்ப முயற்சியாக இருக்கலாம். அதோடு நிறுத்தி விடாமல் தொடர்ந்து கவனஞ்செலுத்தவேண்டும். பந்தோபஸ்து செய்து அவற்றை வைக்கவேண்டும் என்றுதான் சட்டம் இருக்கிறதே தவிர, கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய முறையில், பழைமையான வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்கான வகையில் விதிகள் இதில் இல்லை. அவர்கள் இதையெல்லாம் ஆலோசனை செய்யாமல் இருந்திருக்கமாட்டார்கள். ஆலோசனை செய்து இந்த மசோதாவிலே கொண்டுவரலாம் என்று நினைத்தாலும்கூட அவற்றிற்கெல்லாம் பணம் ஒதுக்கவேண்டுமே என்பதற்காக, அந்த அளவுக்கு ஆலோசனையை விட்டுவிட்டார்களா அல்லது அவர்களுடைய சிந்தனைக்கு இது எட்டாமல் போய்விட்டதோ என்னமோ தெரியவில்லை. இவற்றையெல்லாம் வெறும் டைரக்டர்கள் பொறுப்பிலே மாத்திரம் விட்டுவிடாமல், கிராமங்களிலே, தாலுகாகளிலே உள்ளவர்கள் இடத்திலே பொறுப்புக்களைக் கொடுக்கவேண்டும். பல அங்கத்தினர்கள் இதைப்பற்றி விவரமாகக் குறிப்பிட்டார்கள். என்னுடைய யோசனை என்னவென்றால் இதைப்பற்றிய தகவல்கள் எல்லாம் சேர்ப்பதற்காக ஒரு குழு அமைக்க வேண்டும். குழு அமைக்கவேண்டும்மென்றுசொன்னால், பெரிய குழுவாக 30, 40 பேர்கள் கொண்ட குழுவாக அமைக்க வேண்டியதில்லை, ஒரு சிறிய குழுவாக அமைத்தால் போதுமானது. திரு சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டதை நான் வரவேற்கிறேன். அரசியலைத் தவிர, அவர்களை இந்த முறையில் நல்ல வகையில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அவர்கள் இது சம்பந்தமாக நல்ல உதவிகள் செய்வார்கள். தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் மறக்கமுடியாத சேவைகள் செய்திருக்கிறார்கள். கம்பராமாயணம்பற்றி, வள்ளுவர்பற்றியெல்லாம் நல்ல முறையிலே

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th November 1966

பேசிக்கொண்டு வருகிறார்கள். பல தியாகங்கள் செய்திருக்கிறார்கள். அதோடுகூட இந்தத் தியாகத்தையும் அவர்கள் செய்யவேண்டும். இந்தச் சட்டத்திலே அப்படி ஒரு குழு அமைப்பதற்கான வசதியும் செய்யப்படவில்லை. இதிலே ஹிண்டு ரிலிஜியஸ் போர்டு சம்பந்தப்பட்ட விஷயங்களையும் கூறிவிட்டோம். அப்படியில்லாமல் இது ஒரு தனிச் சட்டமாக இருக்க வேண்டும். முழுமையான சட்டமாக இருக்கவேண்டும். ஆகவே, ஒரு ஆலோசனைக் குழு போடுவதைப்பற்றியும் யோசிக்கவேண்டும். மத்திய அரசாங்கம் எப்படி நேஷனல் இம்பார்ட்டன்ஸ் என்று சொல்லி ஒரு அறிக்கையை விட்டுவிட்டு கடமை தீர்ந்துவிட்டது என்று இருக்கிறதோ, அதுபோல் நாமும் பொருள்களை சேகரிப்பதோடு நிறுத்திவிட்டு பொறுப்புத் தீர்ந்துவிட்டது என்று இருந்துவிடாமல் அவற்றையெல்லாம் நல்ல முறையிலே பரப்புவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் நகராட்சிகளுடைய பொறுப்பிலே கொடுத்து அவர்கள் இன்ன இன்ன மாதிரி பரிபாலிக்கவேண்டுமென்று சொன்னால் அது சுலபமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். பஞ்சாயத்து யூனியன்களையும், நகரசபைகளையும் இதை நிர்வகிக்கின்ற பணியிலே பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்காகத் தனியாக ஒரு இலாகா போடவேண்டுமென்பதில்லை. அப்படிப்போட்டால் அதிகமான செலவு ஆகும் என்று முதலமைச்சர் அவர்கள் யோசிக்கவேண்டிய அவசியம்கூட இல்லை. ஓரளவுக்கு அதிகச் செலவில்லாமல் நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்கள் போன்றவற்றை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவற்றில் உள்ள ஊழியர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பஞ்சாயத்து யூனியனில் கல்வி ஸ்தாபன அதிகாரி ஒருவர் இருக்கிறார், அதே மாதிரி, டெபுடி இன்ஸ்பெக்டர் ஒருவரும் இதற்காகவே இருக்கிறார். ஆகவே, அவர்களிடம் இந்தப் பொறுப்புகளைக் கொடுக்கலாம் என்றுதான் நினைக்கிறேன். அந்த முறையில் பொருட்களையெல்லாம் பாதுகாக்கக்கூடிய முறையில் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை ஒத்தி வைக்கக் கூடாது என்ற முறையிலேயும், உடனே கொண்டுவரவேண்டும் என்ற காரணத்தால் செலெக்ட் கமிட்டிக்குப் போகவேண்டியதில்லை என்று திரு. சா. கணேசன் அவர்கள் தெரிவித்தமுறையிலேயும், அப்படிச் சீக்கிரமாக இந்த மசோதா நிறைவேறுவதற்கு எந்தவிதமான இடைஞ்சலும் செய்யக்கூடாது என்ற அளவிலேயும், ஏற்கனவே பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே எதிர்க்கட்சித் தலைவர் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையிலேயும், நான் என்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் துணைத்தலைவர் அவர்களே, தொல் பொருள் ஆராய்ச்சிக்கான இடங்கள், புதைபொருள் ஆராய்ச்சிக்கான இடங்கள், வரலாற்றுச் சின்னங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை வரவேற்கின்ற வகையில் ஒரு சில

5th November 1966] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் இந்த மசோதாவைப் பாராட்டி போற்றி வரவேற்றிருக்கிறார்கள். அதிலிருந்தே இந்த மசோதாவின் முக்கியத்துவத்தை இந்த மன்றம் மிக நன்றாக உணர்ந்திருப்பதால்தான் அது நல்ல ஆதரவைப் பெற்று முன்வந்திருக்கிற தன்மையைப் பார்க்கின்றோம் புதைபொருள் ஆராய்ச்சி, தொல்பொருள் ஆராய்ச்சி, இவற்றினாலும் வரலாற்றுச் சின்னங்களாலும், மாண்ட புகழை மீண்டும் உலகத்தாரனைவருக்கும் பெருமையுடன் எடுத்துக் கூறுகின்றபொழுது, மற்றவர்கள் அவற்றைக்கண்டு வியக்கும் பொழுது நாம் பூரிப்பும், பெருமிதமும், மதிப்பும் அடைவதற்கு வழிவகை செய்யக்கூடிய முறையில் இந்த மசோதா பயன்படுகின்ற ஒன்றாக அமைந்திருக்கிறது. புதைபொருள் ஆராய்ச்சிக்கான இடங்கள், பழம்பொருள் ஆராய்ச்சிக்கான இடங்கள், வரலாற்றுச் சின்னங்கள் இவற்றைப் பராமரிக்கின்ற பணியினை இந்திய அரசாங்கமே இதுவரை ஏற்றுக்கொண்டுவந்திருக்கிறது. அந்தப் பணியினைச் செய்துகொண்டு வந்தது (குறுக்கிடு) செய்யாமல் இருந்து கொண்டு வந்திருக்கிறது. இந்திய அரசாங்கத்தில் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பணிகள் எல்லாம் தக்க அளவுக்கு வேகமாகவும் விரைவாகவும், நடத்தப்பட்டனவா என்கின்ற ஐயப்பாடு ஒரு குறைபாடாகவே இதுவரை இருந்தது. இப்பொழுது இந்திய அரசாங்கத்தை விட்டு, மாநில அரசாங்கமே, விடப்பட்ட வரலாற்றுச் சின்னங்களை நல்லமுறையிலே சேகரித்துப் பார்க்கின்ற முறையிலே அதிகமான உரிமைகளைப் பெறுவதற்கு இந்த மசோதா வழிசெய்கிறது. இந்த மாநிலத்தினுடைய பொறுப்பும் கடமையும் இந்த மசோதாவின் மூலம் அதிகமாகியிருக்கின்றது. நாம் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கும், பழம்பொருள் ஆராய்ச்சிகளை நடத்தவும், தொல் பொருள்களைத் தேடவும் இந்த மசோதா வழிவகை செய்கிறது, இதை வரவேற்க நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். புதைபொருள் ஆராய்ச்சி, பழம்பொருள் ஆராய்ச்சி இந்திய அரசாங்கமே கவனிக்கும் என்ற நிலை இல்லாமல் மாநில அரசாங்கம் பெரும் பங்குகொண்டு அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய கடமை ஏற்பட்டிருக்கிறது, அதற்கான சட்டங்களை, விதிகளை உண்டாக்க ஆயத்தமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது வரலாற்றில் இடம்பெறத்தக்க நிகழ்ச்சியாகும். ஒரு நாட்டினுடைய சிறப்பை நோக்குகின்றவர்கள் அந்த நாட்டில் பொதுவாக என்ன வசதிகள் இருக்கின்றன, புதிதாக என்ன என்ன வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன, வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா, இன்றியமையாத் தேவைகளை அந்த அரசு அந்த நாட்டு மக்களுக்குச் செய்து கொடுத்திருக்கின்றதா என்றுதான் உலகத்திலே உள்ள பல்வேறு நாட்டினரும் பார்ப்பார்கள், அதோடு அந்த நாட்டு வசதிகளையும், வாய்ப்புக்களையும், மக்களுடைய பிரச்னைகளைச் சமாளிப்பதிலே அந்த மக்கள் எப்படி வெற்றிபெற்றிருக்கின்றார்கள் என்பதிலேதான் அவர்களுடைய கண்ணோட்டமும், அக்கறையும் இருக்கும், அதோடு முக்கியமாக அந்த நாட்டின் பழங்காலப் பெருமைகளை விளக்குகின்ற

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th November 1966

வரலாற்றுச் சின்னங்களையும், சிற்பங்களையும் சில அரிய தன்மைகளையும் அறிந்துகொள்வதற்குத்தான் உலகஞ்சுற்றி வருகின்ற பயணிகள் மிக மிக அக்கறை எடுத்துக்கொள்வார்கள். மேலை நாடுகளிலும், வெளிநாடுகளிலும் அவர்கள் குறைந்த அளவுக்கு வரலாற்றுச் சிறப்புக்களை வைத்து, அவர்கள் முழுப் பெருமையும், புகழும் பெறுகிறார்கள் என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே, அதைவிடப் பெருமைப்படத்தக்க, புகழைத் தேடித்தரக்கூடிய அரிய பெரிய வரலாற்றுச் சிறப்புள்ள இடங்கள், சின்னங்கள் இவையெல்லாம் நம்முடைய தமிழகத்திலே இருந்தாலும், அவற்றிலே அக்கறை எடுத்துக்கொள்ளாத காரணத்தாலே அவற்றின் மூலம் தமிழகம் பெறக்கூடிய அத்தனை பெருமைகளும் இன்னும் பெறமுடியாமல், அவையெல்லாம் மறைக்கப்பட்டிருக்கின்ற நிலைமையிலே இருக்கின்றது. மிகக் குறைந்த வரலாற்றுச் சிறப்புக்களைக்கொண்ட கிரேக்கமும், ரோம் நாடும் அவற்றை விளம்பரப்படுத்தி அதிகமான அளவில் பெருமையும் புகழும் பெற்றுள்ளன. அவற்றைவிட மிகத் தொன்மையான தமிழகத்திலே விளம்பரம் எதுவும் செய்யப்படாததால் அதற்கான முயற்சிகள் இதுகாறும் எடுத்துக் கொள்ளப்படாமல் அடையவேண்டிய புகழ் அடைய முடியவில்லை. உலகத்திலே தொன்மைக்கு எடுத்துக்காட்டாக இந்த இரண்டு நாடுகளைத்தான் எடுத்துக்கொள்கின்றார்கள். பண்பாட்டைப்பற்றி எண்ணுகின்ற நேரத்திலேகூட ரோம், கிரேக்கம் இந்த இரண்டு நாடுகளைத்தான் பாராட்டுகின்ற அளவுக்கு உலக நாடுகள் இருக்கின்றன. அந்த அளவுக்கு, குறைந்த அளவுக்கு வரலாற்றுச் சிறப்புகள் அவர்கள் கொண்டிருந்தாலும் விளம்பரத்தினால் அதிகமாக எல்லோருக்கும் வெளிப்
1-00 p.m. படுத்துகின்ற காரணத்தினாலே அந்த அளவுக்கு அந்த நாடுகளுக்குப் பெருமையும் புகழும் ஏற்பட்டிருக்கின்றன.

சாதாரணமாக பழமொழி ஏற்படுகின்ற அளவுக்கு கிரேக்கமும் ரோம் நகரமும் சிறப்புப் பெற்றிருக்கின்றன 'Great that is Greek Grandum that is Rome' 'கீர்த்தி மிக்க கிரேக்கம், பொலிவு மிக்க ரோம்' என்று சொல்லத்தக்க அளவுக்குச் சிறப்புப் பெற்றிருக்கின்றன. அதைவிட அதிகமான சிறப்புக்கள், அதைவிட முந்திய வரலாற்றுச் சிறப்புக்கள், அரசியல் சிறப்புகள் தமிழகத்திற்கு இருந்தாலும்கூட, அவை மக்களுக்கு அறிமுகப் படுத்தப் படாமலும், பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சுவடிகள் எல்லாம் வெளிக் கொணரப்படாத காரணத்தாலேயே இந்த நாட்டின் பழைமை மிக மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் சிறப்புத் தேடித் தரும் அளவுக்கு வரலாற்றுச் சின்னங்களும் மற்றவைகளும் இருக்கின்றன. கிட்டத்தட்ட ஒவ்வொரு ஊரிலும் வரலாற்றுச் சிறப்புகுரியவை அமைந்திருக்கின்ற தன்மையைப் பார்க்கிறோம். மக்களுடைய வாழ்க்கை நாகரிகம், பண்பாட்டு நாகரிகம் ஆகியவற்றைப் பார்க்கும்போது பன்னெடுங் காலத்திற்கு முன்பே பல்வேறு நாடுகளைக் காட்டிலும் இந்த நாட்டில் நாகரிகச் சிறப்பும், பண்பாட்டுச் சிறப்பும் பெருமை பெற்று விளங்கியிருக்கிறது. கற்கருவிக் காலம்,

5th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

விற்கருவிக் காலம் என்பதோடு மட்டுமல்லாமல் முற்கருவிக் காலத்தில்கூட வரலாற்றுச் சிறப்புத் தன்மை பெற்று விளங்கி யிருக்கிறது. செங்கற்பட்டு அருகிலும், மற்றும் ஆதிச்சநல்லூர் போன்ற பல்வேறு இடங்களில் முதுமக்கள் தாயம் போன்ற வரலாற்றுச் சிறப்புக்கள் அமைந்திருக்கின்ற தன்மையைப் பார்க்கிறோம்.

மேலை நாடுகளில் கடந்த 600, 700 ஆண்டுகளின் சிறப்பை எடுத்து வைத்துக்கொண்டு அதன் காரணமாகப் பெருமையும் பூரிப்பும் கொள்ளுகின்றனர். அந்த அளவுக்கு அவற்றைப் பொருட்காட்சிச் சாலையில் வைத்து, வருபவர்களுக்குக் காட்டி வருகின்றனர். இங்கே பல வரலாற்றுச் சிறப்புக்குரிய அம்சங்கள் இருந்தும் அவற்றை வெளிப்படுத்தும் வகையில் இன்னும் குறை பாடுகள் போக வேண்டிய அளவுக்குத்தான் நிலைமைகள் இருக் கின்றன. இந்திய அரசாங்கப் புதை பொருள் ஆராய்ச்சி நிலையத் திலிருந்து ஆங்காங்கு சென்று ஆராய்ச்சி நடத்துகின்ற வல்லு நர்கள், பொருளாதார வசதிகள், மற்ற உதவிகள் தேவையான அளவு கிடைக்க முடியாத நிலையில், திட்டமிட்ட அளவுக்குச் சிறப்புக்களை வெளிக்கொணர முடியாத நிலை இருக்கிறது. காவிரிப்பூம்பட்டினத்தை அகழ்ந்து பார்த்து, ஆராய்ச்சி செய்த சமயத்தில் 50 அடி நீளம் 6 அடி அகலத்திற்கு வயல்களைத் தோண்டிப் பார்த்ததில் செங்கற் கட்டடங்கள் மற்றும் பலவகைச் சிறப்புக்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்யக்கூடிய அளவுக்குப் பொரு ளாதார வசதியோ மற்ற வசதிகளோ இல்லை. ஒதுக்கப்படுகிற பணம் போதாது ; கொடுக்கப்படுகிற சலுகைகள் போதாது ; தரப் படுகிற ஆக்கமும் ஊக்கமும் போதுமான அளவுக்கு அமையவில்லை என்ற காரணத்தால்தான் வரலாற்றுச் சிறப்புக்களுக்கான கருத்துக்கள் இருந்தும்கூட வெளிக் கொணர முடியாத நிலைமை கள் இருக்கின்றன. இந்த நிலைமைகளைப் போக்க இந்த மசோதா மிகவும் பயன்படும். அப்படி அகழ்ந்தெடுக்கப்படும்போது கிடைக்கக்கூடிய பொருள்கள் இந்த நாட்டினுடைய பெருமையை யும், புகழையும் நிலைநாட்டக் கூடியவை.

இந்த மாதிரி வரலாற்றுச் சிறப்பு மிக்க சில இடங்களில் வெறும் பலகை மட்டும் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பலகையிலே, ‘இது பாதுகாக்கப்பட்ட இடம்; இன்ன சட்ட விதிகளின்படி இந்த இடம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது’ என்றுதான் தெரிவிக்கப் பட்டிருக்கிறதே தவிர, அந்த வரலாற்றுச் சிறப்பின் தன்மையைப் பற்றி ஒன்றும் பலகையில் காணப்படவில்லை. எந்த வகையில் சிறப்புடையது என்பதைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. வெளி நாடுகளிலே வரலாற்றுச் சிறப்புடைய எந்த இடத்திற்குச் சென்றாலும் அங்கே ஒரு பலகையிலோ அல்லது கல்வெட்டிலோ அல்லது இரும்புத் தகடுகளிலோ அதனுடைய சிறப்பைப்பற்றி விரிவாக எழுதி வைத்திருக்கிறார்கள். அங்கு வந்து பார்ப் பவர்கள் அதைப் படித்துப் பார்ப்பதன் மூலம் அதன் சிறப்பைத் தெரிந்துகொள்ள முடியும். சில பழம் பெரும் இடங்களில் டேப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th November 1966

ரெக்கார்டரை வைத்து, அங்கு 50 சென்டோ, அரை டாலரோ அல்லது ஒரு ஷில்லிங்கோ போட்டு அந்த டேப் ரெக்கார்டரை வைப்பதன் மூலம் அந்த இடத்தைப்பற்றிய, சிறப்பைத் தெரிந்து கொள்ள வழி செய்திருக்கிறார்கள். அந்தக் கருவி வேலை செய்வதற்கான செலவைக்கூட ஈடுகட்டும் வகையில் சிறு தொகையைக் கட்டணமாக வசூலித்துக் கொள்கிறார்கள். பழம்பொருள் சின்னங்களாக இருக்கும் தஞ்சை அரண்மனை, திருமலைநாயகக்கர் மகால் ஆகியவற்றின் பெருமைகளை வந்து பார்க்கிறவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் டேப் ரெக்கார்டர் வைத்து அதற்காக 10 காசு, 25 காசு, 50 காசு என்று வசூலித்தாலும் வந்து பார்க்கிறவர்கள் முழு விஷயத்தையும் தெரிந்து கொள்ள முடியும். அந்த இடங்களைப்பற்றி விளக்கக்கூடிய வழிகாட்டிகள் இருந்தால் அவர்கள் கூட அந்த வரலாற்றுக் குறிப்புகளோடு தங்களுடைய கதைகளையும் சேர்த்துக் கூறக்கூடிய நிலை இருக்கிறது. கொடுப்பவருடைய மடியில் கனத்தைப் பொறுத்து அந்தக் கதையின் அளவும் நீடித்துக் கொண்டிருக்கும் நிலைமைகளுக்கு இடம் இல்லாத வகையில் ஏற்பாடு செய்ய டேப் ரெக்கார்டர் வைப்பது ஒரு சிறந்த முறை. இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் மூலமாக மேலும் திறமையாக இவற்றையெல்லாம் செய்ய முன் வரவேண்டும்.

திண்டிவனம் இருக்கிறது; அங்கே ஒரு கோட்டை மேடு இருக்கிறது. கோட்டை மேடு என்ற அளவுக்குத்தான் அதைப் பற்றித் தெரியுமே தவிர, அந்தக் கோட்டையின் வரலாற்றுச் சிறப்புகளோ மற்றவைகளோ தெரிய வழி இல்லை. ஓய்மாநட்டன், நல்லலியக் கோட்டன் என்பானை நல்லூர் நத்தத்தனர் என்பவர் பத்துப் பாடலில் பாடிய சிறப்புக்களைப்பற்றி இலக்கியத்தில் காண்கிறோமே தவிர, அந்தக் கோட்டையைப் பார்க்கும்போது பார்க்கிறவர்களுக்கு அந்தச் சிறப்பு தெரிய வழி இல்லை. பட்டுக்கோட்டை அங்கு ஒரு கோட்டைப்பட்டு மணவாளன்கோட்டை ஆயிற்று. அதன் வரலாற்றுச் சிறப்பும் தெரியாது.

கோவில்வெண்ணி என்று தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. புகை வண்டி நிலையத்தில் அந்தப் பெயர் இருக்கிறதே தவிர, அதைப்பபற்றிய சிறப்பு எங்கும் குறிப்பிடப்படவில்லை. அது பெரிய போர்க்களமாக இருந்த இடம். கரிகால் சோழன் சேர அரசனையும், பாண்டிய அரசனையும் பொருது வெற்றி பெற்ற இடம். இந்த வரலாற்றுச் சிறப்பை அந்த ஊர் ஊராட்சி மன்றப் பலகையிலாவது எழுதி வைக்கலாம். அப்படி எழுதி வைப்பதன் மூலமாக அந்த ஊரின் பெருமையை அறிந்துகொள்ள இயலும்.

மன்னார்குடியில் தலைக்காடு என்ற ஊர். அதுதான் தலையாலங்கானம் என்பது. பாண்டிய மன்னன், சேர மன்னனையும், சோழ மன்னனையும், வேளிர்களையும் பொருது அவர்களை முறியடித்த முக்கிய இடம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் என்ற அடைமொழி கொடுக்கிற அளவுக்குச் சிறப்புப் பெற்ற இடம். இம்மாதிரி ஏராளமான வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் இருக்கின்றன. புதுமைச் சிறப்புக்களிலே ஒருவரைவிட ஒருவர்

5th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

முயன்று சிறப்புப் பெறலாம். பழைமைச் சிறப்பை எவ்வளவுதான் ஒருவர் முயன்றாலும் பெற முடியாது. அமெரிக்க நாடு எவ்வளவு தான் முயன்றாலும் 300, 400 ஆண்டுகளுக்குட்பட்ட சிறப்பைத் தான் சொல்ல முடியுமே தவிர, ஆயிரம் ஆண்டுகள், இரண்டாயிரம் ஆண்டுகள் என்று பழைமைச் சிறப்புக்களை எடுத்துக் காட்ட முடியாது. தமிழகத்திலே ஏராளமான அளவுக்குப் பழைமைச் சிறப்புக்கள் இருந்து அவை வெளிக்கொணரப்படாமலே, பாது காக்கப்படாமலே இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தச் சிறப்புக்கள் எல்லாம் வெளிப்படும் வகையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுச் செயல்படும் என்று நம்புகிறேன்.

இங்கிலாந்துபோன்ற நாடுகளில் அவர்கள் பழைமை விரும்பி களாக இருக்கின்றனர். அதோடு புதுமையையும் விரும்புகிறவர் களாக இருக்கிறார்கள். அதுபோன்ற நாடுகளைப் பார்த்தால் அவர் கள் பழைமையின் பொலிவு சிறிதும் கெடாத அளவிற்கு எந்த அளவிற்குப் புதுமையைப் புகுத்த முடியுமோ, அந்த அளவிற்குப் புதுமையை ஏற்றி ஏற்றி காப்பாற்றுவதற்கு ஆயத்தமாக இருக் கிறார்கள் ஆக்ஸ்போர்ட் நகரம் பொலிவுபெற்ற பல புதுமை களைப் பெற்ற நகரம். ஆனால், அங்கும் பழைமையின் தொன்மை யைக் காப்பாற்ற அவர்கள் அக்கறை செலுத்திக்கொண்டு வருகிறார்கள். அங்கு ந்யூ காலேஜ் என்று ஒன்று இருக்கிறது. நானும் மற்றவர்களும் சென்று பார்த்தோம். அது ஏற்படுத்தப் பட்டது 13-வது நூற்றாண்டில். அப்போது அதன் பெயர் ந்யூ காலேஜ். இன்றும் அது அந்தப் பெயரிலேயே இருக்கிறது. கிட்டத்தட்ட 600 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தக் கல்லூரியின் உட்புறத்திற்கு அழைத்துச் செல்லும்போது அந்தக் கட்டடம் உள்ள தெரு வழி போக வேண்டியிருந்தது. 600 ஆண்டுகளாகியும் அந்தத் தெருவில் எந்தவித மாற்றமும் இல்லை. முன்பிருந்த அதே லாந்தர்கம்பம், அதே கற்கள் என்று எல்லாம் அப்போதிருந்தது போலவே இருக்கிறது. எந்தப் புதுமையும் புகுத்தாது அந்தத் தெருவைக் காப்பாற்றி வருகிறார்கள்.

இங்கிலாந்தில் உள்ள பாராளுமன்றக் கட்டடம் புதிதாக எழுப் பப்பட்டிருந்தாலும் அதற்கு எதிரில் உள்ள பழைய அரண்மனை புதுப்பிக்கப்பட்டாலும் குறிப்பிட்ட ஒரு இடம் காப்பாற்றப்பட்டு, இதுதான் பழைய அரண்மனை இருந்த இடம் என்று அதைக் காப் பாற்றி வருகிறார்கள். 'கார்டிஃப்' என்ற நகரத்தில், அது ரோமா னியரால் படையெடுக்கப்பட்டு ஆண்டு வந்த காலத்தில் கட்டிய இடம் என்று இப்போது புதிய கல்லூரிகள், விடுதிகள் கட்டப்பட் டிருந்தும்கூட அந்தக் கோட்டைப் பகுதியைமட்டும் கல்லூரிக் கட்டடத்தில் ஒரு அறையில் வைத்து திறந்து காட்டுகிறார்கள். ரோமானியர்கள் கட்டிய சுவரின் அடையாளம் என்று ஒரு பெரிய ஹால் அளவில் ஒன்றைக் கட்டி அந்தச் சுவரைக் காப்பாற்றி திறந்து காட்டுகிறார்கள், ரோமானியர் கட்டிய கோட்டை, ஜூலியஸ் சீசர் கட்டிய கோட்டை, அகஸ்டஸ் கட்டிய கோட்டை என்றுபாதுகாத்து வருகிறார்கள். புதுமையைப் புகுத்தும் நோக்கம் உள்ளவர்களும் பழமையின் பெருமையைக் காப்பாற்றி

உலகம் வியக்கத்தக்க அளவிற்கு, தமது நாட்டின் பெருமை விளங்கச் செய்யும் அளவிற்கு பழைமையின் தொன்மையைக் காப்பாற்றி வருகிறார்கள். அத்தகைய வாய்ப்பு வசதிகள் நம் தமிழ் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் மற்ற கனம் உறுப்பினர்கள் விரிவாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொல்ல நேரம் இல்லை என்று அவற்றை விட்டுவிடுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் பல சிறப்புக்களைப்பற்றி யெல்லாம் எடுத்துக் கூறினார்கள். புதுமை யாக நாம் எவ்வளவு கட்டடங்கள் வேண்டுமானாலும் எழுப்பலாம். ஆனால், பழைமையில் உள்ள அதோடு சேர்ந்த தொன்மையை நாம் எவ்வளவுதான் விலை கொடுத்தாலும், கோடிக்கணக்கில் ரூபாய் கொடுத்தாலும், அந்தத் தொன்மையைச் சேர்க்க முடியாது. ஆகவே பழைமையின் தொன்மையைக் காப்பாற்றவும், நம் நாட்டின் புகழையும் பெருமையையும் காப்பாற்றவேண்டும் அந்த முறையில் கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும், சிலைகளையும், ஓலைச் சுவடிகளையும் காப்பாற்றக்கூடிய விதத்தில் இந்த மசோதா வழி செய்யும் என்று நினைக்கிறேன். திரு. சா. கணேசன் அவர்கள் தெரிவித்ததைப்போல் இந்தச் சட்டத்தைத் திறம்பட நிறை வேற்ற வேண்டுமானால் இந்தத் துறை மேலும் விரிவாக்கப்பட்டு வல்லுநர்கள் பலரை இதில் ஈடுபடுத்துவதின் மூலம்தான் இந்தச் சட்டத்தின் நோக்கம் முழு அளவிற்கு நிறைவேற முடியும். சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அதற்கான வாய்ப்பு வசதிகளைச் செய்யாமல் போனால், அதற்கான வல்லுநர்களை அமைக்காமல் போனால், இருக்கிறவர்கள் அதை நிறைவேற்று வார்கள் என்று எதிர்பார்த்தால், சட்டம் நிறைவேறிய அளவில் நிற்குமே தவிர, இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட நிலைமை யெல்லாம் அவை இருந்த இடத்திலேயே இருக்கும். 25 ஆண்டு களுக்கு முன்னால் தஞ்சையில் உள்ள அரண்மனை, அகழி, கோட்டைச் சுவர் எல்லாம், நான் சிறுவனாக இருந்தபோது பார்த்த தெல்லாம், இன்று காணோம். அகழியையும் காணோம், கோட்டைச் சுவற்றையும் காணோம். கோவிலைச் சுற்றி உள்ள பெரிய பெரிய மதில்கள், கொந்தளங்கள் எல்லாம் இடிந்து விழுந்து கிடக்கின்றன. ஐம்பது ஆண்டுகள் சென்றால் கோட்டை, அகழி இருந்த இடமே தெரியாது. தஞ்சையைச் சுற்றியுள்ள அகழி முழுவதையும் காப்பாற்ற முடியாவிட்டாலும் இரண்டு பர்லாங்க் நீளத்தில் இருக்கும் அகழி, கோட்டை இவற்றையாவது காப்பாற்றி வைத்தி ருந்தால், இறந்தகாலத்தில் எப்படி இருந்தது என்பதை எதிர்கா லத்தில் வருகிறவர்கள் உணர்ந்து கொள்வதற்குள்ள வாய்ப்புகள் ஏற்படும். அதில் வருமானத்தை எதிர்பாராது செலவினத்தோடு சேர்த்து கவனிக்க வேண்டும். கட்டணம் விதித்து காப்பாற்று வதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது. கட்டணத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தச் சின்னங்களை ஓரளவு காப்பாற்ற முடியும். ஏராளமான மக்கள் வந்து செல்கிற பெரிய நகரங்களில் எல்லாம் புதைபொருள்கள்,

5th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்ட பழம் பொருள்கள், தொல் புதை பொருள்களைக் கொண்ட ஒரு பொருட்காட்சிச் சாலையை அமைக்கவேண்டும். அப்படிச் செய்வதன்மூலம் அவற்றை விளம் பரப் படுத்தவும், அறிமுகப்படுத்தவும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. அதேபோன்று மக்கள் குறிப்பிட்ட பணிக்காக அல்லது காரியத் திற்காக ஒன்று கூடித் தங்குகிற இடங்களில்கூட இந்தப் பழம் பொருள்களை வைத்துக் காட்டுகிற காட்சிசாலையை அமைப்பது சாலச்சிறந்தது.

உதாரணத்திற்காக ஒன்று சொல்கிறேன். குற்றாலம் இருக் கிறது. ஆண்டு ஒன்றுக்கு மூன்று மாத கால அளவில் குளிப்ப தற்கு என்றும், ஓய்வு பெறவும் மக்கள் வருகிறார்கள். அப்படி 20 நாட்கள், 25 நாட்கள், ஒரு மாதம், இரண்டு மாதம் என்று வந்து தங்குகிறவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துவதற்காக இருக்கிற வாய்ப்புகள் குற்றாலத்தைப் பொறுத்த வரையில் மிகமிகக் குறைவு. அப்படி ஓய்வு பெறுவதற்கு வருகிறவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு அங்கு புதைபொருள் பொருட்காட்சிசாலை ஒன்றை நிறுவினால் அங்கு வருகிறவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிடவும், இக்காட்சிசாலையைப் பார்த்து அறிவும் ஆற்றலும் பெறவும் முடியும். அதேபோன்று சென்னை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களிலும் இத்தகைய காட்சி சாலைகள் அமைக்கப்பட வேண்டும். இதற்கு அரசு முயற்சி எடுத்தால் மேலும் நல்ல பலன் தரத்தக்க வகையில் அமையும்.

மேலை நாடுகளை எடுத்துக்கொண்டால், ரோம் நாட்டில், கிரேக்க நாட்டில் எல்லாம் மார்பிளில் சிலைகளைச் செதுக்கி வைத்திருக்கிறார் கள். இரண்டாயிரம் ஆண்டுகளாக பொலிவும், புகழும் உள்ள சிலைகளை வைத்திருக்கிறார்கள். ஆனால், நம் தமிழ்நாட்டிற்குள்ள ஒரு தனிச் சிறப்பு இங்கு கருங்கல்லில் சிலைகளை செதுக்கி வைத்திருக்கிறார்கள். அப்படி கருங்கல்லில் நினைக்கிற அளவிற்குச் செய்து சிறிய கையில் ஒரு மானைக் கொடுத்து அந்த மான் தன் நாக்கால் மூக்கின் துளையைத் தொட இந்த அளவிற்குச் செதுக்கிக் காட்டக்கூடிய அளவிற்குள்ள திறமை உலகத்திலேயே தமிழ் நாட்டிற்கு இருக்கிற அளவிற்கு வேறு எந்த நாட்டிலும் அமைந்திருக்கிற தன்மையைப் பார்க்கமுடியாது. பளிங்கில் சிலைகளைச் செதுக்குவது எளிது. ஆனால், கருங்கல்லில் செதுக் குவது என்பது கடினமானது. அந்நிலையில் நம் நாட்டுச் சிலைகள் மிகச்சிறப்பு வாய்ந்தவை. அத்தகைய கலைச் சிறப்பைக் காப் பாற்றவேண்டும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னதுபோல் ஆண்டவன் இருக்கிறாரா இல்லையா, சிலைகளில் சக்தியிருக்கிறதா இல்லையா, அது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுமா என்ற ஆராய்ச்சி இந்த மசோதாவின்கீழ் வரவில்லை. வேப்பமரத்தை பார்க்கும்போது சாமி ஆடுபவனுக்கு சாமி ஆடுவதற்கு அந்தத் தழைகள் பயன்படுமா என்று கருதுவான், மார்க்கோ சோப் கம்பெனிக்காரர் அவை சோப்பிற்குப் பயன் படுமா என்று பார்ப்பார்கள், பல் விளக்க விரும்புகிறவர்கள் பல் விளக்க அது பயன்படுமா என்று பார்ப்பார்கள். பொதுவாக,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th November 1966

வேப்பமரம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் பயன்படுகிறது. அந்த வகையில் பல்வேறு சிறப்புகளின் அடிப்படையில் இந்தக் கலைச் செல்வங்கள் பயன்படும். வேறு பல விவாதங்களுக்கு இதில் இடமில்லை என்று அவற்றை விட்டு விடுகிறேன். கடற்கரையில் காந்தியாரின் சிலை இருக்கிறது. அதிலுள்ள ஒரு குறைபாடு அவர் கண்ணாடியற்ற காந்தியாராக இருப்பதால் சிலையின் முழுப் பொலிவும் வரவில்லை. யாரும் கண்ணாடி இல்லாத காந்தியார் படத்தை எந்தவிடத்திலும் பார்த்ததில்லை. அந்தச் சிலை மூக்குக் கண்ணாடி இல்லாத காந்தியாரின் சிலையாக இருப்பதால், அது காந்தியார் மாதிரி இல்லை, அது சரியாக இல்லை என்று குறைகூற காரணமாகிறது. ஆக, ஒரு சிறிய அடையாளம் இல்லாவிட்டால் மாறிவிடுகிறது. வில்லிங்க்டன் கல்லூரியில் விவேகானந்தரின் சிலையை வைத்திருக்கிறார்கள். அவர் படத்தைத் தலைப்பாகையுடன்தான் பார்த்திருக்கிறோமே தவிர, விவேகானந்தர் என்றவுடன் தலைப்பாகைதான் ஞாபகத்திற்கு வருகிறதே தவிர, மொட்டைத் தலை விவேகானந்தரை நாம் பார்த்ததில்லை. அங்கு மொட்டைத் தலையுடன் விவேகானந்தர் சிலை நிறுத்தப்பட்டிருப்பதின் காரணத்தால், யாரோ ஒரு சாமியாரின் சிலையை அமைத்திருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டு போவார்கள். விவேகானந்தர் என்று சொன்னால், அந்தச் சிலைக்கு முக்கியமாக இருக்கவேண்டியது தலைப்பாகைதான். ஆகவே, இப்படி குறிப்பிட்ட அம்சம் ஒவ்வொன்றிலும் அமைந்திருக்கிறது. பழங்கால சிலைகளை நாம் சீர்படுத்தும்போது, இவற்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது மிகவும் முக்கியம் என்று கருதுகிறேன். இந்த மசோதாவின் மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அடிப்படையின் மூலமாக இந்த நாட்டினுடைய சிறப்பை காப்பாற்றவும், நம்முடைய நாட்டைப்பற்றி பெருமிதம் பெறவும், எதிர்காலத்தில் ஊக்கம் கொள்வதற்கும், நம் முன்னோர்களின் சிறந்த வாழ்க்கையைப் பார்த்து அதன் மூலமாக, அதன் அடிப்படையில் நமக்கு ஊக்கமும் ஏற்படுமானால் இந்த மசோதா வருங்காலத்தில் ஊக்கம் தரக்கூடிய தொன்றாகவும், உணர்ச்சி தருகின்ற ஒன்றாகவும், ஆக்கம் தருகின்ற ஒன்றாகவும் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவின் மூலமாக நாம் பழமையான பொருள்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், அதன் மூலமாக போதிய அளவு ஆற்றல் பெறுவதற்கும், அறிவு பெறுவதற்கும் பயன்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதற்காக நன்கொடை தருகின்றவர்களுக்கு அவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கலாம் என்கின்ற கருத்தை திரு. சா. கணேசன் அவர்கள் தெரிவித்தார்கள். அவ்விதம் தாராளமாக உதவி செய்கின்றவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்கின்ற வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதையும் தெரிவித்து, இந்த மசோதாவை வரவேற்று, பாராட்டி அமருகிறேன். வணக்கம்.

5th November 1966]

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நேற்று இந்த மன்றத்தின் கூட்டம் இரண்டு மணி நேரத்திற்கு முன்பாகவே முடிக்கப்பட்டது. ஏனென்றால் இன்றைக்கு ஒரு நாள் மசோதாக்களைப்பற்றி விவாதிப்பதற்கு இருக்கிறது. இன்றையதினம் எல்லாம் மசோதாக்களையும் விவாதித்து முடித்துவிடலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன் விளைவாக நேற்றையக் கூட்டம் இரண்டு மணி நேரத்திற்கு முன்பாகவே வேலையில்லை என்று தள்ளி வைக்கப்பட்டு முடிக்கப் பட்டது. ஆனால், இந்த மசோதாமீது இன்று நாள் பூராவும் விவாதம் நடைபெறுகிறது. மூன்றரை மணி நேரத்திற்கு மேலாக விவாதம் நடைபெறுகிறது. எனக்கு இதில் மிகுந்த மகிழ்ச்சி. மன்ற உறுப்பினர்கள் மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு இதில் கருத்து தெரிவித்தார்கள் என்றால், இந்த மசோதாவைப்பற்றி எவ்வளவு முக்கியத்துவம் கொண்டு இருக்கிறார்கள், பழம்பொருட் களைப் பாதுகாக்கவேண்டும் என்பதையும், அதனுடைய அவசியத் தையும் மன்ற உறுப்பினர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து என்னுடைய பெருத்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தெரிவித்துக் கொள்கிறேன். விவாதத்தில் கலந்துகொண்ட எல்லோரும் ஒரு மனதாக இதை வரவேற்று பாராட்டி பேசினார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் இதைப் பாராட்டி எனக்கு நல்வாழ்த்துக்களும்கூட கூறினார்கள். புலவர் கோவிந்தன் அவர்கள் இதில் பல அரிய கருத்துக்களை, இதில் அவர்கள் எவ்வளவு தூரம் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லாம் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார் கள். நம்முடைய உறுப்பினர் கனம் கலியாணசுந்தரம் அவர்கள் தான் கொண்டுவந்த திருத்தத்தைக்கூட வற்புறுத்தாமல், இந்த மசோதா உடனடியாக நிறைவேறட்டும் என்று அவர்களே பெரிய மனதோடு நடந்துகொண்டார்கள் என்றால், இந்த மசோதாவின் நோக்கத்தை அவர்கள் எந்த அளவுக்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. திரு. சா. கணேசன் அவர்கள், கனம் அங்கத்தினர் அவர்கள், இதில் மிகுந்த ஈடுபாடு உடையவர், இதில் பல அரிய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறுவதற்கு முன்னால்கூட, ஒரு கருத்தை நான் தெரிவிக்க வேண்டும் என்றிருந்தேன். இந்த மசோதாவில் ஆலோசனைக் குழுவுக்கு இடமில்லையென்றாலும், இதற்கென்று ஒரு குழு போட்டு அதில் கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் அங்கம் வகித்து பல அரிய கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்பது தான் என் விருப்பம். இதில் அவர்களுடைய அரசியல் கொள்கை களை விட்டுவிட்டு வரவேண்டும் என்று சொல்லவில்லை, அவர்களு டைய கொள்கைகளைக் குறைத்துவிட்டு இதில் இழுத்துக்கொண்டு போகவேண்டும் என்பதல்ல. இந்த மசோதா சட்டமாக நிறை வேற்றப்பட்ட பிறகும் இதில் மிகுந்த அக்கறை செலுத்தி இதற்கு

[திரு. எம். பக்தவத்சலம்] [5th November 1966

வேண்டிய ஆலோசனைகளை அளிப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த விவாதத்தில் பல அரிய கருத்துக்களைத் தெரிவித்த கனம் உறுப்பினர்களுக்கு எல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

வரலாறு, முக்கியமானது. அதிலும் பண்டைக் கால தமிழர் களுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியம். பழங்காலத்தில் தமிழர்கள் எவ்வாறு சீரிய வாழ்க்கை நடத்தினர் கள், என்னென்ன நிலையில் வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். இதுவரையில் இந்தத் துறையில் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்தி வந்தது. இப்படிப்பட்ட 'மான்யுமென்ட்'-களை எல்லாம் அவர்கள் பாதுகாப்பது என்றிருந் தது. குறிப்பாக தேரெழுந்தூரில் கம்பன் மேடு என்று ஒன்றிருக் கிறது. இங்குதான் கம்பன் வாழ்ந்தான், இங்கேதான் பானையில் சமைத்து சாப்பிட்டான், அந்தப் பானைகள் எல்லாம் உடைபட்டு அங்கே மேடாக இருக்கிறது, இதையெல்லாம் பார்க்கும்போது நமக்கு பரவசம் ஏற்படுகிறது. இங்கே தான் குடிசை, பக்கத்தில் காளி கோவில். பக்கத்தில் அன்றுடம் சமைத்த பானைகள் உடைந்து கிடப்பது, இதைப் பார்க்கிற பொழுது நமக்கு பரவசம் ஏற்படுகிறது. இந்த இடத்தில் மத்திய ஆர்கியாலாஜிக்கல் இலாகா வினர் வேலி போட்டு, யாரும் உள்ளே போகக்கூடாது என்று வைத்திருக்கிறார்கள். அங்கே ஒரு எனமல் போர்டு இருக்கிறது, உள்ளே நுழைந்து பார்த்தோம் பாதி வேலிதான் இருக்கிறது. உள்ளே போனால் அபராதம் என்றிருக்கிறது. அபராதத்தைப்பற்றி அச்சமில்லை. எங்களுக்கு உள்ளே போய்ப் பார்க்க முடிந்தது. இதைப் பார்த்த பின்னால்தான் இதை நல்ல முறையில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று தோன்றியது.

அதேபோன்றுதான் வேலூர் கோவிலைப்பற்றி சொன்னார்கள். ஜலகண்டீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அங்கே யார் போய் பார்க் கிறார்கள்? கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லு கிறேன், அங்கே ஏதாவது வழிபாடு என்றிருந்தால்தான் பத்து பேர்கள் போகிறார்கள். அங்கே அற்புதமான சிலை இருக்கிறது. அது யாருக்கு தெரிகிறது? யார் போய் பார்க்கிறார்கள்? கர்ப்ப கிரகம் ஒன்று காலியாக இருக்கிறது. இவற்றையெல்லாம் பாது காத்துக்கொண்டிருக்கிற ஆர்கியாலாஜிக்கல் இலாகாவினர் யாருக் கும் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால் என்ன பிரயோஜனம்? ஆகவே, இதையெல்லாம் நாமே எடுத்துக்கொண்டு பாதுகாக்க வேண்டும் என்றுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறோம். இவற்றையெல்லாம் எப்படி பாதுகாக்கவேண்டும் என்பதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, காஞ்சீபுரத்தின் பக்கத்தில் முக்கூடல் என்று இருக்கிறது. மூன்று ஆறுகள் சேரக்கூடிய இடம், திரிவேணி மாதிரி இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவிலும் ஒரு முக்கூடல் இருக்கிறது. இங்கே சிற்பம், கல்வெட்டுகள் எல்லாம் இருக்கின்றன.

5th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

அதில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஆசுபத்திரியை எப்படி கட்டினார்கள். மருத்துவ வசதிகளை எப்படி கொடுத்து வந்தார்கள் என்பதெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

நான் லெனின்கிராட் சென்றிருந்தபோது அங்குள்ள மியூசியத்திற்குச் செல்ல நேர்ந்தது. (திரு. கலியாணசுந்தரம் அவர்களைப் பார்த்து) கனம் அங்கத்தினர் அவர்கள் அடிக்கடி பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அங்கே பண்டைக் காலத்தில் உள்ள பொருட்களையெல்யலாம் வைத்துப் பாதுகாக்கிறார்கள். லெனின் அவர்கள் உபயோகித்த பொடி டப்பா--கற்கள் பதித்தது--அதையெல்லாம் வைத்திருந்தார்கள் (திரு. மீ. கலியாணசுந்தரம்: சிம்மாசனத்தைக்கூட வைத்திருக்கிறார்கள் . . .) ஆம், சிம்மாசனங்களையும் வைத்திருக்கிறார்கள். இங்கே கூட மொகல் சிம்மாசனங்களை வைத்திருக்கிறார்கள். அங்கேயுள்ள பொருட்களைப் பார்க்கும்போது 'If there is Heaven on Earth, it is here, here, here' என்ற வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. இம்மாதிரி பழைய சின்னங்கள் எல்லாம்கூட வைத்திருக்கிறார்கள். இதைப் பார்ப்பதற்கு ஒரு நாள்கூட போதாது. அதே போன்று டாஷ்கண்ட்டிற்குப் போயிருந்த போதும் பார்த்தேன் முஸ்லீம்கள் நிறைந்திருக்கக்கூடிய உஸ்பெகிஸ்டானுக்குச் சென்றிருந்த போதும் இதே உணர்ச்சி இருந்தது. கோவில்களைக்கூட பாதுகாத்து வைத்திருப்பதாக அறிந்தேன். அவர்களை நானே அது பற்றிக் கேட்டேன் 'முட்டாள் தனம்' என்று கூட நினைத்திருக்கக் கூடும். அங்கிருந்து 200 மைல்களுக்கு அப்பால் இருக்கிற இடத்தில் சிவன் கோவில் ஒன்றிருக்கிறது. அங்கே போய் பார்ப்பதற்கு என்னை அழைத்தார்கள். எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை. டாஷ்கண்ட் நகரத்திலிருந்து 200 மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் ஒரு சிவன் கோயிலைக் கண்டு வைத்திருக்கிறார்கள். அதை அப்படியே விட்டுவிடவில்லை. இன்னும் நல்ல முறையில் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள். பூசை நடப்பதாக இல்லை. அதைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் போனபோது, டைமன்ட் செட் உள்ள விபூதி பட்டையைக் கொண்டு போக வேண்டும் என்று கூட சொல்லப்பட்டது. இதிலிருந்து அந்த சிவன் கோவில் பாதுகாக்கப்பட்டு வருவது தெரிந்தது. மிக பழைமை வாய்ந்த இப்படிப்பட்ட பொருள்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல. நம்முடைய புதுமையான வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய அளவில் பல இருக்கின்றன. நம்முடைய தமிழ் நாட்டிலே, இது வரையில் பேசிய உறுப்பினர்கள் பெருமையாகக் கூறியது போல, மற்ற மாநிலங்களில் இருப்பதை விட, நமக்குப் பயன்படும் சின்னங்கள் பல இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் உணரவேண்டும் அவற்றையெல்லாம் நாம் பாது 1-30
காக்கவேண்டும். பலன் தரக்கூடிய வகையில் இவைகளை p.m.
அமைத்துக்கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று இந்த மசோதா கொண்டு ரவப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் கூறியபடி,

[திரு. எம். பக்தவத்சலம்] [5th November 1966

இப்போது யாரோ இரண்டு பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அது போதாது. அதை விரிவாகக்கலாம். அப்படி விரிவாக்கி நல்ல முறையில் இந்தச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், மக்கள் பார்த்துப் பலன் அடையவேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். முறையில் நல்ல இலாகாவாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. ஆகவேதான், மத்திய அரசாங்கம் நீங்கள் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்கள், ஆகவே, சீக்கிரமாகச் சட்டமாக்கி வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம், மேலும் தாமதம் வேண்டாம் என்று இன்றைக்கே சட்டமாக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. கனம் அங்கத்தினர்களெல்லாம் ஒரே மனதாக ஆதரவு தெரிவித்துப் பாராட்டுத் தெரிவித்ததற்காக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

The amendment was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966 (L.A. Bill No. 18 of 1966) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 40 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill, 1966 (L.A. Bill No. 18 of 1966) be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 7th November 1966.

1–34 p.m.

The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 241. *Notification issued with G.O. Ms. No. 2468, Revenue, dated the 26th July 1966, regarding the Madras Land Reforms (Disposal of Surplus Lands) Rules, 1965 in respect of the manner*

5th **November 1966]**

in which any right title or interest transferred to the Government, etc. [Laid on the Table of the House under section 112 (2) *of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act,* 1961 *(Madras Act* 58 *of* 1961).]

B. Reports, Notifications and other Papers.

* 52. *Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year* 1966–67.

* 53. *Demands for Grants for Excess Expenditure for the year* 1963–64.

† 54. *The Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Second Amendment Bill,* 1966 *(L.A Bill No.* 17 *of* 1966).

† 55. *The Madras Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Bill,* 1966 *(L.A. Bill No.* 18 *of* 1966).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

* Laid on the Table of the House on 4th November 1966.

† Circulated to Members in the House on 4th November 1966.

APPENDIX I.

[*Vide* Answer to Starred question No. 421 at page 289]

A portion of the roof of the building of the St. Antony's Elementary School, Mackay's Garden, Royapettah, collapsed at about 12-15 p.m. on 23rd November 1965, slightly injuring 5 pupils of Standard II and the class teacher. They were treated as out-patients in the Royapettah Government Hospital for minor injuries and sent home. They were met by the D.E.O. and the Joint D. S. E.

The Elementary School with standards I to V used to be conducted in that building. When the D. E. O. visited the school on 8-4—1964, he noticed the unsafe condition on the building and issued a notice to the manager that he should arrange to have the children removed to another building or have the school closed for summer vacation and that the school would be permitted to be held in that building after the summer holidays only if a certificate was produced from an Engineer of the Public Works Department that the building was safe for occupation. Accordingly, the manager shifted all the classess to No. 2-A, Nungambakkam High Road, about 3 furlongs away where the management was running another school; but, later, due to the pressure of the parents, continued classes I and II in the old premises but in a thatched shed near the building. On 23rd November, 1965 the day of the incident, since the floor of the shed got very wet owing to heavy rains, the children of Standard II were asked to go into the school building for shelter when a portion of the roof collapsed.

Standards I and II have been shifted to 2-A, Nungambakkam High Road from 24th November 1965. The Commissioner of Police has reported that a case under Section 337, I. P. C. has been registered and is under investigation.

ராயப்பேட்டை, மக்கித் தோட்டத்திலுள்ள செய்ன்ட் அந்தோணி தொடக்கப்பள்ளி கட்டிடக் கூரையின் ஒரு பகுதி, 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் தேதியன்று பிற்பகல் 12-15 மணியளவில், இடிந்து விழுந்தது. இதனால் II-ம் வகுப்பு மாணவ, மாணவியர் ஐவருக்கும், வகுப்பு ஆசிரியைக்கும் இலேசாகக் காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு ராயப்பேட்டை அரசாங்க மருத்துவ மனையில் புற நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களை மாவட்டக் கல்வி அதிகாரியும், உயர்நிலைக் கல்வி இணை நெறியாளரும் சந்தித்தனர்:

I முதல் V வகுப்புக்கள் வரையுள்ள தொடக்கப்பள்ளி அந்தக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வந்தது. 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ந் தேதியன்று மாவட்டக் கல்வி அதிகாரி அத்தப் பள்ளியைப் பார்வையிட்டார். அந்தக் கட்டிடத்தின் மோசமான நிலையைப் பாகத்ததும் அவர் பள்ளிச் சிறுமியர்களை வேறு கட்டிடத்திற்கு மாற்ற வேண்டுமென்றும் அல்லது கோடை விடுமுறைக்காகப் பள்ளியை மூடவேண்டுமென்றும், கோடை விடுமுறைக்குப் பிறகு அக் கட்டிடம் நல்ல நிலைமையிலிருக்கிறது என்று பொதுப் பணித்துறைப் பொறியாளர் ஒருவரிடமிருந்து சான்றிதழ் பெற்றுக் காண்பித்தால்தான் அங்கு பள்ளி நடத்த அனுமதிக்கப்படும் என்றும்

5th November 1966]

பள்ளி நிர்வாகிக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பினர். இதை யொட்டி ஷ நிர்வாகி எல்லா வகுப்புகளையும், 3 பர்லாங் தொலைவிலுள்ள நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, 2-A எண்ணிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றிவிட்டார். அங்கு இப்பள்ளி நிர்வாகத்தினர் வேறொரு பள்ளியை நடத்தி வந்தனர். ஆனால் பின்னர் பெற்றோர்களின் வற்புறுத்தல் மேல், I, II-ம் வகுப்புகளை பழைய இடத்திலேயே அக்கட்டிடத்திற்கு அருகில் கூரைக் கொட்டகை ஒன்றில் நடத்தி வந்தார்கள். இந்த விபத்து நடந்த 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் தேதியன்று, கொட்டகையின் தரை கனத்த மழை காரண மாக மிக ஈரமடைந்திருந்தது. எனவே, II-ம் வகுப்புச் சிறுவர்களை பள்ளிக் கட்டிடத்திற்குள் போய்த் தங்கும்படிக் கேட்டுக்கொண்டனர். அப் போது கூரை இடிந்து விழுந்தது- I, II-ம் வகுப்புகளை 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ந் தேதி முதல் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள 2-A எண் கட்டிடத்திற்கு மாற்றிவிட்டார்கள். இது பற்றி இ.பி.கோ. 337-வது பிரிவின் கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை நடந்து வருகிறது எனப் போலீஸ் கமிஷனர் அறிவித்துள்ளார்.

இணைப்பு II.

[310 ம் பக்கத்திலுள்ள 438 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

(அ) & (இ) ஆம். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பழையகாயல் கிராமத்தின் குக்கிராமமாகிய ஸ்ரீராமச்சந்திரப்புரத்திலுள்ள ஹரிஜனங்கள் குறையிரந்து கொண்டதன் மேல் அந்த குக்கிராமத்தில் உள்ள உப்பளங்களுக்கு வழி அமைப்பதற்காக 3·03 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 1958-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11-ந் தேதி அன்று வசப்படுத்திக்கொள்ளப்பட்டது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங் களின் உரிமையாளர்களில் இருவர் மேற்படி நில ஆர்ஜிதச் செயல் முறைகளுக்கு எதிராக தூத்துக்குடி மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தனர். சரியான முறையில் அறிவிப்பு கொடுக்க வில்லை என்பதால் மேற்படி நீதி மன்றம் அந்தச் செயல்முறை செல்லாது எனத் தீர்ப்பளித்தது. மாநில அரசாங்கம் திருநெல்வேலி மாவட்ட நீதி பதியிடம் மேல் முறையீடு செய்தது. இந்த மேல் முறையீடு தள்ளப் பட்டது. விரிவான பரிசீலனை நடத்தியபின், ஆர்ஜித செயல்முறைகளைப் புதிதாகத் தொடங்கலாம் என அரசாங்கம் முடிவு செய்தது.

முன்பு நீதி மன்றம் பிறப்பித்த ஆணைகளின் மூலம் எந்த நிலங்கள் சம்பந்தமான செயல்முறைகள் செயலற்றுப் போயினவோ அந்த நிலங்கள் சம்பந்தமாகப் புதிதாக நில ஆர்ஜித நடவடிக்கைகள் தொடரப்பட்டன. இதற்கிடையில், முந்திய ஆர்ஜித நடவடிக்கைகளால் இடருற்ற சில நில உரிமையாளர்கள், அரசாங்கம் செய்யக் கருதிய நில ஆர்ஜித நடவடிக் கையை எதிர்த்து அரசாங்கத்திடம் முறையீடு செய்துகொண்டனர். முன்னர் செய்த நில ஆர்ஜிதச் செயல் முறைகளுக்கு எதிராக மற்றொரு வழக்கும் தொடரப்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில், திருநெல்வேலி கலெக்டர் செயற்குறிப்புகள் அனைத்தையும் மீண்டும் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு அறிவித்தார். உப்பளங்களுக்கு மூன்று அணுகு பாதைகள் இருந்தன. தெற்கு அணுகுபாதை மிகுந்த செலவை ஏற்படுத்தும். இதை அரிஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. மத்திய பாதைக்குரிய நில ஆர்ஜித நடவடிக்கைகள் நீதி மன்றத்தின் ஆணைகளின் மூலம் செல்லு படியற்றவையாகிவிட்டன. நில உரிமையாளர்களும் அரசாங்கத்துக்கு முறையீடு செய்துள்ளனர். வடக்கு அணுகுபாதை சாத்தியமானதாகவும் தூத்துக்குடி நகருக்கு அருகில் இருப்பதால் மிகுந்த வசதியுள்ளதாகவும் இருக்கிறது. இதைப் பயன்படுத்துவதற்கு அரிஜனங்கள் இசைவு தெரி வித்தனர். எனவே திருநெல்வேலி கலெக்டர் இந்த வடக்கு அணுகு பாதை நெடுக ஒரு வழியை அமைக்க நில ஆர்ஜித செயற்குறிப்பைப் புதிதாக அனுப்பியுள்ளார். இந்தச் செயற்குறிப்புக்கு 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ந் தேதியன்று அரசாங்கம் ஒப்புதல் தந்தது.

மறுப்புரைகள் குறித்து விசாரணைகள் முடிவுற்றன. அரசாங்கமும் நில ஆர்ஜித சட்டத்தின் படிக்கான வரைவு அறிவிப்புக்கு 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந் தேதியன்று ஒப்புதல் தந்தது.

(உ) & (எ) வடக்கு அணுகுபாதை நெடுக இந்தச் சாலையை அமைப்பதற்கு அரிஜனங்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை. எனவே இக்கேள்விகளுக்கு இடமில்லை.

(ஐ) வடக்த அணுகுபாதை நெடுக உள்ள தனியார் சாலை (இதற்குரிய நில ஆர்ஜிதத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது) வழியாக உப்பு ஏற்றிச் செல்லும் லாரி ஒன்றுக்கு ரூ. 3 கட்டணம் விதித்து வாங்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியும். அவ்வாறு கட்டணம் விதித்து வாங்கக்கூடாது என அந்த நில உரிமையாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

(ஒ) 7·14 எக்கர் இதோடு 0·98 எக்கர் புறம்போக்கு நிலம் சாலை புறம்போக்கிற்கு மாற்றப்பட வேண்டியுள்ளது.

(ஔ) 44.

(அஅ) 3·03 எக்கர்; 45 பட்டாதாரர்கள்.

A.—(*a*) & (*b*) Yes Sir. On representation received from the Harijans of Ramachandrapuram, hamlet of Palayakayal village in Tirunelveli district, lands to an extent of 3·03 acres were acquired for the provision of pathway to the salt-pans in the hamlet and taken possession of on 11th August 1958. Two of the owners of the lands acquired filed a suit in District Munsif's Court, Tuticorin, against, the land acquisition proceedings and got the proceedings declared null and void by that Court for lack of proper notice. The State preferred an appeal before the District Judge, Tirunelveli. The appeal was dismissed. After detailed examination the Government decided to institute fresh acquisition proceedings.

Accordingly. fresh land acquisition proceedings were instituted in respect of the lands in respect of which the earlier proceedings became ineffective due to the Court's order. Meanwhile certain other owners of lands affected by the earlier acquisition proceedings represented to Government against the land acquisition proposed. There was also another suit instituted against the original land acquisition proceedings. In the circumstances the Collector of Tirunelveli re-examined the proposals in detail and reported that there were three approaches to the salt-pans, that the southern approach was costly and not agreeable to the Harijans, that the central approach in respect of which the land acquisition proceedings had been rendered ineffective by Court's orders and the owners have also made representation to Government and that the northern approach was more feasible and convenient being nearer to Tuticorin town. The Harijans also were willing to this being opened for the public. The Collector of Tirunelveli, therefore, sent fresh land acquisition proposals for formation of a pathway along this northern approach. Government approved this proposal on 29th September 1964. The enquiry into the objections has been completed and Government have since approved the draft declaration under the Land Acquisition Act on 6th April 1966.

5th November 1966]

(*c*) & (*d*) The Harijans have no objection to this road along the northern approach. The questions do not arise.

(*e*) The Government are aware that a sum of Rs. 3 was being collected per lorry for transporting salt for use of the private road along the northern approach in respect of which land acquisition has been approved by the Government. But the owners of lands have been requested to give up the levy and they have agreed to it.

(*f*) 7·14 acres, besides 0·98 acre of poramboke to be transferred to road poramboke.

(*g*) 44.

(*h*) 3·03 acres; 45 pattadars.

APPENDIX III

[*Vide* answer to Starred Question No. 441 at page 313 .]

As early as in 1931 it was felt that the Palar river was over burdened with irrigation beyond its capacity. The Government therefore directed in 1931 that no new irrigation works should be constructed in the Palar Basin nor any extension of works should be taken up and that there should be no conversion from dry to wet or from single crop to double crop wet. It was also ordered that the charge for a second crop on any wet land should not be compounded in that area. These restrictions are the original " Palar Basin Rules ".

2. In the late forties, in the interests of the Grow More Food Campaign the Government relaxed the Palar Basin Rules and permitted—

(*a*) sinking of new wells or tube-wells for irrigation of dry lands in the Palar Basin provided such wells were 2,000 feet away from spring heads of channels; and

(*b*) extension of irrigation to dry lands for an irrigated crop after a favourable north-east monsoon.

3. In 1959, the Government ordered that the relaxation of the prohibition of sinking of new wells within a minimum distance of 2,000 feet may be granted only in *deserving* cases.

4. In 1961, Palar Basin Rules were further relaxed as follows :—

(*a*) New wells may be permitted for irrigating the lands in the Palar Basin, provided such wells were two furlongs away from the spring heads of channels and one furlong away from the spring channel and provided crops grown correspond to the classification of the land registered as single crop wet, double crop wet, dry, etc.

(*b*) Horse-power of each pumpset should not exceed five.

[5th November 1966

5. In May 1963, with a view to safeguard the protected water-supply schemes depended upon the Palar river, the Government ordered that in cases where the sub-soil water were the source for water-supply schemes sinking of wells or tube-wells with or without the installation of pumpsets be prohibited within a distance of 2,000 feet from either bank of the Palar river and also up and down stream side.

6. As it was represented to Government that the relaxations then in force did not afford the desired relief, a joint inspection of the areas was made by the Commissioner, Land Revenue and Food Production and the Chief Engineer (Irrigation) and on their recommendation the Palar Basin Rules have been further modified in November 1963 as follows and these rules will be in force for a period of five years from the above date when it will be reviewed further :—

(i) Sinking of new wells or installation of pumpsets within two furlongs of the spring heads and one furlong of the spring channels taking off from the Palar river or from any of its tributaries in the Palar Basin will be strictly prohibited.

(ii) If there are any wells or infiltration galleries, etc., sunk in the bed of the Palar river or its tributaries for supplying drinking water to any local body, or if any such scheme is proposed or is under investigation, sinking of wells or tube-wells, with or without installation of pumpsets, will be prohibited, within a distance of 2,000 feet of such well, infiltration gallery, etc.

(iii) The spring channel should be deemed to end at the point at which distribution starts.

(iv) In the ayacut of the concerned spring channel itself, there will be no restriction on the sinking of wells and the installation of pumpsets to stabilise the ayacut.

(v) There will be no restriction regarding the crops grown under wells in the Palar Basin.

(vi) No well in the Palar Basin shall be allowed to have pumps of more than 5 H.P. capacity.

(NOTE.—The Collector will have powers to relax this condition in special circumstances, for reasons to be recorded in writing.)

(vii) In respect of independent Kasams and channels the restrictions regarding sinking of wells and installation of pumpsets will be imposed only with a view to protecting the source of irrigation from depletion. Kasams which have not functioned for the past many years should be treated as abandoned and the ayacuts under them should be converted into dry. These abandoned Kasams need not be taken into account at all when giving clearance certificates. In regard to Kasams which are dry in summer and start functioning only when the surrounding water table rises, that is during the monsoon period, the restrictions need not be imposed, as very few pumps will work during the monsoon period, and their

5th November 1966]

effect on such Kasams will be practically 'Nil'. But in respect of other Kasams which function even in summer, the restrictions will be applicable.

(viii) There will be general exceptions to the above rules as follows:—

(*a*) If a well has been sunk in the restricted zone but in Morambu (i.e., after blasting) the question of pumping affecting the spring head or spring channel is rather remote. Such wells may therefore be given clearance certificates.

(*b*) If the ayacutdars, on being consulted express no objection to pumpsets in the restricted area, clearance certificates can be given.

(ix) There may be hard cases in which the Madras State Electricity Board has already entered into agreement with the ryots in the restricted zone and the ryots have purchased the pumpsets and are ready to receive connection. In these cases also clearance certificates should be given, provided the agreement had been entered into and the pumpsets had been purchased prior to 1st January 1963.

(x) Permission to sink wells or install pumpsets in the Palar Basin should be given by the Collector in consultation with the Executive Engineer, Public Works department, concerned.

7. In implementing the orders regarding grant of clearance certificates certain difficulties were brought to notice by the Madras State Electricity Board and the Collector of North Arcot. The Government have therefore ordered in July 1965 that the Collector himself can issue the clearance certificate without reference to the Executive Engineer, Public Works department, except in cases where technical advice is required and also where 5 H.P. limit is proposed to be exceeded.

8. *Justification for the continuance of the Palar Basin Rules.*—The deficiency of water for irrigation under the Palar Anicut System and generally in Palar water shed was the subject of complaint even prior to 1931. Hence, after a careful examination of the issues the Palar Irrigation Committee appointed then concluded that the actual extent of cultivation considerably exceeded the calculated probable area that the system could irrigate. In view of this, the Government imposed a total ban on development of irrigation in the Palar Basin Rule in June 1931 as the system was burdened with the irrigation over an area beyond its capacity.

However, with a view to improve the food production, the above orders were being relaxed to the extent feasible from 1948 onwards under the Grow More Food Campaign in favour of sinking new wells. The orders now in force as set out in paragraphs 6 and 7 above do not totally prevent sinking of new wells; but only restrict expansion to the extent necessary in order to prevent reduction of spring supply and mutual interference among them.

[5th November 1966

These rules are thus intended purely to safeguard the interests of the ryots themselves under the Palar Basin and their withdrawal cannot be justified without intensive scientific investigations as such a course would aggravate their difficulties. These investigations are now being done under the United Nations Ground Water Project.

1. பாலாறு அளவுக்கதிகமாகவே பாசனக் காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்று 1931-ம் ஆண்டிலேயே உணரப் பட்டது. எனவே, பாலாறு வடிநிலத்தில் புதிய பாசன வேலைகள் எதுவும் அமைக்கப்படக்கூடாது என்றும் பாசன விஸ்தரிப்பு வேலைகள் எவையும் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படக் கூடாது அல்லது ஒரு போக நிலம் எதுவும் இருபோக நன்செய் நிலமாக மாற்றப்படக் கூடாது என்றும் அரசாங்கம் 1931-ம் ஆண்டில் கட்டளையிட்டது. நன்செய் நிலத்தில் உள்ள இரண்டாம் போகப் பயிருக்கான கட்டணம் அப்பகுதியில் உடன்பட்டுத் தீர்த்துக்கொள்ளப்படக் கூடாது என்றும் ஆணையிடப்பட்டது. இந்த வரையறைகளே "பாலாறு வடிநில மூல விதிகள்" ஆகும்.

2. 1948-ம் ஆண்டில், உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில், அரசாங்கம் பாலாறு வடிநில விதிகளைத் தளர்த்தி, அடியிற்கண்டவற்றை அனுமதித்தது:—

(அ) பாலாறு வடிநிலத்தில், புன்செய் நிலங்களின் பாசனத் திற்காகப் புதிய கிணறுகளை அல்லது குழாய்க் கிணறுகளை வெட்டுதல்; ஆனால் அத்தகைய கிணறுகள், கால்வாய்களின் ஊற்றுக்கண்களிலிருந்து 2,000 அடிக்கு அப்பால் இருக்கவேண்டும்.

(இ) வடகிழக்கு பருவ மழை நல்ல வகையில் பெய்த பிறகு பாசனம் பெறும் பயிர் ஒன்றை விளைவிக்கப் புன்செய் நிலங் களுக்குப் பாசன வசதிகள் விஸ்தரித்தல்.

3. புதிய கிணறுகளை வெட்டுவது குறித்த தடைகளைத் தளர்த்தி வழங்கப்படும் அனுமதி தக்க விஷயங்களில் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் 1959-ம் ஆண்டில் ஆணையிட்டது.

4. 1961-ம் ஆண்டில், பாலாறு வடிநில விதிகள் அடியிற்கண்ட வாறு மேற்கொண்டும் தளர்த்தப்பட்டன:—

(அ) பாலாறு வடிநிலத்தில் உள்ள நிலங்களைப் பாசனம் செய்வதற்காகப் புதிய கிணறுகள் வெட்டிக்கொள்ளலாம். ஆனால், அக் கிணறுகள், கால்வாய்களின் ஊற்றுக்கண்களிலிருந்து இரண்டு பர்லாங்குக்கு அப்பாலும் ஊற்றுக்கால்வாயிலிருந்து ஒரு பர்லாங் தள்ளியும் இருக்கவேண்டும்; மேலும் ஒருபோக நன்செய், இரு போக நன்செய், புன்செய் போன்ற நிலத் தரப்பிரிவினைப் பதிவுக் கேற்ப பயிர்கள் பயிரிடப்படவேண்டும்.

(இ) ஒவ்வொரு பம்புசெட்டும் ஐந்து குதிரைத் திறனுக்கு மேற்பட்ட திறனுடையதாக இருக்கக்கூடாது.

5th November 1966]

5. 1963 மே மாதத்தில், பாலாற்றையே முழுவதும் நம்பியுள்ள நன்னீர் வழங்கு திட்டங்கள் நன்கு செயல்படுவது சாத்தியமாக இருக்கும்பொருட்டு, பூமிக்கு அடியில் உள்ள நீர் ஆதாரங்களே நீர் வழங்கு திட்டங்களுக்கு அடிப்படையாக இருக்கும் இடங்களில், பாலாற்றின் இரு கரைகளிலிருந்தும், நீரோட்டத்தின் வழியேயும் எதிரோட்டத்தின் வழியேயும் கரையிலிருந்து 2,000 அடி தூரத்திற்குள் பம்பு செட்டுடனே பம்புசெட்டின்றியோ கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் அமைக்கப்படக்கூடாது என்று அரசாங்கம் ஆணையிட்டது.

6. விதிகள் தளர்த்தப்பட்டும், சலுகைகள் செயலில் இருந்தும், வேண்டிய நிவாரணம் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திடம் முறையிடப்பட்டது. எனவே, நிலவரி, வருவாய்-உணவு உற்பத்திக் கமிஷனரும் பாசனத் தலைமைப்பொறியாளரும் சேர்ந்து சம்பந்தபட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். அவர்களது பரிவுரையின்மேல் பாலாறு வடிநில விதிகள் 1963 நவம்பரில் மேற்கொண்டும் மாற்றியமைக்கப்பட்டன. இந்த விதிகள், மேற்சொன்ன தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை செயலில் இருக்கும்; ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விதிகள் மீண்டும் பரிசீலனை செய்யப்படும்:

(1) ஊற்றுக்கண்களிலிருந்து இரண்டு பர்லாங்குகளுக்குள்ளும் பாலாற்றிலிருந்து அல்லது பாலாறு வடிநிலத்தில் ஓடும் யாதொரு கிளைக் கால்வாயிலிருந்து பிரியும் ஊற்றுக்கால்வாய்களிலிருந்து ஒரு பர்லாங் தொலைவுக்குள்ளும் புதிய கிணறுகள் வெட்டுவது அல்லது பம்புசெட்டுகள் அமைப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்படும்.

(2) ஓர் உள்ளூர் ஆட்சி சபைக்குக் குடிநீர் வழங்க, பாலாற்றுப் படுகையில் அல்லது அதன் கிளைக் கால்வாய்களின் படுகையில் கிணறுகள் அல்லது வடிமுனைக் கிணறுகள் வெட்டப்பட்டிருப்பின், அல்லது அவ்வாறு வெட்டத் திட்டமிட்டிருப்பின் அல்லது அத்தகையதொரு வேலைத் திட்டம் பரிசீலனையிலிருப்பின், அத்தகைய கிணறு, வடிமுனைக் கிணறு முதலியவற்றிலிருந்து 2,000 அடி தொலைவுக்குள் பம்புசெட்டுகளுடனே பம்பு செட்டுகளின்றியோ கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் அமைப்பது தடைசெய்யப்படும்.

(3) ஊற்றுக் கால்வாய், நீர் வழங்கு வேலை தொடங்குமிடத்தில் முடிவதாகக் கொள்ளப்பட வேண்டும்.

(4) சம்பந்தப்பட்ட ஊற்றுக்கால்வாய் குறித்த ஆயக்கட்டில் ஆயக்கட்டுக்குத் தொடர்ந்து தண்ணீர் கிடைக்கச் செய்வதற்காகக் கிணறுகள் வெட்டுவதற்கும் பம்புசெட்டுகளை நிறுவுவதற்கும் தடையிருக்காது.

(5) பாலாறு வடிநிலத்தில் கிணற்றுப் பாசனத்தின் கீழ் விளைவிக்கும் பயிர்கள் குறித்துக் கட்டுப்பாடு எதுவும் இல்லை.

[5th November 1966

(6) பாலாறு வடிநிலத்தில் உள்ள எக்கிணறும் 5 குதிரைத் திறனுக்கு மேல் திறன்கொண்ட விசை ஏற்றங்களைக்கொண்டதாக இருக்கக்கூடாது.

குறிப்பு—தனிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த வரையறையைத் தளர்த்த கலெக்டருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அதற்குரிய காரணங்களை அவர் எழுதிவைக்கவேண்டும்.

(7) தனிப்பட்ட குளங்கள், கால்வாய்கள் சம்பந்தமாகவும் கிணறுகள் வெட்டுவது குறித்தும் பம்புசெட்டுகள் நிறுவுவது குறித்தும் தடை ஆணை பிறப்பிக்கப்படும். பாசன ஆதாரம் அறவே வறண்டுபோகாது தடுப்பதுதான் இதன் நோக்கமாகும். பல ஆண்டுகளாகச் செயல்படாத குளங்கள், பயனற்ற குளங்களாக விட்டு விடப்படவேண்டும். அவற்றின்கீழ் உள்ள ஆயக்கட்டுகள் புன்செய் ஆயக்கட்டுகளாக மாற்றப்படவேண்டும். இசைவுச் சான்று வழங்கும் பொழுது, இவ்வாறு கைவிடப்பட்ட குளங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. கோடையில் வறண்டு, மழைக்காலத்தில் சுற்றிலும் நீர்மட்டம் உயருகையில் நீர் பெறத்தொடங்கும் குளங்கள் குறித்து இந்தக் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டியதில்லை. ஏனெனில், மழைக்காலத்தில் ஒரு சில விசை ஏற்றங்களே செயல்படுமாதலால், அவை செயல்படுவதால் அக்குளங்கள் பெரிதும் பாதிக்கப் படமாட்டா. ஆனால், கோடைக் காலத்திலும் நீர் உள்ள குளங்கள் விஷயத்தில், இக்கட்டுப்பாடுகள் பொருந்தும்.

(8) மேற்சொன்ன விதிகளுக்குப் பொது விலக்குகள் உண்டு; அவை வருமாறு:—

(அ) கட்டுப்பாட்டு மண்டலத்தில் ஒரு கிணறு வெட்டப் பட்டிருந்து, ஆனால் அது பாறைப் பகுதியில் இருந்தால் (அதாவது வெடி வைத்துத் தகர்த்த பின்) அங்கு விசை ஏற்றத்தினால் ஊற்றுகள் அல்லது ஊற்றுக்கால்வாய் பாதிக்கப்படுவதற்கு அதிக சாத்தியம் இல்லை. அத்தகைய கிணறுகள் விஷயத்தில் இசைவுச் சான்றுகள் வழங்கப்படலாம்.

(இ) கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பம்புசெட்டுகளை நிறுவுவது குறித்து ஆயக்கட்டுதாரர்கள் கலந்தாலோசிக்கப்பட்டு அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காவிடின், இசைவுச் சான்றுகள் வழங்கப்படலாம்.

(9) கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ்நாடு மின்சார போர்டு சில குடியானவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கலாம். அவர்கள் பம்புசெட்டுகள் வாங்கி, மின்சக்தி இணைப்புக்காகக் காத்திருக்கலாம். இவர்களுக்கு இசைவுச் சான்றிதழ் கொடுக்க மறுத்தால் அவர்கள் அவதியுறுவர். எனவே, அவர்களுக்கும் இசைவுச் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும். ஆனால் அவர்கள் விஷயத்தில் அந்த ஒப்பந்தம் 1—1—1963-க்கு முன்னர் கையெழுத் திடப்பட்டு அத்தேதிக்கு முன்னர் பம்புசெட்டுகளும் வாங்கப் பட்டிருக்க வேண்டும்.

5th November 1966]

(10) கலெக்டர், பொதுப்பணித் துறையின் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளரைக் கலந்தாலோசித்துப் பாலாறு வடி நிலத்தில் கிணறுகள் வெட்ட அல்லது பம்புசெட்டுகள் நிறுவ அனுமதி வழங்கவேண்டும்.

7. இசைவுச்சான்றுகள் வழங்குவது குறித்த ஆணைகளை நிறைவேற்றுவதில் உள்ள சில இடர்ப்பாடுகளைத் தமிழ்நாடு மின்சார போர்டும் வட ஆற்காடு கலெக்டரும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். எனவே, கலெக்டர், தொழில் நுட்ப ஆலோசனை வேண்டாதவிடத்தும் 5 குதிரைத் திறன் வரையறையை விஞ்சக் கருதாத இடத்தும், பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளரைக் கலந்தாலோசிக்காமலேயே இசைவுச் சான்றிதழ்களை வழங்கலாம் என்று அரசாங்கம் 1965 ஜூலை மாதத்தில் ஆணையிட்டது.

8. பாலாறு வடிநில விதிகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான காரணம்.—பாலாறு அணைக்கட்டு ஏற்பாட்டின்கீழ் பாசனத்திற்கான நீர் குறைவாக இருப்பதுபற்றியும் பொதுவாக பாலாறு ஆற்றுப்பள்ளத்தாக்கில் நீர் பற்றாக்குறை இருப்பதுபற்றியும் 1931-ம் ஆண்டுக்கு முன்பிருந்தே புகார்கள் வந்துகொண்டிருந்தன. எனவே அப்பொழுது நியமிக்கப்பட்ட பாலாறு பாசனக் குழு, பல்வேறு கோணங்களிலிருந்து இவ்விஷயத்தைக் கவனமாக ஆராய்ந்த பின்னர், இப்பாசன ஏற்பாட்டின்கீழ் பாசனம் பெறத் திட்டமிடப்பட்ட பரப்பளவைவிட உண்மையில் பாசனம் பெறும் பரப்பளவு அதிகம் என்ற முடிவுக்கு வந்தது. இதைக் கருத்தில் கொண்டே, அரசாங்கம் 1931 ஜூன் மாதத்தில், பாலாறு வடி நிலத்தில் பாசன வசதி அதிகரிப்பை முழுவதும் தடைசெய்தனர். ஏனெனில், அதன் பாசனத்திறனுக்கு அதிகமான அளவுக்கு அதன் பாசனச்சுமை உயர்ந்திருக்கிறது.

ஆயினும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், புதிய கிணறுகள் வெட்ட அனுமதியளிக்கும் வகையில், மேற்சொன்ன ஆணைகள் 1948-ம் ஆண்டு முதற்கொண்டு தளர்த்தப்பட்டன. தற்போது செயலில் உள்ள ஆணைகள் 6, 7-வது பாராக்களில் விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைகள் புதிய கிணறுகள் வெட்டுவதை அறவே தடை செய்யவில்லை. ஆனால், ஊற்று நீர் குறைவதைத் தடுக்கும் நோக்கத்துடனும் கிணறுகளும், ஊற்றுகளும் ஒன்றுக்கொன்று பாதகமாகச் செயல்படாதவண்ணம் பார்த்துக் கொள்வதற்கும் அவசியமான வகையில் பாசன வசதிகள் விரிவாக்கப்படுவதை மட்டும் கட்டுப்படுத்துகின்றன. குடியானவர்களின் நலனைப் பாதுகாப்பதே இவ் விதிகளின் நோக்கமாகும். இந்த விதிகளை, அறிவியல் முறையில் நன்கு ஆராயாமல், ரத்து செய்ய முடியாது. ஏனெனில், அவ்வாறு செய்தால் உழவர்களது இடர் அதிகமாகும். இந்த ஆராய்ச்சி "ஐ.நா. நம் திட்டம்" என்பதன் கீழ் இப்போது நடைபெற்று வருகிறது.

APPENDIX IV.

[*Vide* Answer to Starred Question No. 443 at page 314]

Name of the district.	Quantities of food-grains seized at check post.	Quantities of food-grains for which the value was reimbursed.	Quantities of foodgrains forfeited to Government and their value.	
(1)	(2)	(3)	(4)	(5)
	(Quintals.)	(Quintals.)	(Quintals.)	RS.
Madras	..	..	..	..
Chingleput	6,449·60	6,064·55	375·77	..
South Arcot ..	645·02	..	..	..
North Arcot ..	1,119·18	43·97	1,075·21	64,656·70
Thanjavur ..	1,270·99	460·29	174·88	10,995·71
Salem	1,089·85	436·35	..	..
Nilgiris	63·73	..	63·39	4,686·07
Madurai	4,066·03	1,999·50	2,066·53	18,705·30
Kanyakumari ..	385·06	66·46	330·24	18,670·76
Tiruchirappalli ..	2,750·12	1,987·71	470·31	25,802·79
Ramanathapuram ..	230·62	230·62	..	..
Tirunelveli ..	458·67	306·20	102·52	6,808·09
Coimbatore ..	1,606·13	93·75	1,212·29	81,751·26
Dharmapuri ..	2,816·93	1,771·61	..	..
Total ..	22,951·98	13,461·01	5,871·14	2,56,092·52

மாவட்டத்தின் பெயர்.	உணவுத் தானியம் பரிசோதனைச் சாவடிகளில் கைப்பற்றப்பட்ட உணவுத் தானியங்களின் அளவு.	மதிப்புத் தொகை வழங்கப் பெற்ற உணவுத் தானியங்களின் அளவு	அரசாங்கம் பறிமுதல் செய்த உணவுத் தானியங்களின் அளவும் அவைகளின் மதிப்பும்.	
(1)	(2)	(3)	(4)	(5)
	(குவிண்டாலில்.)	(குவிண்டாலில்.)	(குவிண்டாலில்.)	ரூபாய்.
சென்னை ..	..	..	..	..
செங்கற்பட்டு ..	6,449·60	6,064·55	375·77	..
தென் ஆர்க்காடு ..	645·02	..	..	..
வட ஆர்க்காடு ..	1,119·18	43·97	1,075·21	64,656·70
தஞ்சாவூர் ..	1,270·99	460·29	174·88	10,995·71
சேலம்	1,089·85	436·35	..	..
நீலகிரி	63·78	..	63·39	4,686·07
மதுரை	4,066·03	1,999·50	2,066·53	18,705·30
கன்னியாகுமரி ..	385·06	66·46	330·24	18,670·76
திருச்சிராப்பள்ளி ..	2,750·12	1,987·71	470·31	25,802·79
இராமநாதபுரம் ..	230·62	230·62	..	..
திருநெல்வேலி ..	458·67	306·20	102·52	6,808·09
கோயம்புத்தூர் ..	1,606·13	93·75	1,212·29	81,751·26
தர்மபுரி ..	2,816·93	1,771·61	..	..
மொத்தம் ..	22,951·98	13,461·01	5,871·14	2,56,092·52

APPENDIX V.

[*Vide* Answer to Starred Question No. 444 at page 315]

The statement showing the targets and the quantity of paddy and millets procured in the districts from October 1965 to June 1966.

(ALL FIGURES IN TONNES.)

Serial number and name of the districts.	Rice. Short-term crop. Target.	Rice. Short-term crop. Procured from October to December 1965.	Rice. Long-term crop. Target.	Rice. Long-term crop. Procured from December 1965 to June 1966.	Millets. Target fixed.	Millets. Quantity procured up to 2nd July 1966. Ragi.	Cholam.	Cumbu.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1 South Arcot ..	12,500	12,458	90,000	74,854	10,000	5,899	..	..	5,899
2 Thanjavur ..	1,50,000	1,25,608	2,75,000	2,56,776	5,000	..		..	..
3 Tiruchirappalli ..	25,000	9,360	40,000	24,712	10,000	..	2,135	..	2,135
4 Madurai ..	..	11,563	27,000	20,368	10,000	700	..	..	700
5 Ramanathapuram	..	..	30,000	18,728	10,000	221	..	..	221
6 Tirunelveli ..	..	2,259	35,000	38,100	5,000	877	1,434	9	2,320
7 North Arcot ..	12,500	24,109	62,500	52,330	5,000	13	..	2	15
8 Salem ..	..	..	8,000	3,135	15,000	2,157	336	219	2,712
9 Coimbatore ..	10,000	13,752	10,000	5,489	30,000	..	..	..	..
10 Chingleput ..	10,000	11,031	60,000	58,429	..	..	..	..	..
11 Kanyakumari ..	7,000	4,369	7,000	6,185	..	..	..	..	..
12 Dharmapuri ..	..	..	6,000	2,377	..	..	..	..	..
13 Nilgiris ..	..	..	1,000	660	..		..	..	..
	2,27,000	2,14,509	6,51,500	5,62,143	1,00,000	9,867	3.905	230	14,002

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1965 அக்டோபர் முதல் 1966 ஜூன் வரை மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல், கருந்தானியங்கள் ஆகியவற்றின் அளவையும், இலக்கையும் காட்டும் விவர அறிக்கை (எல்லா இலக்கங்களும் டன்களில் இருக்கவேண்டும்).

	அரிசி.				கருந்தானியங்கள்.				
	குறுவைப்பயிர்		சம்பாப்பயிர்						
தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	இலக்கு.	1965 அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை கொள்முதல் செய்யப்பட்டது.	இலக்கு.	1965 டிசம்பரிலிருந்து 1966 ஜூன் வரை கொள்முதல் செய்யப்பட்டது.	நிச்சயிக்கப்பட்ட இலக்கு.	1966 ஜூலை மாதம் 2-ந் தேதி வரை கொள்முதல் செய்யப்பட்ட அளவு.			
						கேழ்வரகு.	சோளம்.	கம்பு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1 தென்ஆர்க்காடு ..	12,500	12,458	90.000	74,854	10,000	5,899	..	..	5,899
2 தஞ்சாவூர் ..	1,50,000	1,25,608	2,75,000	2,56,776	5,000	..	..	..	..
3 திருச்சிராப்பள்ளி ..	25,000	9,360	40,000	24,712	10,000	..	2,135	..	2,135
4 மதுரை ..	.	11,563	27,000	20,368	10,000	700	..	..	700
5 ராமநாதபுரம் ..	..	..	30,000	18,728	10 000	221	..	..	221
6 திருநெல்வேலி	..	2,259	35,000	38 100	5.000	877	1,434	9	2,320
7 வடஆர்க்காடு ..	12,500	24,109	62,500	52,330	5,000	13	..	2	15
8 சேலம் ..	.	..	8,000	3,135	15 000	2,157	336	219	2,712
9 கோயமபுத்தூர்	10,000	13,752	10,000	5,489	30,000	..	..	..	..
10 செங்கற்பட்டு ..	10,000	11,031	60,000	58,429	..	..	..	..	..
11 கன்னியாகுமரி ..	7,000	4,369	7,000	6,185	..	..	..		..
12 தர்மபுரி ..	..	..	6,000	2,377	..	..	..	..	..
13 நீலகிரி ...	..	..	1,000	660	..	..	..	..	..
	2,27,000	2,14,509	6,51,500	5,62,143	1,00,000	9,867	3,905	230	14,002

17 MAR 1967
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 7th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : All the Questions relating to the Hon. the Chief Minister and the Hon. the Minister for Co-operation are postponed as they are held up elsewhere.

North-East Monsoon

* 401 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state the respective extent of benefit got and damage suffered by standing crops in the eastern coastal areas of the State due to the North-East Monsoonal downpour of rains?

THE HON. SRI V. RAMAIAH : A statement[a] is placed on the Table of the House.

Drought

* 402 *Q.*—SRI V. SANKARAN : } SRI P. MURUGAIYAN : } Will the Hon. the Minister for Food be pleased to state the taluks in the State affected seriously by drought conditions and the steps and measures the Government have proposed to take to afford redress and relief to the people affected thereby?

THE HON. SRI V. RAMAIAH : A statement[b] is placed on the Table of the House.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த மழையின்மையினால் எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்தத் தாலுகாவில் வறட்சி ஏற்பட்டது ? அவைகளை எந்த முறையில் ஆராய்ந்து சர்க்கார் நடவடிக்கை எடுத்தார்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எந்த முறையில் வறட்சி ஏற்பட்டது என்பதை ஆராய்வதற்கில்லை. எங்கெங்கே வறட்சி ஏற்பட்டதோ அங்கே நிவாரணம் அனுமதித்ததைப்பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

a Printed as Appendix I on pages 537–539.
b Printed as Appendix II on pages 539–545.

திரு. சோ. ஆறுமுகம்: வறட்சி அல்லது பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளுக்கு சர்க்காருடைய உதவி எந்த அளவிற்குச் செய்யப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: அறிக்கையைப் பார்த்தால் தெரியும். அதில் எல்லாம் இருக்கிறது.

Kist remission

*403 Q.—SRI K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether kist remission is given to farmers and land holders in 1966 in Thanjavur, Tiruchirappalli and Tirunelveli districts owing to failure of monsoon and drought; and

(b) if so, the details thereof, talukwar?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. கோ. சி. மணி: இந்த அறிக்கை வெளியிட்ட பிறகு இன்றைக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளைச் சமாளிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: அறிக்கை தயாரித்து முடிவடைந்த பிறகுதான் என்னென்ன நிவாரணம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இனி மேல் ஒன்றும் இல்லை. அடுத்த பசலியில் ஏதாவது இருக்கலாம். ஆனால், அப்படி இருக்காது என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER: The hon. Member may put a separate question.

திரு. ஆ. கு. சுப்பையா: அரசாங்கத்தினுடைய உத்தரவு வந்த பிறகும் கூட விவசாயிகளிடமிருந்து வசூலித்திருக்கிறார்கள். அப்படி வசூல் செய்த தொகையை 76-வது பசலியில் ஈடு செய் வதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அவ்வாறு என்னிடத்தில் தகவல் இல்லை. தனிப்பட்ட முறையில் எழுதி அனுப்பினால் தெரிவிக் கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கிஸ்தி வஜா செய்வதில் இரண்டு போக நிலத்தைப் பார்த்தால் குறிப்பிட்ட வசூலுக்காக உள்ள இரண்டு போகமும் விளையாமல் இருந்தால் வஜா வழங்கலாம் என்றிருக்கிறது. முந்தைய பசலியின் கடைசி போகமும் வருகிற பசலியின் முதல் போகமும் சேர்ந்து இரண்டு போகமும் விளையா மல் இருந்தாலும்கூட வரி வஜா செய்யப்படுகிறதா? அப்படிச் சேர்ந்து வந்து அத்தகைய நிலைமை ஏற்பட்டால் அதற்கும் வஜா செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

[a] Printed as Appendix III on pages 545–546.

7th November 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : 'ஏற்பட்டால்' என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். இட் ஈஸ் ஹைபாதடிகல். ஏற்பட்ட பிறகுதான் சொல்லமுடியும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அத்தகைய நிலைமை திருநெல் வேலி ஜில்லாவில் பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. அதை யோசித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கக்கூடிய உத்திரவின் அடிப்படையில்தான் நடக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டிருப்பது நடைமுறையில் உத்தரவில் கண்டபடி போடாமல் இருக்கலாம். அதைப்பற்றித் தனியாக எழுதியனுப் பினால் பரிசீலிக்கப்படும்.

திரு. சா. கணேசன் : இப்போது விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதைத் தள்ளிப்போடச் செய்யப்பட்டது என்ற செய்தி யைப் படிப்பதற்கு முன்னாலேயே வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பது நிதர்சனமாகத் தெரிகிற உண்மை. அப்படி வசூலிக்கப் பட்ட பணத்தை அடுத்த பசலிக்கு அட்ஜஸ்ட் செய்வதற்கோ அல்லது வாபஸ் செய்வதற்கோ அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது சம்பந்தமாகத் திட்டவட்ட மாக நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஞாபகத்தில் இருப்பதைக் கூறுகிறேன். உத்திரவிட்டதற்குப் பிறகு விவசாயிகளுக்குக் கூடியிருக்கும் பட்சத்தில் அடுத்த பசலிக்கு அட்ஜஸ்ட் செய்யலாம் என்று நினைக்கிறேன். இருந்தாலும் தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. கோ. சி. மணி : அப்படித் தள்ளிப்போட்ட நிலங்களில் சுத்தமாகப் பாசன வசதி இல்லாமல் தரிசு பட்ட நிலங்கள் உண்டா ? தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு நிலங்களுக்குத் தீர்வை கொடுக்கப்பட்டது ? தொகை எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : வரி வஜா செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டிலே பஞ்சமாகப் போயிருந்தால் வஜா செய்யப்படுகிறது. ஆனால் பழைய பாக்கியை வசூல் செய்வதற்காக மாடுகளையெல்லாம் கூட ஜப்தி செய்து வசூல் செய்திருக்கிறார்கள். அதை வஜா செய் வதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எனக்குத் தெரிந்தவரையில் மாடுகள் ஜப்தி செய்யப்படவில்லை. இது சம்பந்தமாக சங்கடங்கள் ஏற்பட்டால் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

[7th November 1966

* 404 Q.—Sri M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the crops in Thanjavur district, including recently transplanted paddy seedlings have withered due to drought conditions and water not reaching a number of places; and

(b) if so, whether there is any proposal under consideration to grant land revenue remission in relaxation of the existing Standing Orders on the subject?

The Hon. Sri V. RAMAIAH : (a) & (b) : A statement * is placed on the Table of the House.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, இப்போது மறுபடியும் மழை ஜாஸ்தியாக ஏற்பட்டு, அதனால் ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை கவனித்து தக்க நிவாரணம் அளிக்க வேண்டிய வழி வகைகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது புது கோரிக்கை.

Rise in prices in hotels

* 405 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn to the sudden rise in prices of edibles in hotels in Madras by about 25 per cent to 50 per cent; and

(b) if so, the action proposed by the Government to check the same?

The Hon. Sri V. RAMAIAH : (a) There has been some increase in prices of edibles in some of the city hotels.

(b) The Government are closely watching the situation and are considering what best steps could be taken to keep the prices of edibles in hotels at a reasonable level.

திரு. சா. கணேசன் : ஓட்டல்களிலே உணவுப் பண்டங்களின் விலை ஏறியிருப்பது பிரத்தியட்சமான நிலைமை. அதற்குச் சொல்லுகிற காரணம் பண்டங்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது, அதனால்தான் விலையைக் கூட்டவேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையிலே நியாயமான விலையில் தாராளமாகப் பொருள்கள் ஓட்டல்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படுகிறதா? அப்படிச் செய்யப்பட்டிருந்தால் விலையைக் கூட்டி விற்பது தவறு என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் முக்கிய கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய முறையில் சொன்னேன். எந்தெந்தப் பண்டங்களுக்குக் கன்ட்ரோல் கொண்டுவந்திருக்கிறோமோ அந்தப் பொரு

* Printed as appendix IV on pages 546–548

7th November 1966]

லைக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைக்கிறோம். ஆனால் மற்றப் பொருள்களின் விலை உயர்ந்து விடுகிறது. அந்தப் பொருள்களுக்கும் கன்ட்ரோல் கொண்டு வருகிறோம். உதாரணமாக, பருப்பு வகையை எடுத்துக்கொண்டால், அதன் விலை ஏறியதால் ராஜஸ்தான் மத்திய பிரதேசத்திலிருந்து வாங்கிக் கொடுத்தோம். அந்த நிலவரத்திலே எண்ணெய் விலை அதிகமாகப் போய்விட்டது. அப்படித் தொடர்ந்து ஒன்றுக்கொன்று பல சிக்கல்களாக இருப்பதனால் நாம் நியாயமாக எதைச் செய்யவேண்டுமோ, அதைச் செய்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உணவு அமைச்சர் அவர்கள் சமீபத்திலே சென்னையிலே எந்த ஹோட்டலிலேனும் சாப்பாடு வரவழைத்து சாப்பிட்டுப் பார்த்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வே. ராமையா : நான் சாப்பிட்டுப் பார்த்துத் தான் விஷயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. இதைப்பற்றி தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். தக்க அதிகாரிகளை வைத்துக்கொண்டு, இருக்கக்கூடிய புள்ளி விவரங்கள். கனம் அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய விவரங்கள் இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஆராய்ந்து அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கேள்வியிலே 25 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதம் வரைக்கும் விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத் தரப்பில் விலை ஏறி இருப்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே பல துறைகளில் விலை ஏறி இருந்தாலும், உணவுப் பொருட்களைப் பொறுத்த மட்டில் எத்தகைய விகிதாசாரத்திற்கு விலை ஏற்றம் அனுமதிக்கக்கூடியது, அதைவிட 'அப்நார்மலாக' எவ்வளவு ஏறி இருக்கிறது என்பது பற்றி அரசாங்கம் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : விலை ஏற்றத்தைப் பொறுத்த வரையில் அனுமதிக்கக்கூடியது, அதைவிட விலை ஏற்றம் 'அப்நார்மல்' என்பது பற்றி என்னிடம் விவரம் இல்லை. அம்மாதிரி விவரம் சொல்வதற்கும் சாத்தியமாக இருக்காது என்று நினைக்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : ஹோட்டல்களில் விலை ஏறியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏறாமல் தடுப்பதற்கு ஹோட்டல்கள் முதலாளிகளை அழைத்து அரசாங்கம் ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தியதா ? அப்படியென்றால் அப்பொழுது என்ன கருத்து தெரிவிக்கப் பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் முதல் அமைச்சர் அவர்கள் பல தடவை ஹோட்டல்கள் முதலாளிகளை அழைத்து பேசியிருக்கிறார்கள். கூடுமானவரையில் அவர்கள் ஒத்துழைப்பு கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், அவர்கள்

சொல்லக்கூடிய முக்கியமான காரணம், நான் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி, பல பொருள்களின் விலைவாசி அடிக்கடி ஏறிக் கொண்டிருப்பது தான். அவர்களுக்கு பொருள்கள் நியாயமான விலைக்கு கிடைப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அம்மாதிரி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது அரிசிக்கு கன்ட்ரோல் இருக்கிறது. மற்றபடி பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களின் விலைவாசி ஏறிக்கொண்டிருப்பதுதான் விலை ஏற்றத்திற்குக் காரணம் என்று சொன்னார்கள். அரிசிக்கு மாத்திரம் கண்ட்ரோல் வைத்துவிட்டு, மற்ற பொருள்களுக்கு கண்ட்ரோல் இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

கனம் திரு. வெ. ராமையா: அரிசிக்கு மட்டும் கண்ட்ரோல் என்பது இல்லை. அத்தியாவசியமான பண்டங்களையெல்லாம் நியாயமான விலைக்கு வாங்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்கிறது. இராஜஸ்தான் போன்ற இடங்களிலிருந்து பருப்பு வகைகள் வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திடீரென்று எண்ணெய் விலை ஏறியது. அதைச் சரிப்படுத்துவதற்கு நாம் ஏராளமாக வேர்கடலையை வாங்கி எண்ணெயாக ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கோ. சி. மணி: ஹோட்டல்களுக்கு அரசாங்கம் நிர்ணய விலையில் சில பண்டங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பண்டங்களிலிருந்து உருவாக்கப்பட்ட பொருள்களை மாத்திரமாவது நிர்ணய விலைக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. வெ. ராமையா: நாம் கொடுக்கக்கூடிய ஒன்றிரண்டு பண்டங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்துவிட முடியாது. மற்றப் பண்டங்களும் அதற்கு தேவைப் படுகிறது.

திரு. சோ. ஆறுமுகம்: ஹோட்டல்களில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். விலை ஏறிக்கொண்டிருக்கிற அதே நேரத்தில், இட்லி, வடை போன்ற பொருள்களை சிறியதாக்கிக் கொடுக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: இதுபற்றி தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எங்கெங்கே எப்பொழுது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுத்துக் கொண்டு வருகிறோம் நான் கேள்விகளுக்கு பதில் சொல்லும் பொழுது, கேள்விகளுக்கு நான் சமாதானம் சொல்வதற்கு முயற்சிப்பதாக கனம் அங்கத்தினர்கள் நினைத்துவிடக்கூடாது. அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

7th November 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் ஹோட்டல் முதலாளிகளை கூப்பிட்டுப் பேசியதாகச் சொன்னார்கள். அசெம்பிளி மெம்பர்களுக்காக நடத்தப்படுகிற காண்டீன் முதலாளியைக் கூப்பிட்டு அமைச்சர் அவர்கள் ஏதாவது விலை ஏற்றத்தைப்பற்றி கேட்டார்களா ? ரூபாய் 1.25 ஆக இருந்த சாப்பாடு ரூ. 1.75-ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஏதாவது பரிசிலனை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : எனக்கு இதைப்பற்றி ஞாபகம் இல்லை. ஹோட்டல்கள் சம்பந்தப்பட்டவர்கள், அதாவது ஹோட்டல் முதலாளிகள் அசோசியேஷன் பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசினார்கள். ஒவ்வொரு ஹோட்டல் முதலாளியையும் கூப்பிடுவது என்பது இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உணவு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பரிசிலனை செய்துகொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். விலை தொடர்ந்து ஏறிக்கொண்டிருக்கிறது, தரமும் தொடர்ந்து குறைந்து கொண்டிருக்கிறது. மற்ற இடங்களுக்கு ரகசியமாக, மாறு வேடத்தில் போய் பார்ப்பதாக மந்திரிகள் சொல்லுகிறார்கள். அப்படி மாறுவேடத்தில் போய் ஹோட்டல்களில் என்ன நடக்கிறது என்று பார்த்து, விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? ஹோட்டல்கள் முதலாளிகள் சங்கப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசியபொழுது விலையை எப்படி தந்திரமாக உயர்த்துவது என்பது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஆலோசனை கூறினார்களா ? கனம் முதல் அமைச்சர் அவர்கள் விலையைக் குறைப்பதற்கு யோசனை கூறியதாகத் தெரியவில்லை. முதலாளிகளிடமிருந்து நியாயமான விலைக்கு பொருள்கள் வழங்கப்படவேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியானால் அந்தக் கோரிக்கையின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பொதுவாக பல பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். பருப்பு, எண்ணெய் போன்ற பண்டங்கள் நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தான் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் தந்திரமாக விலை ஏற்றத்திற்கு ஆலோசனை கூறவில்லை. விலையைக் குறைப்பதற்கு வேண்டிய ஆலோசனையைத் தான் சொல்லியிருக்கிறார்கள்.

இனும் எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டம்

*** 406 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** *கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1963-ம் வருடத்து மைனர் இனும் சட்டத்தின் மூலம் தங்களுக்கு பாதகம் ஏற்பட்டிருப்பதாக தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்களின் ஊழியர்கள் முறையீடு 1964, 1965, 1966-ம் வருடங்களில் சர்க்காருக்கு வந்துள்ளதா ?

[7th November 1966

(இ) ஆமெனில், அவைகளின் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) The representations are being examined by the Government.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இனாம் சட்டத்தினால் பாதிக்கப் பட்டிருக்கக்கூடிய அர்ச்சகர்களுக்கும், மற்றவர்களுக்கும் அந்த நிலத்திற்காக கிடைக்கக்கூடிய காம்பென்சேஷன் கிடைக்காமல் இருப்பதற்கான அத்தகைய குறைபாடுகள் இருப்பதை அரசாங்கம் நடைமுறையில் ஆலோசனை செய்திருக்கிறதா ? அப்படியானால், அதை நிவர்த்தி செய்வதற்கு எந்த அளவுக்கு சலுகை முறைகளை பின்பற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நாம் ஒரு சட்டத்தை நிறை வேற்றி இருக்கிறோம். அந்தச் சட்டத்தில் பலவிதமான ஷரத்துக் கள் இருக்கின்றன. அது பற்றி அர்ச்சகர்களும், மற்றவர்களும் தங்களுக்கு பாதகம் ஏற்பட்டிருப்பதாக 'டீடைல்டு மெமாராண்டம்' கொடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து எவ்வளவு தூரம் ஒத்துக்கொள்ளமுடியும் என்பதுபற்றி கவனம் செலுத்தப் படுகிறது. அவர்கள் கேட்கக்கூடிய சில சலுகைகளைப் பார்த்த தால் சட்டத்தின் நோக்கத்திற்கே புறம்பாக இருக்கும் என்று தோன்றுகிறது. அவர்கள் கோருவதை எல்லாம் செய்துவிட முடியாது. எது எது சாத்தியமோ அதைச் செய்யலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த சட்டத்தின் காரணமாக அவர்கள் நடைமுறையில் செய்யும் பூஜைகள், ஒழுங்கு முறைகள் இவைகளுக்கு சிரமம் ஏற்படுவதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அம்மாதிரி தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

* 407 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் இனாம் நிலங்களில் பட்டா கோருவோர் மனுக்கொடுப்பதற்கு கடைசி தேதி நிர்ணயிக்கப் பட்டதா ?

(இ) அக்காலக் கெடுவை நீடிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்ததா ?

(உ) ஆமெனில், அதனை நீடித்துக் கொடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (c) : Yes. A time limit has been prescribed for presentation of applications for grant of ryotwari patta. In inam estates the time limit is six months from the date on which the estates were notified. It is proposed to

amend the rule providing for additional time for the submission of applications. In the case of minor inams, the time limit is six months from the appointed day, viz., 15th February 1965. Orders have since been issued to the effect that applications can be presented upto six months from the date of publication of the notification in the village by the Assistant Settlement Officer.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நோடிஃபிகேஷன் பிறப்பிக்கப் பட்டு வெகு காலத்திற்குப் பிறகு தான் விதிகள் வெளியிடப் பட்டன. அதனால் பலர் பட்டாக்களுக்கு மனுக்கள் போடுவதற்கு உரிய சந்தர்ப்பம் இல்லாமல் இருந்திருக்கிறது. ஆகவே, அந்தக் காலத்தை 6 மாதங்களுக்கு மேலாக நீடிப்பதற்கு, அல்லது விதிகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு ஒரு வருஷம் வரைக்கும் அதற்கு அனுமதி கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ? அந்த அடிப்படை யில் விதிகள் திருத்தப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த அடிப்படையில் மைனர் இனாம் வில்லேஜ் நோடிஃபிகேஷனுக்குப் பிறகு 6 மாதங்களுக்கு டைம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல இனாம் எஸ்டேட்ஸ் பொறுத்தவரைக்கும் அதையும் திருத்துவதற்கு இப்பொழுது பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம்.

* 408 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் இனாம் நிலத்திற்கு பட்டாக் கோரி வந்துள்ள மனுக்கள் கிராமவாரியாக எண்ணிக்கை என்ன ?

(இ) பட்டா வழங்குவதற்கு ஓர் காலக்கெடு நிர்ணயிக்க உத்தேசமுண்டா ?

THE HON SRI V. RAMAIAH : (a) A statement [a] is placed on the Table of the House.

(b) No time limit has been fixed for the grant of ryotwari patta, but an advance programme has been drawn up for the conduct of enquiries and grant of patta after the completion of survey operations.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்தப் பட்டாக்கள் வழங்கு வதற்கு ஒரு கால நிர்ணயத்தை ஏற்படுத்தி, அந்தக் காலத்திற் குள்ளாக இந்த மனுக்களை பைசல் செய்துவிடவேண்டும் என்று நிர்ணயம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : பட்டாக்கள் வழங்குவதற்கு ஒரு கால நிர்ணயம் செய்வது கஷ்டம். ஏனென்றால், இது சம்பந்த மாக செடில்மெண்டு வேலைகளெல்லாம் முடியவேண்டும். செட்டில் மென்டு ஆவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். 'என்குயரீஸ்' போன்றவைகளையெல்லாம்

[a] Printed as Appendix V on pages 548-567.

சட்ட அடிப்படையில் செய்யவேண்டும். ஆகவே, பட்டா வழங்குவது என்பதை ஒரு கால வரையில் செய்ய முடியும் என்று நான் கருதவில்லை.

*409 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have received any representation from certain members of the Legislative Assembly on 1st February 1966 to extend the time limit for filing applications for Ryotwari Patta under Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes, Sir.

(b) It has been decided to amend the rules suitably.

திரு. செ. மாதவன்: ஆக்ட் 26 ஆஃப் 1943-ன் கீழ் பிறப்பிக்கப் பட்ட விதிகளுக்கும், இந்த விதிகளுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. மனு கொடுக்காவிட்டாலும் 'ஸுவோ மோட்டு' ஆக அதிகாரிகள் பரிசீலித்து பட்டா வழங்கலாம் என்று பொது விதிகள் இருக்கின்றன. அப்படியிருக்கும்பொழுது 6 மாத காலத்திற்குள் பட்டாவுக்கு மனுப் போடவேண்டும் என்று இருப்பதுபற்றி பரிசீலனை செய்யப்படுகிறதா? 'ஸுவோ மோட்டு' ஆக என்குயரி நடக்கும்பொழுது அந்தக் காலம் வரைக்கும் பட்டாவுக்கு மனு கொடுக்கலாம் என்று உத்தரவு பிறப்பிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: பரிசீலனையில் இருக்கிறது என்று நான் சொன்னேன்.

திரு. செ. மாதவன்: ஆறு மாதம் உத்தரவிட்ட தேதியிலிருந்து தான் என்பதற்கு உத்தரவிடப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். சர்க்காருடைய தகவல்களிலிருந்து 26 ஆஃப் 63 ஆக்ட்டுப்படி புதிய உத்திரவுகள் போடப்பட்டிருக்கின்றன. இப்பொழுதிருக் கின்ற விதிப் பிரகாரம் நோட்டிஃபிகேஷன் டேட்டிலிருந்துதான் 6 மாதம் என்று இருக்கிறது. இதைப்பற்றி சட்ட அமைச்சர் அவர்களைக் கூட கலந்து பேசினோம், அவர்களிடம் விளக்கம் சொன்னோம். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். உத்திரவிட்ட தற்குப் பின்னாலேதான் அதாவது செட்டில்மெண்ட் தாசில்தார் அந்த இடத்திற்குச் சென்று 'ஸுவோ மோட்டு' என்குயரி நடத்துகின்றபொழுதுதான் அங்கேயுள்ள மக்களுக்கு இது சம்பந்தமாக மனுப் போடவேண்டும் என்ற விஷயம் தெரிகிறது. ஆகவே 'ஸுவோ மோட்டு' என்குயரிக்கு அந்த இடத்திற்குச் செல்லுகின்ற தேதியிலிருந்து ஆறு மாத காலம் கொடுக்கலாம் என்று உத்தரவை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது நாம் யோசித்துக் கொண்டிருப்பது அந்தந்தக் கிராமங்களிலே நோட்டிஃபிகேஷன் செய்து ஆறு மாதங்கள் வரையிலும் புதிதாக

7th November 1966]

பட்டாக்களுக்கு மனுப் போடலாம் என்பதைத்தான். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது ஸுவோ மோட்டுவாக சர்க்காரிலே பட்டாக்கள் வழங்கலாம் என்ற காரணத்தினாலே அது வரையில் ஒத்திப்போட்டால் என்ன என்று கேட்கிறார்கள். அதில் நடைமுறையில் பல கஷ்டங்கள் வரும். யார் யாருக்கு குடிவாரம் இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்களோ அந்த அடிப்படையில்தான் பட்டா கொடுக்கவேண்டும். அதற்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் மனுப் போடவேண்டும். அப்படி அவர்கள் போட்டாலும் போடாமல் இருந்தாலும், சர்க்காருக்கு உண்மையாகக் கொடுக்கலாம் என்ற நிலைமை இருந்தால் அவர்கள் பர்மிசபிள் அயிட்டமாகப் போடலாம் என்று இருக்கிறது. ஆகவே, அவர்கள் என்குயரிக்குப் போன தேதியிலிருந்து காலம் கொடுத்தால் அதற்குப் பிறகு பரிசீலனை செய்வதற்குக் கால தாமதம் ஏற்படும். அந்தச் சட்டத்தை விரைவாக நடைமுறைக்குக் கொண்டு வருவது கஷ்டமாக இருக்கும். காலத்தை ஒத்திப் போடுவதற்கு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

*410 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state the details of steps taken so far for the enforcement of Inam Estates Abolition Act and the Minor Inams Abolition Act?

THE HON. SRI V. RAMAIAH : A statement [a] is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மூன்று வருட காலம் ஆகியிருக்கிறது. எத்தனை இனம்கள் சம்மந்தமாக செட்டில்மெண்ட் முடிந்து பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் சொல்லமுடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். செட்டில்மெண்ட் ஆவதற்கு நிறையக் கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன

திரு. மீ. கலியாணசுந்தரம் : அப்படியானால் இன்னும் ஒரு கிராமத்தில் கூட ஆகவில்லையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை. நான் குறிப்பிட்டேன். செட்டில்மெண்ட் ஆவதற்கு காலதாமதம் ஆகின்றது என்று.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மூன்று வருஷங்கள் ஆகியும் ஒரு கிராமத்தில் கூட பட்டாக் கொடுக்காமல் இருக்கிறது என்றால் இது சட்டத்திலே இருக்கின்ற கோளாறு அல்லது நிர்வாகத் திறமையிலே உள்ள குறைபாடா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : சட்டத்திலே கோளாறு இல்லை, நிர்வாகத் திறமைக் குறைபாடும் இல்லை. இதிலே எத்தனையோ நிலைமைகள் ஏற்படுகின்றன. ஹைக்கோர்ட்டுக்குப் போகவேண்டிய

a Printed as Appendix VI on pages 567-570.

[7th November 1966

நிலைமை ஏற்பட்டது. செட்டில்மெண்ட் செய்வதற்கு இப்பொழுது இருக்கக்கூடிய விதிமுறைகளுக்குத் தகுந்த முறையில் கால தாமதம் ஆகத்தான் செய்யும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதற்கிடையில் இனாம்தார்கள் விவசாயிகளை வெளியேற்றுவதையும், மரம் போன்றவற்றை வெட்டு வதையும் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது.

கனம் திரு. வெ. ராமைய்யா: எந்த எந்த இடங்களிலே அம்மாதிரி கஷ்டங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறதோ அங்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

* 411 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வாலூர் தொகுதியில் பொம்மையார் பாளையம், குயிலா பாளையம், பிள்ளைச்சாவடி முதலான கிராமங்களில் உள்ள நிலங்கள் அனாதீன (சர்க்கார் புறம் போக்காக) புறம்போக்காக மாற்றப்பட்டது உண்மையா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த குயிலா பாளையம், பொம்மைய பாளையம் கிராமங்களிலே உள்ள மயிலம் சிவசுப்பிரமணியர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை அனாதீனப் புறம்போக்காக சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள். அங்கே முன்னால் பயிர் செய்து கொண்டிருந்தவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டார்கள். சர்க்கார் புறம்போக்காக வந்து விட்டன என்ற காரணத்தினால்தான் எத்தனை பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களுடைய விஸ்தீரணம் எவ்வளவு? இனிமேலாவது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அப்படி நடவடிக்கைகள் எடுப் பதற்கு முன்னால் செட்டில்மெண்ட் என்குயரி நடக்க வேண்டியிருக் கிறது. என்குயரி நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது என்குயரிக்குப் பாதகமான எதையும் நான் சொல்வது சரியல்ல.

Devasthanam lands

* 412 Q.—Sri K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any representation, dated 14th August 1964, has been made by the Mayuram tenants who have raised their houses in the Devasthanam lands in Municipal limits to repeal the City Tenants' Protection Act; and

7th November 1966]

(b) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Government consider that there is no need to repeal the Act in so far as it applies to the residential buildings in Mayuram Municipal town.

திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, இந்த மாயவரம் நகராட்சிக்குள்ளே எல்லையிலே குடியிருக்கின்றவர்கள் பக்கத்திலே நிலங்களில் விவசாயம் செய்துவரும் விவசாயிகள்தான். விவசாயிகள் மனைகள் பாதுகாப்புக்கு விதியிருக்கிறது. அப்படியிருந்தும் அங்கே விவசாயிகளைப் பாதுகாக்க அரசாங்கம் தயங்குவானேன் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பாதுகாப்புக் கொடுக்கும் சட்டத்தை ரிப்பீல் பண்ணவேண்டுமென்று சொல்கிறார்கள். பாதுகாப்பு கொடுத்து இருக்கிறோம், இதில் தயக்கமொன்றுமில்லை. சிடி டெனன்ட்ஸ் பாதுகாப்புச் சட்டத்தை அனுசரித்துத்தான் செய்யபடுகிறது. அதை ரிப்பீல் பண்ண வேண்டுமென்று சொல்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : யார் சொல்கிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கிராமப் புறத்தில் குடியிருப்பு மனைப் பாதுகாப்பு இருக்கிறது. மாயவரத்திலே முனிசிபல் எல்லையிலே இருக்கக்கூடியவர்கள் கிராமத்திலே இருக்கக்கூடியவர்கள். ஆகவே யார் எந்தமாதிரி செய்யவேண்டுமென்று கேட்டாலும் சட்டம் அமல் நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் முதல் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுதே சொல்லிவிட்டேன்.

திரு. கோ. சி. மணி : அவர்கள் வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று உறுதிமொழி கொடுப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சிடி டெனன்ட்ஸ் ஆக்ட் ரிப்பீல் ஆக வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அது முடியாது என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கோரிக்கை குடியிருப்பு மனையில் குடியிருப்பவர்களிடமிருந்து வந்ததா அல்லது தேவஸ்தான மடாதிபதிகளிடமிருந்து வந்ததா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதிலே ‘ சிடிசன்ஸ் ’ என்றுதான் எழுதி இருக்கிறது.

[7th November 1966

திரு. பீ. கலியாணசுந்தரம்: கேள்வியிலிருந்து அப்படித்தான் தெரிகிறது. ஆனால் அந்தக் கோரிக்கை யாரிடமிருந்து வந்திருக்கிறது என்று ஃபைலைப் பார்த்துப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: கொஞ்சம் நேரமானாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். இதிலே வந்திருக்கக் கூடியதையெல்லாம் பார்க்கின்றபொழுது, ஏதோ ஒரு கிராமத்திலிருந்து வந்திருக்கிறது, தனிப்பட்டவர்கள்தான் நிறையக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களா என்ன என்பது எனக்குத் தெரியவில்லை.

பர்மா அகதிகள்

* 413 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மாத்தூரில் பர்மா அகதிகளுக்காகக் காலனி கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவு ?

(உ) அந்தக் காலனிக்கு என்ன பெயர் வைக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (c) It was originally proposed to establish a township for Burma repatriates in Mathur area in Tiruchirappalli district with pucca buildings. This proposal was subsequently modified in the wake of the emergency and it was proposed to establish a colony in the area on a smaller scale with 750 families engaged on vegetable gardening and 100 families on dairy farming to begin with. The draft scheme in this regard worked out by the Collector of Tiruchirappalli has been forwarded to the Government of India for their approval. Their final reply is awaited. A proposal is also under consideration for allotment of housing plots to about 500 non-agriculturist families to be settled by securing employment in the various industries in this area.

In Mathur village, a scheme for settling 20 repatriate families on agriculture by allotting them 50 acres has already been implemented. The colonists have built houses themselves in the Government land.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது நிர்வாகம் சம்பந்தமான விஷயம். சர்க்கார் அதிகாரிகளை உடனடியாக அனுப்பி, செக்ரட்டரி, முனிசிபல் ஸ்பெஷல் ஆஃபீஸர்களை (Revenue) அனுப்பி நிலைமையைச் சீர்படுத்துவதில் வெற்றி அடைந்து, 31-3-1966-ல் 40 லட்சம் ரூபாய் இருக்கும் நிலையில் நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. மேலும் சர்க்கார் ஆலோசனை கூறியதன் பேரில் கவுன்சிலும் 'ஷோ' டாக்ஸ், தமாஷா வரி போன்றவைகளுக்கு "சர்சார்ஜ்" விதிக்க தீர்மானம் செய்து அவர்களே 10 லட்சம் ரூபாய் வரும் அளவில் செய்தார்கள். அவர்களை துரிதப்படுத்தி அதிகமாக வருவாய்த் துறையைப் பெருக்குவதற்கு வேண்டிய ஆலோசனைகள் சொன்னதன் பேரிலும் வருவாய் அதிகரித்து நல்ல நிதி நிலைமை இன்று இருக்கிறது.

* 500 Q.—Sri V. STNKARAN. Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to extend the terms of office of Chairmen and members of Municipal Councils in the State from 3 years to 5 years?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த விஷயம் இன்னும் பரிசீலனையில் உள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், பரிசீலனையில் உள்ளது என்று சொன்னால் ஏதாவது விஷயம் நடக்குமா? அல்லது மூன்று வருஷங்கள், மூன்று வருஷங்கள் தானா ?

கனம் சபாநாயகர்: இதற்குப் பதில் கொடுக்க முடியும் என்றால் பரிசீலனையில் இருக்கிறது என்று ஏன் சொல்லப் போகிறார்கள் ?

திரு. கரு. சீமைச்சாமி: பரிசீலனை என்பது சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. ஆகையால்தான்

கனம் சபாநாயகர்: எப்போது முடிவு தெரியும் என்று கேளுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: எப்போது நடக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: எப்போது நடக்கும் என்றால் என்ன அர்த்தம்? எப்போது முடிவு தெரியும் என்று கேளுங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் கேட்டால் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நகர மன்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் அவைகளுக்கும் இணைப்பு இல்லை. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவைகளுக்கு இணைப்பு இல்லை. மத்திய சர்க்காரி

லிருந்து வரக்கூடியதை மாநில சர்க்கார் தங்கள் நிதியுடன் பட்டு வாடா செய்யப்படுகிறது ; பழக்கப்படி நகர மன்றங்களும் அதே கால அளவை அனுசரிப்பார்கள். மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—REQUEST FOR HALF-HOUR DEBATE.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, நெய்வேலியிலே . . .

கனம் சபாநாயகர் : இப்போது எதைப் பற்றிப் பேசுகிறீர்கள் ? ஏதாவது பாயின்ட் ஆஃப் ஆர்டரா அல்லது பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷனா . . .

திரு. ப. உ. சண்முகம் : அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கேட்பதற்காகப் பேசுகிறார்.

கனம் சபாநாயகர் : நான் தான் கன்ஸிடர் பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறேனே.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. கனம் சபாநாயகர் அவர்கள் இதைப்பற்றி மறந்து விடாமல் இருப்பதற்காக, ஞாபகப்படுத்தத் தான் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : I said I would consider his request. We should not violate the rules.

Now, I hold that there is no necessity for a half-hour discussion.

III.—ADJOURNMENT MOTIONS.

(1) BONUS DISPUTE IN TEXTILE MILLS IN COIMBATORE.

MR. SPEAKER : Sri K. A. Mathialagan has given notice of an adjournment motion.

SRI K. A. MATHIALAGAN : Sir, I have given notice of the following adjournment motion—

" This House do stand adjourned to discuss the following matter of urgent pubic importance, viz.,

The situation arising out of the non-settlement of bonus issue in Kaleswara, Kadiri, Kasturi, Somasundara, Pankaja, Radiga, Janardana and Cambodia Textile Mills and the Textool and Viscose Factories and the consequent industrial unrest in the Coimbatore Region owing to the failure of the Government to take steps for an amicable settlement of bonus issue between capital and labour."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவரவேண்டும் என்பதற்கான முக்கியமான காரணம், இந்த போனஸ் பிரச்னையிலே கோயம்புத்தூரில்

இருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், பல மில்களிலே இருந்தாலும், குறிப்பிட்ட ஏழு மில்களில் சட்டப்படி கொடுக்க வேண்டிய 4 சதவீதம் போனஸ் கூட கொடுப்பதில் முதலாளிகள் உடன்பாட்டுக்கு வராமல் தொழிலாளிகள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள், கதவடைப்பு முதலியன அங்கு ஏற்பட்டிருக்கின்றன. சர்க்காருக்கு நிச்சயமாக இதிலே பொறுப்பு உண்டு. முதலாளிகளுடைய பிடிவாதத்தைத் தளர்த்தி சுமுகமான நிலைமையை ஏற்படுத்த சர்க்கார் தவறி இருக்கிறது என்ற காரணத்தினால், இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் இந்தத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு அமைதிக் குறைவு ஏற்பட்டு, அது தொழில் உற்பத்தியை பாதிக்கும் என்பதோடு இப்போது இருக்கும் சூழ்நிலையில் பேரபாயமான நிலைமை இருக்கிறது என்று முதலாளிகளுக்கு வற்புறுத்தவும் அவர்களும் இந்த காரணங்களுக்காக இணங்கி ஒத்துழைப்புக் கொடுக்கவும், இந்தத் தீர்மானத்தை ஏற்று, இந்த மிக முக்கியமான பிரச்னைமீது விவாதிப்பதற்கு சபை நேரத்தை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: Sri M. Karunanithi has given notice of an adjournment motion on the same subject.

திரு. மு. கருணாநிதி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்னை குறித்து நானும் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைத் தங்கள் மூலமாக அளித்திருக்கிறேன். ஏறத்தாழ 10,000 தொழிலாளர்கள், கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய சோமசுந்தரா, காளீஸ்வரா போன்ற ஒன்பது பஞ்சாலைகளில் போனஸ் பிரச்னையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அன்னியில், டெக்ஸ்டூல் கம்பெனியில் 6,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்குள்ள முதலாளிகளும் தொழிலாளர்கள் சங்கங்களும் கூடிப் பேசி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் கடந்த மாதம் 31-ம் தேதிக்குள் போனஸைத் தந்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தார்கள். அதன்படி அவர்கள் கொடுக்கவில்லை என்று பொறுப்பானவர்களுக்கு, அமைச்சர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மாத்திரமல்லாமல், கணக்கு முடிந்து எட்டு மாத காலத்திற்குள்ளாக போனஸ் கொடுக்கப்படவேண்டும் என்ற நியதி இருந்தும் அதுவும் இந்த விவகாரத்தில் மீறப்பட்டிருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, தீபாவளி போனஸைப் பெற முடியாத நிலையில் 16,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வேலை நிறுத்தம் போன்ற முடிவுகளுக்குத் தள்ளா வண்ணம் அரசாங்கம் தலையிட்டு வேண்டியதைச் செய்யத் தவறி இருக்கிறது என்று சுட்டிக்காட்ட இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும் என்ற என்னுடைய பிரேரணையை வலியுறுத்துகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போனஸ் பிரச்னையானது is a matter relating to routine administration. சாதாரணமாக, தொழிலாளர்கள்,

முதலாளிகள் அளவிலே ஆண்டு தோறும் பல இடங்களில் ஏற்படுகிற ஒரு விஷயம். அதற்கென சர்க்காரிலே வழிகள், விதிகள், அதற்கு வேண்டிய நிர்வாக அதிகாரிகள், இயந்திரங்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, எந்தவிதமான தொழில் தகராறு ஏற்பட்டாலும், தொழில் தகராறுச் சட்டத்தின் கீழ் அவர்கள் சென்று, கமிஷனர் மூலமாகவும், கன்ஸிலியேஷன் ஆஃபீஸர் மூலமாகவும் பரிகாரம் தேடிக்கொள்ள முடியும். அவ்வாறு இருக்கிற சட்டப்படி நடக்கவேண்டிய விஷயங்கள் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தாங்களே தீர்ப்பு வழங்கி இருக்கிறீர்கள். ஆகவே, இது ஒத்திவைப்பு பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: உடனடியாக சர்க்கார் அதில் தலையிட்டு ஆவன செய்யும் நிலையில் இருக்கிறதா? அதற்கான யோசனை ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-00 a.m. கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எனக்குத் தெரிந்தவரையில் கமிஷனர் ஆப் லேபர் தலையிட்டு அதைப்பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதம் நடந்துகொண்டிருக்கிறது, நேரடியாகவோ அல்லது அதிகாரிகள் மூலமாகவோ நடந்து கொண்டிருக்கிறது.

MR. SPEAKER: I do not think this is a matter for an adjournment motion. Hence, consent is withheld.

(2) HAVOC CAUSED BY CYCLONE IN TINDIVANAM.

MR. SPEAKER: The hon. Member, Sri Thangavelu, has also given notice of another adjournment motion.

திரு. ஆ. தங்கவேலு: வீடூர் டாம் உடைப்பு பற்றி அப்பொழுது கொடுத்தேன். இப்பொழுது திண்டிவனம் தாலுகா நகரம், பல கிராமங்கள் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகத் தான் நான் இந்த ஒத்திவைப்பு மோஷனைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைக் குறித்து நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நாளைக்கு ஒரு விரிவான அறிக்கையை சபை முன்பு வைப்பதாக இருக்கிறார்கள். எல்லா விவரங்களும் சேகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER: The hon. Member can speak tomorrow on the subject. Now, consent is withheld.

IV.—ANNOUNCEMENTS.

(1) ADJOURNMENT MOTION.

MR. SPEAKER: I have to inform the hon. Member, Sri S. Madhavan, that I am not taking up his adjournment motion here, as I have already disallowed it in my chamber itself.

V.—PRESENTATION OF REPORT.

REPORT OF THE COMMITTEE ON ESTIMATES ON INFORMATION AND PUBLICITY DEPARTMENT.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the report of the Committee on Estimates (1966–67) on the Information and Publicity Department.

VI.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1966-67—GENERAL DISCUSSION.

MR. SPEAKER : Now, we will take up the Second Supplementary Statement of Expenditure for general discussion.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு போய்விட்டு, சபையின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு ரயில் மூலம் திரும்பி வருவதற்கு முடியாமல் தடை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எந்த இடத்தில் எப்படி தடை ஏற்பட்டிருக்கிறது, புயலினால் ஏதாவது பாதிக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் சபாநாயகர் : புயல் ஒன்றுமில்லை. ரயில் காலதாமதமாகி வருகிறது. By now, he would have come.

திரு. கே. ஏ. மதியழகன் : 'சப்ளிமெண்டரி ஸ்டேட்மெண்டு ஆப் எக்ஸ்பெண்டிசர்' விவாதத்தில் கலந்து கொள்வதற்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வந்துவிடுவார்களா ? ரயில் எப்பொழுது வந்து சேரும் என்று ஏதாவது தொலைபேசியிலோ அல்லது வைர்லஸிலோ தகவல் கேட்கப்பட்டதா ? அதைப்பற்றி அரசாங்கத் தரப்பில் ஏதாவது விவரம் சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : Is it the anxiety of the hon. Member, about the Hon. Chief Minister or about the Supplementary Statement of Expenditure ?

திரு. சா. கணேசன் : இந்தச் சபையினுடைய முதல்வர், இப்போது எங்கே இருக்கிறார்கள், எவ்வளவு நேரத்தில் வருவார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புவது நியாயமாகும்.

கனம் சபாநாயகர் : நியாயம்தான். அப்படியானால் முதலிலேயே இதைப்பற்றிக் கேட்டிருக்கலாமே? முதல் அமைச்சர் அவர்களுடைய கேள்விகளைக் கூட 'அட்ஜர்ன்' பண்ணுகிறேன் என்று முதலிலேயே சொன்னேன்.

How long does the House want to discuss this matter?

THE HON. SRI R. VENKATARAMAN : We will fix the time for discussion as two hours.

MR. SPEAKER : Can we finish it within two hours?

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, மற்றைய பல மசோதாக்கள் இருக்கின்றன. அவைகளை முதலில் எடுத்துக்கொண்டு முடித்துவிட்டால், அதற்குப் பிறகு துணை

மான்யக் கோரிக்கையின் மீது விவாதத்தை நடத்தலாம். 1½ மணி வரைக்கும் விவாதத்தை நடத்திக்கொண்டு செல்லலாம். மேற்கொண்டு அரை மணி நேரம் வேண்டுமானாலும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கலாம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் அதற்கு ஒரு மோஷன் மூவ் செய்யவேண்டும்.

(At this stage the Hon. Chief Minister entered the House.)

SRI K. A. MATHIALAGAN : I am very happy now.

MR. SPEAKER : At one of the Clock, I have to put the Supplementary Demands for voting. If we postpone it now, we cannot extend the time beyond 1 p.m. So, we shall stick to the Agenda.

Now, the hon. Member, Sri Govindan, will speak.

* **புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கை, கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை அளிக்க விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு கேள்வி நேரத்தில் நெல் கொள்முதல் நிலையில் நெல் இல்லாத இடத்தில் அதிகாரிகள் ஒரு இலக்கை வைத்து, இவ்வளவு நெல் பிடித்தாக வேண்டும் என்ற ஒரு நிலையை வற்புறுத்துவதன் காரணமாக அதிகாரிகள் கிராமங்களில் சென்று விவசாயிகளை வற்புறுத்தி நெல்லைக் கொள்முதல் செய்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று கூறினேன்.

* * * * *

இந்த மன்றத்திலே பேசுகிற நேரத்தில் எல்லாம் அதிகாரிகள் ஆளும் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்களை மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள். நாங்கள் எப்பொழுதும் அந்தவிதமான குற்றச்சாட்டைக் கூறியதில்லை.

நான் இங்கே ஒரு செய்தியைப் பற்றி கூற விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். மதிப்பிற்குரிய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் எனது தொகுதிக்கு சுற்றுப் பிரயாணம் வந்தார்கள். சென்ற மாதம் 11-ம் தேதி. அவர்கள் மாலை 5½ மணிக்கு வருவதாக அறிவிப்பு அறிவித்து விட்டார்கள். எந்தக் காரணத்திற்காகவோ அதை திடீரென்று 10 மணிக்கு மாற்றி விட்டார்கள். இந்தச் செய்தி அதிகாரிகளுக்குத் தெரியாத ஒரு நிலை உண்டானதின் காரணமாக அவர்கள்வந்த நேரத்தில் அந்த இடத்தில் மின்சாரம் இல்லை. இது ஒரு குற்றம். இரண்டாவதாக, அவர்கள் இந்த ஊருக்கு வருகிற நேரத்தில் இடையில் மூன்று செக்-போஸ்டுகள் இருக்கின்றன. இந்த செக்-போஸ்டுகளில் நடக்கும் கொடுமையைப்பற்றி இந்த மன்றத்தில் நாங்கள் பல முறை

* Expunged as ordered by the Chair.

எடுத்துக் கூறியிருக்கிறோம். இந்த செக்-போஸ்டுகளை வைத்து விவசாயிகளை துன்புறுத்துவதைக் காட்டிலும், மந்திரிகள் ராஜி நாமா செய்துவிட்டுப் போகலாம் என்ற அளவுக்கு கடுமையான குறறச்சாட்டுகளைக் கூறியிருக்கிறோம். அப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளைக் கூறிய நேரத்தில், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் செக்-போஸ்டுகளை அமைப்பதற்கான காரணகாரியங்களை பல முறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நேரம் இருக்காது என்ற காரணத்தினால், அந்த வாக்கியங்களைப் படிக்காமல், 8-3-1965, 29-3-1965 ஆகிய தேதிகளில் நாங்கள் இரண்டு முறை பேசியதற்கு மறுத்து, செக்-போஸ்டுகள் இருப்பதற்கான காரண காரியங்களை முதலமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். நாங்கள் கூறின காரணங்களுக்காக செக்-போஸ்டுகளை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவில்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், முக்கியஸ்தவர்கள் இந்தச் செக்-போஸ்டுகளில் நிறுத்தப்பட்டுவிட்டார்கள் என்ற காரணத்துக்காக அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அது ஒன்று, ஆக, இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் வைத்துக்கொண்டு, அங்கே அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை எந்த அளவிற்குப் பழி சுமத்த முடியுமோ, எந்த அளவிற்குக் குற்றஞ்சாட்ட முடியுமோ, எந்த அளவிற்குத் தாக்கிப் பேச முடியுமோ அந்த அளவிற்குத் தாக்கிப் பேசியிருக்கிறார்கள். அதிகாரிகள் குற்றமே செய்யாத வர்கள் என்று நான் கூற வரவில்லை. அதிகாரிகள் குற்றம் செய்யக் கூடும். ஆனால், அதிகாரிகள் குற்றம் செய்தால், குற்றம் செய்த அதிகாரிகளை எங்கே வைத்துக் கண்டிப்பது என்பதற்கு ஒரு முறை இருக்க வேண்டும். அதிகாரிகளும் ஆட்சி பீடத்தில் இருக்கிற வர்களும் கணவனும் மனைவியும் போன்றுப் பழக வேண்டியவர்கள். கணவன் தவறு செய்தால் மனைவி கண்டிக்கலாம்; மனைவி தவறு செய்தால் கணவன் கண்டிக்கலாம். அதிகாரிகள் தவறு செய் தார்கள் என்றால், அவர்களை பலர் கூடியிருக்கிற, நேரத்தில், பொது மக்கள் கூடியிருக்கிற நேரத்தில், அவர்களைக் குற்றஞ் சாட்டுவது தானா முறை? அதிகாரிகள் எந்த அளவிற்குத் தவறு செய்திருக் கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூறியிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் யாரோ ஒரு பெரிய மிராசுதார்—பெரிய பணக் காரர். அவருடைய வீட்டிலே பூணூல் கல்யாணம். பூணூல் கல்யா ணத்திற்கு விருந்தினர்கள் வரவேண்டியிருக்கிறது. அந்த விருந் தினர்களுக்குக் குளிப்பதற்குத் தண்ணீர் இல்லை. அதற்காகக் காவிரியிலே தண்ணீர் விடவேண்டும் என்று பொறியாளரைக் கேட்டாராம். அதற்கு மாநிலத்திலே இருக்கும் தலைமைப் பொறியாளர் அனுமதி அளித்து விட்டார் என்ற அளவிற்கு அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று பொது மக்கள் கூடியிருக்கும் பொது நிகழ்ச்சியிலே மந்திரியவர்கள் கூறினார்கள். செக்-போஸ்டைப்பற்றிப் பேசும்போது, ஊரையே ஜெயிலில் போட்டு அடைத்து வைத்திருக்கிறீர்களே என்று சொன்னார்கள். முன்பு நாங்கள் கூறினோம், செக்-போஸ்ட் கூடாது என்று. ஆனால், அமைச்சர் அவர்களே சென்ற மாதம் 11-ம் தேதி அவ்வாறு கூறினார்கள். இன்று தேதி என்ன? தவறு என்று அறிந்த உடனே, 'அமைச்சர் வந்தவுடனே முதல் வேலையாகச் செய்திருக்க

வேண்டியது அந்த செக்-போஸ்டுகளை எடுத்துவிட உத்தரவு போட வேண்டியது தானே? இன்று வரை செக்-போஸ்ட் இருந்து வருகிறது. தேர்தலுக்காகப் பொதுமக்கள் முன்னிலையிலே அதிகாரிகளைத் தாறுமாருகப் பேசிவிட்டால் நல்லதா? என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளித்தார்கள். புத்தகங்களை அடித்து அளிக்கும் நிலையில் நான் ஒரு கேள்வி கேட்டேன் "நம்முடைய பள்ளிகளில் இலவசமாகப் புத்தகங்கள் கொடுக்கவேண்டும் என்பதற்காக ஆஸ்திரேலியா, ஸ்விடன் முதலிய நாடுகள் 86,000 ரீம் பேப்பர் கொடுத்திருந்தும், நம்முடைய சர்க்கார் 36,000 ரீம் பேப்பரை மட்டும் எடுத்துக்கொண்டு, பாக்கியைக் கொடுத்துவிட்டது, அச்சடித்த புத்தகங்களைக் கூட விலைக்கு விற்றிருக்கிறார்கள் என்று பொதுக் கணக்குக் குழு அறிக்கையிலே வந்திருக்கிறது. அதன் பேரில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?" என்பது என்னுடைய கேள்வியாகும். அதற்கு, "கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் சரியல்ல, தனிக் கேள்வி கேட்க வேண்டும்" என்று பதில் சொன்னார்கள். "முற்றிலும் சரியல்ல" என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்கும் சர்க்கார் 1966-ம் ஆண்டு வெளியிட்ட ஆடிட் ரிபோர்ட்டில் 24-ம் பக்கத்தில்—

"*Scheme for free distribution of books to poor and needy children.*—The Government of India have been receiving since 1962–63 from the Governments of Australia and Sweden printing and cover paper as gift. The paper is distributed to the State Governments for printing text-books for use in the primary schools; the text books should be distributed free of charge to the poor and needy children to the extent of at least the value of the paper received as gift.

During the period from 1962–63 to 1964–65, the Government of Madras received 84,218 reams of paper valued at Rs. 54.85 lakhs (exclusive of carriage and incidental charges borne by the State Government). Forty-seven thousand four hundred and ninety-eight reams of paper valued at Rs. 31.51 lakhs have not been utilised so far (October 1965), the balance quantity of 36,720 reams (valued at Rs. 23.34 lakhs was utilised (up to March 1965) in printing text-books, but the books were not distributed free and are sold as priced publications.

In November 1963, the State Government was required by the Government of India to take steps for free distribution of books at least during the school year 1964-65; this has not, however, been done (January 1966)."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சர்களிடம் ஏதாவது சொன்னால், "எங்களுக்கு மூடி மறைக்கும் வழக்கம் இல்லை" என்று சொல்லுவார்கள். இது என்ன வழக்கம் என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

7th November 1966] [புலவர் கா. கோவிந்தன்]

மாவட்டத்திற்கு மாவட்டம் எவ்வளவு கொள்முதல் செய்யப் பட்டது என்ற கேள்வி வந்தது. அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் நேரத்தில், ஓர் அறிக்கையை நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். அதில் வடாற்காடு மாவட்டத்தில் இலக்கு 12,500 டன், கொள்முதல் செய்யப்பட்டது 24,109 டன் என்று இருக்கிறதே; இலக்குக்கு மேல் கொள்முதல் செய்யப் பட்டது ஏன்? என்று கனம் உறுப்பினர் திரு. முருகையன் அவர்கள் கேள்வி கேட்டார்கள். அப்பொழுது அமைச்சர் அவர்கள், "மார்க்கெடபிள் சர்ப்ளஸை அறிந்துதான் கொள்முதல் செய்தோம்" என்று சொன்னார்கள். கொள்முதலுக்கான இலக்கை வைக்கும் நேரத்தில் எதை அடிப்படையாக வைத்தார்கள்? மார்க்கெடபிள் சர்ப்ளஸ் என்ன என்பதை அறிந்துதான் அவர்கள் அதை வைத்திருக்க வேண்டும். 12,500 டன் இலக்கு என்று வைத்து விட்டு, 24,109 டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்றால், இது எந்த அளவிற்கு ஆராய்ந்து செய்த செயல் என்பதைத்தான் சிந்திக்க வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். பிற மாவட்டங்களில் கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்ட வுடனே, வடாற்காடு மாவட்டத்திலும் கடுமையாகக் கொள்முதல் செய்யவேண்டிய நடவடிக்கை எடுத்ததன் காரணமாகத்தான் இந்த நிலைகள் ஏற்பட்டன என்று நான் அறிகிறேன்.

கடைசியாக ஒரே ஒரு செய்தி கூறி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். கனம் உறுப்பினர் திரு. சிரஞ்சீவுலு நாயுடு அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் நேரத்தில், மனையற்ற அரிசனங்களுக்கெல்லாம் மனை கொடுக்கச் சர்க்கார் திட்டமிருக்கிறது என்றும், நடப்பு ஆண்டில் பத்து இடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த எண்ணியுள்ளது என்றும், இதற்கென 25 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்றும் சொல்லி யிருக்கிறார்கள். ஒரு காரியத்தைச் செய்ய முடியும் என்று சொன்னால், அதைச் செய்யுங்கள். செய்ய முடியாத காரியங்களை, 1967 பொதுத் தேர்தலை மனத்திலே வைத்துக்கொண்டு, எடுத்துக் கூறவேண்டாம் என்பதற்காக ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். அரிசனங்களுக்கு மனை வழங்கும் திட்டம் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருந்தும் 40 சத வீதத்தினருக்குக் கூடக் கொடுக்க முடியவில்லை. 25 சத வீதத்தினருக்காவது கொடுப்ப தென்றால் இன்னும் 14 ஆண்டுகளாவது ஆகும் என்று பரமேசுவரன் கமிட்டி அறிக்கையில் இருக்கிறது. இன்னும் மனை வழங்காத அரிசனக் காலனிகள் 23,603 என்றும், மனைகள் 5,20,000 என்றும், இவை வழங்க 15 கோடி ரூபாய் வேண்டும் என்றும் பரமேசுவரன் கமிட்டி அறிக்கை கூறுகிறது. இதையே 15 ஆண்டுக் காலமாக ஆமை வேகத்தில் நடத்தும் இந்தச் சர்க்கார் மனையற்ற எல்லா ஏழைகளுக்கும் கொடுத்துவிடுவோம் என்று கூறி ஏழை மக்களை ஏமாற்றி, அவர்களுடைய வாக்குகளைப் பறிக்க முன்வர வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

[7th November 1966

*திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய துணை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் நாட்டிலே விவசாயத்தை ஊக்குவித்து, அதிகமாக உற்பத்தி செய்து, உணவுப் பற்றுக்குறையைப் போக்குவதற்காக வேண்டி சகல துறைகளிலும் அரசாங்கம் பல்வேறு திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வருகிறார்கள். அவ்வாறு நிறைவேற்றி வருகிற சமயத்தில், செய்ய வேண்டிய வேலைகளைக் காலத்தில் செய்யாததன் காரணமாக, விவசாயத்திற்கு அல்லது விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மக்களுக்குப் பெருத்த கஷ்டத்தையும் சேதத்தையும் ஏற்படுத்தி வருகிறது என்பதையும் யாராலும் மறுக்க முடியாது. தமிழ் நாட்டிலேயே முக்கியமான தஞ்சை மாவட்டத்தில் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால் அந்த மாவட்டத்திலே செய்யவேண்டிய முக்கியமான வேலைகளை அரசாங்கம் செய்வதற்குத் தவறிக் கொண்டு வருகிறது என்பதை நாங்கள் இந்தச் சபையிலே ஐந்து ஆண்டுக் காலமாகச் சொல்லி வந்திருக்கிறோம். உதாரணமாக, அந்த ஜில்லாவில் வடிகால் வசதி இல்லாததன் காரணமாகப் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தானியங்கள் வருஷா வருஷம் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகிறது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னதின் காரணமாக அரசாங்கம் ஒப்புக்காக வேண்டி ஏதோ அதிகாரிகளை நியமித்திருப்பதாகவும், வடிகால் திட்டத்தை நிறைவேற்றப் போவதாகவும், அதற்காகப் பன்னிரண்டு கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாகவும் சொல்லி விவசாய மக்களை ஏமாற்றி வருகிறார்கள், விவசாயிகளை நம்பிக்கை இழக்க வைத்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் சொல்ல முடியும். அந்த வடிகால் திட்டங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு நிறைவேற்றினாலும் கூட, பெரிய அளவில் விவசாயத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தைப் போக்குவதற்கு முடியும். அதைச் செய்வதற்கு அரசினர் தவறிக்கொண்டு வருகிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்த ஆண்டு கூட காலத்தில் தண்ணீர் கிடைக்காத காரணத்தால், மிகச் சிரமப்பட்டு விவசாயம் செய்து வைத்திருந்த பயிர்களெல்லாம் அக்டோபர் மாதம் 17, 18, 19 தேதிகளில் பெய்த பெருத்த மழை காரணமாக, வெள்ளத்தில் மூழ்கி இள நடவுகள் ஐம்பதாயிரம் ஏக்கருக்கு மேல் அழுகிப் போய் விட்டன.

அது மாத்திரமல்ல. அறுவடைக்குத் தயாராக இருந்த ஆடுதுறை-27 கதிரும் நீரிலே மூழ்கிப் போய்விட்டது. அமைச்சரவர்களே அதைப் பார்த்திருக்கிறார்கள். அம்மாதிரி ஏற்படும் நஷ்டத்திற்கு இடம் இல்லாமல் சில வடிகால் வசதிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது, ஸ்தல அதிகாரிகள் வேண்டிய கவனம் செலுத்துவது இல்லை. உதாரணமாக, ஆற்றுக்கரையை உயர்த்தவேண்டும் என்றால், அதற்கு கோடிக்கணக்கில் செலவாகி விடாது, சில லட்ச ரூபாய் செலவிலேயே செய்து விடலாம். ஆற்றங்கரைகளை உயர்த்த ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

7th November 1966] [திரு. ஆ. கு. சுப்பையா]

அடுத்து ஆற்றங்கரைகளை உயர்த்துவதோடு, ஆற்றை ஆழப்படுத்த வேண்டும். ஆனல், அப்படியெல்லாம் செய்யாததால, நஷ்டம் ஏற்படுகிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அந்த மாவட்டத்தில் கிணறுகள் தோண்ட என்று விவசாயி களுக்கு உதவிகள் செய்யப்படுகின்றன. தோண்டக் கூடிய கிணறுகள் மிக ஆழத்தில்தான் தண்ணீர் கொடுப்பதால், அங்கு பவர் ட்ரில் தேவைப்படுகிறது. அந்த மாவட்டத்தில் பவர் ட்ரில் வேண்டும் என்று மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் ஆலோசனை கூறி, அரசாங்கத்திற்கும் தீர்மானம் அனுப்பப்பட்டது. ஆனல் இதுவரை பவர் ட்ரில் கொடுத்தது கிடையாது. பவர் ட்ரில் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொள்முதல் சம்பந்தமாக, விவசாயிகளிடமிருந்து அரசாங்கமே நேரிடையாக வாங்குவதில்லை. விலையை நிர்ணயம் செய்துவிட்டு, 57 கிலோ உள்ள ஒரு மூட்டைக்கு ரூபாய் 27 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனல் வியாபாரிகள் 62 அல்லது 60 கிலோ கொடுத்தால்தான் வாங்குவோம் என்கிறார்கள். அதனல் கொள் முதல் நடைபெறாமல் இருக்கிறது. உற்பத்தியான தானியங்கள் தேங்கிக் கிடக்கின்றன. இதற்கு அரசாங்கமே நேரிடையாக கொள்முதல் செய்வது நலமாக இருக்கும். கூட்டுறவு சங்கங்களின் மூலம் செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டாலும், அவர்கள் தங்களிடம் நிதி வசதி இல்லை என்று கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு உர வினியோகம் செய்வதில், மார்க்கெடிங் சொசைடி மூலம் உரம் வாங்கவேண்டும் என்று சொல்லி மொத்த கிரயம் ரூபாய் 27-க்கு அடக்கமாகிறது. ஆனல் விவசாயிகளிடம் அவர்கள் ரூபாய் 42-க்குத்தான் விற்பனை செய் கிறார்கள். அதிகமான ஆதாயத்தை, லாபத்தை மார்க்கெடிங் சொசைடி அடைகிறது. ஆகவே, அதைத் தடுத்து, என்ன கிரயம் அடங்குகிறதோ அதே விலையை விவசாயிகளிடம் வாங்க ஏற்பாடு செய்து அந்த வகையில் உர வினியோகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் துணை மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன். இது விரிவான பல அம்சங்களைக் கொண்டது. கேட்டிருக்கும் மூன்று கோடி ரூபாயில், ஏறக்குறைய 2½ கோடி ரூபாய் விவசாய அபிவிருத்திக்கு மூலதனச் செலவிற் காகவே ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு சிறந்த அம்சம். திருநெல்வேலி ஜில்லாவில்கூட பன்னிரெண்டு லட்ச ரூபாய் செலவில் திருச்செந் தூரில் ஒரு சுற்றுலா மாளிகை கட்ட இருப்பது கண்டு சந்தோஷ மடைகிறேன். பக்கத்தில் பல கடற்கரை பகுதிகள் இருக்கின்றன. யாத்திரிகர்களுக்கு மாத்திரமில்லாமல் கடலோரப் பகுதிகளுக்கும்

மற்ற பகுதிகளுக்கும் போய்வருகிற அதிகாரிகளுக்கும் தங்கு வதற்கும் வசதியாக இருக்கும். திருநெல்வேலி ஜில்லாவில் குதிரை மொழிதேரி என்பது 12,000 ஏக்கர் பரப்புள்ளது. அங்கே ஜியலாஜிகல் சர்வேக்கு இந்த ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. ஆனால் இந்த ஆண்டு ஏறக்குறைய 4, 5 மாதங்கள் ஆகியும் ஒரு விதமான முன்னேற்பாடும் தெரியவில்லை. பண ஒதுக்கல்கூட செய்யவில்லை. காலாகாலத்தில் அந்த திட்டத்தின் பூர்வாங்க வேலை களைத் துவங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தூத்துக்குடி துறைமுக வேலை சம்பந்தமாக போதுமான பண ஒதுக்கீடு இல்லாமையால் அந்த திட்ட வேலை தாமதப்பட்டுவிடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை, மத்திய சர்க்காரோடு வாதாடி, வேண்டியதைப் பெற்று வேலைகள் தொடர்ந்து நடைபெற வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேது சமுத்திர திட்டத்திற்கு ரூபாய் 100 டோகன் ஆக ஒதுக்கி யிருக்கிறது. பல ஆண்டுகளாகவே பரிசீலிக்கப் பட்டு வரும் இந்தத் திட்டம் உருப்படியாக பணம் ஒதுக்கீடு செய்ய வகை செய்திருக்கலாம். சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால்தான் தூத்துக்குடி துறைமுகத்தின் பூரண பலனையும் பெறமுடியும்.

திருச்செந்தூரிலே ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் வேண்டு மென்று கேட்டோம். ஒரு ஆறு தொழில்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்தபட்சம் அடுத்த ஆண்டிலே கொடுத்துவிடலாம் என்றாலும், அதற்கு பூர்வாங்கமான வேலைகளை பரிசீலனை செய்து இருந்தால் சந்தோஷமாக இருக்கும். அந்த வகையில் செய்யப் படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நில வரியைப் பொறுத்த மட்டில், 1½ கோடி ரூபாய்க்கு விலக்கு கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. எங்களைப் பொறுத்த வரை திருநெல்வேலி, மணிமுத்தார், தாம்பரபரணி சம்பந்தப்பட்டது 85,000 அல்லது 1,00,000 வரை அடிஷனல் அஸெஸ்மெண்டு இன்னும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மற்ற நீர்த் தேக்கங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் விலக்கு மணிமுத்தாறுக்கும் பொருந்தும் எல்லா வகையிலும். ஆகவே, அந்த விஷயத்திலும் கவனம் செலுத்தி மணிமுத்தாறு திட்டப் பகுதிகளுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டும். எல்லா நிலங்களையும் 'ஏ' கிளாஸ் என்று பாகுபாடு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே அதிக தீர்வை விதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அடிஷனல் அசெஸ்மெண்ட் அந்த அதிக தீர்வை மணிமுத்தாறுக்கு நியாயம் இல்லை. விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலவரிக்கு மேலுள்ள சர்சார்ஜ் குறைகிற காரணத்தால், அதற் கான ஸ்டாப் குறைகிற காலத்தில், அந்த வகையில் உபரி பட்ஜட்டில் ரூபாய் 48,000 தொகை கோரப்பட்டிருக்கிறது. பதினேழு, பதினெட்டு ஆண்டுகள் வேலை செய்து தலையாரி, வெட்டி

7th November 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

யான் போன்ற சிறிய சிப்பந்திகள் வேலையிலிருந்து நீக்கப்படும் போது வேறு வேலை கிடைக்கும் என்கிற எந்த விதமான உத்தர வாதமும் இருக்கவில்லை. அரசாங்கத் தரப்பிலிருந்து வாக்குறுதி கொடுத்தாலும், அவர்களை அப்ஸார்ப் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் காயல் பட்டணம் காம்போஸிட் வாடர்சப்ளை திட்டத்தில் 11 கிராமங்களுக்கு வசதிசெய்யப் படுகிறது. திருச்செந்தூர் ஆலந்தலை முதலிய இடங்களுக்கு தண்ணீர் எட்டுவதில்லை. அது ஒரு பில்கிரிம் சென்டராக பல்லா யிரம் பேர் வந்துபோய்க்கொண்டு இருப்பதால், தண்ணீர் கஷ்டம் அங்கும் ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது சம்பந்தமாக இன்னொன்றையும் யோசிக்கலாம். இருக்கக் கூடிய மத்திய தேக்கத்தை விரிவு படுத்தலாம். ஆற்றினுள் கிணறு போட்டு தூத்துக்குடிக்கு கொண்டு போனது போக, ஆற்றினுடைய தென்பகுதியில் கிணறுகள் போட்டு, ஆற்றிலிருந்தே நேராக கொடுக்க யோசனை செய்யலாம் என்கிற ஆலோசனையைச் சொல்லு கிறேன்.

அச்சுத்துறை சம்பந்தமாக பிராஞ்சுகள் ஏற்படுத்தும்போது, பாளையங்கோட்டையிலிருக்கும் டிஸ்சார்ஜ்ட் ப்ரிசனர்ஸ் சொசைடி கட்டடங்கள், பார்ஸ்டல் ஸ்கூல் இவற்றில் உள்ள வசதிகளையும் கவனிக்கலாம். இதை அரசாங்கத் தரப்பிலே பரிசிலனை செய்ய லாம்.

வரண்ட பகுதிகளான நாங்குனேரி, திருச்செந்தூர் தென் பகுதி களுக்கு ஒரு திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருச்செந் தூரிலே வரண்ட பகுதிகளுக்கு வெள்ளூர் தென்கரை குளங்களைக் கடந்து ஒரு தனிக் கால்வாய் அமைத்து, வசதி செய்ய நோச்சிக் குளம், சடையனேரி திட்டங்கள் ஏற்கனவே அரசாங்கத்தின் பரிசிலனைக்கு வந்திருக்கின்றன. அதைக் காலாகாலத்தில் செய்தால் விளைவு நஷ்டத்தைத் தவிர்க்க முடியும். கடலில் வீணுகிற தண்ணீ ரைப் பயன்படுத்த முடியும். திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு ரேட்டுகள், தண்டத் தீர்வை இருக்கின்றன. ஒரு போக நிலத்தில் பிசான காலத்தில் செய்யப்படும் பயிர்களுக்கு இரண்டு ரேட்டுகள். தண்ணீர்த் தீர்வைகள் இருக்கின்றன. அதைக் குறைத்து ஒரு ரேட்டாகச் செய்யத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேளாண்மைத் துறையை பொறுத்த மட்டில் புன்செய்ப் பயிர்களுக்கு ஆழமான 10-30 a.m.] கிணறுகள் தோண்டி பாசன வசதி செய்து கொடுக்கப்பட வேண்டி யது முக்கியமாகும். அதற்குப் பவர் ட்ரில்கள் தேவை. கடந்த 3 வருட காலமாக நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் அந்தப் பகுதியை எல்லாம் சுற்றிப் பார்த்து நிலத்தின் அடியில் இருக்கிற தண்ணீரை வெளியே கொண்டுவரவேண்டும் என்று சொல்லி வந்தும் இந்த வேலை இவ்வளவு தாமதப்பட்டுக்கொண்டிருப்பது சரியல்ல. இதற் காக டோக்கனுக 100 ரூபாய் ஒதுக்கியிருப்பது சந்தோஷம் அளிக்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [7th November 1966

கிறது என்றாலும் இந்த வேலையை இனியும் காலதாமதம் செய்யாமல் எடுத்து நடத்துவது ஒன்றே பயன் அளிக்கும் என்று தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உதவி மானியக் கோரிக்கையின்கீழ் நான் பேச இருக்கின்ற சில வார்த்தைகளையாவது தாங்கள் தயவு செய்து அனுமதிப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர் : என்ன பேசப்போகிறீர்கள் என்றே தெரியவில்லையே. ஆரம்பமே அனுமதிப்பதை சந்தேகமாக்குகிறது. (சிரிப்பு).

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இன்றையதினம் நமது முதல் அமைச்சர் அவர்கள் 1966-67-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளை இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த சமயத்தில் முதன் முதலாக எனது தொகுதியைப் பற்றி குறிப்புக்களை, விவரங்களை நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வெள்ளம் அதிகமாக வந்த காரணத்தினாலும், புயல் அடித்த காரணத்தினாலும் எங்கள் கிராமங்களில் இருக்கிற ரோடுகளும், ஏரிகளும் உடைப்பு எடுத்துக்கொண்டிருக்கின்றன. அவற்றை தயவு செய்து உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கரும்பு அபிவிருத்தியில் கரும்பை ஆலைக்கு எடுத்துச்செல்வதற்காகப் போடப்படும் ரோடுகள், பணம் போதாது என்ற காரணத்தினால் அந்த வேலை தடைபட்டிருப்பதாக அறிகிறேன். அதையும் சரிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் அவியனூர், பைத்தாம்பாடி, அழகப்பெருமாள்குப்பம் என்ற மூன்று ஊர்கள் இருக்கின்றன. அங்கே எல்லீஸ் சவுல்ட்ரி என்ற அணை கட்டப்பட்டது. அப்போது அந்த அணையினால் அந்த கிராமங்கள் பாசன வசதி பெறும் என்பதாக அவற்றுக்கும் வரி போடலாம் என அப்போது இருந்தவர் எழுதி வைத்துவிட்டுப்போய் இருக்கிறார் போலிருக்கிறது. உண்மையில் இந்தக் கிராமங்கள் சிறிதும் பயன் அடையவில்லை. இங்கே வாய்க்கால்கள் இல்லை. இவர்களுக்கு 1955-ல் இருந்து வரி போட்டிருக்கிறார்கள். இது மோசமான காரியம். ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்து இப்படி வரி போடுவதைக் கைவிடவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாளுக்கு நாள் விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் தருவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஒன்றும் கிடையாது. நேற்றையதினம் இரண்டேகால் ரூபாய்க்கு விற்ற அரிசி இன்றையதினம் இரண்டரை ரூபாய்க்கு விற்கிறது. சேலத்தில் மூன்று ரூபாய்க்கு விற்கிறது. கோயம்புத்தூரில் 4 ரூபாய்க்கு விற்கிறது. உதக மண்டலத்தில் அரிசி என்று காட்டினால் போதும், 5 ரூபாய் கொடுத்தாகவேண்டும். இப்படி காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத்தில் விலைவாசி விஷம்போல ஏறிக்கொண்டே போகிறது என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

7th November 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

நேற்றையதினம் வடசென்னை வியாபாரிகள் சங்கத்தினர் அமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கொடுத்திருப்பதாக அறிகிறேன். அதில் உணவுப் பண்டங்களின் விலை மட்டும் 1939-ல் இருந்ததைக் காட்டிலும், 1966-ல் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்ப தான புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

	1939-ல் கிலோ 1-க்கு ரூ.	பை.	1966-ல் கிலோ 1-க்கு ரூ.	பை.
பு. அரிசி	0	08	0	93
மிளகாய்	0	27	7	25
புளி	0	13	2	00
க. எண்ணெய்	0	27	4	35
ந. எண்ணெய்	0	28	5	00

இதுபோன்று உணவுப் பொருள்கள் மட்டும் அல்ல ; சிட்டித் துணி 1939-ல் கஜம் நான்கணுவுக்கு விற்றது என்றால் 1966-ல் ரூபாய் 2-80 காசுக்கு விற்கிறது. வேட்டி 3 ரூபாய்க்கு விற்றது 20 ரூபாய்க்கு விற்கிறது. இப்படி அன்றைக்கு இருந்ததைவிட இன்றைக்கு பத்து மடங்குகள் விலை உயர்ந்திருக்கின்றன. அதே சமயத்தில் ஏழை மக்களின் வாங்கும் சக்தி பத்து மடங்கு உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. ஐந்து மடங்காவது உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. இந்த நிலையில் எப்படி இந்த அத்தியாவசியப் பண்டங்களை மக்கள் வாங்கி உபயோகிப்பார்கள் என்று நான் கேட்கிறேன். விலை வாசியைக் கட்டுப்படுத்த அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? * * * ஆகையால், இந்த அரசாங்கம் விலைவாசிப் பிரச்சினையைச் சமாளித்து விலையை ஏறாமல் தடுத்து நிறுத்துவதற்குத் தவறிவிட்டது. அதற்குத் திராணி இல்லாத அரசாங்கம் இன்றைக்கு நடந்துகொண்டிருக் கிறது.

போலீஸ் இலாகாவை எடுத்துக்கொள்வோம். லால்பேட் டைக்கு 20 நாட்களுக்கு முன்பு மந்திரி திரு. பூவராகன் அவர்கள் சென்று இருந்தார்கள். அங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சியினர்கள் கூட்டம் நடத்த அனுமதிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் நிதி கூட அவர்களிடம் இருந்து வாங்கிக் கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்த அதே நாளில் அவர்களும் கூட்டம் போட்டாகவேண்டும் என்கிறார்கள். அங்கு இருக்கும் ஷெரீப் என்பவர் முயற்சி அது. இன்றைக்கு பட்டாளம், ரிசர்வ் போலீஸ் அங்கே காவல் காத்துக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. முஸ்லீம் லீகை என் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள், பாகிஸ்தானுக்கு ஓடுங்கள் என்பதாக—டெபுடி சூப்பரிண்டெண்டெண்ட், ஐ.ஜி. ஆகியவர்கள் மிரட்டுகின்ற நிலைதான் தாண்டவம் ஆடுகிறது, இதை மிக மிக வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சொல்கிறேன். நேற்று—5-ம் தேதி இரவு எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் கோயம்பத்தூர் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் வந்தார்கள். அங்குள்ள மக்கள் அவர் சுற்றுப்

*Expunged as ordered by the Chair.

பயணம் வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். தேர்தலுக்குப் பணம் கொடுக்கிறார்கள். அறிஞர் அண்ணா போகிறார். வாங்கி வருகிறார். காங்கிரஸ்காரர்களை அழைத்தாலும் காங்கிரஸ்காரர்களும் சென்று வரட்டுமே. அதைவிட்டு அவரது சுற்றுப் பிரயாணத்திற்கு ஊறு செய்கிற வகையில் அங்கே உள்ள குண்டர்கள் அராஜக செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் உடுமலைப் பேட்டையில் இருந்து வேறு ஊருக்குச் செல்ல இருந்த நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ரௌடிகள், நூற்றுக்கும் மேற்பட்ட குண்டர்கள் அவரது காரை நடுவழியில் தாக்க முயற்சித்திருக்கிறார்கள். இத்தகைய குண்டர்களின் அராஜகச் செயலைக் கொண்டா முதல் அமைச்சர் அவர்கள் தேர்தலிலே வெற்றிபெற முயன்று வருகிறார்கள் என்று கேட்கிறேன். மதிப்பிற்குரிய ராஜ்ய சபை உறுப்பினர்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் காரியதரிசி—சுற்று பிரயாணம் செய்கிறார் என்றால் பாதுகாப்பு இல்லை. திரு. காமராசர் சுற்றுப் பிரயாணம் என்றால் முன்னும் பின்னுமாக போலீஸ் லாரிகள் செல்லலாம். அறிஞர் அண்ணா காரைத் தடுத்து நிறுத்தித் தகராறுகளை ஏற்படுத்த குண்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். உடுமலைப்பேட்டை நாராயணன் காரை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். சாதி பாஷா காரை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்—அறிஞர் அண்ணா கார் என்பதாக தப்பான கணக்குப்போட்டுக் கொண்டு. இந்த அராஜகச் செயல்களுக்கு போலீஸ் இலாக்கா துணை நிற்கிறது. ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்றால் சட்டசபையைக் கலைத்து விட்டு முதல் அமைச்சர் அவர்கள் தேர்தலிலே நின்று போட்டியிட முன்வரவேண்டும். போலீஸ் பட்டாளத்தை வைத்துக்கொண்டு தேர்தலிலே வெற்றி பெறவா உதவி மானியத் தொகை கோரியிருக்கிறார்கள் என்று கேட்கிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அறிஞர் அண்ணாவின் மேல் ஏதாகிலும் ஒரு சிறு துரும்பு படுமானால் அதே கதிதான் மற்றவர்களுக்கும் ஏற்படும். மக்கள் சும்மா இருந்துவிடமாட்டார்கள். போலீஸ் பட்டாளத்தை வைத்துக்கொண்டு எதிர்க் கட்சிகளை நசுக்கி, தேர்தலிலே வெற்றி பெற முயன்றால் அதுவே உங்களுடைய வீழ்ச்சி, அத்தகைய அராஜக முயற்சிகளைக் கைவிடுங்கள் என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சபை முன் கோரப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையின்மீது இரண்டொரு கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். இந்த ராஜ்யத்திலே இன்றைக்கு நெசவாளர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது தொழில் ஒழுங்காக நடப்பது கிடையாது. அவர்கள் பஞ்சத்திலும், பிணியிலும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களின் கீழ் பதிவு செய்து கொண்டிருக்கிற நெசவாளர்களுக்கு உதவி செய்ய 50 லட்சம் ரூபாய் துணை மானியக் கோரிக்கை மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு ஓரளவு பயன்படலாம். ஆனால் வாங்குகிற சக்தி மக்களிடத்தில் அவ்வளவாக இல்லை. அது மாத்திரம் அல்ல. கூட்டுறவு சங்கங்களில் இருப்பவர்கள்கூட ஒரு சாரார்

7th November 1966] [திரு. க. ர. நல்லசிவம்]

தான் வேலை பெற்று, வேலை செய்து வருகிறார்கள். அதிலே ஒரு கணிசமான பகுதியினருக்கு வேலை கிடையாது. இதன் விளைவாக கூட்டுறவு சங்கங்களிலே இருக்கின்ற நெசவாளர்களும் சரி, வெளியிலே இருக்கின்ற நெசவாளர்களும் சரி, வாழ்க்கையிலே படுகிற தொல்லைகள் கணக்கு வழக்கில்லை. சர்க்கார் இதைக் கவனத்திலே வைத்துக்கொள்ளவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாம் ஓரளவு உதவி கொடுத்தாலும் கூட கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை, இன்றைக்கு மாத்திரமல்ல, கடந்த பல காலமாகவே, அதிலே ஊழல்கள் மலிந்துகொண்டே வருகின்றன. இவற்றைப் பற்றி எத்தனையோ கேள்விகள், சட்டசபை பேச்சுக்கள் எல்லாம் இருக்கின்றன. இவற்றை வைத்துக் கொண்டு பார்த்தால் நாம் புரிந்து கொள்ளலாம், ஊழல்கள் வேகமாக மலிந்துகொண்டு வருகின்றன என்பதை. நான் ஒரே ஒரு விஷயத்தை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாநில கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் தலைவராக இப்பொழுது இருப்பவர்தான் சென்னிமலை கூட்டுறவுச் சங்கத்திலும் தலைவராக இப்பொழுது இருக்கிறார். 1963-64-ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட்டிலே பார்த்தால் இந்தச் சென்னிமலைக் கூட்டுறவுச் சங்கத்திலே ஒரு லட்சம் ரூபாய் வரையிலே ஊழல் நடந்திருப்பதாக சமீபத்திலே வந்த ஆடிட் ரிப்போர்ட் கூறுகிறது. அதிலே ஒரு தடவை திறப்பு விழாவிற்கோ அல்லது ஆரம்ப விழாவிற்கோ ஏதோ ஒரு விழாவிற்காக 14 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது யார் மாநிலக் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் தலைவராக இருக்கிறாரோ அவரேதான் அங்கேயும் தலைவராக இருக்கிறார். அவரைப்பற்றித்தான் நான் இங்கே கூறுகின்றேன். இது சம்பந்தமாக நான் விவரங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதேமாதிரி மற்ற விவரங்களையும் வைத்து சர்க்கார் இதை நல்ல முறையிலே பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் மாநிலத்திலே உள்ள நெசவாளர்களின் வாழ்க்கையே இதில் அடங்கியிருக்கிறது. இதிலே இத்தகைய ஊழல்கள் செய்திருக்கிறார்கள் என்றால் பெரிய கூட்டுறவுச் சங்கங்களிலே எவ்வளவு செய்திருப்பார்கள் என்பதையும் பார்க்கவேண்டும். அமைச்சர் அவர்களிடமிருந்து ஒன்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாநில சர்க்கார் மூன் பணமாக முதலில் 50 லட்சம் கொடுத்திருக்கிறார்கள், பிறகும் முன்பணம் என்று 35 லட்சம் கொடுத்திருக்கிறார்கள், இரண்டும் ஒன்றுதானா என்ன என்பது

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : முதலிலே கொடுத்தது வேஸ் அன்ட் மீன்ஸ்க்குக் கொடுத்தோம். இரண்டாவதாகக் கொடுத்திருப்பது கடனைக் கொடுத்திருக்கிறோம்.

திரு. க. ர. நல்லசிவம் : பணம் கொடுத்ததைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ரொம்ப மகிழ்ச்சி. ஆனால் அந்தப் பணத்தை விநியோகம் செய்கிறவர்கள் பயங்கரமான வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னிமலை கூட்டுறவுச்

சங்கத்தைப் பரிசீலித்துப் பார்த்தால் அதன்மூலமாகப் பல விஷயங்கள் கண்டுபிடிக்கலாம். ஆகவே இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. தங்கவேலு: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டு துணைமானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திண்டிவனம் பகுதியிலே. திண்டிவனம் நகரத்திலே உள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்கவேண்டுமென்று சென்ற பட்ஜெட்டின்போது கேட்டோம். இந்த ஆண்டு துணை மானியத்திலே சேர்ப்பதாகக் கூறினார்கள். ஆனால் சேர்க்கப்படவில்லை. ஐம்பது ஆயிரம் மக்கள் வாழக்கூடிய பகுதியிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவ மனை பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. அந்த மருத்துவ மனையை உடனடியாக விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இரண்டு டாக்டர்கள் இருந்தார்கள். ஒரு லேடி டாக்டர், ஒரு ஆண் டாக்டர் இருந்தார்கள். இப்பொழுது ஆண் டாக்டரை மாற்றிவிட்டார்கள். இப்பொழுது லேடி டாக்டர் ஒருவர்தான் அங்கே இருக்கின்றார். அவ்வளவு பெரிய டவுனுக்கு, 25 மைல் சுற்றளவுள்ள ஒரு பகுதிக்கு ஒரே டாக்டர்தான் இருக்கிறார். ஆகவே அங்கே போதுமான டாக்டர்களை நியமித்து, அந்த மருத்துவ மனையை உடனடியாக விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்கு அரசாங்கம் ஏராளமாகச் செலவு செய்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் பார்த்தால், அந்த அளவுக்கு ஒன்றும் நடைபெறவில்லை. திண்டிவனம் வட்டத்திலே இரும்பை என்ற இடத்திலே அரசினர் பெண் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக்கூடம் இருக்கிறது. அது கூரைக் கட்டடத்திலேதான் நடைபெற்றுவருகிறது. மூன்று நாட்களுக்கு முன்னால் வீசிய கோரப் புயலில், கடுமையான காற்றினால் அங்குள்ள வீடுகள் எல்லாம் இடிந்தும், மரங்கள் விழுந்தும் இருக்கக்கூடிய கோரக் காட்சி நடந்திருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடம் இடிந்து அதிலே படிக்கக் கூடிய மாணவிகள் எல்லாம் குளிரிலேயும், காற்றிலேயும் அடிபட்டு கலங்கியிருக்கிறார்கள். அங்கே பள்ளிக்கூட வசதியில்லை. ஆகவே, அந்த அரசினர் பெண்கள் ஆதாரப் பயிற்சிக்கூடத்திற்கு உடனடியாக கட்டட வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்காங்கே உள்ள பெண்கள் பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லாமல் இருக்கிறது என்பது வருந்தத்தக்கது, ஆகவே, இதையெல்லாம் கவனிக்கவேண்டும்.

மூன்று நாட்களுக்கு முன்னால் வீசிய கொடூரப் புயலின் காரணமாக சென்னையைவிடப் பதின்மடங்கு திண்டிவனம் பகுதியில்தான் கிராமப்பகுதிகள் பாதிக்கப்பட்டு. வீடுகள், ஹரிஜனக் குடிசைகள் எல்லாம் பிய்த்து எறியப்பட்டு, விழுந்து சின்னபின்னமாக்கப்பட்டு மக்கள் எல்லாம் கோவென்று கதறிக்கொண்டிருக்கின்ற நிலைமையைத்தான் பார்க்கமுடியும். அங்கே எல்லா ஏரிகளும் உடைந்து விட்டன. தொண்ணூற்றைந்து சதவிகிதம் உடைந்து விட்டது, 5

7th November 1966] [திரு. ஆ. தங்கவேலு]

சதவிகிதம் தான் இருக்கும். ஏழை விவசாயிகள் எல்லாம் எதிர் காலத்தில் நம்முடைய நிலைமை என்னவாகும் என்று கலங்கிக் கொண்டிருக்கிறார்கள். வீடூர் அணை உடைந்துவிட்டபடியால் அங்கே ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை. இதனால் 7, 8, கிராமங்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. எலாய், அங்காணிக் குப்பம், ஆத்திரக்குப்பம், கணபதிபட்டியில் பாதி கிராமம், இபபடிப் பல கிராமங்கள் அடித்துச்செல்லப்பட்டு மக்கள் கண்கலங்கி நிற்கிறார்கள். அமைச்சர் திரு. ராமையா அவர்கள் வந்திருந்த பொழுது கூட மக்கள் எல்லாம் அவருடைய காலில் விழுந்து கதறிய கோரக் காட்சியை அவர்கள் பார்த்தார்கள். கொஞ்சம் சாப்பாடு கொடு என்று சொன்னார்களே தவிர, வேறு நிவாரண உதவிகள் இன்னும் செய்யவில்லை. ஆகவே நிவாரண வசதிகள் போதுமான அளவு செய்யவேண்டும். அங்கே பயங்கர மான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. புயலினால் ஒரு வீடு கூடத் தப்பமுடியாத அளவுக்கு எல்லாம் பாழாய்ப் போய்விட்டது. மூன்றாம் தேதியிலிருந்து இன்றுவரை மின்சாரம் இல்லாமல் அந்தப் பகுதியே இருண்டு கிடக்கிறது. மின்சாரம் புதிதாகப் போட்டால் எவ்வளவு செய்யவேண்டுமோ அந்த அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கம்பங்கள் எல்லாம் விழுந்துவிட்டன. டிரான்ஸ்பார்மர் எல்லாம் எறியப்பட்டு சேதமடைந்து இருக்கின்றன. திண்டிவனத்திலே தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது, குழாய் வசதி செய்துகொடுக்க வேண்டும். இல்லையானால் குழுறல் ஏற்பட்டு மக்கள் எல்லாம் மாண்டு மடிந்துபோகக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். விவசாய வரிகள் எல்லாவற்றையும் தள்ளுபடி செய்யவேண்டும். வரி வசூல் செய்யாமல் இருக்க வேண்டும். தாராளமாக வீடு கட்டிக்கொள் வதற்குக் கடன் வசதி செய்துகொடுக்கவேண்டும். உணவு, உடை எல்லாவற்றையும் இனமாகக் கொடுக்கவேண்டும். திண்டிவனம் பகுதியைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து எல்லாவித மான உதவிகளையும் மக்களுக்குச் செய்யவேண்டும்.

* **திரு. மா. தண்டாயுதபாணி:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, துணை மதிப்பீட்டு மானியக் கோரிக்கையின் மீது எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் கடந்த மாதத்திலே கடுமையான மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் அதிகமாகும். பொதுப் பணித் துறை இலாகா அமைச்சர் அவர்களே நேரிலே வந்து பார்த்தார்கள். ஆண்டுதோறும் கடுமையான மழையின் காரணமாக, சரியான வடிகால் வசதிகள் இல்லாத காரணத்தினாலே, எவ்வளவுதான் பொறுப்போடு நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று விவசாயிகள் முயற்சி செய்தாலும்கூட, உற்பத்தி மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகிறது. இதற்கு நிரந்தர மாக நிவாரணம் ஏற்பட வேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்துக் கூறிய மாதிரி, குறிப்பிட்ட இரண்டு மூன்று ஆறுகள் நேரடியாகக் கடலில் சென்று கலக்க வழி செய்து விட்டால் ஓரளவு வடிகால் பிரச்சினையை நிவர்த்தி செய்ததாக ஆகும். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

[திரு. மா. தண்டாயுதபாணி] [7th November 1966

அடுத்தபடியாக, இப்போது நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கூறியது போல் 3 லட்சம் ஏக்கரில் ஏடிடி 27 நெல் நல்ல முறையில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. மேட்டூரிலிருந்து காலந் தாழ்ந்து தண்ணீர் விட்டதன் காரணமாக முன்பே அறுவடை செய்யப்பட வேண்டியது காலம் தாழ்ந்திருக்கிறது. இந்த மாதத்தில் அறுவடையாகக் கூடிய நெல்லுக்கு சர்க்கார் கட்டுப்படியாகக் கூடிய விலையை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நெல் அறுவடை செய்யக் கூடிய நேரத்தில் மழையால் பாதிக்கப்பட்டு விட்டால், சர்க்காரும் எடுத்துக் கொள்வதில்லை, தனிப்பட்ட வியாபாரிகளும் எடுத்துக் கொள்வதில்லை. மூட்டைக்கு 2 ரூபாய் 3 ரூபாய் குறைத்துக் கேட்கிறார்கள். அது போன்ற நிலை ஏற்படாது சர்க்கார் நிர்ணயம் செய்துள்ள விலைக்கே கொள்முதல் செய்ய ஆவன செய்யவேண்டும்.

கொள்முதல் செய்யப்படும் நெல்லை மற்ற மாவட்டங்களுக்கு அனுப்புவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. மற்ற மாவட்டங்களின் உணவுப் பற்றாக் குறையையும் போக்க வேண்டுமென்பதுதான் தஞ்சை விவசாயிகளின் எண்ணம். ஆனால் கொள்முதல் செய்யும்போது தஞ்சை ஜில்லாவிலேயே பற்றாக்குறை ஏற்படும் வண்ணம் கொள்முதல் செய்துவிடுவதன் காரணமாகத் தான் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் கடந்த மாதம் ஒரு 'பந்த்' நடத்தினார்கள். தஞ்சையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டது இயற்கையாக ஏற்பட்டதல்ல. தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டும் அவை கொள் முதல் செய்யப்பட்டு மற்ற மாவட்டங்களுக்குச் சென்று விட்ட காரணத்தால் அங்கே பற்றாக்குறை ஏற்பட்டது. இப்போது குறுவை கொள்முதலின் போதாவது தஞ்சை மாவட்டத்திற்கு பிப்ரவரி மாதம் வரை தேவையான அளவு வைத்துவிட்டு மீதியைக் கொள்முதல் செய்து மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. மதிப்புக்குரிய கனம் முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். துணை மானிய மதிப்பீட்டுக் கோரிக்கையில் அதைப் பற்றிக் குறிப்பிட வில்லை என்றாலும் அதைப் பற்றிக் கூற விரும்புகிறேன். நம் நாடு சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிரமமான நிலையில் இருக்கிற அரசியல் தியாகிகளுக்கும், நேதாஜி சங்கத்தில் இருந்து சிரமப்பட்ட தேசீயப் பரம்பரையினருக்கும் அரசாங்கம் உதவித் தொகை வழங்குவதாக முடிவு செய்திருக்கிறது. இது வரவேற்கத் தக்க ஒன்று. இதைச் செயல்படுத்துகிற நேரத்தில் நல்ல முறையில் கவனித்து, அரசியல் தியாகிகள் அத்தனை பேருக்கும்—உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி—இன்று அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் கூட அவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் கூறியிருப்பது போல வழங்குவதற்குக் கவனமாகப் பரிசீலித்து அனைவருக்கும்

7th November 1966] [திரு. மா. தண்டாயுதபாணி]

இந்த உதவியை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள் கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: கனம் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் ஏற்பட்ட கோரப் புயல் மழை காரணமாக சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற் காடு முதலிய மாவட்டங்களில் பயங்கரமான அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரை வாக தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டும். ஏதாவது ஆபத்து, நஷ்டம் ஏற்பட்டால் நஷ்ட ஈடு கொடுப்பது போல் இதிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்கும் வகையில் மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் நடந்த ஒரு முக்கியமான சம்பவத்தை நான் கனம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த 4—11—1966-ம் தேதியன்று மதுரை மெடிகல் கல்லூரியில் ராஜேந்திரன் என்ற மாணவர் ரௌடிகளால் கத்தியால் தாக்கப்பட்டார். அவரைக் காப்பாற்றச் சென்ற துரையரசன், சுரேந்திரன் என்ற மாணவர்களும் தாக்கப்பட்டு அவர்கள் எல்லோரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக் கிறார்கள். அவர்களை யார் தாக்கினார்கள், எப்படித் தாக்கப் பட்டார்கள் என்பதைக் கண்டறிவதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுப் பதற்குப் பதிலாக, தாக்கப்பட்ட மாணவர்களை ஹாஸ்டலில் இருந்து நீக்கி வைத்திருக்கிறார்கள். மாணவர்கள் தேர்தலை யொட்டி இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. இந்தத் தாக்குதல் காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலின் பேரில்தான் நடந்திருக்கிறது. அது அரசாங்க மருத்துவக் கல்லூரியாக இருப்பதாலும், காங்கிரஸ் காரர்களின் தூண்டுதல் இருப்பதன் காரணமாகவும் யாரும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கத் தயங்குகிறார்கள் என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதிலே தக்க நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டாயக் கொள்முதலின் காரணமாக விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். தஞ்சையிலே ஏற்பட்டிருக்கிற அரிசிப் பஞ்சம் இயற்கையால் ஏற்பட்டதல்ல; சர்க்காருடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக ஏற்பட்டதுதான். செயற்கை யான பஞ்சந்தான். கனம் முதலமைச்சர் அவர்கள் நில வரி ரத்து அறிக்கையை இந்தச் சபையில் சமர்ப்பித்ததை நான் உண்மை யிலேயே பாராட்டுகிறேன். காரைக்குடியில் காமராஜர் சொன்னார்—

[திரு. கரு. சீமைச்சாமி] [7th November 1966

அதை ஏற்று கனம் முதலமைச்சர் அவர்கள் நில வரி ரத்து அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலவரியை ரத்து செய்ய வேண்டுமென்பது திடீரென்று உதயமான ஒன்றல்ல. சுதந்திராக் கட்சியின் தலைவர் ராஜாஜி அவர்கள் 1962-ம் ஆண்டு தேர்தல் நடந்த சமயத்திலே, 'சுதந்திரா கட்சி ஆட்சிக்கு வந்தால் நிலவரியை ரத்து செய்யும்' என்று தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே கூறிய ஒன்றுதான். நானும் இதைப் பற்றிப் பல தடவை சட்ட மன்றத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். அப்போதெல்லாம், நிலவரியிலிருந்து கணிசமான அளவுக்கு வருமானம் வருகிறது, அதை ரத்து செய்ய முடியாது என்று முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்று முதலமைச்சர் அவர்கள் 'நீண்ட நாளாக இருந்த என்னுடைய ஆசை இப்போது நிறைவேறுகிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். இது 1967 ஜூலையில் இருந்து அமலுக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1967-ல் அவர்கள் வருவார்களோ மாட்டார்களோ என்ற நிலை இருக்கிறது. நாங்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தில் கூட்டு ஆட்சி—இந்த நிலவரியைக் கட்டாயமாக ரத்து செய்துவிடுவோம் என்ற பயத்தின் காரணமாகத்தான் இப்போது இந்த அறிக்கையை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ராஜாஜி அவர்களுடைய கருத்தை, சுதந்திராக் கட்சியின் கொள்கையைக் களவாடியிருக்கிறார்கள் அல்லது கடன் வாங்கியிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் அன்று அந்த அறிக்கையை வாசிக்கும் போது சுதந்திராக் கட்சி முதலமைச்சராகத்தான் காட்சியளித்தாரே தவிர, காங்கிரஸ் கட்சி அமைச்சராகக் காட்சியளிக்கவில்லை. எப்படியிருந்தாலும் நில வரி ரத்து வரவேற்கத்தக்கது. தேர்தலிலே விவசாய மக்களுடைய ஓட்டை வாங்குவதற்காக சர்க்கார் இப்போது அந்த அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கம் செய்கின்ற கொள்முதல் வியாபாரத்தால் இந்தத் தொகையைச் சரிக்கட்டி விட முடியும் என்று முதலமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே நில வரி ரத்து என்பது தேர்தலுக்காக விவசாய மக்களுக்குக் கொடுக்கப்படுகிற மயக்க மருந்து; தேர்தல் வரை மயங்கிக் கிடக்கட்டும், எப்படியாவது விவசாய மக்களுடைய ஓட்டை வாங்கி விட்டால் போதும் என்ற அளவிலேதான் கனம் முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னும் கூட காலம் இருக்கிறது, இந்தச் சட்டசபையை டிசம்பர் மாதத்திலோ, ஜனவரி முதல் வாரத்திலோ கூட்டி இதற்கான சட்டத்தை நிறைவேற்றலாம். அப்படிச் செய்தால் நான் உண்மையிலேயே கனம் முதலமைச்சர் அவர்களை மனமாரப் பாராட்டுவேன்.

அரசாங்கம் வியாபாரம் செய்வது என்பது தரைதட்டிய கப்பல் மாதிரி. அரசாங்கம் செய்கின்ற தொழில்கள் அவ்வளவிலும் நஷ்டந்தான் ஏற்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, 40,000 ரூபாயை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார் என்று பதில் சொன்னார்கள்.

அவர் எங்கும் ஓடவில்லை, சங்கக் கட்டடத்திலேயேதான் ஒளிந்து கொண்டிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. அரசாங்கம் வியாபாரம் செய்வது என்பது நடக்காத காரியம். அரசாங்கம் வியாபாரம் செய்வதைப் பற்றித் தினமணி எடிடோரியலில் எழுதியிருக்கின்ற ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். "சாதாரண வியாபாரி 100 லட்சம் ரூபாய்க்கு வாங்கி 105 லட்சம் ரூபாய்க்கு விற்றால் இரண்டு லட்சம் அல்லது மூன்று லட்சம் ரூபாய் லாபம் ஏற்படும். ஆனால் அரசாங்கம் 100 லட்சம் ரூபாய்க்கு வாங்கி 105 லட்சத்திற்கு விற்கும்போது அதற்கான செலவே 7 லட்சம் அளவுக்கு ஆகி நஷ்டம் ஏற்படும்" என்று தினமணி எடிடோரியலிலே எழுதப்பட்டிருக்கிறது. கோதாவரி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடி தலைவர் கூறியிருப்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உணவுக் கார்ப்பரேஷனால் விற்கப்படுகிற ஒரு பண்டத்திற்கு 83 ரூபாய் என்றால், கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்கப்பட்டால் அதன் விலை 67 ரூபாய் என்ற முறையில் வேறுபாடு இருக்கிறது. நஷ்டத்தைச் சரிகட்ட வியாபாரம் செய்ய இருக்கிறோம் என்ற கொள்கையைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த இரண்டாவது துணைமானியக் கோரிக்கை மீது என் கருத்துக்களை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இதில் பெரும் பகுதி விவசாய உற்பத்திக்காகவும், நெருங்கிய தொடர்புள்ள கூட்டுறவிற்கும், நீர்ப்பாசனத்திற்காகவும், வேளாண்மைக்காகவும் என்று தலைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாலைந்து பிரிவுகளாக இருந்தாலும் இன்றுள்ள நிலையையொட்டி நான் விவசாயத்தை மட்டும், அதிலும் குறிப்பாக சிறிய நீர்ப்பாசனத்தை மட்டும் சொல்லிவிட்டு முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன். நேரமும் அதிகமாக இல்லை. எனக்கு முன் பேசிய திண்டிவனம் தொகுதி அங்கத்தினர் அவர்கள் திண்டிவனத்தில் இன்றைய நிலைபற்றிக் குறிப்பிட்டார்கள். சங்கராபரணி ஆற்றின் ஆபத்தால், குறிப்பாக வீடூர் நீர்த்தேக்கத்தின் உடைப்பின் ஆபத்தால் பல கிராமங்கள் அடிபட்டுவிட்டன. 11-00 a.m.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அடி கிராமங்களின் பெயரைப் பத்திரிகைகளில் போடவில்லை. இரண்டு கிராமங்களைக் காணோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவை எந்த கிராமங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. நான்கு கிராமங்களைப்பற்றிச் சொன்னார்கள். மேட்டிலுள்ள கிராமங்களுக்கே அந்த நிலை என்றால் கீழே பள்ளத்திலுள்ள சிறுவை, ஐவேலி, பெரம்பூர், எனையாண்டிப்பட்டு போன்ற கிராமங்கள் என்னவாயின என்று தெரியவில்லை. வீடூருக்கு அமைச்சர் அவர்கள் போனார்கள். அந்தப் பகுதி முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தாரா என்று தெரியவில்லை. அமைச்சர்களுக்கு கார் இருக்கிறது. போய் வந்துவிடலாம். ஆனால் என்னைப் போல் உள்ள பரம ஏழைகளாக உள்ளவர்கள் எப்படிப் போய்

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [7th November 1966

வருவது? மக்கள் என்ன கதியில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. உண்மையில் நேற்று என்னிடம் பத்து ரூபாய் இருந்திருந்தால் நானும் போய் வந்திருப்பேன். அதற்குக் கூட வழியில்லாத நிலைமையில் என்னால் போக முடியவில்லை. விளம்பர இலாகா அமைச்சர் அவர்கள் கூட மரக்காணம் பகுதிக்குச் சென்றதாகக் கேள்விப்பட்டேன். உண்மையில் ஜனநாயகம் நிலவ வேண்டுமென்றால், நல்ல அரசியல் என்றால் என் பகுதிக்குப் போகிறவர் அரசாங்கச் செலவில் போகிறார். கண்ணியமாக, நாணயமாக என்னையும் கூப்பிட்டிருக்கலாம். உனக்கு வசதியிருக்கிறதா, இல்லையாப்பா, என்னுடன் வந்தால் பார்த்து விட்டு வரலாம் என்று சொல்லியிருப்பார்கள் என்று நினைத்தேன். இன்றுதான் தகவல் கிடைத்தது, அவர்கள் போய் வந்ததாக.

கனம் திரு. கோ. பூவராகன்: என்னுடன் வருகிறேன் என்று யார் யார் எல்லாம் ஃபோன் செய்தார்களோ அவர்களை அழைத்துச் சென்றேன். கார் கொள்ளுகிற வரைதான் அழைத்துச் செல்லலாம். நீங்கள் வருவதாக இருந்திருந்தால் வந்திருக்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அமைச்சர் அவர்கள் மரக்காணத்திற்குப் போவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உணவு அமைச்சர் அவர்கள் வீடூருக்குப் போவதாகச் சொன்னார்கள், போனார்கள், வந்தார்கள். ஆனால் விளம்பர இலாகா அமைச்சர் அவர்கள் போவதாகத் தெரிந்திருந்தால் நான் கேட்டிருப்பேன், வந்தும் இருப்பேன். அமைச்சர் போய் இடத்தைப் பார்த்துவிட்டு வந்தால் மட்டும் போதாது, வசதி செய்து தர வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்யவேண்டும். சென்ற 30-4-1966-ல் அடித்த புயலினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இன்னும் நிலைபடவில்லை. அவர்கள் திருப்திகரமான வாழ்க்கையை இன்னும் துவக்கவில்லை. அந்த நிலையில் 3-11-1966-ல் அடித்த காற்று விவசாயத்தையே பாதித்திருக்கிறது. பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைச் சரிக்கட்டுகிற அளவிற்கு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டியது. எங்களால் முடிந்த வரையில் செய்வோம். ஆனால் அப்படிச் செய்யமுடியாத அளவில் அரசாங்கம் செய்ய வேண்டும், செய்யவேண்டும் என்று கேட்கிற அளவில் அந்த வற்புறுத்தலை மட்டும்தான் எங்களால் செய்யமுடிகிறதே தவிர நேரடியாக நாங்கள் எதுவும் செய்ய வழியில்லாததால் தயவு செய்து வேண்டியதை மறக்காமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடூர் நீர்த்தேக்கத்தைப் பொறுத்தளவில் 1962 ஜூலை 1-ம் தேதி நீர் வரியை அமல் நடத்தினார்கள். இந்த ஆண்டு எப்ரல் 27-ம் தேதி அதை நிறுத்துவதாக திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இடைக்காலத்தில் பாக்கியுள்ள எல்லாத் தீர்வையையும் வசூல் செய்துவிடவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களாம். வீடூரில் தண்ணீர் இல்லை, அதை நம்பியிருக்கும் விவசாயிகள் கதி என்ன? அதோடு தொடர்ந்து இப்படி

7th November 1966] *[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]*

தீர்வையையும் வசூல் செய்வது என்றால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைத் தயவுசெய்து பரிசீலிக்கவேண்டும். மரக்காணத்திலிருந்து கோட்டக்குப்பம் வரை மீனவர்களின் கதி என்னவாயிற்று என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தால் நலமாகயிருக்கும், அப்படிச் சொல்லிவிட்டால் எனக்கு ஆறுதலாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். காரணம், பல நல்ல அம்சங்களை இது பெற்றதாக இருக்கிறது. புதுப்பணிகளுக்காக செவ்வனே வேலை நடக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு பல மானியங்களைக் கோரியிருக்கிறார்கள். இன்னும் சில கஷ்டங்களை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பின்னாலாவது அவற்றையெல்லாம் திருத்திக் கொள்வதற்கும் இப்போது துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலும் ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். பொது விற்பனை வரிக்காக துணை மானியம் கோரியிருக்கிறார்கள். அது பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். வட சென்னை வியாபாரிகள் சங்கம் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அச்சமடைந்திருக்கிறார்கள். இதற்கு முன்னே பொது விற்பனை வரிச்சட்டத்தில் 10.000 ரூபாய்க்குக் குறைவாக டேர்ன் ஓவர் செய்கிறவர்களுக்கு இந்தச் சட்டம் அமல் படுத்தாது என்று கூறப்பட்டிருக்கிறது. இன்று விலைவாசி ஏற்றத்தால்—1939-ம் ஆண்டு சட்டத்தில் 10,000 ரூபாய்க்குக் குறைவாக டேர்ன் ஓவர் இருந்தால் அவர்களுக்கு விலக்குண்டு என்றிருக்கிறது—இன்று ஒவ்வொரு பண்டத்தின் விலையும் எட்டு, பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது. ஒரு சாதாரண சிறிய வியாபாரம் செய்தாலும் கூட டேர்ன் ஓவர் ஒரு லட்சத்தை எட்டிவிடுகிறது. விலையேற்றத்தின் காரணமாக இன்று சிறிய, சிறிய வியாபாரிகள் வரி விலக்கு கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இதை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள், விலையேற்றம் பற்றி கூட புள்ளிவிவரம் கொடுத்திருந்தார்கள். அதைத் நான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் படித்தார்கள் என்று நினைக்கிறேன். முன்பு பத்தாயிரம் என்றிருந்தது, இன்று பத்து மடங்கிற்கு விலைகள் அதிகரித்திருப்பதால் இந்த விதிவிலக்கின் உச்சவரம்பை அதிகரிக்க முன்வந்தால் அரசாங்கத்தினிடம் சிறு வியாபாரிகள் பெரிய நன்றிக் கடனோடு இருப்பார்கள் என்று கூறி இதை உடனடியாகக் கவனிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸுக்கு துணைமானியக் கோரிக்கை கோரப்பட்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் காரசாரமாக போலீஸ் படையை வைத்து தேர்தலை நடத்த வேண்டும் என்ற மாதிரி பேசினார்கள். போலீஸ் படையை நம்பி இந்த அரசாங்கத்தை வைத்து நடத்தவேண்டுமென்ற எண்ணம் இருந்தால் அங்கத்தினர் அவர்களுக்கு இப்படி தீவிரமாகப் பேச இடம் இருந்திருக்கமுடியாது. இதிலிருந்து எவ்வளவு ஜன

நாயக உணர்ச்சியோடு நாம் வாழ்ந்து வருகிறோம் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. தவறுகள் இருந்தால் அவற்றை எடுத்துக் காட்டி இது சரியல்ல, இது தவறு, இதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லலாமே தவிர, போலீஸ் ஒரு கட்சிக்குப் பயன்படுகிறது என்ற நிலையில் பேசுவது சரியல்ல. என் தொகுதி யில், கொருக்குப்பேட்டையில் ரெயில்வே பாதைக்கு மேற்குப் புறத்தில் பல ஸ்லம்ஸ் ஒன்றாக அமைந்து இருக்கின்றன. டாக்டர் அம்பேத்கார் நகர், மீனும்பாள் சிவராஜ் நகர், பாரதி நகர் போன்ற இடங்கள் இருக்கின்றன. அவ்விடங்களில் ஒரு சிறிய கலகம் அல்லது குற்றம் நடந்தால் எல்லாம் அடங்கிஒடுங்கி, வந்தவன் தப்பித்துப் போன பின்னர்தான் போலீஸ் வரவேண்டிய நிலை இருக் கிறது. காரணம், ரெயில்வே கேட்டை மூடி விட்டால் 1½ மணி நேரம் காத்திருக்கவேண்டியதுதான். ஆகவே, அங்கு நீதி நிர்வாகம் ஒழுங்காக நடத்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதனால் ரெயில்வே பாதைக்கு மேற்குப்புறத்தில் இந்தமாதிரி ஸ்லம்ஸ் இருக்கும் இடத்தில்—குறைந்தது 30,000 பேர்கள் இருப் பார்கள்—அங்குள்ளவர்களுக்கு தக்க பாதுகாப்பு தரவேண்டு மென்றால் அங்கு ஒரு அவுட் போஸ்ட் திறந்தால் பயத்திலாவது ஒழுங்கு நிலைநிறுத்தப்படும். அதற்கும் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சங்கங்கள் மூலம் விலையைக் கட்டுப் படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் பல கடைகள் திறக்கப் பட்டிருக்கின்றன. சென்னையில் பத்து பெண்கள் கூட்டுறவு சங்கங் கள் திறந்திருக்கிறார்கள், அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மேஜை, நாற்காலிகள் வாங்க, கடைகளுக்கு வாடகை கொடுக்க என்று துணை மானியம் கேட்கப்பட்டிருக்கிறது. பம்பாய் நகரில் எப்படியிருக்கிறது என்றால், பத்து கூட்டுறவு சங்கங்கள் என்று ஆங்காங்கு எடுத்து, அவற்றிற்கு வாடகை கொடுத்து, மேஜை நாற்காலிகளுக்கு என்று செலவு செய்து, அதற்கு ஒரு சப் ரெஜிஸ்ட்ரார் போட்டு இப்படியெல்லாம் செய் யாமல் மொத்தமாக ஒரு பெரிய கூட்டுறவு சங்கக் கடையிலிருந்து —தென் சென்னைக்கு டி.யூ.சி.எஸ்., வட சென்னைக்கு பார்க் டவுன் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி என்றிருக்கிறது—சூப்பர் மார்க் கெட்டில் பாக்கெட்டில் போட்டுக் கொடுப்பது போன்று அளவோடு நிறுத்து எடுத்து அந்த அந்தப் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட கிழமையில் வான் மூலம் எடுக்துச் செல்கிறார்கள். பொதுவான இடங்கள் எவ்வளவோ இருக்கின்றன. கார்ப்பரேஷன் பள்ளிகள் இருக்கின்றன, அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் இருக்கின்றன. கிடைக்கவில்லை என்றால் மாதர் சங்கங்கள் கூட உதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில், கிராமப்புறங்களில் வாரச் சந்தைகளில் வந்து கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிச் செல்வதுபோல், கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளிலிருந்து வான்களை கொண்டு வந்து நிறுத்தி அதில் மக்களுக்கு அன்றாடம் தேவையான பொருட் களை எல்லாம் வைத்திருந்தால், மக்கள் வந்து வாங்கிக் கொண்டு போவார்கள். இதற்கென்று ஒரு சேல்ஸ்மன் மட்டும் போட்டால்

7th November 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

போதும், குறிப்பிட்ட நேரத்தில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை என்று நிர்ணயித்து விட்டால் அந்த நேரத்தில் மக்கள் வந்து தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிச்செல்வார்கள். இதில பணப்பொறுப்பை எல்லாம் பார்த்துக் கொள்வதற்கும், வேறு வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பதற்கும் மாதர் சங்கங்கள் தயாராக இருக்கின்றன. சாமான்கள் வாங்க வருகின்ற ஆட்களை ஒழுங்காக நறக வைத்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செயது கொடுப்பதற்கு மாதர் சங்கங்கள் தயாராக இருக்கின்றன; ஆகவே, கோவாபபரேட்டிவ் டிப்பார்ட்மெண்டிலிருந்து இரண்டு சேல்ஸ்மென், இரண்டு டெலிவரி வான் இவைகளை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும், இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புயல் நிவாரணம். சமீபத்தில் எற்பட்ட புயல் காரணமாக பல வீடுகள், குடிசைகள் தெப்பம் போல் மிதந்து கொண்டிருக்கின்றன. ஆண்டுதோறும் இவ்வாறு நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு நேரத்திலும் நாம் 40 ரூபாய் வீடு கட்டுவதற்கு என்று கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்படி கொடுத்து நான்கு மாதங்கள் ஆனவுடன், பெருங்காற்று வந்தோ அல்லது வெள்ளபபெருக்கினாலோ அல்லது தீவிபத்து எற்படுவதினாலோ திரும்பவும் 40 ரூபாய் கொடுக்கிறோம். இப்படி வருடந்தோறும் இரண்டு மூன்று தடவைகள் 40, 40 ரூபாய் என்று ஆண்டு ஒன்றுக்கு 120 ரூபாய் வரை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். என்றைக்குத்தான் இந்தக் கவலை தீரும் என்று தெரியவில்லை. சர்க்காரும், கார்ப்பரேஷனும் இந்தப் பணத்தை கொடுக்க முன் வருகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஹவுசிங் போர்டினிடம் ஒப்படைத்தோம். இன்றுவரைக்கும் எந்தவிதமான உருப்படியான வேலையும் நடக்கவில்லை. ஏதோ வியாசர்பாடியில் மட்டும் சில கட்டடங்களை கட்டி யிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நேரத்திலேயே ஐம்பது சேரிகளை குறிப்பிட்டு எழுதிக் கொடுத்து, ஆண்டு ஒன்றுக்கு பதது சேரிகள் வீதம் ஐந்து ஆண்டுகளில் ஐம்பது சேரிகளுக்கும் இந்த வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று ஹவுஸிங் போர்டுக்கு தெரிவித்தேன். இதில் ஒரு சேரியில்கூட வேலை தொடங்கவில்லை. ஹவுஸிங் போர்டை கேட்டால் நாங்கள் என்ன செய்வது? அரசாங்கத்தினிடமிருந்து பணம் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் 90 ஆயிரம் ரூபாய் செலவில் ஃப்ளாட்டை கட்டி வைத்துவிட்டு விலைக்கு வேண்டுமா, வேண்டுமா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொண்ணூறாயிரம் ரூபாயில் நகரத்தில் நல்ல பங்களாவாக கட்டிக் கொண்டு வாழலாம் என்கின்ற நிலைமை இருக்கும்போது, 90 ஆயிரம் ரூபாய்க்கு ஃப்ளாட்டை கட்டி வைத்துக்கொண்டு விலைக்கு வாங்குங்கள், விலைக்கு வாங்குங்கள் என்று ஏலம் போடவேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதை விட்டுவிட்டு, சேரிகளுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படக் கூடிய வகையில் கட்ட வசதி செய்து கொடுத்தால் பேருதவியாக

[திருமதி டி. என். அனந்தநாயகி] [7th November 1966

இருக்கும். இந்த வசதி இல்லாததின் காரணமாக ஆண்டுதோறும் ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கவனித்து சேரிகளுக்கு கட்டட வசதி செய்து கொடுப்பதில் உடனடி கவனம் செலுத்துவது சாலச்சிறந்ததாக இருக்கும்.

குறிப்பாக 'கோஸ்டல்' ஏரியாவில் கடலில் கொந்தளிப்பு ஏற்படுபோது, கடற்கரையில் வாழும் மீனவர்களுக்கும் கொந்தளிப்பு ஏற்படுகிறது. திருவொற்றியூர், எண்ணூர் போன்ற இடங்களில் எல்லாம் இப்போது மீனவர்களுக்கு குடியிருப்பதற்கே இடமில்லை. அந்த இடங்கள் எல்லாம் இன்டஸ்ட்ரியல் ஏரியாவாக மாற்றப்பட்டுக்கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட மீனவர்களுக்கு கரையோரப் பகுதிகளில் நல்ல கட்டடங்கள் கட்டிக்கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். தஞ்சாவூர் போன்ற இடங்களில் சமூக பொதுக்கூட்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அதேபோன்று இங்கும் ஏற்படுத்திக்கொடுத்தால் வெள்ளம் வருகின்ற காலத்தில் அந்த பொது இடத்திலாவது மக்கள் புகுந்துகொள்ளலாம், தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் பிள்ளையார் கோவிலில் போய் புகுந்து கொண்டதுமாதிரி. ஆகவே புயல் நிவாரண வேலைகளை எல்லாம் துரிதமாகச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மான்யக்கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது இந்தத் துணை மான்யக் கோரிக்கையில், பாசனங்களுக்காக காட்டப்பட்டிருக்கும் செலவினங்களில், புதிய பணிகள் என்ற தலைப்பில் 18 வேலைகளைச் சேர்த்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான வேலையும் சேர்க்கப்படவில்லை. இதிலிருந்து பாசன வேலைகள் எதுவும் அங்கு இல்லையா என்று சொன்னால், வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஒவ்வொருமுறையும் இங்கு பேசுகின்ற நேரத்தில் எல்லாம் பாசனத் திட்டங்களைப்பற்றி சொல்லியிருக்கிறோம். திருமணிமுத்தாறு திட்டத்தைப்பற்றி ஒவ்வொரு தடவையும் சொல்லியிருக்கிறேன். கொல்லி மலை அடிவாரத்தில் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அங்குள்ள குட்டைகளில் தண்ணீரைத் தேக்கினால் பாசனத்திற்குப் பயன்படும் என்று சொல்லியிருக்கிறேன். அதுவும் இதில் சேர்க்கபடவில்லை. தண்ணீரை திசை திருப்பி விடுவதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். கொல்லி மலை அடிவாரத்தில் பாண்டியாற்றிலிருந்து புதுக்குளத்திற்கு இந்தமுறையில் தண்ணீரை விட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அதையும் இதில் சேர்க்கவில்லை. இந்தத் திட்டங்களை எல்லாம் பார்க்கும்போது, எல்லா மாவட்டங்களிலுள்ள வேலைகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சேலம் மாவட்டத்திலுள்ள எந்த வேலையையும் இதில் சேர்த்துக்கொள்ளவில்லை. சேலம் மாவட்டத்திலுள்ள மக்கள் என்ன தவறு செய்து விட்டார்கள் என்று தெரியவில்லை. இதைப்பார்க்கும்போது என்ன தோன்றுகிறது என்றால், சேலத்தைத் தவிர மற்ற மாவட்டங்களுக்கெல்லாம் மந்திரிகள் இருக்கிறார்கள். ஆதலால் அந்தந்த மாவட்டத்திற்குச் செல்லும்

7th November 1966] [திரு. வி. ஆர். பெரியண்ணன்]

போது, அவர்கள் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்தந்த மாட்டங்களிலுள்ள வேலைகளை எல்லாம் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் மட்டும் அல்ல, ஆளும் கட்சியிலுள்ள அங்கத்தினர்களும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திலிருந்து ஆளும் கட்சியிலும் அங்கத்தினர்களாக பல விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நிலைமை நன்றாகத் தெரியும். திருமணிமுத்தாறு திட்டத்தைப்பற்றி ஆரம்பத்தில் காங்கிரஸ்காரர்கள்தான் கேட்டார்கள். இப்போது அந்தத் திட்டம் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவர்களுடைய கட்சிக் கூட்டத்தில் இதைச்சேர்க்கவேண்டும் என்று சொல்லவேண்டும், அப்படிச் சொன்னால்தான் அவர்களுக்கு 1967 தேர்தலில் வருவதற்கு நன்றாக இருக்கும். எங்களைப் பொறுத்தவரையில் இப்போது இல்லாவிட்டாலும், இன்னும் 2, 3 மாதங்களில் நாங்கள் ஆட்சிக்கு வரத்தான் போகிறோம். அப்போது இதை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்ற மகிழ்ச்சி எனக்கிருக்கிறது. ஆளும் கட்சி உறுப்பினர்களுடைய நன்மைக்காகச் சொல்லுகிறேன், உங்களுடைய கட்சிக் கூட்டத்தில் இதைக்கொண்டு வந்து சீக்கிரமாக நிறைவேற்றுவிட்டால் உங்களுக்கு விவசாயிகள் மத்தியில் நடமாட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்முதலைப்பற்றிச் சொல்கின்ற நேரத்தில், விவசாயிகள் போதிய அளவுக்கு நெல்லைத் தரவில்லை, அவர்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலைதான் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறது அரசாங்கம். அவர்கள் அரசாங்கத்திற்கு கொடுக்காமல் கள்ளமார்க்கெட்டில் ஏன் கொடுக்கிறார்கள் என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கம் வாங்குகிற விலை மூட்டை ஒன்றுக்கு 30 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால், நெல்லை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படுகிற பிண்ணாக்கு 45 ரூபாய் 50 ரூபாய் என்று நாமக்கல் பகுதியில் விற்கப்படுகிறது. அதனால்தான் சற்று கூடுதல் விலை கிடைக்காதா என்று பார்த்து கள்ள மார்க்கெட்டில் நெல்லைக் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் அரசாங்க கொள்முதலில் விருப்பமும் இல்லாமல் இருக்கிறது. இருக்கிற நெல்லையும் குறைந்த விலையில் கொடுத்துவிட்டால் அவர்கள் சட்டியை எடுத்துக்கொண்டு நிற்க வேண்டியதுதான், அல்லது தூக்குப்பையையும் எடுத்துக்கொண்டு க்யூவில் நிற்கவேண்டியதுதான். ஆகவே கொள்முதல் செய்கின்ற விஷயத்தில் நீங்கள் விவசாயிகளை பகைத்துக்கொள்ளப் பார்க்கிறீர்கள். இதன் காரணமாகத்தான் ஆங்காங்கே சில இடங்களில் அதிகாரிகள் தாக்கப்படுகிறார்கள். உண்மையிலேயே அதிகாரிகளைத் தாக்கவேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் இருப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எந்தக் கட்சிக்காரர்களுக்கும் வராது. நிலைமை அவ்வாறு இருக்கிறது. விவசாயத்தில் முன்னால் பெண்களுக்கு கூலி முக்கால் ரூபாயாக இருந்தது இன்றையதினம் இரண்டு ரூபாய் இரண்டரை ரூபாய் என்று இருக்கிறது. சர்க்கார் விலையில் நெல்லை கொடுத்தால் இப்படிப்பட்ட செலவை எங்கிருந்து செய்ய முடியும்? அதனால்தான் அவர்களுக்கு ஆத்திரம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அசம்பாவிதங்களும் நடைபெறுகின்றன. ஆகவே விவசாயி

களிடமிருந்து கொள்முதல் செய்கின்ற விஷயத்தில் விவசாயி களுக்கு வேண்டிய மற்ற பொருட்களினுடைய விலைகளையும் கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் உப தலைவர் அவர் களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் துணை மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய மாவட்டத் தைக் குறித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். திருநெல்வேலியில் மருத்துவக் கல்லூரி கட்டடம் கட்டப்பட்டு சிறப்புடன் ஆரம்ப விழா நடத்தினார்கள். அங்கு இப்போது 25 பெண்களும், 50 ஆண்களும் படிக்கிறார்கள். அங்குள்ள மாணவர் களில் 60 சத விகிதம் முதல் வகுப்பில் (ஃபர்ஸ்ட் க்ளாஸ்) மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று மெடிக்கல் இலாகா டைரக்டர் அவர்கள் பெருமையுடன் எடுத்துச் சொன்னார்கள். அங்கு பெண் களுக்காக கட்டப்பட்ட ஹாஸ்டலை இப்போது ஆண்டுகளுக்காக உபயோகித்து வருகிறார்கள். அங்கே படிக்கின்ற 25 பெண்களும் பாளையங்கோட்டையிலுள்ள சாராடெக்கர் கல்லூரியில் சென்று தங்கியிருக்கிறார்கள். அங்கே பணம் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது, பஸ் செலவுக்கு 15, 20 ரூபாய் ஆகிறது. இது போன்று அதிகமாகச் செலவானால் பெற்றோர்கள் தங்கள் பெண்களை மருத்துவப்படிப்பிற்கு அனுப்புவதற்கு தயங்குவார்கள். அப்படிப் பட்ட கஷ்டமான நிலைமை வந்து விடக்கூடாது. ஆகவே, பாளையங் கோட்டையில் இருக்கின்ற மருத்துவக் கல்லூரியில் தனியாக பெண் களுக்கு என்று ஹாஸ்டலை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஆசிரியர் பயிற்சிப்பள்ளி பாளையங்கோட்டை யில் இருக்கிறது. அதில் 40 பெண்கள் இருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இருக்கின்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் எல்லாம் எய்டட் ஸ்கூல்களாகவே இருக் கின்றன. அரசாங்கத்தின் சார்பில் இருக்கக்கூடிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றே ஒன்று தான். இதில் 40 பேர்கள் இருக் கிறார்கள். ஆனால் 80 பேர்கள்வரை சேர்க்கக்கூடிய அளவுக்கு வசதியிருக்கிறது. ஆகவே இன்னும் அதிகமான அளவில் பெண்களை சேர்த்துக்கொள்வதற்கு வேண்டிய உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரை, மணிமுத்தாறு திட்டத்தின் மூலமாக பல இடங்களில் பாசனவசதி கிடைத்துவந்தது. கனம் செல்வராஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இந்த இடங்களுக்கு 20 ரேட் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. இதை இரண்டு ரேட் என்ற அளவில் போடவேண்டும் என்று அப்பீல் போடப்பட் டிருக்கிறது. இப்போது அதை ஆர்.டி.ஓ. அவர்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். கனம் அமைச்சரவர்கள் இதை நன்றாகப் பரிசீலித்து இந்த ரேட்டை குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

7th November 1966] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

இன்னென்று, ஆருவது படிவத்திற்குரிய தமிழ் பாடப் புத்தகத்தில் ஆசாரக்கோவை உள்ள நூறு பாடல்களில் ஒரு பாட்டை எடுத்துப் போட்டிருக்கிறார்கள். அதிலே ஆட்சேபத்திற்குரிய வார்த்தையான 'உபாத்தியான்' என்ற வார்த்தை இருக்கிறது. ஆசிரியர்கள் கில்டிலே தீர்மானம் போட்டு அந்தப் பாடலை எடுத்து விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே மாணவர்கள் மத்தியில் நல்ல பெயர் வாங்கவேண்டுமே என்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆசிரியர்கள். உபாத்தியான் என்ற பெயர் மிகவும் இளப்பமாக இருக்கிறது. சும்மா போகிறதே 'வாத்தியான் போருன்', 'வாத்திச்சி போருள்' என்று மாணவர்கள் சொல்லும்போது, 'ஆசாரக்கோவையிலேயே சொல்லியிருக்கிறது. நாங்கள் சொன்னல் என்ன?' என்று மாணவர்கள் அந்த மாதிரிச் சொல்ல அரம்பித்து விடுவார்கள் என்று ஆசிரியர்கள் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அதிகாரிகள் இதைக் கவனிக்காமல் இருந்திருக்கலாம். ஆசாரக் கோவையில் நூறு பாடல்கள் இருக்கின்றன. பாடப்புத்தகத்தில் 16-வது பக்கத்தில் முதல் பாட்டாக இருக்கிறது. ஆகவே, அந்தச் செய்யுளை எடுத்துவிட்டு வேறு செய்யுளைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து ஒரு மிக முக்கியமான விஷயம் விவசாயிகளுக்கு நில வரியை எடுத்துச் செய்கிறதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். உற்பத்தி பெருகி, தொழில் பெருகி, தொழில் வர்த்தகம் பெருகி, இன்றைக்கு விற்பனை வரி கூட 50 கோடி ரூபாயை எட்டிப் பிடிக்கலாம் என்று ஒரு அதிகாரி சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது பேசும்போது ஏதோ செழிப்பு இல்லாதமாதிரி பேசினார்கள் இன்றைக்கு துணிக்கடைக்குப் போனல் நான்கு சேலைகள் பார்த்தோம் என்று இல்லை; எங்கு பார்த்தாலும் க்யூ. துணிக் கடை மட்டுமா? பஸ் ஸ்டாண்டில் க்யூ; 10 பைசா கொடுத்து கவர் வாங்க போஸ்ட் ஆஃபீஸுக்கு போனல் க்யூ; காய்கறிக் கடையிலிருந்து கசாப்புக் கடை வரையில் எங்கு போனலும் க்யூ. வாங்கும் சக்தியும், பணப் புழக்கமும் இல்லாமலா இருக்கிறது. செழிப்பும் நல்ல கொழிப்பும் ஏற்படுத்தியிருக்கும் போது விவசாயப் பொருள்கள் நல்ல முறையில் கிடைக்க மாவட்டந்தோறும் கூட்டுறவுப் பண்டகசாலைகள். "இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து அதனை அவன் கண் விடல்" என்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க, இதில் பெண்களுக்கு பொறுப்பு இருப்பதை எண்ணி, கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை சில இடங்களில் பெண்களிடம் விட்டிருப்பது பாராட்டத் தகுந்தது. அதனால் பெண்கள் சமுதாயம் மகிழ்ந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சூப்பர் மார்க்கெட் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்று சொல்கிறமாதிரி, இதெல்லாம் 1967-க்காக இருக்குமோ என்று 'சூப்பர் மார்க்கெட், 67-ஐ அழைக்குமா' என்று போஸ்டர் போட்டிருப்பதைப் பார்த்தேன். காங்கிரஸ் அரசாங்கம் எத்தனையோ களம் பார்த்திருக்கிறது. மூன்று தடவைகள் பார்த்திருக்கிறது. நான்காவது

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [7th November 1966

தடவை பார்க்கப் போகிறது, வெற்றிக் கொடி நாட்டப் போகிறது. காங்கிரஸ் அரசாங்கம் எதைக் கண்டும் களைத்து விடாது, கலைந்து விடாது, கலங்கி விடாது என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்ளு கிறேன்.

*திரு. இரா. நாராயணன்: கனம் துணைத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டில் துணை நிதிநிலை அறிக்கையின் மீது நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்திலே விவசாயிகளுக்கு நமது அமைச்சர்கள் அநேக சலுகைகள் செய்திருப்பதாகச் சட்ட மன்றத்திலே பல தடவைகள் கூறினார்கள். விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. கொள்முதல் செய் வதிலே அங்கு இருக்கக் கூடிய அதிகாரிகள் கொள்முதல் செய்த பண்டங்களைச் சரிவரச் சேர்ப்பதில்லை. அதுவும் தவிர, மாவட்டத் திற்கு மாவட்டம் நெல் கொண்டுபோகக் கூடாது, அரிசி கொண்டு போகக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் என்னுடைய அரியலூர் பகுதி புன்செய்ப் பகுதி. புன்செய்ப் பகுதியிலே நன்செய் செய்கிறவர்களுக்கு கொள் முதல் செய்வதிலே குறைவு ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டதற்கு, எப்படி இருந்தாலும் நன்செய் நன்செய்தான், கொள் முதல் செய்வதைக் குறைக்க முடியாது என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், மக்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கரா இருந்தாலும் 12 மூட்டை கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார் கள். ஐந்து சென்ட் சாகுபடி செய்தாலும் கொடுக்கவேண்டு மென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் முக்கிய மாக இந்தச் சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டும். அதாவது இரண்டு எக்கர் பயிர் செய்கிறவர்களுக்கு புன்செய்யில் நன்செய் யாக இருந்தாலும், அயன் நன்செய்யாக இருந்தாலும் கொள் முதலைக் கொஞ்சம் தளர்த்திக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. நிலவரியை ரத்து செய்ததைக் கூட சந்தேகமில்லாமல் நம்பினாலும் கூட, நிலவரி சர்சார்ஜை 25 சத வீதம் உயர்த்தியபோது எங்கள் சார்பில் எதிர்த்துப் பேசினோம்; அப்போது அமைச்சர் அவர்கள் அதைத் தள்ளுபடி செய்ய முடியாது என்று பேசினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நிலவரியை ரத்து செய்கிறோம் என்று சொல்கிறார்கள். எல்லா வரியையுமே ரத்து செய்தால் நலம் என்று சொல்ல ஆசைப்படு கிறேன். பழங்காலத்தில் ராஜாக்கள் 6-ல் ஒரு பங்கு தீர்வை வாங்கினார்கள் என்று காணப்படுகிறது. அந்த முறையிலாவது விவசாய மக்கள் இத்தனையில் ஒரு பங்கு வரி கொடுக்க வேண்டு மென்று சொன்னாலும் கூட எங்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்காது.

எங்கள் பக்கத்தில் நெல் மில் கிடையாது. ஒரு வீட்டில் திருமணம், ஒரு வீட்டில் சாவு. நெல் அறைக்க திட்டக்குடிக்கு வந்து அறைத்துக்கொண்டு ஆற்றைக் கடந்து போகும் சமயத்தில்

7th November 1966] *[திரு. இரா. நாராயணன்]*

அங்கு ஒரு டி.எஸ்.ஓ. வந்து அவரை அப்படியே அழைத்துக் கொண்டு போய் (தவுடு) உமியை மாத்திரம் எடுத்துவிட்டு அரிசியையும் சர்க்காரிலே ஒப்படைத்து கேஸும் எடுக்கப்பட்டிருக்கிறது. நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ளுவது, எங்கள் பகுதியில் நெல் மில் கிடையாது. ஆகையால் ஏழைக் குடியானவர்கள் ஒரு மூட்டை, இரண்டு மூட்டை அறைக்க பக்கத்துப் பகுதிக்கு எடுத்துச் செல்லவேண்டிய நிமித்தம் ஏற்படுகிறது. கல்யாணத்திற்கு நெல் அறைக்கப் போனவர் ஜெயிலில் இருக்கிறார்; அவர் இல்லாமலேயே கலியாணம் எப்படி நடந்தேறப் போகிறது? கருமாதிக்கு நெல் அறைக்கப் போனவர் ஜெயிலில் இருக்கிறார்; அவர் இல்லாமலேயே கருமாதி நடக்கிறது. ஒரு ஜில்லாவிலிருந்து ஒரு ஜில்லா போகக் கூடாது என்று சொன்னாலும் ஒரு திட்டம் வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுவும் தவிர, தொழுதூரில் ஒரு செக்போஸ்ட் இருக்கிறது. அங்கு பல தவறுகள் நடக்கின்றன. நம் ஸ்டேட் பஸ்ஸில் திருச்சிக்குப் போகும்போது ஸ்டேட் பஸ்ஸை மாத்திரம் நிறுத்தி அரிசி இருக்கிறதா என்று செக்போஸ்ட்காரர்கள் சோதனை பண்ணினார்கள். அதே இடத்தில் திருச்சிக்கு தேவகி பஸ் என்று ராமு ரெட்டியார் பஸ்ஸும் போகிறது. அந்த பஸ்ஸை சோதனை செய்யவில்லை. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு மாதிரியாகவும், மற்றவர்களுக்கு ஒருமாதிரியாகவும் ஆட்சியில் இருக்கிறவர்கள் நடந்து கொள்ளுவது சரியல்ல என்று எடுத்துக் காட்டுவதற்காகத்தான்.

அதுவும் தவிர வேப்பூர் வட்டாரத்தில் போக்குவரத்து சாதனங்கள் சரியாக இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் வேப்பூர் பஞ்சாயத்து யூனியனில் திறப்பு விழா செய்வதற்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் ரோட்டைச் சீர்படுத்த அங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்கு பிரந்தா டிரான்ஸ்போர்ட் முதலாளிக்கு டெம்பரரி பஸ் ரூட் ஒரு மாதத்திற்குக் கொடுத்தார்கள். ஒரு மாதம் ஆனவுடன் வேறு பஸ் வருவதற்கு காரணம் இல்லை. மறுபடியும் அங்கே இருக்கிற வட்ட காங்கிரஸ்காரர்கள் தங்கள் பஸ் போக அனுமதி வழங்கவேண்டுமென்று வற்புறுத்தி, ஒவ்வொரு பஸ்ஸுக்கும் 10 நாட்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு பஸ் போக்குவரத்து நடந்து வருகிறது. அரசாங்கம் காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு மாதிரியாகவும், மற்ற காங்கிரஸ் அல்லாதவர்களுக்கு ஒருமாதிரியாகவும் நடந்துகொள்ளுகிறது என்று நினைவூட்ட விரும்புகிறேன். அதோடு இப்போது அந்த பஸ் ரூட் டெம்பரரி ஆக இருப்பதை நிரந்தரமாக பிரந்தா டிரான்ஸ்போர்ட்டிக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் என்றால் ஒரு மாதம் வரை கஷ்டப்பட்டு நஷ்டக்தோடு பஸ் ரூட்டை எடுத்து நடத்திய பிறகு வேறு காங்கிரஸ்காரர்களுக்கு டெம்பரரியாக மற்றும் இரண்டு பஸ்கள் ஓட்ட பர்மிட் கொடுக்கப்படுகிறது என்றால் இதற்கு என்ன சொல்லுவது என்று விளங்கவில்லை. அதுவும் தவிர ஆசிரியர்களுக்கெல்லாம் இப்பொழுது ஏதாவது சம்பளம் உயர்த்தப்படும் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்

[திரு. இரா. நாராயணன்] [7th November 1966

கிருர்கள். மத்திய சர்க்கார் இப்பொழுது சமீபத்தில் அவர்களுடைய ஊழியர்களுக்கு பஞ்சப்படியை உயர்த்தினுர்கள். நமது
11-30 a.m. முதல் அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்பொழுது ஆசிரியர்களுக்கு போதுமான சம்பளம், போதுமானபடி இருக்கிறது, அவர்களுக்கு மேலும் உயர்த்திக் கொடுக்க முடியாது என்று சொன்னுர்கள். நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்று நாங்கள் சொன்னபொழுது அவர்கள் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதற்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். ஆகவே, ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய சம்பளத்தையும், படியையும் ஓரளவுக்கு உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ர. ஜீவரத்னம்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள துணை மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு அனுகூலமாக நில வரியை ரத்து செய்ய ஏற்பாடு செய்ததை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அதேபோன்று தியாகிகளுக்கும் மான்யங்கள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிருர்கள். இது அவர்கள் காலத்தில் செய்த ஒரு சிறந்த சேவையாகும். ஆயிரக்கணக்கான வாலிபர்கள் மனைவி மக்களை இழந்து, தாய் தந்தையரை இழந்து, தேசீயப் போராட்டத்தில் ஆர்வம் கொண்டு சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்ட தியாகிகள் முன்னுல் அவர்களுடைய திரு உருவம் நிற்கும். அவர்கள் மனக்கண் முன்னுல் முதல் அமைச்சர் அவர்களுடைய திரு உருவம் நிற்கும். எவ்வளவோ தியாகம் புரிந்தவர்கள், வீரச் செயல்கள் புரிந்தவர்கள், மனைவி மக்களை இழந்தவர்கள் இவர்களுக்கெல்லாம் மான்யம் வழங்கியிருக்கிருர்கள். நான் இதுபற்றி ஒரு விஷயத்தை மட்டும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வீர வாலிபன் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் இருந்த காலத்தில், அவருடைய மனைவி 'நான் நீண்ட காலமாக உங்களைப் பாராமல் இருக்கிறேன். கூடிய சீக்கிரம் எங்களுடைய இடத்திற்கு நீங்கள் வரவில்லை என்றுல் நான் மறுமணம் செய்துகொள்ள விரும்புகிறேன்' என்று ஒரு கடிதம் எழுதியிருந்ததை நான் பார்த்து கதி கலங்கிய ஒரு காலமும் உண்டு. அப்பேர்ப்பட்ட தியாகிகளுக்கெல்லாம் ஆதர்ச புருஷராக நமது முதலமைச்சர் அவர்கள் விளங்குகிருர்கள். தியாகிகளுக்கு மான்யம் வழங்குவதில், அவர்களுடைய குணப் பண்புக்கு ஏற்றபடி எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட எல்லோருக்குமே அந்த உரிமை உண்டு என்ற பரந்த மனப்பான்மையோடு அவர்கள் அறிவித்திருக்கிருர்கள். அவர்கள் ஒரு விஷயத்தைப் பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிலர் சுதந்திரப் போராட்டத்தில் 15 நாட்கள், ஒரு மாதம் என இம்மாதிரி தண்டனை அடைந்து அல்லது சிறையில் இருந்தவர்கள் இருக்கிருர்கள். அவர்களுடைய விஷயத்தையும் தாராளமான மனதுடன் பரிசீலிக்கும்படி முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

7th November 1966] [திரு. ர. ஜீவரத்னம்]

குறிப்பாக வட ஆற்காடு ஜில்லா புயலினால் ஓரளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் அங்கே நிலைமையை செவ்வனே பரிசீலித்து, விவசாயிகளுக்கு எந்த முறையில் நியாயம் வழங்கவேண்டுமோ அந்த முறையில் நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புஞ்சை தானியங்களான சோளம், துவரை போன்றவை கூட பாதாளமாகப் போய் விட்டது. வாழை மரங்கள் ஏராளமாக விழுந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நகரத்தைப் பொறுத்தவரையில் பீடித் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்களுடைய நிலை ஒரு சரியான நிலையில் இல்லாமல் இருக்கிறது. அதே போன்று பீடி முதலாளிகள் நிலையும் ஒரு சரியான நிலையில் இல்லாமல் இருக்கிறது. மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. பீடித் தொழிலுக்கு பாதுகாப்பு இல்லை. ஹைதராபாத் போன்ற மற்ற பாகங்களிலிருந்து பீடித் தொழிலுக்கு உரிய இலை வந்து சேரவேண்டும். அந்த இலையின் விலை ஒரு நேரத்தில் குறைவாக இருக்கிறது, ஒரு நேரத்தில் அதிகமாக இருக்கிறது. அதனால் அந்தத் தொழிலுக்கு ஒரு கடுமையான நெருக்கடி ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. அதைப் பாதுகாக்க வேண்டும். அதே போன்று பீடித் தொழிலாளர்களையும் சரியான ஒரு தொழில் நிலையிலே கொண்டுவரவேண்டும். உதாரணமாக, பீடித் தொழிலாளர்களுக்கென்று ஒரு சரியான பாதுகாப்பு கிடையாது. விலைவாசி இப்பொழுது ஏராளமாக ஏறிக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த ஆங்காங்கு கூட்டுறவு சொஸைட்டிகளை ஆரம்பித்திருக்கிறோம். என்னுடைய அபிப்பிராயம் வேலூர் நகரத்தில் உள்ள எல்லா பீடித் தொழிலாளர்களையும் பதிவு செய்து, பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியாக ஒரு கூட்டுறவு சொஸைட்டி ஆரம்பிக்கவேண்டும் என்பதுதான். அதற்குரிய மூலதனத்தை சர்க்காரே வழங்கவேண்டும். சர்க்கார் துறையிலே இருந்து பீடித் தொழிலாளர்களுக்கு என்று அந்தத் தொகையை கொடுத்தமாதிரியாக இருக்கவேண்டும். இந்த நெருக்கடியான நிலையை முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஒரு வாரம் வேலை செய்தால், அவர்களுக்கு மற்ற நாட்களில் வேலை இல்லாமல் போய் விடுகிறது. அதற்கு முதலாளிகளைக் குறை கூறியும் பிரயோசனம் இல்லை. அவர்கள் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று ஊதியத்திற்கு ஏதாகிலும் இன்ஷூரன்ஸ் திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்து வேலையில்லாத சமயத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைப் பரிசீலிக்கும்படியாக முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல அரிஜன மக்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். மனைக்கட்டுகள் இல்லாமல் இருப்பவர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கவேண்டும் என்று மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்கள் உடனடியாக பரிசீலிக்கப்படவேண்டும், நடவடிக்கை

[திரு. ர. ஜீவரத்னம்] 7th November 1966

துரிதமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று நான் கனம் உள்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரை அடுத்த காட்பாடியில் ஒரு அல்லாய் ஸ்டீல் பாக்டரி ஆரம்பிப்பதற்கு பல வருடங்களாக முயற்சிகள் செய்யப்படுகின்றன. அந்த வேலை இன்னும் தொடங்காமல் இருப்பதற்கு யாது காரணமோ இன்றுவரையில் தெரியவில்லை. கனம் தொழில் இலாகா அமைச்சர் அவர்கள் அதில் தலையிட்டு தனியார் துறையில் ஒரு பாக்டரியை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையெனில் சர்க்காராவது அந்தத் தொழில் துறையை எடுத்துக்கொண்டு, அங்கே அம்மாதிரி ஒரு தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட வேண்டிய வழிவகைகள் செய்யும்படியாக கேட்டுக்கொள்கிறேன். தொழில் இல்லாத ஜில்லா ஒன்று இருக்கிறது என்றால் அது வட ஆற்காடு ஜில்லாதான். வட ஆற்காடு ஜில்லா வளர்ச்சி அடைய வேண்டும். அங்கே பல பெரிய தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். எந்தத் தொழிலை எடுத்தாலும் சென்னை நகரத்திலோ அல்லது நமது ராஜ்யத்தில் மற்றப் பகுதிகளிலோ ஆரம்பிக்கப்படுகிறதே தவிர, வட ஆற்காடு ஜில்லாவில் எந்தத் தொழிலும் இதுவரையில், எத்தனையோ ஐந்தாண்டுத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டும், ஆரம்பிக்கப்படவில்லை. தனியார் துறையானாலும் சரி, சர்க்கார் துறையானாலும் சரி, வட ஆற்காடு ஜில்லாவில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு தான்யக் கொள்முதல் விஷயத்தில் ஒன்றை பரிசீலிக்கும்படி கனம் முதல் அமைச்சர் அவர்களையும், உணவு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஜில்லாவுக்கு ஜில்லா உற்பத்தியில் வித்தியாசம் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் அல்லது திருச்சி ஜில்லாவில் இருக்கும் உணவு உற்பத்தி போன்று வட ஆற்காடு ஜில்லாவில் உற்பத்தி சமமாக இருக்கும் என்று மதிப்பிட முடியாது. வட ஆற்காடு ஜில்லாவில் கிணற்றுப் பாசனம் மூலம் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. எக்காராவுக்கு 12 மூட்டை, 15 மூட்டை தான்யம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுவும் ரொம்பக் கஷ்டம். அந்த நிலையிலே உற்பத்தி அங்கே ஆகிக்கொண்டிருக்கிறது. இருப்பினும் வட ஆற்காடு ஜில்லாவில் வேறு தொழில் இல்லை, உழைத்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலையில் விவசாயிகள் எப்படியாகிலும் பயிர் செய்கிறார்கள். அவர்களுக்குத் தேவைக்குப் போதுமான அளவு போக மீதியைத் தான் கொள்முதல் செய்யவேண்டும். எல்லாக் கிராமங்களைப் பற்றிய கணக்கும் சர்க்காரிடம் இருக்கிறது. அந்தக் கணக்கை எடுத்துவைத்துக்கொண்டு ஒரு ஏக்காராவுக்கு மூன்று மூட்டை அல்லது நான்கு மூட்டை கொள்முதல் செய்யவேண்டும் என்று நிர்ணயம் செய்து, அதன் பிரகாரம் கொள்முதல் செய்தால் ஓரளவுக்கு விவசாயிகள் சுபிட்சமாக இருக்க முடியும். அப்படியில்லாமல் மற்ற ஜில்லாக்களில் கொள்முதல் செய்யும் அளவுக்கு தாறுமாறாக இங்கே கொள்முதல் செய்தால், ஓரளவுக்குப் போதுமான உணவு தானியங்கள் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

7th November 1966] [திரு. ர. ஜீவரத்னம்]

எங்களுடைய ஜில்லாவில் ஒரு சூப்பர் மார்க்கெட் ஆரம்பிக்கப் பட வேண்டும். வட ஆற்காடு ஜில்லாவில் வேலூர் தலைநகரத்தில் ஆரம்பிக்கப்படவேண்டும். சூப்பர் மார்க்கெட் ஆரம்பிப்பது பற்றி மத்திய சர்க்கார் நிலை எப்படி இருக்கிறதோ தெரியவில்லை. இரண்டு லட்சம் ஜனத்தொகைக்கு மேற்பட்டு இருக்கும் நகரங்களில்தான் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிலை இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. ஒவ்வொரு ஜில்லா தலை நகரத்திலும் சூப்பர் மார்க்கெட் ஆரம்பிக்கப்படவேண்டும். அதுவும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இதைக் கவனிக்கும்படி கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்ஜினியரிங் கல்லூரி நீண்ட நாட்களாக வட ஆற்காடு ஜில்லாவில் தொடங்கப்படாமல் இருக்கிறது. பல ஜில்லாக்களில் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. தொழில்கள் பரவலாக நிறுவப் படவேண்டும் என்பது நம்முடைய சர்க்கார் கொள்கை. அதை அவர்கள் உணர்ந்து இன்ஜினியரிங் கல்லூரி ஒன்றை அடுத்த ஆண்டிலாவது வட ஆற்காடு ஜில்லாவில் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்**: மதிப்பிற் குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உப மான்யக் கோரிக் கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உணவு உற்பத்தியைப் பொறுத்தவரைக்கும்தான் எல்லோரும் கவனம் செலுத்தவேண்டிய நிலையில் இருக்கிறோம். எங்கள் திருவாடானை தாலுகாவைப் பொறுத்தவரைக்கும் சிறுபாசனத் திட்டங்களின் கீழ் ஏரி மராமத்து செய்திருக்கிறார்கள், கலிங்குகள் கட்டப்பட்டிருக்கின்றன. சமீபத்திலே பெய்த மழையினாலும், முன்னால் பெய்த மழையினாலும் எல்லா ஏரிகளும் நிரம்பியிருக் கின்றன, சில இடங்களில் கலிங்குகளில் தண்ணீர் போகவில்லை. கண்மாயின் கண்களில் தண்ணீர் வழிந்து ஓடியும், கலிங்குகளுக்கு தண்ணீர் போகவில்லை. சில இடங்களில் உயரம் தாழ்த்தி கட்டப் பட்டிருக்கிறது. சில இடங்களில் உயரம் அதிகமாக கட்டப்பட்டி ருக்கிறது. கேட்டால், இன்ஜினியரிங் டிப்பார்ட்மெண்டில் சரியாகத்தான் கட்டியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது ரொம்ப ஆபத்தாக இருக்கிறது. இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதைக் கவனித்து நல்ல முறையில் செய்யவில்லை என்றால், ஒரு சில கிராமங்களுக்கு தண்ணீர் அதிகமாகக் கிடைத்தும், ஒரு சில கிராமங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் பயிர்கள் கெட்டுப் போகக்கூடிய நிலையும் ஏற்படும். ஆகவே, இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

கிழக்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் மழை பெய்து தண்ணீர் நிறைய இருக்கிறது. விவசாயம் எல்லாம் முக் கால் வாசி முடிந்து போய்விட்டது. உரம் கிடைக்கவில்லை. கொஞ்சமாகத்தான் உரம் கொடுக்கப்படுகிறது. கடலில் பெருங் காயம் கரைத்தமாதிரிதான் இப்பொழுது கொடுக்கக்கூடிய

[7th November 1966

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

உரத்தின் அளவு இருக்கிறது. அந்தமாதிரி நல்ல சீசனிலே உரம் கிடைக்கவில்லையென்றால் உற்பத்தி பாதிக்கப்படும் நிலைமைதான் இருக்கிறது. உணவு உற்பத்தி புள்ளிவிவரத்தை மட்டும் கொடுத்தால் போதாது. நல்ல காலத்தில் விவசாயிகளுக்கு விதை, உரம் இவற்றைக் கொடுத்தால் உற்பத்தி பெருக வாய்ப்பாக இருக்கும். கிழக்கு இராமனாதபுரத்தில் நல்ல மழை பெய்து கண்மாய்களெல்லாம் நிறைந்திருக்கின்றன. அங்கே ஒரு ஸ்பெஷல் அலாட்மெண்ட் ரசாயன உரம் கொடுக்கச் செய்து விவசாயம் பெருக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நில வரியை தள்ளுவதாக காரைக்குடி மாநாட்டிலே காங்கிரஸ் தீர்மானம் போட்டார்கள். அதை முதல் மந்திரி ஒப்புக் கொண்டார்கள். நான்கூட நினைத்தேன் ஓரளவு நிலவரியை தள்ளப் போகிறார்கள் என்று. ஆனால், இப்பொழுது 25 சதவீதம் ஏற்கனவே போட்டார்களே, அதைத்தான் தள்ளியிருக்கிறார்கள். இது பெரும் ஏமாற்றமாக இருக்கிறது. என்னிடம் கூட பலபேர் கேட்டார்கள். "வரியைத் தள்ளுவார்களா, தள்ளுவார்களா?" என்று. நானும் சொன்னேன், பூரா எங்கே தள்ளப் போகிறார்கள். எலெக்ஷன் நேரம், அதற்காக சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஓரளவு ஏதாவது தள்ளுவார்கள் என்றேன். ஆனால், இப்பொழுது எனக்கே ஒரே ஏமாற்றம். இந்த சைடிலே மட்டுமல்ல, அந்த சைடில் கூட, காங்கிரஸ் சைடில் கூட ஏமாற்றம். தள்ளுவார்கள் என்று நினைத்தார்கள். பூரணமாகத் தள்ளியிருந்தால், பூரணமாக பாராட்டுவேன், இந்த மந்திரிசபையை. இந்த 25 சதவிகிதம் வரியைமட்டும் தள்ளியதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இதனால் எந்த விவசாயியும் முன்னுக்கு வரமாட்டான். விவசாயிகள் மீது இருக்கும் வரிகள் பூராவையும் கம்ப்ளீட்டாகத் தள்ளவேண்டும். அந்தமாதிரிச் செய்தாலொழிய விவசாயிகளுக்கு நன்மை செய்ததாக ஆகாது. ஆகவே, உடனடியாக அந்த நில வரியை கம்ப்ளீட்டாகத் தள்ளவேண்டும். அல்லது அடுத்த தடவை மந்திரிசபை அமைத்தால், இவ்வளவு நாட்களுக்குள் தள்ளுகிறோம் என்ற உறுதியையாவது கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையையும் செய்ததாக ஒப்புக்கொள்ள முடியாது. இந்த 25 சதவிகித வரியைத் தள்ளியது எப்படி இருக்கிறது என்றால், பாலைவனத்தில் போகும் ஒட்டகத்தின் மேல் மண்ணைவைத்து, பாலைவனம் சென்றதும் அந்த மண்ணைத் தள்ளிவிடுவார்களாம். அந்த ஒட்டகங்கள் பாரம் பூராவாகவும் போய்விட்டது என்று வேகமாகப் போகுமாம். அப்படி இந்த சர்சார்ஜை மட்டும் தள்ளிவிட்டு விவசாயிகளை ஏமாற்றலாம் என்று நினைக்கவே நினைக்காதீர்கள். உணவுப் பஞ்சம் தீரவேண்டுமென்றால் விவசாயி சந்தோஷமாக விவசாயம் செய்யவேண்டும். அப்படியில்லை என்றால் உணவுப் பஞ்சம் போகவே போகாது. அந்த நிலையில் இந்த நிலவரியை கம்ப்ளீட்டாகத் தள்ளவேண்டும். விவசாயிகளுக்கு வரியே இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவே, இதைப் பூரணமாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படியில்லையென்றால், இந்த

7th November 1966]

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

25 சதவிகிதம் தள்ளியிருப்பதை எலெக்ஷன் ஸ்டண்ட் என்றுதான் பேசுவார்கள். இது எலெக்ஷன் ஸ்டண்ட் என்று யாருக்கும் தெரியும். இந்த 25 சதவிகிதம் தள்ளியதால் ஒரு பிரயோசனமும் இல்லை. ஆகவே இதைப் பூரணமாகத் தள்ளவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பூரணமாகத் தள்ளினால் 'ஸ்டண்ட்' இல்லையா? இதுதான் 'ஸ்டண்டா'?

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: பூரணமாகத் தள்ளினால் விவசாயிகளுக்குப் பூரணமாக நன்மை இருக்கும். முந்தாநாள் போட்ட இந்த 25 சதவிகிதம் கூடிய வரியை மட்டும் தள்ளினால், அது எலெக்ஷன் ஸ்டண்ட் தானே? இதற்கு முன்னால் நாங்கள் இந்த வரி வேண்டாம் என்று சொன்னோம். அப்பொழுது எங்களைக் கேலி பண்ணினார்கள். அந்த வரியைத்தான் இப்பொழுது தள்ளியிருக்கிறார்கள். இதை எலெக்ஷன் ஸ்டண்ட் என்காமல் என்ன சொல்லுவது? அதனால் தான் நாங்கள் இது எலெக்ஷன் ஸ்டண்ட் என்று சொல்லுகிறோம்.

சூப்பர் மார்க்கெட்டு வேண்டுமென்று எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் கேட்டார்கள். சென்னையிலே தேனாம்பேட்டையில் ஒன்றை வைத்திருக்கிறார்கள். பல இடங்களிலிருந்தும் தேனாம் பேட்டைக்குப் போக வேண்டும் என்றால் அதற்கே நாலு ரூபாய் செலவு செய்ய வேண்டும். அதோடு இம்மாதிரி சூப்பர் மார்க்கெட் வைப்பதால் மட்டும் விலை இறங்கிவிடுமா? இறங்கவே இறங்காது. இது கொக்கு தலையில் வெண்ணெயை வைத்து கொக்கின் கழுத்தைப் பிடிப்பது போலத்தான்.

இதெல்லாம் எலெக்ஷன் ஸ்டண்டுகள்தான். இவைதயெல்லாம் விட்டு, இன்றைக்கு இருக்கும் கஷ்டம் போக வேண்டுமானால், கண்ட்ரோல்களையெல்லாம் ரத்து செய்துவிட்டு, எல்லாக் கண்ட் ரோல்களையும் விட்டு விட்டு, செயல் பட்டால்தான் விலைகள் இறங்கும். இல்லாவிட்டால் இறங்காது என்று கூறி என் சிற்றுரையை முடிக்கிறேன்.

திரு. கோ. நாராயணசாமி நாயுடு: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய தொகுதி பற்றி சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

எங்கள் பகுதியைப் பொருத்த வரையில் நல்ல வேலைகள் பல நடந்திருக்கின்றன. இருந்தாலும், ஒவ்வொரு கிராமத்திற்கும் பாலம் இல்லாததால், அங்கே உற்பத்தியாகின்ற விவசாயப் பண்டங்கள் நகரப் பகுதிகளுக்கு அனுப்பத் தடையாக இருக்கிறது. தள்ளுசேரி, ஆனைதாண்டாபுரம், ஆத்துக்குடி, முதலிய இடங்களில் மூன்று பாலங்கள் போடாமல் இருக்கின்றன. மனக்குடி என்ற கிராமத்திலும், பல ஆண்டுகளுக்கு முன்பே 3,000 ரூபாய் கட்டி பொது மக்கள் பள்ளி வேண்டும் என்று கேட்டார்கள். நானும்

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [7th November 1966

முயற்சி செய்தேன். ஆனால் இன்னும் பள்ளிக்கூடம் அமைக்க இடம்கூட கிடைக்காத ஒரு நிலைமைதான் இருக்கிறது. அதையும் சர்க்கார் கவனித்து ஆவன செய்ய வேண்டும். எனக்கு முன் பேசிய நண்பர்கள் சிலர் பிண்ணாக்கு விலை அதிகமாகிவிட்டது, பருத்திக்கொட்டை விலை அதிகமாகிவிட்டது, மிளகாய் விலை மலை உச்சிக்குப் போய்விட்டது என்று சொல்லி, எல்லோருமே தேர்தல் ஸ்டண்ட் என்று தேர்தலை கனவும் கற்பனையும் செய்து கொண்டு, மக்களைப்பற்றியே நினைக்காமல், ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவது போலும் பேசுகிறோம். மிளகாய் விலை ஏறினாலும், பருத்திக் கொட்டை விலை ஏறினாலும், மணிலாக் கொட்டை விலை ஏறினாலும், அதெல்லாம் விவசாயிகளுக்குத்தானே போகிறது? பணம் எங்கே போகிறது? ஒரு பக்கத்தில் வரியைத் தள்ள வேண்டும், சலுகைகளைக் காட்டவேண்டும் என்கிறோம். அதற்கு வேண்டிய பணத்தையெல்லாம் எப்படி ஈடுகட்டுவது? என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிடாமல் எல்லாம் தேர்தல் ஸ்டண்ட் என்றால் அது எப்படி சரியாகும்? விவசாயப் பொருள்கள் விலை அதிகமானால், விவசாயிக்குப் பணம் வருகிறது. அதைக் குறைக்க வேண்டும் என்கிறோம். இன்னொன்றையும் பார்க்கவேண்டும், இப்படி உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது 1947-க்குப் பிறகு தானே? 1947-ல் என்ன விலை? போக்குவரத்து சாதனங்கள் என்ன? அப்போழுது ரயிலில் போனவர்கள் எத்தனைபேர்கள்? படித்த பிள்ளைகள் எத்தனை? அப்பொழுது இருந்த சினிமாக் கொட்டகைகள் எத்தனை? சினிமாவில் வந்த வருமானம் எவ்வளவு? அன்றைக்கு நடுத் தெருவில் நின்று நாடகம் போட்ட ஆட்கள் இன்றைக்கு சினிமாவில் சேர்ந்து பிரமாதமான வசதிகள் பெற்ற வாழ்க்கை நடத்துகிறார்களே, அது 47-க்குப் பிறகு வந்ததல்லவா? ஆங்கிலேயர் காலத்தில், ஆங்கிலேயர் காலத்தில், என்கிறார்களே, பழைய யஜமான விசுவாசத்துடன், இதெல்லாம் அப்பொழுது இருந்ததா? அப்படிப் பட்ட வாழ்க்கை வசதிகள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். என்று புதிய திட்டங்கள் வகுத்துச் செயல் படுகிறார்கள். மேட்டை மேடாகவே விட்டு பள்ளத்தை பள்ள மாகவே விட்டு விடாமல், மேட்டிலிருந்து மண்ணை எடுத்து பள்ளத்தை நிறப்புவதுதானே சோஷலிசம்? அதைச் செய்தால், தேர்தலைப் பற்றியே கனவு கண்டு கொண்டு முன்பு நம் ஆசிரமத்தில் இருந்தவர்கள், திடீரென்று இப்படி மாறிக்கொண்டு வருகிறார்களே இப்படிப் பேசுகிறார்களே என்று சற்று வருத்தம் வருகிறது. பொருளாதார வளர்ச்சி நல்லமுறையில் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால் இன்றைக்கு நாம் வகுத்துக் கொண்டுள்ள ஜனநாயக முறையில் யாரையும் எதையும் சொல்லலாம் என்று இப்படிச் செய்தவர்களைத் தாழ்மையாகப் பேசி, தன்னுடைய சொந்த கவுரவத்தையே குறைத்துக் கொள்வது அரசியல் பண் பாட்டிற்கு ஏற்றதல்ல. இருக்கின்ற குறைகளைப் போக்க யோசனைகள் சொல்லலாம். அதை விட்டு விட்டு தொட்டதெல்லாம் குற்றம் குற்றம் என்று சொல்வது எவ்வளவு குறைவானது என்பதைச் சிந்திக்க வேண்டும். மனிதர்கள் செய்வதில் குற்றம் குறைகள் இருக்கலாம். அப்படி இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்லுவதுதான் எதிர்க்கட்சிக்காரர்களுடைய கடமை. அதை

7th November 1966] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு]

விட்டு கிண்டல் செய்வது, கேலி செய்வது என்பது இங்கே பொருந்தாது. கிராமத்தில் வேண்டுமானால், கூடிப் பேசிக் கொண்டு இருக்கலாம். அப்படி இப்பவும் கிராமத்தில் நடக்கிறது, எரிந்த கட்சி, எரியாத கட்சி சொல்லுவார்கள், கிராமப் புறங்களில் காமன் எரிந்தான் என்று சொல்லுகிற கட்சி ஒன்று; காமன் எரியவில்லை என்று சொல்லுகிற கட்சி இன்னொன்று. காமன் எரிந்தான் என்று ஒருவன் சொல்லுவான். காமன் எரியவில்லை, உயிரோடு இருக்கிறான் என்று இன்னொருவன் சொல்லுவான். இப்படி லாபப் பாடம் பாடும் நிலை அரசியலுக்கு வந்தால், மதிப்பையும் கண்ணியத்தையும் வைத்துக் கொண்டிருக்கிற அரசியல் வெட்கமும் வேதனையும் படக்கூடிய சம்பவமாகப் போய்விடும். இந்தச் சபை உலகத்திலே மிகச்சிறந்த சபைகளுக்கு நிகராக விளங்குகிறது என்று சொல்லலாம் என்றாலும், கொள்ளிக்கட்டையைக் கையில் வைத்துக்கொண்டு கூரை மேல் நின்று, கூரைக்குக் கொள்ளி வைக்காமல் இருக்கும் சிஷ்யனைப் பராமார்த்த சிஷ்யன் என்று சொல்லுவதைப்போல, இதையே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்றால், இதைவிட மோசமான சட்ட சபையில் மனிதன் உட்கார்ந்திருக்க முடியுமா? பாக்கி மாநிலங்களில் இருக்கிற சட்டசபைகளில் எல்லாவற்றையும்விட, நம்முடைய சட்டசபையில் இருக்கிற எதிர்க் கட்சி நண்பர்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் ரொம்பப் பிரமாதமாக நடந்து கொண்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள் என்றால், அதை நிந்தாஸ்துதி என்று சொல்ல முடியாது. உண்மையிலேயே அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டி இருக்கின்ற இந்த இடத்திலே. . . .

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார். கனம் அங்கத்தினர் பேசுகிற சமயத்தில், "இதைவிட மோசமான சட்டசபை" என்று குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர் இதை மோசமான சட்டசபை என்று குறிப்பிடுவதாகத்தான் அர்த்தம் ஆகிறது. அவ்வாறு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது இந்த சட்டசபையை அவமதித்ததாக ஆகும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் இருவருக்குமே இந்தப் பெரிய உணர்ச்சி வந்திருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. கோ. நாராயணசாமி நாயுடு: பையன் 90 சதவிகிதம் மார்க் வாங்கியிருந்தாலும், உபாத்தியாயர் அவனைப் பார்த்து, "ஏன் இன்னும் 9 மார்க் வாங்கவில்லை?" என்று கேட்பார். "99 சதவிகிதம் மார்க்காவது வாங்கக் கூடாதா?" என்று நல்ல பையனைப் பார்த்து உபாத்தியார் கேட்பதைப்போல, முதல் அமைச்சர் அவர்களால் பாராட்டப் பெற்ற தகுதி வாய்ந்த, சிறப்புமிக்க, கண்ணியமுடைய எதிர்க்கட்சி நண்பர்கள் மேலும் கண்ணியத்தோடு நடக்க வேண்டும். அந்த விருப்பத்தின் காரணமாகத்தான் "இந்தச் சட்டசபையை விட" என்று சொன்னேனே தவிர, மோசமாக இருக்கிறது என்ற பொருளில் சொல்லவில்லை. கண்ணியம் இன்னும் உயர்ந்துவிடுமானால், இன்னும் பிரமாதமாக நம்முடைய மந்திரி

மார்கள் பாராட்டுவதற்கு ஏற்ற வழியிலே அமையும் என்றுதான் சொன்னேனே தவிர, இது ரொம்ப மோசம் என்று சொல்லவில்லை. எவ்வளவு அதிக மார்க் வாங்கியிருந்தாலும், இன்னும் அதிகமாக வாங்கியிருக்கக் கூடாதா என்று பிள்ளைகளைப் பார்த்துக் கேட்பது போன்ற கருத்திலே சொன்னதாகக் கொண்டு, மற்ற சபைகளுக்கெல்லாம் நாம் முன் மாதிரியாக இருக்க வேண்டும், நம்மைப் பின்பற்றி மற்ற சட்டசபைகள் நடக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு சொன்னதாகக் கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும் என்பதற்காகக் கூறினேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். குறைகள் என்றால் எப்போதும் சொல்லத்தான் போகிறோம். 'தாலி அறுந்துவிட்டது' என்று சொல்வதற்குப் பதிலாக 'மங்கலம் பெருகிப் போச்சு' என்று இடக்கரடக்கல் என்ற வகையில் சொல்லுகிற பண்பாட்டில் வளர்ந்த நாம் இன்னும் கொஞ்சம் நல்ல முறையில் நடந்துகொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

MR. SPEAKER : The hon. Member, Sri Mathialagan will now speak. He must finish his speech within 7 or 8 minutes.

SRI K. A. MATHIALAGAN : Sir, I may be allowed 15 minutes.

MR. SPEAKER : Not more than 7 or 8 minutes will be allowed.

SRI K. A. MATHIALAGAN : Sir, I want ten minutes.

MR. SPEAKER : Yes.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1966-67-ம் ஆண்டின் இரண்டாம் துணை மதிப்பீட்டின் மீது நானும் சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கைகளிலே மிகச் சுருக்கமாகத்தான் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெறுகிற இந்த மந்திரிசபை இந்த நாட்டினுடைய மூன்றரை கோடி மக்களுடைய உண்மையான பிரச்சினைகளுக்குத் தெளிவும், பரிகாரமும், அவர்களுக்கு வேண்டிய காரியங்களையும் செய்வதிலிருந்து தவறி இருக்கிறது என்பதை நான் விளக்குவதை விட, அவர்களுடைய உரையே கூட, நான்கு பக்கங்களில் ரத்ன சுருக்கமாக இருந்தாலும், மெய்ப்பிக்கிறது என்றுதான் சொல்லிக் கொள்ளுவேன். இதிலே எட்டு பாராக்கள் இருந்தாலும், முதலில் இரண்டு பாராக்களை விட்டுவிடலாம்.

முதல் பகுதியாக, ஏடிடி. 27 ரகத்தை நம்பியிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஏடிடி. 27 ரகத்தை நம்பியிருக்கிறோம் என்று சொல்லும்போது, இத்தனை திட்டங்களைப் போட்டும் எத்தனையோ கோடி ரூபாய்களைச் செலவிட்டும், இன்னும் உணவுப் பற்றாக்குறையும் உற்பத்திக் குறைவும் இருக்கிறது என்பதை அவர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

இரண்டாவது பகுதியாக, தூர் வாருவதைபற்றிச் சொல்லுகிறார்கள். இவர்கள் போகிற ஆமை வேகத்தில் இன்னும் 150 வருஷங்கள் தூர் வாரும் திட்டத்தைச் செய்தாலும் கூட, நிறைவேறுமா என்று தெரியவில்லை. இந்த அரசாங்கம் இந்தத் துறையில் அசிரத்தையைத்தான் காட்டுகிறதே தவிர, நல்ல முறையில் ஒழுங்கிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று என்றால் சொல்ல முடியவில்லை. இதை நான் தெளிவாகவும் அறைகூவியும் சொல்ல முடியும்.

மூன்றாவது பகுதியாக, நம்முடைய கிராமப் பகுதியிலே இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயிகள், பஞ்சத்தின் காரணமாக, கடனைத் திருப்பிக் கொடுக்காததால், அவர்கள் வாங்கியுள்ள குறுகிய காலச் சாகுபடிக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றிக் கொள்ள வகை செய்திருக்கிறார்கள். இதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? இப்பொழுது நாட்டில் பஞ்சம் இருக்கிறது; வறட்சி இருக்கிறது, வாங்கிய கடனை விவசாயிகள் திருப்பிக் கொடுக்க முடியவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

நான்காவதாக, இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் நியாயமான விலையில் அவை கிடைப்பதற்கும் காமதேனுவை அழைத்து வந்திருக்கிறார்கள். காமதேனுவினால் விலைவாசி கட்டுப்படுத்தப்படும் என்று அரசினர் கருதுவார்களானால், அவர்கள் தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். இந்த நாட்டு மக்களையும் ஏமாற்ற விரும்புகிறார்கள் என்று நான் வருத்தத்தோடு, ஏழை எளிய மக்களுடைய மிகப் பயங்கரமான வேதனையைச் சொல்லிக் கொள்ளுகிறேன். ஒரு மணி நேரம் சொல்ல வேண்டிய மிகப் பெரிய பிரச்னை இது. என்றாலும், சென்னையைப்பற்றி மட்டும் சொல்லுகிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்த காமதேனு வந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சென்னை நகரத்தில் மட்டும் இரண்டு மாதங்களுக்கு முன்னால் மிகவும் அத்தியாவசியமான பொருள்களின் விலை என்ன இருந்தது, இன்றைக்கு என்ன இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஒரு வீசை மிளகாய் வத்தல் இரண்டு மாதங்களுக்கு முன்பு 8 ரூபாயாக இருந்தது, இப்பொழுது பத்து ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பு 1 ரூபாய் 60 பைசாவாக இருந்த ஒரு லிட்டர் பால் இப்பொழுது இரண்டு ரூபாயாக உயர்ந்திருக்கிறது. முன்பு ஒரு படி அரிசி 1 ரூபாய் 60 பைசாவாக இருந்தது, இப்போழுது 2 ரூபாய் 50 பைசாவுக்கு உயர்ந்திருக்கிறது. முன்பு தக்காளி ஒரு வீசை ஒரு ரூபாயாக இருந்தது இப்பொழுது ரூ. 1-75 ஆக உயர்ந்திருக்கிறது. முன்பு வெங்காயம் ரூ. 1-25 ஆக இருந்தது, இப்பொழுது இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. முன்பு கத்தரிக்காய் 75 பைசாவுக்கு விற்றுக் கொண்டிருந்தது இப்பொழுது ரூ. 1-20-க்கு விற்கிறது. உதாரணத்திற்காகத்தான் ஒரு சில பொருள்களின் விலைவாசியை மட்டும் இப்பொழுது குறிப்பிட்டேன்.

ஒன்று மட்டும் விலைவாசியைப்பற்றிச் சொல்லிக்கொள்வேன். விலைவாசியைப்பற்றிச் சொல்லும்போது ஏதோ சப்ளை அண்டு டிமான்டைப் பொருத்துத்தான் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல உண்மையான காரணம். இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய பாமர மக்கள், நடுத்தர மக்கள் இவர்களை யெல்லாம் முதலாளித்துவக் கோட்டைக்கு நல்ல செங்கற்களாக்க வேண்டும், முதலாளிகளை வாழ வைக்க வேண்டும் என்பதற்காக சென்ற 18 ஆண்டுகளாகப் போட்ட சதித் திட்டங்கள் காரணமாகத்தான் இன்றைக்கு விலைவாசி எல்லாம் உயர்ந்திருக்கிறது. சப்ளை அண்டு டிமாண்டு என்றெல்லாம் சொல்லுவது வெறும் கண் துடைப்புத்தானே தவிர, பற்றுக்குறை என்பது முன்னே இருந்து கொண்டிருக்கிறது. ஏழை எளிய மக்கள் இரு முனைகளில் தாக்கப்படுகிறார்கள். ஒன்று, இந்த அரசாங்கத்தின் வரி முறை; இரண்டாவது, விலைவாசி உயர்வு. விலைவாசியைக் கட்டுப்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு ஏக போக முதலாளிகளுக்கு உதவுவதற்கான சதித் திட்டமாகத்தான் இந்தப் பதினெட்டு ஆண்டுகளாக இந்த நாட்டு மக்களை அலைக்கழிப்பதைக் காணுகிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் 1,100 கோடி ரூபாய் டெபிசிட் ஃபினான்சிங் ஏற்படும் என்பதற்காக கத்தை கத்தையாகக் காகித நோட்டை அடிப்பதன் மூலமாக விலைவாசியை ஏற்றியிருக்கிறார்கள். இது மிகச் சாதாரண காரியம் அல்ல. இப்படியெல்லாம் விலைவாசியைக் கண்ட்ரோல் பண்ணிவிட முடியாது. கடிவாளமிட்டுவிட முடியாது என்பதைப் பொருளாதாரத்தினுடைய அரிச்சுவடியைத் தெரிந்தவர்கள் கூடப் புரிந்து கொள்ள முடியும். இப்படியெல்லாம் நாட்டு மக்களை வேதனைக்குள்ளாக்குகிறார்கள். உண்மையிலேயே விலை வாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், விலைவாசி உயர்வுக்குக் காரணமாயிருக்கிற பாங்குகளைத் தேசியமயமாக்க வேண்டும். அவற்றிலே இருக்கிற கடன் வசதிகளைக் குறைக்க வேண்டும். விலைவாசி குறைக்கப்பட வேண்டுமானால், வர்த்தக சூதாடிகள், கொள்ளை லாபக்காரர்கள், கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் இவர்களுடைய லாபத்தினுடைய உச்ச வரம்பைக் கட்டுப்படுத்திக் கண்ட்ரோல் கொண்டு வந்தாக வேண்டும். விவசாயப் பொருள்கள் மீது இருக்கிற அத்தனை வரிகளையும் எடுக்காத வரையில் ஒரு திட்டத்தையும் நாம் நிறைவேற்ற முடியாது என்ற நிலைமை தான் இருக்கிறது என்று நான் வேதனையோடு சொல்லிக் கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு மானியம் கொடுத்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். ஆனால், சென்ற வருஷம் தமிழகத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளிலே ஈடுபட்டு துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியாகிய குடும்பங்களுக்கு மானியம் கொடுத்திருந்தால், இன்னும் பன்மடங்கு பாராட்டுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

சில விவரங்களை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுவேன். இன்றைக்கு நாம் நான்காவது பொதுத் தேர்தலை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். துப்பாக்கிக்கு மத்தியில், வெடி

7th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

குண்டுக்கு மத்தியில், கத்தி கடாரிகளுக்கு மத்தியில், பஞ்சத்திற்கு மத்தியில், பட்டினிக்கு மத்தியில் பொதுத் தேர்தலை நோக்கி நடை இட்டுக்கொண்டிருக்கிறோம். 12-0 noon. ஆனால், உயிர், உடமை உரிமை இவைகளைப் பொறுத்த வரையில் இந்த நாட்டிலுள்ள சாதாரண ஏழை எளிய, நடுத்தர மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா என்பதைக் குறித்து இந்த மன்றத்தில் பல பேர் பேசினார்கள். நான் இன்றைக்கு கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இரண்டு மாதங்களுக்கு முன்பாக போலீஸ் கமிஷனர் அவர்கள் வரப்போகிற தேர்தலை உத்தேசித்து ஒரு 'கோட் ஆப் காண்டெக்ட்' ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடிப் பேச வேண்டும் என்று ஒரு மகாநாடு கூட்டினார்கள். எங்கள் கட்சியின் சார்பாகத் தலைவர் சென்றிருந்தார்கள். திரு. என். வி. நடராசன் அவர்களும் போய் இருந்தார்கள். ஆனால் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் பார்ட்டி ஆபீசில் இருக்கிற ஒரு குமாஸ்தாவை அந்த மகாநாட்டுக்கு அனுப்பியிருந்தார்கள். திரு. சுப்பிரமணியம் காலத்தில் 'கோட் ஆப் காண்டெக்ட்' எப்படி வகுத்துக் கொள்ளலாம் என்பதற்கு அங்கே வரவில்லையா? இங்குள்ள அமைச்சர்களில் யாராவது வந்திருக்கக் கூடாதா? போலீஸ் கமிஷனரே காங்கிரஸ் கட்சி தேர்தல் கமிஷனராக ஆகிவிட்டாரா? இதுதான் ஜனநாயகம் தழைக்கச் செய்கின்ற முறையா? போலீசாரிடம் இத்தனை பெரிய பொறுப்பை ஒப்படைத்துவிட்டு—போலீசாரின் சம்பளத்தைப் பற்றிப் பேசக் கூடாது, துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றிப் பேசக் கூடாது. இதுதான் ஜனநாயகத்தை வளர்க்கின்ற முறையா? தேர்தல் நல்ல முறையில் சுமுகமாக நடைபெறுவதற்கு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவில்லை. உண்மையிலேயே இன்றைக்கு நாட்டில் பயங்கரமான ஒரு நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. நாம் எல்லோரும் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். தேர்தலுக்குச் சில மாதங்களே இருக்கின்றன. ஒவ்வொரு கட்சியும் தங்கள் தங்கள் கொள்கைகளை எடுத்து மக்கள் முன் வைத்து விளக்க வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். இன்றைக்கு என்ன நடக்கிறது? ஒரு கூட்டம் என்றால் இரவு பத்து மணிக்கு முன்னால் 'மணி பத்தாகப் போகிறது. பேச்சை முடித்துக் கொள்ளுங்கள் பத்து மணிக்கு மேல் ஒலி பெருக்கி வேலை செய்யாது' என்பதாக ஒலிபெருக்கியாளர் தலைவருக்கு ஒரு சீட்டுக் கொடுக்கிறார்கள். இந்தச் சீட்டை அவராகவா கொடுக்கிறார்? போலீஸ் கமிஷனரே இதுபோன்ற சீட்டுக்களை அச்சிட்டு அவர்களிடம் கொடுத்து கொடுக்கச் சொல்கிறார்கள். இரவு 12 மணி வரை கூட்டம் நடந்தால் என்ன? ஏழு மணிக்குத்தானே எல்லோரும் கூட்டத்திற்கே வருகிறார்கள். வர இருக்கிற தேர்தலை முன்னிட்டு. இதுபற்றிய ஒரு உடன்பாட்டுக்கு ஏற்பாடு செய்யக் கூடாதா? பலாத்காரத்தைக் கொண்டு உருட்டி, மிரட்டி தேர்தலை நடத்திக்கொண்டுபோய் விடலாம் என்பதாக காங்கிரஸ் கட்சியினர் நினைக்கிறார்களா?

மதுரையில் ஒரு பள்ளிக்கூடத்தில் நடந்தது என்ன? தேர்தலிலே ஒரு மாணவன் வெற்றி பெற்றான் என்பதற்காகக் கொலை

[திரு. கே. ஏ. மதியழகன்] [7th November 1966

செய்யப்படவில்லையா? பட்டப் பகலிலே நடு ரோட்டிலே வீரய்யாவை வெட்டி வீழ்த்தினார்களே, போலீஸ் அமைச்சருடைய ஊர் அதற்கு அருகாமையில் தானே இருந்தது. அறிவாளால் அவரை வெட்டிக் கொலை செய்த குற்றவாளியை 3 மாதங்கள் வரைக் கைது செய்தார்களா? என் செய்யவில்லை? போலீஸ்காரர்களும் தானே அந்தச் சதித் திட்டத்திற்கு உடந்தையாக இருந்தார்கள்? நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கூடச் சொன்னார்கள். ஆத்திரப்பட்டு, ஆவேசத்தோடு சொல்கிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் கருத வேண்டாம். இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு நம் எல்லோருக்குமே இருக்கிறது.

உடுமலைப்பேட்டையில்—நான் பிறந்த ஊருக்கு அருகாமையில்—ஓர் இடத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் போக இருந்தார்கள். 5-ம் தேதி அங்கே நடைபெற இருந்த கூட்டத்தில் அவர் பேசுவதாக இருந்தது. அங்கே உள்ள திருமூர்த்தி நகர் என்பது கனம் மன்றாடியார் அவர்களுக்குப் பரிச்சியமான இடம் தான். அங்கே ஜல்லிப்பட்டி, தடி, வாளவாடி ஆகிய ஊர்கள் இருக்கின்றன. இன்றைக்கு அந்தப் பகுதி காங்கோ நாடு போலக் காட்சி அளிக்கிறது. சென்ற தேர்தலிலே கனம் சுப்பிரமணியம் அவர்களுக்கு தேர்தலில் உழைத்த மணி நாயுடு என்கிறவர் தலைமையில் 100 பேர்கள் சேர்ந்து கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் கார் அந்தப் பக்கமாகப் போகிறது என்பதற்காக நடுவழியில் தடி, அருவாள், கோல், கம்பு கொண்டு அந்தச் சாலையிலே சென்ற கார்களை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். சாதி பாட்சா என்பவரது கார் நொறுக்கப்பட்டிருக்கிறது. அதிருஷ்டவசத்தினால் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அதில் செல்லவில்லை. சென்றிருந்தார்கள் என்றால் என்ன நடந்திருக்கும்? அவரது மண்டை உடைய ஆயிரக் கணக்கானவர்கள் மண்டை உடைந்து—கண்ணீர் புகை துப்பாக்கிப் பிரேயோகம் என்ற அளவிலே சென்று இன்றைய தினம் முதல் அமைச்சர் அவர்கள் அதுபற்றி அறிக்கையை இங்கே சமர்ப்பித்துக் கொண்டிருப்பார்கள். பல லட்சக்கணக்கான மக்களுடைய இதயத்தில் அண்ணாவை வீற்றிருக்கிற அறிஞரைத் தாக்க இத்தகைய சதித் திட்டம் என்றால் எத்தகைய பயங்கரமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இன்றைக்குத் துணை மானியக் கோரிக்கையில் கோயம்பத்தூர் போலீஸ் கண்டிரோல் அறைக்கு ஒரு லட்சம் கோரப்படுகிறது. ஒருமாத காலமாக அங்கே காங்கோ நாடுபோல நடைபெற்று வருகிற அராஜகச் செயல்களை என் அடக்க முற்படவில்லை? 500 மைல் நீளம், 250 மைல் அகலமுள்ள நமது ராஜ்யத்தில் 3 மைல் சுற்றளவுக்குள் நடைபெறுகிற அராஜகச் செயல்களை அடக்க முடியாத நிலையில் போலீஸ்காரர்கள் இருக்கிறார்களா? இல்லை போலீஸ்காரர்களே இவற்றுக்கு உடந்தையாக இருக்கத் தூண்டப்படுகிறார்களா? திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் செல்கிறார் என்ற எண்ணத்தில் காரை உடைத்தார்கள் என்றால் என்ன பொருள்? நான் மிக மிகத் தெளிவாகச் சொல்கிறேன். இந்தக் காங்கிரஸ்

7th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

காரர்கள் கோவை மாவட்டத்தில் எங்களது கட்சித் தலைவரின் காரை அடித்தார்கள் என்றால் அந்த அடி உங்கள் மந்திரி சபைக்கு ஏற்பட்ட மரண அடியாகும். இதை மறந்துவிட வேண்டாம். அராஜகத்தைத் தூண்டிவிட்டு தேர்தலிலே வெற்றி பெற்றுவிட முடியாது. பல லட்சக்கணக்கான மக்களின் இருதயத்திலே வீற்றிருக்கிற—மக்கள் தலைவர், அன்பின் சின்னம்—அகிம்சையின் உருவம—அறிஞர் அண்ணாவைத் தாக்கவே திட்டமிட்டு விட்டீர்கள் என்றால் அதுதான் உங்களுக்கு ஏற்பட்டுவிட்ட ஆபத்தான கெட்ட காலமாகும். ஆத்திரமாகப் பேசுவதாக நினைக்க வேண்டாம். நாட்டிலே ஜனநாயகம் தழைக்க வேண்டும். பலாத்காரத்தை எந்த வகையிலும் தூண்டும் முயற்சிகள் தலை தூக்க விடாது செய்ய வேண்டும். ஆகவே, தேர்தலை ஜனநாயக முறையில்—நல்ல அமைதியான சூழ்நிலையில் நடத்த உண்மையாகவே நீங்கள் விரும்பினால் எல்லாக் கட்சிகளோடும் சேர்ந்து ஆலோசித்து கோட் ஆப் காண்டெக்ட் ஒன்றை நாமே வகுத்துக் கொள்வதற்கு முன் வரவேண்டும். கட்டாரி, கத்தியை எடுக்க வேண்டாம். வேல் கம்பைத் தொட வேண்டாம். போலீஸ் பட்டாளத்தை ஏவ வேண்டாம் என்பதாக முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த உப மானியக் கோரிக்கையின் மீது ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்லப் பிரியப்படுகிறேன். சென்ற பட்ஜெட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ராம நதி, கடானா நதி ஆகிய இரண்டு நதித் திட்டங்கள் இருந்தன. இதுவரை ப்ளானிங் கமிஷன் அந்த நதித் திட்டங்களை அப்ரூவ் செய்யாது பெண்டிங்காக வைத்திருந்ததாகச் சொன்னார்கள். இப்போது அவற்றுக்குப் ப்ளானிங் கமிஷன் அப்ரூவல் கிடைத்துவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். உணவுப் பற்றாக் குறையைப் போக்க வேண்டுமானால் அந்த இரண்டு திட்டங்களையும் உடனடியாக எடுத்து நிறைவேற்றியாக வேண்டும். உணவுப் பற்றாக்குறையைப் பிரசங்கம் பண்ணியோ, பத்திரிகையில் அறிக்கைவிட்டோ போக்க முடியாது. காரியங்கள் செய்தாக வேண்டும். மற்ற எல்லா நதித் திட்டங்களையும் நாம் எடுத்து நிறைவேற்றிவிட்டோம். ஆகவே இந்த இரண்டு திட்டங்களையும் எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முதல் அமைச்சர் அவர்கள் சங்கரன் கோயிலுக்கு வந்திருந்தபோது கிரியார் திட்டத்தை எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு ஏற்கனவே இன்வெஸ்டிகேஷன் எல்லாம் பரிபூரணமாக நடத்தப்பட்டு முடிந்திருக்கிறது. இதுவரை அது அன் ரெம்யூனரேடிவ் ஆக இருக்கும் என்பதால் எடுத்துக் கொள்ளவில்லை. இனி அதைப் பார்க்காது அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதாக முதல் அமைச்சர் அவர்கள் மக்கள் மத்தியில் சொன்னார்கள். அந்தத் திட்டத்தையும் உடனடியாக எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்பதாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நண்பர் மதியழகன் பேசினார்கள். நூற்றுக்கு நூறு அவருடன் நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த நாட்டில் ஜனநாயகம் வளர்க்கப்பட வேண்டும். அதுவும் குறிப்பாக தமிழர்கள் ஜனநாயகப் பண்பு படைத்தவர்கள். அந்த ஜனநாயகப் பண்பை உருக்குலைக்கிற அளவில் நாட்டில் அராஜகத்தை யார் தூண்டி விட்டாலும் அதை அரசாங்கம் அடக்கி ஒடுக்கியாக வேண்டும். அதற்கான தைரியம் மக்களிடத்திலும் இருக்கிறது. நண்பர் மதியழகன் சொன்னமாதிரி ஒரு சம்பவம் இருக்குமானால் அது மிகமிகக் கண்டிக்கத்தக்க சம்பவமாகும். அதேநேரத்தில் ஒன்று சொல்கிறேன். மற்ற மாநிலங்களிலே இன்றையதினம் அராஜகம் தலைவிரித்தாடுவதைப் பார்க்கிறோம். மிரட்டலால் ஒரு காரியத்தை சாதித்துக் கொள்ளலாம், உருட்டலால் ஒரு காரியத்தைச் சாதித்து கொள்ளலாம், உண்ணாவிரதம், பலாத்காரம் இவற்றினால் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்கிற போக்கு ஒடுக்கப்பட வேண்டும். தேர்தல் வர இருக்கிறது. மக்கள் ரகசிய முறையில் ஓட்டுப்போடப் போகிறார்கள். அதற்கு மத்தியிலே நாட்டிலே என்ன நடக்கிறது, தமிழகத்திலே சரித்திரம் இருக்கிறது. எத்தனை எத்தனையோ அராஜகங்கள் நாட்டிலே இருந்தன. அதற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் என்ன சம்பந்தம் உண்டு என்பதை மக்கள் அறிவார்கள். நாமும் மூன்று தேர்தல்களை நடத்தியிருக்கிறோம். நெல்லை மாவட்டத்திலே காங்கிரஸ் தலைவராக இருந்து நானும் தேர்தல் நடத்தியிருக்கிறேன். பரிபூரணமாக என்ன நடந்தது என்று எனக்கும் தெரியும். என்னுடைய கண்ணுக்கு முன்னால் தெரிகிறது. எத்தனை அராஜகங்களைத் தூண்டினார்கள், தூண்டி இருக்கிறார்கள், தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். என்பதும் தெரியும். நான் காங்கிரஸ்காரன், காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலை நடத்தியிருக்கிறேன். அராஜாகத்தின் மூலம் ஜனநாயகத்தை ஒழித்துவிடலாம் என்று நினைத்து அராஜகத்தைத் தூண்டிக்கொண்டு இருக்கின்ற கட்சியும் எனக்குத் தெரியும் அராஜகத்தின் மூலம் நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடிய கட்சியும் இந்த நாட்டிலே இருக்கிறது எனக்குத் தெரியும். திரு. கலியாணசுந்தரம் அவர்களும், திரு. மதியழகன் அவர்களும் ஜனநாயகம் வளர்க்கப்பட வேண்டுமென்று கொள்கை யளவிலே ஒப்புக் கொள்கிறார்கள். பார்த்தோமே, துப்பாக்கிச்சூடு நடந்தது ; ரத்தக் கறையுடன் வந்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள், பாருங்கள் என்று சொன்னார்கள். ரத்தக் கறையுடன் இருக்கிறார் என்று ஓட்டுப் போடாமலா இருக்கிறார்கள் ? அராஜாகத்தை முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அடக்கினார் என்று ஓட்டுப் போட்டார்கள். ஜனநாயகம் வேண்டுமானால் அராஜகம் இருக்கக் கூடாது. மக்கள் சுகமாக இருக்க வேண்டும். ரோடிலே மக்கள் நடக்க வேண்டும், வீட்டிலே சுகமாக இருக்க வேண்டுமானால் ஜனநாயகம் இருக்க வேண்டும். அரசாங்கம் ஜனநாயகத்தைக் காப்பதற்காக எவ்வளவு தைரியமாக அராஜகத்தைச் சந்தித்தார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலுசரி, எந்தப் பாகுபாடும் பாராமல் அராஜகத்தைத் தூண்டினால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீஸாரைத் திட்டலாம். ஆனால், மக்களுடைய உடைமைகளைக் காப்பாற்றுகின்ற சக்தி அவர்களின் கையில்தான் இருக்கிறது. (மணி

அடிக்கப்பட்டது). அந்த முறையிலே அராஜகத்தைச் சமாளித்து ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு தைரியமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கனம் சபாநாயகர் அவர்கள் மணி அடித்ததால் நான் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய பகுதியிலே மேட்டூர் அணையிலே நீர் மிகவும் குறைவாக இருந்த காரணத்தாலே இரண்டு ஆண்டுக் காலமாக அங்கு இருக்கக்கூடிய மேட்டூர் வலது கரை, இடது கரை வாய்க்காலுக்குத் தண்ணீர் விடாமல் இருந்தாலும், இந்த ஆண்டு நீர்த் தேக்கம் நல்ல முறையில் உயர்ந்திருப்பதன் காரணமாக அங்கு தண்ணீர் விடக்கூடிய காலம் இதுவாக இல்லாமல் இருந்தாலும்கூட, நவம்பர் மாதம் பதினைந்தாம் தேதி அந்தப் பகுதிகளுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் விடுகின்ற நிலை ஏற்பட்டதற்கு, நான் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் சார்பிலே அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உப மானியக் கோரிக்கையில் விவசாயத்திற்கு அதிகத் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அங்கு இருக்கக்கூடிய நிலைமையையும் நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்பொழுது நவம்பர் மாதம் 15-ம் தேதி தண்ணீர் விடுகிறார்கள் என்றால் இந்த ஆண்டுதான் தண்ணீர் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு முதலாவதாக திறந்துவிடுகிறார்கள் என்ற காரணத்தாலே விவசாயிகள் விதைக்கு வேண்டிய நெல் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாக ஒரு பட்டணம் படி ரூபாய் 2 அல்லது 2½-க்குக்கூட வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். நெல் கிடைப்பது அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்பதை நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது ஒரு இடைக்கால . . . (மணியடிக்கப்பட்டது.)

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் தலைவரவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டின் மூலம் சில நல்ல காரியங்களுக்காக முதலமைச்சர் அவர்கள் நிதி கோருகிறார்கள். அதைப்பற்றி விவாதம் நடக்கக் கூடிய இந்தச் சமயத்திலே நமது ராஜ்யத்தில் ஒருபுறம் விபத்தும் மக்களுக்கு நேர்ந்துள்ளது. கடுமையான புயலும், மழையும் வெள்ளமும் அதனால் பலவித சேதங்களும் தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு போன்ற ஜில்லாக்களிலும், சென்னை நகரத்திலும் ஏற்பட்டு, மக்கள் அவதியுறுகிறார்கள். அவர்களுக்கு நான் அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கஷ்டங்களை தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் நாளை தினம் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எல்லா கட்சிகளும், குறிப்பாக என்னுடைய கட்சி எல்லாவித ஒத்துழைப்பும் கொடுக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்த நிலைமையினால் அதிகச் செலவு ஏற்படக்கூடிய நிலைமையில், நிதி வசதி பட்ஜெட்டையே மீறிப் போகக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை உணர்வார்கள் என்று நினைக்கிறேன். இவ்வளவு பெரிய நஷ்டத்தைச் சரிக் கட்டுவதற்கு நிதி நிலைமையைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மத்திய அரசாங்கம் என்ன நிதி உதவி செய்திருக்கிறது என்பது தெரியவில்லை. பீகார் மற்ற மாநிலங்களிலே இதுபோன்ற விபரீத்துக்கள் ஏற்பட்டவுடன் பிரதம மந்திரியவர்கள் உடனே பறந்து செல்கிறார்கள். ஆனால் அவர்கள் இங்கே பறந்து வந்து பார்க்கிற நிலைமைக்கு முதலமைச்சர் அவர்கள் இல்லை. மத்திய அரசாங்கமும் இந்த நிலைமையை உணர்ந்திருப்பார்கள். அவர்கள் இங்கே வந்து பார்க்காவிட்டாலுங் கூட இங்கேயுள்ள நிலைமையைப்பற்றி ஒரு அனுதாபம் உண்டா என்றால் இல்லை. ஜனாதிபதி அவர்களிடமிருந்தும், பிரதம மந்திரியவர்களிடமிருந்தும் எந்தவிதமான அனுதாபச் செய்தியும் காணோம். இது எவ்வளவு பெரிய விபத்து என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. இந்த விபத்தினால் வீடூர் நீர்த்தேக்கம் உடைந்து பெருஞ் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அது உடைந்ததற்கு உள்ள காரணம், சேதம் எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி யெல்லாம் நல்லமுறையிலே உயர்தர அதிகாரியைப் போட்டு பகிரங்க விசாரணை செய்ய வேண்டும். இது எதனால் வந்தது, கட்டட முறையினால் உள்ள கோளாறு அல்லது காண்ட்ராக்ட் முறையிலே ஏற்பட்ட கோளாறு என்பதைப்பற்றி பகிரங்க விசாரணை செய்ய வேண்டும். பண்ணினால் அணைக்கட்டு கட்டக்கூடிய முறை நம்முடைய ராஜ்யத்திலே ஒப்புக்கொள்ளப் பட்ட முறை. ஆகவே, அந்த அமைப்பிலே கோளாறு அல்லது காண்ட்ராக்ட் விடப்பட்டவர்களிடம் ஏற்பட்ட கோளாறு என்பதை யெல்லாம் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பு, பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும், இலாகாவிற்கும் உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு இதற்குத் தனியாக விவாதிக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கும்பொழுது மற்ற விவரங்களையும் கூறிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மதிப்பீட்டில் அதிக நிதி கோருகிறார்கள். நிலவரியைப் பற்றி ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் அதைப்பற்றிய செய்திகளை முதலில் பத்திரிகை களில்தான் பார்த்தேன். அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து இந்த அறிக்கையைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பமும் கிடைத்தது. அறிக்கையைப் பார்த்த பிறகுதான், இதைச் சாதுர்யமாக செய்திருக்கிறார்கள், பண வசதியைக் கண்காணித்துச் செய்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. நிலவரியிலிருந்து பூராவாக எல்லோருக்கும் விதிவிலக்குக் கொடுப்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது? ஏழைகளுக்குப் பூராவாகக் கொடுக்க வேண்டியது அவசியந்தான். ஐந்து ஏக்கர்களுக்குக் குறைந்த அளவில் வைத்துள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் தீர்வைக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் இந்த அறிக்கையைப் பார்த்தால் இருக்கக்கூடிய எல்லோருக்கும் அடியோடு வரியை ரத்துச்

7th November 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

செய்யக்கூடிய யோசனை இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் சிறிய நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் ஐந்து ஏக்கருக்குக் குறைவாகவுள்ளவர்களுக்குத்தான் விதி விலக்கு பூரணமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது, என்று முடிவுசெய்தால் அந்த யோசனை சிறந்ததாக இருக்கும். அதற்குமேல் இருக்கின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா, கொடுக்க வேண்டிய நியாயம் இருக்கிறதா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பார்க்க வேண்டும்.

ஒரு வருஷத்திற்கு முன்னால் நில வரியை 25 சதவிதம் உயர்த்த வேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்பட்டது. எதிர்க் கட்சியினர் எல்லோரும் அதை ஆட்சேபித்திருக்கிறார்கள். அதற்குள்ளே இப்போது என்ன நிலை மாறிவிட்டது? வெள்ளைக்காரன் காலத்து நிலவரி அமைப்பையே மாற்ற வேண்டுமென்று 15 ஆண்டு காலமாகப் பல சந்தர்ப்பங்களிலே கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் புறக்கணித்து விட்டு, நில வரியைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டே போனவர்கள் 'நிலவரியை எடுக்க இப்போது தக்க நிலை ஏற்பட்டிருக்கிறது' என்று அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். போன வருஷம் பேசும்போது மத்திய அரசாங்க உதவி கிடையாது, நில வரியை உயர்த்தத்தான் வேண்டுமென்று பேசினார்கள். பன்னிரண்டு மாத காலத்திற்குள்ளாக என்ன நிலைமை மாறி விட்டது? தேர்தல் வரக்கூடிய நிலைமை ஒன்றைத் தவிர வேறு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். இப்போது சிறு வியாபாரிகளும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு லட்சம் ரூபாய்க்குள்ளாக வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்கு வரியிலிருந்து விலக்குக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. கோரிக்கை நியாயமானதுதான்; கொள்கையளவில் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். அவர்களுக்கும் சலுகை கொடுக்க வேண்டுமென்பதை ஒப்புக் கொள்கிறேன். இதையெல்லாம் பரிசீலித்து சரியான வரிக் கொள்கையை அமல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தேர்தலுக்காகவோ அல்லது அவர்களுடைய கட்சி முடிவு எடுத்துவிட்டது என்பதற்காகவோ நிலவரி பூராவையும் ரத்து செய்கிறோம் என்று சொல்வது சரியாக இருக்காது. அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்ற யோசனையைக் கூறிக்கொள்கிறேன்.

சூப்பர் மார்க்கெட் அமைத்ததைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சூப்பர் மார்க்கெட் அமைக்கலாம் அதனால் அதிகமான பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடும். இருக்கக்கூடிய கஷ்டம் அவர்களும் இந்த விலைக்கு வாங்கித்தான் விற்க வேண்டியிருக்கிறது. உற்பத்தியாகக் கூடிய இடத்திலேயே விலைகள் ஏறிக் கொண்டிருக்கின்றன. சூப்பர் மார்க்கெட் இடையில் இருக்கக்கூடியவர்கள் லாபம் சம்பாதிப்பதைக் தடுக்கக் கூடிய ஒரு அம்சமாகத்தான் இருக்கிறதே தவிர, விலைவாசியைக் குறைக்கப் பெரும் நடவடிக்கை என்று பெருமைப் படவோ மக்களுக்கு நம்பிக்கையூட்டவோ ஒன்றும் இல்லை. தொழிலாளர்கள் நடத்துகிற கூட்டுறவு சொசைட்டிகளுக்கு அரிசி கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. நீங்கள் எங்கு வேண்டுமென்றாலும் வாங்கிக்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [7th November 1966

கொள்ளுங்கள், அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு வாங்கிக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை என்று அதிகாரிகளே சொல்லக் கூடிய நிலைதான் இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள், சூப்பர் மார்க்கெட் ஆகியவை மூலம் உணவு விநியோகம் சரியாக நடை பெற்று விடும் என்று சொல்ல இடம் கிடையாது என்பது சமீபத் திய அனுபவத்திலிருந்து விளங்குகிறது.

ஹாண்ட்லூம்சுக்காக 50 லட்சம் ரூபாய் ஸ்டேட் சொசைடி களுக்கு ஒதுக்குவதற்காக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதிகாரமாகக் கூடக் கேட்கலாம், தீபாவளிக்கு இரண்டு மூன்று நாட்களே இருக்கும் நிலையில்கூட, துணிகள் தேங்கிக் கிடக் கின்றன. விற்பனை ஆகவில்லை என்ற புகார்தான் கூட்டுறவு சொசைடிகளிலிருந்தும், நெசவாளர்களிடமிருந்தும் வந்து கொண் டிருக்கின்றது. நெசவாளர்களுக்குப் போதுமான வேலை கிடைக்க வில்லை. விலைவாசி உயர்வின் காரணமாக சாப்பாட்டுக்கும், வீட்டு வாடகைக்கும் அதிகமாகச் செலவு செய்யக்கூடிய நிலையில் மற்ற வற்றை வாங்கக் கூடிய சக்தி குறைந்திருப்பதன் காரணமாக துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே, அவர்களுக்குத் தக்க உதவி செய்யவேண்டும்.

நம்முடைய ராஜ்யத்தில் பீடித் தொழிலாளர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்காக மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் விதி களைப் பிறப்பிக்கின்ற அதிகாரத்தை ராஜ்ய சர்க்காருக்குக் கொடுத் திருக்கிறார்கள். சீக்கிரமாக விதிகளைப் பிறப்பித்து அமல் நடத்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, நேரம் மிகக் குறைவாக இருப்பதாலே, சில மேற்கோள்களைப் படிக்காமல் அந்தந்த எண்ணிக்கைகளை மட்டும் சொல்லிவிட்டு நான் பேசுவ தற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். அதை அப்படியே ப்ரொசீ டிங்சில் எடுத்துக் கொண்டு விட்டால் போதும் என்று முதலிலே விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

இந்த உப மானியக் கோரிக்கையிலே பல விஷயங்கள் குறிப் பிடப்பட்டிருக்கின்றன. இப்போது உப மானியத்தைப் பற்றி மட்டுமே பேச எண்ணுகிறேன். இதிலே பலரும் முக்கியமாகக் குறிப்பிட்டது, நில வரி முழுவதும் நீக்கப்பெறுவதற்காக வழி வகைகள்—நேரடியாகக் கணக்கிலே காட்டப்பட முடியாவிட் டாலும் உரையிலாவது காட்டப்பட்டிருக்கலாம்—காட்டப்பட வில்லை. அதை அந்தக் குறிக்கோள்—கட்சிக் கண்ணோட்டத்தில் சொல்ல விரும்பவில்லை; யார் சொன்னார்கள் என்ற பரிசிலனைக்குக் கூடச் சொல்லவில்லை—நிலவரி ஒழிக்கப்பட வேண்டுமென்பது காந்தியடிகள் இருந்த காலத்திலிருந்து வருகின்ற ஒன்று. அதைத் தான் சுதந்திரக் கட்சி பிறந்தது முதல் சொல்லி வந்தது. பெருமை யோ, பாராட்டுதலோ வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

7th November 1966] [திரு. சா. கணேசன்]

இதை இன்று எல்லாக் கட்சிகளும் கிட்டத்தட்ட ஒப்புக் கொண்டாகிவிட்டது. அப்படி ஒப்புக் கொண்டு விட்ட பிறகும் கூட அதைப் பற்றி ஆராய்வதற்கு என்ன நியாயமிருக்கிறது? காலம், உழைப்பு, பணம் இவற்றையெல்லாம் விரயம் செய்து ஆராய்ச்சி புரிந்து அதைக் கணிக்கிறோம் என்று சொல்வது இருக்கிறதே அது தேவை இல்லாத, நியாயம் அல்லாத, முறை அல்லாத ஒன்று என்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது ஏற்கனவே கனம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட நிலையில் இருந்து நில வரி 1963-ல் 25 சதமானம் கூட்டப்பட்டது. 1965-ல் 25 சதமானம் கூட்டப்பட்டது. ஆக, 1963-க்கு முந்தி 100 ரூபாய் கட்டியவர்கள் இன்று 150 ரூபாய் கட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதிலே, இப்போது 25 சதமானத்தைக் குறைத்திருக்கிறார்கள். ஆகவே, 125 ரூபாய் வரி கட்டும் அளவிலே இருக்கிறது. இது நியாயம் அல்ல. நிலவரி நீக்கம் என்பது எல்லோரும் ஒப்புக் கொண்டு விட்ட ஒன்று, நியாயம் என்று கருதப்பட்டுவிட்ட ஒன்று. ஆகவே, அதிலே உள்ள லாப நஷ்டத்தை இப்போதுள்ள கணக்கைப் பார்த்துக் கொண்டு செய்ய வேண்டுமென்று நினைப்பது அவசியமில்லை. இதற்கான காரணங்களைப் பலமுறை இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். பாதிக்கு மேல் வருமானம் அதை வசூலிப்பதிலேயே செலவாகிவிடுகிறது. காரைக்குடி காங்கிரஸ் மாநாட்டில் பேசிய கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் கூட, பாதிக்கு மேல் அதை வசூலிப்பதற்கே செலவாகி விடுகிறது என்ற கணக்கையெல்லாம் காட்டி ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த வரியை முழுக்க முழுக்க ஒழித்துவிட வழிவகை செய்யாமல் இருப்பது பாராட்டத்தக்க ஒன்று அல்ல. கனம் கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்ட போது வரம்பு கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அது தேவையில்லை. முழுக்க முழுக்க நிலத்திற்கு வரியை எடுத்து விட வேண்டும். ஏராளமான நிலம் வைத்திருப்பவர்கள் விவசாய வருமான வரியாகக் கொடுக்க வழி செய்ய வேண்டும். (திரு. எம். கலியாணசுந்தரம்: அதை நான் 'சப்போர்ட்' செய்கிறேன்.) கனம் கலியாணசுந்தரம் அவர்களும் 'சப்போர்ட் செய்கிறேன்' என்று சொல்லிவிட்ட காரணத்தால் நான் சொல்லுகிற கட்சியிலே நியாயம் இருக்கிறது என்று அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அந்த அளவுக்கு திருப்தி என்று சொல்லி மேலே செல்லுகிறேன். அப்படிச் செய்யாமல் வரம்பு கட்டினால், ஐந்து ஏக்கர் 3 ஏக்கர், 2 ஏக்கர் என்று பிய்த்துக் கொண்டு போகும் நிலைமைதான் ஏற்படும்.

கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி இதிலே வந்திருக்கிறது. கூட்டுறவுத் துறையைப் பற்றிய தத்துவம் நம் எல்லோருக்கும் தெரியும். கோவாப்பரேஷனின் அடிப்படையை ஓரளவு படித்திருக்கிறேன். இந்த மாநிலத்திலே நடப்பது எல்லாம் சொசைடிகள், ஸ்டோர்கள், பல்வேறு நிறுவனங்கள் எல்லாம் கோவாப்பரேஷன் என்ற தத்துவத்தின்படியே நடக்கிறதா என்று நெஞ்சிலே கை வைத்துப் பார்த்துச் சொல்லட்டும். முழுக்க முழுக்க கோவாப்பரேஷன் என்ற

[திரு. சா. கணேசன்] [7th November 1966

தத்துவத்திற்கு முற்றிலும் மாறுன முறையில்தான் நடக்கின்றன என்று பல முறை நிரூபித்துக் காட்டி இச் சபையில் சொல்லி யிருக்கிறேன்.

இப்போது நடக்கிற கூட்டுறவுத் துறையில் மோசடி மிக அதிகம், நஷ்டம் மிகப் பெரிது, ஒழுக்கக் குறைவு வளர்ந்து வரு கிறது, பொறுப்பின்மை பரவலாகிவிட்டது. இதைத்தான் கூட்டுறவுத் துறையிலே இன்று காண்கின்றோம்.

சரக்குகள் மிஞ்சி விட்டன. கைத்தறித் துணிகள் தேங்கி விட்டன என்று கஷ்டப்படுவதாகச் சொன்னார்கள். அதை ஓரளவு ஒப்புக் கொள்கிறேன். கோவாப்பரேஷன் நடக்கிற நெறி யைப் பார்க்க வேண்டும். பல இடங்களில் சுற்றிப் பார்த்து விட்டு வந்துதான் பேசுகிறேன். மெமோரியல் ஹாலில் கைத்தறித் துணி கள் 25 சதவிகிதம் குறைத்து விற்கப்படுகிறது என்று விளம்பரம். அவ்வாறு பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்ட விளம்பர சார்ஜ் மட்டும் ஆயிரத்தில் இருந்து மூவாயிரம் வரை வந்திருக்கிறது. அங்கே நான் போனேன். 9 மணிக்குக் கடை திறக்கும் என்று போட்டிருந்தார்கள். நானும் சர்க்கார் இலாக்கா எஞ்சினியர் ஒருவரும் காத்துக் கொண்டிருந்தோம். கடை திறக்கப்படவில்லை. ஒன்பதே முக்கால் மணிக்குக் கடையைத் திறந்தார்கள். உள்ளே சென்றால் பழம்பொருள் சாமான்களை வைத்திருக்கும் காட்சிக் கூடம் போல் இருந்தது. நான்கு வேட்டி சேர்ந்தாற்போல்—ஒரே மாதிரி கரையிலே அல்ல—பத்தாம் நம்பர் நூலோ, 12-ம் நம்பர் நூலோ, அந்த வகையில் கிடைக்கவில்லை. அந்த மெமோரியல் ஹாலுக்கு வாடகை ஒரு நாளைக்கு 100 ரூபாய். அங்கு 12 பேர் வேலை பார்க்கிறார்கள். இதையெல்லாம் எண்ணிக் கொண்டு வந்தேன். அவர்களுக்கு என்னதான் குறைவாகச் சம்பளம் கொடுத்தாலும் ஒரு நாளைக்கு 100 ரூபாய் சம்பளம் வந்து சேரும். அங்கு மொத்த விற்பனை 500 ரூபாய்க்குக் கூட ஆகவில்லை. என்ன ஆகும் கதை? இந்த மாதிரி அக்கிரமங்கள் நடைபெறுகின்றன. இதை விரயம் என்றுதான் சொல்லவேண்டும். கொடுமையான, பாபகரமான விரயம் என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி இந்தத் துறை இயங்குகிறது.

12-30 p.m. எங்கு போய்ப் பார்த்தாலும் சரி இந்தக் கேவல நிலையே காணப் படுகின்றது. இவற்றையெல்லாம் தணிக்கை செய்யவேண்டும். காமதேனுவைப் பற்றிச் சொன்னார்கள், அதை நான் முழுக்க முழுக்க சுற்றிப்பார்த்தேன். 7½ மணி அடித்தால் அங்குள்ள ஆட்கள் பேசவே மாட்டேன் என்கிறார்கள். வெளியில் உள்ள பங்க் ஷாப்பில் ஸன்லைட் சோப் வாங்குகிறேன் வேட்டி துவைக்க. வெளியில் 68 காசுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறேன். முதலில் ஸன்லைட் சோப்பின் விலையைக் கேட்டேன் காமதேனுவில். விலை 73 காசு. ஸ்டான்டெர்ட் ரேட்டில் விற்கப்படும் பொருள் இது. வெளி யில் ஸன்லைட் சோப்பின் விலை 68 காசு, காமதேனுவில் அதன் விலை 73 காசு. விலை குறையுமா? குறைக்கவே முடியாது. காமதேனு வின் அடிப்படையில் பார்த்தால் விலை உயராவிட்டால் கட்டுப்பாடு

7th November 1966] [திரு. சா. கணேசன்]

ஆகாது. அக்கட்டடத்திற்கு மாத வாடகை 25,000 ரூபாய். கத்திரிக்காய், வாழைக்காய், புடலை இவை வைக்க தளவாடச் சாமான் கொள்முதல் செலவு ரூ. 7 லட்சம். நாள் ஒன்றுக்கு அங்கு ஏற்படுகிற சம்பளம், பிற வேறு செலவுகளைப் பார்த்தால் 5,000-ல் இருந்து ரூ. 7,000 வரையில் வரும் என்பது என் குத்துமதிப்பான கணக்கு. இந்த நிலையில் தினம் ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்றால் தான் தன்னைக் கட்டிக் கொள்ளும், நோ லாஸ் நோ ஃப்ராஃபிட் என்ற முறையில். என்ன நடக்கப் போகிறது? நிச்சயமாக லாபம் வராது என்பது மட்டுமல்ல, அது பெரிய நஷ்டத்தைத் தரப் போகிறது, கஷ்டத்தைத் தரப்போகிறது. நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை என்ற நிலை வரப்போகிறது என்பதை ஊகித்தறிய பெரிய அறிவு நமக்குத் தேவையில்லை, சாதாரண சிறிய அளவி லுள்ள பகுத்தறிவு போதும். இந்த மாதிரி நிலையில் நாம் போகக் கூடாது. அதற்கு மேலே ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் தலையில் ஒரு கோரிக்கை போட்டிருக்கிறார்கள்.

"To meet the expenditure connected with a judgment of the Supreme Court" என்று போட்டிருக்கிறது. ஜட்ஜ்மென்ட் எதைச் சொல்லுகிறது? எதற்காக இந்த 30,100 ரூபாய் என்ற விளக்கம் வேண்டாமா? அது என்ன ஜட்ஜ்மென்ட், எதற்காக இந்த ரூபாய் என்பதற்கு ஒரு விளக்கமும் இல்லை. இப்படியிருப்பது நெறியான முறையாகாது என்பதைப் புலப்படுத் திக் கொள்கிறேன். இனி ஸ்டேட் ஹௌசிங் போர்ட். முதலில் சொன்னது மூன்றாவது கிரூண்டில் வந்தது. ஏழைகளுக்காகவும், மற்றவர்களுக்காகவும் என்று ஸ்டேட் ஹௌசிங் போர்டிலிருந்து பிளாட்ஸ், (Flats) தளங்கள் கட்டுகிறார்கள், ஏழைகளுக்காக. ஒரு தளம் 90,000 ரூபாய். தமிழ்நாட்டில், சென்னையில் தளம் கட்டவேண்டுமா? எங்கு நிலப் பரப்பு அதிகம் இல்லையோ அங்கு வானத்தை நோக்கி கட்டடங்கள் போக வேண்டும். தரையில் கட்டு வதற்கு 100 ரூபாய் ஆகும் என்றால் இரண்டாவது தளத்தில் அதே போல் கட்ட 130 ரூபாய் ஆகும், மூன்றாவது தளத்தில் கட்ட 160 ரூபாய் ஆகும். ஏழாவது தளத்திற்குப் போனால் 250 ரூபாய் செலவு ஆகும். தமிழ்நாட்டில் ப்ளாட் சிஸ்டம் தேவையா? ஒன்று விழுந்துவிட்டால் எல்லோரும் செத்தார்கள்; ஆம் எல்லோரும் கூண்டோடு கைலாசம் போகவேண்டியதுதான். கூட்டுறவு வேண்டும். ஆனால் தீமைக்கு ஆளாவதற்கு, கேடு வருவதற்கு கூட்டுறவு ஒத்துழைப்பு வேண்டுமா? இது பயித்தியக்காரத்தனம், தீமையானது. ஒரு ப்ளாட்டின் விலை 90,000 ரூபாய், பின்னர் 65,000 ரூபாய், 40,000 ரூபாய் என்றிருக்கிறது. அதுவும் ப்ளாட். ஒரு மல்லி, கீரைத்தண்டு கூட போடமுடியாது. தமிழ்நாட்டில் வசிக்கிறவன் ஒரு கிச்சன் கார்டனாவது வைத்துக் கொள்ள வேண்டாமா? இதுமாதிரிப்பட்ட பல்வேறான தீமைகள் எல்லாம் நிவர்த்திக்கப்படவேண்டும். அவற்றையெல்லாம் நிவர்த்திக்கக் கூடியதாக இது காட்டப்படவில்லை.

கடைசியாக, நான் சதாசொல்வது, எழுதுபொருள் அச்சுத் துறை. மார்ச் மாதம் முடிந்த டிபெட்ஸ் காப்பி இன்னும் வந்து சேரமாட்டேன் என்கிறது. இதை விடத் தடங்கல் என்ன வேண்டும்? இங்கிலாந்தில் பார்த்தால் அடுத்த வாரமே அவர்களுக்கு பூரா நிகழ்ச்சி நிரலும் கைக்கு வந்துவிடுகிறது. (மணியடிக்கப்பட்டது). எம்பளத்தை எடுத்துக் கொண்டால் அவை இன்னும் திருத்தப்படவில்லை. அதைவிட மானக்கேடு வேறொன்றில்லை. இதை கட்சிக் கண்ணோட்டத்தில், நம் பண்பாட்டுக் கண்ணோட்டத்தில் பார்க்கிறபோது தவறாக இருக்கிறது. நம் திறமையை, கௌரவத்தைப் பாதிப்பதாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனிக்கவேண்டும், திருத்த வேண்டும், நெறிப்படுத்த வேண்டும் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, 2 கோடி, 91 லட்சம் ரூபாய்க்கான துணை மானியக்கோரிக்கைகள் இந்த மன்றத்தின் ஆய்வுக்காக கனம் முதல் அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ளன. 2 கோடி, 91 லட்சத்திற்கான துணை மானியக் கோரிக்கைகள் பொதுப் பணித் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்குக் கீழே வரும் தலைப்புகள் இன்றியமையாதவை என்று இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அண்மையில் எதிர்பாராத வகையில் அடித்த புயல் காரணமாகவும், பெய்த பெரு மழை காரணமாகவும் பல சேதங்கள் ஏற்பட்டு அணைக்கட்டுகள் உடைபட்டு சில பல ஏரிகளில் ஆங்காங்கு உடைப்பு ஏற்பட்டு சேதங்கள் ஆங்காங்கே ஏற்பட்டிருக்கிற தன்மையும் பற்றி நாம் எல்லோரும் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறோம். புயலின் காரணமாகவும், பெரு மழை காரணமாகவும் அவதிக்குள்ளாகி பெரும் துயரங்களையும், துக்கத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு இந்த மன்றத்திலுள்ள நாம் அனைவரும் அக்கறை செலுத்துகிற முறையில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது ஏற்பட்டிருக்கிற சேதத்தின் அளவைப் பார்க்கிறபோது பத்திரிகைகளில் வந்திருக்கிற செய்திகளின் அடிப்படையில் சுமார் இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு செலவுகள் செய்தால்தான் பழுது ஏற்பட்ட அணைக்கட்டை சீர் செய்யவும், ஏரிகளைச் சீர் செய்யவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவிற்கு நிவாரணம் அளிக்கவும் வழிவகை இருக்கக்கூடும் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. ஆனால், கனம் முதல் அமைச்சர் அவர்கள் அதுபற்றிய விவரமான அறிக்கையை நாளைய தினம் எடுத்து வைப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதில், ஏற்பட்டிருக்கிற உண்மை நிலைமை அறிந்து கொள்ள முடியும். புயல் வீசிய அன்று ஏற்பட்ட சேதம் பற்றி வந்து கொண்டிருந்த சேதத்தின் அளவைவிட புயல் நீங்கிய பிறகு வருகிற அன்றாடம் செய்திகளைப் பார்க்கும்போது பெரும் அளவிற்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது, உயிர் இழப்பு ஏற்படுகிற அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற தன்மையைப் பார்க்கும்போது இப்போது கேட்கப்படுகிற தொகையையும் மீறி ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு நிவாரண வேலை

7th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

களை அரசு பொறுப்பேற்று செய்யவேண்டும். நிவாரண வேலைகளைக் கவனிப்பதற்கு, பழுதுபட்ட இடங்களை சீர் செய்வதற்கு பெரும் பொருள் செலவழிக்கும் நிலை ஏற்படும். அது இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் ஏற்படக்கூடும். இப்போதைய நிதிநிலைமையைப் பொறுத்து அதைத் தாங்கக்கூடிய நிலைமை மாநில அரசுக்கு அமைந்திருக்கிறதா என்பதை முதல் அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையை வைக்கிறபோது தெரிவிப்பார்கள் என்று கருது கிறேன். மாநில அரசு மட்டுமே அப்பெருஞ்சுமையைத் தாங்கக் கூடிய நிலை இல்லாது இந்திய அரசின் உதவியை பெரும் அளவிற்குப் பெறுவதன் மூலமாகத்தான் இப்போது ஏற்பட்டுள்ள சேதங்களை ஓரளவிற்கு நிவர்த்திக்கவும், நிவாரணம் அளிக்கவும் வழிவகை ஏற்படும் என்று கருதுகிறேன். அந்த வகையில் மாநில அரசு எத்தகைய முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதை முதலமைச்சரவர்கள் தமது அறிக்கையில் தெளிவு படுத்துவார்கள் என்று கருதுகிறேன். மேலும் நஷ்ட ஈடு கொடுப்பதில், பலர் தங்கள் குடிசைகளையும், உடமைகளையும் இழந்து நிற்கிறார்கள். கீழ்க் கடற்கரையோரப் பகுதிகளில் உள்ளவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பத்து ரூபாய், இருபது ரூபாய் என்ற அளவில் நிவாரணம் கொடுக்கப்படுவதை மாற்றி குடிசையும், உடமையும் இழந்து நிற்பவர்களுக்கு கணிசமான அளவிற்கு நிவாரண உதவி செய்வதற்கான உத்தரவை மாவட்ட கலெக்டர் களுக்கு அளிப்பதன் மூலம் நிவாரண வேலைகளைச் செய்யவேண்டு மென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் வைக்கக் கூடிய அறிக்கையின் மீது அதுபற்றி விரிவாகப் பேசலாம் என்று கருதுகிறேன். திருவல்லிக்கேணித் தொகுதியைப் பொறுத்தவரை அயோத்தியா குப்பத்தில் இப் போதும் சில சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும் முன்பு தீ விபத்தினால் ஓரளவிற்கு பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்ட நிலைமையைக் கனம் உள்துறை அமைச்சர் அவர்களும், செய்தித் துறை அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்படுகிற நிவாரணம் கூட ஏறத்தாழ இரண்டு மூன்று மாதங்களாகியும் கூட இன்னும் அளிக்கப்படாத சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வலைகள் எல்லாம் இழந்து தொழில் நடத்த முடியாத அளவிற்கு இன்னும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வலை வாங்கித் தருகிற பொறுப்பு நிறைவேற்றப் படாமல் பலர் நாள்தோறும் டைரக்டர் ஆஃப் பிஷரீஸ் ஆபீசுக்கு சென்றுவரும் நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற முயற்சியில் அவர்களுக்குள்ள தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

உணவுப் பிரச்னையைப்பற்றி வருகின்ற விவாதத்தில் விரிவாகப் பேசிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். சென்னையைப் பொறுத்தவரையில் அரிசி கிடைப்பதில் மிகவும் தட்டுப்பாடு இருக் கிறது. குறிப்பாக ஹோட்டல்களில் சாப்பிடுகின்றவர்கள் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் எண்ணிக்கையில் அதிகமான

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th November 1966

பேர்கள் இருக்கிறார்கள். ஹோட்டல்களில் சாப்பிடுகின்றவர்கள் விரும்புகின்ற அரிசி உணவு கிடைக்க முடியாத அளவுக்கு அரிசித் தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றது. அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரத்தைப் பொறுத்தவரைக்கும் குறிப்பிட்ட ரக அரிசியை சாப்பிட்டு பழக்கப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் விரும்புகின்ற அரிசி கிடைக்காததன் காரணமாக அவரவர்கள் உடலுக்கும் உணவுக்கும் ஒத்துவராத முறையில் அரிசி கிடைப் பதின் காரணமாக நோய்வாய்ப்பட்டு தொல்லைப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மேலும், பச்சரிசியை உண்ணுகின்ற சூழ்நிலையில் ஏராளமான மக்கள் சென்னை நகரில் இருந்து கொண் டிருக்கிறார்கள், அவர்கள் விரும்புகின்ற அளவுக்கு பச்சரிசி கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக பெரும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைப் போக்குகின்ற முறையில் தேவையான பச்சரிசியை மேற்கொண்டு தட்டுப்பாடில் லாமல் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சூப்பர் மார்க்கெட் வைத்திருக்கின்ற அளவில் சூப்பர் மார்க்கெட் பற்றிச் சொல்லும் போது, அதை மறுக்கின்ற அளவில் எதுவும் சொல்லவில்லை. வரவேற்கிறோம் என்றாலும், இதனால் நினைக்கின்ற நோக்கம் நிறைவேறுமா என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். மற்ற இடங்களைவிடக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்கின்றன என்பது உண்மை யாக இருந்தாலும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு முழு வலிவையும் இந்த அமைப்பு பெற்றிருக்கிறதா என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். சென்னை நகரத்திலுள்ள மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் அமைந்தி ருக்கின்ற இந்த சூப்பர் மார்க்கெட்டில், பிற இடங்களை விடவும், இங்கே சென்று பொருட்களை வாங்கினால் குறைந்த விலைக்கு கிடைக்கிறது என்பது உண்மை என்றிருந்தாலும், பிற இடங் களில் ஏறியிருக்கின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்தி கீழே இறங்க செய்கின்ற அளவுக்கு இழுத்துக்கொண்டு வருகின்ற அளவுக்கு வலிவு பெற்றிருக்கிறதா என்பதில் தான் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட மார்க் கெட்டுகள் அமைப்பதோடு அரசாங்கத்தின் கடமை முடிந்துவிட வில்லை. இத்தகைய அமைப்புகளை நடத்திச் செல்லுகின்ற காலத்தில் ஏற்படுகின்ற செலவுகளைப்பற்றி ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவேதான், கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் சில விவரங்களை புள்ளி விவரங்களோடு தெரிவித்திருக்கிறார்கள். கொடுக்கப் படுகின்ற பண்டங்கள் மலிவாகக் கிடைக்கின்றன என்பது உண்மை, அதே நேரத்தில் மற்ற இடங்களில் இது போன்று தேவைப் படுகின்ற பண்டங்கள் இதே விலைக்கு விற்கப்படக்கூடிய நிலைமைக்கு கட்டுப்படுத்தக்கூடிய வலிவை இந்த அமைப்பு பெற்றிருக்கிறதா என்பதை பார்க்கவேண்டும். இதற்காக வேறு பல நடவடிக்கைகளை எடுப்பதின் மூலமாகவும், பதுக்கல்காரர்களை

7th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஒழிப்பதன் மூலமாகவும், அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதின் மூலமாகவும், இத்தகைய நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதின் மூலமாக நியாயமான விலையில் பண்டங்கள் மக்களுக்கு கிடைக்கச் செய்வதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.க்களுடைய பிரச்னை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. என்.ஜி.ஓ. க்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கத்தில் அரசு பதிவு இல்லாத சிப்பந்திகளுக்கு அவர்களுடைய ஊதியத்தை கவனித்து இன்றைக்கு அவர்களுக்கு ஓரளவு ஊதிய விகிதத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதே அளவுக்கு, மத்திய அரசு சிப்பந்திகளுக்கு எந்த அளவுக்கு சம்பளம் உயர்ந்துள்ளதோ அந்த அளவுக்கு மாநில அரசு உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருந்து வருகிறது. நமது முதலமைச்சர் அவர்கள் இந்திய அரசாங்கம் என்னென்ன உயர்வு கொடுக்கிறதோ அதை மாநில அரசு உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுப்பதாக முன்பே வாக்களித்திருக்கிறார்கள். மேலும் இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்படும் நேரத்தில் மாநில அரசைக் கலந்து கொண்டு மத்திய அரசு முடிவு எடுக்கவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருப்பதாகவும் சொன்னார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற குறைபாடு என்னவென்றால், குறிப்பிட்ட உத்யோகஸ்தர்களுக்கு மட்டும் இந்த ஊதியத்தில் வாழ்க்கை நடத்த முடியாது, என்ற நியாயம் ஏற்பட்டு விட்ட பிறகு அதே நியாயத்தை மாநில அரசும் கடைபிடிக்கவேண்டும், அதுதான் நியாயமாகவும் சரியானதாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிக் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஜல்லிப்பேட்டை அருகே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சுற்றுப் பயணம் செய்த நேரத்தில் சிலர் அவர்களை வழிமறித்துக் கலவரம் செய்திருக்கிறார்கள் என்ற நிகழ்ச்சியை குறிப்பிட்டார்கள். இதைப்பற்றித் தனிநபர் கேள்வியாக நான் கனம் உள்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். கனம் முதலமைச்சர் அவர்களுக்கும் விவரங்களை தெரிவித்திருக்கிறேன். இதிலுள்ள எல்லா விவரங்களையும் சேகரித்து சபையில் எடுத்து வைப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதன் மூலமாக உண்மையான நிலையைத் தெளிவுபடுத்தக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன். ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தேர்தல் நெருங்குகின்ற இந்த நேரத்தில் அரசியல் கட்சிகளுக்குள் மாச்சரியங்கள் ஏற்படுவது வழக்கம். ஏற்கனவே இப்படிப்பட்ட கட்சி மாச்சரிய உணர்ச்சிகள் இருக்கும் இடங்களில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கையாகவும், மிகவும் உன்னிப்பாகவும் இருந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால்தான், பொதுத் தேர்தல் அமைதியான முறை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [7th November 1966

யில் நடைபெறும். அரசியல் கட்சிக்காரர்களுக்குள் கருத்துக்கு கருத்துக்கள் மோதல்கள் இருக்கலாம். அவை மாறி ஆளுக்கு ஆள் மோதல் ஏற்படக்கூடிய வகையில் வளர்ந்து விடுமேயானால் பொதுத் தேர்தல் அமைதியான நிலையில் நடைபெற இயலாது. ஜல்லிப்பேட்டை பகுதி ஏற்கனவே கலவர உணர்ச்சி இருந்து கொண்டிருக்கிற பகுதி. அந்தப் பகுதியில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று தொடர்ந்து கருத்துக்கள் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. ஆகவே, முன் ஜாக்கிரதையாக நடவடிக்கைகள் எடுத்து முன் பாதுகாப்பாக இருந்தால் அமைதியான சூழ்நிலை ஏற்படக்கூடும். இது இன்னின்ன அரசியல் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்ல, எந்த அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் இவ்விதமான நிகழ்ச்சிக்கு இடம் கொடுக்கப்படுமானால் நல்ல முறையில் இந்த நாட்டில் ஜனநாயகம் அமையாது. ஆகவே, முன் ஜாக்கிரதையாக, ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துகின்ற வகையில், போலீஸ் துறையில் பணியாற்றவேண்டும். அமைதியை ஏற்படுத்தவேண்டும் என்கின்ற நிலையில், நடுநிலைமையில் நின்று போலீஸ் துறையில் பணியாற்றக்கூடிய வகையில், அரசாங்கம் முழு கவனம் செலுத்துதல் வேண்டும். இதைப்பற்றிய அறிக்கையை கொடுக்கும்போது, மேலும் விவரங்களைக் கேட்டுக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

மேலும், கோவையில் மருத்துவக் கல்லூரி ஏற்படப்போவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கான கட்டடங்கள் கட்டுவதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது வரவேற்கத் தக்கதொன்றுதான். கோவையில் எந்த இடத்தில் கட்டப்படவிருக்கிறது இந்த மருத்துவக்கல்லூரி என்பதற்கான விவரங்கள் அறிவிக்கப்படவில்லை. அரசாங்கம் இதற்கான இடத்தை தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். அதே நேரத்தில் கோவையில் மக்களிடையே இருக்கின்ற உணர்ச்சியை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக, மருத்துவக்கல்லூரி ஏற்படும் போது, ஊருக்கு மத்தியில் இத்தகைய மருத்துவ நிலையங்கள் இருந்தால் தான் நோயாளிகள் மருத்துவ நிலையங்களுக்கு எளிதில் வந்து சேர முடியும். இதைக் கருத்தில் கொண்டு இதற்கான இடத்தை தேர்ந்தெடுத்து, ஊருக்கு மத்தியில் மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வது சாலச்சிறந்ததாக அமையும். தஞ்சாவூரில் கூட மருத்துவக் கல்லூரி ஊரிலிருந்து தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டிலும் ஊருக்குத் தொலைவில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக நோயாளிகள் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். கோவையைப் பொறுத்தவரையில் உதாரணத்திற்காக சொல்லுகிறேன் இதுவரை இதற்காக இடம் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், கோவையில் இருக்கின்ற மத்திய சிறைச்சாலை ஊருக்கு மத்தியில் இருக்கிறது. ஊருக்கு மத்தியில் சிறைச்சாலை இருக்கவேண்டும் என்பதில்லை. சிறைச்சாலையைச் சுற்றி ஏராளமான இடங்கள் இருக்கின்றன. முடிந்தால் அந்த இடத்தையே மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும்.

7th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மருத்துவக் கல்லூரிக்குப் பக்கத்திலேயே கலைக் கல்லூரி இருக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் அதற்கான வசதியும் இங்கிருக்கிறது. இதனையும் அரசாங்கம் யோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு கடைசியாக மாநில அரசு சில சிபாரிசுகளை செய்திருப்பதாகத் தெரிகிறது, அது மகிழ்ச்சிக்குரியதொன்று தான். அதைப்பற்றியும், அதில் நிதி ஒதுக்கீடு செய்வது உணவு கொள்முதல் கொள்கை, சேலம் உருக்காலை இவை பற்றி தீர்மானம் வரும்போது விரிவாக பேசலாம் என்று எண்ணி இத்துடன் என் கருத்துக்களை கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் பொதுவான சில பிரச்னைகள் குறித்தும், சில சம்பவங்கள் குறித்தும், சில இடங்களிலுள்ள குறைபாடுகளைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஸ்தலங்களிலுள்ள குறைகளை போக்குவதற்கு அரசாங்கம் மேலும் கவனம் செலுத்தி, எவ்வளவு பரிகாரம் அளிக்க முடியுமோ அந்த அளவுக்குப் பரிகாரம் அளிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கனம் அங்கத்தினர்கள் யாருக்காவது எதையாவது குறிப்பிட வேண்டுமென்றால் அவற்றை எனக்கு எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிலவரி ஒழிப்பு பற்றி நாளைய தினமோ, நாளை மறுதினமோ விவாதம் இருக்கும் என்று நினைக்கிறேன். இப்போது ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். இந்த மன்றத்தில் நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். நிலவரியை சீர்படுத்தவேண்டும், அதை ராஷனலைஸ் செய்யவேண்டும் என்ற கருத்தை நான் இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். அதை யொட்டித்தான் நிலவரி ரத்து செய்கின்ற பிரச்னை வந்தது. 25 சதவிகிதம் சர்சார்ஜ் எமர்ஜென்சி நேரத்தில் ஏற்பட்டபோது போட்டோம். சென்ற ஆண்டு நவம்பரில் இந்த மன்றத்தில் அதற்கான தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினோம். அப்போது அது தேவைப் படுகிறது என்று சொன்னேன். இப்போது அதை எடுத்துவிடலாம் என்று அரசாங்கம் எடுத்திருக்கிற முடிவு. அதை உடனடியாக அமல் செய்ய முடியாது, நல்ல முறையில் பரிசிலனை செய்ய வேண்டும். இதை எப்படி நிறைவேற்றுவது என்பதைப் பார்த்து செய்யவேண்டும். ஒரு பக்கத்தில் 25 சதவிகிதம் சர்சார்ஜ் மட்டும் கொடுத்தது போதாது, இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இடையில் தேர்தல் வந்து தொலைகிறது. தேர்தல் வருகிறது என்பதற்காக ஒன்றுமே செய்யாமல் இருக்கவேண்டும் என்று சொல்வது நியாயமாக இராது. அந்த ஆலோசனையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்கட்சியினர் என்ன, அவர்களும் தேர்தலை யொட்டித்தான் பேசுகிறார்கள். எல்லோரும் தேர்தலை யொட்டித் தான் பேசுகிறார்கள். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்களுக்கு எப்போதுமே ஆவேசம் உண்டு. தேர்தல் நெருங்க நெருங்க

ஆவேசம் ஜாஸ்தியாக வருகிறது. ஏதோ சதித்திட்டம் என்று சொன்னார்கள். அவர் இப்படியெல்லாம் சொல்வது வழக்கம், ஐந்து வருடங்களாக கேட்டு, கேட்டு நமக்கும் பழக்கமாகிவிட்டது. எதற்காக அவர்கள் சதித்திட்டம் என்று சொல்லுகிறார்கள்? அதுவும் தேர்தலையொட்டித்தான். இன்றைக்கே செய்துவிடலாம், ஆனால், இதிலுள்ள சங்கடங்களையும் கவனிக்கவேண்டும், சர்சார்ஜ் இருக்கிறது, செஸ் இருக்கிறது. நீர்வரி இருக்கிறது. செஸ் இல்லாவிட்டால் லோக்கல்பாடிகளுக்கு ஒன்றும் செய்ய முடியாது. நிலவரி இல்லாவிட்டால், இதையெல்லாம் நிர்ணயிக்க முடியாது. இதைப்பற்றியெல்லாம் பரிசீலிக்க வேண்டும். பின்னால் அவகாசம் கிடைக்கும்போது மேலும் விளக்குகிறேன்.

நெல் கொள்முதல் செய்வதைப் பற்றிப் பலர் பேசினார்கள். இப்போது இருக்கும் நிலையில் எல்லோருக்கும் உணவு தானியம் வழங்கவேண்டுமென்றால் கொள்முதல் செய்து தான் ஆகவேண்டும். வியாபாரிகள் கையில் விட்டு விட்டால் என்ன என்றால், 1964-ல் நமக்கு ஏற்பட்ட அனுபவத்தை மறந்து விட முடியாது. அப்போது அரிசி இல்லாமல் இல்லை; அளவு கடந்து வேறு மாநிலங்களுக்கு அனுப்பி விட்டார்கள். அதனால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. கன்ட்ரோல்ட் இக்கானமி இருக்கத் தான் இருக்கும். உணவு தானியங்களைப் பொறுத்த மட்டில் 'It has come to stay' அதனால் தான் ப்ரொக்யூர் செய்கிறோம். கொள்முதல் செய்வதிலும் எல்லாவற்றையும் கொள்முதல் செய்வதில்லை. கொள்முதல் செய்வது 20 சதவிகிதம் தான் இருக்கும். ஆறில் ஒரு கடமை என்று சொன்னார்கள். ப்ரொட்யூஸ் பண்ணினதில் ஆறில் ஒரு கடமை என்று அவ்வளவா இன்று வாங்குகிறோம்? இப்பொழுது அவ்வளவு வரி கிடையாது. ஆறில் ஒரு கடமை மன்னர்கள் வசூலித்தார்கள் என்றால். . . (திரு சா. கணேசன் குறுக்கீடு) அந்த அளவு இல்லை; எல்லா வரியையும் சேர்த்தால் கூட இல்லை. ப்ரொட்யூஸ் ஆவதில் ஐந்தில் ஒரு பங்கு ப்ரொக்யூர் செய்கிறோம். மார்க்கெட்டபிள் சர்ப்ளஸைத் தான் ப்ரொக்யூர் செய்கிறோம். நியாயமான விலை கொடுக்கிறோம். கொடுக்கக் கூடியது குறைவு என்று சொல்ல முடியாது. அப்படி வாங்கி மக்களுக்கு வினியோகிக்கிறோம். தஞ்சையில் இருக்கிறவர்களுக்குக் கவலை அவர்கள் ஊர் அரிசி போய்விடுமோ என்று; வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறவர்களுக்குக் கவலை அவர்கள் ஊர் அரிசி போய்விடுமோ என்று. எல்லாம் அவர்களாக நினைத்துக்கொள்ளுவது. அவர்களாக பீதி அடைவது. தஞ்சை அரிசி எவ்வளவு கொண்டு போனோம்? எவ்வளவு விளைந்தது? கொண்டு போனது ஒரு சிறு பகுதி. இருக்கிற நிலைமையைச் சமாளிக்கவேண்டும். பண்டை காலத்திலே வேளாளர்கள் என்றால், அவர்கள் தங்களுக்காக மட்டுமல்லாமல் எல்லோரையும் வாழ வைக்கும் தொழில் செய்கிறவர்கள் என்று பாராட்டப் பட்டார்கள். பட்டினி போட்டு ஒன்றும் செய்வதில்லை. இதெல்லாம் வருவதால் தான் ஸ்டேட் டிரேடிங் வருவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. பின்னால் அவகாசம் இருந்தால் அதைப் பற்றிப் பேசுகிறேன். வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் என்றால், மார்க்கெட்டில் விலை அதிகமாக

7th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

இருக்கிறது, கொடுக்கலாம் என்று தான். இரண்டு ரூபாய், மூன்று ரூபாய், ஒரு கனம் அங்கத்தினர் ஐந்து ரூபாய்க்குக் கூட விற்கிறது என்று சொன்னார்கள்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தித்தான் 'அரிசி என்று காட்டினால் ஐந்து ரூபாய்' என்று சொன்னார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காரைக்குடியில் பார்த்தேன்; நாம் விற்பதை விடக் குறைந்திருக்கிறது. இப்போது மழை பெய்திருக்கிறது. (திரு. சா. கணேசன் குறுக்கீடு) உற்பத்தி இல்லாத இடத்தில் தான் அதிகமாக இருக்கவேண்டும். மார்க்கெட்டில் குறைந்துகொண்டுதான் வருகிறது. ஏறிவிட்டது என்று எலெக்ஷனையொட்டிச் சொல்லாம். விலை ஏறுவதை மறுக்கவில்லை. அரசாங்கம் அதைச் சமாளிப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. சூப்பர் மார்க்கெட் என்பது ஒரு வழி. ஒரு இடத்தில் சூப்பர் மார்க்கெட் வைத்துவிட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று இல்லை. நானே சொல்லி இருக்கிறேன். இப்படி வைப்பதால் சுற்றுப்புறத்தில் விலையைக் கட்டுப்படுத்தும் நிலைமை இருக்கிறது.

புயல் எதிர்பாராது வந்தது. செங்கற்பட்டில், தென் ஆர்க்காடில் ரொம்ப சேதம். சென்னை நகரில் ரொம்ப சேதம், வட ஆர்க்காடை வேண்டுமென்றாலும் சொல்லுகிறேன். ஒரு குழந்தைக்கு காய்ச்சலாக இருந்து மருந்து கொடுத்தால், இன்னொரு குழந்தை என்னை கவனிக்கவில்லை என்று சொல்லுவது போலத் தான். ப்ரெஸிடென்ட் அனுதாபம் தெரிவிக்கவில்லை என்று சொன்னார்கள். அனுதாபத்துக்கு அப்ளிகேஷன் போடுவதில்லை. இது யாருக்குமே தெரியாது. இப்போது தான் தெரிகிறது எவ்வளவு சேதத்தை ஏற்படுத்தி யிருக்கிறது என்று. வெளியில் தெரியாது. தெரிந்தால் அனுதாபம் மட்டுமல்ல, எவ்வளவு ஒத்தாசை செய்யவேண்டுமோ செய்வார்கள்.

வீட்டுக்கு மனைகள் வழங்குவதைப் பற்றி புலவர் அவர்கள் சொன்னார்கள். மனை எல்லோருக்கும் கொடுக்கிறோம். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறோம், மனைகள் கொடுக்கிறோம். மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். மனைக்கட்டு கூட இல்லாதவர்களுக்கு மனைகள் வழங்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம், நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

மருத்துவக் கல்லூரி பற்றி கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இடம் பார்த்தாகி விட்டது. மருத்துவமனையை அங்கிருந்து மாற்றப் போவதில்லை. கல்லூரிக்கு இடம் வேண்டுமே: மற்ற மாவட்டங்களை விட கோயம்புத்தூரில் கஷ்டம் அதிகம். பீளமேடு பக்கத்தில் இடம் பார்த்திருக்கிறது. 11-ம் தேதி அடிக்கல் நாட்டுவதாக இருக்கிறது. அதுவும் 25 லட்சம் ரூபாய் நன்கொடை கொடுப்பதாகச் சொன்னதால் இந்த ஆண்டிலேயே தொடங்கியிருக்கிறோம்.

மதுரை மருத்துவக் கல்லூரியில் தகராறு ஏற்பட்டது என்று சொன்னார்கள். உண்மை தான், என்னிடத்தில் சொன்னார்கள். போலீஸார் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். பலாத்காரம் நடந்திருக்கிறது; ஒருவரை ஒருவர் அடித்திருக்கிறார்கள். கல்லூரிகளுக்குள்ளே ஏதாவது நடந்தால் போலீஸார் தாங்களாகவே போக மாட்டார்கள். கல்லூரியின் பிரின்ஸ்பால் கூப்பிட்டால் போவார்கள், டீன் கூப்பிட்டால் போவார்கள். ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு கம்ப்ளெய்ன்ட் கொடுத்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். இப்போது போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், ஏறக்குறைய 22,000 ஏக்கர் நிலங்களுக்கு மின்சார சப்ளை கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகமாகும். அந்த இடங்களில் விவசாயிகள் பூரா சார்ஜும் கொடுத்தால்தான் லைன் போடுவோம் என்கிறார்கள். இது நல்ல முடிவு இல்லை. உணவு உற்பத்தியை மனதில் கொண்டு அந்த இடங்களிலெல்லாம் மின்சாரம் எக்ஸ்டென்ஷன் செய்து, பிற்பாடு டிஸ்மாண்ட்லிங் சார்ஜை மட்டும் கொடுங்கள் என்று சொல்லி, வருஷா வருஷம் டிப்ரீசியேஷன் கொடுக்கச் செய்து அந்தப் பகுதிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காரைப் பொருத்த வரையில், ஒரு வருஷம், இரண்டு வருஷத்திற்குள்ளே திட்டம் மேற்கொள்ளப் பட்டுவிடும் என்கிற நம்பிக்கை இருப்பதால். அந்தக் காலத்திற்குள்ளாக எரக்ஷன் செய்வது, பிற்பாடு டிஸ்மாண்டில் செய்வது என்கிற செலவுகள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வைப்பது சரியில்லை என்பதுதான் கருத்து. ஆனால், சிலர் தாங்களே எடுத்துக்கொண்டு செய்கிறோம் என்பவர்களுக்கு விலக்கு அளிக்கிறோம்.

[8th November 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அந்த கிராமத்திற்கு 'இளம்பிள்ளை' என்று பெயர் வரக் காரணம் என்ன என்று அறியலாமா?

கனம் சபாநாயகர்: அதை அங்கே போய்க் கேட்கவேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: யாராவது புலவர் இருந்தால் சொல்லலாம்.

தீப்பெட்டித் தொழிற்சாலை

* 505 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவகாசி சேம்பர் ஆப் மேட்ச் இன்டஸ்ட்ரீசிலிருந்து 2—9—1965 தேதியிட்ட முறையீடு வந்ததா?

(இ) அம்முறையீட்டில் என்னென்ன கோரிக்கைகள் அடங்கியிருந்தன?

(உ) அம்முறையீட்டின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் (அ) முதல் (உ) வரை சபையில் ஒரு விவர அறிக்கை[a] சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், நம்முடைய ராச்சியத்தின் தீப்பெட்டி தொழில் அபிவிருத்திக்காக, அதற்கு வேண்டிய கெமிகல்கள் எல்லாவற்றையும் தயார் செய்ய தொழில் கூட்டுறவு ஸ்தாபனம் நிறுவப்பட இருக்கிறதா, அதற்கான ஏற்பாடுகள் எந்த நிலையில் இருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி எக்ஸைஸ் ட்யூடி பற்றியும், மேச் டாக்ஸ் பற்றியும் ஆனது. அதிலிருந்து இந்த உப கேள்வி எழாது என்று கூற விரும்புகிறேன்.

Servicing Corporation

* 506 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state the action taken and the procedure followed for the equitable distribution of the raw materials procured by the Servicing Corporations in the State, to the bona fide industries in dire need?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சபைமுன் விவர அறிக்கை[b] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் சர்வீசிங் கார்ப்பொரேஷன் மூலப் பொருள்கள் எப்படி வினியோகம் செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்

a Printed as Appendix VII on page 726–727.

b 727–721-ம் பக்கங்களில் எட்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

8th November 1966]

கிறது. தொழில்களுக்குத் தேவையான அளவு, போதுமான அளவு கிடைக்கின்றனவா, பிரித்துக் கொடுக்கப்படும் மூலப் பொருள்களை வாங்குகிறவர்கள் சரியான முறையில் உபயோகிக்கிறார்களா என்று கண்காணிக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் ராஜ்யத்திலே, நம் நாட்டிலேயே, தேவையான அளவு மூலப் பொருள்கள் கிடைக்க வில்லை, என்பது எல்லோரும் அறிந்த உண்மைதான். கிடைக்கும் பொருள்களை வைத்துக்கொண்டு வினியோகம் செய்கிறோம். அசிஸ்டண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரிஸ் அடிக்கடி சென்று டெஸ்ட்-செக் செய்கிறார், கொடுத்த மூலப் பொருள்களை உபயோகிக் கிறார்களா என்று. ஆனால், அது எல்லா இடத்திலும் முடியவில்லை. ஏதாவது புகார்கள் வந்தால் விசாரிக்கிறார்கள்.

Technical education

*570 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to answer given to Question No. 165 on 10th August 1965, the reasons for the delay in starting the part-time B.E. Courses at Madras and Coimbatore?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னைப் பல்கலைக் கழகத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

* 508 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the proposals made by the Southern Regional Committee of the All-India Council for Technical Education at its 29th meeting on August 17, 1966 at the Madras University Buildings in regard to improving the standard of technical education in Madras; and

(b) the steps and measures taken in respect thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No specific proposal for improving the standard of Technical Education in Madras (or any of the other three Southern States) was made by the Committee. It only offered its recommendations on certain proposals of a routine nature referred to it by the various State Governments in the southern region. A copy of the Agenda and Proceedings of the 29th meeting is kept in the Legislature Library for reference by members.

(b) Does not arise.

Exploration of oil

* 509 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the places in the State, where arrangements are being made for the exploration by drilling for oil by the Oil and Natural Gas Commission; and

(b) the manner and basis adopted for the selection of these places?

[8th November 1966

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Oil and Natural Gas Commission has proposed to undertake drilling operation for exploration of Oil and Natural Gas in Karaikal, Shiyali, Nagapattinam, Thiruthuraipoondi and Pambari areas.

(b) These places are selected after studying carefully the available geological and geophysical data.

திரு. ஆ. கு. சுப்பையா : *திருத்துறைப்பூண்டி எண்ணெய் வள ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என்று அமைச்சர் அறிவிப்பாரா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *திருத்துறைப்பூண்டியில் ஒரு கிணறு தோண்டப்பட்டது, 1,141 மீட்டர் அளவிற்கு சென்றிருக்கிறது, அதிலிருந்து பூமிக்கு அடியில் சர்வே டேடா என்று தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எண்ணெய் இருப்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.*

திரு. மா. தண்டாயுதபாணி : *தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய் ஆராய்ச்சி நடத்துவதற்கு கிணறு தோண்டப்பட்டது. தற்போது வேறு ஒரு இடத்தில், கிராமத்தில் தோண்டப்படுகிறது. எண்ணெய் கிடைக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்களா அல்லது இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்களா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *இரண்டு முடிவுக்கும் வரவில்லை, இருக்கும் என்றோ அல்லது இல்லை என்றோ இரண்டு முடிவுக்கும் வரவில்லை. 839 மீட்டர் ஆழம் சென்றிருக்கிறது. சில டேடாக்கள் கிடைத்திருக்கின்றன. அதைக் கொண்டு ஒரு முடிவும் செய்ய முடியவில்லை.*

Bus fare (refund)

* 510 Q.—SRI V. SANKARAN : Will the Minister for Industries be pleased to state—

(a) Whether the Government are evolving any new arrangement for the quick refund of money on the cancellation of Reserved tickets by the Madras State Transport Department; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A proposal for making refunds of fares at the depots in the mofussil, which are under the control of Gazetted officers, is under consideration.

திரு. எம். எஸ். மணி : *சார், ரெயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்து, கான்சல் செய்தால், உடனே பத்து நிமிஷத்திலே சிறிது சில்லரையைக் கழித்துக்கொண்டு பாக்கியைத் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். இங்கே ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டில் ஆறு மாதம் ஆனாலும் ரீபண்ட் செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி கான்சல்,*

8th November 1966]

செய்யும்போது ஒரு எமௌண்டைப் பிடித்துக் கொண்டு, பாக்கியைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதைத்தான் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறோம். எங்கெல்லாம் கெஜடட் ஆபீசர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உடனடியாக பணத்தைத் திருப்பி கொடுக்கலாம் என்கிற யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

மதுகாச மருந்து

*524 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுகாச மருந்தை தடை செய்ய வேண்டுமென்று தென் கடலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் 2—11—1965-ல் நடைபெற்ற கூட்டம் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது. 9-30 a.m.

திரு. ஆ. தங்கவேலு: தலைவரவர்களே, மதுவிலக்கை ரத்து செய்த அரசாங்கம் மதுகாசக் கடைகளைத் தாராளமாக வைத்துக் கொள்ள அனுமதித்து இருப்பது, மது குடிப்பதை மறைமுகமாக அனுமதிப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த மதுகாசம் போன்ற பொருள்களைத் தடுக்கவேண்டுமென்று சொன்னால் இந்தியன் டிரக்ஸ் ஆக்ட்டைத் திருத்தவேண்டுமென்று அறிகிறேன். ஆகவே, அது சம்பந்தமாக நம்முடைய சர்க்கார் இந்திய சர்க்காருக்கு எழுதி, டிரக்ஸ் ஆக்டைத் திருத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மத்திய அரசாங்கம் Indian Drugs and Cosmetics Amendment Act கொண்டுவரப் போகிறார்கள். அதற்கு நம்முடைய மாகாணத்தில் விற்கக்கூடிய மருந்துகள், தேவைகள் இவற்றிலே இந்திய மருத்துவ முறைப் பிரகாரம் எவற்றையெல்லாம் அதிலே சேர்க்க வேண்டும், சேர்க்கக் கூடாது என்ற சிபாரிசுகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.

திரு. கோ. சி. மணி: இந்த மதுகாசம் குடித்து ரசீது வைத்து இருந்தும், மதுகாசம் குடித்தவர் என்று சொல்லப்பட்டும், டாக்டர்கள் மதுகாசத்திலே ஆல்கஹால் அதிகமாக இருக்கிறது

* 728–729-ம் பக்கத்தில் 9-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[8th November 1966

என்று சர்டிபை செய்ததால் நீதிபதிகள் அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்கிறார்கள். மதுவிலக்கு அமலில் இருக்கின்ற நேரத்திலே பகிரங்கமாக இதற்கு லைசென்ஸ் வழங்கவேண்டிய அவசியமென்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்திலே ஒரு குறிப்பிட்ட பர்சன்டேஜ் ஆல்கஹால் இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மதுகாசம் என்ற பெயரினால் மற்ற வற்றைச் சாப்பிடுகிறவர்கள்தான் பிடிக்கப்படுகிறார்கள். அவற்றை யெல்லாம் டாக்டர்கள் ஒப்புக் கொள்வதற்குத் தயாராக இல்லை. ஆகவே குறிப்பிட்ட பர்சன்டேஜ்க்கும் அதிகமாக ஆல்கஹால் இருந்தால் அவர்கள் குற்றம் செய்ததாகக் கருதி அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்த மதுகாசத்தினாலே பலவிதக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. இருந்தும்கூட அதிகமாக அதை விற்பதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறதே அதையாவது கட்டுப்படுத்து வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்தினாலே பலவித கோளாறுகள் வருகின்றன என்பதை ஒப்புக்கொள்வதற்கு தயாராக இல்லை. மதுகாசம் உபயோகப்படுத்தலாம் என்று அலௌவ் பண்ணித்தான் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. மதுகாசத்திலே pharmaceuticals pure alchohol போன்றவையும் விற்பனை செய்கின்ற காரணத்தினாலே டிரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் சென்று நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த நடவடிக்கையின் காரணமாகப் பலர் பாதிக்கப்படுகிறார்கள்.

பிச்சைக்கார விடுதி.

* 525 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சமீபத்தில் அமுலுக்கு வந்த பிச்சை எடுப்பு தடுப்பு (திருத்த) சட்டத்திற்கு வகை செய்யும் வகையில், பிச்சைக்காரர் களுக்கு விடுதிகள், தொழில் நிலையங்கள் முதலியவற்றை நிறுவு வதற்கு அரசாங்கம் ஆவன செய்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) புதிதாக பிச்சைக் கார விடுதிகள், தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பிச்சையெடுப்ப வர்களைத் தடுக்கின்ற சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக் கிறது. ஆனால் அதற்குப் போதுமான முன் நடவடிக்கை எடுக்கப்

படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்கள். பிச்சைக்காரர் தடுப்புச் சட்டத்தினல் பயன் விளையாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே பிச்சைக்காரர்கள் நிறையப் பேர்கள் இருக்கிருர்கள். அவர்களைப் பிடித்தால் கொண்டுபோய் வைப்பதற்கு வசதி கிடையாது. ஆகவே இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால் என்ன பிரயோஜனம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சட்டம் கொண்டு வந்த தற்குக் காரணம் இருக்கிறது. பிச்சைக்காரர்களைப் பிடித்தால் அவர்களுக்காக ஏற்படுத்தி நடத்தப்படும் விடுதிகள் அரசாங்கத் துறையிலே நடத்தப்படுபவை அல்ல. தனிப்பட்டவர்களால்தான் நடத்தப்படுகின்றன. அவர்களை அந்த விடுதிகளிலே கொண்டு வைப்பது கஷ்டமாக இருக்கிறது. பிச்சையெடுக்கின்ற நிலைமையே நாட்டிலே இருக்கக்கூடாது என்பதற்குத்தான் இந்தச் சட்டம். அந்தச் சட்டத்தின் படித்தான் பாட்டுப் பாடிப் பிச்சையெடுத்தாலும், ஆட்டம் ஆடிப் பிச்சையெடுத்தாலும் எந்தவிதமாகப் பிச்சையெடுத்தாலும் அவர்களை அவ்வப்போது பிடித்துத் தண்டிக்கலாம் என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு

* 526 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1964–65-ம் ஆண்டில் குடும்ப கட்டுப்பாடு (அறுவை) செய்துக் கொண்டவர்கள் மாவட்டவாரியாக எத்தனை பேர்கள்?

(இ) அவர்களில் இந்துக்கள் எத்தனை பேர்கள்?

(உ) முஸ்லீம்கள் எத்தனை பேர்கள்?

(எ) முனிசிபல் நகரங்களில் எத்தனை பேர்கள் விவரமாக?

(ஐ) கிராமப்புறங்களில் எத்தனை பேர்கள்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) A statement is placed on the table of the House.

(*b*) & (*c*) These particulars are not collected at the time of operation.

(*d*) 10,842.

(*e*) 19,800.

திரு. எம். எஸ். மணி: சார், இந்தக் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டவர்களிலே 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று அறியலாமா?

கனம் சபாநாயகர்: அது எல்லாம் ரகசியமாக வைத்திருக்க வேண்டிய விஷயம், வெளியிலே சொல்லலாமா? அறுபது வயதிற்கு மேல் செய்துகொண்டவர்கள் வெளியே சொல்லமாட்டார்கள்.

* Printed as Appendix X on page 729-730.

நகரசபை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

* 527 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் சிப்பந்திகளுக்கு பென்ஷன் வழங்கும் திட்டம் சர்க்காரிடமிருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அரசாங்க சிப்பந்திகளுக்கு வழங்கப்படும் பென்ஷன் போன்ற சலுகைகள் நகராட்சி சிப்பந்திகளுக்கும் வழங்க நகராட்சியிலே எந்த வருப்பு உத்தியோகங்களையும் சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசிலனையில் உள்ளது (நகராட்சியிலுள்ள கமிஷனர், என்ஜினியர், சுகாதார அதிகாரி ஆகியோர் ஏற்கெனவே சர்க்கார் உத்தியோகஸ்தர் களாக்கப்பட்டுள்ளனர். இன்னும் சில உத்தியோகங்களை சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசிலனையில் உள்ளது). இதற்காக 1920-ம் வருடத்திய நகராட்சி சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் செய்யவும் முடிவு செய்துள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஏற்கனவே சர்க்கார் சிப்பந்திகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நகரசபை சிப்பந்திகளைத் தவிர வேறு என்ன என்ன சிப்பந்திகளைச் சர்க்கார் சிப்பந்திகளாக்க உத்தேசம் இருக்கிறது? இதன் காரணமாக அரசாங்கத்தின் பொருளாதாரப் பொறுப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப் பரிசிலனை செய்திருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மானேஜருக்கு மேற்பட்ட அதிகாரிகளை சர்க்கார் அதிகாரிகளாக ஏற்றுக்கொள்ள உத்தேசித்து திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் பப்ளிக் ஒபினியனுக்காகச் சென்றிருக்கிறது. அது வந்தபிறகு அதைப் பரிசிலனை செய்யும்பொழுது கனம் அங்கத்தினர் கூறுவதையும் கருத்தில் கொள்ளலாம்.

புலவர் கா. கோவிந்தன்: நகராட்சிகள், ஊராட்சிகள் இவற்றில் பணிபுரிகின்ற கீழ்த்தர சிப்பந்திகளிடமிருந்து பிராவிடன்ட் ஃபண்ட் பிடிக்கிறார்கள். ஆனால், கணக்குச் சரியாக வைக்கப்படவில்லை. அவர்கள் இறந்த பிறகு அல்லது அவர்களுடைய மனைவிமார்கள் இறந்த பிறகுதான் பணம் கிடைக்கும்போல் தெரிகிறது. காரணம் என்னவென்றால் ஆடிட் செய்யவேண்டும், ஸ்பெஷல் ஆடிட் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படியில்லாமல் அவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கின்ற முறையைக் கொண்டுவர முன்வருவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்தக் கேள்வி நகராட்சி சிப்பந்திகளுக்குப் பென்ஷன் வழங்குவதைப்பற்றிய கேள்வி. தனிக்கேள்வி போடலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், பட்ஜெட் கூட்டத்திலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே நகராட்சியிலே பணியாற்றுகின்ற கீழ்த்தர பணியாளர்களுக்கு, பியூன் போன்ற

ஊழியர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் யோசனையில் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த யோசனை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கேட்டதற்கு ஏற்கனவே பதில் அளித்தேன். அதற்குமேல் விவரம் என்னிடம் இல்லை.

மூக்குப்பீறி பஞ்சாயத்து

* 528 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மூக்குப்பீறி பஞ்சாயத்துத் தலைவர் 1965-66-ம் வருடங்களில், அகாரணமாய் இரண்டு பஞ்சாயத்து மெம்பர்களை பதவியினின்றும் நீக்கியதன் மூலம் பதவியை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்ற புகார் ஜில்லா கலெக்டருக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மூக்குபீறி பஞ்சாயத்து தலைவர் வேண்டுமென்றே சட்ட ஏற்பாடுகளையும், விதிகளையும் நிறைவேற்ற மறுப்பதால், அவரைப் பதவியினின்று நீக்குவதற்கு காரணம் காண்பிக்க சென்னை பஞ்சாயத்து சட்டம் 150-ஆவது பிரிவின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு அறிவிப்பு விடுத்திருக்கிறார்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், புதிய சட்டப் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்துத் தலைவர் தவறுசெய்துவிட்டார் என்று அறிந்த பிற்பாடும்கூட அந்தப் பஞ்சாயத்துக்கு அந்தத் தகவலை அனுப்பி அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்களுடைய பெரு வாரியான ஓட்டுக்களைப் பெற்றுத்தான் அவரை நீக்கமுடியும் என்று விதிமுறைகள் இருக்கின்றனவா? அந்த விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம்.

Property tax

* 529 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have proposed to defer the quinquennial revision of property tax in all Municipalities in the State, with effect from April 1966; and

(b) if so, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ); ஆம், வரி செலுத்துவோர் சங்கங்கள், குழுக்கள், பல்வேறு நிறுவன அமைப்புகள், சில நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களிடமிருந்து இது குறித்து ஏராளமான முறையீடுகள் வந்துள்ளன. இவற்றை அரசாங்கம் கவனமாகப் பரிசீலனை செய்தது. 1—4—1966 முதற்கொண்டு பொதுவாக வரி விதிப்பு திருத்தியமைக்கப்பட வேண்டிய நகராட்சிகளைப் பொறுத்த வரையில், அவற்றில் அத் தேதி முதற்கொண்டு அவ்வாறு திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் 1—4—1966 முதற்கொண்டு தொடங்கும் இரண்டு அரை ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்கப்படவேண்டுமென தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிச் சட்டத்தின் IV-வது விவர அட்டவணையின் 8 (1-A) (a) விதியின்கீழ் அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது.

திரு. செ. மாதவன்: அந்தத் தேதிக்கு முன்னுலேயே வரியை உயர்த்தி இருந்தால் ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து திருத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சமீபத்தில் நிறுத்தி வைத்துள்ள quinquennial revision 15 நகராட்சிக்கு பொருந்தும். மற்ற நகராட்சிகளுக்கும் இந்த விதிமுறைகளை நீடிக்க சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

நாகம்பந்தல் லிங்கத்தேரி

*530 **கேள்வி.—திருமதி செகதாம்பாள் வேலாயுதம்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உடையார்பாளையம் தாலுக்காவில் நாகம்பந்தல் கிராமத்திலுள்ள ஏரியிலிருந்து நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தாமல் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்த வேண்டுமென்று அண்மையில் அக்கிராம பொது மக்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மனுவின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பாசனத்துக்குப் பயன்பட்டு வரும் லிங்கத்தேரியின் நீரை குடிதண்ணீராகவும் மற்றும் பல சமுதாயக் காரியங்களுக்கும் பயன்படுத்துமாறு வேண்டி, நாகம்பந்தல் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து 9—2—1966 தேதியிட்ட ஒரு கடிதமும் அக்கிராம மக்களிடமிருந்து ஒரு முறையீடும், திருச்சிராப்பள்ளி கலெக்டருக்கு வந்தன. ஜயங்கொண்டான் தாசில்தாரையும், அரியலூர் வருவாய்க் கோட்ட அதிகாரியையும் கலந்தாலோசித்த பிறகு, தக்க நடவடிக்கையைக் கலெக்டர் மேற்கொண்டார். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவேண்டியுள்ள அவசியத்தைக் கருதி, இந்த ஏரியின் நீரைப் பாசனமல்லாத பிற காரியங்களுக்குப் பயன்படுத்துவது அவசியமில்லை என்று கருதப்பட்டது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: தலைவர் அவர்களே, இது ஆயிரக்கணக்கானவர்களுக்கு குடிதண்ணீருக்கு பயன்படுகிற குளமாக இருக்கிறது. ஆடுமாடு குளிப்பாட்டும் வசதியும் இருக்கிறது.

பாசனத்திற்கு தண்ணீர்விட்டுவிட்டால் குடிதண்ணீருக்கு நல்ல கோடை மாதங்களில் கஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்ற அளவில் இதை வைக்க முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: செட்டில்மெண்டு காலத்தில் இந்த ஏரிப் பாசனத்திற்குப் பயன்படுகிற ஒன்ருக ஆயக்கட்டுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறது. ஆகவே, விவசாயத்திற்குப் பயன் படுத்தக்கூடாது என்று தடுக்க முடியாது. தடுக்கவும் அரசாங்கம் விரும்பவில்லை.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம்: அந்த ஏரியைக் குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்பதாக ஏற்படுத்தவேண்டும் என விவசாயிகளே விண்ணப்பித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிருர்கள். விவசாயிகளே ஒத்துக் கொள்ளும்போது அப்படி ஏன் செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்து மெம்பர்கள்—விவசாயிகள் இவர்களுக்குள்ளே அபிப்பிராய பேதம் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் குடிதண்ணீருக்குக் கஷ்டப்படுகிருர்கள். மதிப்பீட்டுக் கமிட்டி செந்துறை சென்ற போது அதைப் பார்க்க முடிந்தது. அந்த ஏரித் தண்ணீர் கூடச் சிவப்பாகத்தான் இருக்கின்றது. இந்தத் தண்ணீரையாவது குடி தண்ணீருக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதாக ஸ்பெஷலாக ஏற்படுத்த வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: குடிதண்ணீருக்கு இதன் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. இப்போதே குடிதண்ணீருக்கும், குளிப்பதற்கும், ஆடுமாடு களுக்கும் இதைப் பயன்படுத்தி வருகிருர்கள். இதைத் தவிர குடிதண்ணீருக்காக கிணறு இருக்கிறது. பாப்பாத்தி குளம் என்பதாக தனியாகக் குளம் இருக்கிறது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: பஞ்சாயத்து யூனியனில் கிணறு வெட்டிக் கொடுத்திருக்கிருர்கள். ஆனல் கிணற்றில் தண்ணீர் இல்லை. ஆகவே, குடிதண்ணீருக்கு மிகவும் பயன்படுகிற இந்தக் குளத்தை குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்று செய்ய முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: குடிப்பதற்கு தண்ணீர் எடுப்பதை யாரும் தடுக்கவில்லை. மேலும் பஞ்சாயத்து யூனியன் எடுத்த கிணற்றில் தண்ணீர் இல்லை என்ருல் அதை ஆழப்படுத்தி, பம்பு செட்டு வைக்கக்கூட முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

[8th November 1966

திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த நாகம்பந்தல் கிராமத்தில் உள்ள ஏரித்தண்ணீரை குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மட்டும் பயன்படுத்தவேண்டும் எனச் செய்யவேண்டும் என்பதாக அக்கிராம மக்கள் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத்திற்குப் பயன்படுத்துவதைத் தடுக்கக்கூடாது என்பதாகவும் வேறு யாராவது மகஜர் அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. செ. ம. அ. மஜீத்: அந்தமாதிரி தகவல் இல்லை. இப்போதுள்ள ஏரியில் குடிதண்ணீர் எடுத்துக்கொள்வதைப் பற்றித் தடை எதுவும் இல்லை. பஞ்சாயத்து எலெக்ஷன் விரோதம் காரணமாக அதில் இருந்து பாசனத்திற்கு விடக்கூடாது என்கிற ஆட்சேபம் எழுந்திருக்கிறது.

கனம் சபாநாயகர்: ஆயக்கட்டுகளுக்கு இருக்கிற உரிமையை மாற்ற யாருக்காவது ரைட் இருக்கிறதா?

கனம் திரு. செ. ம. அ. மஜீத்: அம்மாதிரி உரிமை இல்லை. அப்படிச் செய்கிற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER: You will have to acquire the tank and subject to the judicial proceedings only, you can think about changing it into a drinking water tank.

Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED HARASSMENT OF AGRICULTURISTS BY PROCUREMENT OFFICIALS.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே. கிராமங்களிலே ப்ரொக்யூர்மெண்டு செய்யும் அதிகாரிகள் விவசாயிகளுக்கு இழைக்கின்ற அநீதியைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரபணையைக் கொண்டுவர உங்கள் அனுமதியை விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி, கஷ்டப்படுத்தி ப்ரொக்யூர்மெண்டு செய்ய கட்டளை பிறப்பிக்கவில்லை, எளிதான முறையில், சுலபமான முறையில் ப்ரொக்யூர்மெண்டு செய்யப்படுகின்றது என்பதாகக் கூறினார்கள். ஆனால் தஸ்தாவேஜு பூர்வமாக கையில் வைத்திருக்கிறேன். நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அங்கங்கே உள்ள அதிகாரிகள் ஐந்து சென்ட் உள்ளவனுக்கு ஒரு மூட்டை, பத்து சென்ட் வைத்துள்ளவனுக்கு இரண்டு மூட்டை, ஒரு ஏக்கரா வைத்துள்ளவனுக்கு 20 மூட்டை என்பதாக கட்டாயமாக வைத்து (ஒரு சீட்டைக் காட்டி) இது போன்ற பாரங்களை அச்சிட்டு சம்மனைப் போலக் கொடுத்துவிடுகிறார்கள். எத்தனையோ பேர்களுக்கு இதுபோல அனுப்பப்பட்டுள்ள நோட்டீஸ்களை நான்

8th November 1966] *[திரு. சா. கணேசன்]*

இங்கே வைத்திருக்கிறேன். முதல் சீட்டுக்குரிய இவருக்குச் சொந்தமான நிலம் 0.06 ஏக்கரா, இவர் கட்டாயமாக ஒரு மூட்டை கொடுத்தாகவேண்டும். இதுபோல . . .

MR. SPEAKER: The hon. Member, Sri Alagamuthu, has given notice under Rule 57 to discuss a similar matter.

திரு. சா. கணேசன்: இதுபோன்ற விஷயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருதி இதுபற்றி விவாதிப்பதற்காகச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்பதாக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் செய்வது என்பது அரசாங்கத்தின் திட்டம். அது நிர்வாக தோரணையில் நடைபெறும்போது ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை வேறுவகையில் தெரிவிக்க வேண்டுமே தவிர ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல. யாராக இருந்தாலும் விற்பதற்கு அவர்களிடம் நெல் இருந்தால் அதை சர்க்காரிடம் நிர்ணயித்துள்ள விலைக்குக் கொடுக்கவேண்டுமென்பது முக்கியமானது. வேறு ஏதாவது கொள்முதலில் நிர்ப்பந்தம், தவறு இருந்தால் அதைத் தெரியப்படுத்தினால் விசாரித்து சரிசெய்யலாம். ஆனால், இது ஒத்திவைப்புப் பிரரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Consent is withheld.

(2) SUPPLY OF INFERIOR QUALITY RATION RICE IN MADRAS CITY.

* **திரு. சா. கணேசன்**: கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகரில் கொடுக்கப்படுகிற ரேஷன் அரிசி மிக மிக மோசமாக உண்பதற்குத் தகுதியற்றதாக இருப்பதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரபணையைக் கொண்டுவரத் தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

அதையொட்டி, கனம் சபாநாயகர், அவர்களே, நான் தங்கள் அனுமதியைப் பெற்றிருக்கிறேன். சென்னையில் கொடுக்கப்படுகிற அரிசியின் சாம்பிளை ரேஷன் வாங்கியவர்கள் அவர்கள் கையொப்பமிட்டே அனுப்பியிருக்கிறார்கள். அவற்றையும் சபையில் சமர்ப்பிக்கிறேன். அதன்மீது முதல் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாகவேண்டும். ரேஷன் என்று ஏற்படுத்திவிட்டு—இதுபோன்ற அவல நிலை நீடிக்க விடக் கூடாது. அரசாங்கத்தால் ஒழுங்கான முறையில் அரிசி விநியோகம் செய்ய முடியவில்லை என்றால் ரேஷனையே எடுத்துவிட்டு அவரவர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் கொண்டு வந்து சாப்பிடட்டும் என்று விட்டுவிடலாம். அதையும் தடுத்து இப்படிச் செய்வது சரியல்ல என்று உங்கள் மூலமாக நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த ரேஷன் அரிசிப் பொட்டலத்தை அவரிடத்தில் சமர்ப்பிக்கிறேன்.

[8th November 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி எப்போது மட்டமாக இருந்தது, எங்கே அப்படிப் போட்டார்கள் என்று ஸ்பெசிபிக்காக இல்லை. அரசாங்கம் நெல் கொள்முதல் செய்து அரிசியாகக் கொடுக்கிறது. சில சமயங்களில் ரொம்ப நல்ல அரிசியாக இருக்கலாம். இப்போது திரும்பவும் நல்ல அரிசி கிடைக்கிறது. இப்போது நல்ல அரிசி கிடைத்துக் கொண்டிருக்கிறது. நான்கு நாட்களுக்கு முன்னால் புயல் காற்று ஏற்பட்டதால் வெளியிலிருந்து 500 லாரிகளில் வந்து கொண்டிருந்த அரிசி வந்து சேரமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதனால் வேறு இடங்களில் இருந்து வாங்கி அரிசி கொடுக்கப்பட்டது. எப்படி இருந்தாலும் இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: These are not matters for adjournment motion. Consent is therefore withheld.

III.—CALLING ATTENTION TO.

(1) FOOD SITUATION IN THANJAVUR DISTRICT.

SRI RAMA. ARANGANNAL: Sir, I call the attention of the Hon. Minister for Food to the following matter of urgent public importance, namely, the food situation in the Thanjavur District and the agitation in connection with that.

***THE HON. SRI M. BHAKTAVATSALAM**: Sir, normally water would be let in for irrigation from Mettur Dam on 12th June. Owing to unfavourable South-West Monsoon, the release of water was delayed till 21—7—1966. It meant that agricultural operations were delayed. Consequently no wages were given to agricultural labourers. There was an apprehension that Kuruvai would fail and as such mirasdars conserved the stock available with them. As such a difficult position developed in Thanjavur District, the Government met the situation by releasing rice from their stocks by introducing informal rationing in municipalities, town panchayats and villages. Approximately 23 per cent of the population of the District was covered by family cards. This had a very good effect. With the release of water, the situation has improved considerably. The offtake fell from 1495 tonnes a week to 777 tonnes. An attempt was made by some people to exploit the situation. They organised hunger strikes on 29—6—1966 in front of the Collectorate, Thanjavur, and other offices. The hunger strike was given up on 4—10—1966. A general hartal was observed on 4—10—1966 when some shops and market remained closed in some towns. Transport services and other vehicles of traffic functioned normally throughout the State. With the successful monsoon the situation in the District can be said to be quite normal.

(2) Havoc caused by cyclone.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலும், பெரும் மழையும் அவற்றின் விளைவான சேதாரங்களும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Mr. Speaker. a severe cyclonic storm which originally centred in the Bay of Bengal east of Nagapattinam was expected to cross the coast at Nagapattinam. But the storm changed its course and approached Madras City and actually crossed the coast on the afternoon of the 3rd November at about 3 p.m. at a place 30 miles south of Madras. From the early morning of the 3rd, the weather deteriorated considerably, along the coastal regions of Madras City, Chingleput and in the northern portion of South Arcot District. The wind speed increased rapidly and at times it was blowing at 80 to 100 miles per hour. The rainfall accompanying the storm was not so heavy in the City and in Chingleput district. But it was very heavy in the northern portion of South Arcot District. Tindivanam in 24 hours ended at 8 a.m. on the 4th recorded a rainfall of 212 mm. Considerable damage has been caused on account of the very high wind and very heavy rainfall. A large number of trees have been uprooted. All temporary and thatched constructions like huts and roofed buildings suffered considerable damage. It can be stated that in the Madras City and in the taluks of Saidapet, Chingleput and Madurantakam in Chingleput District and in the taluks of Tindivanam, Villupuram and Ginjee in South Arcot District, practically all huts have been razed to the ground. The figures of number of huts damaged like this are as follows :—

Madras City	7,500
Chingleput District	90,000
South Arcot District	5,000

The Collector of North Arcot has also reported destruction of 500 huts in Wandivash, Tiruvannamalai and Polur taluks.

Electrical installations and property of the Electricity Board including high tension lines have come in for severe damage. An exact estimate of the damage has not yet been arrived at. The Electricity Board is taking every effort to restore connections as expeditiously as possible to the affected areas.

The Telephone Department has also come in for severe damage. Telephone communications broke down completely in the City and in the affected areas. The Department is taking expeditious steps to restore the connections. The position has become practically normal in the city. The connections to the other areas are being given.

[Sri M. Bhaktavatsalam] [8th November 1966

Serious breaches have occurred in the roads running in Madurantakam, Tindivanam and Villupuram taluks, the damage being maximum in Tindivanam taluk.

Breaches or Scours have occurred in 7 roads in South Arcot, 4 in Chingleput and 2 in North Arcot. The principal roads affected are—

(1) Villupuram-Ginjee Road;

(2) Merkanam-Tindivanam-Ginjee Road;

(3) Chunampet Road;

(4) Pondy-Tindivanam Road;

(5) Madras-Trichy Trunk Road at miles 84 and 86; and

(6) Cuddalore-Chittoor Road near 54th mile (North Arcot).

All these breaches are expected to be closed by the end of this week.

The uprooted trees which had blocked the National Highways and roads have all been or are being cleared and the work will be completed very soon. The worst affected areas are the approaches to the bridge across Tondiyar at M. 85/1 of the National Highway and to the bridge at M. 86/4 across Sankaraparni river. The approaches have been washed away for a length of 100 feet on either side due to breaches of Veedur Reservoir. The black-topping surface has been badly scoured, and its width has been reduced. The uprooted trees in Mailam-Pondicherry road have been cleared, and through traffic to South from Madras can be resumed through this road, but only after the overflowing of the Sankaraparni causeway at Villianur in Pondicherry State subsides. It is expected that this would have become fordable by now. Government have also contacted the Government of Pondicherry who have kindly taken all steps to see that the obstructions on the road in Pondicherry limits are all cleared for through traffic to take this diversion.

The road, Cuddalore to Pondicherry, is cut off due to heavy breaches within the Pondicherry State limit.

All other breaches are also being attended to expeditiously. Government have strengthened the staff for this purpose.

The Superintending Engineer (Highways), Madras is camping at Tindivanam and attending to the closing of breaches on the National Highways.

The roads are free for traffic in the Saidapet and Chingleput divisions. The breaches in Madurantakam area will be attended to as soon as the water subsides.

At the request of the State Government, the Southern Railways have already arranged to run a special shuttle service between Tindivanam-Villupuram to clear the traffic with effect from mid-day on 7th November 1966.

8th November 1966] [Sri M. Bhaktavatsalam]

A number of tanks have breached in Madurantakam, Tindivanam and Villupuram taluks and to a lesser extent in Wandiwash, Polur and Tiruvannamalai taluks of North Arcot district. The number of major and minor tanks breached are as follows :—

Chingleput district	138
South Arcot district	150
North Arcot district	35

The Vidur Reservoir breached about the noon on the 3rd November at three places causing considerable floods in Sankarabarani River and cutting the Grand Southern Trunk Road seriously at miles 85/1 and 86/4. It is now practically empty. The first breach is about 50 feet close to the left end of the spillway. Breach number 2 is 400 feet from the right end of the spillway and is 300 feet long. Breach number 3 is 600 feet further to the right opposite to the staff colony with a length of 800 feet. The staff colony and the workshop shed have been washed out. The villages of Athikuppam, Elay and Ganapathi have been severely affected by the Vidur breach. Loss of cattle has occurred but no loss of human life is reported.

The Chief Engineer (Irrigation) immediately on receipt of information rushed to the spot along with two special Superintending Engineers. The special division for the Tank restoration Scheme has been diverted to attend to these works. The machinery from Manimukthanadhi Reservoir Project was also diverted to attend to these repairs.

Government have ordered that damages caused to Irrigation works should be immediately assessed and immediate restorative action taken incurring essential expenditure and applying to Government for necessary additional appropriation later. For this purpose special strengthening of staff also has been done.

Loss of human life.—Following number of deaths have been reported either as a result of house collapse or as a result of electrocution :—

Madras City	20	(including 18 seamen of ship "Progress").
Chingleput district ...	18	
South Arcot district ...	8	
North Arcot district ...	11	

Considerable damage has been caused to the installations in the Madras Port and it is estimated that the loss would be about Rs. 4 lakhs. Members are already aware of the fact that four ships ran aground as a result of the fury of the cyclone.

Six bogeys of the Rameswaram Passenger Train proceeding from Pakkam to Madurantakam on the afternoon of the 3rd November capsized due to the intensity of the cyclonic wind and fourteen passengers were injured.

[Sri M. Bhaktavatsalam] [8th November 1966

Almost all the fishermen colonies on the coastal belt have been razed to the ground and a number of fishing canoes and fishing nets, catamaran logs and three mechanised boats have been lost. No loss of life among the fishermen has been reported.

Deaths of cattle and considerable damage of poultry have also been reported by the Director of Animal Husbandry in all the affected areas. In regard to the damage to crops and plantations it is reported that over 1,25,000 cocoanu ttrees in Edakk nad area of Madurantakam taluk have been completely damaged. It is feared that in Madurantakam, Tindivanam, Villupuram and Wandiwash taluks paddy crops in an extent of about 30,000 to 50,000 acres may suffer either on account of sand casting or flooding due to tank breaches. More exact details on this aspect are awaited. Betel and sugarcane and casuarina have suffered considerably in the affected areas.

Considerable number of Panchayat Union Schools and Welfare Schools and other public buildings with tile or thatched roofs have suffered damage.

Sir, officials and non-officials have taken immediate necessary steps to rehabilitate the houseless people. Free distribution of cooked food and rice has been done in all the affected areas. In addition, in respect of every hut damaged, an amount of Rs. 30 towards reconstruction and Rs. 10 towards clothing is being given and the Collectors have been requested to see that these amounts are disbursed promptly. The Government have sanctioned a special advance of Rs. 1 lakh to each of the Collectors of Chingleput, South Arcot and Madras and they have the authority to incur further expenditure to the extent necessary. I have referred earlier to the special efforts taken to close the breaches in irrigation tanks and to restore road communications, which have been undertaken by the Public Works Department. Government in the Agriculture Department will take necessary steps for the supply of fresh seeds in respect of areas where crop has been washed away. Government will also give necssary loan facilities for agriculturists adversely affected and for fishermen for replacing their loss of boats and nets. Loans for repairing and rebuilding damaged tiled houses will also be given.

Sir, the magnitude of the problem has assumed much bigger proportion than we first expected. It is now estimated that the cost of rehabilitation including cost of restoration of irrigation tanks and restoration of communications may exceed Rs. 2 crores. This Government are addressing the Government of India about this matter and are requesting them for necessary assistance both by way of grant and loan. It is hoped that the Government of India will help us in this unforeseen calamity which has ravaged three districts of Madras, Chingleput and South Arcot.

Sir, I assure this House that this Government will take all the steps necessary for the rehabilitation of the affected people as expeditiously as possible.

8th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் வெள்ளம், புயல் சேதம் பற்றி வைத்த அறிக்கை மீது பொதுவாக மன்ற அங்கத்தினர்களும், குறிப்பாக பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த 10–00 a.m. உறுப்பினர்கள் தங்கள் விவரங்களைத் தரவும், விளக்கங்கள் வைக்கவும், பரிந்துரைகள் செய்யவும் வாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையில் நாளை இரண்டு மணி நேரம் ஒதுக்கித் தந்தால் அதில் கருத்துக்கள் வழங்க வாய்ப்பு ஏற்படும். அது மட்டுமல்லாமல் முதல் அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையின் படி இன்றே கனம் உறுப்பினர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தால் தாங்கள் அதுபற்றி கருத்துக்கள் சொல்ல வாய்ப்பு ஏற்படும் அதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த அறிக்கையின் நகல் எல்லா அங்கத்தினர்களுக்கும் அளிக்கப்படும். இன்றைக்கு இருக்கிற அஜெண்டா இன்று முடிந்துவிடும் என்று நினைக்கிறேன். நாளை இரண்டு மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் வேண்டுமானால் விவாதம் வைத்துக் கொள்ளலாம்.

IV.—PRESENTATION OF REPORT

REPORT OF COMMITTEE ON ESTIMATES ON DIRECTORATE OF HANDLOOMS.

SRI P. RAMACHANDRAN: Mr. Speaker, Sir, I rise to present the Second Report of the Committee on Estimates (1966-67) on the Directorate of Handlooms.

V.—RULING *RE* DIVISION DURING GUILLOTINE

MR. SPEAKER: Hon. Members are aware that on the 28th March 1966, during the last Budget Session, the hon. Member, Sri K. A. Mathialagan asked for a division on a Demand after the guillotine was applied, and that was refused by the chair. He raised a point of order on this which I promised to examine, and give my opinion later on.

The hon. Member, Sri Mathialagan stated that Rule 155 of the Madras Assembly Rules enables the Speaker to terminate a discussion or debate on a Demand and did not exclude the right of the Member to demand for a division. The hon. Members, Sri M. Kalyanasundaram and Sri M. Karunanithi also supported this view and said that the application of guillotine related only to the termination of the discussion.

When other Legislatures were consulted, I find that there is no specific instance on the point for decision before us. In the House of Commons, guillotine motions are a form of closure applied to the discussion on Bills, and there is no definite guidance for us from there also. Therefore, I have to change my views and to decide that, if a Member wants a division after the guillotine is applied, it has to be allowed. Any cut motion already moved, before guillotine is applied, will also be put. But no cut motions not moved, will be allowed to be moved, nor put to the House

[Mr. Speaker] [8th November 1966

Of course, the Speaker has always the discretion to adopt any of the recognised modes of taking division to expedite matters and to avoid delaying tactics.

The guillotine is mentioned as a division saving form in a book of Parliamentary Procedure of the House of Commons by Lord Campion. I understand that in this way. In a democracy, when we have got several demands which are taken up in the course of several days, the Leaders of Parties who are members in the Business Advisory Committee here take a decision as to which are all the important demands for discussion and voting, and those demands are taken on different days and a division is allowed and voting is done, if wanted. Comparatively, minor demands which are not included on the different dates for discussion and for which discussion and voting may not be necessary, are taken up on the last day, so that they may be put in at the time, guillotine is applied. This decision is taken in the Business Advisory Committee. So, it is prudent and better not to ask for division after guillotine is applied, though it is not specifically prohibited in the rules.

VI.—GOVERNMENT BILLS

(1) THE INDIAN REGISTRATION (MADRAS AMENDMENT) BILL, 1966—*cont.*

MR. SPEAKER : Now, the discussion on the Indian Registration (Madras Amendment) Bill, 1966, will be continued.

The hon. Member, Sri V. Krishnamoorthy, will now speak.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் அக்டைத் திருத்தவேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம், முதன் முதலாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேவையற்றது. பொது மக்களுக்குப் பயன் அளிக்காதச் சட்டம் இது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன்மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் இருக்கும் எழுத்தர்கள் குறிப்பாக 500. 600 குடும்பங்களுக்குத் தீமையை உண்டு பண்ணும் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கிற பொது மக்களுக்கும் இது பாதகமாக இருக்கும் என்ற வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை தயவு செய்து நம்முடைய அமைச்சரவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அதற்காகவாகிலும் இதனை வாபஸ் பெறவேண்டுமென்றும் கூறி என்னுடைய வருத்தத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் இந்தச் சட்டத்தைப் பற்றி நம் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். கொடுத்த விளக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். குத்தகையும் அதுபோல் மிகச் சாதாரண மான டாக்குமென்ட்ஸை ரிஜிஸ்டர் செய்வதனை காப்பி மட்டும் கொடுத்தால் போதும். ஒரு ஆண்டு, இரண்டாண்டுகள் அல்லது மூன்றாண்டுகளோ குத்தகைக்கு நிலத்தை ஏற்றுக் கொண்டால், அதை ரெஜிஸ்டர் செய்வதற்கு

8th November 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

பர்மனன்டாக இருக்க வேண்டிய புத்தகங்களில் எழுத வேண்டியதில்லை, அதை டைப் செய்த காப்பி அல்லது சாதாரண காப்பி கொடுத்தால் கூட ஃபைல் செய்து ரெஜிஸ்டர் செய்து விடுகிறார்கள். அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸில் விவரமாகச் சொல்லியிருக் கிறார்கள், இந்த முறை மிகவும் சாதகமான முறை என்று.

In such cases instead of copying a document in full, a printed copy of the original document is filed in a book. This system involves no expenditure on staff for copying the documents and on register books and other items of stationery. The time to register the document under this system is much less and there is less scope for corruption. In view of these advantages it is proposed to extend this system to all documents.

இதிலேதான் மிகவும் பாதகங்கள், பயங்கரமான விளைவுகள் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக, பத்திரங்களைப் பதிவு செய்வதிலே பல வகையான பத்திரங்கள், கிரயம், செட்டில்மென்ட், வில், மார்ட் கேஜ் போன்ற பத்திரங்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் பர்மனென்ட்டாகப் பதிவு செய்யப்பட வேண்டிய பத்திரங்கள். பல ஆண்டுகள் கழித்து, 100 ஆண்டுகள் கழித்து பதிவு செய்யப் பட்ட பத்திரத்திற்குக் காப்பி வேண்டுமென்றால், எடுத்துக்கொள்ள லாம். இப்போது இருக்கிற சட்டத்தின் மூலமாக, கிரயமாக இருந்தாலும், செட்டில்மென்டாக இருந்தாலும், வில்லாக இருந்தாலும், மார்ட்கேஜ்ஜாக இருந்தாலும், டாக்குமென்ட் கையெழுத்தில் இருந்தாலும், அச்சு அடித்ததாக இருந்தாலும், டைப் அடித்ததாக இருந்தாலும் டாக்குமென்டை ரிஜிஸ்டர் செய்யும்போது காப்பியைக் கொடுத்து விட்டாலே போதும், அதை அங்கு இருக்கிற சப்-ரிஜிஸ்டிரார் ஃபைல் செய்து கொள்ளு வார். இதன் மூலமாக உடனடியாகப் பத்திரம் திருப்பிக் கொடுக் கப்படும், லஞ்சம் குறையும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இப்படி சப்- ரிஜிஸ்டிரார் அலுவலகங்களில் லஞ்சம் இருக்கிறது என்பதை வெட்ட வெளிச்சமாக, தெள்ளத் தெளிவாக ஒப்புக்கொள் ளுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. சப்-ரிஜிஸ்டிரார் அலுவல கங்களில் லஞ்சம் இருக்கிறது என்று நாங்கள் சொல்லும்போது, லஞ்சம் ஒன்றும் கிடையாது என்று சொல்லி விட்டு, இப்போது 'எங்கள் அலுவலகங்களில் லஞ்சம் இருக்கிறது, அதை ஒழிக்க வேண்டும்' என்று அவர்களே இப்போது சொல்லியிருக்கிறார்கள். இது தேவையற்ற சட்டம் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

டாக்குமென்டைக் கொடுத்த உடனே ரிஜிஸ்டர் செய்து திருப்பிக் கொடுப்பார்களா? இப்போது 'மூன்று நாட்கள் கழித்து வாருங்கள்', 'ஒரு வாரம் கழித்து வாருங்கள்' என்று சொல்லுகிறார்கள். அந்த முறையில் ஒரு வாரம் கழித்து வாங்கிக் கொள்கிறார்கள். அதைத் தவிர வேறு சங்கடம் இடையாது.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [8th November 1966

இந்தச் சட்டம் வந்தால் அதன் பயனுக, பத்திரம் எழுத ஃபீஸ் கொடுக்கவேண்டும், அதோடு காப்பி எழுத 5 அல்லது 2 ரூபாயாவது கொடுக்க வேண்டும். அதனுல் பொது மக்களுக்கு அடிஷனல் எக்ஸ்பென்டிசர் தான்; வேறு எந்தவிதப் பயனும் கிடையாது. அப்படியே டாக்குமென்ட் கொண்டு கொடுத்தோம் என்றுல் உடனே கிடைக்குமா? டாக்குமென்ட்டை கம்பேர் செய்ய வேண்டும். சப்-ரிஜிஸ்டிரார் ஆஃபீஸில் ஒரு நாளைக்கு 100 டாக்கு மென்ட்டுகள் வருகின்றன. நாளைக்கு வாருங்கள் என்று இரண்டு நாள் வாய்தா வைப்பார்கள். வருகிறவன் கட்டுச்சாதம் கட்டிக் கொண்டு அங்கேயே இருக்க முடியுமா? ஊருக்குப் போய் விட்டுத் தான் வரவேண்டும். இந்தச் சட்டத்தினுல் எந்த விதத் திலும் சாதகம் என்று சொன்னுல், அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இரண்டாவது, டாக்குமென்ட்டை பர்மனென்ட்டாக வைக்க வேண்டும். நம் நாட்டில் இருக்கிற வழக்கம் கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றுகத் தெரியும். சர்வே நம்பரையே மாற்றி விடுவார்கள்; 3 ஏக்கரை 33 ஏக்கராக மாற்றி விடுவார்கள். நிலைமை இந்த லட்சணக்கில் இருக்கிறது. டாக்குமென்ட் காப்பியைக் கொண்டு கொடுத்தால் என்ன ஆகும்? அமைச்சரே சொல்லுகிறுர் சப்-ரிஜிஸ்டிரார் ஆஃபீஸில் லஞ்சம் என்று. நான் ஒரு கிரயம் கொடுக்கிறேன் என்று சொன்னுல் இன்றைக்குக் கொடுக்கிற காப்பிக்கு பதிலாக வேறு காப்பியை வைத்து விடக் கூடும். கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்ன மாதிரி, பைல் செய்த காப்பி டாக்குமென்ட்டை எந்த சப்-ரிஜிஸ் டிராராவது கிழித்து விட்டால் என்ன ஆவது? அதற்குப் பிறகு பர்மனெட் டாக்குமென்ட் எப்படிக் கிடைக்கும்? கிடைக்கவே கிடைக்காது. இதனுல் மால் ப்ராக்டீஸ் உண்டாக வழிவகை ஏற்படும். அதற்கு வழி ஏற்பட்டு, வம்பு, வில்லங்கள் ஏற்பட இது காரணமாக அமையும் என்று சொல்லி இதை எதிர்க்கிறேன்.

நம் மந்திரி அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறுர்கள். 'எல்லோரும் சட்டம் கொண்டு வருகிறுர்களே, நாமும் ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும்; இது பூவராகன் ஆக்ட் என்று எல்லோரும் சொல்லவேண்டும்' என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறுர்கள் என்று தோன்றுகிறது. 500, 600 குடும்பங்களின் தலையில் அடிக்கும் இந்தச் சட்டம் காப்பியிஸ்ட்டுகளுக்கு அபத்தை விளைவிக்கும். இது தேவையில் லாதது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். மந்திரி வந்தவுடனே வரியை ஏற்றியாகி விட்டது. 7-7-1966-லிருந்து ஒரு ரூபாய் ஏற்றி யாகி விட்டது. ரிஜிஸ்டிரேஷன் ஃபீ 50 காசு, கம்பாரிசன் ஃபீ 50 காசு ஏற்றியாகி விட்டது. கொடுக்கும் டாக்குமென்ட்டுக்குப் பர்மெனன்ட் ரெக்கார்டு கிடையாது. இனிமேல் இதனுல் ஒருவனும் சொத்து வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே, இதிலே முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் என்ற கட்சி அபிப் பிராயம் கிடையாது, இது பொதுவான சட்டம், இது தேவை

8th November 1966] *[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]*

இல்லை; இதைப் பற்றி அமைச்சரவை மீண்டும் பரிசிலித்து, இதை வாபஸ் பெறவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவினுடைய முக்கிய நோக்கம், டாக்குமென்ட்டுகளைப் பதிவு செய்யப் போகும்போது டாக்குமென்டுகளோடு சேர்ந்து ட்யூப்ளிகேட் காப்பிகளை எடுத்துக்கொண்டு போக வேண்டும். இப்போது உள்ள முறையில் ஒரிஜினல் கொடுத்தால் போதும். அதை வைத்துக்கொண்டு அவர்கள் புத்தகத்தில் காப்பி எடுத்துக்கொண்டு ஒரிஜினலைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். இந்த மசோதாவின்படி டைப்ரிட்டனாக இருந்தாலும், ஹான்ட் ரிட்டனாக இருந்தாலும், டாக்குமென்ட் கொண்டு வருகிறவர்களே இன்னொரு காப்பியைக் கொண்டுவரவேண்டும். சப்-ரிஜிஸ்டிரார் ஆஃபீஸில் ஃபைல் புக் என்று வைத்திருப்பார்கள். அதிலே அந்தக் காப்பியை ஒட்டி வைத்துக்கொள்ளுவது என்ற முறையில் மாறுதல் செய்வதாக இருக்கிறார்கள். இதுதான் அடிப்படை. இதில் உள்ள சாதகங்கள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

"In such cases instead of copying a document in full, a printed copy of the original document is filed in a file book. This system involves no expenditure on staff for copying the documents . . ."

கனம் சபாநாயகர் : அதை 4-5 பேர்கள் படித்தாகி விட்டது. மேலே சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்.

திரு. வை. சங்கரன் : தனியாகக் காப்பி செய்ய வேண்டிய செலவு இருக்காது; நேரமும் ஆகாது. இரண்டாவது, கரப்ஷன் குறையும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஓரளவு அதில் சந்தேகம் இருக்கிறது. இதற்கு அவ்வளவு ஆதரவு கொடுக்க முடியுமா என்பது சந்தேகம் தான். ஏன் என்றால், இறைக்கு உள்ள நிலைமையில் பப்ளிக் பாயின்ட் ஆஃப் வ்யூவை எடுத்துப் பார்த்தால், நான் ஒரு மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது, அதிலே விவரங்களைக் கொடுத்தார்கள்; அதைக் கொண்டு சொல்லுகிறேன். டாக்குமென்ட் ரிஜிஸ்டர் செய்யவேண்டும் என்று சொல்லும்போது, காப்பி எடுப்பதற்கு 3-4 ரூபாய் செலவு ஆகும். பப்ளிக்குக்கு அதிகச் செலவு ஆகலாமே தவிர, குறையும் என்று சொல்ல முடியாது. அதோடு ஃபைல் செய்யும் போது, இப்போது 250 பத்திரங்கள் பதிவு செய்வதற்குப் பதில் 75 பத்திரங்கள் தான் ஃபைல் செய்ய முடியும். ஏராளமாக ஸ்பேஸ் வேண்டியிருக்கும். மேலும் ஓரளவு அதிகமாகத் தவறு ஏற்படலாமோ என்று எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. டாக்குமென்ட்டை ஒட்டி ஃபைல் பண்ணி வைக்கும்போது டாக்குமென்ட் ரைட்டர் வைத்திருப்பதிலே அந்த நிலையில் தப்பு ஏற்படலாம். காப்பி பண்ணுகிறவர்கள் தவறு செய்யலாம். இரண்டு ஏக்கரை, நான்கு ஏக்கராக மாற்றலாம், ரூபாயைக் கூட மாறுதல் செய்யலாம். அந்த முறையில் இப்பொழுது கொண்டுவந்துள்ள ஃபைலிங் ஸிஸ்டத்தில் இடம் இருக்கிறதே தவிர, அவர்களே காப்பி செய்து செய்வதில்

அவ்வளவு வாய்ப்பு இல்லை. இந்த வேலையைச் செய்கிறவர்கள் டெம்பரரி செக்ஷன் ரைட்டர்ஸ். ஏற்கெனவேயே அவர்களுக்குப் பல கிரீவன்ஸஸ் இருக்கின்றன. 70 ரூபாய் சம்பளம் டி.ஏ. 20 அல்லது 30 என்ற நிலையில் 90 அல்லது 100 ரூபாய் 20 ஆண்டு களுக்குப் பின்னாலும் கிடைக்கிறது. அவர்களை திடீரென்று வைக்கலாம், திடீரென்று ரிலீவ் செய்யலாம். அவர்களை ஏற்கெனவேயே கஷ்டத்தில் வைத்திருக்கிறோம். அவர்கள் ஓரளவு தான் ரெகுலரைஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவேயே 15 ஆண்டுகளுக்குப் பிறகு 90 ரூபாய் நிரந்தரமாகக் கிடைக்கிறது என்ற குறை இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது மேலும் அவர்கள் அதிகமாக வேலை வாய்ப்பு இழக்காத ஒரு நிலை ஏற்படுத்த வேண்டும். இந்த மசோதாவில் இரண்டு விதமாகச் செய்வதற்கும் இடம் இருக்கிறது என்று சொல்லப்படலாம். காபியிங்குக்கும் இடம் இருக்கிறது, பைலிங்குக்கும் இடம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் இந்த அமெண்டிங் பில்லை 'த்ரூஅவுட்' ஆக எடுத்துக்கொண்டு பார்த்தால் கம்ப்ளீட்டாக பைலிங் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லா ப்ரொவிஷன் ங்களிலும் பைலிங் பற்றித்தான் போடப்பட்டிருக்கிறது. ஒரு செக்ஷனில் மாத்திரம்தான் 'பைலிங் ஆர் காபியிங்' என்று போடப் பட்டிருக்கிறது. மற்ற எல்லா செக்ஷன்களிலும் பைலிங் பற்றித் தான் போடப்பட்டிருக்கிறது. எல்லா செக்ஷன்களிலும் பைலிங் ஆர் காபியிங் என்று போடவில்லை. பைலிங் மாத்திரம்தான் போடப்பட்டிருக்கிறது. 52-வது செக்ஷனில் மட்டும்தான் காபியிங் ஆர் பைலிங் என்று போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் உள்ள இடங்களில் காபியிங்கை எடுத்துவிட்டு பைலிங் மாத்திரம் தான் போடப்பட்டிருக்கிறது. அனெக்ஷரைப் பார்த்தால் தெரியும்.

இந்தச் சிப்பந்திகளுக்கு ஏற்கனவே 'ஏர்ன்டு லீவ்', மருத்துவ வசதி போன்ற விஷயங்களில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும் பொழுது மேலும் அவர்கள் வேலை வாய்ப்பை இழக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தக்கூடாது.

நிர்ப்பந்தமாக இந்த மசோதாவை நிறைவேற்றித் தான் ஆக வேண்டுமென்றால், எக்ஸ்பெரிமெண்டாக ஒரு ஏரியாவில் ஆரம் பித்துப் பார்த்து, அங்குள்ள நிலைமையை வைத்துப் பரிசீலனை செய்து, பின்னால் வேண்டுமானால் மற்ற இடங்களுக்கு இதை விஸ்தரிக்கலாம். ஏற்கனவே வேலையில் உள்ளவர்களுக்கு வேலை இழக்காமல் இருப்பதற்கு ஒரு உத்திரவாதம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I am not in favour of the Bill that is before the House for consideration, being pushed through, as the general feeling is that it will create several problems and cause inconvenience to people who want to have transfer of property. When we levy a fee, we are obliged

8th November 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

to the people to keep the registration records in a proper manner. Several doubts are being entertained by several people in respect of this Bill. I also do not like to support the Bill. I request the Government to withdraw this Bill, because several people entertain doubts and misapprehensions whether this Bill would help towards maintaining the records in a proper manner. I request the Government to seriously consider whether they cannot postpone this Bill now, examine the entire position thoroughly and then bring forward a new Bill. We find that several corrections are being made even after registration. This will lead to litigation in rural areas. In all these things, it is the rural population that is affected. We have been requesting the Government not to disturb the arrangements in the taluks and districts whenever the question of handing over of certain functions to the panchayats or panchayat union councils was raised. Transfer of property is a very important subject. So, I request the Government to examine the entire position thoroughly and then bring forward a suitable Bill.

* **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை நான் வன்மையாக எதிர்க்கிறேன். இதனாலே நாம் எதிர்பார்க்கும் நன்மை நிச்சயமாகக் கிடைக்கமாட்டாது என்பது மட்டும் அல்ல, அதற்கு மாறாக பல அளவுக்கு, பல எண்ணிக்கைக்குத் தவறுகளும், குற்றங்களும், ஒழுக்கஹீனங்களும் இதனாலே பெருகும் என்பதை சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. பொதுவாக, இப்பொழுது பதிவுத் துறையிலே ஏதோ கால், அரை ரூபாய் கொஞ்சம் நேரத்தைக் குறைப்பதற்காக லஞ்சம் கொடுப்பதோடு நிலைமை இருக்கிறது. மற்ற துறைகளிலே உள்ளதுபோல் பெரும் அளவுக்கு அங்கே லஞ்சம் இல்லை. அவசியத்தையும், நேரத்தையும் பொறுத்து, கால், அரை, ஒரு ரூபாயோடு நின்றுவிடுகிறது. அது சரி என்று நான் சொல்லவில்லை. அந்த அளவுக்கு மட்டும் இந்தத் துறையில் குறை இருக்கிறது. அதை மாற்றி பெரும் தொகை வாங்குவதற்கு இது வழிவகை பண்ணுவதாக அமைகிறது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அச்சடிக்கப்பட்டு, எண்ணிக்கை போடப்பட்டு, செம்மையாக பைண்டு செய்யப்பட்ட புத்தகங்களில் பத்திரங்களின் கருத்துக்களையும், உள் அடக்கங்களையும் எழுதிவருவதன் மூலமாக ஏதோ ஒன்றிரண்டு எழுத்துப் பிழை வேண்டுமானால் இருக்கலாமே அன்றி, ஒன்றிரண்டு எழுத்து வேண்டுமானால் விடப்பட்டிருக்கலாமே அன்றி, வேறு பெரும் தவறுகள் ஏற்பட்டுவிட முடியாது அதை விட்டுவிட்டு, அச்சடித்த காகிதத்தை, அல்லது டைப் அடித்த காகிதத்தை ஒட்டுவது என்று சொன்னால், ஒட்டியதைப் பிரித்து, அதை மாற்றி, வேறு ஒன்றை ஒட்டி அதற்கு நேர் விரோதமான பயனை அங்கு நாம் காண முடியும். இம்மாதிரி செய்வதற்குத் தான் இத் திருத்த மசோதா வழிவகை செய்கிறதா என்று கூட சந்தேகப்படும்படியாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல்

[திரு. சா. கணேசன்] 8th November 1966

நம்முடைய ஜனத்தொகை கூடிக்கொண்டே போகிறது. வேலை வாய்ப்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. பல்வேறு துறைகளிலும் இயந்திர சாதனங்களைக் கொண்டு விட்டுவிடுவதனால், வயல் உள்பட, இயந்திர சாதனங்கள் வந்துவிட்டதனால், வேலை வாய்ப்பு குறைந்துவிடுகிறது என்று சொல்கிற இந்தக் காலத்தில், இந்தத் துறையிலே இருப்பவர்கள் 1,000, 500 அல்லது 100, 200 பேர்களாவது வேலை இல்லாமல் வெளியேற்றப்படவேண்டிய நிர்ப்பந்தம் வந்துசேரும். இவற்றை எல்லாவற்றையும் போட்டு மொத்தமாகக் கணக்கிட்டு பார்ப்போமானால் இதுவும் கூட நன்மை இல்லை என்பதையும், பரந்த அளவுக்குக் கேடும் தீமைகளும், ஒழுக்க ஹீனங்களும் வளர்வதற்கு இது வழிவகுக்கிறது என்பதையும் மனத்திலே கொண்டு, இந்த ஒரு பயனற்ற தீமைப் பயனை விளைவிக்கின்ற ஒரு திருத்தத்தைக் கொண்டுவரவேண்டாம், இதைக் கைவிடவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இதை நிறைவேற்ற நாம் இதற்கு சம்மதிக்கப்படாது என்றும் சக கனம் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் அதிகமாகப் பலரும் பல துறைகளைப் பற்றி எடுத்துச் சொல்லிவிட்டார்கள். அதனால், மீண்டும் இதன் மீது விளக்கமாகப் பேசத் தேவையில்லை, ஷரத்துக்களுக்குள்ளே போய்க்கொண்டிருக்கவேண்டிய அவசியமுமில்லை என்பதனாலும், இன்னும் வேலைகள் நிரம்ப இருப்பதனாலும், இதை முழுக்க முழுக்க அரசாங்கம் கைவிடுவதுதான் நியாயம்; பயன் உள்ளதும், நன்மை பயக்கத்தக்கதும் ஆகும், அன்றி கேடு பயக்காமலும் இருக்கும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப்பற்றி சில தவறான கருத்துக்கள் நிலவி வருகின்றன என்பது நம்முடைய விவாதத்திலிருந்து தெரிய வருகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பத்திர பதிவு செய்வதிலே நாம் இன்று எடுத்துக்கொண்டிருக்கிற புதிய திட்டம் அல்லது வழி ஏதோ தவறு இழைப்பதற்கு வழிவகை செய்துவிடும் என்று சொன்னார்கள். அதற்கு மாறாக, தவறு இழைக்கப்படாமல் இருப்பதற்கு, தவறு இழையாமல் இருப்பதற்கு இது ஒரு நல்ல சிறந்த வழி. யார் ஒருவர் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று நினைக்கிறார்களோ, அதற்குச் சாதாரணமாக இரண்டு பேர்கள், விற்பவர்கள். வாங்குபவர்கள், அடமானம் வைப்பவர்கள், அடமானத்தின் மீது பணம் கொடுப்பவர்கள், ஆகிய இரண்டு தரப்பினரும் கையெழுத்துப் போடுகின்றனர். அவர்கள் ஒரிஜினல் கையெழுத்துப் போடுவார்கள், அதைப் போல காபியிலும் கையெழுத்துப் போடுவார்கள். ரிஜிஸ்டிரார் ஆபிஸிலே நன்றாகப் படித்துப் பார்த்து, ஒப்பிட்டு சரியாக இருக்கிறதா என்று கவனிப்பார்கள். இப்படி கவனித்த பிறகு அது நம்முடைய ரிஜிஸ்டரில் ஒட்டப்படும். ஒட்டியவுடன் அதற்கு பேஜ் நெம்பர் கொடுக்கப்படும். ஆகையால் இதைக் கிழித்து எறிந்து விடலாம் என்று சொல்வது நடைமுறையில் நடக்க முடியாத ஒரு விஷயமாகும். ஒட்டியதைக் கிழித்து விடலாம்

8th November 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

என்றால், முன்பு போல் எழுதியதையும் கிழித்து விடலாம். முன்பு இருப்பதுபோல் எழுதுகிற முறையில் ஒரிஜனலாக டாகுமெண்டு எழுதியவர்களுடைய கையெழுத்து இருக்காது, காபி பதிவு செய்கின்றவர்கள், அதாவது 'எக்ஸிக்யூடண்டு' அவர்களுடைய ஒரிஜனல் கையெழுத்துத்தான் இருக்கும். ஆகவே, அதன் காரணமாக இப்பொழுது புதிய முறையின்படி தவறு இழையாமல் இருப்பதற்கும், தவறு ஏற்படாமல் இருப்பதற்கும், இது நல்ல வழி செய்யும் என்று சொல்ல விரும்புகிறேன். எழுதுகின்றவர்கள் 10–30 a.m. தவருக வைக்கலாம். ஆனல் இந்த முறையில், இரண்டு காபிகள் கொடுக்கப்பட்டு, அவை ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு, வாங்குகிறவர், விற்கிறவர் இரண்டுபேர்களும் கையெழுத்திட்டு, பைல் செய்து விட்டால், அதை மாற்றுவதற்கு முடியாது. போர்ஜரி செய்தால் தான் முடியும். ஸ்க்ரிப்ட் ரைடர் தவறு எழுதக்கூடும். அவர் எழுதுவதில் தவறு நேர்ந்தாலும் நேரக்கூடும். ஆனல் இந்த புது முறையில், அப்படி நேராது. மேலும் இன்றைக்கு ஹைகோர்ட்டு களிலும் மற்ற கோர்ட்டுகளிலும், ரிஜிஸ்டர் ஆப் ஜட்ஜ்மெண்ட் என்று வைத்திருக்கிருர்கள். அதிலே ஜட்ஜ்மெண்டு ஆனவுடனே காபி எடுத்து ரெஜிஸ்டர் செய்து நம்பர் கொடுத்து, பேஜ் நம்பர் கொடுத்து அந்த முறையில் வைக்கப்படுகிறது. அங்கே அப்படி வைத்திருப்பதால் ஒழுங்காக இருக்கிறது என்று சொன்னல், இங்கேயும் பதிவு செய்வது ஒழுங்காக ஏன் இருக்க முடியாது ? இது ஒன்றும் புதிது அல்ல. ஏற்கனவே போட்டோ ஸ்டெட் முறையை முயற்சி செய்து அதை யுத்த காலத்தை முன்னிட்டு விட்டு விட்டோம். அதோடு நடைமுறையில் போட்டோ ஸ்டெட் காபிகள் எடுப்பதற்கு மக்களுக்குக் கஷ்டமாக இருக்கும், செலவு அதிகமாக ஆகும் என்று கைவிட்டுவிட்டோம். ஆகவேதான் இந்த முறை சிறந்த முறை என்று நினைக்கிறேம். தவறுகள் ஏற்படாமல் இருக்கக் கூடிய முறை.

இன்னென்றும் சொன்னர்கள். இந்த ஸ்கிரிப்ட் எழுதுகிற வர்கள் வேலைபோய்விடும். அதனல் கஷ்டங்கள் ஏற்படும் என்று சொன்னர்கள். நாம் இப்பொழுது வேலையில் இருப்பவர்களைக் காப்பாற்ற வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை சர்க்கார் செய்கிறது. இன்றைக்கு இதனல் வேலை இழப்பவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். இல்லையென்றே சொல்லலாம் என்று சொல்லக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. அதற்கான ஏற்பாடும் செய்யப் படுகிறது. இதை சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும் என்று செய்கிறேம். பட்ஜட் விவாதத்தின் போதெல்லாம், ஏதாவது நல்ல முறைகளைக் கொண்டு சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறேம். அதற்கான முயற்சி ஏதாவது செய்தால், அதையும் எதிர்ப்பது என்பது எவ்வளவு நியாயம் என்றுதான் புரியவில்லை. இன்றைக்கு வேலையில் இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்கிறது. அதற்காக சில திட்டங்களெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. சில அங்கத்தினர்கள்கூட இன்றைக்கு கேள்வி நேரத்தில் சொன்னர்கள், பத்திரங்கள் கிடைக்கவில்லை என்று. இப்பொழுது

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [8th November 1966

பத்திரம் வெண்டார்கள் என்று வைத்துச் செய்வதில் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அவர்களிடத்திலே பணம் இல்லையென்றால், போதிய அளவில் பத்திரங்கள் வாங்கி வைப்பதில்லை. ஆகவேதான் ரிஜிஸ்டர் ஆபீசிலேயே பத்திரங்களை விற்க ஏற்பாடு செய்ய வேண்டும், போஸ்டாபீசில் ஸ்டாம்புகள் விற்பதுபோல, சர்க்கார் துறையிலேயே, என்கிற ஆலோசனையும் செய்துகொண்டிருக்கிறோம், மக்களுக்கு ஸ்டாம்ப் வெண்டர் மூலம் ஏற்படும் கஷ்டங்களைத் தீர்க்க அந்த யோசனையையும் செய்கிறோம். இதிலும் வேலை கொடுக்கலாம். ஆகவே, இந்த மாற்றத்தினால் எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. வேலையில் இருப்பவர்களுக்கு ரிட்ரெஞ்ச்மெண்ட் இல்லாமல் செய்யலாம். ஆனால், இனிமேல் அப்படிப்பட்ட வேலைக்கு அனுவசியமாக வைக்க வேண்டியதில்லை, புதிதாக ஸ்க்ரிப்ட் ரைட்டர்கள் வேண்டியதில்லை, கம்பேர் செய்ய மட்டும் இருந்தால் போதும், அந்த வகையில் இந்தத் துறையில் நமக்கு சிக்கனம் ஏற்படும் என்றும் இது செய்யப்படுகிறது.

ஏதோ லஞ்சம் வந்துவிடும் என்றார்கள். எப்படி வரும் என்று தெரியவில்லை. காபி எழுதுகிறவர், பைல் செய்கிறவர் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள், ஒட்டுகிறார்கள். ஒட்டுவதில் எப்படி லஞ்சம் வந்துவிடும் என்று புரியவில்லை. அப்படி ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்று தெரிவிக்க விரும்புகிறேன். ரெகார்டெல்லாம் வைக்க இடம் வேண்டும் என்றார்கள். எழுதியதிற்கு வேண்டிய இடம் தான் இதற்கும் வேண்டியிருக்கும். பைண்ட் செய்து வால்யூம் ஒன்று முதல் 120 வரை என்று அடுக்கி வைப்பார்கள். ஆகவே இந்த சட்டமானது ஒரு ஒழுங்காக வைக்க உதவும்.

இதிலே ஒரே ஒரு பிரச்சினை. வேலை போய்விடும் என்று பலர் பலரைப் பார்த்திருக்கிறார்கள். என்னையும் சந்தித்துப் பார்த்தார்கள். அவர்களுக்கு நாம் நல்லது செய்கிறோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நான் அவர்களுக்குச் சொன்னேன். அவர்களுக்கு உதவி செய்கிறோம். ஆகவே தான், இதில் இவ்வளவு எதிர்ப்பதற்கு என்ன இருக்கிறது என்றுதான் புரியவில்லை. மற்றபடி இந்த மசோதா பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் விளக்க வேண்டியவற்றைப் பற்றி பதில் அளிப்பார்கள்.

* கனம் திரு. கோ. பூவராகன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவுத் துறை 100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் ஒரு பழைமையான இலாகாவாகும். இந்த அலுவலில் புதிய மாற்றம் கொண்டுவருகிறோம் என்றால் அது சிக்கன சீரமைப்புக் கமிட்டி யோசனையின் பேரில் என்றல்ல. 1962-ம் ஆண்டில் பத்திரப் பதிவு கெஜடெட் ஆபீசர்கள் மற்றவர்கள் எல்லாம் கூட, இதிலே ஏதாவது புதிய மாற்றம் செய்யவேண்டுமா, மாற்றி அமைக்கவேண்டாமா என்று இரண்டு நாட்கள் விவாதம் நடந்தது. இந்தப் பத்திரப் பதிவு முறையில், பைலிங் முறையில், மாற்றவேண்டுமா என்று யோசனை செய்து பார்க்கவேண்டும். என்று சொன்னார்கள். ஏற்கனவே அந்த முறையில் நாம் சில

8th November 1966] [திரு. கோ. பூவராகன்]

ரிகார்டுகளை பைல் செய்துவருகிறோம். ரிஜிஸ்டர் ஆகும் பத்திரங்களில் 10 சதவிகிதம் இன்றையதினம் பைல் செய்யப் படுகின்றன. அந்த பைல்கள் நல்ல முறையில் காப்பாற்றப் பட்டுவருகின்றன. சென்னை நகரத்தில், மற்ற நகரங்களில் வீடு ப்ளான் கொடுத்து பத்திரங்களை பதிவு செய்கிறார்கள். இதையெல்லாம் பல ஆண்டுகளாக பத்திரமாகக் காப்பாற்றி வருகிறார்கள். ஃபைலிங் முறையில் அப்படியே கிடைக்கும் முறையில் இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். பத்திரம் இல்லை. காணாமல் போய் விட்டது என்ற குறைபாட்டிற்கே இடம் இல்லாமல் நல்ல முறையில் மக்களுக்கு நம்பிக்கையோடு தங்கள் உடமைகள் பற்றிய விஷயத்தில் ரிகார்டுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இன்றையதினம் கொண்டு வந்திருக்கிற மசோதாபடி சில பைல் செய்யவேண்டும் என்று இருக்கிறது. ஏற்கெனவே பைல் செய்யப் படவேண்டும் என்பது திட்டவட்டமாக குறிப்பிடாமல் இருந்தது. இன்றையதினம் சட்டபூர்வமாக பைலிங் செய்யவேண்டும் என்று உறுதிப்படுத்தப் படுகிறது என்பதைமட்டும் சொல்ல விரும்பு கிறேன். அதோடு, காபி செய்வதில் எவ்வளவு உறுதிப்பாடு இருக்கிறதோ அந்த மாதிரி இதிலும் இருக்கிறது. பத்திர, காபி தாள்களை நம்முடைய அச்சகத்தில் தயாரித்து, அந்தத் தாள்களில் காபி கொடுக்கவேண்டும் என்றும் செய்யப் போகிறோம். பைல்களில் நம்பர் போடப் போகிறோம். எல்லாம் சப்-ரிஜிஸ்ட்ரார் கஸ்டடியில் இருக்கும். எதையும் டேம்பர் செய்ய, தவறுகள் நடக்க சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கும்.

அதோடு இன்னும் சில குறைபாடுகள் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே இந்த இலாகாவில் ஊளவுக்குப் பதவி உயர்வு கிடைக்க வழி முறைகள் குறைவாக இருக்கிறது என்றார்கள். அவ்வப்பொழுது அவை கவனிக்கப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரையில், சரியான முறையில் அது பிக்ஸ் செய்யப் படவேண்டும். குறைந்த பட்சம் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் கெஜட் பதவி பெற்ற பிறகாவது ரிடையர் ஆகவேண்டும் என்கிற நல்ல எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டு. இதன் மூலம் ஏதோ கீழே இருப்பவர்களுக்கு வேலை போய்விடும் என்கிறார்கள். அப்படி நடக்காமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் படும். சில ஜில்லாக்களில் ஒரு பத்திரப் பதிவு நிர்வாகம் இருக்கிறது. அதையெல்லாம் இரண்டாகப் பிரித்து பத்திரப் பதிவு நிர்வாகம் அமைத்து, அங்கங்கே இருந்து நல்ல முறையில் பணியாற்றுவதற்கும் அடிக்கடி கிளைப் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் சென்று கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று யோசனை சொன்னார்கள். அந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. நான்கு பத்திரப் பதிவு ஜில்லாக்கள், ஐந்து ஜில்லாக்களுக்கு அங்கிருக்கும் வேலைக்குத் தகுந்த முறையில் ரீஜினல் அலுவலகங்கள் ஏற்படுத்தவேண்டும், இன்ஸ்பெக்டிங் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, அவர்களெல்லாம் அடிக்கடி ஜில்லா அலுவலகங்களுக்கும், கிளை அலுவலகங்களுக்கும் சென்று பார்வையிட்டு அங்கு நடக்கும் தவறுகளைக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எங்காவது குறைந்த கட்டணங்கள் வாங்கிக்கொண்டு

பதிவு செய்யப்பட்டிருந்தால், அதையெல்லாம் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதனால், கீழே இருக்கும் சிப்பந்திகளுக்கு வேலை போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சாரும். ஒருவருக்கும் வேலை போய்விடாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்று நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த இலாக்காவைப் பொறுத்தவரையில் கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "எல்லா அமைச்சர்களும் மசோதா கொண்டுவந்துவிட்டார்கள், இந்த அமைச்சரும் ஒரு மசோதா கொண்டுவரவேண்டும் என்று கொண்டுவந்திருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். இந்த இலாக்காவின் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, இந்த இலாக்காவிற்கு ஒரு புதிய தோற்றம் கொடுத்து, புதிய நிலையை உருவாக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டு வந்தேன். அதிலே ஒன்றும் தவறு நடந்துவிடவில்லை என்று நான் சொல்லிக் கொள்ளுவேன். கீழ் நிலையில் உள்ள பலருக்கும் ஓரளவுக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்கிறது. பதிவு அலுவலகமே இல்லாத பல இடங்களில் கிளைப் பதிவு அலுவலகங்கள் துவக்கப் பட்டிருக்கின்றன. சென்ற நான்கைந்து ஆண்டுகளில் 20, 25 பத்திரப் பதிவு அலுவலகங்கள் திறந்ததினாலே பல பேருக்கு உத்தியோக உயர்வு கிடைத்திருக்கிறது. மேலே இருக்கிறவர் களுக்கும் உற்சாகம், ஊக்கம் கொடுக்கவேண்டும் என்ற அந்த எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. கீழ் நிலையில் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, உற்சாகத்தோடு வேலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், ஜில்லா அதிகாரியாகவும், ரீஜினல் அதிகாரியாகவும், டி.ஐ.ஜி.-ஆகவும் வர சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம். மேலும், அதிலே ஒருவிதமான தவறும் இல்லாத அளவிலே அந்தப் பணியிலே ஈடுபட சந்தர்ப்பங்கள் எல்லாம் கொடுக்க இருக்கிறோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு இந்தச் சட்டம் கொண்டுவருகிறபோது, இதன்கீழ் விதிகள் பிறப்பிக்கும்போது, விதிகளில் சிறு சிறு தவறுகள் கூட நிகழாதவாறு என்ன என்ன முறையிலே மக்களுடைய உடமைகள் பாதுகாக்கப்படவேண்டுமோ அதற்கெல்லாம் பாதுகாப்பு அளிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுதே பாதுகாப்பு இருக்கிறது. இதிலே ஒன்றும் தவறு நேர்ந்துவிடாது. தவறு நிகழக்கூடாத அளவுக்கு என்ன என்ன உறுதி கொடுக்க வேண்டுமோ அதையெல்லாம் விதிகளின் மூலம் செய்து, நல்ல முறையில் இந்தச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

8th November 1966] [திரு. கோ. பூவராகன்]

இந்த இலாக்காவிலே பணிபுரியக் கூடியவர்களில் ஒருவருக்கும் வேலை நீக்கம் ஏற்படாதவாறு கவனம் செலுத்தப்படும், கட்டாயம் வேலையிலே உறுதி உண்டு, அந்த வேலையிலே அவர்கள் நீடிப்பார்கள் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஃபைலிங் செய்வதிலே கூட, ஒருவிதமான தவறுதலும் நிகழாத வாறு, எந்தெந்த முறையில் பாதுகாப்புக் கொடுக்க முடியுமோ அந்த முறையில் பாதுகாப்பு அளிக்கப்படும். நம்பர் போடுகிறோம். ஸீல் போடுகிறோம். இரண்டு பக்கங்களிலும் கையெழுத்துப் போடப்படும். தேதி போடப்படும். இன்னும் என்ன என்ன வகையில் கவனம் செலுத்த முடியுமோ அதில் எல்லாம் கவனம் செலுத்தப்படும். ஸ்டேஷனரியில் சிக்கனம் ஏற்பட்டுவிடாது என்று ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. ஸ்டேஷனரி இனத்தில் மட்டும் ஒன்றரை லட்ச ரூபாய் மீதப்படும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கின்றேன்.

MR. SPEAKER : The question is—

'That the Indian Registration (Madras Amendment) Bill 1966, be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses, 2 to 6, and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, I move—

'That the Indian Registration (Madras Amendment) Bill, 1966, be passed.'

MR. SPEAKER : Motion moved.—

'That the Indian Registration (Madras Amendment) Bill, 1966, be passed.'

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்று சொல்லி, அமைச்சர் அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அதிலே நன்மைகள் இருக்கின்றன. அந்த நன்மைகளை அவர்கள் பார்க்கிறார்கள். அவர் கருதுகிற நன்மைகளை 'நன்மைகள்' என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. நிர்வாகத்தை விஸ்தரிப்பதை நான் ஆட்சேபிப்பதாக நினைக்க வேண்டாம். பட்ஜெட்டிலேயே நான் பேசியிருக்கிறேன். நிர்வாகத்தை விஸ்தரிக்கும் யோசனைக்கு நான் ஆதரவு கொடுத்தேன். நேற்று நான் பேசும் போது கூட, அவசியம் ஏற்படுகிற அளவுக்கு உயர் பதவிகளை அதிகரிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை, அவசியம் என்று கூட

நான் வற்புறுத்தினேன். அதற்காக ஆகும் செலவைக்கூடப் பொருட்படுத்தக்கூடாது என்று நான் கூறினேன். அதே நிலையைத் தான் இன்றும் தெரிவிக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் ஒரு உறுதியைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். 'ஒருவரைக் கூட வேலையிலிருந்து நீக்கமாட்டேன்' என்று சொல்லியிருக்கிறார். அது ஓரளவுக்கு ஆறுதல் அளிக்கிறது. ஃபைலிங் முறையில் வரக்கூடிய நன்மைகளைப் பின்னால் சரித்திரம் தான் நிரூபிக்க முடியும். இன்றைக்கு நான் பேசும்போது, என்ன என்ன கெடுதல் ஏற்படக்கூடும் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சியினரின் கடமை என்ற முறையில், குறைகளைச் சுட்டிக் காட்டினேன். அந்தக் குறைகள் ஏற்படாமல் இருக்க என்ன என்ன முறைகளைக் கையாளவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்து, அதற்குத் தகுந்த முறையில் விதிகளைப் பிறப்பிக்கவேண்டும். இந்த மசோதா சட்டமாக நிறைவேறிவிட்ட பிறகு சட்டத்தை நாங்கள் எதிர்த்துப் பேசினாலும், நாங்களும் அதற்கு உட்பட்டவர்களாகத்தான் ஆகிறோம். ஆகவே, அதை அமல் நடத்தும்போது, நாங்கள் எடுத்துக்கூறிய குறைகளையெல்லாம் நிவர்த்தித்து என்ன என்ன பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ அதை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஃபைலிங் முறை அமலுக்கு வருகிறபோது, பத்திரம் பதிவு செய்கிறவர்களும் அதில் கையெழுத்திட வேண்டும். அடிக்கட்டையிலும் கையெழுத்து இடவேண்டும். அதிகாரியின் கையெழுத்தும் இருக்கவேண்டும். இந்த முறைகளையெல்லாம் அமல்படுத்துவதில் பிசகு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இதிலே ஒரு விஷயத்தை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஒருவரையும் வேலையிலிருந்து நீக்கமாட்டேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியது, பர்மெனன்ட்டாக இருக்கக் கூடியவர்களை மட்டுமா? 250 காபி ரைட்டர்களை டெம்பரவரியாக வைத்திருக்கிறார்கள். அவர்களில் 15 வருஷங்கள், 20 வருஷங்கள் சர்விஸ் உள்ளவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணினவர்கள்; எஸ்.எஸ்.எல்.ஸி.-க்குக் குறைவான தகுதியுடையவர்கள் யாரும் இல்லை. அப்படியிருக்கக் கூடிய காப்பி ரைட்டர்களுக்கு என்ன வேலை கொடுக்க வகை செய்யப்போகிறார்கள்? 'டெம்பரரி' என்றால் 24 மணி நேர நோட்டீஸில் வேலையைவிட்டு நீக்கிவிடலாம் என்று சொல்லுகிறார்களே, அப்படியிருக்கும்போது, இப்பொழுது அமைச்சர் அவர்கள் கொடுக்கக்கூடிய உறுதிமொழி அவர்கள் விஷயத்திலும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

***கனம் திரு. கோ. பூவராகன்:** இதுவரை, இந்த இலாக்காவில் பணிபுரிந்து வருகிறவர்கள் டெம்பரரியாக இருந்தாலும், பர்மெனன்ட்டாக இருந்தாலும் வேலை போய்விடும் என்ற நிலை இருக்காது என்று சொன்னேன். ஃபைலிங் சிஸ்டத்தைப் பொறுத்தவரையில், டாக்குமென்ட் எழுதி வாங்குகிறவர்களுடைய கையெழுத்தும் வாங்கப்படுகிறது. சப்-ரிஜிஸ்ட்ரார் கையெழுத்தும்

8th November 1966] [திரு. கோ. பூவராகன்]

இருக்கிறது. சப்-ரிஜிஸ்ட்ரார் சீல், நம்பர் அவர்கள் கையெழுத்தெல்லாம் இருக்கிறது. கிழித்தெடுத்தால்கூடக் கண்டுபிடித்து விடக்கூடிய முறையில் அந்த ஃபைலிங் முறை இருக்கும் என்று உறுதி அளிக்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Indian Registration (Madras Amendment) Bill, 1966, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1966.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1966, and move—

'That the Bill [a] be taken into consideration'

According to Section 8 (2) (i) (*b*) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), in the case of lands in an iruvaram minor inam granted for the support or maintenance of a religious institution or for the performance of a charity or service connected therewith or of any other religious charity, and alienated by such institution by way of sale, if the alienee is in exclusive possession of such land for a continuous period of twelve years immediately before the 1st April, 1960, such person shall, with effect from the appointed day, be entitled to a ryotwari patta, subject to the payment to the Government of a consideration equivalent to twenty times the difference between the fair rent in respect of such land and the land revenue due on such land. Section 8 (4) of the Act lays down that the amount specified in clause (i) (b) of sub-section (2) of section 8 is payable by the Government to the institution concerned within one year from the appointed day, i.e., 15th February 1965 for the entire State except the Transferred Territory of Kanyakumari district and Shencottah Taluk of Tirunelveli district and 1st March 1965 for the Transferred Territory. It has been brought to the notice of the Government that it will not be possible to make the payment within the above period as the Assistant Settlement Officers will not be able to determine within that period the quantum of the amount payable after following the prescribed formalities and verifications. It is therefore considered necessary to amend Section 8 (4) of the Act so as to take power for the Government to prescribe the time limit by rules made by the Government. If the time limit as prescribed in the rules is found insufficient, it can be extended by a mere amendment of the relevant rule without amending the Act every time. The Bill seeks to amend the section accordingly.

Sir, I have now briefly indicated the object of this legislation. I request the House to accept the motion.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th October 1966.

MR. SPEAKER : The question is—

"That the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1966, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into conideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1966, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1966.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to introduce the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1966, and move—

"That the Bill[a] be taken into consideration."

The Bill seeks to make cetain changes in the main Act relating to grant of ryotwari patta in respect of private lands belonging to religious institutions and in regard to collection of arrears of rent in existing inam estates.

Now, I shall take up the first issue, namely grant of ryotwari patta in respect of private lands of religious institutions. Section 9 of the Act lays down the procedure for grant of ryotwari patta to landholders. Proviso to clause (a) of sub-section (1) and proviso to clause (a) of sub- section (2) of section 9 provide that in the case of private lands, the landholder will be eligible for ryotwari patta only if it is proved that the land had been cultivated by the landholder himself or by his own servants or by hired labour with his own or hired stock in the ordinary course of husbandry for a continuous period of three years within a period of twelve years immediately before the 1st April 1960. It has been represented by religious institutions who are landholders that if this provision is enforced, they will not be able to secure patta for any of their private lands. It is stated that religious institutions have been practically prohibited from carrying on personal cultivation. The rules issued under the Madras Hindu Religious and Charitable Endowments Act provided that pannai cultivation should not be resorted to without obtaining the previous approval of the Deputy Commissioner in whose jurisdiction the religious institution is situated. The religious institutions would therefore be unable to get a

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th October 1966.

8th November 1966] [Sri R. Venkataraman]

patta for the lands in their possession, if the requirement of this section is insisted upon. In other words, the institutions have virtually been prevented from acquiring the requisite qualifications to entitle them to claim, ryotwari patta in respect of their private lands. In view of the peculiar position of these institutions, it is considered necessary to exempt religious institutions as defined in section 6 (18) of the Madras Hindu Religiou and Charitable Endowments Act, 1959, (i.e. maths, temples or specific endow ments) from the provisions laying down personal cultivation as a condition for grant of patta. Under the amended provisions, these religious institutions will be entitled to get patta in respect of all private lands without reference to personal cultivation provided such private lands had not been converted ino ryoti land.

As regards the collection of arrears of rent in existing inam estates, it has been brought to the notice of the Government that the existing provisions of sectoin 56 caused hardships to the ryots. There are two classes of existing inam estates those in respect of which Rent Reduction Notification has not been issued and those in respect of which Rent Reduction Notification has been issued. If the rent reduction notification is issued now in respect of inams for which rent reduction has not been notified so far, it will cause undue hardship to the ryots as they have to pay rent from fasli year 1357 onwards even though on a reduced basis it is considered that in respect of existing inam estates where the rent has not been reduced under the Rent Reduction Act before the notified date, it is not necessary to notify the said estates under the said Act at this distance of the time. Accordingly, it is proposed to make suitable amendments to the Act.

It is also considered necessary to give relief to the ryots in existing inam estates in respect of which rent reduction notification has not been issued by providing that the arrears for any fasli year prior to fasli year 1371 will stand completely wiped out, if the ryot had paid to the landholder before the notified date or pays to the landholder within two years of that date the rent due for the fasli years 1371 and 1372. I am going to introduce an amendment providing that the arrears will stand wiped out if the rent is paid within two years of the notified date or of the date of the publication of this Bill in the Fort St. George Gazette whichever is later, thus extending the time limit. It has also been considered that it is not necessary to assume responsibility for the collection of arrears of rent in existing inam estates where rent reduction notifications have not been issued before the notified date. Accordingly, section 56 of the Act is proposed to be amended suitably.

The provisos to sub-section (1) of section 56 of the Act deal with reduction of rent accured due in respect of fasli year 1356 and earlier faslis in accordance with the rent as determined under the Rent Reduction Act and provide that if the rent due for fasli years 1356–57 and any interest payable thereon together with any costs, etc., has been paid, then all arrears of rent due from such ryot in respect of prior fasli years will be discharged. It has been suggested that there will be no such cases falling within the scope of these

provisos at this distance of time. Further, the provisos have given an incorrect impression that even claims in respect of fasli 1356 and earlier faslis, which have become time-barred, will get revived. This is not the intention. Accordingly, it is proposed to omit the said provisos.

In the case of existing inam estates where the rent has been reduced before the notified date, the intention has always been that claims or arrears of rent for fasli year 1956 and earlier faslis should not be revived, if such claims have become time-barred. Though this is the position, in view of the doubts raised from certain quarters, it is proposed to make this intention clear by incorporating suitable Explanation in sub-section (1) of section 56 of the Act.

It is proposed to give effect to this Bill from 1st January 1964, the date of commencement of the principal Act.

Sir, I have now briefly indicated the objects of this legislation. I request the House to accept the motion.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1966. be taken into consideration."

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அமைச்சரவை கொண்டு வந்திருக்கிற இந்த இனாம் எஸ்டேட்ஸ் திருத்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இவ்வளவு காலமாக ஏற்பட்டிருந்த இடையூறுகளை, அதனால் விளைந்த, விளையக்கூடிய பெரும் கஷ்டம், நஷ்டம் அல்லது தீமைகளை உணர்ந்து ஒரு வரி அந்த இனாம் ஆக்டில் சேர்க்கப்படுவதன் மூலமாக ஒரு நல்ல பணியைச் செய்ய முன் வந்திருக்கிறார்கள் ஆட்சியாளர்கள் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கோயில்களுக்கு அல்லது இதுமாதிரியான அறநிலையங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் நேற்று இன்று அல்ல, ஜமீன்தார் காலத்தில் அல்லது பண்டைய கால பல்லவர்கள், அவர்களுக்கு முந்திய பாண்டியர்கள், சோழர்கள் காலத்தில் இருந்தே தொடர்ந்து வருவனவற்றை எல்லாம் ஆங்காங்கு காணப்படுகின்ற கல்வெட்டுக்களில் இருந்து நாம் உணர முடியும். அந்த சாஸனங்களிலேகூட குறிப்பிடப்பெறும், எந்த ஒரு நிலத்தை யாவது கோயிலுக்கு விற்றாலோ அல்லது கோயில் நிலத்தை வேறு
11-00 a.m. காரணத்திற்காக தனிமனிதருக்கு விற்றாலோ அதில் "குடி நீங்கா தேவதானமாக" என்ற சொற்றொடர் இடம்பெற்றிருக்கின்ற நிலை இருக்கிறது. ஒருவர் நிலத்தை ஒருவர் வாங்கிக் கொள்வதாலோ அல்லது விற்பதாலோ அங்கிருந்து உழவர்களை வெளியேற்ற முடியாது என்ற குறியீடு வெளிப்படுகின்ற தன்மையிலேதான் "குடிநீங்காக்காராண்மை" என்று காணப் பெறும். ஆலய நிலத்தை பிறருக்கு விற்கின்ற நிலையிலோ அல்லது ஆலயத்திற்கு பிறரிடமிருந்து பெறுகின்ற நிலையிலோ "காராண்மை" என்றும் "தேவதானமாக" என்றும் வரும். அதோடு குடி நீங்கா என்ற சொற்றொடரும் சேர்ந்துதான் "குடி

8th November 1966] [திரு. சா. கணேசன்]

நீங்காக் காராண்மை" அல்லது "குடி நீங்கா தேவதானம்" என்று பியிலப் பெற்றுவருவதைக் காண்கிறோம். ஆகவே பன்னெடுங் காலமாகவே, குடியை அந்த இடத்தைவிட்டு வெளியேற்ற முடியாது என்கிற நிலை இருந்து வந்திருக்கின்றது. அதோடு மட்டுமல்ல. நம்முடைய இந்தமாதிரி ஜனநாயக அமைப்பு ஆட்சி ஏற்பட்ட பிறகூட தேவாலயங்கள் நேரடியாக நிலங்களை உழுவது என்பது சாத்தியமில்லை. அங்கிருக்கின்ற தெய்வங்கள் வயலில் இறங்கி உழ முடியாது. ஆகவே அவர்கள் பண்ணை வைத்துக் கொள்ளலாம் என்ற சில வசதிகள் முன்பு இருந்தன. தனிப்பட்டவர்களுடைய நேரடி நிர்வாகத்திலே பல தேவாலயங்களின் நிலங்கள் பண்ணை நிலங்களாகவே இருந்து வந்தன. எண்டோமென்ட் போர்டினுடைய அல்லது அந்த இலாகாவினுடைய குழு ஆதிக்கத்திற்கு உட்பட்ட கோயில்கள் அவற்றிற்குரிய நிலத்தைப் பண்ணையாக விவசாயம் பண்ணவேண்டுமானால் குறைந்த பட்சம் அங்கே இருக்கக்கூடிய டெபுடி கமிஷனர்களின் அனுமதியில்லாமல் நடத்த முடியாது. பெரும்பாலான கோயில்களுக்குப் பல தவறுகள் ஏற்பட்ட காரணத்தினாலே, டெபுடி கமிஷனர்கள் பண்ணை கல்டிவேஷன் பண்ணக் கூடாது என்று தடைவிதித்தார்கள். அந்தக் காரணத்தினாலே பல தேவாலயங்களிலே பண்ணை கல்டிவேஷன் நடத்த முடியாது போய்விட்டது. பண்ணை கல்டிவேஷன் பண்ணகூடாது என்று ஒரு புறமும், பண்ணை கல்டிவேஷன் இல்லையென்றால் அப்படிப் பட்ட நிலங்கள் எல்லாம் கோயில் நிலங்கள் ஆகாது என்று ஒரு புறமும் கூறுவது எப்படி யிருக்கிறது என்றால், ஒருவனை உணவு உண்ணக் கூடாது என்று தடுத்துவிட்டு, பிறகு அவனையே என் உணவு உண்ணாமல் உண்ணாவிரதம் இருக்கிறாய் என்று சொல்லி அவன் மீது நடவடிக்கை யெடுப்பது போலத்தான்யிருக்கிறது. ஆலயங்களுடைய நிலத்தை பண்ணை விவசாயம் பண்ணக்கூடாது என்று மறுத்துவிட்டு பண்ணை விவசாயம் செய்யாததினாலே நிலத்தை, "தேவாலயமோ நீ விட்டுவிடு", என்று கூறுகின்ற நிலை அறமாகுமா, நீதியாகுமா என்பதைச் சிந்தித்தல் வேண்டும். இந்த நிலையிலே வந்திருக்கின்றது இது.

இன்னொன்றுகூடச் சொல்ல விரும்புகிறேன். சோஷலிசம் என்ற தத்துவத்திலே நம்பிக்கை கொண்டிருக்கிறவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆலயங்கள் போன்ற ஒரு சோஷலிஸ ஸ்தாபனம் உலகத்திலே வேறு ஒன்றுமில்லை. அத்தனையும் மக்களுடைய உடைமை. அங்கேயுள்ள பொருள்கள் யாருக்கும் சொந்தமில்லை. நாம் படைக்கிற அன்னம், பட்சணம் கூட மக்களுக்குத் தான். நல்ல காலமாக அங்கே எஜமானத்துவம் கொண்டு இருக்கின்ற தெய்வங்கள் எல்லாம் கல்லினாலும், செம்பினாலும் உள்ள மூர்த்திகள் ஆனமையால் அவற்றில் எதையும் எடுத்துக் கொள்வதே இல்லை. அவற்றின் பெயரைச் சொல்லி நாம் உண்கின்றோம். பண்டைக் காலத்திலே ஆலயங்கள்தான் கவர்ன்மென்ட் ஆகக்கூட இருந்திருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் எல்லாம் ஆலயத்திலே நடந்தன. இவற்றையெல்லாம் பேசி நேரம் விரயமாகக் கூடாது என்று எண்ணுகிறேன். கல்லூரி என்ற பெயர் ஏற்பட்டதே இந்தக் கோயில்களிலிருந்துதான். சுற்றுப் பிரகாரம்

இருக்கிறதே அதுதான் கல்லூரி என்று அழைக்கப்படுவது. ஆங்கிலத்திலே காரிடார் என்று சொல்கிறோமல்லவா, அதுதான். அதைத்தான் நாம் இப்பொழுது கல்லூரி என்று அழைக்கிறோம். அதாவது காலேஜ் என்று எழுத்தறிவைக் கொடுப்பது பள்ளி என்றும், கலை அறிவைக் கொடுப்பது கல்லூரி என்றும் அழைக்கப்பட்டிருப்பதை நாம் காணமுடியும். தேவாலயங்களிலேதான் இந்த எழுத்தறிவும், கலையறிவும் கற்பிக்கப்பட்டதாக அறிகின்றோம். வேற்றிலை போடுவது, மடிப்பது இவற்றுக்கெல்லாம்கூட ஆய கலைகள் அறுபத்து நான்கு என்ற அளவிலே கலையறிவு கற்பிக்கப்பட்டது. தாம்பூலம் போடுகிது எப்படி என்பதுகூட அல்ல, தாம்பூலம் மடிப்பது எப்படி என்பது எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் 'பீடா' என்கிறோமே அதைப்போல "பட்டியல்" கட்டி சுவாமிக்கு வைப்பது இன்றும் உண்டு. இப்பொழுதெல்லாம் நம்முடைய வீடுகளிலே வெற்றிலை பாக்கை தாம்பாலத்தில் வைத்துத்தான் கொடுத்துவிடுகிறோம். அவற்றை எடுத்து மடித்துப் போடுவதை அவரவர்கள் செய்துகொள்கிறார்கள். இதைப்போன்றே, உணவு சமைப்பது, நடனங்கள், இசை பல்வகையான கலைகள், பல தத்துவங்கள், இன்னும் சமய அறிவு இத்தனையும் கற்பிக்கின்ற கலைக் கூடங்களாக அவை விளங்கின. அதோடு அறத்துறை நிர்வாகம் பண்ணக்கூடிய காரணத்தினாலே ஆலயத்திற்கு 'நியமம்' என்ற பெயர் உண்டு. ஆட்சி நடத்துகின்ற காரணத்தினாலே அதற்கு 'கோட்டம்' என்ற பெயர் உண்டு. வணிக உடன்பாடுகள் செய்துகொண்ட காரணத்தினாலே 'நகரம்' என்ற பெயரும் உண்டு. இப்படியெல்லாம் வளர்ந்து வந்தது. ஆனால், அது இப்பொழுது வேறு முறையாக, நம்முடைய முறை, தேவை, அமைப்பு இவையெல்லாம் மாறியிருந்தாலும்கூட அதனுடைய புனிதத்துவத்திற்கும், பெருமைக்கும் கேடு விளையாமல், நன்மையே விளையக்கூடிய தன்மையை, அருமையை, நாம் உணர வேண்டும். தமிழனுக்குக் கலைச் செல்வமும், புகழும் இருக்கிறது என்று சொன்னால் அதை உணர்த்த எடும் எழுத்தும் இருக்கின்றன. அதற்கு மேலாக ஒப்பற்ற வரலாற்றுச் சான்றுகளாக இருப்பவை கோயில்களிலே காணப்படுகின்ற சுவர்கள் தான்; அந்தச் சுவர்களிலே அமைக்கப்பட்டிருக்கின்ற கட்டட அமைப்பு, அதாவது ஆர்கிடெக்சர், அதற்கு மேலே என்றும் மாறாத எழுத்துக்கள், அதாவது கல்வெட்டு எழுத்துக்கள், அவற்றிற்கெல்லாம் இந்தமாதிரிப் பாதுகாப்பு, ப்ரொடெக்ஷன் அந்தக் காலத்திலிருந்து இல்லாமல் இருக்குமானால், கோயில்களுக்கு இனம்கள் என்று பேரரசர்கள், பெருந்தனக்காரர்கள் அளிக்காமல் இருந்திருப்பார்களானால் எல்லாக் கோயில்களுமே பல நூற்றாண்டுக்கு முன்னதாகவே ரோடுகள் அமைக்கச் சல்லிகளாக மாறியிருக்கும். ஆனால் அந்த நிலங்கள் எல்லாம் இன்றைக்குப் பறிபோகக்கூடிய நிலைக்குத்தான் ஆலயங்கள் ஆளாகிக் கொண்டிருக்கின்றன. கோயில் சொத்துக்கள் பறிபோன காரணத்தால்தான் பத்துக்கு ஒன்று என்ற விதத்தில் கோயில்கள் இன்று இருக்கின்றன. கோயில்கள் அழியாமல் இருக்க வேண்டும். நம்முடைய வரலாற்றுச் சிறப்புக்கள் நம்முடைய பண்பாடு, நம்முடைய நாகரிகம், நம்முடைய வளர்ச்சி, (படிவளர்ச்சி எவலூஷன்) இவற்றிற்கெல்லாம் சான்றாக

8th November 1966] *[திரு. சா. கணேசன்]*

எப்பொழுதும் அழிக்க முடியாத, மறுக்க முடியாத, நிரந்தரமான, வரலாற்றுச் சான்றுகளாக ஆலயங்களே விளங்குகின்றன, அவை அழிக்கப்படாமல் இருப்பதற்குரிய இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்ததின் மூலம் இந்த அமைச்சரவை உண்மையிலேயே நல்ல காரியத்தைச் செய்கிறது. அதை முழுக்க முழுக்க மனமார வரவேற்று, இதன்மூலமாக நம்முடைய கலை, நம்முடைய பண்பாடு, நம்முடைய நாகரீகம் எல்லாம் வளர வேண்டும், வளருவதற்கு இது போன்ற ஆக்கமான பணிகளிலே ஆளும் கனத்தவர்கள், அரசாங்க உறுப்பினர்கள் முயல வேண்டுமென்று கூறி அமைகிறேன். **வணக்கம்.**

* **திரு. செ. மாதவன்:** கனம் தலைவரவர்களே, மகிழ்ச்சியான கடைசிக் கூட்டம் என்று தொழிலமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத்தைப் பற்றி வருணித்தார்கள். இந்த பயங்கரமான சட்டத்தைக் கொண்டு வருவதன்மூலம் ஏற்கனவே கொடுக்கப் பட்டுள்ள உரிமையைக்கூடப் பறித்துக் கொள்ளக்கூடிய சூழ் நிலையை உண்டாக்குகின்ற ஒரு வருத்தமான கூட்டம் இது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைவிட அவர்கள் கூறுதவற்றைக்கூட சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேவா லயங்கள் பரிபாலிக்கப்பட வேண்டும், அதற்குச் சொத்துக்கள் வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு பிரின்சிபல் ஆக்டே இருக்கிறது. அதிலே இடம் இருக்கிறது என்பதைச் சுதந்திராக் கட்சித் தலைவரவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனிப்பட்டவர்கள் கோயில் நிலங்களை, இனாம் நிலங்களை எடுத்துக் கொண்டால் அதற்கு ஒவ்வொரு ஆண்டும் தஸ்திக் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சட்டமிருக்கிறது.

ஆனால், பண்ணை நிலம் எது, ரயட்டி நிலம் எது என்பதுதான் பிரச்சினை. அது 'குவெஸ்டியன் ஆஃப் ஃபாக்ட்'. இந்தப் பிரச்சினை கனம் காமராஜர் அளவுக்குச் சென்றது. காங்கிரஸ் கட்சித் தலைவரை, காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து கேட்டுக் கொண்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே விவசாயிகளுக்காகப் போராடிய என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்கள் இங்கு இல்லையே என்ற குறை எனக்கு இப்போது இருக்கிறது. அவர்கள் இல்லாத சமயத்திலே இப்படிப்பட்ட சட்டம் வந்து விட்டதே என்பதுதான் என்னுடைய வருத்தம். கனம் சட்ட அமைச்சரோடு நீண்ட நேரம் இந்தக் கமிட்டியில் விவாதித்தோம். நிலத்திற்கு உரியவர்கள், அனுபவிப்பவர்கள் என்பதற்கு 'குவெஸ்டியன் ஆஃப் ஃபாக்ட்' செட்டில்மென்ட் டிப்பார்ட்மென்டில் நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்கும்போது நிலச்சுவான்தார்களுக்கு ஆதாரம் இருக்கிறது, ரெக்கார்டு இருக்கிறது. நிலத்தை உழுபவர் களுக்கு ஆதாரம் கிடைப்பது கஷ்டம். இதுதான் கமிட்டியில் பரிசீலிக்கப்பட்டது. நிலத்தை உழுபவன் ரயட்டி லாண்ட் என்று நிரூபிக்க வாய்ப்பு இல்லை; அதற்கு மாறாக உரிமைக்கான ரெக்கார்டு வைத்திருப்பவர்கள் நிலச்சுவான்தார்கள். **கோயில் நிலமாக இருந்தாலும், மற்ற யார் நிலமாக இருந்தாலும் அவர்கள் பல**

ரெக்கார்டுகளைக் கிரியேட் செய்து விடுகிறார்கள். அந்தச் சூழ்நிலை எப்படி ஏற்பட்டது என்று கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மையல்ல. அதற்கு மாறாக எங்கோ இருக்கக்கூடிய ராஜா, எங்கோ இருக்கக்கூடிய கிராமத்தை எங்கோ இருக்கக்கூடிய நிலச்சுவான்தாருக்கோ கோயிலுக்கோ கொடுத்து விடுவது. அந்த உரிமையைக் கொண்டுதான் பண்ணை கல்டிவேஷன், ரயட்டி கல்டிவேஷன் என்ற முறை வருகிறது. பண்ணைக் கல்டிவேஷன் என்று சொல்ல அவன் சொந்தத்தில் உழுதால் மட்டும் போதாது. ரெக்கார்டில் பண்ணை என்று எழுதி வைத்திருக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. 1948-ம் ஆண்டு சட்டத்தில் இருந்த புரொவிஷனை மாற்ற வேண்டு மென்று புதிய சட்டத்தில் போராடினோம். உழுகின்ற விவசாயி அதிலே வாரந்தான் கொடுக்கிறான் என்று நிரூபிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்த காரணத்தால் தனிப்பட்டவர்களுக்குச் சொந்த மாகக் கூடிய நிலை 1948-ம் ஆண்டு சட்டத்தில் இருந்தது. அந்தச் சட்டத்திலே 12 ஆண்டுகள் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி னோம். சட்ட அமைச்சர் அவர்கள் அது கூடாது என்று சொன்னார்கள். இறுதியாக அது காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்களிடத்திலே சென்றது. காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் இதிலே டிவிஷன் வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். டிவிஷன் வந்தால் விப் உபயோகிப்பேன் என்று தொழிலமைச்சர் அவர்கள் 'மிரட்டினார்கள்' என்று சொன்னால் அவர்கள் வருத்தப்படக் கூடாது. பின்னர் அது கட்சியின் தலைமைக்குச் சென்று காம்ப்ரமைஸ் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் போதும் என்று கொண்டு வரப்பட்டது.

இதிலே அமைச்சர் அவர்களுடைய வாதம் எல்லாம், டெக்னிகல் ஃப்ளா ஏற்படுகிறது என்பதுதான். பேசும்போதும் சொன்னார்கள். 1959-ம் ஆண்டு இந்து ரிலிஜியஸ் அண்டு சாரிடபிள் என்டோவ மென்ட்ஸ் ஆக்ட் வந்து விட்ட காரணத்தாலேயே தனிப்பட்ட மத ஸ்தாபனங்கள் பர்சனல் கல்டிவேஷன் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று ரெப்ரசன்டேஷன் வந்தது என்பதுதான் அமைச்சரது வாதம். அது உண்மையா அல்லது தவறு என்பது பிரச்சினை. இதை அமைச்சர் அவர்கள் நெஞ்சாரச் சொல்கிறார்களா என்பதிலேதான் மெத்தச் சந்தேகம் ஏற்படுகிறது.

1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் தேதி, இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவார்களோ என்று அஞ்சி இந்தப் பிரச்சினையை அப்போது கிளப்பினேன். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது சட்ட அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள். 'இந்தப் புரொவிஷனைப் போட்டிருக்கிறேன், அது நல்லது என்று ஆராய்ந்ததற்குப் பின்னால் போட்டிருக்கிறேன். நியாயத்தை உணர்ந்து பிறகு போட்டிருக்கிறேன். ஆனால் அது நீதி மன்றத்தில் பரிசீலிக்கப் படுகிறது. நீதி மன்றம் பரிசீலித்து என்ன முடிவு சொல்லுகிறதோ அதை ஏற்றுக் கொள்ள இந்த அரசாங்கம் தயாராக இருக் கிறது' என்று அமைச்சர் அவர்கள் கடந்த மார்ச் மாதத்தில் உறுதி

கொடுத்தார்கள். மீண்டும் என்னுடைய சந்தேகத்தை வற்புறுத்திக் கேட்டேன். அப்போது, 'ஒரு வேளை பர்சனல் கல்டிவேஷன் என்ற முறையிலே அது செல்லாது, கான்ஸ்டிடியூஷனுக்கு அது முரண்பட்டது என்று உயர்நீதி மன்றம் சொல்லி விட்டால், இந்த அரசாங்கம் தன்னுடைய கருத்தை வற்புறுத்துவதற்காக, சீலிங் ஆக்டில் ஒரு ஆர்டிகிள் சேர்த்ததைப் போல் இதிலும் சேர்த்து அல்ட்ரா வைர்ஸ் என்று நீதிமன்றம் சொல்லக் கூடாத சூழ்நிலையை உண்டாக்குவார்களா' என்று கேட்டேன். அப்போது அமைச்சர் அவர்கள், 'கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் நம்பிக்கை இழக்க வேண்டாம்; எனக்கு இன்றைக்கும் நம்பிக்கை இருக்கிறது; உயர்நீதிமன்றம் எதிராகப் போகாது' என்று உறுதியளித்தார்கள். அவர்கள் உறுதி கொடுத்தது போல் உயர்நீதி மன்றம் அந்தச் சட்டம் செல்லும் என்று சொல்லி விட்டது. பர்சனல் கல்டிவேஷன் செல்லும் என்று சொல்லி விட்டது. 'அல்ட்ரா வைர்ஸ்' அல்ல என்று சொல்லிவிட்டது. இந்த நிலைமையில் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது எப்படிப் பொருத்தம் என்பதுதான் புரியவில்லை. அதற்குக் காரணமாக 'டெக்னிகல் ஃப்ளா' என்று சொல்லுவது தவறு என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த டெக்னிகல் ஃப்ளா ரிலிஜியஸ் ஸ்தாபனங்களுக்கு மட்டுந்தான் வருமா என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1948-ம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டம் பிறப்பித்தபோதே ரயட்ஸ் ப்ரோட்டெக்ஷன் ஆக்ட் பிறப்பித்திருக்கிறார்கள். அதன் விளைவு என்ன? தனிப்பட்ட ரயட் உழுது கொண்டிருந்தால் பண்ணை கல்டிவேஷனாக இருந்தால் கூட வெளியேற்ற முடியாது. தனிப்பட்ட நிலச்சுவான்தார்களுக்கும் டெக்னிகல் ஃப்ளா என்பது பொருந்தும். 1955-ம் ஆண்டு கல்டிவேஷன் டெனன்ட்ஸ் புரொட்டெக்ஷன் ஆக்ட் படி தனிப்பட்ட நிலச்சுவான்தார் குத்தகைக்கு விட்டிருக்கும் நிலத்திலிருந்து உழுபவனை வெளியேற்ற முடியாது. 1963-ம் ஆண்டில் கொண்டு வந்த சட்டத்தில் மூன்று ஆண்டு என்று கூறியிருக்கிறோம். 1955-ம் ஆண்டு சட்டம் பொருந்தும் என்றால் அது மத ஸ்தாபனங்களுக்கு மட்டுமல்லாமல் நிலச்சுவான்தார்களுக்கும் பொருந்தும். கடைசிக் கட்டத்தில் இருக்கிறோம். அமைச்சர் அவர்கள் கொடுத்த உரிமையைக் கடைசிக் கட்டத்தில் பறிப்பது நியாயமில்லை என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. கோ. சி. மணி: கனம் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த விவாதத்தில் நண்பர் மாதவன் அவர்கள் குறிப்பிட்டது போல் ஒரிஜனல் சட்டத்தை இயற்றுகிற நேரத்தில் செலக்ட் கமிட்டியின் சேர்மனாக வீற்றிருந்த அமைச்சர் அவர்கள் நாங்கள் சொன்ன அத்தனை கருத்துக்களையும் முற்போக்கு எண்ணத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். ஏதோ ஒரு சில கருத்துக்களைக் கட்சியின் காரணமாக ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும் பெரும்பான்மையான கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்கள். மதுரையில் அவர்கள் ரிப்போர்ட் வாங்குகிற நேரத்தில் இந்தப் பிரச்சினையை ஒரு வழக்கறிஞர் அமைச்சரிடத்தில் நேரடியாகச் சொன்னார். திரு. மாதவன்

அவர்கள் சொன்னது போல் அதே பதிலைத்தான் அந்த வழக்கறிஞருக்கும் சொன்னார். அதற்கு அடுத்த கமிட்டியில் அங்கம் பெற்ற திரு. சுப்பையா முதலியார் அவர்கள் கூட இப்படிப்பட்ட பிரச்சினையில் ரொம்ப முற்போக்கான கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற நிலையில்லாது ஏகோபித்த கருத்துக்களை எடுத்துச் சொன்னோம். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் திருப்பனந்தாள் காங்கிரஸ் கட்சி பொதுக்கூட்டத்தில் பேசும்போது ஏறத்தாழ 200-க்கு மேற்பட்ட மனுக்கள் கொடுக்கப்பட்டன. அப்போதும் அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தக்க வகையிலே பாதுகாப்பு அளிக்கப் பெற்றிருக்கிறது, யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என்று சொன்னார்கள். 'துருவித் துருவிப் பார்த்து உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவும், உங்களுக்கு நன்மை செய்யும் வகையிலும் நான் பாடுபடுகிறேன்; நீங்கள் எல்லாம் நம்பிக்கை கொள்ளுங்கள்' என்று அந்தப் பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாகச் சொன்னார்கள். அவர்களுக்கு நல்லதொரு வாக்குறுதியை அளித்தார்கள். இப்போது இந்த மன்றம் முடிந்து அடுத்தாற்போல் நாம் வெளியே சென்றதற்கு பின்னால் அங்குள்ள விவசாயிகள் தங்கள் மனுக்களைப் பற்றியும் அமைச்சர் அவர்களைக் காணும்போது திரும்பக் கேட்பார்களே, அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எப்படிச் சொன்னாலும், தொழில் அமைச்சர் அவர்களால் தரப்பட்ட வாக்குறுதி, இந்த அமைச்சரவையால் தரப்பட்ட வாக்குறுதி, இந்த மன்றத்தில் பொறுப்புள்ளவர்களால் தரப்பட்ட வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டும், தரப்பட்ட வாக்குறுதியில் இருந்து தவறக் கூடாது என்றுதான் இப்போது நினைவூட்டுகிறேன். இதுபற்றி, பண்ணையே கிடையாது என்று சொல்லிச் சட்டம் வந்ததாக எனக்குத் தெரியாது. மொத்த குத்தகையை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் விருப்பப்பட்டால் ரத்து செய்து கொள்ளலாம் என்பது தவிர பண்ணையே வைத்துக் கொள்ளக் கூடாது, பண்ணை வைத்திருக்கக் கூடிய தேவாலயமே கிடையாது, மடமே கிடையாது என்று குறிப்பிடுவது சாலச் சிறந்ததல்ல. கனம் சுதந்திராக் கட்சி தலைவர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். கோவில், மடத்திற்கு பண்ணை கிடையாது என்று சொன்னார்கள். முப்பது ஸ்டாண்டேர்ட் ஏக்கர் அளவிற்கு அதிகமானதை வேறு சுவாமிகளின் பெயரில் ஒரே கோவிலுக்கு எழுதி வைக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு இப்போதும் பண்ணை நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக இதைக் கொண்டு வருகிறோம் என்று சொல்வது நல்லதல்ல. முன்பு இருந்ததுபோல் மூன்று ஆண்டு கெடுவாவது இருப்பதை அரசாங்கம் தளர்த்தத் தேவையில்லை.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதா பற்றி சில வார்த்தைகள் சொல்வதற்கு விரும்புகிறேன். பயிரிடக் கூடிய சாகுபடியாளர்களுக்கு முன்பு ஏற்பட்டிருந்த பொறுப்புக்களை, பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பொறுப்புக்களை எல்லாம் தள்ளுபடி செய்வதற்கு நல்லவிதமாக வசதி செய்யப்படுகிறது

இந்த மசோதாவினுல், அதேபோன்று பாக்கி இல்லாமல் கொடுத்து வந்தால் 71-வது பசலி, இன்னும் வரக்கூடிய இரண்டு ஆண்டு களுக்கு இடையில் விஸ்தரித்துக் கொண்டு போவது என்ற கருத்தில் வருவது சந்தோஷமே. எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கவலை இப்போது ஏறக்குறைய 1,917 இனும் நிலங்கள் இருப்பதாக எனக்குக் கிடைத்திருக்கிற கணக்கு. அதில் ஏறக்குறைய 560 இனும்களில் ஒன்று மடங்கள் அல்லது கோவிலார் இருப்பார்கள். 560 என்ருல் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் இருந்தாலும் கூட விஸ்தீரண அளவில் தேவாலயங்கள் அல்லது மடங்கள் இவற்றிற்குச் சொந்தமாக இருக்கக்கூடியது பெரும் பகுதி இருக்கும். என்பது என் நம்பிக்கை. அந்த அளவிற்கு ஒரு சிறிய விலக்கு கொடுப்பதன் மூலம் தேவாலயங்களுக்கு உள்ள புனிதமானது அல்லது அங்கு ஏற்பட வேண்டிய க்ரியைகள் எல்லாம் இடைஞ்சல் இல்லாத அளவிற்கு தேவாலயங்கள் அல்லது மடங்களுக்குச் மான இடங்களுக்கு பூர்ண உரிமை இருக்கவேண்டுமென்ற காரணத்தினுல் இந்த மசோதா கொண்டு வரப்பட்டாலும் கூட அதனுல் ஏற்படும் எதிர்விளைவுகள் என்னவென்று பார்க்கும்போது அஞ்சுகிறேன். தேவாலயங்கள் அல்லது மடங்களுக்குச் சொந்தமாக இனும் பூமிகள் அதிகமாக இருப்பது தஞ்சை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களாகும். கல்டிவேட்டிங் டெனன்ட் என்று சொல்லும்போது நன்செய்யில் சாகுபடி செய்கிறவர்கள் மட்டும் தான் அந்தப் பெயர் இட்டு அழைக்கப்படுகிறவர்கள் என்று நான் நினைக்கவில்லை. புன்செய்யில், பனை, தென்னை போன்ற விருட்சங்களை வைத்து உபயோகப்படுத்தி சாகுபடி செய்கிறவர்கள் கூட இந்த டெனன்ட்ஸ் ப்ரோட்டகஷன் ஆக்டின் கீழ் வருகிறவர்களே. அவர்கள் மட்டுமல்லாது அங்கு குடியிருக்கக் கூடிய சாகுபடியாளர்களுக்கும் கூட இந்தச் சட்டம் பொருந்தும் என்றுதான் நான் கருதுகிறேன். அப்படி இருக்க மடங்கள் அல்லது தேவாலயங்கள் இவை பரிபூர்ண உரிமை எடுத்துக் கொள்கிறபோது அங்கு இயல்பாகவே குடியிருக்கக் கூடியவர்களின், சாகுபடியாளர்களின் உரிமை பாதிக்கப்பட வேண்டுமா என்றுதான் இதன் கருத்து. இந்தச் சட்டத்தின் மூலம் தேவாலயங்களுக்குப் பட்டா உரிமை வராத நிலை ஏற்படும்போது, இயல்பாகவே அங்கு சாகுபடி செய்யக் கூடியவர்கள் அல்லது குடியிருக்கக் கூடியவர்களுக்கு இயல்பாகவே பட்டா உரிமை பொருந்தும். அத்தகைய உரிமை இருப்பதினுல் தேவாலயங்களுக்கு இருக்கக் கூடிய நடைமுறைக் காரியங்களுக்கு என்ன பழுது வந்துவிட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். பல காலமாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரக் கூடிய சாகுபடியாளர்களுக்கு, அதை அனுபவித்து வரக் கூடியவர்களுக்கு எந்த விதப் பாதகமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு என்ன பந்தோபஸ்து இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கு உற்பத்தியை விருத்தி செய்வதற்குரிய கடன் வசதி போன்ற எல்லாவித வசதிகளும் விவசாய மக்களுக்கு அரசாங்கம் கொடுப்பதை அவர்கள் பெறுவதற்குத் தடையாக இது அமைந்து விடக் கூடாது என்ற கவலையில் சாகுபடியாளர்களுக்கு என்ன

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [8th November 1966

பந்தோபஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது, அவர்களுக்கு சிரமம் இல்லாமல் எப்படி இதை நிறைவேற்ற முடியும் என்ற பதிலை அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்க வேண்டிய ஒரு அம்சத்தையும் எதிர்க்க வேண்டிய அம்சத்தையும் சேர்த்துக் கொண்டு வந்துவிட்டார்கள். நான் முதல் பகுதியை ஆதரிக்கக் கூடியவன். குடியானவர்களுக்கு நன்மை செய்வதை ஆதரிக்கக் கூடியவன். இரண்டாவது பகுதி, யாருக்கு நன்மை பயக்கும் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய நண்பர் திரு. கணேசன் அவர்கள் 'யாருக்கு நன்மை இருப்பதாக வரவேற்கிறேன்' என்பதைத் தெரிவித்தார்கள். அதன் விளைவுகள் என்ன நிலைமைக்குக் கொண்டு போய் விடும் என்பதை தொழில் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திரு. மாதவன் அவர்கள் இதற்கு எப்படி அவசியமில்லை என்பதை எடுத்துத் தெரிவித்தார்கள். மத சம்பந்தமான ஸ்தாபனங்களை எல்லாம் இதிலிருந்து விலக்கி விட்டு குடியானவர்களுக்குப் பட்டா ஏற்படாத நிலைமை ஏற்படுமானால் என்ன விளைவுகள் ஏற்படும்? சொந்தச் சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக் கொள்வது கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ஆக்டில் ப்ரோட்டெக்ஷன் இருக்கிறது என்று கூறலாம். பட்டாக் கொடுத்து விட்டால் என்ன, குடியானவர்களை எப்படி வெளியேற்றப் போகிறார்கள் என்ற சமாதானத்தை வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் கூறலாம். ஆனால் அது சரியானதாகாது. இந்தச் சட்டங்களைக் கொண்டு வந்ததன் நோக்கம் என்ன? இந்தச் சட்டசபையில் சட்டங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றியதன் நோக்கம், உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து இருக்கிறது. ஆனால் அதற்குப் பதிலாக சட்டங்கள் வருவது, நிலச் சீர்திருத்தச் சட்டம் இவை முன்னுக்குப் போவதற்குப் பதில் பின்னுக்குப் போகிற நிலையில் இயற்றப்பட்ட சட்டங்கள் திருத்தப்படுகின்றன. நிலச் சீர்திருத்தச் சட்டம் சரியானபடி அமல்படுத்தப்படவில்லை. இனாம் சட்டம் வரவேற்கத்தக்கதொரு சட்டம் என்று எல்லோரும் வரவேற்று நிறைவேற்றிய சட்டம். அது குடியானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய சட்டம். அவையெல்லாம் ஒவ்வொன்றாக ரத்து செய்யக்கூடிய முறையில் திருத்தங்கள் கொண்டு வருவது சரியல்ல. இந்தத் திருத்தச் சட்டத்தை ஒத்திப் போடுங்கள், இதை அவசரமாக நிறைவேற்ற வேண்டாம். தேர்தல் முடியட்டும். தேர்தலுக்குப் பிறகு மறு பரிசீலனை செய்து பார்த்து எத்தனை ரிலிஜயஸ் இன்ஸ்டிட்யூஷன்ஸ், அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறபடி, பாதிக்கப்பட்டன என்பதற்குத் தகவல் கொடுக்கட்டும். உண்மையில் பாதகம் இருந்தால் அதைச் சரியானபடி பரிசீலனை செய்து, வேண்டுமானால் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளலாமே தவிர, ஒரேயடியாக விதிவிலக்குக் கொடுக்கும்படி சட்டத்தைத் திருத்துவது வில்லங்கங்களில் கொண்டுபோய் விட்டுவிடும். ஆகவே, இந்த மசோதாவில் இன்று இருக்கும் முதல் அம்சம் பாதிக்கப்பட்டாலும் கூட இந்தத் திருத்த மசோதாவை ஒத்திப் போட்டுவிட்டு மூன்று மாதங்கள்

கழிந்த பிறகு புதிய சட்டசபை கூடி அதில் பரிசீலனை செய்யலாம் என்ற நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டு நாளைக்கு ஒரு நாள்தான் இந்தச் சட்டசபையின் ஆயுள் இருக்கிறது, ஆகவே இந்த கடைசி நேரத்தில் இதை ஒத்திப் போட வேண்டுமென நம் தொழில் அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன் ஆயிரக்கணக்கான குடியானவர்கள் சார்பில் என்று கூறிக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இனம் ஒழிப்பு மசோதா முன்பு கொண்டு வந்த ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை விட முற்போக்கான சட்டம் என்பதை அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்வார்கள். பொதுவாக ஒரு நிலம் தங்களது ப்ரைவேட் லாண்ட் என்று சொல்ல வேண்டுமென்று சொன்னுல் அவர்களுடைய பெயரில் பதிவு இருக்கவேண்டுமென்றெல்லாம் 48-வது ஆண்டு சட்டத்தில் போட்டதோடு கூட சேர்த்து மூன்று ஆண்டுகள் அவர்கள் சொந்தமாக கல்டிவேஷன் செய்திருக்கவேண்டும். அப்போதுதான் இது ப்ரைவேட் லாண்ட் ஆகும், இல்லாவிட்டால் ப்ரைவேட் லாண்ட் ஆகாது, ரயட்டி லாண்ட்டாகக் கருதப்படும், ரயட்டி லாண்டாக இருந்தால் குடியானவர்களுக்குப் பட்டா கொடுப்பது என்ற ரஸாத்தைக் கொண்டு வந்தோம். அதில் இன்றைக்கு ஒரு சிறு மாறுதல் தான் செய்யப்படுகிறது. கோவில்களைப் பொறுத்த அளவில் எவ்வளவு செல்லுபடி ஆகும் என்ற ஒரே பிரச்னை தான் இருக்கிறது. மூன்று ஆண்டுகள் பர்ஸனல் கல்ட்டிவேஷன் என்பது செல்லாது என்று ஹைக்கோர்ட்டுக்குச் சென்ருர்கள். அது செல்லுபடி ஆகும் என்று தீர்ப்புக் கிடைத்தது. அந்த விதி பொதுவாக எல்லோருக்கும் பொருந்தும். இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறது என்று கேட்டால், கோவில்கள், மடங்கள் முதலிய இண்டு ரெலிஜியஸ் என்டௌமென்ட்ஸ் ஆக்ட்டின் கீழ் வரும் ஸ்தாபனங்கள் நேரடியாக பர்ஸனல் கல்ட்டிவேஷன் செய்யக் கூடாது என்று விதி போட்டிருக்கிறோம்.

The executive authorities of religious institutions should not resort to pannai cultivation of lands, that is cultivation by the executive authorities of lands of religious institutions incurring the cultivation expenditure themselves and engaging their own labour without obtaining the previous approval of the Deputy Commissioner of the division where the religious institutions is situated.

11-30 a.m.

என்று நாம் விதிகள் போட்டு விட்டோம். சாதாரணமாக ப்ரைவேட் லாண்ட் வைத்திருக்கின்றவர்கள் தாங்களாக கல்ட்டிவேஷன் செய்யலாம் என்ற உரிமையை, கோவில்கள், மடங்கள் ஆகியவைகளைப் பொறுத்த வரையில் நாம் பறித்து விட்டோம். சர்க்காரைக் கேட்காமல் பர்சனல் கல்ட்டிவேஷன் செய்யக் கூடாது என்று விதிகளைப் போட்டு விட்டோம். தாங்களே கல்ட்டிவேஷன் செய்யக் கூடாது என்று போட்ட பிறகு . . .

[8th November 1966

திரு. மீ. கலியாணசுந்தரம்: பூராவாக மறுத்து விடவில்லை. அனுமதி இல்லாமல் செய்யக் கூடாது என்று இருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டு, அனுமதி நிராகரிக்கப்பட்டு, பண்ணை கல்ட்டிவே ஷன் இல்லாமல் போனவர்கள் எத்தனை பேர்கள் என்ற தகவல் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எவ்வளவு எண்ணிக்கை என்று இல்லாவிட்டாலும், கொள்கை அடிப்படையில் நாங்கள் ஒருவருக்கும் கொடுக்கவில்லை. பண்ணை கல்டிவேஷன் வைக்கக் கூடாது என்ற கொள்கையை ராஜ்யத்தில் பூர்ணமாக அனுஷ்டித்து வந்திருக்கிறோம். ஏதாவது ஒன்றிரண்டு அந்த மாதிரி இருக்கலாம். எண்ணிக்கை தெரியாது. கொள்கை அளவில் பர்மிஷன் கொடுப்ப தில்லை என்று செய்திருக்கிறோம். அதையொட்டித் தான் கல்டிவேஷன் செய்து வந்திருக்கிறார்கள். இந்த விதிகளைப் போட்ட பிறகு, 'நீங்களே பர்ஸனல் கல்ட்டிவேஷன் செய்யவில்லை, அதனால் ப்ரைவேட் லாண்ட் ஆகாது' என்று சொல்லுவதால் இரண்டுக்கும் முரண்பாடு ஏற்படும். இதை மாத்திரம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றால் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. ஹைகோர்ட்டுக்குச் சென்ற பிரச்னை மூன்று ஆண்டுகள் பர்சனல் கல்டிவேஷன் செய்திருக்க வேண்டும் என்று சொல்லுவது செல்லாதது என்பதுதான். இந்த விதிகளையொட்டி பர்சனல் கல்டி வேஷன் செய்ய இயலாமல் போய்விட்டது, அதனால் செய்யவில்லை; அதனால் இந்தப் பிரிவு செல்லாது என்ற பிரச்னை கோர்ட்டுக்குப் போகவில்லை. ஆகையால்தான் இதைப்பற்றி விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். கோவில்கள், மடங்கள் போன்றவைகள் இந்த விதிகளின் காரணமாக நேரடியாக கல்ட்டிவேஷன் செய்யக் கூடாது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, அந்தக் காரணத்திற்காகப் பட்டா மறுப்பது கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. பட்டா வழங்குவது ஒன்று, பாசனல் கல்டிவேஷனுக்கு ரைட் கொடுப்பது மற்றொன்று. கல்டிவேஷன் செய்து கொண்டிருந்தால், கல்டிவேட்டிங் டெனன்ட் ப்ரொடெக்ஷன் ஆக்ட் பிரகாரம் அவர்களை வெளியேற்ற முடியாது. கனம் அங்கத்தினர் கோ. சி. மணி அவர்கள் சொன்னார்கள். தஞ்சை கூட்டத்தில் வாக்குறுதி கொடுத்தேன் என்று, அந்த வாக்குறுதி என்ன என்றால் யார், கோவில் நிலங்களாக இருந்தாலும், தர்ம கர்த்தா நிலங்களாக இருந்தாலும், தனிப்பட்ட நிலங்களாக இருந் தாலும், இன்றைக்கு உழுது விவசாயம் செய்து கொண்டிருந்தாலும் அப்படி விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களை மாற்றுவதற்குச் சர்க்கார் அனுமதிக்காது. அதற்கெனப் பிறப்பித்திருக்கும் அந்தச் சட்டங்களைக் கட்டாயமாக அமல் நடத்தும் என்று தான் சொன்னேன்.

யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை வரும்போது, கோவிலுக்கு அல்லது மடத்திற்குச் சொந்தமானது என்று மற்ற விதிகளின்படி அதிகாரம், பொறுப்பு எல்லாம் இருக்குமானால், இந்த ஒரு காரணத் திற்காக அது செல்லுபடியாகாது என்று சொல்லக் கூடாது என்று

8th November 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஒரு காரணத்திற்காக உரிமை இல்லை என்று சொல்ல முடியாது என்றுதான் இந்தத் திருத்தத்தைச் செய்திருக்கிறோம்.

எல்லாவற்றுக்கும் காம்பென்சேஸஷன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். அதுவும் ஒரு பிரச்னை என்பதைக் கவனிக்க வேண்டும்.

திரு. சா. கணேசன் : ஒன்றை மறந்துவிடப்படாது. தானியமாக இப்போது கொடுக்கும்போது அதை வைத்துக் கொண்டு நிர்வாகம் செய்ய முடியும். அதை காஷாக கன்வெர்ட் செய்துவிட்டால், இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் என்று முடிவு செய்து விட்டால், ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு கோடி ரூபாய்க்கு வாங்கும் அரிசியை 10 கோடி ரூபாய்க்கு வாங்கும் நிலைமைவரலாம். ஆகவே, ரியல் எஸ்டேட்டாக இருப்பது லாபமே தவிர, பொது ஸ்தாபனங்களுக்கு தொகையாக நிர்ணயிப்பது பொருத்தமாக இருக்காது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கனம் உறுப்பினர் கணேசன் அவர்களுடைய வாதம். என்னுடைய வாதம் அல்ல. நான் சொல்லுவது நாமே தடை விதித்து, அந்தத் தடை காரணமாக ப்ரைவேட் லாண்ட் அல்ல என்று சொல்லக் கூடாது என்று அந்த ஒரு விதியைத் தான் மாற்றி இருக்கிறோம். இதே நிலங்களில் ரயத்தி லாண்டாக இருக்குமானால் செல்லுபடியாகாது. அல்லது வேறு ஷரத்துக்கள் 9 (1), (2)-ல் இருக்கிறபடி அவர்கள் ப்ரைவேட் லாண்ட் என்று நிரூபிக்க முடியாவிட்டாலும் செல்லுபடி ஆகாது. விதிகள் (1), (2) படி நிரூபிக்கப்பட்டு, பதிவும் செய்யப்பட்டு எல்லாவித உரிமையும் இருக்கிறது என்றால், மூன்று ஆண்டுகள் பர்சனல் கல்டிவேஷன் செய்யவில்லை என்று மறுக்கக் கூடாது என்ற சிறு திருத்தம்தான் செய்திருக்கிறோம்.

நிலத்தை உழுகின்றவர்களுக்கு எடுத்துக் கொடுத்து விட வேண்டும் என்று சொல்லுவது தவறு இல்லை. அது அவர் கருத்து. இன்றைக்கு இருக்கிற நிலைமையில் எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்திருக்கிறோம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வாசிக்கும்போது 1959-ம் ஆண்டுச் சட்டத்தில் தடை செய்து விட்டோம், ஆகையால் பாதிக்கும் என்று சொன்னார்கள். ஏற்கனவே போட்டிருக்கிற சட்டத்தில் 9-வது பிரிவில் இரண்டாவது பகுதியில் தெளிவாகப் போட்டிருக்கிறோம். 1960-ம் ஆண்டிலிருந்து 12 ஆண்டுகளுக்கு முன் ஏதாவது மூன்று வருஷம் என்று இருக்கிறது. அந்த முறையில் முன்பு மூன்று ஆண்டுகள் பர்சனல் கல்ட்டிவேஷன் செய்திருந்தால் இந்த ப்ரொவிஷனில் வர மாட்டார்கள். 1959-க்குப் பின்னால் மூன்று ஆண்டுகள் என்று அந்தச் சட்டத்தில் போடாததால் அந்தப் பிரச்னை எழாது.

"A continuous period of three years within a period of twelve years immediately before the first day of April 1960".

[திரு. செ. மாதவன்] [8th November 1966

1960-ம் ஆண்டுக்கு முன்னால், 1948-ம் ஆண்டிலிருந்து 1960-ம் ஆண்டு வரையில் 12 ஆண்டுகளில மூன்று ஆண்டுகள் பண்ணை கல்டிவேஷன் இருந்தது என்று நிரூபித்தால் அவாகள் இதிலே வர மாட்டார்கள். அமைச்சர் சொல்லுகிற புது எக்ஸெம்ப்ஷன் தேவை இல்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1959-ம் ஆண்டுக்கு முன் அவர்கள் கலட்டிவேஷன் செய்திருப்பார்களானால் அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்க முடியாது. கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட், 1955-ன் கீழ் வந்துவிடும். இன்று சொல்லுவதெல்லாம் என்ன என்றால், மூன்று ஆண்டுகள் கல்ட்டிவேஷன் செய்யவில்லை என்ற காரணத்திற்காக உங்களுக்கு ரைட் இல்லை என்று சொல்லக் கூடாது என்று சொல்கிறோமே தவிர, இதற்கு முன் ரயத்தியாக கன்வர்ட்டாகி இருந்தாலும், வேறு நிலைமை இருந்தாலும் இந்த ஷரத்து பாதிக்காது. இதைக் கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் எற்றுக் கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். கோவில்கள், மடங்கள் ஆகியவைகளைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தில் நாம் போட்ட விதிகளினால் பர்சனல் கல்ட்டி வேஷன் செய்ய வில்லை என்றால், அதனால் கிடையாது என்று சொல்லுவது சரியல்ல என்று தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1966, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill."

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

For clause 2, substitute the following clause, namely :—

"2. *Amendment of section* 3, *Madras Act* 26 *of* 1963.—In clause (*a*) of section 3 of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) (hereinafter referred to as the principal Act), for the words "in so far as it relates to matters other than reduction of rents and the collection of arrears of rent,", the brackets and words "(except in so far as it relates to reduction of rents and the collection of arrears of rent in existing inam estates in respect of which the rate of rent has been determined before the notified date under that Act)," shall be substituted.

This is only a rearrangement of wording.

The amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

Clauses 3 to 6 were put and carried.

Clause 7.

MR. SPEAKER: The question is—

"That clause 7 do stand part of the Bill —

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"In sub-clause (ii), in new sub-section (2-A), in clause (i), for the words 'pays to the landholder within two years of that date', substitute the expression 'pays to the landholder within two years of the notified date or the date of the publication of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari Amendment Act, 1966, in the *Fort St. George Gazette*, whichever is later'."

By this amendment we are giving two years more for the payment of rent for wiping out the arrears.

SRI S. MADHAVAN: Sir, I move—

"For item (ii) of clause 7, substitute the following:

"(ii) after sub-section (2), the following sub-section shall be inserted, namely:—

"(2-A) (i) Notwithstanding anything contained in this Act, in the case of an existing inam estate if the ryot has paid before the notified date or pays within three years of that date the rent due for the fasli years 1371 and 1372 and any interest payable thereon together with any costs which may have been decreed, then all arrears of rent due from such ryot to the landholder in respect of all prior fasli years including interest and costs, if any, shall be deemed to have been completely discharged."

SRI T. P. ALAGAMUTHU: Sir, I second the amendment.

MR. SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தில் அமைச்சர் அவர்கள் கசப்பையும், இனிப்பையும் சேர்த்துத் தந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப்பற்றி ஒரிஜனல் பில் விவாதத்தில் இருக்கும்பொழுதே நான் கூறினேன். அப்பொழுது அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்பொழுது ஏற்றுக்கொண்டு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், வரவேற்கிறேன்.

1936-ம் வருஷத்திய இனாம்களுக்குத்தான், எக்ஸிஸ்டிங் இனாம்களுக்குத் தான் இந்தப் ப்ரொவிஷன் போடப்பட்டது. பின்னாலே வரக் கூடிய பிரிவுகளிலே நியூ இனாம்களுக்குப் போடப்பட்டது. எக்ஸிஸ்டிங் இனாம்களுக்குப் போடும்பொழுது இப்பொழுது அதை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

Lands for which rent has already been reduced under the Rent Reduction Act,

Lands for which rent has not been reduced under the Rent Reduction Act—

என்று இம்மாதிரி பிரித்திருக்கிறார்கள். முதல் பகுதியில், 2-வ-யில் ரிஜிஸ்டர் பண்ணாத பகுதிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்குக் கட்டினால்போதும் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே இருந்த பகுதி 1936-ம் வருடத்திய இனாம்கள் எல்லாவற்றையும் சேர்த்து இருந்தது. எல்லாவற்றிற்குமே இந்த இரண்டு ஆண்டுகளுக்குக் கட்டினால் போதும். அப்பொழுதே நான் வேண்டிக்கொண்டேன். இப்பொழுது ஒரு பகுதிக்கு மட்டும் சர்க்கார் அந்தக் கருத்தை ஆதரித்துத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் இதைக் கொண்டுவர வேண்டும். எப்படி இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி நாம் முன்னாலேயே பரிசீலித்தோம். 1948-வது ஆண்டு இனாம்களை 1947-வது ஆண்டு ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட் படி சர்க்கார் இப்படிப்பட்ட இனாம்களை நோடிபிகேஷன் செய்து விட்டார்கள். ஹைகோர்ட்டில் பிறகு ஸ்டே வாங்கிவிட்டார்கள். ஸ்டே வந்துவிட்டதினால் குத்தகையை கலெக்ட் செய்யவேண்டாம் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. சர்க்காரும் வசூலிக்கவில்லை, நிலச் சொந்தக்காரரும் வசூலிக்கவில்லை, தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு. ஒரு குறிப்பிட்ட கிராமத்தைக் கூட நான் சொல்ல முடியும். அதாவது இராமனாதபுரத்தில் திருப்பத்தூரில் தென்கரை என்ற கிராமம். சுப்ரீம் கோர்ட்டு டெஸிஷனுக்குப் பிறகு இந்த ஆண்டில்தான் சர்க்கார் புதியதாக நோட்டிபிகேஷன் போட்டிருக்கிறது. அப்படி ஒரு நிலைமை 1947-ஆம் ஆண்டு ஆர். ஆர். அக்டின் கீழ் ஏற்பட்டது. திடீரென்று ஒரு தேதியிலிருந்து 12 ஆண்டுகளுக்கு வசூலிக்கக் கூடிய ஒரு உரிமை சர்க்கார் மூலம் நிலச்சுவான்தார்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அப்பொழுதுதான் இந்தக் கஷ்டம் வருகிறது என்பதைப் பரிசீலனை செய்து, இதை இந்த இரண்டு ஆண்டுகளுக்குக் கொடுத்துவிட்டால் போதும், புதிய இனாம்கள் 3 ஆண்டுகளுக்குக் கொடுத்துவிட்டால் போதும் என்ற பிரிவைப் புகுத்தினோம். 1952-ல் 42-ம் திருத்தச் சட்டத்தின்படி 12 ஆண்டுகளுக்கு, சென்டிரல் லிமிடேஷன் ஆக்ட் பார் செய்தால் கூட, வசூலிக்கக்கூடிய உரிமையை இந்த மன்றம் கொடுத்திருக்கிறது நிலச் சுவான்தார்களுக்கு. ஒரு புது நிலைமை 1947-ம் ஆண்டு ஆர். ஆர். ஆக்ட்-ன் கீழ் வரலாம், வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. என் தொகுதியில் இருக்கக்கூடிய ஒரு கஷ்டத்தினால், கொடுக்கக் கூடிய உரிமையை ஆர். ஆர். ஆக்டின் கீழ் நோடிபிகேஷன் செய்து ரெண்ட் ரிடக்ஷன் செய்திருந்தாலும், இந்த இனாம்களுக்கும், இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும் ஒரு சாதகத்தை சர்க்கார் மனம் உவந்து செய்யவேண்டும் என்று தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஆதரித்து அந்த விவசாயிகளுக்கு நன்மை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் தலைவர் அவர்களே, ஒரு எஸ்டேட், இனாம் எஸ்டேட்டில் ரெண்ட் ரிடக்ஷன் ஆகிவிட்டா

8th November 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

என்று சொன்னால், அந்தக் குறைந்த நிலவரிக்கு ஒப்பான தொகை யைத்தான் அவர்கள் கட்டவேண்டும். அந்தத் தொகையை ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டின் கீழ் சர்க்கார் வசூலித்திருப்பார்கள், அதை லாண்ட் ஹோல்டருக்குக் கொடுத்திருப்பார்கள். ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட் வந்த இடங்களில் அதுதான் முறை. நான் இப்பொழுது சொல்வது என்னவென்றால், ரெண்ட் ரிடக்ஷன் வராத இடங்களுக்கு இன்றைக்குப் புதியதாக ரெண்ட் ரிடக்ஷன் செய்யத் தேவையில்லை. ஒரிஜனல் ரெண்ட் அதிகமாக இருக்கும். ஒரிஜனல் ரெண்ட் இரண்டு வருஷங்களுக்கு, மூன்று வருஷங்களுக்கு கொடுத்துவிட்டால் பழையதெல்லாம் காலாவதியாகிவிடும், 'வைப் அவுட்' ஆகிவிடும். நான்-ரெண்ட் ரிடக்ஷன் இடங்களுக்குக் கூட அதாவது அதிகமாக இருந்த குத்தகையைக் குறைத்து, லாண்ட் ரெவின்யூ அளவுக்குக் கொண்டுவந்த பிறகு கூட, அதிலும் இரண்டு வருஷங்களுக்குக் கொடுத்தால், பழையதெல்லாம் வைப் அவுட் ஆகிவிடும் என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் என்று தோன்றவில்லை. ஆகவே தான் இதை இரண்டாகப் பிரித்துத் திருத்தம் செய்திருக்கிறோம். அதாவது,

Estates in respect of which rent reduction has been done, and estates in respect of which rent reduction has not been done.

என்று செய்திருக்கிறோம்.

திரு. செ. மாதவன் : 1948-ம் ஆண்டு சட்டத்தில், 1936-ம் ஆண்டில் இனம் இல்லாத இனங்கள் பூராவும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அப்படி எடுத்துக்கொண்ட இனங்களைப் பொறுத்தவரையிலும், 1936-ம் ஆண்டு இனங்களையும் சேர்த்து ஆர். ஆர். ஆக்டின் கீழ் நோடிபிகேஷன் செய்யப்படுகிறது. அப்படிச் செய்திருந்த போதிலும் 1948-ம் ஆண்டு இனங்களுக்கு 1356-57 பசலிக்குக் கட்டினால் போதும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதற்கும் அது போதும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதே கன்ஸெஷன் அதற்கும் கொடுப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The amendment of Sri S. Madhavan was put and lost.

The Government amendment was put and carried.

Clause 7, as amended, was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1966, as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

(4) THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1966.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill [a], 1966 (L.A. Bill No. 17 of 1966), be taken into consideration."

The Bill seeks to extend the life of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, which is due to expire on the 25th January 1967, for a further period of one year, that is upto and inclusive of the 25th January 1968.

இப்பொழுது இருக்கிற மின்சாரக் கட்டணம் போன்றவைகளெல்லாம் இந்தச் சட்டத்தின் கீழ், அதனுடைய விலை முதலியவைகளெல்லாம் நிர்ணயம் செய்து, கட்டுப்பாடு செய்யப்படுகிறது. இப்பொழுது தேர்தல் வருகிற காரணத்தினால் ஒரு ஆண்டுக்கு இந்த சட்டத்தை நீடிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1966 (L.A. Bill No. 17 of 1966), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1966 (L.A. Bill No. 17 of 1966), be passed"

The motion was put and carried and the Bill was passed.

VII—ANNOUNCEMENT.

THE MADRAS REQUISITIONING AND ACQUISITION OF IMMOVABLE PROPERTY (AMENDMENT) BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for consideration in the Madras Legislative Assembly of the Madras Requisitioning and Acquisition of Immovable Property (Amendment) Bill, 1966.

VI—GOVERNMENT BILLS—*cont*.

(5) THE MADRAS REQUISITIONING AND ACQUISITION OF IMMOVABLE PROPERTY (AMENDMENT) BILL, 1966.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Requisitioning and Acquisition of Immovable Property (Amendment) Bill, 1966, and move—

'That the Bill [b] be taken ito consideration.'

Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd November 1966

8th November 1966] [Sri P. Kakkan]

Sir, the Madras Requisitioning and Acquisition of Immovable Property Act was first enacted in the year 1966. The Act empowers the Government to requisition for the purpose of the State, in connection with the implementation of comprehensive programmes of development, under the Agricultural Sector in the Five-Year Plans, any immovable property and also to acquire later on such requisitioned property, if necessary. By virtue of sub-section (2) of Section (1) of the Act, the Act shall remain in force, for a period of ten years from the date of its commencement. The Act came into force on the 6th March 1957 and hence its life expires on the 5th March 1967.

The Act has been invoked for purposes of the State Agricultural Department, such as the establishment of State Seed Farms for production and distribution of good quality foundation seeds of paddy, millets, etc., in order to increase food production in the State, establishment of Agricultural Research Stations to evolve nucleus seeds and also for the establishment of Model Orchards under the Fruit Development Programme. Resort to the provisions of the Act had been made sparingly and only in those cases, where it was considered absolutely necessary to do so. In fact, many State Seed Farms and Agricultural Research Stations have been established on Government lands, wherever feasible. The provisions of the Act have also been invoked in a few cases for the requisitioning of private buildings for public purposes.

It is imperative to increase production of foodgrains in the State to meet the needs of ever growing population. For this purpose, not only more and more lands have to be brought under plough but measures to intensify cultivation on the lands which have already been brought under plough have also to be taken. High yielding varieties have to be evolved in Research Stations to suit the particular tracts and regions in the State. Foundation seeds have to be produced in the State Seed Farms in large quantities so as to make them available to the ryots in adequate quantities to enable them to produce more of foodgrains to meet the needs of the growing population and also to attain self-sufficiency in food in the State. For this purpose, more and more Staet Seed Farms and Agricultural Stations have to be established in the coming years on Government lands and also on private lands whenever necessary. It is therefore necessary to continue the Act for a further period of ten years from the 6th March, 1967.

I therefore request the House, Sir, to accept the motion.

Mr. SPEAKER : The question is—

'That the Madras Requisitioning and Acquisition of Immovable Property (Amendment) Bill, 1966, be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

'That the Madras Requisitioning and Aquisition of Immovable Property (Amendment) Bill, 1966, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(6) THE MADRAS APPROPRIATION (NO. 4) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1966 be taken into consideration.'

The motion was put ant carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1966 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(7) THE MADRAS APPROPRIATION (NO. 5) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

That the Madras Appropriation (No. 5) Bill [a] 1966 be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

That the Madras Appropriation (No. 5) Bill 1966 be passed.

The motion was put and carried and the Bill was passed.

VIII.—NON-OFFICIAL BUSINESS.

A. Bills.

(1) THE CHRISTIAN SUCCESSION (REPEAL) BILL, 1966.

MR. SPEAKER : The hon. Member, Sri M. William, is not in his seat. So, let us pass on to the next item.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 7th November 1966

[b] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 1st November 1966.

(4) THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1966.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill [a], 1966 (L.A. Bill No. 17 of 1966), be taken into consideration."

The Bill seeks to extend the life of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, which is due to expire on the 25th January 1967, for a further period of one year, that is upto and inclusive of the 25th January 1968.

இப்பொழுது இருக்கிற மின்சாரக் கட்டணம் போன்றவைகளெல்லாம் இந்தச் சட்டத்தின் கீழ், அதனுடைய விலை முதலியவைகளெல்லாம் நிர்ணயம் செய்து, கட்டுப்பாடு செய்யப்படுகிறது. இப்பொழுது தேர்தல் வருகிற காரணத்தினால் ஒரு ஆண்டுக்கு இந்த சட்டத்தை நீடிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1966 (L.A. Bill No. 17 of 1966), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1966 (L.A. Bill No. 17 of 1966), be passed"

The motion was put and carried and the Bill was passed.

VII—ANNOUNCEMENT

THE MADRAS REQUISITIONING AND ACQUISITION OF IMMOVABLE PROPERTY (AMENDMENT) BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for consideration in the Madras Legislative Assembly of the Madras Requisitioning and Acquisition of Immovable Property (Amendment) Bill, 1966.

VI—GOVERNMENT BILLS—*cont.*

(5) THE MADRAS REQUISITIONING AND ACQUISITION OF IMMOVABLE PROPERTY (AMENDMENT) BILL, 1966.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Requisitioning and Acquisition of Immovable Property (Amendment) Bill, 1966, and move—

'That the Bill [b] be taken ito consideration.'

Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd November 1966

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

'That the Madras Requisitioning and Aquisition of Immovable Property (Amendment) Bill, 1966, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(6) THE MADRAS APPROPRIATION (NO. 4) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1966 be taken into consideration.'

The motion was put ant carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1966 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(7) THE MADRAS APPROPRIATION (NO. 5) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

That the Madras Appropriation (No. 5) Bill[a] 1966 be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

That the Madras Appropriation (No. 5) Bill 1966 be passed.

The motion was put and carried and the Bill was passed.

VIII.—NON-OFFICIAL BUSINESS.

A. Bills.

(1) THE CHRISTIAN SUCCESSION (REPEAL) BILL, 1966.

MR. SPEAKER : The hon. Member, Sri M. William, is not in his seat. So, let us pass on to the next item.

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 7th November 1966

b Published in the *Fort St. George Gazettee* Extraordinary, dated 1st November 1966.

(2) The Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1966.

Sri S. MADHAVAN : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1966.

Mr. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.

Sri S. MADHAVAN : Sir, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

B. Resolutions.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் தலைவர் அவர்களே, கடந்த தான்-அபிஷியல் தினத்தன்று புயல் வந்த காரணத்தால், இந்தத் தீர்மானங்கள் ஒத்திப் போடப்பட்டன. அன்றைக்கு கனம் முதல் அமைச்சர், கடைசி நாள் இரண்டு மணிநேரம் வைத்துக்கொண்டு விவாதிக்கலாம் என்கிற உறுதிமொழியைக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு, 8-ம் தேதியன்றே நான்கு மணி நேரம் எடுத்துக் கொண்டு இந்தத் தீர்மானங்களை விவாதிக்கலாம் என்ற ஒரு முடிவு ஏற்பட்டது

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் முடிவு ஏற்படவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : அன்றைக்கு பேசப்பட்டது அது . .

கனம் சபாநாயகர் : அதிருக்கட்டும். இப்பொழுது 1½ மணி நேரம் இருக்கிறது. வேண்டும் என்றால் அதை இரண்டு மணி யாக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது, உணவு நெருக்கடி பற்றிய தீர்மானம் இருக்கிறது. அது மிக முக்கியமானது. அதன் பின், சேலம் உருக்காலை பற்றிய விவாதம் முக்கியமானது. ஆகவே, இன்றையதினமும், நாளைக்கும் தொடர்ந்து அந்த விவாதத்தைச் செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டால்தான் நியாயமாக இருக்கும். இப்பொழுது கூடியிருப்பது சட்டசபையின் கடைசிக் கூட்டம். இன்றைக்கு உணவு நிலைமை பெரிய நெருக்கடியாக இருக்கிறது. மக்களுக்கு உணவுப் பண்டங்கள் கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. சேலம் பிரச்சினையும் முக்கியமானது. அது இன்றைக்கு ஒரு அரசியல் பிரச்சினையாகவே மாறியிருக்கிறது. ஆகவே, சம்பிரதாயத்திற்காக சிறிது நேரம் விவாதிப்பதால் மட்டும் பயன் ஏற்படாது. ஆகவே, நாளைக்கு, அல்லது மாலை யாவது சட்டசபை கூடி, அப்ரோப்ரியேஷன் பில்லுக்கு முன்னதாக இவற்றைப் பற்றி விவாதிக்க அவகாசம் கொடுக்க, சர்க்கார் சார்பில் கனம் முதல் அமைச்சர் வாக்குறுதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[8th November 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, 'நான்-அபிஷியல்' தினந்தன்று, புயல் வந்ததால் அன்று கூட்டம் முன்னதாகவே முடிந்தது. சுமார் 11-30 வரைக்கும் கூட்டம் நடந்தது என்று நினைக்கிறேன். ஆக 'நான்-அஃபிஷியல் பிஸினஸ்' ஸுக்காக ஒதுக்கவேண்டிய நேரத்தில் இரண்டு மணி நேரம்தான்
12-30 p.m. குறைவு. அதை ஈடுகட்ட வேண்டுமென்று தான் வேறொரு நாளிலே 'நான்-அஃபிஷியல் பிஸினஸ்' ஸை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னது. இப்பொழுது 12 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரையிலும் 'நான் அஃபிஷியல் பிஸினஸ்' ஸை வைத்துக்கொண்டு இதோடு முடித்துவிடலாம்.... அதற்குள் ... எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், பேச ஆரம்பித்துவிட்டால் கட்டுப்படுத்த முடியாது. 'நான்-அஃபிஷியல்' தினத்தன்று ஐந்து நிமிஷம், பத்து நிமிஷம் என்று ஒதுக்கி, அதற்குள் பேசிவிட வேண்டும் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு பிரச்னையிலும் எதிர்க்கட்சிக்கு இருக்கிற அக்கறை போல இந்தப் பக்கத்தில் இருப்பவர்களுக்கும் அக்கறை இருக்கும். அவர்களும் பேசுவதற்கு விரும்புவார்கள். அதைக் கட்டுப்படுத்துவது சரியல்ல. நில வரியைப்பற்றி ஒரு தீர்மானம் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு பேசினாலும் பேசலாம். விலைவாசி தான் முக்கியம் என்று கருதினால், அதை எடுத்துப் பேசலாம். ஒரு விஷயத்தைக் குறித்து சீக்கிரமாகவே விவாதம் முடிந்து போனால், அடுத்த விஷயத்தைப் பற்றிப் பேசலாம். சேலம் உருக்காலை தான் எல்லாவற்றையும் விட முக்கியம் என்றால், அதை எடுத்துக்கொள்ளலாம். ஒரு விஷயத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட பிற்பாடு, கால வரம்பு ஏற்படுத்துவது அவ்வளவு சரியல்ல. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையும் கலந்து எப்படி வேண்டுமானாலும் முடிவு செய்யலாம். நில வரி விஷயம் முக்கியம் என்று தான் நினைக்கிறேன். இதுவரைக்கும் அதிகமாகப் பேசப்படாத விஷயம் அது. விலைவாசியைப்பற்றி அடிக்கடி பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து அவர்கள், ப்ரொக்யூர்மென்ட் சம்பந்தமாக ஒரு பிரேரணைக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். ஒரு மணி நேரம் அதைக் குறித்து விவாதம் நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையும் கலந்து, முடிவு செய்திருக்கிறோம். அதிலே விலைவாசியைப்பற்றியும் சேர்த்துப் பேசிவிடலாம். விலைவாசி தான் முக்கியம். அதைப்பற்றித் தனியாகப் பேசவேண்டுமென்றால், நில வரித் தீர்மானத்தைப் பிரேரேபிக்க முடியாமல் போய்விடும். 12 மணியிலிருந்து இரண்டு மணி வரையில் 'நான்-அபிஷியல் பிஸினஸ்' ஸுக்காக வைத்துக்கொண்டு முடித்துவிடலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (திரு. கே. ஏ. மதியழகன் : பிற்பகலில்) பிற்பகலில் கவுன்ஸில் கூட்டம் இருக்கிறது. ஆகவே, பிற்பகலில் நாம் கூடுவதற்கு இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் சபாநாயகர் அவர்களே, 12 மணியிலிருந்து 2 மணி வரையிலும் இந்தத் தீர்மானங்களை எடுத்துக்கொண்டு முடித்துவிடலாம். நேரம் குறைவாக இருக்கிற

8th November 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

காரணத்தால், ஒரு மணி நேரம் நில வரி பற்றிய தீர்மானத்திற்கும், ஒரு மணி நேரம் உணவுப் பிரச்சினையைப்பற்றிய தீர்மானத்திற்கும் ஒதுக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்கு அதற்கு ஆட்சேபணை இல்லை. நிலவரி பற்றிய தீர்மானத்தைப் பொறுத்த வரையில், இந்தப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அரை மணி நேரமும் அந்தப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அரை மணி நேரமும் ஒதுக்கலாம். ஏனென்றால், நான் பேசுவதற்குக் கால் மணி நேரம் வேண்டும். பாக்கி கால் மணியில் எங்கள் தரப்பு உறுப்பினர்களும் பேச வேண்டியிருக்கும்.

கனம் சபாநாயகர்: இந்த இரண்டு தீர்மானங்களையும் எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு மணி நேரம் விதம் ஒதுக்கலாம். கனம் முதல் அமைச்சர் அவர்கள் 15 நிமிடங்கள் எடுத்துக்கொள்ள லாம். இந்தப் பக்கத்தில் உள்ளவர்களுக்கு அரை மணி நேரம். அந்தப் பக்கத்தில் உள்ளவர்களுக்கு அரை மணி நேரம் விதம் நேரத்தைப் பிரித்துக்கொள்ளலாம்.

(1) ABOLITION OF LAND TAX AND OTHER TAXES BASED ON IT.

* **புலவர் கா. கோவிந்தன்:** கனம் சபாநாயகர் அவர்களே, "நாட்டின் முதுகெலும்பு எனப் போற்றப்படும் விவசாயிகள், உழு தொழிலை ஊக்கத்தோடு மேற்கொள்ளவும் அவர்களின் வரிச் சுமை குறைந்து வருவாய் பெருகவும் வழி செய்யும் வகையில், நில வரியையும் அந் நிலவரியை அடிப்படையாகக் கொண்டு வசூலிக்கப் படும் பல்வேறு உபரி வரிகளையும் கைவிடுமாறு இம் மாநில அரசுக்கு இம் மன்றம் பரிந்துரை செய்கிறது" என்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் இதை வழிமொழிகிறேன்.

MR. SPEAKER: The Resolution is before the House for discussion.

புலவர் கா. கோவிந்தன்: நிலவரியை நீக்கவேண்டும் என்ற இந்தக் கோரிக்கை புதிய கோரிக்கை அன்று. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படி ஆறிலொரு கடமை செலுத்துவ தென்பது பழைய காலந்தொட்டே இருந்து வருகிற முறையாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களோ, அதைப் போலவே, இந்த வரி நீக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோளும் நீண்ட கால மாகவே தமிழ்நாட்டில் இருந்து வருகிற ஒரு வேண்டுகோளாகும். அது மட்டிலும் அல்ல. இந்த நிலவரியை நீக்கவேண்டும் என்று இப்பொழுது இந்த மன்றத்தில் எதிர்க் கட்சித் தரப்பிலிருந்து இன்றையதினம் தீர்மானம் கொண்டுவந்து பேசுகிறோம் என்று சொன்னாலும், ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள் ஒரு காலத்திலே இதே தீர்மானத்தை மிக அழுத்தமாகப் பேசி வந்தார்கள். "வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, உனக்கு ஏன் வரி" என்று கேட்டவர்கள்தான் ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள். கேட்ட வர்கள் நிலை மாறி, கேட்கப்பட்டவர்களாக ஆகிவிட்ட காரணத் தினாலேயே கேட்ட பிரச்சினையின் முக்கியத்துவம் குறைந்து விடாது என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[புலவர் கா. கோவிந்தன்] [8th November 1966

இன்னொரு நியாயத்தையும் இங்கே பார்க்கவேண்டும். ஒரு பாலம் கட்டுகிறோம். பாலத்திற்குச் சுங்கம் வசூலிக்கிறார்கள். அது எது வரையில்? பாலத்தைக் கட்டி, அதனுடைய செலவை ஈடு கட்டும் வரையில்தான். அதைப் போலவே, ஒரு அணை கட்டு கிறோம். அணை கட்டிய பிறகு, அந்த அணையிலிருந்து வருகிற தண்ணீருக்கான வரியை உயர்த்துகிறோம். அது எது வரையில்? அந்த அணை கட்டுவதற்கான செலவை ஈடுகட்டுகிற வரையில்தான் அது போலவே, காடுகளை அழித்துக் கழனிகளாக்கிய நேரத்தில், அதற்காக வாங்கப்பட்ட வரி எத்தனையோ நூற்றுண்டுகள் ஆகியும், தொடர்ந்து வசூலிக்கப்பட்டு வருவது நியாயம் இல்லை.

முதலமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு நிலவரி நீக்கம் பற்றி ஓர் அறிக்கை தந்தார்கள். அந்த அறிக்கை இந்தத் தீர்மானம் கொண்டுவரவேண்டிய சூழ்நிலையை மாற்றிவிட வில்லை என்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், பின்னல் விளக்குகிறேன். இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் வரி நீக்கம் செய்வதாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் அடிப்படையில் இந்த வரி வாங்குவது தவறு என்பதை உணர்ந்து கொண்டுவந்தார்களா என்றால் நிச்சயமாக இல்லை. இந்த மன்றத்தில் ஐந்தாண்டு கால அளவில் எதிர்த் தரப்பி லிருந்து வரி நீக்கம் வேண்டும், வேண்டும் என்று சொன்ன நேரத்தி லெல்லாம், முதலமைச்சர் அவர்கள் அடுக்கடுக்காக எடுத்துவைத்த வாதங்களை இந்த மன்றம் மறந்திருக்காது என்று நான் கருது கிறேன். நேரம் இல்லாத காரணத்தால், அவர்களுடைய வாதங்கள் அத்தனையும் எடுத்துப் படிக்க முடியாமல் குறிப்புகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

1962-63-க்கான திருத்திய நிதி நிலை அறிக்கை மீதான விவாதத் திற்கு 7-7-1962-இல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், வரி தேவை தான், வரி இருக்கத்தான் வேண்டும் என்பதற்கான வாதங் களைச் சொல்லும் நேரத்தில், இந்த வரி ஒன்றும் அதிகமாக இல்லை. 1938-39-ல் மொத்த வருமானத்தில் 43.75 சதவிகிதமாகத்தான் இருந்தது. 1952-53-இல் 15.9 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது, 7-7-1962-ல் 6.25 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது, ஆகவே, நிலவரி குறைந்துகொண்டே வருகிற நிலையில், இது ஒன்றும் அநியாயமான வரி அல்ல என்ற கருத்தைச் சொன்னார்கள்.

1-2-1963-இல், புள்ளிவிவரங்களைக் கொடுத்துவிட்டு, பாசன வரி, செஸ் வரி எல்லாம் சேர்த்துப் பார்த்தாலும் கூட, நிலவரி ஒன்றும் உயர்ந்துவிடவில்லை, ஆகவே, நிலவரி நியாயமான வரிதான் என்ற வாதத்தைச் சொன்னார்கள்.

அடுத்து, அவர்கள் காட்டிய காரணங்கள், தஞ்சை ஜில்லாவில் இப்பொழுது நெல் விலையைக் கூட்டிக் கொடுத்துக்கொண்டிருக் கிறோம், நெல் விலையைக் கூட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில், ஒரு ஏக்கரில் விளையக்கூடிய நெல்லுக்கு நாம் முப்பது ரூபாய் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம், ஐந்து ஏக்கர் நிலம் வைத் துக்கொண்டிருப்பவர்களிடம் நாம் இப்பொழுது கேட்பது வருஷத் திற்கு முப்பது ரூபாய், அவர்களிடத்தில் வாங்கும் வரி ஐந்து ரூபாய்தான், ஆகவே, இது ஒன்றும் அநியாயமான வரியல்ல

8th November 1966] [புலவர் கா. கோவிந்தன்]

என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல. விவசாயக் குடும்பங்களிலே ஐந்து ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு மூன்று குழந்தைகள் உயர்நிலைப்பள்ளியில் படிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம், சாதாரணமாக இரண்டு ஆண் பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளை இருப்பார்கள், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு பிள்ளை பள்ளிக்கூடத்தில் படிப்பதென்றால் 120 ரூபாய் சம்பளம் கட்ட வேண்டும், அந்த 120 ரூபாய் கொடுத்துவிட்டால், அவர்களிடமிருந்து முப்பது ரூபாய்தான் வரி கேட்கிறோம் என்றும் எடுத்துச் சொன்னார்கள். இந்த நியாயத்தை நாங்கள் அறிவோம்; காரண காரியங்களையும் அறிவோம். இப்பொழுது வாங்கும் நிலவரி குறைந்து வருகிறது, மற்ற வரிகளெல்லாம் உயர்ந்திருக்கின்றன, ஆகவே, வரி விதிப்பு நியாயம்தான் என்று சொன்ன நேரத்தில், நாங்கள் சொன்னது, விவசாயி நிலவரி மாத்திரம் கொடுக்கவில்லை, நிலவரியோடு அவன் எல்லா வரிகளையும் கட்டுகிறான், விவசாயிகள் அல்லாதார் என்ன என்ன வரிகளைக் கொடுக்கிறார்களோ, அத்தனை வரியையும் விவசாயிகளும் கொடுக்கிறார்கள், விற்பனை வரியிலிருந்து மற்ற எல்லா வரிகளையும் அவர்கள் கட்டுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறோம். அப்பொழுது முதலமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். வசதி செய்து தருகிறோம், ஆகவே, வரி கொடுப்பது நியாயம் என்று சொன்னார்கள். ரோடு போட்டிருக்கிறார்கள், பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார்கள் என்றால், அந்த வசதிகள் விவசாயிகளுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும்தான் வசதி இருக்கிறது, விவசாயிகள் மற்ற வரிகளைக் கட்டும் நேரத்தில் நிலவரியையும் அதிகமாகக் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னோம். அப்போதும் முதலமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். அது மட்டுமல்ல. நெல் விலையை அதிகப்படுத்தியிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன நேரத்தில், உழவுக் கூலி உயர்ந்திருக்கிறது. விவசாயத்திற்கான பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது, உரத்தின் விலை உயர்ந்திருக்கிறது. நெல்லை விற்று விவசாயி வாங்க வேண்டிய மற்ற பொருள்களின் விலையும் உயர்ந்திருக்கிறது, என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நெல்லுக்கு விலை உயர்த்திக் கொடுத்திருந்தாலும் அதனால் விவசாயிகள் பயனடையவில்லை. ஆகவே, வரி கேட்பது நியாயம் இல்லை என்று சொன்னோம். அப்போதும் முதலமைச்சர் அவர்கள் மறுத்தார்கள்.

அதுமட்டுமல்ல. உணவு அமைச்சர் அவர்கள் அழகான வார்த்தைகளாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இந்த நிலவரி விஷயத்திலே கோபமே இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நிலவரி கொடுப்பதை ஒரு உரிமையாகவே கருதுவதாகக் குறிப்பிட்டார்கள். டாக்டர் நடராஜன் அவர்கள் குறுக்கிட்டு 'கடமை' என்று சொன்னபோது, 'ஆம், கடமையாகவே நினைக்கிறார்கள்' என்று சொன்னார்கள். 'வரி கொடுக்காதவர்களை மக்கள் மதிக்க மாட்டார்கள்' என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். 'வரி கொடுப்பதை ஒரு அந்தஸ்தாக நினைத்துக் கொண்டிருந்தார்கள்' என்று சொன்னார்கள். இவ்வளவு அருமையான வாதங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நிலவரியை எடுத்து விட வேண்டுமென்று

[புலவர் கா. கோவிந்தன்] [8th November 1966

சொன்ன நேரத்தில் எல்லாம் அதை மறுத்தார்கள். 1962-ல் மறுத்தார்கள், 1963-ல் மறுத்தார்கள், 1964-ல் மறுத்தார்கள், 1965-ல் மறுத்தார்கள். 10-11-1965-ல் நிலவரியை எடுத்துவிட வேண்டுமென்று எதிர்த் தரப்பில் பேசிய நேரத்தில் கூட மறுத்தார்கள். நேற்றுக்கூட மறுத்தார்கள். முன்பு ஆறில் ஒரு கடமை கொடுக்கவில்லையா என்று கேட்டார்கள். அவனுக்கு 20 மூட்டை விளைந்தால் அதிலே 5 மூட்டை வரியாகக் கொடுக்க வேண்டுமென்றிருந்தது. ஆனால் இன்று அவன் இருக்கின்ற வரிகளை எல்லாம் கட்டிவிட்டு மிச்சம் ஆறில் ஒரு பங்கு கூட அவனுக்குத் தேறவில்லை. உழுபவனுக்கு ஆறில் ஒரு பங்கு கூட மிஞ்சவில்லை. இப்படியெல்லாம் மறுத்துவிட்டு நிலவரியை எடுத்துவிட வேண்டுமென்று காரைக்குடியிலே தீர்மானம் போட்டார்கள். இந்த மன மாற்றம் நல்ல மன மாற்றம் என்று நாங்கள் எல்லாம் நினைத்துக் கொண்டிருந்தோம். அது நல்ல மன மாற்றமல்ல என்பது அடுத்து எடுத்த முடிவிலிருந்து தெளிவாகிவிட்டது. ஏதோ வலது கையால் கொடுத்து இடது கையால் பிடுங்கிக் கொள்வது போல், நிலவரியை நீக்கிவிட்டு உணவுத்துறையிலே சர்க்கார் செய்கின்ற வியாபாரத்தின் மூலமாக அவனிடமிருந்தே பிடுங்கிக் கொள்ள வழி வகைகளைச் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இது உள்ளபடியே விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டு வரப்படவில்லை. 1967 தேர்தலை மனத்தில் வைத்துதான் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, வேறில்லை.

எவ்வளவு பெரிய விளம்பரம்? நிலவரியை நீக்கி விட்டோம் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் சொல்கிறார். இப்போது 25 சதவிகிதம் வரியை நீக்கியிருக்கிறார்கள். போர்க் காலத்திலே போடப்பட்ட வரியை நீக்கியிருக்கிறார்கள். அந்த வரி போடப்பட்டபோதே நாங்கள் கண்டித்தோம். கனம் முதலமைச்சர் அவர்கள் 'இது போர்க்கால உபரி வரி, நீர்ப்பாசன வரி அல்ல' என்று பதில் சொன்னார்கள். நெருக்கடி நிலைமையை ஒட்டிப் போடப்பட்ட வரி என்று சொன்னார்கள். நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு எவ்வாறு ரேஷனலைஸ் பண்ணுவது, எந்த விதத்தில் இதைச் சீராக்கலாம் என்பது பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 'விவசாய வருமான வரியை எடுத்து விடுவதா அல்லது வேறு எந்த விதத்தில் மாற்றி அமைப்பது', நிலவரியைப் பொறுத்த அளவில் எந்த விதத்தில் மாற்றி அமைப்பது, ஒரேயடியாக எடுத்து விடலாமா, அல்லது ஓரளவுக்கு மட்டும் எடுத்து விடுவதா, அல்லது எந்த விதத்தில் மாற்றி அமைப்பது என்பதைப் பற்றி எல்லாம் ஆலோசிக்க வேண்டும்" என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். நெருக்கடி நிலை தீர்ந்த உடனேயே அந்த வரியை எடுத்திருக்க வேண்டும். இவ்வளவு காலம் பொறுத்து அதை எடுத்து விட்டதற்கு இவ்வளவு பெரிய விளம்பரமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த வரிக் கழிவால் சர்க்காருக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் 1½ கோடி ரூபாய். நம்முடைய சர்க்காருக்கு வரி மூலம் கிடைக்கக்கூடிய மொத்த வருமானம் 200 கோடி ரூபாய். அதிலே இந்த 1½ கோடி ரூபாயைக் கழித்திருக்

இருர்கள். இதற்கு இவ்வளவு பெரிய விளம்பரமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அறிக்கையில் எவ்வளவு பெரிய சொற்ருெடர்களைப் போட்டிருக்கிருர்கள்? வரலாற்றுச் சிறப்புடையது, வருங் காலத்தை எண்ணிச் செய்யப்பட்டது, என்றெல்லாம் கூறப்பட வேண்டிய அவ்வளவு பாராட்டுகளுக்கு இது உரியதுதானு என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சாதாரணமாகக் கிராமங்களிலே, தெரு வீதிகளிலே வேடிக்கை காட்டுவார்கள். ஒரு செடியை நட்டுவிட்டு மாங்காய் வரவழைக்கிறேன் என்று காலேயிலிருந்து பேசிக் கொண்டிருப்பான். ஊர் எல்லாம் சுற்றி கடைசியிலே ஒரு குச்சியை எடுத்துக் காண்பிப்பான். அதைப்போல் இவர்கள் நிலவரியை எடுத்து விட்டோம் என்று ஊரெல்லாம் சுற்றி கடைசியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றிய சுமையை இறக்குகின்ற பணியைச் செய்து விட்டு அதற்குப் பெரிய விளம்பரம் செய்கிருர்கள். அது கூடாது என்று கூற விரும்புகிறேன்.

இந்த 1½ கோடி மட்டுமல்ல, இன்னும் வரிக் கழிவு செய்யப் போகிறும் என்று சொல்கிருர்கள். உபரி வரிகளேயெல்லாம் நீக்கி விடுவதால் எந்தவிதமான இடையூறும் வந்து விடாது. இந்த உபரி வரிகளே எல்லாம் நீக்கி விடுவதால் எற்படக்கூடிய நஷ்டம் 10.52 கோடி ரூபாய்தான் என்று 1962-63-ம் ஆண்டு கனம் முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிருர்கள். 200 கோடி வருமானத்தில் 10 கோடி ரூபாய் வரிக் கழிவு சர்க்காருக்குப் பெரிய கஷ்டமாக இருக்காது. ஆனுல் விவசாயிகளுக்கு அந்த வரிகள் பளுவாக இருக்கும்.

"வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய்தப்பின்
தூங்கும் களிருே துயருருு—ஆங்கு
அது கொண்டு ஊறும் எறும்பு இங்கு
ஒருகோடி உய்யுமால்"

—யானேயின் கவளத்திலிருந்து சிறிது தவறி கீழே விழுந்து விடுமானுல் அதனுல் யானேக்கு நஷ்டம் எதுவும் இல்லே; ஆனுல் அந்த உணவு ஆயிரம் எறும்புகளுக்கு உணவாகும். அதுபோல் சர்க்காருக்கு இந்த 10 கோடி ரூபாய் வரியை நீக்கி விடுவதால் பெரிய பளு ஏற்பட்டு விடாது, ஆனுல் ஏழை விவசாயிகளுக்குப் பெரிய பளு நீங்கினுற்போல் இருக்கும் என்றுதான் கனம் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் முதலமைச்சர் அவர்கள் நான் கொண்டு வந்த பல தீர்மானங்களின் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். திருவள்ளுவர் விழாவுக்கு விடுமுறை விட வேண்டுமென்று சொன்னேன், ஏற்றுக் கொண்டார்கள். ஒரு பள்ளிக்கு ஒரு ஆசிரியராவது இருக்க வேண்டுமென்றேன், ஏற்றுக்கொண்டார்கள். தமிழக வரலாறு எழுதப்படவேண்டுமென்றேன், ஏற்றுக்கொண்டார்கள். அதே போல் விவசாயக் குடும்பத்தில் தோன்றிய முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு நல்லது செய்ய, இந்தக் கடைசி நேரத்தில்—இந்தச் சட்டசபைக் கூட்டத்தின் கடைசி நேரத்தில் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன். வணக்கம்.

[8th November 1966

*திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, நிலவரி நீக்கப்பட வேண்டுமென்று வந்திருக்கிற புலவர் கோவிந்தன் அவர்களுடைய தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நான் சொல்ல வேண்டாம்—எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். சுதந்திராக் கட்சியின் அடிப்படை முதற்கொள்கை நிலவரி முழுவதும் நீக்கப்பட வேண்டுமென்பது. காரணம் நமக்குத் தெரியும். நிலவரியை நீக்கிவிட்டால் இந்தியாவிலேயே மிகப் பெரும்பாலான மக்களுக்குச் சுமையைக் குறைத்தவர்களாக ஆகிறோம். ஏனென்றால், 70 சதமானம் வரையில் நிலத்தையும், உழவையும் நம்பியிருக்கிற மக்கள், இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆதலினாலேதான், காந்தியடிகள் முதற்கொண்டு எல்லோரும் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே வந்தார்கள். இன்றும் அந்த வரி விதிக்கின்ற தன்மையை நான் கணித்துப் பார்க்கும்போது நிலத்தை உழுது பயிர் செய்வதற்கு வரி என்பது கேட்கக் கூடச் சகிக்க முடியாததாக இருக்கிறது. ஒருவன் கடை வைத்து வாணிகம் செய்கிறான். அதற்காக அவனுக்கு வரி இல்லை. அவனுக்கு எப்படி வரி விதிக்கப்படுகிறது? அவனுக்கு கிடைத்த வருமானத்தை அடிப்படையாக வைத்து வரி விதிக்கப்படுகிறது. அந்த வருமானத்திலே கூட 3,000, 4,000 வரை வரியில்லாத தொகை என்று கழித்து விட்டு அதற்குமேற்பட்ட தொகைக்குத் தான் வரி போடப்படுகின்றது. நிகர வருமானத்தை எடுப் பதற்கு எந்த எந்தச் செலவுகளையெல்லாம் அவன் செய்கிறான் என் பதையெல்லாம் கணித்து அதிலே இன்றியமையாத செலவுகள் என்றால் அதை ஏற்றுக்கொண்டு, இன்றியமையாத செலவுகள் அல்ல என்றால் அதை மறுத்துவிட்டு எப்படியோ இன்றியமையாத செலவுகள் முழுமையும் கணித்து அதைக் கழித்துவிட்டு, தள்ளி விட்டுத்தான் மிஞ்சுகிற நிகர வருமானத்திலே 3,000, 4,000 என்று வரியற்ற தொகையைக்கூடத் தள்ளிவிட்டு அதற்குமேற்பட்ட தொகைக்குத்தான் அவர்கள் வரி விதிக்கின்ற நிலைமையைக் காண் கிறோம். அங்கேகூட தொழில் உடைமைக்கு வரி கிடையாது. ஆனால் இங்கே நில உடைமைக்கு வரி இருக்கிறது. பல இடங்களில் பார்க்கிறோம். அது உத்தியோகத்திலே நிர்வாக இயந்திரத்திலே ஏற்பட்ட கோளாறுகளாக இருக்கலாம். விளைந்தாலும், விளையா விட்டாலும் வரி கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஐந்து சென்ட், ஏழு சென்ட் நிலம் வைத்திருக்கின்றவர்கள் வக்கீல் வைத்து 100, 200 ரூபாய்வரை செலவழித்து கோர்ட்டுக்குச் செல் வதற்கு இயலாத நிலைமையிலே அவர்கள் கட்டிவிட்டுப் போகின்ற கண்ணராவியைத்தான் நாம் பார்க்கிறோம். இந்த நிலையிலே நாம் எத்தனையோ முறையிலே இதை அணுகிப் பார்த்தாலும், நிலத்திற்கு வரி விதிப்பது என்பது தீமைதான் என்பதை உணரலாம். இந்த நிலையிலே அவர்களுக்கு பிறபல உணவுப் பண்டங்கள், அவர்களுக் குத் தேவைப்படுகின்ற மண்வெட்டி, உரங்கள் இவைகூடக் குறைந்த-நியாயமான விலையில் கிடைப்பது இல்லை. ஆனால் புரக் யூர்மெண்ட் பண்ணுவது மட்டும் அவர்களிடம்தான். பட்டா என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஒரு ரூபாய்க்கு விற்ற மண்வெட்டி இப்போழுது 7 ரூபாய் வரையில் சென்றுவிட்டது. ஒரு ரூபாய் விற்ற நெல் இப்பொழுது எவ்வளவு தான் அதிகமாகப் பார்த்தாலும் பிளாக்கிலே நான்கு ரூபாய் தான்

8th November 1966] [திரு. சா. கணேசன்]

விற்கிறது. அதுவும் மற்றவர்கள் விற்கிற விலைதான். ஆனால் அரசாங்கம் சொல்கிறபடி விவசாயிகள் குறைந்த விலைக்குத்தான் விற்கிறார்கள். இவற்றையெல்லாம் கணித்துப் பார்க்கின்றபொழுது விவசாயி முழுக்க முழுக்க இந்த தேசத்திலே விவசாயம் செய்வதை விட்டுவிட்டு எங்காவது போய்விடலாம் என்றுதான் எண்ணுகிறான். அவனுக்கு வேறு புகலிடம் இல்லை என்பதாலேதான் அவன் அதிலேயே தேங்கிக் கொண்டு கிடக்கிறான். அவனுக்கு வேறு புகலிடம் இருக்குமானால் அவன் இதைக் கட்டிக் கொண்டு அழ மாட்டான், வேறு கதியில்லாத நிலைமையினாலேதான் அவன் இதிலேயே கிடக்கிறான் என்பதை நம்மிலே பலர் மிக நன்றாக உணர்வார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் ' ஆறில் ஒரு கடமை ' ' ஆறில் ஒரு கடமை ' என்று சொல்லிக் கொண்டே வந்திருக்கிறார்கள். அப்பொழுது எல்லாம் வேறு வரிகள் கிடையாது. ஆறில் ஒரு கடமையென்று சொல்லக்கூடிய முறையிலேதான் ஒரு பாகம் கொடுப்பார்கள். ஆனால் வேறு வரிகள் ஏதும் கிடையா என்பதை பல்வேறு நூல்கள் மூலமும், அறநூல் இயற்றிய வள்ளுவன் மூலமாகவும் நாம் அறிவோம். ஆறில் ஒரு பங்கு அரசனுக்குப் போய்விட்டது. மீதியிருக்கின்ற ஐந்து பங்குகளைத்தான் எப்படிச் செய்யவேண்டுமென்று கூறுகின்றபொழுது, தென்புலத்தாள், தெய்வம், விருந்து, ஒக்கல், தான். என்று ஐந்துபடக் கூறியிருக்கின்றார்கள். ஆறில் ஒரு கடமை என்பதைத்தான் அன்று ' இறை ' என்று சொல்வார்கள். அதைத்தான் கவர்ன்மெண்ட் டாக்ஸ் என்று நாம் இன்று சொல்லுகிறோம். அப்பொழுது எல்லாம் இப்பொழுது இருக்கின்றமாதிரி டாக்ஸ் பலவகையாக இருந்ததில்லை. வேறு வகைகளிலேயும் கொடுத்தார்கள். அவையெல்லாம் ஊரிலே உள்ள குளம், ஏரி முதலிய துறைகளைப் பரிபாலிக்கிற வாரியங்களுக்கு சந்தாவைப் போலச் சில கட்டணங்கள். இப்பொழுது இன்ஷூரன்ஸ் என்று சொல்கிறோமே அதைப்போன்றவை அவை. அதையதைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அவை இருந்தன.

இனி விஷயத்திற்கு வருகிறேன். நமது மாநிலத்தில் ஏற்கனவே இருந்த வரிக்குமேலே 1963-ல் 25 சத விகிதம் உபரி வரி போட்டும், 1965-ல் இன்னும் அதிகமாக உபரி வரி போட்டும் வரியை ஆளும் கணத்தவர் உயர்த்தினார்கள். நான் அப்பொழுது அது வேண்டாமென்று சொன்னேன். நான் அப்பொழுது சொன்னது பலருக்கு வருத்தமாக இருந்திருக்கும். " வரியை உயர்த்துகின்ற இந்த மசோதா சட்டசபையிலே நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே சட்டசபையிலே இருப்பது கூடப் பாவம் என்று கருதி வெளியேறுகிறோம் " என்று சொல்லிவிட்டு வெளி நடப்புச் செய்தோம். நான் அன்று சொன்னது எவ்வளவு நியாயம் என்பதையும், எவ்வளவு மனம் நொந்து அன்று கூறினேன் என்பதையும் சிந்தித்துப் பார்ப்பார்கள், இன்று ஏற்றுக்கொண்டவர்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது 25 சத விகிதம்தான் நீக்கப்படுகின்றது. இன்னும் முழு வரியும் அதாவது 125 சத விகிதம் வரியும் அப்படியேதான் இருக்கின்றது. இதை முழுவதையும் எடுக்கவேண்டும் என்று

தான் எல்லோரும் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் எடுக்கவேண்டும் என்றுதான் சொல்லலாம். எதிர்க்கட்சிகளுக்குச் சொல்வதற்குத்தான் வாய்ப்பு உண்டு. ஆனால் ஆளுங்கட்சி, அதாவது ஆளுகின்றவர்களுக்கு சொல்வதற்கு வேலையில்லை. செய்து காட்ட வேண்டிய கடமையும், உரிமையும், வசதியும், வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்கள் செய்தபிறகு அதைப்பற்றி மற்றவர்கள் பாராட்டியோ அல்லது குறைபாட்டைப்பற்றியோ சொல்லலாம். இதை எலக்ஷன் ஸ்டண்ட் என்று சொன்னால் கோபம் வரும். அப்படிச் சொல்லவேண்டாம். எலக்ஷனில் தங்கட்கு ஓட்டுக் கிடைக்காமல் போய்விடக்கூடாது என்ற அக்கறையினால், அச்சத்தினால்தான் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதில் தவறு என்ன? ஏன் முழுவதையும் நீக்கக்கூடாது? இதை எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொண்டாயிற்று. பிறகு ஏன் தயங்க வேண்டும்? அப்படியில்லாமல் இதற்கு ஒரு ஆய்வு, கணிப்பு எதற்கு என்று எனக்குத் தெரியவில்லை. இதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தை எப்படி ஈடுகட்டுவது என்பதைப் பரிசீலிப்பதற்கு வேண்டுமானால் ஆய்வுக் குழு வைத்துக் கொள்ளலாம். நான் இதை நல்ல எண்ணத்தோடு கூறுகிறேன். இந்தத் தீர்மானத்தை முழுக்க முழுக்க வரவேற்கிறேன். நிலவரியை ஒழிக்கவேண்டுமென்பதிலே நம்முடைய மாநிலத்திலே முழு ஒருமைப்பாடு இருக்கிறது. ஆகவே ஏன் காலந்தாழ்த்தி நிறைவேற்றவேண்டும்? மதுவிலக்கை ஒழிப்பதற்கு என்ன வழிகளைச் செய்தோம்? ஏன், இப்பொழுது விற்பனை வரி என்னும் காமதேனு ஏற்பட்டிருக்கிறதே, அதைச் செம்மையாகப் பேணினால் வருமானம் பெருகுமே? எனவே ஆய்வுக் குழு போட்டுக் காலத்தையும், பணத்தையும் விரயம் செய்யாமல் நிலவரியை முழுவதும் ஒழிக்கவேண்டுமென்பதை நாம் ஒருமுகமாக ஏற்று வரவேற்று, பேசுவதற்கு நேரமின்மையினாலே நான் இத்துடன் நிறுத்திக்கொண்டு இதன் மூலமாக தமிழ்நாடு எல்லா வழிகளிலும் முன்நிற்பதைப்போன்று, இதிலும், இந்தச் சட்டசபையின் இறுதிக் கூட்டத்திலே புனிதமான இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழ்நாடு அரசாங்கம் தன்னுடைய சட்டசபையை பெருமையோடு முடித்துக்கொண்டது என்ற பாராட்டையடைய சபை ஒருமனமாக இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீமான் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை முழுமையும் ஆதரிப்பதற்கு இல்லை. இந்தத் தீர்மானம் அரசாங்கத்தின் கவனத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இது நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்ற நிலவரி ரத்து செய்யும் விஷயத்தின் யோசனைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அரசாங்கத்தின் கருத்தில் நீண்ட நாளாக இருந்த ஒன்றினை வைத்துக் காண்கிற
12-30 போது, நிலவரி சம்பந்தப்பட்ட, நிலத்தை ஒட்டியுள்ள பல்வேறு வரிகளையும் ரத்து செய்து விடவேண்டும் என்று கோருகிற இந்தத் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாது. இது எந்த அளவில் நியாயம் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

8th November 1966] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

அன்பர் கோவிந்தன் அவர்கள் பேசும்போதும், மதிப்பிற்குரிய நண்பர் கணேசன் அவர்கள் பேசும்போதும் இதுபற்றி அரசாங்கம் ஒரு கொள்கையை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதைப்பற்றி உளமாற வரவேற்று மகிழ்ச்சி கொள்கிருர்கள் என்று முற்றிலும் ஒப்புக்கொள்வதற்கில்லே. அரசாங்கம் இதை தன்னுடைய சாதனே யாக--ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துவிடுகிற பெருமையை விசேஷமாக எடுத்துக்கொண்டுவிடப் போகிறதே என்கிற ஒரு ஆத்திரம் மறைமுகமாக அவர்களது வார்த்தையில் தொனித்துக் கொண்டிருந்ததைத்தான் என்னுல் காண முடிகிறது. ஏனென்ருல் காரைக்குடியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான்--இதுபோன்ற ஒரு தீர்மானத்தை இங்கே இவர்கள் தாக்கல் செய்திருக்கிருர்கள் என்று நம்புகிறேன். காரைக்குடியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னுல் புலவர் கோவிந்தன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை அனுப்பியிருக்க முடியாது என்று ஊகிக்கிறேன். நிச்சயமாக அது இங்கே தெளிவுபடுத்தப்பட்டும் விட்டது. காரைக்குடியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியவுடன்—அங்கே விஜயம் செய்திருந்த முதல் அமைச்சர் அவர்களும் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு இதைச் செயல்படுத்த முன்வருவதாகத் தெரிவித்தார்கள். அப்படி இருக்க இப்போது புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் எதற்கு? இந்தத் தீர்மானத்தில் நில வரியை மட்டும் எடுத்துவிடுவதோடு அமையவில்லே. பாசன வரிகள், நீர்நிலேகளேப் பராமரிப்பதற்கான வரிகள், ஸ்தல ஸ்தாப னங்களுக்கான வரிகள் ஆகிய எல்லா இனங்களேயுமே எடுத்துவிட வேண்டும் என்பதாக இன்னெரு தீர்மானம் கொண்டு வந்தால்— அரசாங்கம் நிலவரியை எடுப்பதன் மூலம் மக்களுக்கு ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லே. அது சம்பந்தப்பட்ட எல்லா வரி களேயுமே நாங்கள் எடுங்கள் என்று சொன்னேம், அவர்கள் ஏற்க வில்லே என்பதாக தங்களுக்குச் சாதகமாக மக்களிடத்தில் ஓர் அதிருப்தியை வளர்க்கப்பயன்படுமே தவிர, அந்தத் தீர்மானம் காரிய சாத்தியமானதா என்ருல் இல்லே. தேர்தலே ஒட்டித்தான் இந்த எண்ணம் பிறந்தது என்பதை விட விவசாயிகளுக்கு இதனுல் நன்மை ஏற்படுமா, படாதா என்று எடுத்துச் சொல்லியிருந்தால் ஒன்ருக இருக்கும். தேர்தலுக்காக இந்த மாதிரியான எண்ணம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது என்று பேசுவது முற்றிலும் பொருத்தமாக எனக்குப் படவில்லே. காங்கிரஸ் கொள்கையில் பல ஆண்டுகளாகவே இது இருந்து வந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. கடந்த காலங்களில் நிலம் சம்பந்தப்பட்ட வகையில் காங்கிரஸ் கமிட்டி ஏற்படுத்திக்கொண்ட திட்டங்கள். செயல்முறைகள்--இவைகளேப் பற்றி 'அ-னு', 'ஆ-வன்னு' கூடத் தெரியாத ஒருவர் காங்கிரஸ் கமிட்டியின் கொள்கைத் திட்டங்களேப் பற்றி ஆத்திரத்துடன் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் நான் பார்த்தேன்.

12-30 p.m.

• • • • •

*** Expunged as ordered by the Chair.

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [8th November 1966

ஆனால், 1931-ஆம் ஆண்டு கராச்சியில் கூடிய காங்கிரசில்தான் நாட்டுக்குச் சுதந்திரம் வந்தால் பொருளாதாரப் பிரச்சினைகள் எவ்வாறு அமைக்கப்படவேண்டும், மனித சுதந்திரம் எவ்வாறு வரையறை செய்யப்படவேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் விரிவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காங்கிரஸ் சரித்திரத்தின் முதலாவது பாகம் சுதந்திராக் கட்சித் தலைவருக்கு நன்கு தெரியும். மற்றவர்களும் படித்திருப்பார்கள். எண்ணூறு பக்கங்கள் கொண்ட புத்தகத்தில் கராச்சி தீர்மானம் பற்றி பல பாகங்களாகக் கூறப்பட்டிருக்கிறது. அவற்றில் காங்கிரஸ் கொள்கைகள் நன்கு விளக்கப்பட்டு இருக்கின்றன. 1930-இல் சட்ட மறுப்புப் போராட்டத்தைத் துவக்குவதற்கு முன்னால் லார்டு இர்வின் வைசிராயாக இருந்தார். ஜெர்மானிய நிருபர் என்று நினைக்கிறேன்—ரெஜினல்ட் வசம் 11 நிபந்தனைகள் அடங்கிய குறிப்பை மகாத்மா காந்திஜி அவர்கள் வைசிராய்க்கு அனுப்பி வைத்தார்கள். அதில் காந்திஜி குறிப்பிட்டிருந்த இரண்டாவது நிபந்தனையே நில வரியைப் பாதியாகவாவது குறைக்க வேண்டும் என்பதுதான். ஆகவே, நில வரியை அடியோடு ரத்து செய்துவிட வேண்டும் என்கிற கொள்கை காங்கிரஸ் வரலாற்றில் இருந்து வந்திருக்கிறது என்பதை இவைகளில் இருந்து நாம் தெரிந்து கொள்ள முடியும். இது தேர்தலுக்காக அமைந்த ஒன்று அல்ல.

அதே சமயம் அரசாங்கம் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன உத்தர வாதம் அளிக்க பாசன ஆதாரங்களை தொடர்ந்து எப்போதும் பராமரிப்புச் செய்து கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது. நிலம் என்றால் எல்லாம் நிலம் தான். பல்வேறு வகையாக பாசன வசதியைக்கொண்டே அவை அமைகின்றன. பாசன வசதியுள்ளது நன்செய்யாகிறது. பாசன வசதி இல்லாத இடம் புன்செய்யாகிறது. சொந்தத்தில் பம்பு செட்டு வைத்துப் பாசன வசதியைப் பெருக்கிக் கொண்டிருந்தால் அந்த நிலம் ஏக்கரா ஆறாயிரம் ரூபாய். பம்பு செட்டு இல்லாத நிலம் ஆயிரம் ரூபாய். இந்த இரண்டுவகை நிலத்திற்கும் நிலவரி இல்லை. ஒன்று பம்பு செட்டு இல்லாத நிலம். இன்னொன்றுக்கு அரசாங்கம் பம்பு செட்டு அமைத்துக்கொடுக்க வில்லை. ஆனால், எங்கெங்கே பாசனத் திட்டத்தை ஏற்படுத்தி, பாசனத்திற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்து, நீர்நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்று நடத்திக்கொண்டு வருகிறதோ, அங்கு நீர் வரிகள் முதலியன இருக்கும். நில வரி என்று சொல்கிறபோது எல்லா நிலங்களுக்கும் நஞ்சையோ, புஞ்சையோ, தோட்டக்கால் நிலங்களோ—எல்லாவற்றின் மீதும் போடப்பட்டு வந்த நிலவரி—தன் தீர்வை—ரத்து செய்யப்பட வேண்டும் என்பதுதான் நாம் ஏற்றுக்கொண்டுள்ள தீர்மானம்.

நிலவரியை ரத்து செய்வதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை நேரிடையாக தானியக் கொள்முதல் செய்வதனால் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம் என்பதாகத்தான் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு சமாதானம் சொன்னார்கள். உடனே அவ்வாறு செய்வது நிலச்சுவான்தார்களுக்கு இதுவரை கிடைத்து வந்த வருமானத்தை சர்க்கார் அடையப் பார்க்கிறது என்பதாக வாதம் செய்யப்படுகிறது. அரசாங்கம் கொள்முதல் செய்யவில்லை என்றால்

8th November 1966] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

அரசாங்கத்தின் ஏஜெண்டுகள் இருந்து செய்கிறார்கள். அந்த ஏஜெண்டுகளுக்கு அவர்கள் கொள்முதல் செய்கிற அளவுக்கு ஏற்ற கமிஷன் ஒதுக்கப்படுகிறது. நிலச்சுவாந்தாருக்கும் இல்லாது, அரசாங்கத்திற்கும் இல்லாது இடையில் சிலர் ஏஜெண்டுகளாக இருந்து பெறுகிற கமிஷன் அரசாங்கத்திற்கு மிச்சமாகும்படி அரசாங்கமே நேரிடையாகக் கொள்முதல் செய்வதில் தவறு என்ன இருக்கிறது? இதன் மூல்மாகவும் நமக்கு ஏற்படுகிற நஷ்டத்தை ஓரளவு சமாளித்துக்கொள்ளலாம். சர்க்கார் ஒரு நல்ல காரியத்தைத் துணிச்சலாகச் செய்ய முன்வந்திருக்கிறபோது பல பிரச்சினைகளோடு அதை சிக்கவைத்துக் குழப்பி வாதங்கள் செய்வது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டும் அல்ல. நிலப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நிலவரியை எடுத்துவிடுவது மட்டும் அல்ல, விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும். விவசாய உற்பத்திப் பெருக்கம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிற அளவில் போதாது. இன்னும் முழு அளவில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், விவசாய அதிகாரிகள் எல்லோரும் ஒத்துழைத்தாக வேண்டும்.

ஸ்தலத்தில் உள்ள விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்காக என்றிருக்கும் அரசாங்க அதிகாரிகளோடு பஞ்சாயத்து யூனியன் சேர்மன் தவிர இன்னும் சில பேர்களை, விவசாயிகளைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படவேண்டும். ப்ளாக் அளவில் அந்தக் குழுக்கள் இருக்கவேண்டும். அந்தக் குழுக்களுக்கு அந்த ப்ளாக் லெவலில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் உள்ள புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்கள் எல்லாம் தெரிந்திருக்கவேண்டும். அதைத் தான் நானும் கூட காரைக்குடியில் பேசினேன். கர்ணத்திற்குத் தான் இன்றையதினம் புறம்போக்கு நிலங்கள் தெரியும். மற்ற அதிகாரிகளுக்குக் கூட தெரியாது. ஆனால், இந்தக் குழுவில் உள்ள வர்கள் எல்லாப் புறம்போக்கு நிலங்களையும் நேரடியாகப் பார்த் திருக்கவேண்டும். அப்போதுதான் அந்த நிலத்தில் என்ன விருத்தி செய்யமுடியும், எங்கெங்கு கிணறுகள் வெட்டவேண்டும், எங்கு தண்ணீர் கிடைப்பதற்கு சாத்தியம் இருக்கிறது, எப்படி உற்பத் தியைப் பெருக்க முடியும் என்ற யோசனைகளை அவர்கள் மூலம் அதிகாரிகள் தெரிந்து கொண்டு அதை நிறைவேற்ற அதிகாரிகள் இருக்கவேண்டுமே தவிர அதிகாரிகள் மட்டும் யோசனை சொல்லி அதை நிறைவேற்றும்படியான ஏற்பாடுகள் சாத்தியம் அல்ல, அது நல்ல பலனையும் அளிக்காது என்றெல்லாம் தீர்மானத்தின் கருத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஓரளவு அந்தக் குழுவிற்கு அதிகாரிகள், என்ஜினியர்கள் அதற்கான சாதனங்கள் இவற்றை எல்லாம் கூடக் கொடுத்து விவசாய அபிவிருத்தியை அதிகமாகச் செய்வதற்கான வழிவகைகளில் உதவி புரியக் கூடிய வகையில் சக்தி வாய்ந்த ஒரு குழுவாக அது இருக்கவேண்டும் என்று அத்தீர்மானத்தில் குறிப் பிடப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு தீர்மானங்கள் அதைச் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது கூட ப்ளாக்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [8th November 1966

அளவில் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கென ஒரு குழு அமைக்கப் போவதாகவும் அது ஸ்டார்ச்சுட்டரி கமிட்டியாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் கூட இலாகாவில் இருந்து கொண்டிருக்கிறது எனவும் தெரிகிறது. அப்படி அது ஸ்டாச்சுட்டரி கமிட்டியாக இருந்தால் மட்டும் போதாது. அதற்கான விதிகள் வகுக்கும்போது எந்த நோக்கத்தோடு இந்தக் குழுக்கள் அமைய வேண்டுமென்று கருதுகிறோமோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அனுகூலமாக விதிகள் அமைந்திருக்கவேண்டும். விதிகள் அதற்கு இடையூறாக இருந்தால் பலனில்லை.

ஆகவே, இந்த நிலவரியை நீக்குவதோடு மட்டுமல்லாமல் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்காக என்று அரசாங்கம் கொடுக்கக்கூடிய உதவிகளையும் வைத்துக் கொண்டு அப்படி உதவி கொடுக்கும்போது சிறிய நிலச்சுவாந்தார்களுக்கு எல்லாம் கடன் வசதிகள், பம்ப் செட்கள் கொடுப்பது, புதுக் கிணறுகள் வெட்டுவதற்கு மானியம் அல்லது கடன் அளிப்பது இவை சம்பந்தப்பட்ட மட்டில் சிறிய நிலச்சுவாந்தார்களுக்கு முதல் சலுகை கிடைக்க வேண்டும். மூன்று ஏக்கர் அல்லது அதற்குக் கீழ் இருப்பவர்களுக்கு முதலில் உதவி, ஐந்து ஏக்கர் இருப்பவர்களுக்கு அடுத்த படியாக உதவி, அதற்கு மேல் உள்ளவர்களுக்கு மூன்றாவதாக உதவி என்று அந்த வகையில் எல்லோருக்கும் அந்த அனுகூலங்கள் கிடைக்கக் கூடிய அளவில் வழிவகை செய்யப்படவேண்டும். அதற்கு அப்படிப்பட்ட கமிட்டிகள் இருந்தால்தான் இவற்றையெல்லாம் சரிவரச் செய்ய முடியும். அப்படி சின்னஞ்சிறு நிலச்சுவாந்தார்களுக்கு தங்கள் நிலங்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படவேண்டும். சீர்திருந்திய முறையில் விவசாயம் செய்யக்கூடியவர்கள் கொஞ்சம் வசதி உள்ளவர்கள் தான் கிணறுகள் வெட்டிக் கொள்ளவோ அல்லது பம்ப் செட்ஸ் வைத்துக் கொள்ளவோ சீக்கிரமாக அந்த அனுகூலத்தைப் பெற சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள். இன்றுள்ள பல லட்சக் கணக்கான பட்டாதாரர்கள் சிறிய நிலச்சுவான்தார்கள்தான். அவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குகெல்லாம் முதல் சலுகை அளித்து அவர்களின் நிலங்கள் எல்லாம் விவசாய உற்பத்திப் பெருக்கத் திட்டத்தில் பயனடையும்படி கொண்டுவர ஒரு உந்துதல் ஏற்பட்டால்தான் அந்த நிலங்களில் வளர்ச்சி காண முடியும்.

இப்போது கிராமங்களில் பார்க்கிறோம், பண வசதி உள்ளவர்களின் நிலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 20, 25 மூட்டை விளைச்சல் காண்கிறது, பண வசதி இல்லாதவர்கள் விவசாயம் செய்யும்போது ஏக்கருக்கு 9, 10 மூட்டைதான் காண்கிறது. இந்த அளவில் ஏக்கர் ஒன்றுக்கு பத்து மூட்டை அளவில் தேசிய நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நிலையில் வசதி இல்லாதவர்களுக்கு வசதிகள் எல்லாம் அளிக்கப்பட்டுவிட்டால் உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்ய முடியும். நிலவரியை எடுத்துவிடுவது என்பது அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் நீண்ட நாட்களாக உள்ள திட்டத்தை நிறைவேற்றுவதோடு விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும்

8th November 1966] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

இது ஒரு ஊக்கமளிப்பதாக இருக்கும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்றுதான் காரைக்குடியில் இந்தத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

இப்போதே அதை அமலுக்குக் கொண்டு வந்தால் என்ன என்று கேட்டார்கள். அதற்கான பதிலை நான் சொல்லவேண்டியதில்லை. முதல் அமைச்சர் அவர்கள் கூறுவார்கள். அது உடனே உத்தரவு போடக்கூடிய விஷயமல்ல. சட்டபூர்வமான பிரச்னைகள், நிர்வாகப் பிரச்னைகள் இவற்றில் உள்ள கஷ்டங்கள், எப்போது இதை அமலுக்குக் கொண்டு வரலாம், நிர்வாக முறையை எப்படி மாற்றியமைப்பது என்பது போன்ற பல பிரச்னைகள் பற்றி தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்ட விஷயங்களை எல்லாம் செய்தார்கள் என்று புலவர் கோவிந்தன் அவர்கள் இங்கு சொன்னார்கள். அவர்கள் பேச்சில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையிருக்கிறது. அப்படியிருக்க முதல் அமைச்சர் அவர்களின் வாக்குறுதியை தேர்தல் நடந்த பின் நிறைவேற்றாமல் விட்டு விடுவார்களோ என்ற கருத்துடன் முரணைப் பேசுவது போல் வாதங்களில் தொனிக்கிறது. அது நியாயமா? முதல் அமைச்சர் அவர்கள் எந்தத் திட்டத்தையாவது நிறைவேற்றுகிறேன் என்று சொன்னதை நிறைவேற்றாமல் விட்டிருக்கிறார்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மூன்று பொதுத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. நான்காவது தேர்தல் வர இருக்கிறது. காங்கிரஸ் மூன்று பொதுத் தேர்தல்களின்போது தேர்தல் பிரகடனங்களை வெளியிட்டிருக்கிறது. அவற்றை வெளியிடுகிறபோது காங்கிரசின் கொள்கை என்ன என்பதை அப்பிரகடனங்களில் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அதை இந்தச் சந்தர்ப்பத்தில் சீர்தூக்கிப் பாருங்கள். செய்ய முடியாததை தேர்தல் பிரகடனத்தில் காங்கிரஸ் சொன்னதில்லை. தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஏதாவது சில செய்ய முடியாமல் இருக்குமோ என்பது எனக்கே சந்தேகமாகயிருக்கிறது. வாக்குகளைப் பெற வேண்டும் என்ற உத்தேசத்தோடு தேர்தல் பிரகடனத்தில் ஆசைவார்த்தைகள் காட்டி தேர்தல் பிரகடனத்தை கடந்த மூன்று தேர்தல்களில் காங்கிரஸ் வெளியிட்டிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆகவே, நல்லெண்ணத்தோடு கொண்டுவரப்படுகிற இந்த முயற்சிக்கு அனைவரும் ஆதரவு அளிக்கவேண்டும். சோதனை பார்க்கக்கூடிய வகையில் தீர்மானங்களைக் கொடுத்து இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சுமுகமான நிலைக்கு மாறான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள், நான் இந்த மன்றத்தில் முதல் நாள் நிலவரி ரத்து பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பித்தேன். அதனால் நிலைமை மாறவில்லை, எப்படியும் இந்தத் தீர்மானத்தை நான் வற்புறுத்த விரும்பு

[திரு. எம். பக்தவத்சலம்] [8th November 1966

கிறேன் என்று கூறினர்கள். ஆனால் நான் உணருவது, நான் எடுத்துக் காட்டுவது என்னவென்றால், இந்த நிலவரியை ரத்து செய்வோம் என்று முடிவு செய்தது ஒன்று. அறிக்கையை இங்கு சமர்ப்பிப்பது தெரியாமல் இருக்கலாம் அவர்களுக்கு. நிலவரியை ரத்து செய்வது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டதால்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் சொல்கிறேன். அவர்கள் தீர்மானத்தை முன்னதாகவே கொண்டு வந்தது மாதிரியும் நான் இப்போது ஒரு முடிவு தெரிவித்ததாகவும் அதனால் நிலைமை மாற வில்லை என்று சொல்வது சரியல்ல. நிலவரி ரத்து பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது என்று தெரிந்து கொண்டுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இல்லையென்றால், இது வரையில் இந்த மன்றத்தில் இம்மாதிரி ஒரு தீர்மானம் வந்திருக் கிறதா என்று கேட்கிறேன். ஏன் தீர்மானம் கொண்டு வரக் கூடாது? பல தீர்மானங்கள் வருகின்றன நான் அஃபிஷியல் டேஸ் அன்று. அப்போது இப்படி தீர்மானம் கொண்டு வந்திருக்கக் கூடாதா? (ஒரு அங்கத்தினர்: கட் மோஷன் வந்திருக்கிறது.) அது பிரயோஜனமில்லை. நான்—அஃபிஷியல் டேஸ் அன்று எத்தனையோ விதமான தீர்மானங்கள் எல்லாம் வருகின்றன. இதற்கு முன் கொண்டு வர சுதந்திராக் கட்சி அங்கத்தினருக்குத்தான் தோன்றியதா? அல்லது தி.மு.க. அங்கத்தினருக்குத் தான் தோன்றியதா? நான் கொண்டு வந்ததினால்தான் இத்தீர்மானம் வந்தது. நிலவரி பற்றி சொல்வது என்றால் காந்தியடிகள் இர்வினுக்கு எழுதிய கடிதம் பற்றி திரு. கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு முன் ரொம்ப நாட்களாகவே நிலவரியைச் சீர்ப்படுத்தப்படவேண்டும், அது சரியாக இல்லை என்ற கருத்து வெள்ளைக்காரன் ஆட்சிக்காலத்தில், அன்னிய ஆட்சிக் காலத்திலேயே இருந்தது. லார்ட் கர்ஸனே கூட அதுபற்றி சிந்தித்தார்கள் என்று தெரிகிறது. நேற்றல்ல, இன்றல்ல, வெள்ளைக்காரன் ஆட்சிக்கு முன்னரே கூட நிலவரி இருந்திருக் கிறது. இதைச் சீர்படுத்தவேண்டுமென்ற எண்ணம் இருந்திருக் கிறது. ஆனால், நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்தது அல்ல. நாங்கள் ஒரு படி மேலேயே போகிறோம் என்று இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. நான் சென்ற ஆண்டிலே நிலவரி சர்சார்ஜை உயர்த்துவது பற்றிய மசோதாவைக் கொண்டுவந்தபோதே கூறினேன்; இந்த நிலவரி அமைப்பு சரியாக இல்லை, இதைச் சீராக அமைக்கவேண்டும் ராஷனலைஸ் பண்ணவேண்டும் என்று கூறினேன். நிலவரி அமைப்பு மட்டுமல்ல, தண்ணீர் வரியும் சரி, ஸ்தல ஸ்தாபன வரியும் சரி, எல்லாவற்றையும் ராஷனலைஸ் பண்ணவேண்டும் என்று அப்போதே சொன்னேன். கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சொல்லிவிட்டார்கள், சர்சார்ஜ் எமர்ஜென்ஸிக்காக என்றுதான் சொன்னேன் என்று. அவர்கள் சொன்னது ஒரு கருத்து. இன்னும் சில எதிர்க் கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், அப்படிக் கொண்டு வந்ததை இப்போது எடுப்பானேன் என்று. எமர்ஜென்ஸிக்காகக் கொண்டு வந்தது, ஒன்றும் பிரமாதம் இல்லை என்று சொல்லுகிறார்கள்,

8th November 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

நாங்கள் ஏதோ விளம்பரம் செய்கிறோம் என்று சொன்னார்கள். யார் விளம்பரம் செய்கிறார்கள்? செய்வதைப் பாராட்டுகிறார்கள், வரவேற்கிறார்கள். நாங்கள் செய்வதைச் சொல்லுகிறோம். மக்கள் இருக்கிறார்கள்; அவர்கள் தெரிந்து கொள்வார்கள். விளம்பரம், விளம்பரம் என்று அவர்களுக்கு வயிற்றெரிச்சல் மாதிரி இருக்கிறது. நல்லது செய்வதை நான்கு பேர்கள் பாராட்டினால் அதற்கு நான் என்ன செய்வது? நல்லது செய்ததுதான் தப்பு. விளம்பரம் என்ன செய்கிறோம்? விளம்பரம் ஒன்றும் இல்லை.

நிலவரி என்பது நில உடைமைக்கு வரி. பெரும்பாலும் நிலம் வைத்திருப்பவர்கள் சிறிய விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். ஐந்து ஏக்கர்களும், அதற்கு உட்பட்டும் வைத்திருக்கிறவர்கள் எவ்வளவு என்று பார்த்தால் 100-க்கு 90-95 விகிதம் வந்து விடுகிறது. அவர்கள், நெல் விலை உயர்ந்த போதிலும் நிலவரி கொடுக்க கஷ்டப் படுகிறார்கள். குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு நிலவரியை எடுத்துவிடவேண்டும் என்ற கோரிக்கையும் இருந்து வருகிறது. அப்படி எடுத்து விடுவது என்றால், மொத்தமும் நிலவரியில் வராது. ஆனால், நிலவரியை முன்னரேயே எடுத்திருக்கக் கூடாதா என்றால் ஒவ்வொன்றாகப் பார்த்துத்தான் செய்யவேண்டும். மது விலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்ததால் ஏற்பட்ட வருவாய் நஷ்டத்தை விற்பனை வரியைக் கொண்டு வந்து சரிக்கட்டி வருகிறோம். செலவு முன் மாதிரியாகவா இருக்கிறது? வருவாய் 158 கோடி என்றால், 158 கோடி செலவு ஆகிறது. முன்பு என்ன செலவு இருந்தது; இப்போது என்ன செலவு ஆகிறது? செலவுக்குத்தகுந்தபடி வருவாய் தேடித்தானே ஆகவேண்டும்? நிலவரி நீண்ட நாட்கள் இருக்கிறது. அதைச் சீராக அமைக்கவேண்டும். நில வரியை எடுத்து விட்டு வேறு அமைப்பு ஏற்படுத்தவேண்டும். பரிசிலனை எதற்காக என்று கேட்கிறார்கள். எவ்வளவோ சிக்கல்கள் நீண்ட காலமாக இருக்கின்றன.

கனம் அங்கத்தினர் திரு. கணேசன் அவர்கள் எல்லாவற்றையும் எடுத்துவிடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். புலவர் ,அவர்களுடைய தீர்மானத்தில் இருக்கிறமாதிரி எல்லாவற்றையும் எடுத்துவிடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தண்ணீருக்கு வரி என்றால், ஒரு தண்ணீர் திட்டத்தை ஒரு கோடி ரூபாய் செய்து, 10 கோடி ரூபாய் செலவு செய்து நிறைவேற்ற வேண்டும் என்றால், அது பொது மக்கள் பணம். அந்தப் பணத்தைச் செலவு செய்து குறிப்பிட்ட லட்சம் ஏக்கர், 50,000 ஏக்கர் நிலச் சொந்தக் காரர்கள்தான் பலன் அடைவார்கள். அப்படிப் பலன் அடைகிறார்கள் என்றால், தண்ணீர் வசதி கிடைத்ததால் நல்ல முறையில் சாகுபடி செய்ய முடிகிறது. அதோடு கூட அவர்களுக்கு உடைமையாக இருக்கிற நிலங்களின் மதிப்பு அதிகப்படுகிறது. மதிப்பு 5-10 மடங்கு அதிகப்படுகிறது. கீழ் பவானித் திட்டப் பகுதியில் முன்பு நிலத்தின் விலை என்ன இருந்தது, இப்போது என்ன விலை என்று கோயம்புத்தூரிலிருந்து வரும் அங்கத்தினர்கள் உணர்வார்கள், ஒப்புக்கொள்ளுவார்கள். பொது மக்களுடைய பணத்தைச் செலவழித்து, அதனால் ஒரு சில நிலச்சொந்தக்காரர்கள் பலன் அடை

[திரு. எம். பக்தவத்சலம்] [8th November 1966

கிறார்கள் என்றால், அதற்கு ஏற்பட்ட செலவில் ஒரு பகுதியை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவது நியாயம் இல்லை என்று எப்படிச் சொல்லலாம்? ஒரு சிலருக்கு மாத்திரம் அனுகூலம் செய்வது சோஷலிசம் இல்லை. கனம் அங்கத்தினர் கணேசன் அவர்களுக்கு சோஷலிசம் என்றாலேயே கோபம் வரலாம். சோஷலிசம் இல்லை என்றால் இல்லாமல் போகட்டும் என்று சொல்லலாம். யார் விசேஷ பலனை அடைகிறார்களோ அவர்கள் அதற்கு ஏற்பட்ட செலவில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிற கொள்கை. அது தான் நீர் வரி.

அதற்கு அடுத்து ஸ்தல ஸ்தாபன வரி இருக்கிறது. ஸ்தல ஸ்தாபன வரியையும் எடுத்து விட்டால் ஸ்தல ஸ்தாபனங்கள் எப்படி நடப்பது? அவர்களுடைய வருவாய்க்கு என்ன வழி? நிலவரியை கலெக்ட் செய்வதில்லை என்று சொல்லலாம். அரசாங்கம் அதைப் பற்றி முடிவு எடுத்து பரிசீலனை செய்ய முற்பட்டிருக்கிறது. நிலவுடைமைக்கு உள்ள வரியை எடுத்து விடலாம் என்று முடிவு செய்திருக்கிறது. பிறகு நீர் வரியையும் போட முடியாது. ஏன் என்றால், அது அசல் நிலவரியைப் பொறுத்து இருக்கிறது. ஸ்தல ஸ்தாபன வரியும் போட முடியாது. நில வரியை அப்படியே எடுத்து விட்டால் ஸ்தல ஸ்தாபன வரி வசூலிக்க முடியாது, தண்ணீர் தீர்வை வசூலிக்க முடியாது. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இந்த வருவாய் போய் விட்டது என்றால், கிராமங்களுக்கு வேண்டியதை வேறு எவ்வாறு செய்ய முடியும்? நாம் வசதியைச் செய்து கொடுக்கிறோம். அதற்கு வரி போடுகிறோம். சில சர்வீஸ் செய்கிறோம், அதற்கு வரி போடுகிறோம். அது ஒரு வகை நிலத்திற்கு சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்று அதற்காக ஒரு வரி என்று சொல்லுவது கூடாது என்று சொல்லுகிறோம். அதுதான் நீண்ட நாட்களாகச் சொல்லி வந்தது. கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் காந்தியடிகள் இர்வினுக்கு எழுதியதைக் குறிப்பிட்டார்கள். நில வரியில் குறைந்தபட்சம் பாதியை எடுத்துவிடவேண்டுமென்று சொன்னார்கள். காந்தியடிகள் மிகவும் தீர்க்கதரிசி. அப்போது நிலவரி குறைவாகத்தான் இருந்தது. ஸ்தல ஸ்தாபன வரி, கல்வி வரி எல்லாம் சேர்த்தே கொஞ்சமாகத்தான் இருந்தது. இன்றைக்கு எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும் ரத்து செய்யப்போவது பாதிதான் ஆகிறது. மற்ற பகுதி நில வரி அல்ல. நிலத்திற்கு வேண்டிய வசதிகளைப் பெறுகின்றவர்கள் அந்த வசதிகளுக்காகக் கொடுக்கிற விதம் தான். அந்த அடிப்படையில்தான் அரசாங்கம் இன்றைக்கு பரிசீலனை செய்ய முற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு இந்த அசல் நிலவரியை எடுத்து விடுவது என்றாலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்து விட்டிருக்கலாமே, அப்போதெல்லாம் ஆட்சேபித்தார்களே, வரி உயர்வை ஆதரித்துப் பேசினார்களே என்று சொன்னார்கள். வரியை விதிக்கிறோம் என்றால் ஆதரித்துத்தான் ஆகவேண்டும். வரி விதிக்கிறோம், மக்களிடத்திலிருந்து பெறுகிறோம் என்றால், அதற்கு நியாயம் இருக்கிறது என்று தான் செய்கிறோம். அதனால் ஆதரித்துத்தான் பேசவேண்டும். ஆனால் இப்போது இந்த அசல்

8th November 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

நிலவரியை எடுத்து விடலாம் என்று இருக்கிறது. நவம்பர் மாதத்தில் சட்ட மன்றத்தில் சொன்னது நிலவரியை ராஷனலைஸ் செய்யவேண்டும் என்பதுதான். அதேமாதிரித்தான் ஸ்தல ஸ்தாபன வரியும். நிலவரி எவ்வளவோ அந்த வரியின் பேரில் ரூபாய்க்கு இவ்வளவு என்று போடப்படுகிறது. அது அவ்வளவு ஈக்விட்டபிள் என்று சொல்ல முடியாது. அதையும் ராஷனலைஸ் செய்யவேண்டும். இதையெல்லாம் ராஷனலைஸ் செய்யும் முறையில் நிலவரியை எடுத்து விடுவது என்பது முடிவு. ஆனால், நில வரியை எடுத்து விட்டால் வருவாய் குறைகிறது. வரவு-செலவுத் திட்டம் போட்டிருக்கிறோம். ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம். திடீரென்று வருவாயில் துண்டு விழுந்தால் சமாளிப்பது கஷ்டமாக இருக்கும்; திட்டம் பாதிக்கப்படும். அதற்காகத்தான் இப்போது ஏற்பட்டிருக்கிற அனுபவத்தில் இன்று உள்ள நிலைமையில், உணவு நிலைமையை நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்ததிலே ஓரளவு கட்டுப்பாடு அவசியம், விவசாயப் பொருள்களைப் பொறுத்த வரையில், முக்கியமாக உணவுத் தானியங்களைப் பொறுத்த வரையில் தானியங்களின் மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவது அவசியம். அதுதான் இப்போது உள்ள நிலைமையைச் சீர்படுத்தும் என்று எண்ணுகிறோம். இப்போது ஓரளவு ப்ரொக்யூர் செய்கிறோம். இந்த மன்றத்திலே சில அங்கத்தினர்கள் ப்ரொக்யூர்மென்ட் கூடாது என்று கூறுகிறார்கள். சர்ப்ளஸாக உள்ளதை சர்க்காருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். சர்க்காருக்குக் கொடுத்தாலும் நியாயமான விலை, கட்டுபடி ஆகும் விலை நிர்ணயித்திருக்கிறோம். அப்படி இருந்தும் என் கொடுக்கத் தயங்குகிறார்கள்? சிலர் மார்க்கெட்டில் அதிகமாக விலை இருக்கிறது என்று தயங்குகிறார்கள்.

அப்படி மார்க்கெட்டில் அதிக விலை விற்பதாக இருந்தால், 1-00 p.m.
கொள்முதலுக்குக் கொடுப்பதற்குக் கஷ்டப்படுகிறது. மார்க்கெட்டில் விட்டுவிட்டால் அது எங்கேயோ போய்விடுகிறது. 1964-ம் ஆண்டில் இம்மாதிரி நடைபெற்றது. அதைத் தவிர்க்கவேண்டும் என்பதற்குத்தான் ஸ்டேட் டிரேடிங், விவசாயப் பொருள்களில் அரசாங்கம் மொத்த வியாபாரம் செய்யவேண்டியது அவசியமாகிறது. அதை எடுத்துக்கொள்ளலாம் என்று இன்றைக்கு முடிவு செய்திருக்கிறோம். ஏனென்றால் அதிலே இப்பொழுது சாதாரணமாக வியாபாரிகள் மார்ஜின் வைக்கிறார்கள். அதிக லாபம் வைக்கிறார்கள். அப்படியெல்லாம் இல்லாமல் ஒரு சிறிய மார்ஜின் வைத்தால்கூட, நிலவரி ரத்து செய்வதிலே துண்டு விழுவதை சரிக்கட்டி விடலாம் என்ற ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் இன்று நிலவரியை ரத்து செய்ய முடிவு செய்திருக்கிறோம். எதிர்க்கட்சிகள் சொல்வதற்காக இல்லை, எதிர்க்கட்சியினர் அப்படித்தான் சொல்வார்கள். எதிர்க்கட்சி என்று சொல்கிற தோரணையில் இங்கு அவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கலாமே தவிர. இது காரிய சாத்தியம் இல்லை. இதையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து செய்யவேண்டும்.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th November 1966

வருகிற பசலி என்று நான் சொல்லியிருக்கிறேன். நான் தெரிவித்த அறிக்கையில் வருகிற பசலி என்று சொல்லியிருக்கிறேன். அடுத்த ஜூலை முதல் தேதிக்குள்ளே பரிசிலனையெல்லாம் முடிந்து, இந்த நிலவரி ரத்து அமலுக்கு வரும். அதற்குள்ளே எப்படியெல்லாம் செய்யலாம், எப்படியெல்லாம் செய்தால் இது சீராக அமையும் என்பதை முடிவு செய்து, ஜூலை முதல் தேதி பிறக்கிற பசலி ஆரம்பத்திலிருந்து இது அமலுக்கு வரும் என்று நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சொன்னார், காங்கிரஸ் தலைவர்கள் சொன்னார்கள், அப்படிச் சொன்னார்கள், இப்படிச் சொன்னார்கள், அவர்கள் சொன்னார்கள், இவர்கள் சொன்னார்கள், பிரதம மந்திரி அவர்கள் சொன்னார்கள், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் அவர்கள் சொன்னார்கள் என்றெல்லாம் கூறினார்கள். நம்முடைய காங்கிரஸ் தலைவர் அவர்கள் எதைச் சொன்னார்கள்? அவர்கள் அசல் நிலவரிதான் போகக்கூடும் என்று சொன்னார்கள். அதைத்தான் அரசாங்கமும் பரிசீலனை செய்கிறது. அவர்கள் தெரிந்து சொன்னார்கள். இது அமலுக்கு வருகிறது என்று சொன்னார்கள். அடுத்த ஜூலை மாதம் அமலுக்கு வரும் என்றுதான் அவர்களும் சொன்னார்கள். அதைத்தான நானும் இங்கே என்னுடைய அறிக்கையில் தெரிவித்திருக்கிறேன். ஆகையினால் தொடர்ந்து அரசாங்கம் இதில் கவனம் செலுத்தும், பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அசல் நிலவரியை எடுத்துவிடுவது என்பது நான் அரசாங்கத்தின் முடிவு. அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பரிசீலனை நடக்கும். அடுத்த ஜூலை மாதம் முதல் தேதி முதற்கொண்டு இதை அமலுக்குக் கொண்டு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: கனம் தலைவர் அவர்களே, நான் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும், முதல் அமைச்சர் அவர்களும் கருத்துத் தெரிவித்தார்கள். இந்தத் தீர்மானத்தை இந்த நேரம் பார்த்து கொண்டுவந்தானே என்ற கவலைதான் அவர்களுக்கு இருக்கிறதே தவிர, இந்தத் தீர்மானத்தினுடைய உள் நோக்கத்தை அவர்கள் மறுக்கவில்லை.

கனம் சபாநாயகர்: இரண்டு தரப்பிலும் ஒருவருக்கொருவர் இம்மாதிரி சொல்லிக்கொள்ளலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யாருக்கு அந்தக் கவலை இருக்கிறது என்று அவர்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

புலவர் கா. கோவிந்தன்: இந்தத் தீர்மானம் எந்த நேரத்தில் கொண்டுவரப்பட்டது. நாங்கள் காரைக்குடி தீர்மானம் போட்ட பிறகுதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்று

8th November 1966] *[புலவர் கா. கோவிந்தன்]*

சொன்னார்கள். காரைக்குடி தீர்மானம் எப்படி வந்தது? காரைக்குடி தீர்மானம் வந்த பிறகுதான் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் 5—3—1966 வரை என்ன சொன்னார்கள்? இது அக்கிரமமான வரி, அநியாயமான வரி என்று கூறுவது பொருந்தாது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுதும் சொல்கிறேன். அது அக்கிரமமான வரி, அநியாயமான வரி என்று கூறுவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

புலவர் கா. கோவிந்தன்: 5—3—1966 வரையில் சொன்னார்கள், இப்பொழுதும் சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிற முதல் அமைச்சர் அவர்கள், காரைக்குடியில், நிலவரியை எடுத்துவிடுவது என்று காங்கிரஸ் கட்சி போட்ட தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். 1967-ல் வோட்டுக்களை மனதில் வைத்து இந்தச் சபையிலே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று என்னைச் சொல்கிறார்கள். காரைக்குடியில் இந்தத் தீர்மானம் எப்படி வந்தது? நாங்கள் திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டிருந்தோம். காரைக்குடியில் அதற்குப் பிறகு இந்தத் தீர்மானம் வந்தது. இந்த மன்றத்திலே நாங்கள் தொடர்ந்து நிலவரி நீக்கம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். தீர்மானம் மூலம் கொண்டு வந்து சொன்னால் தான் முதல் அமைச்சர் அவர்கள் இதை ஒத்துக்கொள்வார்களா? இந்த மன்றத்தில் அங்கத்தினர்களால் எடுத்துக் கூறப்படுகிற கோரிக்கையை, நியாயமான கோரிக்கையை முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளக் கூடாதா? தீர்மானம் மூலம் தான் இப்படிப்பட்ட கோரிக்கை வரவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் விரும்பினால், அப்படிப்பட்ட தீர்மானத்தை நாங்கள் முன்பே கொண்டுவந்திருப்போம். இந்த மன்றத்து நிகழ்ச்சிகளை எடுத்துப் பார்த்தால் தெரியும். இந்த ஐந்தாண்டு காலமாக இப்படிப்பட்ட நிலவரி நீக்கம் வேண்டும் என்று நாங்கள் மகாநாடுகள் கூட்டி, நில வரி நீக்கம் வேண்டும் என்ற தீர்மானங்களைப் போட்டிருக்கிறோம், மகஜர்களைக் கொடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறது. வாயை மூடிக்கொண்டு இருந்தாலும் பாவாயில்லை. வாயைத் திறந்த போதெல்லாம் இந்த வரி நியாயமான வரி என்ற போக்கைத் தான் அவர்கள் காட்டியிருக்கிறார்கள். இவர்களுக்கு அச்சம் வந்துவிட்டது. நில வரி நீக்கம் வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் பேசிய பேச்சையும், அதற்கு மந்திரிகள் அளித்த பதிலையும் பொது மக்கள் முன்னே கொண்டுவந்து வைத்துவிட்டால் எங்கே விவசாய மக்கள் 1967-ம் ஆண்டு தேர்தலில் இவர்களைப் பார்க்கவேண்டிய முறையில் பார்த்துவிடுவார்களோ என்ற அச்சம் தான் இவர்களை காரைக்குடியில் தீர்மானம் நிறைவேற்றச் செய்ததே தவிர, காரைக்குடி தீர்மானத்தினால் தான் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது நியாயமான வாதமாகாது என்று தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[புலவர் கா. கோவிந்தன்] [8th November 1966

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் காந்தியடிகளைப் பற்றிச் சொன்னார்கள். அது உண்மை; எங்களுக்கும் தெரியும். இங்கு இருப்பவர்களெல்லாம் காந்தியாரை கைவிட்ட காங்கிரஸ்காரர்கள்; காந்தியார் வலிவை இழந்த காங்கிரஸ்காரர்களாக இருக்கவேண்டும். சொல்லாமலே செய்வார் பெரியோர், சொல்லியும் செய்யார் சிறியோர். இது தான் வழக்கம். நாங்கள் பல முறை இதுபற்றிச் சொல்லியிருக்கிறோம் ஏற்க மறுத்தார்கள்.

* * *

தாங்கள் முன்பு கூறியதையெல்லாம் மறந்துவிட்டு, 1967 தேர்தல் வருகிறதே என்று அஞ்சி, இப்பொழுது வரி நீக்கம் வேண்டும் என்ற அளவுக்கு வந்திருக்கிறார்கள். இது அவர்கள் உண்மையாக உணர்ந்து செய்த செயல் அல்ல என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த அறிக்கையில் 25 சதவிகிதம் வரி நீக்கம் செய்திருப்பதாகச் சொன்னது என்னுடைய தீர்மானத்தின் விளைவு தான். என்னுடைய தீர்மானம் மட்டும் வராமல் இருக்குமானால், 25 சதவிகிதம் வரியை நீக்குகிறோம் என்பதைக் கூட நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் அறிவித்திருக்க மாட்டார்கள்; நிச்சயம் அவர்கள் இம்மாதிரி செய்திருக்க மாட்டார்கள். என்னுடைய தீர்மானம் வந்து விட்டதனாலேயே அவர்கள் இம்மாதிரி அறிவித்திருக்கிறார்கள். காரைக்குடி தீர்மானத்திற்குப் பிறகு என்னுடைய தீர்மானம் வந்திருக்கிறது என்பது அல்ல.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாங்கள் எதைச் செய்தாலும், ஊரில் எது நடந்தாலும், எங்களால் தான் நடக்கிறது, நாங்கள் சொன்னதினால் தான் நடக்கிறது என்று கனம் அங்கத்தினர் சொல்லிக்கொண்டிருக்கலாம். இன்றைக்குக் காலையில் சூரியன் உதயமானது கூட எங்களால் தான் என்று அவர்கள் சொன்னால் கூட அதை நான் மறுக்கவில்லை.

புலவர் கா. கோவிந்தன்: நாங்கள் அவ்வளவு பெரிய பைத்தியக்காரர் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாமியார் மருமகள் கதை சொல்வார்கள். . . .

(The time bell was rung.)

MR. SPEAKER: As the allotted time is over, I shall put the Resolution to vote. The question is—

"That this House recommends to the Government that land revenue and several other surcharges collected on the basis of land revenue may be relinquished so as to induce the agriculturists who are the backbone of the country to evince keen interest in agriculture and to reduce their tax-burden and augment their income."

The Resolution was put and declared lost.

* Expunged as ordered by the Chair.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

orderec —

9th November 1966]

A poll was demanded and the House divided thus—

Ayes.

Sri K. R. Nallasivam
,, V. R. Nedunchezhiyan
,, K. A. Mathialagan
,, Saw. Ganesan
,, M. Kalyanasundaram
,, A. P. Dharmalingam
,, Rama. Aranganna1
,, M. Rajangam
,, Kanchi Manimozhiar
,, KR.RM. Kariamanicka Ambalam
,, M. Shanmugam
,, N. Rajangam
,, V. Arunachalam
,, K. S. Mani
,, N. Chinnamunisamy Chetty
Srimathi Manonmani Ammal
Sri S. Madhavan
,, T. P. Alagamuthu
,, S. Mani
,, P. Murugaiyan
,, V. R. Periannan
Sri P. V. Sriramulu
,, M. Kamalanathan
,, S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. Manickam
,, K. R. Sambandam
,, S. Murugaiyan
,, P. U. Shanmugam
Srimathi Jagadambal Velayudham
Sri M. S. Mani
,, K. Thirupathi
,, C. K. Chinnaraje
,, M. P. Vadivelu
,, S. Arumugam
,, M. V. Karivengadam
,, A. G. Balakrishnan
,, R. Narayanan
,, V. Krishnamoorthy
,, S. J. Ramaswami
,, R. Sampangi.

Noes.

Sri K. Parthasarathy
,, C. M. Ambikapathi
,, S. Angamuthu Naicker
,, K. S. Ardhanareeswara Gounder
The Hon. Sri M. Bhaktavatsalam
,, P. Kakkan
,, Srimathi Jothi Vencatachellum
Sri P. Ramachandran
,, R. Krishnaswami Naidu
,, A. S. Dakshinamoorthy Gounder
,, M. Dandayuthapani Pillai
,, V. Ellama Naidu
,, T. P. Elumalai
,, G. Gomathisankara Dikshidar
,, K. Gopala Gounder
,, R. Govindarajulu Naidu
,, T. Kadambavanasundaram
,, A. K. Kaliappa Gounder
,, T. Karcha Gowder
,, C. Kothandarama Bagavathar
,, M. Kulandaiswamy Gounder
,, T. Manavalan
,, K. Marappa Gounder
,, M. Maruthanayagam Pillai
,, M. P. Muthukaruppanaswami Gounder
,, S. Nanjunda Row
The Hon. Sri N. Nallasenapathi Sarkarai Manradiar
,, G. Bhuvarahan
,, S. M. A. Majid
Srimathi C. Kolandaiammal
,, P. K. R. Lakshmikantham
Srimathi A. S. Ponnammal
,, A. Krishnaveni
,, B. Lakshminarasamma
,, Rajathi Kunchithapatham
,, Parvathi Arjunan
Sri K. P. Palaniswamy
,, G. D. Perumal Raju
,, R. Ponnappa Nadar
,, K. Ponnian
,, S. Ponnusamy
,, R. Rajagopalaswamy Naicker
,, B. Rajagopal Naidu
,, P. Rajagopal
,, G. Rajaram
,, A. L. Ramakrishna Naicker
,, N. S. Ramalingam
,, S. Ramalingam
,, V. Ramanathan
,, N. Ramaswamy Udayar
,, S. Sadasivam
,, S. Sangili
,, D. N. Vadivel
,, V. Sankaran
,, M. S. Selvarajan
,, R. Sengaliappan
,, N. Shanmugasundaram
,, S. Sivasubramaniam
,, N. Sountharapandian
,, A. R. Subbiah Mudaliar
,, K. S. Subramania Gounder
,, K. B. Palani
,, N. V. Venugopalakrishnaswami

AYES : 41 NOES : 63 NEUTRAL : Nil

The Resolution was lost.

(2) FOOD SITUATION IN THE STATE.

SRI K. A. MATHIALAGAN rose—

MR. SPEAKER : We have got forty minutes more. The hon. Member can speak for about twenty minutes.

Sri K. A. MATHIALAGAN : Sri K. R. Nallasivam also wants to speak on my resolution.

Sir, I move—

"That this House is of opinion that the grave food situation in the State has resulted in chronic scarcity, famine conditions and exorbitant prices, breeding speculation, hoarding and black-marketing and therefore recommends to the Government to take steps to implement *inter alia* the following urgent measures :—

1. Radical agrarian reforms ensuring land to the tillers;

2. Adequate credit, fertiliser, improved seeds and other facilities to the cultivators;

3. Remunerative price to the producer;

4. State monopoly of wholesale of foodgrains trade;

5. Procurement of all available marketable surplus from landlords, exempting small holdings, the size of the holding to be exempted being decided from area to area taking into account the normal produce from the land in the area;

6. Arrangement for an adequate quantity of rations and for equitable distribution of procured stock.

7. Reduction of the price of rationed foodgrains by means of effective price control and Government subsidy; and

8. Stoppage of all the revenue and debt collections in all the scarcity affected areas.

Sri S. MUTHULINGAM : I second the Resolution.

Mr. SPEAKER : The Resolution is before the House for discussion.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உணவு நெருக்கடி சம்பந்தமான இந்தத் தீர்மானத்தை நான் இந்த மன்றத்தில் முன்மொழிந்து பேசுகின்ற நேரத்தில் மிகுந்த மன வேதனையோடு தான் பேசுகிறேன். உணவுப் பிரச்சினை சம்பந்தமாக எட்டு அம்சத் திட்டம் ஒன்றை இந்தத் தீர்மானத்தின் மூலமாகத் தந்திருக்கிறேன். இந்த எட்டு அம்சத் திட்டத்தை இந்த அரசாங்கம் அமல்படுத்தும் என்ற நம்பிக்கையிலே இதைக் கொடுக்கவில்லை என்றும் மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்த மாநிலத்தில் மிகப் பயங்கரமான நிலைமைகள் நிலவுகின்றன. புயலினால் மிகப் பயங்கரமான சேதங்கள் விளைந்து கோடிக்கணக்கான பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கின்றன. சொத்துக்கள் நாசம் அடைந்திருக்கின்றன. பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு இந்த நாடு பஞ்சத்திலும் பட்டினியிலும் பரிதவித்துக் கொண்டிருக்கிறது. எவ்வளவோ திறமையாகப் பேசலாம். கடந்த ஒரு வார காலமாக இந்த மன்றத்தின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டு வருகிறேன். உணவு நெருக்கடி—இவ்வளவு

8th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

பயங்கரமான உணவு நெருக்கடி—ஏற்பட்டிருக்கிறது; இதைத் தீர்க்க வேண்டிய சர்க்கார், இதற்கெல்லாம் பரிகாரம் தேட வேண்டிய சர்க்கார், இதுபற்றிய விவாதத்திற்கான அவகாசத்தை ஒதுக்குவதற்குக் கூட ஒத்துக்கொள்ளாமல், கனம் சபாநாயகரிடம் முறையிட்டு, அவருடைய கருணையினால் இந்த விவாதம் இந்த மன்றத்தில் வரவேண்டிய அளவில் நிலைமை இருக்கிறது. உணவு விவாதம் நடத்துவதற்கே இவ்வளவு சிரமப்படுகிற இவர்களால் மூன்றரை கோடி மக்களுடைய வயிற்றுப் பசிக்கு அடிப்படைத் தேவையான உணவுப் பொருள்களை விளைவிப்பார்கள் என்று நான் கொஞ்சங்கூட நம்பவில்லை. இதைச் சொல்வதன் மூலம் 18 வருஷ காலமாக எவ்வளவு பயங்கரமான நாசப் பாதையிலே இந்த நாட்டு மக்களைச் செலுத்திவிட்டார்கள் என்று கோடிட்டுக் காட்டவும், இதைவிடப் பெரிய சட்ட மன்றமான மக்கள் மன்றத்திலே இந்தப் பிரச்னையைச் சமர்ப்பிப்பதற்கும் நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழியும்போது வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ரேஷன் இருக்கிறது. அரிசிக்கு ரேஷன், மண்ணெண்ணெய்க்கு ரேஷன், சர்க்கரைக்கு ரேஷன் இருக்கிறது. இவ்வளவு பயங்கரமான, உயிர் நாடியான வாழ்வுப் பிரச்சினையின் மீது முக்கால் மணி தான் பேச வேண்டுமென்றால், நம்முடைய ஜனநாயகத்திற்கே இது ஒரு பெரிய அறைகூவல் என்று நான் சொல்லுவேன். எட்டு அம்சத் திட்டத்தைச் சொல்லும்போது, இன்றைக்கிருக்கும் பயங்கரமான நிலைமையைப் பார்க்கவேண்டும். வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்களைப் பற்றி நான் குறிப்பிடும்போது, 'குமுறும் எரிமலை மீது நின்று மகுடி வாசிக்கிறார்' என்று ஒரு காலத்தில் சொன்னதாக எனக்கு ஞாபகம். இன்றைக்குக் கோபாவேசமாக மக்கள் தான் இருக்கிறார்கள். எந்த நேரத்தில் வெடித்துவிடுமோ என்ற நிலையில் மக்கள் தான் இருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் பஞ்சம். எங்கு பார்த்தாலும் பட்டினி. சோற்றுக்கு வழி இல்லை. இன்றைக்கு நாட்டில் இருக்கும் பயங்கரமான நிலைமையை நான் சொல்லப்போனால் நாள் கணக்காக எடுத்துச் சொல்லலாம். இதைப் பற்றியெல்லாம் நான் இங்கே எடுத்துச் சொல்லும்போது, ஏதோ தேர்தல் வர இருக்கிறது, அதற்காக எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்று சொல்லி ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சுலபமாகத் தப்பித்து விடலாம். ஆனால், நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்வேன். நீரோ மன்னன் ரோம் பற்றி எரியும்போது பிடில் வாசித்துக் கொண்டிருந்த கதையைவிட இன்றைக்கு இந்த அரசாங்கம் தங்களுடைய திறமைக் குறைவினாலும், திட்டவட்டமான கொள்கை இல்லாத காரணத்தாலும் இந்த நாட்டைப் பஞ்சத்திலும் பட்டினியிலும் ஆழ்த்தியிருக்கிறார்கள்.

தஞ்சை தரணிக்கே உணவு அளிக்கிறது என்று சொல்வதுண்டு. ஆனால், அந்தத் தஞ்சை மாவட்ட மக்கள் கடந்த மாதம் க்யூ வரிசையில் காத்திருந்த நிகழ்ச்சியும், ஹர்த்தால் செய்த நிகழ்ச்சியும் எதைக் காட்டுகிறது? அதன் பொருள் என்ன? சோற்றுப்

[திரு. கே. ஏ. மதியழகன்] [8th November 1966

பானை ஊர்வலம் எல்லா ஊர்களிலும் வந்தனவே, அதற்கு என்ன அர்த்தம் ? கோவை மாவட்டத்தில் மத்திய உணவு அமைச்சர் திரு. சுப்பிரமணியம் வந்தபோது அவருக்கு எதிராகக் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடந்ததே, அது ஏன் ? நேற்றைய தினம் தமிழ் நாட்டு மக்கள் எல்லோரும் ஊர்வலமாக வந்தார்கள். இதெல்லாம் என்ன அவர்களுக்கு நிலாச் சோறு ? இதெல்லாம் சந்தோஷ மான பொழுதுபோக்கா ? இன்றைக்கும் தெளிவாகச் சொல்லு கிறேன். பார்த்தால் மிகப் பயங்கரமாக இருக்கும். பல இடங் களில் பல மாதிரியான பட்டினிச் சாவுகள், தற்கொலைகள் ஒரு கவளம் சோற்றுக்கு வழி இல்லாததால் ஏற்பட்ட நிலைமைகள். சென்னை நகரத்திலே கூட வாரத்திற்கு ஆறு நாட்களுக்கான ரேஷன் தான் கொடுக்கிறார்கள். இந்த விவாதத்தின்போது கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று நான் கருதிக்கொண்டிருந்தேன். உதாரணத்திற்கு ஒரே ஒரு நிகழ்ச்சி யைச் சொல்லுகிறேன். நேற்று முன்தினம் கீழ்ப்பாக்கம் மெடிகல் காலேஜ் மாணவ விடுதியிலே உள்ள 400 மாணவர்களும் பட்டினியிருந்தார்கள். ஒரு நாள் முழுவதும் பட்டினியாக இருந்திருக்கிறார்கள். மாணவிகளும் பட்டினியாக இருந்திருக் கிறார்கள். காரணம், அங்கு அரிசி கிடைக்கவில்லை. கேட்டால், "டி.யு.சி.எஸ். அரிசி கொடுக்கவில்லை" என்கிறார்கள். கடைசியாக, சுகாதார அமைச்சர் அவர்களிடம் முறையிட்டார்கள். அரிசி கிடைக்காத அன்று வெளியிலே அரிசி வாங்குவதற்குக்கூட அங்குள்ளவர்களிடம் பணமில்லை. பணம் இல்லாததால் வேறு வகையில் வெளியிலேயும் சாப்பிட வழி இல்லை. சர்க்கார் நடத்தும் விடுதியிலேகூடப் பஞ்சம் ஏற்பட்டது என்ற நிலை எதைக் காட்டு கிறது ? நான் சொல்வது சரிதானா என்பதற்கு வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் விசாரித்துச் சரிபார்த்துக் கொள்ளட்டும். ஒரு நாள் பூராவும் மாணவர்கள் பட்டினியாக இருந்திருக்கிறார்கள். கப் அளவு அரிசி கொடுக்கிறார்கள். மாத டிக்கட் கொடுக்கிறார் கள். இது கூட சென்னையிலே கிடையாது. இப்படியெல்லாம் பல இடங்களிலிருந்து பலவிதமான செய்திகள் வருகின்றன. கடலைப் பிண்ணாக்கு சாப்பிடுகிறார்கள். வெல்லத்தைச் சாப்பிடு கிறார்கள். உருளைக் கிழங்கைச் சாப்பிடுகிறார்கள். எங்கள் கட்சித் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பவானிசாகரிலிருந்து கோயமுத்தூருக்கு வருகிற வழியில், பாதையிலே இருந்த ஒரு குடியானவரைப் பார்த்து "உங்கள் ஊரில் அரிசி என்ன விலைக்கு விற்கிறது ?" என்று கேட்டார். அதற்கு அந்தக் குடியானவர் சொன்ன பதிலைக் கேட்டால், இந்தச் சர்க்கார் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு வேறு நிகழ்ச்சியே தேவை இல்லை. மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்று நிரூபிப்பதற்கு வேறு உதாரணமே தேவை இல்லை. அந்தக் குடியானவர் சொன்ன பதில் என்ன ? "அரிசி இருந்தால் அல்லவா உங்களுக்கு விலை என்ன என்று சொல்வதற்கு ? அரிசியைப் பார்த்தே ஆறு மாதம் ஆயிற்று" என்று அவினாசிக்குப் பக்கத்தில் இருக்கும் குடியானவர் சொன்னார் என்று அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒவ் வொரு இடத்திலும் குடியானவர்கள் விடியற்காலை மூன்று

மணிக்கே க்யூவில் நிற்கிறார்கள். திருச்சி நகரத்தில் ரேஷன் கார்டு விநியோகம் சரியாகச் செய்யப்படவில்லை என்று திருச்சி நகரக் காங்கிரஸ் கமிட்டி, கலெக்டர் அவர்களுக்கு முறையிட்டிருக்கிறது என்று தீர்மானம் வந்திருக்கிறது. பழனியில், சோளம், கம்பு விலை கிராக்கியாகியிருக்கிறது என்ற செய்திகளும் வருகின்றன. படி அரிசி பத்து ரூபாய்க்குக் கூடப் போய்விடுமோ என்று நான் சொன்னால், ரூபாய்க்கு மூன்று படி அரிசி போட்டு விடுவீர்களா? என்று கேட்கலாம். கூனூரிலிருந்து வந்த கடிதத்தை மட்டும் உங்கள் அனுமதியுடன் படிக்க விரும்புகிறேன். அந்தக் கடிதத்தில்,

'On Saturday, October 29, a quene was formed outside my ration shop in Coonoor. So many people were waiting for their meagre rations that the last person was served after 11-30 p.m. On Sunday (October 30) morning in Coonoor market a merchant called stealthily on my friend asking if he wanted rice and saying that it could be supplied in unlimited quantities!

'This blackmarketeer held in his hand three types of rice, one identical to the ration rice. This was sold at 88 Paise per kilo in the ration depot and the merchant offered it at Rs. 3 per kilo,

கூனூரிலிருந்து ஒருவர் எவ்வளவு கோபமாக எழுதியிருக்கிற கடிதம் இது என்பதைக் கவனிக்கவேண்டும். (கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் ஒரிஜினல் கடிதத்தைப் படிப்பதாகத் தெரியவில்லை. இவர் எழுதி வைத்துக் கொண்டுள்ள குறிப்பைப் படிப்பதாகத் தெரிகிறது.) கடிதத்தைத் தொடர்ந்து படிக்கின்றேன்—

'Then there were two better qualities. These were offered at Rs. 4 and Rs. 5 per kilo''.

MR. DEPUTY SPEAKER: Will the hon. Member place the letter on the table of the House?

SRI K. A. MATHIALAGAN: Sir, with your permission I am reading the letter.

MR. DEPUTY SPEAKER: If the hon. Member is not prepared to place it on the table of the House, I do not think it is proper to read it.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே படி அரிசி விலை நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்ற அளவிற்கு நாட்டில் இருக்கும்போது, நான் எனக்கு எங்களுடைய கட்சிக்காரரிடமிருந்து வந்த இரகசியக் கடிதத்தைப் படிப்பதாக நினைத்துக்கொண்டு கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்லுகிறார். உணவுப் பிரச்சினை எவ்வளவு பயங்கரமானது? இது வேடிக்கைக்கு உரிய விஷயமா? உணவு விலை இந்த அளவிற்கு உயர்ந்திருப்பது எவ்வளவு அவமானப்படவேண்டிய விஷயம்? எவ்வளவு தலைகுனிவுக்கான விஷயம்? நான் எவ்வளவு முக்கியமான விஷயத்தைச் சொல்லுகிறேன்? கனம் அமைச்சர் அவர்கள் சட்ட நுணுக்கத்தைக் கிளப்புகிறார். கூனூரில் ஐந்து ரூபாய்க்கும்,

நான்கு ரூபாய்க்கும் படி அரிசி விற்கிறது என்றால், இங்கேயும் ஏமாற்றிக்கொண்டு, வெளியிலேயும் பேசிக்கொண்டு நாட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். இதற்குப் பரிகாரம் கேட்டால், இதில் என்ன சட்டப் பிரச்சினையைக் கனம் அமைச்சர் சொல்லப் போகிறார்?

1-30 p.m. கனம் திரு. பூ. கக்கன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் முதலில் 'தமக்கு எழுதியுள்ள கடிதத்தை வாசிக்கிறேன்' என்று சொன்னார்கள். அது கடிதம் இல்லை. எங்கிருந்தோ அவர் எழுதிக்கொண்டு வந்த வாசிக்கிறார் என்று தான் நான் சொன்னேன். மன்றத்தில் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன்: மக்களுக்கு நன்றாகத் தெரியும். இது மெயில் பத்திரிகையில் வந்துள்ள கடிதம் தான். எல்லோரும் படித்தும் பார்த்திருப்பார்கள். இப்படி விஷம்போல விலைவாசி ஏறிக்கொண்டு போவதை காமதேனு தடுக்காது. சர்க்காருடைய அடிப்படைக் கொள்கையே இத்தகைய கள்ளமார்க்கெட் வர்த்தகத்தை வளர்த்து, மக்களைப் பசியிலும், பட்டினியிலும் போட்டுக் கொல்லுகிறது. திங்கட் கிழமை என்றால் சோமவாரம் பட்டினி—இது சாஸ்திரி விரதம், வியாழக்கிழமை என்றால்—அன்று பட்டினி—இது பக்தவத்சலம் விரதம். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீங்கள் வேண்டுமானால் வெளியூரில் இருந்து வருகிறீர்கள், உங்களுக்குத் தெரியாது. சென்னையில் வாரத்திற்கும் நாள் பட்டினி. ஒரு ஊரில் 3 குழந்தைகள் பட்டினியால் இறந்திருக்கின்றன. உண்மையை அவர்கள் எங்கே உணர்கிறார்கள்? அசிங்கமான புண்ணுக்குப் புனுகு தடவி மறைக்கப் பார்க்கிறார்கள். பதினெட்டு ஆண்டுகளாக எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டு விட்டோம் என்கிறார்களே, உற்பத்தித் திறனைப் பெருக்கினார்களா? மக்களுடைய அடிப்படைத் தேவையான குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்தார்களா? அந்நிய நாட்டில் இருந்து ஆயிரக் கணக்கான கோடி ரூபாய் கடன் வாங்கி வாரி இறைத்துவிட்டு, இன்றைக்கு 'பவதி பிட்சாம் தேஹி' என்பதாக கையில் மந்திரி சுப்பிரமணியம் ஓடு எடுத்துக்கொண்டு ஓடுகிறார். இதைவிட சொரணை கெட்ட தன்மை வேறு என்ன வேண்டும்—

கனம் உதவி சபாநாயகர்: 'சுரணைகெட்ட தன்மை' என்பது பார்லிமெண்டரி வார்த்தை அல்ல.

திரு. கே. ஏ. மதியழகன்: இவர்களிடத்தில் திட்டவட்டமான கொள்கைகள் என்ன இருக்கின்றன? அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஊருக்குப் பத்து நாட்களுக்கு முன் போய் இருந்தேன். தண்ணீருக்கு கூட்டம் தாங்கவில்லை. சினிமாவுக்குக் க்யூ நிற்பதுபோல தண்ணீர் குடங்களை வரிசையாக வைத்துவிட்டு நிற்கிறார்கள். இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் மக்களுக்கு குடிக்க தண்ணீர் வசதியையாவது செய்து கொடுத்தார்களா? திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் நாங்கள் பூதான யக்ஞத்திற்கு இருபதாயிரம், முப்பதாயிரம் ஏக்கராவுக்கு மேல் வாங்கி

8th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

யிருக்கிறோம், உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் ஐந்தாயிரம் ஏக்கரா கூட வாங்கவில்லை என்று சொன்னாரே, இதைவிட இவர்கள் வெட்கப்படக் கூடிய விமர்சனம் வேறு வேண்டுமா ? உழுகிறவனுக்கு எங்கே நிலம் கொடுத்தார்கள் ? உற்பத்தியாகவில்லை என்றால் எப்படி ஆகும் ? வடபாதி மங்கலம் வீட்டுக்குப் போனார்களா ? குன்னியூர் சாம்பசிவ ஐயரைக் கேட்டார்களா ? செங்கல்பட்டு பூந்தமல்லி பக்கத்தில் திரும்பிப் பார்த்தார்களா ? அவர்களுக்கு இவர்கள் தானே இன்றைக்கு பாதுகாவலர்கள். இவர்களால் எப்படி நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் அளிக்க முடியும் ? நான் நேற்றே சொன்னேன். ஒரு சிலரை இவர்கள் சிருஷ்டித்துக் கொண்டு மக்களை இருமுனைத்தாக்குதல் செய்கிறார்கள். இன்றைக்கு திரு. பக்தவத்சலம் ஆட்சியில் வரி எப்படி எப்படி எல்லாம் வளர்ந்திருக்கிறது ? வெள்ளைக்காரன், பரங்கிக்காரன் கூட இவ்வளவு வரி போட்டது கிடையாது. 70 கோடி ரூபாய் திரு. பக்தவத்சலம் ஆட்சியில் மட்டும் வரியாகப் போடப்பட்டு இருக்கிறது. மக்கள் எப்படி வாழ்வார்கள் ? கோவையில் முதலாளிகளைத் தொட்டார்களா ? சென்னையில் இருக்கிற பெரிய பெரிய தொழில் அதிபர்களை நெருக்கினார்களா ? இந்த 70 லட்சம் ரூபாயையும் சாதாரண எளிய ஏழை மக்களை உருக்குலைத்துத் தானே வசூல் செய்கிறார்கள் ? இதற்கு என்ன பொருள் ? ஒரு வேளை சோற்றுக்கு அரை அவுன்ஸ் அரிசியையாவது நல்லதாகக் கொடுக்க முடிந்ததா ? இல்லை, இல்லை என்று சொல்லாமல் தர முடிந்ததா ? இன்றைக்கு உணவு இலாக்கா காரியதரிசி நம்பியார் உணவு மந்திரியாகி விட்டார். உணவு மந்திரி உணவு இலாகா காரியதரிசியாக மாறிவிட்டார்.

கனம் உதவி சபாநாயகர் : அங்கத்தினர் அதிகாரிகளின் பெயரைச் சுட்டிச் சொல்லக்கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன் : இவர் வேலையை அவர் செய்கிறார் என்று சொன்னேன், ஒரு நாளைக்கு நான்கு அறிக்கைகள் ; என்ன பயன் ? சோஷலிச ஜனநாயகம் பற்றி கதாகாலட்சேபம் செய்கிறார்கள் ; இன்றைக்கு நீலகிரியிலே கிலோ ஐந்து ரூபாய்க்கு அரிசி விலை ஏறியிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கனம் அங்கத்தினர் நீலகிரியில் நிலவும் உண்மை நிலைக்குப் புறம்பாக இங்கே எடுத்துச் சொல்வது சரியாகுமா ? அந்தமாதிரியான நிலைமை அங்கே இல்லை.

கனம் உதவி சபாநாயகர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இவர்களால் நிலச்சீர்திருத்தம் சரியாகச் செய்ய முடிந்ததா ? இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கிற அவல நிலைகளுக்கு எல்லாம் காரணம் இவர்களுடைய அடிப்படைக் கொள்கை தான். சாகுபடியாளர் மசோதா கொண்டு வந்தார்களே அது சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்ததா ? மிராசுதார்

களின் பாதுகாப்பு மசோதாவாக ஏன் இன்றைக்கு அது விளங்கிக் கொண்டிருக்கிறது? இந்த பதினெட்டு, இருபது வருஷங்களில் என்ன சாதித்தார்கள்? சொன்னால் கோபம் வருகிறதே தவிர, நாட்டில் இன்றைய தினம் தலைவிரித்துத் தாண்டவமாடும் பசிப் பிணியைப் போக்க, பட்டினிப் பிணியைப் போக்க உருவான முறையில் எங்கே செயல்படுகிறார்கள்? கள்ளமார்க்கெட்காரர் களுக்கு இவர்கள் தானே துணையாக இருக்கிறார்கள்? மிக்சட் எக்கானமி என்பதாக—இவர்களுடைய பொருளாதார அடிப்படை பிரச்சினையில் உள்ள கோளாறுகள் தானே எல்லாப் பண்டங்களின் விலையும் விஷம்போல ஏறியிருப்பதற்குக் காரணம்? திட்டமிட்ட பொருளாதாரம், திட்டமிட்ட பொருளாதாரம் என்று சொல்வதன் காரணம் தானே மக்களை இந்த நிலைக்கு இழுத்து வந்திருக்கிறது? இத்தனை இன்னல்களும் இவர்களது கொள்கைப் பட்டறையில் உருவாக்கப்பட்டுத்தானே வருகின்றன? இதை ஒரு க்ஷேம நல சர்க்கார் என்று எப்படிக் கூற முடியும்? இது பட்டினி சர்க்கார், பஞ்ச சர்க்கார். வேலையில்லாத் திண்டாட்ட சர்க்கார், $3\frac{1}{2}$ கோடி மக்களை, எல்லாவற்றையும் விளையாட்டுத்தனமாகச் செய்து, உருக் குலைத்து வருகின்ற சர்க்கார். வேறு எப்படிச் சொல்வது? விலை வாசியை காமதேனு கட்டுப்படுத்துமா? இன்றைக்குக் கேரளாவில் அத்தனை பேர்களுக்கும் 6 அவுன்சு அரிசியாவது போடுகிறார்களே. நம்முடைய $3\frac{1}{2}$ கோடி மக்களில் ஸ்டாச்சுட்டரி ரேஷன், இன் பார்மல் ரேஷன் என்ற அடிப்படையில் ஒரு கோடி பேர்களுக்காவது வகையாக இவர்கள் அரிசி போடுகிறார்களா? பாக்கியுள்ள அத்தனை பேர்களையும் கள்ளமார்க்கெட் சூதாடிகளின் கையில் தானே ஒப்படைத்து விட்டார்கள்? இரக்கமற்ற ரைஸ்மில்காரர்களிடம் தானே விட்டு வைத்திருக்கிறார்கள். இவர்கள் இந்த மன்றத்தில் வேண்டுமானால் சமாதானம் சொல்லலாம். வெளியில் உள்ள மக்கள் இனியும் இவர்களது கொடுமையைச் சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். மக்கள் மன்றத்தில் இவர்களுக்குரிய தண்டனையை இவர்கள் பெற்றே தீருவார்கள் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவி தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்திருக்க கூடியதில் பல அம்சங்களை அடக்கியிருக்கிற தீர்மானமாகக் கொண் வந்திருக்கிறார்கள். ஒன்றிற்கொன்று அவை முரணான தீர்மானமும் கூட. கனம் அங்கத்தினர் அவர்களும், அவர்களைச் சார்ந்த கட்சி யினருடைய பரம்பரையாக வலியுறுத்தி வந்திருக்கக்கூடிய கொள் கைகள் நடைமுறைகள் இவற்றையெல்லாம் நீண்ட நெடுங்காலமாக யோசித்துப் பார்க்ககூடியவர்கள் புரிந்துகொள்வார்கள். இந்தச் சட்டசபை முடிகிற இந்தத் தருணத்திலேனும் பிராயச் சித்தம் செய்வது போல் அவர்கள் இந்த நாட்டிலுள்ள கோடான கோடி மக்களுக்குப் பிரதிபலிப்பப் போல் வார்த்தை அளவிலே அதை முடிந்துவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

8th November 1966] *[திரு. எம். எஸ். செல்வராஜன்]*

நாங்கள் சார்ந்திருக்கிற கட்சியினர் சொல்லியதை எதைச் செய்யாமல் விட்டிருக்கிறோம் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்த நாட்டினுடைய நில உடைமை ஒரு சிலருடைய கையிலேயே அடங்கியிருக்கக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு ஒருவர் பல ஆயிரம் ஏக்கர்களுக்குச் சொந்தமாக இருக்கிற நிலையில்லாமல் பாடுபட்டவனுக்கு, பாட்டாளிக்குத்தான் நிலம் சொந்தம் என்ற நல்ல எண்ணம் கொண்டு அப்பொழுதிருந்த 566 சமஸ்தானாதிபதிகளை இருந்த இடம் தெரியாமல் சாதாரண மனிதர்களாக ஆக்கிவிட்டிருக்கிறோம். இந்த நாட்டில் சமஸ்தானங்கள் மறைந்துபோனாலும்கூட ஜமீன்கள் இருந்தார்கள், அவர்களுக்கு நிலத்தின்மீது இருந்த தனி உரிமைகளும், பிடிப்பும் நாட்டு மக்கள் பட்ட பாட்டுக்குத் தகுந்த பலன் கிடைக்காமல் செய்வதைக் கண்டுதான் ஜமீன் ஒழிப்புச் சட்டம் இந்த அரசால் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் இயற்றப்பட்டபொழுது தனக்குச் சொந்தமான குமாரமங்கலம் ஜமீனுக்குச் சொந்தமாக இருந்தவரான காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்களையே அந்த ஜமீன் ஒழிப்புக் கமிட்டியின் தலைவராகப் போட்டு, அவருடைய கையெழுத்திட்டே ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றி தன்னுடைய சொந்த நிலத்தையே அதன் மூலம் விட்டுக் கொடுக்கச் செய்த பெருமை, அவர் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் உண்டு. பல ஆண்டுகளுக்கு முன் திரு. மதியழகன் அவர்கள் சார்ந்திருந்த குழுவினர், தனிமனிதனுக்கே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்க வேண்டுமென்ற முறையிலே அதற்கு ஆதரவாகக் கூறிக்கொண்டிருந்த ஜரிகைத் தலைப்பாகைகள்தான், அவர்களும் அப்பொழுது வாழ்த்திக் கொண்டிருந்தார்கள் என்பதுதான் அவர்களுடைய சரித்திரம். அதற்கு இப்பொழுது பிராய சித்தம் செய்வதுபோல் கடைசி நோக்கில், ஓங்கிச் சொல்வதின் மூலம் உள்ளக்கிடக்கை பிரதிபலிப்பாகிவிடும் என்று சொல்லிவிடமுடியாது, இப்படிப் பட்ட தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தில் அவர்கள் வலியுறுத்தியிருக்கக் கூடியவற்றில் முதலாவதான அம்சம் உழுபவனுக்கே நிலம் சொந்தமாகவேண்டுமென்ற முறையிலே சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த பத்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 1½ டஜன் சட்டங்கள் நிலத்திலே தனி உடைமை மாறக்கூடிய வகையிலே மட்டுமல்ல, நிலத்திலே உழைப்பவனுக்கு தகுந்த பலன் கிட்ட வேண்டும், உழுபவனுக்கு நிலம் சொந்தமாகவேண்டுமென்ற வகையிலே, உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற கருத்துடன் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதை அவர் மறந்துவிட்டாரா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த ராஜ்ய அரசாங்கம் பெருமிதத்தோடு நிறைவேற்றியிருக்கக்கூடியதைத் தவிர இன்னும் எதை நிறைவேற்றவேண்டுமென்று கூறுகிறார்கள்? இன்றைய தினம் எத்தனை அஸ்திவார பலத்தோடு, செய்யக் கூடியதை 'சரியாக, செம்மையாகச் செய்யவேண்டுமென்ற நல்ல

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [8th November 1966

எண்ணம் கொண்டு அவர்களுடைய உரிமை மாறக்கூடிய அளவுக்கு ரத்தம் சிந்தாத முறையிலே இத்தனை சட்டங்கள் கொண்டுவந்திருக்கிருர்கள் என்பதை மறந்து விட்டுத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார் என்று நினைக்கிறேன். விறுவிறுப்போடு கடுகடுப்போடு சொன்னுர்கள். தீவிரமான விலைக்கட்டுப்பாடு அரசாங்க உதவித் தொகை மூலம் பங்கீட்டுக் கட்டுப்பாட்டு உணவுத் தானியங்களின் விலையைக் குறைத்தல் என்று அவர்கள் கொடுத்த வாசகத்தில் இருக்கிறது. கடந்துபோன கண்கலங்கிய காலம் நம் நினைவுக்கு வருகிறது. நம்மை ஆண்டுகொண்டிருந்த அன்னியன் இந்த நாட்டைவிட்டுச் சென்றபோது ஏறக்குறைய 3½ கோடி மக்கள் குறிப்பாக சென்னையில் அதிகமாக பட்டினியால் மாள்வார்கள் என்ற நிலை இருந்தபொழுது, அந்த ஜாதகம் பொய்க்கக்கூடிய அளவுக்கு சுதந்திர நாட்டிலே பசியால் உழைக்கக்கூடிய ஒருவன் மாள்வதற்கு விடமாட்டோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு கடந்த 19 ஆண்டுக் காலமாக அதைப் பாதுகாத்துக்கொண்டு வருகிற பாரம்பரை என்று சொல்லிக் கொள்கிற பெருமை எங்களுக்கு உண்டு.

1946-லே, 1947-லே கடுமையான ரேஷன் பங்கீட்டு முறை இருந்தது, கார்டு ஒன்றுக்கு துணி கிடைப்பது கஷ்டம், காடா துணிக்கு கையேந்தி நிற்கின்ற காலமாக அது இருந்தது. 4 அவுன்ஸ் 6 அவுன்ஸ் என்று உணவுக்காகக் கஷ்டப்பட்ட காலம் நினைவுக்கு வரக்கூடிய நிலைமை அவர்களுடைய மனத்தின் முன் நிறுத்தப்படுமானல் கடினமான ரேஷன் முறை வரவேண்டுமென்று சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஜனத் திரள் அதிகமாக இருக்கக்கூடிய நகரப் பகுதிகளுக்கு ரேஷன் முறையிலே, அவர்கள் வெளியிலே பெறக்கூடிய சந்தர்ப்பம் இருந்தாலும்கூட, நல்ல வகையில் உணவு தானியங்கள் கிடைக்கின்ற அளவுக்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கும் கடினமான ரேஷன் முறை வேண்டும் என்று திரு. மதியழகன் அவர்கள் விரும்புகிருர்களா? அதனுடைய விளைவு எங்கே கொண்டுபோய் விடும் என்பதைப் பார்க்கவேண்டும். எதிர்க்கட்சியினர் சட்டசபையில் தெரிவிக்காவிட்டாலும், வெளியே கூறிக் கொண்டிருக்கின்றுர்கள், அது மிகவும் முக்கியமான ஒன்று, சாதாரண மக்களுக்கு விளம்பரம் செய்வதுபோல், மாயமால ஜாலம் போல், ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம் என்று பேசி வருகிருர்கள். ஏழைகளுக்கு இவர்கள் சொல்வது வாய்க்கு இனிப்பப் போன்று, விளம்பரம் செய்வதற்குத்தான் பயன்படுமே தவிர வேறு எதற்கும் பயன்படாது. விவசாய மகனுக்கு பல்வேறு அம்சங்களிலே செலவினங்கள் இருக்கும்போது உழைப்பவனுக்குத் தகுந்த ஊதியமும், பட்ட பாட்டுக்குத் தகுந்த பலனும் நிச்சயமாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்தி வருகின்ற அதே நோத்திலே ஊரிலே உணவுப் பங்கீடு கடினமான ரேஷன் மூலம் செய்ய வேண்டும், எவ்வளவு கடினமாகக் கொள்முதல் செய்யவேண்டுமோ அத்தனையும் கொள்முதல் செய்யவேண்டும், அரசாங்கம் முழுப் பொறுப்பையும் எடுத்துக்கொண்டு விநியோகம் செய்யவேண்டும்

8th November 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

என்று சொல்கிறார்கள். இந்த ராஜ்யத்திலே 3½ கோடி மக்கள் முழுமைக்கும் கடினமான ரேஷன் முறை வேண்டுமென்று விரும்புகிறார்களா? நான் குறிப்பிட விரும்புவது, சென்னை போன்ற நகரப் பகுதிகளிலே ஒரு படி அரிசி இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கக்கூடிய நிலைமை வருமானால் அதிலே சப்ஸிடி கொடுத்து ஏன் நிவர்த்தி செய்யக் கூடாது என்று கேட்டார்கள். இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கிற அரிசி ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது என்று சொன்னால் கூட இங்கே 70 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன, ஒரு குடும்பத்திற்கு ஒரு படி என்ற கணக்கில் ஒரு ரூபாய் வீதம் சப்ஸிடி கொடுத்தால் கூட தினம் ஒன்றுக்கு 75 லட்சம் ரூபாய் வரை வேண்டுமே? வருஷம் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் வரை மானியம் கொடுக்கவேண்டியிருக்கும். இந்தமாதிரிப் புள்ளிவிவரங்களையெல்லாம் போட்டுப் பார்த்துத்தான் அவர்கள் பேசுகிறார்களா? நடக்க முடியாத காரியங்களைச் செய்யலாம் என்று சொல்லிக் கொண்டு, நுகர முடியாத பூக்களை வைத்துக் கொண்டு அந்தப் பூக்களை எல்லாம் சேர்த்துக் கட்டி பார்ப்பதற்கு அலங்காரமாக இருப்பது போன்ற நிலைமை தான் இவர்கள் கூறுவதிலும் இருக்கிறது. இந்த ராஜ்யத்திலே 2½ லட்சம் பம்பு செட்டுகள் போடப்பட்டிருக்கின்றன, அவை வீணாகிவிடவில்லை.

நூற்று நாலு கோடி ரூபாய் அளவுக்கு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றியிருப்பதன் பலனை அனுபவித்து வருகிறோம். பத்து வருஷத்திற்கு முன்பு விளைச்சல் 36 லட்சம் டன்னாக இருந்தது இன்று ஏறக்குறைய இரண்டு மடங்கு பெருகி இருக்கிறது. வருஷம் ஒன்றுக்கு ஆஸ்திரேலியாகக் கண்டத்து ஜனத்தொகை அளவு பெருகுவதன் காரணமாக தினம் ஒன்றுக்கு நான்கணா வருவாய் வளருவதாக இருந்தால் கூட 12½ கோடி ரூபாய் அளவுக்கு வளர வேண்டும். முடிந்த அளவு அரசாங்கம் சீராகக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. இன்றைய நிலையில் அரசாங்கம் கொள்முதல் செய்வது சரியே. இந்த நிலையில் இத்தகைய தீர்மானத்திற்கு வழி இல்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் எப்படியாவது இந்தத் தீர்மானத்தை . .

திரு. க. ர. நல்லசிவம்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உணவு நிலைமைகளைப்பற்றி, உணவுப் பிரச்சினையைப் பற்றி திரு. மதியழகன் அவர்களுடைய தீர்மானத்தை விவாதிக்கும்போது பேசிக்கொள்ளலாம் என்று பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் சொல்லப்பட்டது. ஆனால் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்த விஷயத்தில் கஞ்சத்தனம் காட்ட வேண்டாம் . ,

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இது 'நான்-அபிஷியல் பிசினஸ்' உணவுப் பிரச்சினை முக்கியமா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அன்று இரண்டு மணி நேரம் விடப்பட்டிருந்தது, அதனால் இன்று அந்த இரண்டு மணி

[திரு. எம். பக்தவத்சலம்] [8th November 1966

நேரத்தை இதை விவாதிப்பதற்காக வைத்துக் கொண்டோம். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் கூட நான் இதற்கு எதிர்ப்பாக இருக்கிறேன் என்று சொன்னார்கள். இருக்கிற நேரத்திற்குள் பேச வேண்டும், அவ்வளவு தான். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் எப்படியாவது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மிகக் கவலையோடு இருந்தார்கள். கனம் மதியழகன் அவர்கள் இவ்வளவு ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்களே, அவர்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும், அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இன்று வைத்துக் கொள்ளலாம் என்ற மன இரக்கத்தோடு சொன்னேன். 'நான்-அபிஷியல் டே'ல் வரம்பு கிடையாது. பேசச் சந்தர்ப்பம் இருக்க வேண்டும், வேறு இல்லை. அவர்கள் எப்போதும் பேசுவது மாதிரித் தான் பேசினார்கள். அவர்கள் பேச வேண்டுமென்பதற்காகத்தான் தீர்மானம். தீர்மானம் முரண்பாடாக இருக்கிறது. அதிலே, ஹோல்சேல் ஸ்டேட் டிரேடிங் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. அதோடு குறைந்த நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டுமென்றும் இருக்கிறது. என்ன விலைக்கு விற்கலாம் என்று ஸ்டேட் டிரேடிங் வைத்து விட்டு, குறைந்த நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டு மென்று சொன்னால் இரண்டுக்கும் இடையே முரண்பாடு இருக்கிறது. இதை எற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கத்தைப் பொருத்தமட்டில் நிலைமையை எந்த வகையில் சமாளிக்க வேண்டுமோ அந்த வகையில் சமாளித்து வருகிறோம். சென்னை நகரத்தில் ஸ்டாச்சுடரி ரேஷன் இருக்கிறது. சென்னை நகரத்தில் வாரத்திற்கு 14,000 டன் அரிசி கொடுக்கிறோம். எவ்வளவோ தொல்லைகள். மேட்டூரில் தண்ணீர் இல்லை . . .

திரு. க. ர. நல்லசிவம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் பேசும்போது என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? நான் திரு. நல்லசிவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?

திரு. க. ர. நல்லசிவம் : இந்தத் தீர்மானத்திலே பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்குமென்று பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே சொல்லப்பட்டது. ஆனால் எனக்குப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைத்தான் முதலிலேயே சொல்லிவிட்டார்கள், திரும்பவும் . . .

திரு. க. ர. நல்லசிவம் : நான் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : I have not called the hon. Member to speak.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உணவுப் பிரச்சினையைப்பற்றிப் பேச கனம் அங்கத்தினர் தனியாக வாய்ப்புக் கேட்டிருக்கலாம். 'நான் அபிஷியல்டே'க்கு இருப்பது இரண்டு மணி தான். கனம் அங்கத்தினர் அவர்கள் நாளைக்குக் கூடப் பேசலாம்.

8th November 1966]

திரு. க. ர. நல்லசிவம் : உணவுப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

கனம் உதவி சபாநாயகர் : கனம் அங்கத்தினர் உணவுப் பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டுமென்றால் நாளைக்கு கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து கொண்டு வருகிற தீர்மானத்தின் மீது பேசலாம். அந்தச் சமயத்தில் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லாம். ஆகையால், இப்போது கனம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மேட்டூரில் தண்ணீர் வர 40 நாள் தாமதமாயிற்று. அதனால் தொல்லை ஏற்பட்டது. இருந்தாலும் எப்படியோ சமாளித்து, சென்னை நகரத்தில் வாரத்திற்கு 14,000 டன் அரிசி கொடுத்துக் கொண்டு வருகிறோம். மற்ற இடங்களிலும் கொடுக்கிறோம். காவேரியில் தண்ணீர் வராத காரணத்தால் சிலர் அப்படியே தாங்களே வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் தொல்லையையும் சமாளித்தோம். அதற்குப் பிறகு அதிக மழை பெய்தது. உடனடியாக நெல்லைக் குத்திக் கொண்டு வரமுடியவில்லை. அதையும் சமாளித்தோம். பிறகு புயல் காற்று வந்தது. அரிசி ஏற்றிக் கொண்டு வந்த லாரிகள் சென்னை வந்து சேர முடியவில்லை. அந்த நிலையில் எங்கோ வாங்கி, கடன் வாங்கி, ராணுவத்தினரிடமிருந்து கூட வாங்கி விநியோகித்தோம். கொஞ்சம் கூடத் தடை இருக்கக் கூடாது என்ற முறையில் விநியோகித்துக் கொண்டு வருகிறோம். இன்று காலையில் திரு. சா. கணேசன் அவர்கள் ஒரு பொட்டலத்தை கொடுத்தார்கள். இத்தனை தொல்லைகளையும் நாங்கள் சமாளித்து வருகிறோம். இது சில்லரை வியாபாரிகளுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. சில பேர் கனம் அங்கத்தினர் போன்றவர்களை அழைத்து நாற்றமுள்ள அரிசியை, இல்லாத அரிசியைக் கொடுக்கிறார்கள். எந்தக் கடையில் விற்கப்படுகிறது என்று சொன்னால் அங்கு சென்று பார்க்கலாம். விலை ஏறிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது விலை இறங்குகிறது. மழை பெய்து விட்ட பிறகு விலை இறங்குகிறது. சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று மதுரையில் இருந்தபோது, காரைக்குடியில் அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலையை விடக் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். கம்ப்ளீட் ரேஷனிங் என்று சொல்லிவிட்டால் அதிகத் தொல்லை ஏற்படும், வேறு எங்கும் வாங்க முடியாது. ஆகவே, சென்னை நகரம், கோவை நகரம் இரண்டில் மட்டும் ஸ்டாச்சுடரி ரேஷனிங் வைத்திருக்கிறோம். மற்ற இடங்களில் எல்லாம் இன்ஃபார்மல் ரேஷனிங்தான். விலையும் குறைந்து வருகிறது. மழை பெய்வதற்கு முன்பு இருந்த நிலை இப்போது இல்லையென்று சொல்லலாம். விலை மேலும் குறையத்தான் வேண்டும். ஆனால் ரூபாய்க்கு மூன்று படி அரிசி போட முடியாது. அவ்வாறு போடலாம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நினைக்கிறார்கள். அவ்வாறு போட்டு விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்றால் ஆண்டுதோறும் 250 கோடி ரூபாய் அரசாங்கத்திற்குச்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th November 1966

செலவாகும். சரிக்கட்டலாம் என்று சொல்லலாம். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் சரிக்கட்டிக் கொள்ளலாம். இப்போது இருக்கும் நிலைமையில் பொறுப்போடு பிரச்னைகளைப் பரிசிலிக்க வேண்டியிருக்கிறது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய அளவுக்கு உணவு தான்யங்களை விநியோகிக்க வேண்டுமென்ற வகையில் விநியோகிக்கிறோம். அரிசி உற்பத்தி, உணவு தானிய உற்பத்தி பெருகிக் கொண்டே வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு உற்பத்தி அளவு 38 லட்சம் டன், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு 53 லட்சம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு உற்பத்தி அளவு 60 லட்சம் டன். மேலும் அபிவிருத்தி அடைந்து கொண்டே வருகிறது. கன்சம்ப்ஷனும் அதிகப்பட்டு வருகிறது. அப்படியிருந்தாலும் விலையேறுவதை ஓரளவு தவிர்க்க வேண்டும். விலை ஏற எவ்வளவோ காரணங்கள் உண்டு. மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற வகையில்தான் தொழிலாளர்களுக்கு கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்ஸ் வைத்து அவசியமான பண்டங்களை விநியோகிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. அந்த மாதிரி தொடர்ந்து உணவு நிலைமையைச் சமாளித்து வருகிறோம். இப்போது நிலைமை சீராகிவிட்டது என்று சொல்வதற்கில்லை; திருப்திகரமாக இருக்கிறதென்று சொல்வதற்கில்லை. கூடிய வரை சமாளித்து, ஒரு மனிதன் கூட உணவு இல்லாமல் பட்டினி கிடக்கிறான் என்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொண்டு வருகிறோம். திடீரென்று எதிர்பாராத வகையில் வந்தது புயல். அப்படி
2-00 p-m. புயல் அடித்ததால் லாரிகள் வர முடியவில்லை. சென்னை நகரில் நெல் விளைவதில்லை. வெளியிலிருந்துதான் வரவேண்டும். அதில் தாமதமாகிறது. அப்படியிருந்தும் சமாளித்து வருகிறோம். விலையை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ அதைச் செய்ய, அதற்காகத் தான் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது. இன்று கொள்முதல் செய்கிற கொள்கையே ஸ்டேட் ட்ரேடிங்கை ஒட்டியதுதான். முழுமையும் எடுத்துக் கொள்ளவில்லை. சுமாராகப் பார்த்தால் ஐந்தில் ஒரு பகுதி தான் நாம் கொள்முதல் செய்கிறோம். கொள்முதல் செய்து வாங்குகிறோம். அதல்லாமல் மார்க்கெட்டிலும் வருகிறது. விலையைக் குறைத்து விற்கும்போது சில சாமான்கள் தானாகவே குறைகிறது. மழை பெய்து நன்கு விளைந்து விட்டது என்றால் குறைகிறது. இன்றைய நிலை நல்ல மழை பெய்திருக்கிறது, நல்ல விளைச்சல் இருக்கிறது, உற்பத்தி பெருகுகிறது. ஆகவே, இந்த மாநில மக்களுக்கு வேண்டிய உணவு தான்யம் இந்த மாநிலத்தில் உற்பத்தியாகிறது, அதைச் சீராக விநியோகிப்பதில் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று கூறி இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர்: அடுத்த நான்-அஃபிஷியல் டே அன்று நேரம் இருந்தால் இதைத் தொடர்ந்து விவாதிக்கலாம்.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

2-02 m. The House then adjourned.

IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules and Orders.

* 250. *Notification issued with G.O. Ms. No.* 367, *Education, dated the* 15th *March* 1966, *approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of Coonoor Municipal Council.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-helds and Open Spaces (Preservation and Regulation) Act,* 1959 (*Madras Act* 26 *of* 1959).]

* 251. *Notification issued with G.O. Ms. No.* 2062, *Public (Tamil Development I), dated the* 28*th September* 1966, *directing that with effect on and from the first day of October* 1966 *Tamil shall be used in respect of all Official Communication from the Government offices sanctioned under the Rural Industries Project Programme specified in the notification.* [*Laid on the Table of the House under section* 6 *of the Madras Official Language Act,* 1956 (*Madras Act XXXIX of* 1956).]

* 252. *Notification issued with G.O. Ms. No.* 2632, *Home, dated the* 6*th August* 1966, *making an amendment regarding the appointment of Rent Controllers for the purpose of the Madras Buildings (Lease and Rent Control) Act,* 1960. [*Laid on the Table of the House under section* 34 (4) *of the Madras Buildings (Lease and Rent Control) Act,* 1960 (*Madras Act* 18 *of* 1960).]

*253. *Notification issued with G.O. R. No.* 1575, *Revenue, dated the* 24*th October* 1966, *regarding exemption from the liabilities to entertainment tax granted to the benefit film shows, conducted in the City of Madras and in the districts in connection with Flag Day Celebration in December* 1966, *in aid of the Flag Day Fund.* [*Laid on the Table of the House under section* 16 (4) *of the Madras Entertainments Tax Act,* 1939 (*Madras Act X of* 1939).]

*254. *Notification issued with G.O. Ms. No.* 3141, *Home, dated the* 19*th September* 1966, *making an amendment to rule* 14 *of the Madras Home Guard Rules,* 1963 *published with Home Department Notification S.R.O. No. A*-421 *of* 1963, *dated the* 6*th April* 1963, *at pages* 433–438 *of Part V of the* Fort St. George Gazette, *dated the* 17*th April* 1963, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 15 (4) *of the Madras Home Guard Act,* 1963 (*Madras Act* 3 *of* 1963).]

*255. *Notification issued with G.O. Ms. No.* 2993, *Home, dated the* 6*th September* 1966, *making an amendment to rule* 12 *of the Madras Home Guard Rules,* 1963, *published with Home Department Notification S.R.O. No. A*-421 *of* 1963, *dated the* 6*th April* 1963 *at pages* 433–438 *of Part V of the* Fort St. George Gazette, *dated the* 17*th April* 1963 *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 15 (4) *of the Madras Home Guard Act,* 1963 (*Madras Act* 3 *of* 1963).]

[8th November 1966

* 256. *Notification issued with G.O. Ms. No.* 2816, *Revenue, dated the* 14*th September* 1966, *making an amendment to the Madras (Transferred Territory) Ryotwari Settlement Rules*, 1965, *published with the Revenue Department Notification S.R.O. No. A*-315 *of* 1965, *dated the* 15*th March* 1965, *at pages* 338–342 *of Part V of the* Fort St. George Gazette, *dated the* 17*th March* 1965. [*Laid on the Table of the House under section* 26 (2) *of the Madras (Transferred Territory) Ryotwari Settlement Act*, 1964 (*Madras Act* 30 *of* 1964).]

* 257. *Notification issued with G.O. Ms. No.* 2084, *Rural Development and Local Administration, dated the* 30*th August* 1966, *exempting certain categories of public buildings specified in the schedule of the notification from the provisions of rule* 12 *of the Madras Public Buildings (Licensing) Rules*, 1966, *in respect of the payment of fees on application and appeals.* [*Laid on the Table of the House under section* 25 (4) *of the Madras Public Buildings (Licensing) Act*, 1965 (*Madras Act* 13 *of* 1965).]

* 258. *Notification issued with G.O. Ms. No.* 2083, *Rural Development and Local Administration, dated the* 30*th August* 1966, *exempting certain class of public buildings specified in the notification for a period of three years from all the provisions of the Madras Public Buildings (Licensing) Act*, 1965. [*Laid on the Table of the House under section* 25 (4) *of the Madras Public Buildings (Licensing) Act*, 1965 (*Madras Act* 13 *of* 1965).]

* 259. *Notification issued with G.O. Ms. No.* 2129, *Rural Development and Local Administration, dated the* 6*th September* 1966, *making an amendment to the Madras Khadi and Village Industries Board Rules*, 1960, *published with Food and Agriculture Department Notification S.R.O. No. A*-213 *of* 1960, *dated the* 11*th August* 1960, *at pages* 206-208 *Part V of the* Fort St. George Gazette, *dated the* 24*th August* 1960, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 29 (3) *of the Madras Khadi and Village Industries Board Act*, 1959 (*Madras Act* 18 *of* 1959).]

* 260. *Notification issued with G.O. Ms. No.* 2320, *Rural Development and Local Administration, dated the* 30*th September* 1966 *specifying the* 2*nd October* 1966 *as the date of constitution of Pollachi North Panchayat Union Council and Pollachi South Panchayat Union Council.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 261. *Notification issued with G.O. Ms. No.* 1965, *Rural Development and Local Administration, dated the* 10*th August* 1966, *regarding exclusion of certain areas from the Vasudevanallur and Kuruvikulam Panchayat Unions and inclusion in the Sankarankoil Panchayat Union.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

8th November 1966]

* 262. *Notification issued with G.O. Ms. No.* 1566, *Rural Development and Local Administration, dated the* 23rd *June* 1966, *regarding the transfer of certain road to the Highways and Rural Works Department in Paramakudi Municipality.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

* 263. *Notification issued with G.O. Ms. No.* 2298, *Rural Development and Local Administration, dated the* 29*th September* 1966, *regarding fixation of maximum rate of property tax on lands used exclusively for agricultural purposes in municipal areas.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

* 264. *Notification issued with G.O. Ms. No.* 2061, *Rural Development and Local Administration, dated the* 25*th August* 1966, *regarding the stay of the proceedings relating to the general revision of assessment books in respect of the municipalities specified in the schedule of the notification for two half years from* 1*st April* 1966. *Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

* 265. *Notification issued with G.O. Ms. No.* 1846, *Rural Development and Local Administration, dated the* 28*th July* 1966, *regarding the appointment of Special Officer for Taxation Appeal disposal consequent on the bifurcation of Salem District.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

* 266. *Notification issued with G.O. Ms. No.* 2982, *Revenue, dated the* 7*th October* 1966, *regarding the grant of exemption in respect of the tax payable under the Madras General Sales Tax Act,* 1959 *in regard to the sale of readymade garments by Sri Sivananda Saraswathi Sevashram, Tambaram.* [*Laid by the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act* 1 *of* 1959).]

* 267. *Notification issued with G.O. Ms. No.* 1206, *Rural Development and Local Administration, dated the* 11*th May* 1966, *making an amendment to the Madras Municipal Works (other than Water-Supply and Drainage Schemes) Rules published at pages* 1–3 *of the Rules Supplement to Part I-A of the* Fort St. George Gazette, *dated the* 28*th November* 1944, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

* 268. *Notification issued with G.O. Ms. No.* 1989, *Rural Development and Local Administration, dated the* 12*th August* 1966, *regarding the intention to constitute the local areas within the jurisdiction of the Manapparai, Kannudayampatti, etc.*

[8th November 1966

Panchayats in Tiruchirappalli district as Manapparai Municipality. [*Laid on the Table of the House under section* 304 (d) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act* V *of* 1920).]

*269. *Notification issued with G.O. Ms. No.* 2432, *Rural Development and Local Administration, dated the 18th October* 1966, *making an amendment to the Madras Panchayat Union Councils Establishment Rules,* 1964. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

8. தனிப்பட்ட குடும்பங்களாக இந்த மத்திய உதவியைப் பெறுவதா அல்லது தொகுதியாக அமைந்துள்ள குடும்பங்களுக்காக இந்த மத்திய உதவியைப் பெறுவதா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் கலெக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுபவர்களுக்கு இவ்வேலைத் திட்டத்தின் கீழ் உள்ள இலாபங்களையும் பொறுப்புகளையும் உணர்த்த வேண்டும். அதாவது அவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவி 75 சதவீதம் மானியமும் 25 சதவீதம் கடனும் கொண்டதாகும் என்பதையும் கடன் பகுதியை அவர்கள் அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். கடன் பகுதியை வசூலிக்கும் முறை பற்றிய தனது செயற்குறிப்பை நாளடைவில் அனுப்புமாறு வருவாய்த்துறை வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்காரியத்திற்காக மேற்கொண்டும் மானியம் கிடைக்காது. எனவே இந்த வேலைத் திட்டத்தின் கீழ் நிலங்களில் குடும்பங்களை குடியேற்றுவது குறித்த செலவினங்கள் அனைத்தையும் 7-வது பாராவில் விவரித்துள்ள இருவகை உதவியின் கீழ் கொண்டுவர ஏற்பாடு செய்யுமாறு கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

9. இந்த ஆணைகளையொட்டி அடியிற் கண்டவைபற்றி கலெக்டர்களுக்கு தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்குமாறு வருவாய்த்துறை வாரியம் கேட்கப்பட்டுள்ளது. மேலும் அந்த உத்தரவுகளின் நகல் ஒன்றை நாளடைவில் அரசாங்கத்திற்கு அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது :—

(1) இவ்வேலைத் திட்டத்துக்கு மாவட்டங்களில் விளம்பரம் கிடைக்க வேண்டும். அவசியமாயின் ஊரிலுள்ள முக்கியமான பத்திரிகைகளில் செய்தி அறிவிப்பை வெளியிடுவதன் மூலம் இவ்வேலைத் திட்டத்தைப் பிரபலப்படுத்தலாம்.

(2) தனி அதிகாரி அவரது அறிக்கையின் III-வது அத்தியாயத்தில் விவரித்துள்ள நடைமுறையின் அடிப்படையில் குடும்பங்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை.

(3) பணியாளர் தேவைகளைக் கணக்கிடுவதில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.

(4) இந்திய அரசு கொடுக்க முன்வரும் இருவகை உதவிகளின் விவரங்களும் விளைவுகளும்.

(5) இவ் வேலைத் திட்டத்தை நிறைவேற்றும் வேலை எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பது குறித்து காலாண்டு அறிக்கைகளைப் பணிந்தனுப்புதல்.

(6) ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் செலவு விவர அறிக்கைகளைப் பணிந்தனுப்புதல்.

10. அடியிற் கண்டவற்றையும் அரசாங்கத்திற்கு அனுப்புமாறு வாரியத்திற்கு வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது :—

(1) இவ்வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வேண்டிய கூடுதல் பணியாளர் நியமனம் குறித்த செயற்குறிப்புகளை ஒருங்கிணைத்து அனுப்புதல் (இவ் வேலைத் திட்டச் செயற்கால முழுவதற்கும் பணியாளர் செலவு ரூ. 3 லட்சத்திற்கு மேற்படக் கூடாது).

(2) கலெக்டர்கள் ஜனவரி, எப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில் அனுப்பிய காலாண்டு அறிக்கைகளின் மீது வாரியத்தின் ஆய்வுகள்.

(3) நில அளவு, வகைப்பாடு வரையறுத்தல் போன்று ஒவ்வொரு நீதி ஆண்டின் இறுதியிலும் செலவு குறித்த ஒருங்கிணைத்த அறிக்கை.

[8th November 1966

11. இந்திய அரசு நிர்ணயித்துள்ள அடிப்படையில் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித் தொகையும் வாரியத்திடமிருந்து செயற் குறிப்புகள் வரப்பெற்றதன் மேல் இவ்வேலைக்காக நியமிக்கப் பட்ட பணியாளர் செலவுத் தொகையும் முதற்கண் இந்திய அரசாங்கத்தினால் செலவிடப்பட்டு பின்னர் இந்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். செலவுக் கணக்கு ஆண்டுதோறும் அனுப்பப்படுவதன் மேல் இந்திய அரசு உரிய தொகையைக் கொடுத்துவிடும்.

12. இம் மானியச் செலவு "71. பல் வகை உதவி மானியம் உதவித் தொகைகள் முதலியன" என்பதன் கீழ் ஏற்படுத்தப்பட வேண்டிய "நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களைக் குடியேற்று தல்" என்னும் புதிய விரிவான தலைப்பின் கீழ் பற்றெழுதப்பட வேண்டும். செலவில் கடன் பகுதி "மாநில அரசாங்கம் வழங்கும்" கடன்களும் முன்பணங்களும்—ஜி. வளர்ச்சித்திட்டங்கள்—மூன்றாவது திட்ட வேலைகள்.—டி. சாகுபடியாளர்களுக்கு முன் பணங்கள் (1) வருவாய் துறை வாரியத்தின் அதிகாரத்தின் கீழ் உள்ள கடன்கள் "நிலவரி என்பதன் கீழ் பற்றெழுதப்பட வேண்டும்".

மேற் சொன்ன செலவு முதற்கண் "மாநில நிதிக்குள்" பற்றெழுதப் பட்டு பின்னர் இந்திய அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

13. இச்செலவு "புதுப்பணி" குறித்ததாகும். இதற்காகச் சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை முன்னோக்கி இச் செலவு முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து சரிக்கட்டப்படும். இது குறித்த ஆணைகளை நிதித்துறை பிறப்பிக்கும். 1966 ஜனவரி 31-ம் தேதி வரையில் 1965–66-ல் பத்து மாவட்டங்களில் இவ்வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செலவு மதிப்பீட்டு விவரங்களை நிதித்துறைக்கு அனுப்புமாறு வருவாய்த் துறை வாரியத்திற்கு வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் குடியேற்றப்படக்கூடிய குடும்பங்களின் எண்ணிக்கையையும் அதற்காக சுமார் எத்தனை பணியாளர்கள் தேவைப்படுவார் என்பதையும் கருதி செலவைக் கணக்கிடுமாறு வாரியத்திற்கு வேண்டுகோள் விடப் பட்டுள்ளது

14. இந்த ஆணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது—18–8–1965 தேதியிட்ட 97464 செலவு என்ற எண் உள்ள அலுவலக முறையில்லாக் குறிப்பைப் பார்க்கவும்.

ப. பாலசுந்தரம்,
அரசாங்கச் செயலாளர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

நிலமில்லாத வேளாண்மைத் தொழிலாளர்களைக் குடியேற்றுவதற்காக நிலம் ஒதுக்க விண்ணப்பம் அனுப்புமாறு விடுத்த அறிவிப்பு.

நிலமில்லா வேளாண்மைத் தொழிலாளர்களை அரசாங்கத்துக்குச் சொந்தமானவையும் 15 எக்கரும் அதற்கும் மேற்பட்ட பரப்புடையவையும் ஆனால் 250 எக்கருக்கு மேற்படாதவையுமான தொகுதியாக அமைந் துள்ள தரிசு நிலங்களில் குடியேற்ற வகை செய்யும் திட்டம் ஒன்றை அரசாங்கம் வகுத்துள்ளது. இந்த நிலங்களைப் பண்படுத்துவதற்கும் கிணறு வெட்டுவதற்கும் நிலக் குடியேற்ற செலவுகள் குறித்தும் நிதி உதவி வழங்கப்படும். இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் நிலங் களின் பட்டியல் விவர அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு எக்கருக்கு மேற்பட்ட புன்செய் நிலத்தையோ அரை எக்கருக்கு மேற்பட்ட நன்செய் நிலத்தையோ சொந்தமாக வைத்திராத அல்லது குத்தகைக்கு வைத்திராத குடும்பம் ஒவ்வொன்றும்

8th November 1966]

ஐந்து ஏக்கர் நிலம் பெறத் தகுதி உடையதாகும். விண்ணப்பப் படிவங்களை இலவசமாகத் தாலூகா அலுவலகத்திலிருந்து அல்லது கிராம அதிகாரியிடமிருந்து பெறலாம். விண்ணப்பங்களை தாசில்தாருக்கு அனுப்பவேண்டும்.

இவ் வேலைத்திட்டம் பற்றிய விவரங்களையும் நிபந்தனைகளையும் தாலூகா அலுவலகத்திலிருந்து பெறலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் தேதி.................

விவர அட்டவணை

தொடர் எண். (1)	கிராமத்தின் பெயர். (2)	புலன்களின் சர்வே எண். (3)	வகைப்பாடு. (4)	பரப்பு (5) ஏ. செ.	மதிப்பு (6) ரூ. காசு.	எல்லைகள். (7

(ஒப்பம்) தாசில்தார்.

மேற்படி அறிவிப்பு மேலே குறிப்பிட்ட தேதியன்று பறையறிவிப்பு மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது என்றும் கிராமச் சாவடியிலும் பஞ்சாயத்து அறிவிப்புப் பலகையிலும் குறிப்பிட்ட நிலங்களிலும் ஒட்டிவைக்கப்பட்டது என்றும் இதனால் சான்றளிக்கப்படுகிறது.

(1) கிராமங்களில் எழுதப்படிக்கத் தெரிந்த இரண்டு நபர்களின் கையெழுத்து.

(2) மேலே (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள நபர்களின் கையெழுத்தைப் பெறாத காரணம்.

கிராமம் — கிராம முன்சீப்.

தேதி — கணக்கப்பிள்ளை.

(உண்மை நகல்.)

[8th November 1966

இணைப்பு II.

நிலமில்லா வேளாண்மைத் தொழிலாளர்களை நிலங்களில் குடியேற்ற வகைசெய்யும் வேலைத்திட்டத்தின்கீழ் நிலம் வேண்டி செய்து கொள்வதற்காக விண்ணப்பப் படிவம் :—

1. விண்ணப்பதாரரின் பெயர் ..

2. தகப்பனார்/கணவர் பெயர் ..

3. இல்லம், வீட்டிலக்கம்

4. விண்ணப்பத்தாரர் உள்பட குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள்.

5. அவர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பது.

6. சாகுபடி செய்வதில் முந்திய அனுபவம் பற்றிய விவரங்கள்.

7. சொந்தமாக உள்ள நிலம் பற்றிய விவரங்கள், சர்வே எண், பரப்பளவு.

8. வாரம் அல்லது குத்தகையில் சாகுபடி செய்யப்படும் நிலங்கள் பற்றிய விவரங்கள்.

சர்வே எண்.	நிலச்சுவான்தாரரின் பெயர்.	அவர் குத்தகையில் அல்லது வாரத்தில் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு.
(1)	(2)	(3)

9. தமிழ் நாடு சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் சட்டத்தின் கீழ் அவர் முன்பு வெளியேற்றப்பட்டதுண்டா ? ஆம் எனில் தீர்ப்பின் நகலை அனுப்புக.

10. விண்ணப்பம் எந்த நிலங்கள் குறித்து செய்யப்பட்டுள்ளதோ அந்த நிலங்களைப் பற்றிய விவரங்கள்.

கிராமத்தின் பெயர்.	சர்வே எண்.	பரப்பளவு.	வகைப்பாடு.

விண்ணப்பதாரரின் கையெழுத்து.

(உண்மை நகல்)

8th November 1966]

இணைப்பு III.

இவ்வேலைத் திட்டத்தின்கீழ் நிலம் வேண்டிச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்கள் குறித்து விசாரணைக்கான அறிவிப்பு.

......................கிராமத்தைச் சேர்ந்த அடியிற் கண்ட நபர்கள் விவர அட்டவணையில் அவர்கள் பெயருக்கு எதிரே காட்டப் பட்டுள்ள நிலங்கள் ஒதுக்கப்பட விண்ணப்பம் செய்துகொண்டுள்ளனர். இது குறித்த விசாரணை தேதியன்று நடத்தப்படும். நில ஒதுக்கம் குறித்து மறுப்பு தெரிவிக்க விரும்பும் நபர்கள் தங்கள் மறுப்புகளை விசாரணைத் தேதியன்று தாசில்தாரிடம் தெரிவிக்க வேண்டும். அத்தேதிக்குப்பின் வந்து சேரும் மறுப்புகள் கவனிக்கப்பட மாட்டா. விசாரணையின்போது மறுப்புகள் எவையும் வந்து சேரவில்லை எனில், மறுப்புகள் எவையும் இல்லை எனக் கருதப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு நிலம் ஒதுக்க மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

விவர அட்டவணை

நபர்களின் பெயர்கள்.	சர்வே எண்.	பரப்பளவு.	வகைப்பாடு.	வரிவிதிப்பு.	எல்லைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		ஏ. செ.		ரூ. பை.	

மேற்படி அறிவிப்பு மேலே குறிப்பிடப்பட்ட தேதியன்று டமாரமறிவிப்பு மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது என்றும் கிராமச் சாவடியிலும் பஞ்சாயத்து அலுவலக அறிவிப்புப் பலகையிலும் குறிப்பிடப்பட்ட நிலங்களிலும் ஒட்டி வைக்கப்பட்டது என்றும் இதனால் சான்றளிக்கப்படுகிறது.

ஊ:

(1) கிராம மக்களில் எழுதப் படிக்கத் தெரிந்த இரண்டு நபர்களின் கையெழுத்து.

(2) மேலே (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள நபர்களின் கையெழுத்து பெறாத காரணம்.

கிராமத்தின் பெயர்.

கிராம முன்சீப்.

கர்ணம்.

(உண்மை நகல்)

[8th November 1966

APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 516 at page 582.]

Statement showing the extent of lands (single crop wet and dry) subject to water-cess in Tambiraparani and Manimuthar System in Tirunelveli district: (Talukwise.)

	Details.							
	Extent of single crop wet lands raising a second crop and paying penal water cess. (1)		Extent of water rate dry lands paying penal water cess. (2)		Extent of single crop wet lands raising a second crop but not liable to penal water cess (single rate only). (3)		Extent of water rate dry lands paying single rate of water cess only. (4)	
	A.	C.	A.	C.	A.	C.	A.	C.
TAMBIRAPARANI BASIN—								
Ambasamudram ..	258	73	463	91	703	82	452	94
Tirunelveli ..	122	07	452	92	1,273	57	422	22
Srivaikuntam ..	65	00	1,040	00	3,294	00	710	00
Tiruchendur ..	382	87	1,102	00	1,014	90	2,710	60
Total ..	828	67	3,058	83	6,291	29	4,295	76
MANIMUTHAR—								
Ambasamudram ..	1	35	536	49	143	46	320	90
Tirunelveli ..	811	12	288	02	1,810	51	184	65
Srivaikuntam ..	90	00	62	00	86	00	18	00
Tiruchendur ..	208	00	687	53	963	76	675	46
Nanguneri ..	..		1,649	98	..		1,950	57
Total ..	1,110	47	3,224	02	3,003	73	3,149	58

8th November 1966]

திருநெல்வேலி மாவட்டத்தில் தாம்பிரபரணி, மணிமுத்தாறு தீரங்களில் தண்ணீர் தண்டத் தீர்வைக்குட்பட்டிருக்கும் (ஒரு போக நன்செய், புன்செய்) நிலங்களின் பரப்பளவைக் காட்டும் விவர அறிக்கை.

	விவரங்கள்.							
	இரண்டாம் போகம் விளைவிக்கத் தண்ணீர் தண்டத் தீர்வை செலுத்தும் ஒரு போக நன்செய் நிலங்களின் பரப்பளவு. (1)		தண்ணீர் தண்டத் தீர்வை செலுத்தும் தண்ணீர்த் தீர்வை புன்செய் நிலங்களின் பரப்பளவு. (2)		தண்ணீர் தண்டத் தீர்வைக்குட்படாத இரண்டாம் போகம் விளைவிக்கும் ஒரு போக நன்செய் நிலங்களின் பரப்பளவு (ஒரு தீர்வை வீதம் மட்டும்). (3)		ஒரு வீதத் தண்ணீர்த் தீர்வை மட்டும் செலுத்தும் தீர்வை புன்செய் நிலங்களின் பரப்பளவு. (4)	
	ஏ.	செ.	ஏ.	செ.	ஏ.	செ.	ஏ.	செ.
தாம்பிரபரணி தீரம்—								
அம்பாசமுத்திரம் ..	258	73	463	91	708	82	452	94
திருநெல்வேலி ..	122	07	452	92	1,273	57	422	22
ஸ்ரீவைகுண்டம் ..	65	00	1,040	00	3,294	00	710	00
திருச்செந்தூர் ..	382	87	1,102	00	1,014	90	2,710	60
மொத்தம் ..	828	67	3,058	83	6,291	29	4,295	76
மணிமுத்தாறு—								
அம்பாசமுத்திரம் ..	1	35	536	49	143	46	320	90
திருநெல்வேலி ..	811	12	283	02	1,810	51	184	65
ஸ்ரீவைகுண்டம் ..	90	00	62	00	86	00	18	00
திருச்செந்தூர் ..	208	00	637	53	963	76	675	46
நாங்குனேரி ..	..		1,649	98	..		1,950	57
மொத்தம் ..	1,110	47	3,224	02	3,003	73	3,149	58

[8th November 1966

APPENDIX III.

[*Vide* answer to Starred Question No. 521 at page 587.]

(*a*) Yes.

(*b*) The East Coast Road from Madras to Kanyakumari is proposed to be developed to National Highway Standards. The road would pass through the revenue districts of Chingleput and South Arcot, Thanjavur, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari and the Union Territories of Pondicherry and Karaikal. The total length of the road is 480 miles including the stretches of about 21 miles in Union Territories and 30 miles of road to be newly formed. The road is so aligned that it connects the major port of Madras with the minor ports at Cuddalore, Nagapattinam, and the proposed major port at Tuticorin besides the various fishing villages and tourist and pilgrim centres such as Covelong, Mahabalipuram, Nagore, Velanganni, Vedaranyam, Tiruchendur and Kanyakumari. In view of its strategic importance, this scheme finds a place in the Second All-India Road Development Twenty-year Plan for 1961–81 also.

In the Madras State, on the East Coast Region, there are important ports like Madras, Cuddalore, Pondicherry, Nagapattinam, Tuticorin, besides number of small ports. Industries like fisheries, salt, coir, firewood and pearls are developing rapidly in this region and for the transportation of the products on all weather coastal road is absolutely necessary. Hence a detailed survey of the cost benefit ratio of the scheme was made and it was found that the cost benefit ratio was favourable, The Chief Engineer (Highways and Rural Works) accordingly prepared estimate for Rs. 14 crores for upgrading the East Coast Road to National Highway Standard, providing 22′ width of black top, and it was forwarded to the Government of India for their technical approval and financial sanction. The Government of India has indicated that the proposal has to wait till a final decision regarding provision for roads in the Fourth Plan is taken.

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு மேம்படுத்தப்படும். இந்தச் சாலை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி ரெவினியு மாவட்டங்கள் வழியாகவும், புதுச்சேரி, காரைக்கால் ஆகிய யூனியன் ஆட்சிப் பகுதிகள் வழியாகவும் செல்லும். இச்சாலையின் மொத்த நீளம் 480 மைல்கள். இதில் ஏறத்தாழ யூனியன் ஆட்சிப் பகுதிகளில் செல்லும் 21 மைல் நீளச் சாலையும் புதிதாக அமைக்கப்படவிருக்கும் 30 மைல் நீளச் சாலையும் அடங்கும். இச்சாலை பெருந்துறைமுகமாகிய சென்னையை, கடலூரர், நாகப்பட்டினம் போன்ற சிறு துறைமுகங்களுடனும், தூத்துக்குடியில் அமைக்கப்படவிருக்கும் பெரிய துறைமுகத்துடனும் கோவளம், மகாபலிபுரம், நாகூர், வேளாங்கன்னி, வேதாரண்யம், திருச்செந்தூர், கன்னியாகுமரி போன்ற மீன்பிடி கிராமங்கள், சுற்றுலா இடங்கள், யாத்திரைத் தலங்கள் இவற்றையும் இணைக்கும். இவ்வாறு பலவகைகளில் முக்கியத்துவம் பெற்றிருப்பதால், இச்சாலைத் திட்டம் அனைத்து இந்திய சாலை வளர்ச்சிக்குரிய இருபது ஆண்டுத் திட்டத்தில் (1961–81) சேர்க்கப்பட்டுள்ளது.

8th November 1966]

தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதியில், சென்னை, கடலூர் புதுச்சேரி, நாகப்பட்டினம், தூத்துக்குடி போன்ற முக்கிய துறைமுகங்களும், பல சிறு துறைமுகங்களும் உள்ளன. இப்பகுதிகளில் மீன் பிடித்தல், உப்பளத் தொழில், கயிற்றுத் தொழில், விறகுமரத் தொழில், முத்துக் குளித்தல் போன்ற தொழில்கள் விரைந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. இப் பொருள்களை வெவ்வேறிடங்களுக்கு அனுப்பும் பொருட்டு, எல்லாக் காலத்திலும் செயல்படக்கூடிய கடற்கரையோரச் சாலை மிகவும் இன்றியமையாததாகும். எனவே, இத் திட்டத்தின் செலவு, பயன் வீதாசாரத்தைப்பற்றி விரிவான ஆய்வு நடத்தப்பட்டு, அது சாதகமாகவே உள்ளது என அறியப்பட்டது. ஆக ஷெ கிழக்குக் கடற்கரையோரச் சாலையை 22 அடி அகலமுள்ளதாக்கி, தாரிட்டு, தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு மேம்படுத்த ரூ. 14 கோடிக்கு மதிப்பீட்டை (நெடுஞ்சாலை-கிராமப் பணிகள்) தலைமைப் பொறியாளர் தயாரித்தார். இந்திய அரசின் தொழில் நுட்ப அனுமதியும் நிதி அனுமதியும் பெறும்பொருட்டு, இது இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தில் சாலைகளுக்கான நிதி ஒதுக்கம் குறித்த இறுதியான முடிவு எடுத்த பின்னரே இந்தச் செயல் திட்டத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியுமென இந்திய அரசு அறிவித்துள்ளது.

APPENDIX IV.

[*Vide* answer to Starred Question No. 464 at page 591.]

Sri Hanumanthaiya, Member of the Administrative Reforms Commission has suggested that a Committee on District Administration may be set up at State Level to examine the various aspects of District Administration. In particular it is desired by him that the committee should—

(1) study the nature and structure of the existing set up in District Administration with particular reference to major reforms initiated in the last 10 years and also the advent of the Five-Year Plans.

(2) study the existing local self-Government institutions at the District level and examine the extent to which these institutions have functioned as instruments of public service and public conscicusness and also to examine the extent to which there has been effective co-ordination of the activities of the institutions with the limbs of the other departments at District level.

(3) study the Panchayat-raj set-up and examine the variations in the extent of public participation in the last 10 years in various spheres; and

(4) examine and evaluate the role of the Collector with particular reference to—

(*a*) his relationship with other District level officers and authorities;

(*b*) implementation of developmental activities;

(*c*) progressive working of the local self-governing bodies, namely Panchayats, Municipalities and others;

(*d*) elimination of delays and grievances; and

(*e*) maintenance of law and order.

[8th November 1966

2. The Government accepted the suggestion of Sri Hanumanthaiya, and accordingly set up a Committee to study the various aspects of the District Administration, the terms of reference being the same as those indicated in paragraph 1 above.

3. The composition of the Committee is as follows:—

Leader.

(1) Sri V. Ramaiah, Minister for Food.

Members.

(2) Sri P. Kakkan, Minister for Home.

(3) Sri S. R. Kaiwar, I.C.S., First Member, Board of Revenue.

(4) Sri K. V. Ramanathan, I.A.S., Director of Agriculture.

(5) Sri V. R. S. Pandian, B.E., Chief Engineer (Irrigation).

(6) Sri K. Diraviam, I.A.S., Director of Rural Development.

(7) Sri R. Pasupathi, I.A.S., Registrar of Co-operative Societies.

(8) Sri G. D. Nandagopal, Director of Statistics.

(9) Sri R. Krishnaswami Naidu, M.L.A.

(10) Sri Sivakaminatha Pillai, Chairman, Srivilliputhur Municipality, Ramanathapuram district.

(11) Sri J. Madhanraj, B.A., B.L., Chairman, Poonamallee Panchayat Union, Chingleput district.

Member-Secretary.

(12) Sri K. P. Geethakrishnan, I.A.S., Joint Secretary, High Power Committee on Economy and Administrative Reorganisation.

4. The Committee is expected to finalise and send its report to the Central Committee before 8th November 1966.

நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷனின் உறுப்பினரான ஸ்ரீ ஹனுமந்தையா, மாவட்ட நிர்வாகத்தின் பற்பல கூறுகளைப் பரிசிலனை செய்வதற்காக மாநில அளவில் மாவட்ட நிர்வாகம் குறித்த குழு ஒன்று நிறுவப்படலாமெனக் கருத்து தெரிவித்துள்ளார். குறிப்பாக, கீழ்க்கண்ட பணிகளை அக் குழு மேற்கொள்ள வேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்:—

(1) மாவட்ட நிர்வாகத்தின் தற்போதைய தன்மையையும் அமைப்பையும் பரிசிலித்தல்; குறிப்பாக, சென்ற 10 ஆண்டுக் கால அளவில் மேற்கொண்ட பெரிய சீர்திருத்தங்களையும் ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஒட்டி அப் பரிசிலனையைச் செய்தல்;

(2) மாவட்ட அளவில் தற்போதுள்ள தல சுய ஆட்சி நிறுவனங்களைப் பரிசிலித்து, இந்த நிறுவனங்கள் எந்த அளவுக்குப் பொதுப் பணி நிறுவனங்களாகவும் பொதுநலக் குறிக்கோளுடைய நிறுவனங்களாகவும் செயல்பட்டன என்பதை ஆராய்ந்து பார்த்

8th November 1966]

தல்; மேலும், இந்த நிறுவனங்களில் நடவடிக்கைகள் எந்த அளவுக்கு மாவட்ட நிலையில் பிற துறைகளின் நடவடிக்கைகளுக்கு இணக்கமாக இருந்தன என்பதைப் பரிசீலித்தல்;

(3) பஞ்சாயத்து ஆட்சியின் அமைப்பைப்பற்றி ஆராய்ந்து, சென்ற பத்தாண்டுகளில் பல்வேறு துறைகளில் பொதுமக்கள் பங்கெடுத்துக்கொண்டது குறித்த புள்ளிவிவரங்களைப் பரிசிலனை செய்தல்;

(4) குறிப்பாக கீழ்க்கண்டவற்றையொட்டி கலெக்டரின் பணியினைப் பரிசீலித்து மதிப்பிடுதல்:—

(a) மாவட்ட நிலையிலுள்ள பிற அலுவலர்கள், அதிகாரிகளுடன் அவரது தொடர்பு;

(b) மேம்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்;

(c) தல சுயாட்சி நிறுவனங்களான பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், மற்றவைகள் நாளடைவில் செயல்படுதல்;

(d) காலதாமதங்களையும் குறைகளையும் போக்குதல்;

(e) சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தல்.

2. ஸ்ரீ ஹனுமந்தையா அவர்களின் கருத்தை அரசாங்கம் ஏற்று, மாவட்ட நிர்வாகத்தின் பல்வேறு அம்சங்களைப் பரிசிலிப்பதற்காக ஒரு குழுவை அமைத்துள்ளது. அக் குழு மேற்கொள்ள வேண்டிய பணிகள் மேலே 1-வது பாராவில் குறிப்பிட்டவாறு இருக்கும்.

3. அக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாவர்:

தலைவர்.

(1) ஸ்ரீ வி. ராமைய்யா, உணவு அமைச்சர்.

உறுப்பினர்கள்.

(2) ஸ்ரீ பி. கக்கன், உள்துறை அமைச்சர்.

(3) ஸ்ரீ எஸ். ஆர். கைவார், ஐ.சி.எஸ்., முதல் உறுப்பினர், வருவாய்த்துறை வாரியம்.

(4) ஸ்ரீ கே. வி. இராமநாதன், ஐ.ஏ.எஸ்., வேளாண்மைத் துறை நெறியாளர்.

(5) ஸ்ரீ வி. ஆர். எஸ். பாண்டியன், பி.ஈ., தலைமைப் பொறியாளர் (பாசனம்).

(6) ஸ்ரீ கே. திரவியம், ஐ.ஏ.எஸ்., கிராம வளர்ச்சித் துறை நெறியாளர்.

(7) ஸ்ரீ ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.

(8) ஸ்ரீ ஜி. டி. நந்தகோபால், புள்ளிவிவரத் துறை நெறியாளர்

(9) ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல்.ஏ.

[8th November 1966

(10) ஸ்ரீ சிவகாமிநாத பிள்ளை, தலைவர், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.

(11) ஸ்ரீ ஜே. மதன்ராஜ், பி.ஏ., பி.எல்., தலைவர் பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியன், செங்கற்பட்டு மாவட்டம்.

உறுப்பினர்—செயலாளர்.

(12) ஸ்ரீ கே. பி. கீதாகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., இணைச் செயலாளர், சிக்கன-நிர்வாகச் சீரமைப்பு உயர் நிலைக் குழு.

4. இக் குழு 1966 நவம்பர் 8-ம் தேதிக்கு முன்னால் தனது அறிக்கையை இறுதி செய்து மத்தியக் குழுவிற்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

APPENDIX V.

[*Vide* answer to Starred question No. 491 at page 593]

(*a*) and (*b*): The administrative set up of the Co-operative Department has been reorganised with effect from 15th June 1966 by the formation of five regional offices at Madras, Salem, Thanjavur, Tiruchirappalli and Tirunelveli at the level of Joint Registrars. The names of the five regions, headquarters and districts in each of the regions are indicated below:—

Name of the Region. (1)	Headquarters. (2)	Districts covered. (3)
Madras	Madras	Madras. North Arcot. Chingleput.
Tiruchirappalli ..	Tiruchirappalli ..	South Arcot. Tiruchirappalli. Madurai.
Thanjavur	Thanjavur	Thanjavur.
Salem	Salem	Dharmapuri. Salem. The Nilgiris. Coimbatore.
Tirunelveli	Tirunelveli	Ramanathapuram. Tirunelveli. Kanyakumari.

2. The staff in the office of the Registrar of Co-operative Societies at Madras and the office of the Joint Registrar (Intensive Agricultural District Programme), Thanjavur has been redistributed suitably among the Registrar's office at Madras and the five Regional Offices.

8th November 1966]

(அ) & (இ) கூட்டுறவுத் துறையின் நிர்வாக அமைப்பு 1966-ம் வருடம் ஜூன் மாதம் 15-ந் தேதி முதல் சீரமைக்கப்பட்டுள்ளது. சென்னை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் இணைப்பதிவாளர்கள் தலைமையில் வட்டார அலுவலகங்கள் ஏற்படுத்துவதன் மூலம் மேற்படி சீரமைப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்கூறிய ஐந்து வட்டாரங்கள், அவற்றின் தலைமையிடங்கள், ஒவ்வொன்றிலுமுள்ள மாவட்டங்கள் ஆகியவை கீழ்க்கண்டவாறு :—

வட்டாரத்தின் பெயர்.	தலைமையிடம்.	மேற்படி வட்டாரத்தின் கீழ் வரும் மாவட்டங்கள்.
(1)	(2)	(3)
சென்னை	சென்னை	சென்னை.
		வட ஆற்காடு.
		செங்கற்பட்டு.
திருச்சிராப்பள்ளி ..	திருச்சிராப்பள்ளி ..	தென் ஆற்காடு.
		திருச்சிராப்பள்ளி
		மதுரை.
தஞ்சாவூர்	தஞ்சாவூர் ..	தஞ்சாவூர்.
சேலம்	சேலம்	தர்மபுரி.
		சேலம்.
		நீலகிரி.
		கோயம்புத்தூர்.
திருநெல்வேலி ..	திருநெல்வேலி ..	ராமநாதபுரம்.
		திருநெல்வேலி.
		கன்னியாகுமரி

2. சென்னையில் உள்ள கூட்டுறவுச் சங்கப்பதிவாளர் அலுவலகத்திலும் தஞ்சாவூர் (மும்முர வேளாண்மை வளர்ச்சித் திட்ட) இணைப்பதிவாளர் அலுவலகத்திலும் உள்ள பணியாளர்கள் சென்னையில் உள்ள பதிவாளர் அலுவலகத்திற்கும், ஐந்து வட்டார அலுவலகங்களுக்கும் பொருத்தமான வகையில் மாற்றப்பட்டுள்ளனர்.

APPENDIX VI.

[*Vide* answer to Starred Question No. 502 at page 578.]

Name of the district.	Chinese Aggression.				Pakistani Aggression.			
	Killed.	Wounded.	Missing.	Total.	Killed.	Wounded.	Missing.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
Madras ..	10	..	8	18	3	2	1	6
Chingleput ..	..	..	4	4	3	9	3	15
South Arcot ..	1	1	5	7	6	6	1	13
Thanjavur ..	2	..	3	5	8	4	1	13
Tiruchirappalli ..	..	..	3	3	4	11	3	18
Madurai ..	6	..	23	29	9	15	7	31
Ramanathapuram ..	4	..	11	15	10	8	4	22
Tirunelveli ..	..	2	20	22	5	16	3	24
Kanyakumari ..	4	1	1	6	4	7	1	12
North Arcot ..	17	3	53	73	24	45	11	80
Dharmapuri and Salem	11	2	19	32	13	26	3	42
Coimbatore ..	5	1	7	13	4	12	1	17
The Nilgiris ..	..	..	3	3	—	..	..	..
Total ..	60	10	160	230	93	161	39	293

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாவட்டம்.	சீன ஆக்கிரமிப்பு. போரில் மடிந்தோர்.	காயமடைந்தோர்.	காணாமற் போனவர்.	மொத்தம்.	பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு. போரில் மடிந்தோர்.	காயமடைந்தோர்.	காணாமற் போனவர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
சென்னை	10	..	8	18	3	2	1	6
செங்கற்பட்டு	..	..	4	4	3	9	3	15
தென் ஆர்க்காடு	1	1	5	7	6	6	1	13
தஞ்சாவூர்	2	..	3	5	8	4	1	13
திருச்சிராப்பள்ளி ..	..	..	3	3	4	11	3	18
மதுரை	6	..	23	29	9	15	7	31
இராமநாதபுரம்	4	..	11	15	10	8	4	22
திருநெல்வேலி ..	..	2	20	22	5	16	3	24
கன்னியாகுமரி	4	1	1	6	4	7	1	12
வட ஆர்க்காடு	17	3	53	73	24	45	11	80
தர்மபுரி & சேலம் ..	11	2	19	32	13	26	3	42
கோயம்புத்தூர் ..	5	1	7	13	4	12	1	17
நீலகிரி	..	..	3	3	..	..	..	..
மொத்தம் ..	60	10	160	230	93	161	39	293

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

APPENDIX VII.

[*Vide* answer to Starred Question No. 505 at page 602].

(*a*) Yes.

(*b*) In its petition, dated 2nd September 1965, addressed to the Chief Minister, the Sivakasi Chamber of Match Industries, Sivakasi, made the following requests :—

(i) to exclude the excise duty paid on the sale of hand-made matches for the purpose of assessment of turnover of the dealers under the Central Sales Tax Act, 1956 ;

(ii) to treat the movement of goods from the principal place of business to the sales depots located outside the State, as mere transfer of goods and not to treat such transactions as inter State sales coming within the purview of the Central Sales Tax Act, 1956 ;

(iii) to merge the sales tax with the Central excise duty as is in the case of tobacco, sugar and textiles.

(*c*) Action taken.

Item (i) *above*—

Some of the dealers filed a writ petition in the High Court, contending that the excise duty should not be included in the turnover for the purpose of Central Sales Tax applying the provisions under the Madras General Sales Tax but it was dismissed.

The Government have since amended the Madras General Sales Tax Rules bringing them in line with the Central Sales Tax Rules in regard to the treatment of excise duty.

Item (ii) *above*—

This question will have to be decided on the facts of each case, such as terms of contract of sale, mode of delivery of the goods, particulars to be found in the bill of sale, delivery note, etc. No general principle can be laid down indicating that the movements of the goods from the principal place of business to depots are transfer of goods or regular sales to dealers in other States.

Item (iii) ***above***—

This Government are not in favour of such action.

(அ) ஆம்.

(இ) சிவகாசியிலுள்ள சிவகாசி தீப்பெட்டித் தயாரிப்புத் தொழில் வணிக மன்றம் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம் தேதியன்று முதலமைச்சருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பியது. அவ் விண்ணப்பத்தில் அடியிற்கண்ட வேண்டுகோள்கள் அடங்கியிருந்தன:—

(i) 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வியாபாரத் தொகையை நிச்சயிப்பதற்காக கையினால் செய்யப்படும் தீக்குச்சிகளின் விற்பனையின்மேல் செலுத்தப்படுகிற எக்சைஸ் தீர்வையை விலக்க வேண்டும்.

(ii) வியாபாரத் தலைமை இடத்திலிருந்து இம் மாநிலத்திற்கு வெளியேயுள்ள விற்பனை நிலையங்களுக்கு சரக்குகள் எடுத்துச் செல்லப் படுவதை மாற்றமாகவே கருத வேண்டும். இவற்றை 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் வரம்புக்குள் வருகிற பிற மாநிலங் களில் செய்யப்படும் விற்பனையாகக் கருதக்கூடாது.

(iii) புகையிலை, சர்க்கரை, ஜவுளி விற்பனையைப் போலவே தீக்குச்சி கள் விற்பனையின்மீது விதிக்கப்படும் விற்பனை வரியை மத்திய எக்சைஸ் வரியுடன் சேர்த்துவிட வேண்டும்.

(உ) (i) மத்திய விற்பனை வரியைக் கணக்கிடுவதற்காக தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்தி மொத்த வியாபாரத் தொகையில் எக்சைஸ் தீர்வையைச் சேர்க்கக்கூடாது என்று வாதிட்டு சில வியாபாரிகள் உயர்நீதி மன்றத்தில் 'ரிட்' மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். ஆனால் அம் மனுவை உயர்நீதி மன்றம் தள்ளிவிட்டது.

அதன்பிறகு அரசாங்கம் தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளைத் திருத்தி அமைத்துள்ளது. எக்சைஸ் தீர்வையைச் சேர்த்துக்கொள் வதைப் பொறுத்தவரையில் மத்திய விற்பனை வரி விதிகளுக்கிணங்க தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகள் இப்போது திருத்தப்பட்டுள்ளன.

(ii) விற்பனை ஒப்பந்த விவரம், சரக்குகளை ஒப்படை செய்யும் முறை, விற்பனைப் பட்டியல், ஒப்படைக் குறிப்பு ஆகியவற்றில் இருக்க வேண்டிய விவரங்கள் என்பவற்றைப்போல ஒவ்வொன்றின் விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு இதைத் தீர்மானிக்க வேண்டியிருக்கும். வியா பாரத் தலைமை இடத்திலிருந்து இம் மாநிலத்திற்கு வெளியேயுள்ள விற் பனை நிலையங்களுக்கு அனுப்பப்படும் சரக்குகள் மாற்றப்படும் சரக்குகளாகக் கருதப்பட வேண்டுமா அல்லது பிற மாநிலங்களில் உள்ள வியாபாரி களுக்கு முறைப்படி செய்யப்படும் விற்பனைகளாகக் கருதப்பட வேண்டுமா என்பது பற்றி பொதுவான நெறிமுறை எதையும் நிச்சயிப்பதற்கில்லை.

(iii) இத்தகைய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் விரும்பவில்லை.

APPENDIX VIII.

[*Vide* answer to Starred Question No. 506 at page 602]

According to the existing procedure, the field officers of the department of Industries and Commerce process the applications for scarce raw materials from the eligible industries taking into account their assessed capacity and their past consumption and forward them with their recommendation to the Director of Industries and Commerce. The Director registers them in books maintained in his office for this purpose. On receipt of State allotments from the Government of India, the Director obtains the advice of the Madras State Steel Advisory Board set up by the Government in regard to the distribution of iron and steel materials to the stockists and fabricators, and of the other industrialists concerned in respect of the distribution of other scarce raw materials. Thereafter the Director distributes the scarce raw materials to the industries whose applications have been registered in his books by issue of permits, quota certificates, etc., on *pro rata* basis or on the basis of the average of the allotments obtained in the past and with reference to the size of the State allotments and the priority fixed by the Government of India to each industry. On production of these permits, etc., the industrialists get their supplies from the authorised stockists.

[8th November 1966

2. The Servicing Corporation, Guindy, is one of the authorised stockists which distributes the scarce raw materials procured by it on the production of permits, etc., issued by the Director as stated above.

மூலப்பொருள்கள் பெறுவதற்குரிமையுள்ள தொழிலதிபர்கள் தட்டுப்பாடுள்ள அரிதான மூலப்பொருள்கள் வேண்டுமெனக் கேட்டு விண்ணப்பம் செய்துகொள்கின்றனர். தொழில்-வணிகத்துறையைச் சேர்ந்த நேரிடப் பணியாளர்கள் அவ்விண்ணப்பங்களை, தொழில்களின் நிச்சயிக்கப்பட்ட திறன், இதற்குமுன் அவைகளில் பயன்படுத்திய மூலப்பொருள்களின் அளவு இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தக்க பரிவுரைகளுடன் அவற்றைத் தொழில்-வணிகத்துறை நெறியாளருக்கு அனுப்புகின்றனர். நெறியாளர் இதற்கெனத் தமது அலுவலகத்தில் வைத்துள்ள பதிவேடுகளில் அவற்றைப் பதிவு செய்கிறார். இந்திய அரசிடம் இருந்து பங்களவு வந்தவுடன் இரும்பு உருக்குப் பொருள்களின் ஸ்டாக்கிஸ்டுகளுக்கும் இரும்புச் சாமான்கள் தயாரிப்பவர்களுக்கும் வழங்குவது பற்றி தமிழ்நாடு உருக்கு ஆலோசனை வாரியத்திடம் நெறியாளர் அறிவுரை பெறுகிறார். இவ்வாரியம் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டதாகும். தட்டுப்பாடுள்ள ஏனைய மூலப் பொருள் வழங்குதல் பற்றி தொடர்புள்ள ஏனைய தொழிலதிபர்களிடமிருந்து நெறியாளர் அறிவுரை பெறுகிறார். அதற்குப்பிறகு நெறியாளர், தமது அலுவலகப் பதிவேடுகளில் பதிவ செய்திருக்கிற விண்ணப்பதாரர்களுக்கு தட்டுப்பாடுள்ள மேற்படி மூலப்பொருள்களுக்குரிய அனுமதிச் சீட்டுகளையும் பங்களவுச் சான்றுகளையும் வழங்குகிறார். மேற்படி அனுமதிச் சீட்டுகளையும் பங்களவுச் சான்றுகளையும், வீதாசாரப்படி அல்லது இதற்குமுன் அவர்கள் பெற்ற பங்களவுகளின் சராசரி வீதப்படி மாநிலத்திற்கு ஒதுக்கியுள்ள அளவையும் ஒவ்வொரு தொழிலுக்கும் இந்திய அரசு நிச்சயித்துள்ள முதலிடத்தையும் ஒட்டி வழங்குகிறார். இந்த அனுமதிச் சீட்டுகள் முதலியவற்றை அதிகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம் காட்டி, தொழிலதிபர்கள் மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

2. கிண்டியிலிருக்கும் செரிவிசிங் கார்ப்பரேஷன் இருப்பு வைத்துக் கொள்ள அதிகாரம் பெற்ற நிறுவனமாகும். தட்டுப்பாடுள்ள மூலப் பொருள்களை அது கொள்முதல் செய்கிறது. பிறகு, மேற்கூறியவாறு நெறியாளர் வழங்கும் அனுமதிச் சீட்டு முதலியவற்றைக் காட்டினால் அது மூலப்பொருள்களை வழங்குகின்றது.

APPENDIX IX.

[*Vide* answer to Starred *Question* No. 524 at page 605]

The South Cuddalore District Development Council in its meeting held on 2nd November 1965, resolved to seek the opinion of the Dean of the Madras Medical College to prohibit the sale of Ayurvedic medicine 'Madhugasam' to the public and then to address the Government if necessary, to ban the sale of the medicine to the public. Accordingly the opinion of the Dean of the Madras Medical College was sought by the Collector of South Arcot. The Dean placed the matter before the Central Board of Indigenous Medicine, Madras at the meeting held on 7th February 1966. The Board resolved to request the Government to take suitable action to prohibit Ayurvedic preparations coming under the denomination of Asavas and Arishtas and being presented by any name except on the prescription of a registered practitioner of Indigenous Medicine only to be sold by licensed pharmacies. This resolution has not so far been communicated to the

8th November 1966]

Government. However, the Government of India have been addressed separately to frame suitable rules under the Drugs and Cosmetics Act to regulate the manufacture, sale and distribution of Madhugasam. Their decision is awaited.

(அ) & (இ) "மதுகாசம்" என்னும் ஆயுர்வேத மருந்து பொது மக்களுக்கு விற்பனை செய்யப் படுவதைத் தடை செய்வது குறித்து சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரின் யோசனையைக் கேட்பதென்றும், பின்னர் அவசியமானால் அந்த மருந்து பொதுமக்களுக்கு விற்கப்படுவதைத் தடை செய்யுமாறு அரசாங்கத்தை வேண்டிக்கொள்வதென்றும் தென்கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றம், 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் தேதி நடைபெற்ற தனது கூட்டத்தில் தீர்மானித்தது. அதன்படி, தென் ஆற்காடு மாவட்டக் கலெக்டரால் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரிடம் அது குறித்து ஆலோசனை கேட்கப்பட்டது. கல்லூரி முதல்வரால் இவ் விஷயம் 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ந் தேதி நடைபெற்ற சென்னை நாட்டு மருத்துவ மத்தியக் கழகக் கூட்டத்தில் முன்பாக ஆலோசனைக்கு வைக்கப் பட்டது. ஆயுர்வேத முறையில், "அசவாஷ்டம்", "அரிஷ்டம்" என்னும் பெயர்களில் தயாரிக்கப்பட்டு வரும் மருந்துகளை, பதிவு பெற்ற நாட்டு மருத்துவரின் மருந்துக் குறிப்புச் சீட்டின் பேரில், உரிமம் பெற்ற மருந்துக் கடைகளில் விற்பனை செய்யப்படுவதைத் தவிர மற்றப்படி எவ்வகையில் விற்கப்பட்டாலும் அவற்றைத் தடை செய்யத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதென மேற்படி மருத்துவக் கழகம் தீர்மானித்தது. இதுவரை அத்தீர்மானம் அரசாங்கத்திற்கு அனுப்பப்படவில்லை. ஆயினும், "மதுகாசம்" என்னும் மருந்தைத் தயாரிப்பது, விற்பனை செய்வது, வழங்குவது ஆகியவற்றை முறைப்படுத்தும் பொருட்டு மருந்துச்சரக்குகள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின்கீழ் தக்க விதிகள் இயற்றுமாறு இந்திய அரசுக்குத் தனியே கடிதம் எழுதப் பட்டுள்ளது. இது குறித்து, மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது.

APPENDIX X.

[*Vide* answer to Starred Question No. 526 at page 607.]

Number of sterilisation operations performed in 1964-65

	Name of District.	Number of Operations.
	(1)	(2)
1	North Arcot	2,485
2	South Arcot	1,994
3	Chingleput	190
4	Coimbatore	1,975
5	Kanyakumari	2,805
6	Madurai	4,240
7	The Nilgiris	791
8	Ramanathapuram	4,072
9	Salem	1,922
10	Thanjavur	5,525
11	Tiruchirappalli	1,323
12	Tirunelveli	645
13	Madras City	8,802
	Total	36,769

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[8th November 1966

1964-65ம் ஆண்டில் செய்யப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.

	மாவட்டத்தின் பெயர்.	அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.
	(1)	(2)
1	வட ஆர்க்காடு	2,485
2	தென் ஆர்க்காடு	1,994
3	செங்கற்பட்டு	190
4	கோயம்புத்தூர்	1,975
5	கன்னியாகுமரி	2,805
6	மதுரை	4,240
7	நீலகிரி	791
8	இராமநாதபுரம்	4,072
9	சேலம்	1,922
10	தஞ்சாவூர்	5,525
11	திருச்சிராப்பள்ளி	1,323
12	திருநெல்வேலி	645
13	சென்னை நகரம்	8,802
	மொத்தம்	36,769

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS